In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவ மஞ்சரி



சிவமஞ்சரி 5 தொகுதி

பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S

உ
சிவமயம்

சிவமஞ்சரி

– ஐந்தாம் தொகுதி –

(பக்கங்கள் 641 முதல் 800 வரை)

ஆசிரியர்

"சிவமஞ்சரிச் செம்மல்", "அருட்பணி அரசு", "சிவசேவாரத்னம்"

பூசை.ச.அருணவசந்தன்

சிவமஞ்சரி–ஐந்தாம் தொகுதியின் இந்த மூன்றாம் பதிப்பு

மங்கலம் நிறை நந்தன ஆண்டு பங்குனி உத்திரத் திருநாள் 27.03.2013 புதன்கிழமை அன்று

வேலூர்,டாக்டர். திருமிகு **M.V.ஆச்சால்**.M.B.B.S,D.D அவர்கள்

அவரது திருமகன்,**A.அமர்நாத்** அவர்கள்

திருமிகு **த.பிச்சாண்டி இ.ஆ.ப.(ஓ)**,அவர்கள்

(மேனாள் முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை)

ஆகியோர் அளித்த நல்லாதரவுடன் வெளியிடப்பட்டது.

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை–18

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலின் விவரம்

நூலின் பெயர்	சிவமஞ்சரி (ஐந்தாம் தொகுதி) 5
நூலின் ஆசிரியர்	பூசை. ச. அருணவசந்தன்
பதிப்பு ஆண்டு	முதற் பதிப்பு- 2006, இரண்டாம் பதிப்பு 2004 மூன்றாம் பதிப்பு 2013
உரிமை	ஆசிரியருக்கு
பதிப்பாளர் / ஆசிரியர்	பூசை. ச. அருணவசந்தன்
முகவரி	ப. எண். 29, பீமண்ண முதலி கார்டன் தெரு ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018. அலைபேசி : 99411 24964
பக்கங்கள்	8+160 ஆக 168பக்கங்கள்
நூல் அளவு	கிரௌன் 1.4 -(24 c.m. x 18.2 c.m.)
அச்சிட்டுள்ள பரப்பளவு	21.5 செ.மீ x 15.2 செ.மீ
பயன்படுத்தப்பட்டுள்ள தாள்	பலாபூர் எச்.பி டபுள் கிரௌன் 11.6 கி.கி.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	11.8 புள்ளிகள்
மின் அச்சுக் கோர்வை	சிவசுந்தரி , செங்கழுநீர் பிள்ளையார் கோயில்தெரு மயிலாப்பூர் சென்னை -4.
மறுதோன்றி அச்சகம்	தேவா ஆப்செட் பிரிண்டர்ஸ் சென்னை 5.
நூலின் பொருள்	சிவபெருமானைப்பற்றி, புராணங்கள், வடமொழி தமிழ்வேதங்கள்,தலவரலாறுகள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள் தனித்தனி தலைப்புகளில்
விலை	ரூபாய் 100/-
நூலகக் குறியீட்டு எண்	-

அட்டையில் - ஸ்ரீ மதுரை மீனாட்சிஅம்மன் திருமணக்கோலம் (சுதைச்சிற்பம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம் திருச்சிற்றம்பலம்

ஐந்தாம் தொகுதி

முதல் பதிப்பின் முகவுரை

செம்பொருட் சோதியாக விளங்கும் சிவபெருமானின் திருவருளால் சிவமஞ்சரியின் இந்த ஐந்தாம் தொகுதி மலர்ந்து தங்களின் திருக்கரங்களில் தவழ்கிறது. இந்த நூலில் உள்ள ஐந்து மலர்களும் பராசக்தியின் பெருமைகளை விளக்குவதாகவே, அமைகின்றன. அஞ்சுதல் வரும் பொழுது, உயிர்களுக்கு ஆறுதல் அளிப்பது அருட்சக்தியே என்பதால், ஐந்தாம் தொகுதி ஆதி சக்தியையும் அவளுடைய அம்சமான சக்திகளின் பெருமைகளையும் விளக்குவதாக அமைகிறது. அவளுடைய அருட்பெருந்திறத்தினை நினையும், இவ்வேளையில் இத்தொகுதியை உருவாக்கத் துணைநின்ற அனைவரையும் நன்றியுடன் போற்றி வணங்கி மகிழ்கின்றேன்.

என்னையும் ஒரு பொருளாக நயந்து முதல் இதழைக்கண்ணுற்ற காலம்முதல் அருள்பாலித்து, ஆசியளித்துத் தொடர்ந்து நல் ஆதரவினை நல்கி வரும் **திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பண்டார சந்நிதி சுவாமிகள்** அவர்களின் திருவருளைப் போற்றி வணங்குகின்றேன்.

இப்பணியில் உதவி செய்வதுடன், வழிகாட்டி வருபவர் எனது வணக்கத்திற்குரிய குருநாதர், நுங்கம்பாக்கம் குருஜி **சிவஸ்ரீ துரைராஜன் (எ) பத்மநாபன்** அவர்களாவார். அவர் பல சிவாலயங்களுக்குத் திருப்பணி செய்துவரும் அன்பர். தவம் நிறை செல்வர். சிறந்த சிவபூஜா துரந்தரர். இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஆலயங்களைத் தரிசிக்க நான் மேற்கொண்ட தலயாத்திரைகளுக்கான செலவுகளை ஏற்றுக் கொண்டதுடன், பலரைக் கொண்டும் உதவி செய்வித்து வருகின்றார்கள். அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

அவரையொட்டி, அவருடைய அன்பர், நுங்கம்பாக்கம் LVJ பில்டர்ஸ் உரிமையாளரும், சிறந்த சிவபக்தருமாகிய ***சிவஸ்ரீ. M.V. ஜெய்சங்கர்*** அவர்கள், தொடர்ந்து நமக்கு உதவி வருகின்றார்கள். அவருடைய தந்தையார் பேராசிரியார் திரு. **விவேகானந்தன்** அவர்களும் நமது பணிகளுக்கு உரிய உதவிகளைப் பெற்றுத்தந்து வருகின்றார். இவர்களது குடும்பத்திற்கு எமது நன்றி.

எமது சிவப்பணிகளுக்குத் துணை நிற்பது எனது அன்பிற்கினிய சகோதரி **திருமதி. *அனந்தலட்சுமியும்*** அவரது கணவர் **திரு.வ. வீரராகவன்** அவர்களுமாவர். இத்தம்பதியருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் இடம் பெற்றுள்ள கலியாணசுந்தரர் நூலுக்கு விவரம் சேகரிக்கத் திருவீழிமிழலை, திருமணஞ்சேரி முதலிய தலங்களுக்குச் சென்றபோது இவர்கள் உடன்வந்து உதவினார்கள்.

இந்நூலின் முதல் பகுதியான கேதார கௌரீசுவரர் வெளிவர நமது புரவலர் திரு. ஜெய்சங்கர் அவர்கள், தமிழ் ஆர்ய வைசிய மகா சபையின் துணைத்தலைவரும் பல்வேறு தொழில் நிறுவனங்களின் அதிபருமான லயன் **திரு. வி. எஸ். *குப்தா-சுபாஷிணி*** தம்பதியரிடமிருந்து உதவி பெற்று தந்தார். இந்தத் தம்பதியருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதான ''***அம்பிகாபதி***'' காசியில் நடைபெற்ற ஸ்ரீ சக்கரலிங்கேசுவரர் ஆலய கும்பாபிஷேகத்தின் போது அன்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. திருப்பணிச் செல்வர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரு. கோபால் சர்மா அவர்கள் நம்மை, காசிக்கு அழைத்துச் சென்று, பாராட்டு செய்ததற்கு அன்புடன் நன்றி தெரிவித்துப் போற்றுகிறேன்.

இந்நூலுக்கும் நான்காவதான ஸ்ரீ காளீச்சுவரர் நூலுக்கும் உதவி வழங்கிச் சிறப்பித்தவர் சிவஸ்ரீ அ.சுப்பையா அவர்களாவார். சென்னையில் "மார்ஸ் டிராவல்ஸ்" என்ற நிறுவனத்தை நடத்தி வரும் இவர் சிறந்த சிவபக்தர் அனேக திருப்பணிகளைச் செய்துவரும் பண்பாளர் நமது பல்வேறு பணிகளுக்குத் துணை நிற்கும் இவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவரை நமக்கு அறிமுகப்படுத்தியவர். திருப்பணி செல்வர். பொறியாளர் மயிலாப்பூர் திரு. ஸ்ரீனிவாசன் அவர்கள் ஆவார். நமக்கு துணை நிற்கும் அவருக்கு எமது நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருபத்திமூன்றாம் மலரான அரம்பேசுவரர் பகுதிக்குத் தேவையான புகைப்படங்கள், வரைப் படங்கள் முதலியவற்றைச் சேகரிக்கப் பணஉதவி செய்த மேற்கு மாம்பலம் திருமதி. விஜயாஆனந்த் அவர்களுக்கு எமது நன்றி.

மேலும் ஆரம்ப காலத்தில் இருந்து உதவி வரும் காயத்திரி அருள்மாமணி குருஜீவீரமணி (எ) வீரேசுவரானந்தா அவர்கள் வணக்கத்துக்குரிய பர்வதமலை சித்தர் ஸ்ரீலஸ்ரீ ஜோதிராமலிங்க சுவாமிகள் நமது பணிகளுக்குத் தோள் கொடுத்துத் துணை நிற்கும் சிவஸ்ரீ N.R.வெங்கடேசன் (CIMI உதவி இயக்குநர் மத்திய அரசு நிறுவனம்) நங்கநல்லூர், மணவழகர் மாலை மாத இதழ் ஆசிரியரும், மேனாள் தமிழ்நாடு மின்வாரிய செயற்பொறியாளருமான கோலூர் திரு. K.P.துரை B.E., நங்கநல்லூர்திரு. கல்யாணசுந்தரம் சேலையூர். திரு. சாய்ராம், "அப்பாவு" மாத இதழ் ஆசிரியர் திருவான்மியூர் பாம் பனடிமை குகஸ்ரீ வே.நா. சௌந்தரராஜன்-பிரகதா தம்பதியார், திருவல்லிக்கேணி, கயிலைப் புனிதர் திரு. D.ஷண்முகம் (மேனாள் சார்பதிவாளர் பதிவுத் துறை) பேராசிரியர் திரு. R. ராதாகிருஷ்ணன் (அண்ணா பல் கலைக் கழகம்) தேனாம்பேட்டை கட்டுமானப் பொறியாளர் திரு. V.ஜெயராமன்.மேற்கு மாம்பலம் திரு. P.M. ராஜகணபதி, சென்னை அடையாறு ஸ்பீகல் பிரிண்டர்ஸ் குமார் (எ) என். பால சுப்பிரமணியம், அவருடைய தந்தையார் பிரம்மஸ்ரீ G.S.நடராஜன் ஸ்ரீ ஐயப்ப பக்த மண்டலி குருசாமி அனந்த நாராயணன் (சிவா) ஆகிய யாவருக்கும் எனது நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்லாவரம் மீனா மருத்துவமனை டாக்டர் கயிலைப் புனிதர் சிவஸ்ரீ அ. மாணிக்கம், சென்னை இருதய சிறப்பு மருத்துவர் டாக்டர் சிவஸ்ரீ S. சிவகடாக்ஷம், மயிலை சேவாசக்ர சிவஸ்ரீ நாராயணசாமி மயிலை டாக்டர். சிவஸ்ரீ. வி.பி.ஆர்.வரதராஜன் சப்தகிரி டிராவல்ஸ் திரு. ஸ்ரீனிவாசன், பெசன்ட்நகர், சிவஸ்ரீ. சுரேஷ்சந்தர் ஆகிய எல்லோருக்கும் எனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலின் அச்சுப்படிகளைத் திருத்தி சைவ சமயத்தின் மேன்மைகளை விளக்கி ஆலோசனைகளைத் தந்து நமது நூலை செம்மைப்படுத்தி வருபவர் திருவாவடுதுறை ஆதீன சரஸ்வதி மகாலய சுவடிப்புல நெறியாளரும், ஆகம சித்தாந்தரத்தினம் காஞ்சி. சிவ. சதாசிவ தேசிகர் அவர்களாவார். மேலும் சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன சுவடிப்புல ஆராய்ச்சியாளர் திரு.த. பூமிநாகநாதன் அவர்களும் அச்சுப் படிகளைப் பலமுறை திருத்தி உதவினார். இவர்களுக்கு எனது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங்களைத் திரட்ட உதவியாக இருப்பது, டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூலகமாகும். அந்நூலகக் காப்பாளர் வித்துவான் திரு. பாலசாரநாதன், திருமதி.கீதாசேஷாத்ரி நூலகர் சிவஸ்ரீ கே.பாஸ்கர், உடனாள், திரு.சாய்ராமன், எழுத்தர் திரு.கே.நடராஜன், பணியாளர்கள் பொன்னுவேல், மு.மணி, ராமஜெயம், திருமதி. கன்னிகாமணி ஆகியோராவர். இவர்களுக்கு எனது அன்பு நன்றி உரித்தாகுக.

பல ஆண்டுகளாக நமது எழுத்துப் பணிகளுக்கு நல்லாதரவு தந்துவரும் கலைமகள் மஞ்சரி, எம்.எல்.ஜெ.பத்திரிக்கைகள் அதிபர் திரு. ஆர்.நாராயணசாமி எனது குருநாதரும் மஞ்சரி ஆசிரியருமான திரு. லெமன் (எ) லெட்சுமணன், கலைமகள் ஆசிரியர் திரு.கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் ஆகியோருக்கு எமது நன்றி.

இந்நூலினை பலருக்கும் அறிமுகப்படுத்தி நல்லாதரவினைத் தேடிதந்து வரும் சிதம்பரம் நடராசர் ஆலய பரம்பரை அறங்காவலரும், தில்லை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூவாயிரவரில் ஒருவருமான **பிரம்மஸ்ரீ பரமேசுவர தீட்சதர்** ஐயா சென்னை, சிவநெறி செல்வர் கவிஞர். திருவையாறு ரமணன் பரமக்குடி திரு.&திருமதி. ஹரி வாசுதேவ் தம்பதியினர் ஆகியோருக்கு எனது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு உரிய புகைப்படங்களை அளித்து ஆதரித்துவரும் தமிழ்நாடு **தொல்லியல் துறையினர்** அதன் மேனாள் இயக்குநர் டாக்டர். திரு. இரா. **நாகசாமி** இந்நாள் இயக்குநர் திரு. எ. **அப்துல் மஜீத்** துறையின் புகைப்பட அலுவலர் திரு. **திருஞானசம்பந்தம்** ஆகிய யாவருக்கும் எனது நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சென்னை இந்து தர்ம மன்றச் செய லாளர் சிவஸ்ரீ **V.மீனாட்சிசுந்தரம்** அவர்கள் பல புகைப்படங்களைத் தந்து ஆதரித்து வருகிறார்கள். மேலும் திருவாவடுதுறை ஆதீனப் புலவர் நுண் கலைச் செல்வர் திரு. **ஆர். நாராயணசாமி** அவர்கள் தானும் புதுவை பிரஞ்ச் இந்தாலஜி துறையினி மிருந்து, சேகரித்து வைத்திருந்ததுமான பல படங் களைத் தந்து உதவினார்கள். இவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

நமக்கு மின்னச்சு செய்து தரும், தனம் லேசர் பிரிண்டர்ஸ், உரிமையாளர் திரு. **செ.சிகாமணி**, மின்தட்டச்சர்களான எனது சகோதரிகள் **A. ஐரீஸ், P. வனிதா, N. சத்தியப்பிரியா** தம்பி திரு. **சேகர்** ஆகி யோருக்கும் மறுதோன்றி அச்சகத்தினர் திரு. **S.முருகநாதன்** (ஸ்ரீவேணி கிராபிக்ஸ், திருவான் மியூர்), திரு. **பாஸ்கர பாண்டியன்**, (மணி ஆப்செட், திருவல்லிக்கேணி), ஆர். ஆர். பாம்பேக்ஸ் திரு. **R.ரவிக்குமார்**, சக்தி கிராபிக்ஸ் வை. **சீதாராமன்** ஆகியோருக்கும் நிழற் பதிவாளர் சத்யாபிராசஸ் **திரு.ராதாகிருஷ்ணன்**, துர்கா பைண்டிங் **திரு.சரவணன்**, ஓவியர்கள் திரு. **சசி**, திரு.**ஜெகன்**, **திரு.கணேசன்** ஆகிய யாவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இவர்களுக்கும், சிவமஞ்சரியின் வாசகர்கள், அன்பர்கள் யாவருக்கும் உண்ணாமுலை அம்பி கை உடனாகிய அண்ணாமலை எம்அண்ணல் சகல செல்வயோகமிக்கப் பெருவாழ்வை அளித்து அன்புடன் அருள்பாலிக்க வேண்டுமென்று அவ ருடைய பொன்னார்த் திருவடிகளைப் போற்றி பணிந்து வேண்டுகிறேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இங்ஙனம்
சிவப்பணியில் மீளா அடிமை

விநாயக சதுர்த்தி
01-09-2000 வெள்ளிக்கிழமை

பூசை. ச. ஆட்சிலிங்கம்

பூசை. ச. ஆட்சிலிங்கம் (எ)
பூசை. ச. அருணாவசந்தன்

சிவசுந்தரி கலைக்கூடம்
29, பீமன்ண முதலி கார்டன் தெரு,
ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.

மூன்றாவது பதிப்பு நன்றி மலர்கள்

சிவபெருமானின் பெருங்கருணையால், சிவமஞ்சரி ஐந்தாம்தொகுதியின் இந்த மூன்றாவது பதிப்பு இனிதே வெளிவருகிறது.நமதுபேரன்பர்புதுவை திரு. **M.S.ராம கிருஷ்ணன்** அவர்களின் மூலம் **பூஜ்யஸ்ரீ மதிஒளி சரஸ்வதி** அவர்களின் ஆசி கிடைத்தது. அவர்கள் நடத்திய மிருத்தஞ்சய வேள்வியில் கலந்து கொண்ட வேளையில் திரு. ராம கிருஷ்ணன் அவர்கள் அங்கு வந்திருந்த **திரு.டாக்டர் ஆச்சாள்** அவர்களிடம் அறிமுகப்படுத்தி சிவமஞ்சரிக்கு அவரிடம்உதவுமாறு கேட்டுக்கொண்டார்கள். டாக்டர் அவர்கள் மனமு வந்து உதவினார்கள். அவரது நல்லாதரவுடன் இந்நூல் புதுப்பதிப்பைக் கண்டுள்ளது.

மேலும் இப்பதிப்பற்கு நல்லாதரவு நல்கிய நமது நல்லாதரவாளர் **திருமிகு. கு. பிச்சாண்டி, இ.அ.ப. (ஓய்வு)** மேனாள் சிறப்பு ஆணையார் இந்து சமய அறநிலையத் துறை அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த இனிய நல் வேளையில் அன்பர்கள் அனைவருக்கும் கற்பகவல்லி உடனாய கபாலீசுவரப் பெருமான் சகலசெல்வயோக மிக்க பெருவாழ்வைத் தந்து இன்பமுடன் வாழ்விக்க வேண்டு மென்று அவர்தம் பொற்பாதங்களில் பணிந்து வேண்டிக் கொள்ளுகின்றேன்.

நந்தன ஆண்டு பங்குனி உத்திரத் திருநாள் 27.03.2013 புதன்கிழமை

அன்பன் பூசை. ச. ஆட்சிலிங்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றி மலர்கள்

எமது சிவப்பணிகள் அனைத்திற்கும் நல்லாதரவு தந்து வரும் அன்பர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்

சித்தாந்த ரத்தினம் டாக்டர் விஸ்வ. ஆறுமுகம்,
மேனாள் விஞ்ஞானி, சி.எல்.ஆர்.ஐ.கிண்டி

ஸ்ரீமதி கோமதி ஹரிகரன் அஸ்தினாபுரம்

ஸ்ரீ மல்லிகார்ஜுனா சேவா டிரஸ்ட்,

திரு.M.S.முத்துக்குமார முதலியார்
மதுரவாயல்

இருமொழிச்சீராளர்.திருவையாறு வே. ரமணன்
இருப்பு சிதம்பரம்

ப்ரம்மஸ்ரீ P.B.வெங்கட்ராமன்
ஆஷியானா சென்னை-18

திருமதி. பிரேமா வெங்கட்ராமன்
ஈஞ்சம்பாக்கம், சென்னை-41.

திரு.டி.கே. நீலகண்டன்,
அமைந்தகரை, சென்னை-29

சிதம்பரம் சீனு.அருணாசலம்
(அமைப்பாளர், சைவசித்தாந்தபயிற்சி மையம்)

திரு.ஏ.வெங்கடேசன்
கோரல் மினார், சென்னை-28

மோகனசம்பத், ராஜசிம்ம மகேந்திரன்
பெருமாளகரம், சென்னை

சிவத்திரு.எம்.சச்சிதானந்தம்,
தனலட்சுமி வங்கி, சென்னை

திருமதி. S. பத்மா.தனலட்சுமி வங்கி, சென்னை

திரு. ஜி.டி. நாடியன் செல்வன்.பெங்களூரு

திருமதி. சியாமளா ஸ்ரீநிவாசகோபாலன்
மேனாள் எஸ்.பி.ஐ. அதிகாரி, சென்னை

தில்லை. கார்த்திகேயன்
பொரசங்குறிச்சி,கள்ளக்குறிச்சி

திருமிகு.மகாலிங்கசர்மா
கடவர்த்தா,இலங்கை

வாழி நலம் சூழ அன்பர் பூசை ச. அருணவசந்தன்

திரு. என்.கார்த்திகேயன், திருவல்லிக்கேணி

சிவத்திரு மு.அபிராமன் கோவை

பேராசிரியர்.சத்யநாராயணா
ஐ.ஐ.டி. கிண்டி, சென்னை

சித்தாந்த ரத்தினம் டாக்டர் C.ரவிகுமார்
சற்குரு பல் மருத்துவமனை, புதுவை

சிற்பஸ்ரீ சாமி. சுப்பையா ஸ்தபதியார் (குமாரர்)

சிவஸ்ரீ. சுவாமிநாதன்(சிவா)காஞ்சிபுரம்

திரு. மல்லி. ஜினேந்திரதாஸ்
துணை இயக்குநர் சி.எல்.ஆர்.ஐ. சென்னை

திருமிகு.டாக்டர். T.K.தேவராஜன்
திருமழிசை,சென்னை-124

குருஜி. கே.கே. கோபாலன்சர்மா,
பரமேஸ்வரி நகர், அடையாறு,சென்னை-20

பிரம்மஸ்ரீ .சுந்தர. கிருஷ்ணமூர்த்தி
டிரஸ்டுஸ்கொயர், அயன்புரம்.சென்னை

திரு.L.ஆறுமுகம்,
(மேனாள் சுகாதாரஅதிகாரி, சென்னை மாநகராட்சி)

தூண்கலை தஞ்சாவூர் ஓவியக்கலைஞர், திரு.சீனிவாசன்
சைதாப்பேட்டை, சென்னை-15

திருமிகு.இரா.இராமச்சந்திரன்
நூம்பல்.சென்னை

திருமிகு.இரா.முத்துக்குமாரசிவாச்சாரியார்
ஸ்ரீபாலவிநாயகர் ஆலயம், வாரன் ரோடு.சென்னை

திருமிகு.ப.கணேசராஜ குருக்கள்
நல்லூர், இலங்கை

திரு. வி. சி.கோபிநாத்,
ஸ்ரீம் மங்களம்,புதுவை-1

சிவஸ்ரீ. வி. ராம்குமார்,ஸ்ரீவத்சம்,
கோடம்பாக்கம், சென்னை-24

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ பச்சையம்மன் துணை

இந்நூலின் உள்ளே....

			பக்கம்
மலர் 21	ஸ்ரீகேதார கௌரீசுவரர்	–	641
மலர் 22	அம்பிகாபதி	–	673
மலர் 23	அரம்பேசுவரர் துர்க்காலட்சுமி–சரஸ்வதீஸ்வரர்	–	705
மலர் 24	ஸ்ரீ காளீச்சுரர்	–	737
மலர் 40	ஸ்ரீ கல்யாணசுந்தரர்	–	769

சிவமஞ்சரி : சிவபெருமானின் பெருமைகளைப்பேசும் நூல்
சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவசுந்தரிகலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு,
ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018.

பேரன்புடையீர், சிவநேயச் செல்வப் பெருந்தகையீர்,

சிவபெருமானின் எல்லையில்லாத பெருமைகளை இயன்றவரை விளக்கும் வகையில் சிவமஞ்சரி என்ற தொடர் நூலை எமது கலைக்கூடம் வெளியிட்டு வருகின்றது. இதனை 60 தலைப்புகளில் சிறந்த புகைப்படங்கள் வரைபடங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட முனைந்து, செயல்பட்டு வருகிறோம். (தடித்த எழுத்தில் உள்ள 5 நூல்கள் இந்த ஐந்தாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன). இவை

1, சிவமே செம்பொருள்
2 மச்சேந்திரர்
3 திருவாவடுதுறைஆதீனம்
4. முகலிங்கம்
5. பிரதோஷம்

6. பசுபதி
7. உமாமகேஸ்வரர்
8 .ஐந்தும் சிவபெருமானும்
9. திருக்கயிலாயம்
10 மகாசிவராத்திரி

11. ஸ்ரீருத்திரர்
12. ஆதித்யேசுவரர்
13 சோமஸ்கந்தர்
14 சைவ சமய சாத்திரங்கள்
15. ஸ்ரீதியாகராஜர்

16 .சந்திரசேகரர்
17. அக்னீஸ்வரர்
18. சித்தீசுவரர்
19 அகத்தீசுவரர்
20 அதி(க்) தியாகராஜர்

21,ஸ்ரீகேதார கௌரீசுவரர்
22.அம்பிகாபதீஸ்வரர்
23,அரம்பேசுவரர்
24.ஸ்ரீகாளீசுவரர்
25.திருமணக்கோலநாதர்

26.பிரம்மபுரீசுவரர்
27. பன்னிருதிருமுறை அறிமுகம்
28.வேதஆகம புராணீசுவரர்
29.திருமாலீசுவரர்
30.மூவராய்நின்ற முதல்வன்

31.ஸ்ரீவீரட்டகாசர்
32.ஸ்ரீகாலசம்ஹாரர்
33 ஸ்ரீமன்மதேசுவரர்
34.ஸ்ரீதிரிபுராந்தகர்
35. ஸ்ரீவீரபத்திரர்

36.தீபமங்களேசுவரர்
37.தலவிருட்சங்கள்
38. ராஜகோபுரங்கள்
39. விமானேசுவரர்
40.தீர்த்தேசுவரர்

41. பூதலிங்கேசுவரர்
42. இராட்சதலிங்கம்
43. சப்தரிஷீசுவரர்
44. தட்சிணாமூர்த்தி
45. சிவாசாரியர்கள்

46. புஷ்ப ரதீசுவரர்
47. கங்காதீசுவரர்
48. எட்டும் சிவபெருமானும்
49. விருந்திட்டீசுவரர்
50.சிவாலயத் திருவிழாக்கள்

51. சபாநாயகர்
52. ஆனந்தத் தாண்டவம்
53. ஊர்த்துவ தாண்டவர்
54. நாகநாதர்
55. இராஜ லிங்கேசுவரர்

56. பறவைகளும் பரமனும்
57. ஐராவதீசுவரர்
58. சிவாயுதங்கள்
59. சிவாலயப் பரிவாரங்கள்
60.பைரவர் என்பனவாகும்

மொத்தம் 2000 பக்கங்களுக்கும் அதிகமான அளவில் வெளிவரும் இந்நூல்

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும்

இந்நூல் ஆசிரியர் பூசை ச. அருணவசந்தன், ஓதுவார் மரபில் வந்த சைவநெறியாளர். சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண்புராணங்கள், தெய்வத்திருமுறை நூல்கள், தலவரலாறுகள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்பு நோக்கித் தொகுத்து நூலாக அளிக்கின்றார். மேன்மைகொள் சைவ நெறி உலகெங்கும் விளங்க, குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி, சிவமஞ்சரி வலம் வருகிறது. இவருடைய பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதினம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பராமாச்சாரிய சுவாமிகள் சிவமஞ்சரிச் செம்மல் என்ற பட்டத்தையும் அகில உலக பக்தி இலக்கிய பேரவையினர் அருட்பணி அரசு என்ற பட்டத்தையும், சேலம் அறுபத்து மூவர் விழாக் குழுவினர் சிவசேவாரத்தினம் எனும் விருதையும் அளித்து கௌரவித்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீகேதாரகௌரீசுவரர்

இமயமலையின் சிகரங்களில் ஒன்றாகத் திகழ்வது திருக்கேதாரம். இது பன்னிரண்டு ஜோதிர்லிங்கத்தலங்களில் ஒன்று. சமயக் குரவர்களால் பாடப்பெற்ற திருத்தலம்.

இங்குச் சிவபெருமான் சுயம்புலிங்க வடிவில் கேதாரீசுவரராகக் காட்சியளிக்கின்றார். இங்கு ஓராண்டில் ஆறு மாதங்கள் தேவர்களும், ஆறு மாதங்கள் மனிதர்களும் பூசிப்பதாகச் சொல்லப்படுகிறது.

இங்கு, ஆதியில் பார்வதிதேவியார் சிவபூசை செய்து தமது கரிய பசுமை நிறத்தை நீக்கிக்கொண்டு பொன் போன்ற உடலைப்பெற்றுக் "கௌரிதேவி" என்று பெயர் பெற்றாள். இந்தக் கேதாரத்தில் அந்த நிகழ்ச்சி நடந்ததால் அம்பி கைக்குக் கேதாரகௌரி என்பது பெயராயிற்று.

பின்னர் கௌரிதேவியின் தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவளுக்குத் தனது உடலில் இடப்பாகத்தைத் தந்தார். அன்று முதல் அவர்கள் இருவரும் ஒரேவடிவமாகி அர்த்தநாரீ ஆனார்கள். கௌரிதேவியைப் பூசிப்பதால் இறைவனின் அருளை எளிதில் பெறலாம் என்பதால் கௌரிதேவி வழிபாடு காலப்போக்கில் தனிவழிபாடாகவே வளர்ந்துச் சிறந்துள்ளது.

கௌரிதேவியின் வழிபாட்டில் இருபத் தொன்று (21) என்ற எண் தனிச்சிறப்பிடம் பெறுகின்றது. இந்த வழிபாட்டில் இருபத்தோரு இழைகளைக் கொண்டு திரித்த கயிற்றில் இருபத்தோரு மணிகளைக் கோர்த்துக் கங்கணமாக அணிதல், கௌரிதேவியின் இருபத்தோரு பெயர் களைச் சொல்லித் துதித்தல், இருபத்தோரு வகையான மலர்கள், இலைகளைக் கொண்டு அர்ச்சித்தல், இருபத்தோரு வகையான பழங்கள், இருபத்தோரு அதிரசங்களைப் படைத்தல் ஆகியவற்றைக் காண்கிறோம்.

எனவே, சிவமஞ்சரியின் இந்த இருபத் தோராவது மலர் கேதாரகௌரீசுவரரைப் பற்றிய தாக மலர்கின்றது.

இம்மலரில் முதலில் கேதாரத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறப்புக்களும், இரண்டாவதாக கௌரிதேவியோடு தொடர்புடைய சிவமூர்த்தங்களைப் பற்றிய செய்திகளும், மூன்றாவதாக அம்மையும், அப்பனும் தம்முள் இணைந்து காட்சிதரும் அர்த்தநாரீசுவர கோலத்தைப் பற்றிய செய்திகளும் இடம் பெறுகின்றன.

இவ்வகையில் முதலில் சொல்லப்படும் கேதாரச் சிறப்பில் கேதாரத்தின் புராண வரலாறுகள், கேதாரயாத்திரை, தென்னகத்து கேதாரத்தலச் சிறப்புக்கள் முதலியன இடம்பெறுகின்றன.

இரண்டாவது பகுதியில் கௌரிதேவியோடு தொடர்புடைய சிவமூர்த்தங்கள், அவை எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் ஆகியவற்றைக் காணலாம்.

மூன்றாவது பகுதியில் அர்த்தநாரீசுவர திருக்கோலம் - அதன் அமைப்பு - அர்த்தநாரீசுவரத் திருத்தலங்கள் - திருமுறைகளில் அர்த்தநாரீசுவரர் முதலான செய்திகள் இடம் பெறுகின்றன.

அன்பர்கள் அனைவருக்கும் கௌரிதேவி உடனாய கேதாரீசுவரப் பெருமான் திருவருள் பாலித்துச் சகல செல்வயோகமிக்கப் பெருவாழ்வை அளிக்கவேண்டுமென்று போற்றிப் பணிந்து அவருடைய செங்கமலப் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றோம்.

கேதாரநாதர் - பெயர் விளக்கம்

கேதாரம் என்ற சொல்லுக்கு பனி, மயில், நீர்நிலை, வயல்வெளி என்ற பல பொருள்கள் உள்ளன. கேதாரத்தில் நீர்நிலைகள் ஏராளமாக உள்ளன. அவற்றின் நடுவே இருப்பதால் பெருமான் கேதாரநாதர் என்று அழைக்கப்பெறுகின்றார் என்பர்.

கேதார முனிவரால் பூசிக்கப்பெற்ற இடம் கேதாரம் என்று பெயர் பெற்றது. அங்கு எழுந்தருளியிருப்பதால் பெருமான் கேதாரீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.

வடமொழியில் கேதம் என்பதற்குத் துன்பம் என்பது பொருள் கேத+ஹர+ஈஸ்வர = கேதாரீசுவர என்றானதென்பர். இச்சொல்லுக்குத் துன்பத்தைப் போக்குவதில் த்லைவன் என்பது பொருள்.

கேதாரீஸ்வர விரத பலன்

கேதாரீசுவர விரதத்தைக் கடைப்பிடிப்பதால் பூமியில் பயிர்கள் செழித்து வளர்கின்றன. பூமியின் கருவில் நவரத்தினமணிகளும், பொன்னும், வெள்ளியும் உண்டாகின்றன.

நன்கு விளைந்த பயிர்களுக்கு விலங்குகளாலும், பறவைகளாலும், நோய்களாலும் உண்டாகும் துன்பங்கள் நீங்குகின்றன. மனிதனின் அடிமைத்தனம் நீங்குகின்றது. கன்னிப்பெண்கள் கேதாரீசுவர விரதத்தைக் கடைப்பிடிப்பதால் சிறந்த கணவனைப் பெறுகின்றனர். மணமான பெண்கள் இந்த விரதத்தை நோற்பதால் கணவன் மனைவியரிடத்தில் அன்பு பெருகுகின்றது.

- இராமேசுவரம் (சங்கரமடம்), ஈரோடு (மகிமாலீசுவரர் ஆலயம்) முதலிய அனேக தலங்களில் பன்னிரு ஜோதிர்லிங்கங்களின் சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் கேதாரநாதர் பெயரிலான சிவலிங்கம் இடம் பெற்றுள்ளது.
- கேதம் என்பதற்குப் பனி என்பது பொருள். பனியின் அதிதேவதையான கேதாரம் பூசித்துச் சிவனருள் பெற்ற இடமே கேதாரம் என்று வீரசிங்காதன புராணம் கூறுகின்றது.
- பதினெட்டுப் புராணங்களில் ஒன்றாகிய ஸ்காந்தம் என்கின்ற மகாபுராணத்துள் கேதாரம் ஸ்ரீபார்வதி பரமேசுவரர்களுக்குச் சுபஸ்தானமென்றும், இந்தத்தலத்தில் உளுந்தளவு நீரைப்பருகினாலும் அவர்களுக்கு மறுபிறப்பில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் இங்கு முருகனும், அகத்தியரும் கேதாரகௌரீசுவரரைப் பூசித்தார்கள் என்றும் அந்நூல் கூறுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புராணங்கள் காட்டும் கேதாரநாதர்

ஆதியில் பராசக்தி, சிவபூசை செய்து சிவனருள்பெற்ற உயர்ந்த திருத்தலம் கேதாரம் என்று புராணங்கள் குறிக்கின்றன. சிவமகாபுராணத்தில் திருமால், நரன், நாராயணன் என்ற இரண்டு உருவங்களைத் தாங்கி பத்ரியில் வழிபட்டார் என்றும் அவர்களுக்குக் கேதாரநாதர் காட்சியளித்துப் பலசிறப்புக்களைச் செய்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. காசி கேதார்சுவர புராணத்தில் பிரம்மதேவன் கேதாரத்தில் பூஜைசெய்து மீண்டும் தனது படைப்புத்தொழிலைச் செய்யத் தொடங்கினான் என்று கூறப்பட்டுள்ளது.

பாரதத்தில் பாண்டவர்களும் திரௌபதியும் சொர்க்கத்திற்கு இந்தக் கேதாரத்தின் வழியே சென்றதாகவும், அவர்களுக்குச் சிவபெருமான் எருமை வடிவில் காட்சியளித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இப்படி அனேக தேவர்களாலும் முனிவர்களாலும் போற்றி வணங்கப்பெற்ற சிறப்பினை உடையதாகக் கேதாரம் திகழ்கின்றது. இவற்றில் சிலவற்றை இங்குக் காணலாம்.

1. சிவபுராணம் காட்டும் கேதாரீசுவரர் கதை

ஒரு சமயம் பார்வதிதேவியை நோக்கிச் சிவபெருமான், "காளீ வருக" என்று அழைத்தார். அதற்கு அவள், "என்னைக் கருநிறத்தவள் என்று பொருள்பட வெறுத்துக் கூறியதேன்? தங்களுக்குப் பிடித்தமற்ற எனது இந்தப் பசிய கருமை நிறத்தை நீக்கிக் கொண்டு பொன்னிறமான உடலைப் பெறுவேன்" என்று கூறினாள். பிறகு சிவபெருமானி டம் அனுமதி பெற்றுக்கொண்டு கேதாரம் என்ற தலத்தை அடைந்து அங்குச் சிவபூசை செய்து கடுந்தவம் புரிந்து சிவனருளால் பொன்னிறமான உடலைப் பெற்றுக் கௌரிதேவியானாள். இதன் விரிவைப் பக்கம் 658-ல் கௌரீவரப்பிரதான மூர்த்தி என்பதன் கீழ் காண்க.

2. கேதாரீஸ்வர புராணம் கூறும் கேதாரீசுவரர் வரலாறு

பராசக்தி பொன்னிற உடல்பெற்றுக் "கௌரிதேவி"யாகிய பின் மந்திரமலைக்குச் சென்று சிவசங்கரனான பரமேசுவரனுடன் இணைந்து கௌரிசங்கரி என்று பெயர் பெற்றாள். அவர்கள் நெடிதுநாள் அங்கு இன்பமாக வீற்றிருந்தனர். பின்னர் அவர்கள் மீண்டும் கயிலைக்கு எழுந்தருளினர்.

....

ஒரு சமயம் கயிலைமலையில் உள்ள பொன் மண்டபத்தில் பிரம்மா, விஷ்ணு முதலான அனேக தேவர்கள் சூழச் சிவபெருமான், கௌரிதேவியோடு பொற்சிம்மாசனத்தில் எழுந்தருளியிருந்தார்.

அப்போது அங்கு வந்த பிருங்கி மகாரிஷியானவர், கௌரிதேவியாரை விடுத்துப் பரமேசுவரனை மட்டும் போற்றி வணங்கினார். அப்போது தன்னை மதியாமலும், வணங்காமலும் இருந்த பிருங்கியைப் பார்த்து தேவி கடுங்கோபம் கொண்டாள். அவள் பரமசிவனை நோக்கி, "அன்பரே! இந்த உலகிலுள்ள சகல ஜீவராசிகளும் தங்களையும் என்னையும் வேறுவேறாக எண் ணாமல் அம்மையப்பராகவே பாவித்து வணங்கு கின்றன. அப்படியிருக்க இந்தப் பிருங்கி முனிவர் மட்டும் என்னை மதியாமல் தங்களை மட்டும் வணங்கி மகிழக் காரணம் என்ன? என்று கேட்டாள்.

அதற்குப் பரமேசுவரன், "மலைமகளே! உலகத்தவருக்கு, (1) வேண்டியதை அடைவது (காமியம்) (2) வீடுபேறு (மோட்சம்) என்ற இரண்டு வகையான வேண்டுதல்கள் உள்ளன. வீடு, மனை, மக்கள் முதலிய சுகங்களை வேண்டுபவர்கள் உன்னையும் என்னையும் சேர்த்து ஆராதித்து, அவற்றை நமதருளால் அடைந்து வருகின்றனர். ஆனால் மோட்சத்தை மட்டுமே விரும்புபவர் களுக்கு உன்னுடைய அருள்தேவையில்லை. ஆதனால் அவர்கள் என்னை மட்டுமே வணங்கு கின்றனர் என்று மொழிந்தார்.

அதைக்கேட்ட பார்வதி கோபம் கொண்டு என்னருளை விரும்பாத பிருங்கிக்கு எனது அம்சமாகிய தசை, உதிரம் ஆகியவை மட்டும் எதற்கு? அதையும் விட்டுவிட்டு மோட்சமடைய லாமே? என்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதைக்கேட்ட பிருங்கி மகரிஷி, அவள் கூறியது உண்மைதான், சிவமே செம்பொருள் எனத்தேர்ந்த எனக்கு இவை தேவையில்லை என்று கூறித் தன் தவவலிமையால் நிணம், தசை, நரம்பு ஆகியவற்றை உதிர்த்து எலும்புருவாய் ஆனார். அவருடைய உடம்பிலிருந்து சக்தி நீங்கியது அதனால் நிற்க முடியாது சாய்ந்தார். அப்போது பரமசிவன் அவருக்கு மூன்றாவது காலை அளித்துச் சாயாது அவரை நிமிர்ந்து நிற்கவைத்தார். பார்வதிதேவி, சிவபெருமான் தன்னை வணங்காத பிருங்கியை ஆட்கொண்டு அவருக்கு அருள் செய்ததைக் கண்டு வருந்தினாள். அதனால் அவளுக்கு வெட்கமுண்டாயிற்று.

அவள் கயிலையை விட்டு நீங்கி மண்ணுலகிற்கு வந்து கௌதம முனிவரின் ஆசிரமத்தை அடைந்தாள். அவரிடம் சிவபெருமானிடமிருந்து தான் பிரிந்து வந்துவிட்டச் செய்தியைக் கூறினாள். அம்முனிவர் அவளுக்குப் பல இனியவார்த்தைகளைக் கூறி மீண்டும் பரமசிவனிடமே செல்லும்படிகூறினார்.

அதற்குத் தேவி, "மாமுனியே! அவரைப் பிரிந்து வந்த நான் மீண்டும் தவம் செய்தே அவரை அடைவேன்! எனக்கு அதற்கான வழியைக் கூறி அருளுங்கள் என்றாள். கௌதமர், தேவியிடம், அம்மா! "சிவபெருமானைக் காண பல ஆண்டுகள் தவம் செய்ய வேண்டியதில்லை. அதற்கு எளிய வழியாக அவரே கூறிய சிறந்த விரதம் ஒன்று உள்ளது. அதை நீ, கடைபிடித்தால் போதும் விரைவில் உனக்குச் சிவதரிசனம் கிடைக்கும் என்று கூறியதுடன் அதனைக் கடைப்பிடிக்க வேண்டிய முறையையும் விவரித்தார். அதுவே புரட்டாசி மாதம் வளர்பிறை அஷ்டமி தொடங்கி தேய்பிறைச் சதுர்த்தசி வரையிலான இருபத்தோரு நாட்கள் நோற்கப்படும் கேதாரீசுவர விரதமாகும்.

பின்னர் பார்வதிதேவி அவரிடம் விடை பெற்றுக் கொண்டு 'கேதாரம்" எனும் தலத்திற்குச் சென்று அங்குக் கங்கைக் கரையில் இருபத்தோரு நாட்கள் கடுந்தவம் புரிந்தாள். அவளுடைய தவத்திற்கு மகிழ்ந்து, சிவபெருமான் அவளுக்குக் காட்சியளித்து இனி என்றும் பிரியாதிருக்கும்படி தன்னுடலின் இடப்பாகத்தில் அவளை இணைத்துக் கொண்டார். கௌரியால் கடைப்பிடிக்கப்பட்டதால் அந்த விரதம் "கேதாரீஸ்வர கௌரி விரதம்" என்றழைக்கப்படுகின்றது.

3. சிவபுராணம் காட்டும் மற்றொரு கேதாரீசுவரர் வரலாறு

பிரம்ம தேவரின் புதல்வரான ஸ்வாயம்பு மனு என்பவனுடைய மகன் பிரியபுத்திரன். அவனுக்கு ஏழு புதல்வர்கள். அந்தப் பிரியபுத்திரன் ஒரு சமயம் மேருமலையின் மீது ஏறிச் சுற்றிப் பார்த்து உலகத்தை ஏழுபங்குகளாகப் பிரித்துத் தனது ஏழு மக்களுக்கும் கொடுத்தான். அந்த ஏழு பங்கும் ஏழு த்வீகளாயின. அதைச் சுற்றி ஏழு கடல்களும் உண்டாயிற்று. அவன் காலமான பிறகு மூத்தமகனான ஆக்நீதரன் பெரிய த்வீவை எடுத்துக் கொண்டான். இதில் ஏராளமான நாவல் மரங்கள் இருந்ததால் அதனை ஜம்புத்வீபம் என்று அழைத்தனர். இதனைத் தமிழில் நாவலந்த்வு என அழைப்பர்.

ஆக்நீதரனுக்குப் பிறகு நாபி என்ற அவனுடைய புதல்வன் பட்டமேற்றான். அவனுக்கு ரிஷபன் முதலான ஒன்பது பிள்ளைகள் பிறந்தார்கள். அந்த ரிஷபனுக்கு பரதன் முதல் நூறுபிள்ளைகள் பிறந்தனர். ரிஷபன் ஜம்புத்வீபத்தை 81 பகுதியாக்கி தனது புதல்வர்களுக்கும் சகோதரரின் புதல்வர்களுக்கும் அளித்தான். அவை முழுவதற்கும் பரதனைச் சக்கரவர்த்தியாக நியமித்தான். அவன் பெயராலேயே நமது நாடு பாரதநாடு என்றும் பரதகண்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட பரதகண்டத்தில் இலந்தை வனத்தில் பகவான் ஸ்ரீமன் நாராயணன் நரன், நாராயணன் எனும் இரண்டு வடிவங்களாக அவதாரம் செய்தார். இவ்விருவரும் மிகுந்த அன்புகொண்டு இலந்தை வனத்திற்கு அருகில் பார்த்திவலிங்கத்தை அமைத்துச் சிவபூசை செய்தனர். அவர்கள்முன்னே சிவபெருமான் தோன்றிப் பலவரங்களை அளித்தார். அவர்களின் வேண்டு கோளின்படி அங்கு நிலையாக எழுந்தருளியிருந்து அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றார். அந்த லிங்கமே கேதாரீசுவரலிங்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாகும். அந்த லிங்கத்தைப் பூசித்தால் சகல பாவங்களும் துக்கங்களும் அழிந்தொழிந்து நன்மைகள் உண்டாகின்றன. அந்தத்தலத்தில் ஒரு கங்கணம் அளிக்கப்படுகின்றது. அதனைக் கையில் பூட்டியவனும், தரித்தவனும் எல்லாப் பாவங்களையும் ஒழித்துச் சகல செல்வங்களையும் பெறுவான். இச்செய்திகள் சிவமகாபுராணத்திலுள்ள ஞானசம் ஹிதையில் கேதாரீஸ்வர மகிமை என்ற பகுதியில் உள்ளன.

4. சிவபுராணம் காட்டும் கேதாரீசுவரர் வரலாறு

மகாபாரதம் முடிந்த பிறகு பாண்டவர்கள் நீண்டகாலம் அஸ்தினாபுரத்தை ஆண்டனர். அதற்குப் பிறகு அபிமன்யுவின் மகனான பரீட்சித்துவுக்குப் பட்டம் சூட்டிவிட்டுத் திரௌபதி தேவியை அழைத்துக் கொண்டு மகாபிரஸ்தான யாத்திரை எனப்படும் சொர்க்கயாத்திரைக்குப் பயணமானார்கள். அவர்கள் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு இறுதியில் கேதாரத்தை அடைந்தனர். அங்கு மேலும் தொடர்ந்து செல்ல வழிதெரியாமல் திகைத்துச் சிவபெருமானை நினைத்துப் போற்றினர். அவர்கள் முன்பாக எருமைவடிவில் சிவபெருமான் தோன்றினார். அவர்கள் அந்த எருமையைத் தொடர்ந்து நடந்தனர். ஓரிடத்தில் அந்த எருமை வேகமாக ஓட ஆரம்பித்தது. அதனால் அதன் வாலைப்பற்ற முயற்சித்துப் பீமன் பின்னால் ஓடினான். வெகுதூரம் சென்ற பிறகு எட்டி அதன் வாலைப் பிடித்தான். சிவபெருமான் சட்டென்று ஒரு பிலத்துள் புகுந்தார். அவருடைய பிருஷ்டபாகம் மட்டும் அப்படியே சுயம்பு லிங்கமாக மாறிவிட்டது. அதுவே இப்போது கேதாரநாதர் என்ற பெயரில் விளங்குவதாகக் கூறப்படுகிறது.

பாண்டவர்கள் திரௌபதியுடன் அங்குச் சிவபூசை செய்தனர். அவர்களுடைய பூசையால் மகிழ்ந்த சிவபெருமான் அவர்களுக்குக் காட்சியளித்தார். அவர்கள் சிவபெருமான் காட்டிய வழியில் தொடர்ந்து சொர்க்கத்தினை நோக்கிப் பயணமாயினர். இதனையொட்டிக் கேதாரநாதர் ஆலயத்தில் பாண்டவர்களுக்குச் சிலைகள் அமைத்து வழிபடப்படுகிறது.

கேதாரநாதர் ஆலயத்திற்குப் பின்புறமுள்ள கணவாயின் வழியாகப் பாண்டவர்கள் சொர்க்கத்திற்குச் சென்றதாக இப்பொழுதும் கூறுகின்றனர்.

4. காசிக்கேதாரபுராணம் காட்டும் கேதாரீசுவரர் வரலாறு

காசிக்கேதாரபுராணம், முதலில் கேதாரத்தில் பிரமன் சிவபூசை செய்ததையும், அங்கு அவன் தவம் செய்ய முயன்றபோது சிவகணங்கள் அவனுடைய ஒரு தலையை வெட்டி எறிந்ததையும் அந்த இடமே இப்போது பத்ரிநாத்தில் பிரம்ம கபாலமாகத் திகழ்வதையும் விரிவாக கூறுகின்றது. அதனை பக்கம் 652-ல் காண்க.

கேதாரமும் கௌரி செய்த வழிபாடும்

கேதாரத்தில் அம்பிகை பூசித்துப் பேறுபெற்றதற்கான காரணத்தைப் பல நூல்கள் பலவாறு கூறுகின்றன. பிருங்கிதேவர் தன்னை வலம்செய்து வணங்காமையால் வருந்திய பார்வதி அவரைப் பிரிந்து வந்து கௌதமரிஷியின் யோசனையால் கேதாரத்தையடைந்து, தவம் செய்து இறைவனின் இடப்பாகம் பெற்றாள் என்று கேதாரீசுவர புராணம் கூறும். இந்தச் செய்தியைப் பௌஷ்ய(உத்தர)புராணம், திருச்செங்கோட்டு தலபுராணம், அருணாசலபுராணம் ஆகியவற்றிலும் காணலாம். வேறுசில புராணங்களில் சிவபெருமான் தன்னைக் கருநிறத்தவள் என்று பொருள்பட காளீ என்று அழைத்ததால் வருத்தமுற்ற தேவி கேதாரத்தில் தவம்செய்து தனது கரிய நிறம் நீங்கப் பெற்று பொன்னிறமாக பிரகாசித்தாள் என்று கூறுகின்றன. (கௌரம்-பொன்னிறம், வெள்ளை என்றும் கூறுவர்) கேதாரத்தில் பொன்னிறம் பெற்றதால் பார்வதிக்குக் கேதாரகௌரி என்பது பெயராயிற்று. இந்தக் கௌரி எனும் பெயரால் சிவபெருமானுக்குக் கௌரிசங்கரர் என்பது சிறப்புப் பெயராயிற்று. கேதாரத்தில் அம்பிகை சிவபூசை செய்ததற்கான காரணங்கள் பல நூற்களில் பலவாறு கூறப்பட்டுள்ளன. காரணங்கள் பலவாக இருந்தாலும் இக்கதைகள் யாவும் கேதாரத்தில் அன்னை சிவபூசை செய்தாள் என்பதை மட்டும் தவறாது வலியுறுத்துகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேதாரீஸ்வர விரதத்திற்கு உரிய காலம்

தலைசிறந்த சிவவிரதங்கள் எட்டினுள் ஒன்று கேதார்சுவர விரதமாகும். இந்த விரதத்தை நோற்க வேண்டிய முறைகள் பவிஷ்யோத்திர புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இதனை இருபத்தோரு நாட்கள் கடைபிடிக்க வேண்டும் என்பர். அப்படிக்கடைப்பிடிப்பது "உத்மபட்சம்" என்று கூறப்படுகின்றது. இது புரட்டாசி மாதம் வளர்பிறை அஷ்டமி முதல் தேய்பிறை சதுர்த்தசி வரை உள்ள இருபத்தோரு நாட்களாகும். இந்த இருபத்தோரு நாட்கள் விரதத்தைக் கடைபிடிப்பதால் கேதார்சுவரரின் அருளைப் பூரணமாகப் பெறலாம்.

இரண்டாவது வகையில் புரட்டாசி மாதம் தேய்பிறைப் பிரதமை முதல் சதுர்த்தசி வரையுள்ள 14 நாட்கள் நோற்கப்படுகிறது. இது மத்திமம் என்று கூறப்படுகின்றது.

மூன்றாவது வகை (அதமபட்சம்) தேய்பிறை அஷ்டமி தொடங்கி சதுர்த்தசி வரைக்கும் உள்ள ஏழு நாட்கள் கடைபிடிப்பதாகும். இது அதமபட்சம் எனப்படும். புரட்டாசி தேய்பிறை சதுர்த்தசியன்று ஒரு நாள் மட்டுமே கடைப்பிடிப்பதுச் சாமானிய பட்சம் எனப்படும். ஐப்பசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தசியில் (தீபாவளியன்று) கொண்டாடப்படுவது கேவலபட்சம் எனப்படும். இதற்கடுத்த நாளான அமாவாசையன்று கௌரிவிரதமான கேதார கௌரி விரதம் நோற்கப்படுகின்றது.

இந்த யுகத்தில் சாமான்யபட்சமான புரட்டாசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தசியில் நோற்கப்படும் கேதாரீஸ்வர விரதமே அதிகமான பலன்தருகின்றது. பழைய விதிகளின்படி இருபத்தோரு நாட்கள் இந்த விரத்தைத் தொடங்கினால் அது பெரும் பான்மையாக ஐப்பசி மாததேய்பிறைச் சதுர்த்தசி யிலேயே முடியும். அதனால் கேதாரீஸ்வர விரதத்தை ஐப்பசிமாத தேய் பிறைச் சதுர்த்தசியான தீபாவளி நாளிலும் கொண்டாடுகின்றோம். ஒரேநாள் நோன்பு இருப்பவர் புரட்டாசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் பூசித்தால் போதும்.

திருவாவடுதுறை ஆதீனம் திருவானைக்கா ஜம்புகேசுவரர் ஆலயம் முதலிய தலங்களில் சாமானிய பட்சம் எனப்படும் கேதாரீஸ்வர விரதம் கடைப் பிடிக்கப்படுகின்றது. அந்நாளில் சிறப்பாகச் சிவலிங்கபூசையும் கங்கணம் அணிவித்தலும் நடைபெறுகின்றன.

கங்கணம் (தோராபந்தனம்)

கேதாரீஸ்வர விரதத்தின் முக்கியமான நிகழ்ச்சி அந்த வழிபாட்டில் வைக்கப்பெற்ற நோன்புக் கயிற்றை அணிந்து கொள்வதாகும். இருபத்தோரு வெண்பட்டு இழைகளைத்திரித்து இந்தக் காப்புக் கயிற்றினைத் தயாரிக்கின்றனர். இருபத்தோரு ரத்தினமணிகளைப் பூசித்து அவற்றை மேற்குறித்த பட்டுக்கயிற்றில் கோர்த்து அணியவேண்டியதே முறை. இரத்தின மணிகளுக்குப் பதிலாக பொன்னாலான மணிகளையும், வெள்ளியாலான மணிகளையும் பயன்படுத்துவதுமுண்டு. மணிகளைச் செய்யவும் வாங்கவும் அதிக பொருட்செலவாகுமென்பதால் மணிகளுக்குப் பதிலாக கயிற்றில் முடிகளைப் போட்டுக் கொள்வது நடைமுறையில் பின்பற்றப்படுகின்றது. இதற்குத் தோராபந்தனம் என்று பெயர். (தோரா-மணிச்சரம். மணிச்சரங்களை அணிவதனால் தோராபந்தனம் என்று பெயர் பெற்றது). கேதாரத்தில் இத்தகைய கங்கணம் அளிக்கப்பட்டதை சிவபுராணத்தில் காணலாம்.

அதிரசம்

கேதார்சுவர விரதத்தின் முக்கியமான படையல் அதிரசமாகும். விநாயக சதுர்த்தியன்று கொழுக்கட்டையும், கார்த்திகை தீபத்தில் நெல்பொரியும், பொங்கலன்று பொங்கலும் சிறப்புடன் இறைவனுக்கு நிவேதனம் செய்வதுபோல இந்த விரத காலத்தில் அதிரசங்களைப் படைக்கின்றனர். அரிசியை இடித்துச் சலித்து அதனுடன் வெல்லப்பாகைக் கலந்து வட்டமாகத் தட்டி எண்ணெயில் வேகவைத்து எடுத்து அழுத்திப் பிழிந்து அதிரசம் தயாரிக்கப்படுகின்றது. இதனை அம்பிகைக்கும் சிவனுக்கும் படைத்து அதனையே பெண்களுக்குச் சீராக அனுப்பும் வழக்கம் உள்ளது. இப்படிப் பிறந்த வீட்டில் இருந்து (திருமணம் செய்து கொண்டு சென்றுள்ள) பெண்ணுக்குக் கௌரீஸ்வரப் பிரசா தத்தை அனுப்புவதால் அவள் நீண்ட ஆயுளுடன், சிறந்த மணவாழ்வையும் பெறுகிறாள் என்பது நம்பிக்கையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேதாரீசுவரர் பூசனை முறை

ஊருக்குப் புறத்தேயுள்ள குளம் அல்லது ஏரியின் கரையில் அமைந்துள்ள ஆலமரத்தடியே இந்த நோன்பிற்குரிய சிறந்த இடமாகும். அங்கு மண்ணால் சிவலிங்கமமைத்து அதற்கு வெண் பட்டினை அணிவித்து, வெள்ளைக்கற்கள் இழைத்தப் பொன்னாபரணங்களை அணிவிக்க வேண்டும். தாமரை, வெண்தாமரை, அலரி, குவளை, சொர்ணபட்டி, நந்தியாவர்த்தம், தும்பை, வெள்ளை சாமந்தி, மல்லிகை, முல்லை, ஜாதி, இருவாட்சி, சம்பங்கி, மரமல்லி, பவழவல்லி, முதலிய இருபத்தோரு வகையான மலர்களாலும் (பதினான்கு அல்லது ஏழுவகையானவை கூடப்போதுமானது) துளசி, வில்வம், அலரி, தும்பை, நொச்சி, விளா, மாவிலங்கை முதலானவற்றின் தளிர்களாலும் இலைகளாலும் அருச்சனை செய்யவேண்டும்.

லிங்கத்தின் முன்பு பொன்னால் செய்த கௌரிசங்கரர் திருவுருவத்தை வைத்துப் பூசிப்பது உத்தமமாகும். இது கௌரிதேவி நோற்றுக் காட்டிய விரதமாதலின் பெண்களே பூசையினைச் செய்ய வேண்டும். நிறைந்த சுமங்கலிப் பெண் அல்லது பருவம் அடைந்த பெண் முன்னின்றும் இந்தப் பூசையைச் செய்யலாம். இவர்கள் முன்வராத நிலையில் சிவாசாரியரைக் கொண்டோ, குடும்பப் பெரியவர்களைக் கொண்டோ பூசையை நடத்தலாம்.

கேதாரீசுவரரை அர்ச்சிப்பதற்கென்றே தனியான போற்றிகள் (அர்ச்சனை) உள்ளன. முதலில் விநாயகரையும், அதைத்தொடர்ந்து இந்த விரதத்தின் ஆதிரிஷிகளான கௌதமர், பிருங்கி ஆகியோர்களுக்கும் பூசைசெய்து, பின்னர் தம்மைக் கௌரி தேவியாகப் பாவனை செய்து கொண்டு சிவபூசையைச் செய்யவேண்டும்.

பூசையின் முடிவில் இருபத்தோரு (எண்ணிக் கையில்) பழங்கள், பணியாரங்கள், அதிரசங்கள் ஆகியவற்றைப் படைக்க வேண்டும்.

நோன்புக் கயிறுகளைத் தனியே பூசித்து அவற்றை லிங்கத்தின் மீது வைக்கவேண்டும். பிறகு அர்ச்சனைசெய்து தீபாராதனை செய்ய வேண்டும். பூசை முடிந்ததும், ஒரு பெண்ணைக் கௌரியாகப் பாவித்து, அவளைப் பூசிக்க வேண்டும். அவளிடமிருந்து பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு ஊர்வலமாக வந்து அவரவர் வீடுகளுக்குச் செல்லலாம்.



திருக்கேதார்சுவரர் - திருக்கேதாரம்

வீட்டிற்குச் சென்றபின் குலதெய்வத்தைப் பூசைசெய்து, சிவபெருமானுக்குப் படையல்செய்து அனைவருக்கும் விருந்திடவேண்டும். பிறகு குடும்பத்தலைவி அனைவருக்கும் நோன்புக் கயிறுகளைக் கட்டிவிடவேண்டும்.

கேதார்சுவர விரதத்திற்கு அடுத்தநாள் வருவது கேதாரகௌரி விரதமாகும். அதுவே இப்போது பெரும்பாலானவர்களால் நோற்கப்படுகின்றது. இது கௌரிதேவியைக்குறித்த சக்தி விரதமாகும். (இது பற்றிய விளக்கத்தை, எமது சக்திமஞ்சரி 3-வது மலரான ஸ்ரீகௌரிதேவியில் காண்க).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேதார யாத்திரை

உத்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள ஹரித்துவாரந்தான் கேதாரயாத்திரையின் ஆரம்ப இடமாகும். பக்தர்கள் பெரும்பாலும் ஹரித்துவாரத்தின் வழியாகவே மேற்படி பயணத்தைத் தொடங்குகின்றனர். இந்த இடத்தில்தான் இமய மலைகளில் தவழ்ந்து வரும் கங்கை, பூமியைத் தொட்டுச் சமவெளியில் ஓடத்தொடங்குகின்றாள். இந்த இடத்தை ஹரனின் சடையில் உள்ள•துவாரம் என்றும் பெருமானின் சடைக்குள் இருந்த கங்கை இந்த இடத்தில்தான் வெளிப்படுகின்றது என்றும் கூறுவர் எனவே இந்த இடம் ஹரத்துவாரம் என்று அழைக்கப்படுகிறதென்பர். இங்கே கங்காதேவிக்குக் கோயில் உள்ளது. முக்தியளிக்கும் தலங்களில் ஒன்றான மாயாபுரி இதுவேயாகும். இங்கு பல சிவாலயங்களும் விஷ்ணு கோயில்களும் உள்ளன. இங்கிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் ஒரு அணை உள்ளது. அங்கிருந்துதான் தூய கங்கைநீர் அபிஷேகங்களுக்குப் புனித நீராக எடுக்கப்படுகின்றது. இங்குச் சாதுக்கள் மிகுதியாக வசிக்கின்றனர். பெரிய கடைவீதிகளும் உள்ளன.

ஹரித்துவாரிலிருந்து 14 மைல் தொலையில் ரிஷிகேசம் அமைந்துள்ளது. ரிஷிகேசம் செல்லும்வழியில் லட்சுமணஜூலா ஆந்திர ஆசிரமம், சிவானந்த ஆசிரமம் முதலியன உள்ளன. இதனையடுத்துத் திருவேணி சங்கமம் உள்ளது. ராமாநதி, சரஸ்வதி குண்டம் என்ற சிற்றாறுகள் இங்கு கலப்பதால் இந்த இடம் திரிவேணி சங்கமம் என்று அழைக்கப்படுகின்றது. இந்த இடத்தில் பலர் நீராடுகின்றனர்.

அடுத்து நரேந்திரநகர் வழியாக வியாசர் சட்டியை அடைகிறோம். அங்கிருந்து தேவப்பிரயாகையை அடைகிறோம். தேவப்பிரயாகையில் அலகநந்தாவில் பாகீரதி நதி வந்து கலக்கின்றது. இந்த இடத்தில் பார்வதி, ராமர், அனுமான் ஆகியோருக்குக் கோயில்கள் உள்ளன.

"வியாசர்சட்டி" வியாசர்தவம் செய்த புண்ணியபூமியாகும். இங்கு வியாசருக்குக் கோயில் உள்ளது. இவற்றையெல்லாம் தரிசனம் செய்து கொண்டு ஸ்ரீநகர், நாரதமஹாஸ்தலம், வழியாக உருத்திரப்பிரயாகையை அடைகின்றோம்.

இந்த வழி ஏற்றமும் இறக்கமும் கொண்டதாக உள்ளது. இது ஒருவழிப்பாதையாகும். அரசு அங்கீகரித்த வாகனங்கள் மட்டுமே செல்லும். உருத்திரப்பிரயாகையில் உருத்திரேசுவரர் ஆலயம் சிறப்பாக உள்ளது. இங்குச் சிவபெருமானை நாரதரும் அகத்தியரும் உருத்திரரும் வழிபட்டார் என்பர். இந்த இடத்தில் அலகநந்தாவுடன் மந்தாகினி நதி வந்து கலக்கின்றது. இந்த இடத்திலிருந்து கேதார்நாத்திற்கும், பத்ரிநாத்திற்கும் பாதைகள் பிரிகின்றன.

பத்ரிநாத் செல்பவர்கள் அலகநந்தாவின் கரையோரமாகச் சென்று கர்ணப்பிரயாகை என்ற இடத்தை அடைந்து அங்கிருந்து. நந்தப்பிரயாகை, சமோலி, பீபில்சட்டி ஜோஷிமடம், பாண்டு கேஷ்வர், ஹனுமான் சட்டி வழியாக பத்ரிநாத்தை அடைவார்கள். பத்ரிநாத் வரை பஸ் செல்லுகின்றது. பத்ரியில் நிறைய கடைகள் உள்ளன. தங்குவதற்கு வசதியான இடங்கள் உள்ளன.

கேதார்நாத் செல்பவர்கள், மந்தாகினி நதியோரமாகவே சென்று அகஸ்தியமுனி,, சந்திராபுரிசட்டி, குப்தகாசி உகிமடம், திரியுக நாராயணபுரம், கௌரி குண்டம், ராமபாடா ஆகியவற்றின் வழியாகக் கேதார்நாத்தை அடைகின்றார்கள்.

உருத்திரப்பிரயாகையில் இருந்து 11கி.மீ. தொலைவில் அகஸ்தியமுனி சட்டி எனுமிடம் உள்ளது. இது அகஸ்தியர் வாழ்ந்த இடமாகக் கூறப்படுகின்றது. இந்த இடத்தில் அகத்தியருக்கு ஆலயமும் ஆசிரமும் உள்ளன. அவர் வழிபட்ட முருகன் ஆலயம் அருகிலுள்ள மலைமீது உள்ளது என்பர். இது கடல்மட்டத்திலிருந்து 4000 அடி உயரமாகும். இங்கிருந்து சந்திராபுரிசட்டி குண்டுசட்டி வழியாகக் குப்தகாசியை அடையலாம். குப்தகாசி கடல் மட்டத்திலிருந்து 4500 அடி உயரமாகும். குப்தகாசி என்பது மூன்று காசிகளில் ஒன்றாகும். இங்குக் காசிவிசுவநாதர் விசாலாட்சி ஆலயங்கள் உள்ளன. இங்கிருந்து பயணம் செய்து நளாசட்டி, வ்யூங்சட்டி, பாட்டாசட்டி வழியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீகேதாரநாதர் ஆலயம் பின்னணியில் பனிமுடிய கேதார்நாத் சிகரம் - கேதார்நாத்

ராம்பூரை அடைந்து அங்கிருந்த 2 கி.மீ. தொலைவில் உள்ள கௌரிகுண்டத்தை அடையலாம். இந்த இடம் வரை பஸ் செல்கிறது. இதற்கு மேல் நடைபயணம் செய்தே கேதார்நாத் தலத்தை அடைய வேண்டும்.

கௌரிகுண்டம் என்று அழைக்கப்படும். இந்த இடம் தேவாரத்தில் அனேகதங்காபதம் என்று கூறப்பட்டுள்ள தலமாகும். இங்குச் சிவாலயமும், கௌரிதேவியின் ஆலயமும் உள்ளன. இங்கு கௌரி குண்டம் என்ற நீர்நிலை உள்ளது. இதற்கு அருகிலேயே தப்தகுண்டம் என்ற வென்னீர் ஊற்றும் உள்ளது. இதில் வென்னீர் பொங்குகின்றது. குளிப்பதற்கு இதமாக உள்ளது. அது பயணிகளின் உடற்சோர்வையும், மனச் சோர்வையும் போக்குகிறது.

கௌரிகுண்டத்திலிருந்து மேல்நோக்கி நடந்து ஜங்கல்சட்டி வழியாக ராம்பாடாவை அடைகிறோம். ராம்பாடா கடல் மட்டத்திலிருந்து 10000 அடி உயரத்தில் உள்ளதாகும். இதைத் தாண்டினால் கருடியா கோயில் என்ற இடம் வருகிறது. இந்த இடத்தில் பனிப்பொழிவு அதிகமாக உள்ளது. இங்கிருந்து ஒருமைல் தொலைவில் கேதாரம் உள்ளதால் அதை இங்கிருந்தே காணலாம். தொடர்ந்து நடந்து கேதாரத்தை அடைகிறோம்.

கேதாரநாதர் ஆலயம் சுற்றுப்பிரகாரம் கருவறைப் பிராகாரம் நீண்ட நெடிய முகப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

கருவறையில் இமயமலையின் சிகரம் ஒன்றே சிவலிங்கமாக உள்ளது. அதன் பின்புறம் பெரிய கண்ணாடி உள்ளது. அருகில் சூலம் நடப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்டுள்ளது. பிராகாரத்தில் விநாயகர், தண்டாயுத பாணி, பாண்டவர்கள், கௌரிதேவி . ஆகிய திருஉருவங்கள் அமைந்துள்ளன. இந்த கௌரி தேவி கையில் லிங்கத்தை ஏந்திச் சிவபூசை செய்யும் நிலையில் காட்சியளிக்கிறாள்.

கோயிலுக்குப் பின்புறம் பனிபடர்ந்த கேதாரநாத் சிகரம் அதியற்புதமாகக் காட்சி யளிக்கிறது. ஒரு புறம் அமிர்தகங்கை, அதனை யடுத்துப் பால்கங்கை, அதனையடுத்துத் தவள கங்கை இப்படிப் பலவிதமான அருவிகளாய்ப் பனி உருகி ஓடிக்கொண்டேயிருக்கின்றது.

கோயிலின் முன்புறம் சிறிது புல்வெளி உள்ளது. மற்ற இடமெங்கும் வெண்பனித்தூவல் கண்ணுக்கு எட்டிய தூரம்வரை விருந்தளிக் கின்றது. கோயிலுக்கருகில் மந்தாகினி நதி ஆரவாரத்துடன் ஓடுகிறது. பக்தர்கள் கேதார்நாத்கீ ஜே! கங்காமாதாகீ ஜே! என்று கோஷமிட்டபடியே செல்கின்றனர்.

தேவாரப்பதிகங்கள் தமிழிலும், ஹிந்தி வரி வடிவிலும் சலவைக்கற்களில் செதுக்கப்பட்டு இங்கே பொறிக்கப்பட்டுள்ளன.

பிருங்ககமலம்

கேதாரீசுவரருக்கு உகந்த பூ பிருங்க கமலமாகும். இது நம்நாட்டுத் தாமரை போன்றதில்லை. துளசியின் முனையிலுள்ள நீண்ட கதிர்கள் போல இருக்கிறது. பலநாட்கள் வரை வாடுவதில்லை. வாடிய பின்னும் நல்ல மணம் வீசுகின்றது. கேதாரத்தின் பனிச்சரிவுகளில் இது பூக்கின்றது.

திருமுறைகளில் கேதாரமும் - அநேகதங்காபதமும்

கேதாரத்தை திருஞானசம்பந்தப்பெருமான் "தொண்டரஞ்சுகளிறும்" என்று தொடங்கும் பதிகத்தால் துதித்துள்ளார். இப்பதிகத்தில் கேதாரத்தில் பெருமான் அர்த்தநாரீசுவரராக இருப்பதை உணர்த்தும் வகையில் "மடந்தை பாகத்தடக்கி மறையோதி வானோர்தொழ" என்று குறித்துள்ளார். கேதாரம் என்பதற்கு நீர் நிலை என்பது பொருளாதலின் கேதாரத்தை "நீர்க்கோடு" என்ற சொல்லால் குறிக்கின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கேதாரநாதர் மீது வாழ்வாவது மாயம் என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியுள்ளார். இப்பாடலின் இறுதியில் தம்மை திருநாவுக்கரசருக்கும் திருஞானசம்பந்தருக்கும் அடியவன் என்று குறித்துள்ளது நாம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

கேதாரத்திற்குச் செல்லும் வழியிலுள்ள கௌரி குண்டமே அனேகதங்காபதம் என்று திருமுறைகளில் போற்றப்பட்ட தலமாகும். இதனைத் திருஞானசம்பந்தர் பாடிப்பரவியுள்ளார். இங்குச் சிவாலயமும் கௌரிதேவிக்கான தனி ஆலயமும் உள்ளன. இங்குச் சிவபெருமான் சுயம்புமூர்த்தியாக உள்ளார். அருகில் திரிசூலம் நடப்பட்டுள்ளது. இங்குள்ள வென்னீர் ஊற்றான தப்தகுண்டத்தில் அன்பர்கள் நீராடி மகிழ்கின்றனர். இது விநாயகர், அகத்தியர், சந்திரன், சூரியன் முதலானவர்கள் வழிபட்டத்தலமாகும்.

பஞ்ச கேதாரங்கள்

சிவபெருமான் எருமை வடிவமாகப் பாண்டவர்களுக்கும், பிரமனுக்கும் காட்சியளித்தார் என்று முன்பு கண்டோமல்லவா? பெருமான் அந்த எருமையின் வடிவைப் பூமியில் அப்படியே விட்டு விட்டுச் சென்றார். கேதாரத்தில் அதன் பின்புறம் கேதாரீசுவரராக உள்ளது. அதன் நாபித்தானம் - மத்யமகேஸ்வரர் என்ற தலமாகவும் மடி - துங்கநாத் என்ற தலமாகவும் தாடி - கல்பேசுவரர் என்ற தலமாகவும் முகம் ருத்ரநாத் என்ற தலமாகவும் ஆயின என்பர். இந்த ஐந்து இடங்களிலும் சிவாலயங்கள் அமைந்துள்ளன. இதில் துங்கநாத் கேதாரத்திற்குச் சற்று தொலைவில் அமைந்துள்ளது. இங்கு நெடிய மலையும் அதன்மீது துங்கநாதர் சிவாலயமும் உள்ளன. இந்த ஐந்து தலங்களையும் பஞ்சகேதாரங்கள் என்று அழைக்கின்றனர். சிலர் ருத்ரநாத்தலத்திற்குப் பதிலாக நேபாளம் பசுபதிநாதரை முகமாகக் கொள்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேதாரப்பயணம் சிறுகுறிப்புக்கள்

❑ கேதாரம் செல்வதற்குரிய காலம் மே முதல் அக்டோபர் வரையுள்ள ஆறுமாத காலமாகும். இதிலும் ஜுன், ஆகஸ்டு மாதங்களில் அதிகம் மழை பெய்யும். ஆதலால் ஆகஸ்டு இறுதிவாரத்தில் சென்றால் வண்ண வண்ணப்பூக்கள் பூத்துக்குலுங்கு வதைக் கானலாம். ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட வகையான பூக்கள் இங்கு மலர்வதாகக் கணக்கெடுத் துள்ளனர்.

❑ பக்தர்கள் வழிநெடுக கேதார்நாத்கீ ஜே! கங்காமாதாகீ! ஜே என்று உரத்தகுரலில் உற்சாகமாக கோஷமிடுவதைக் காணலாம்.

❑ முன்பு உருத்திரப்பிரயாகையில் இருந்து கேதார்நாத்திற்கு நடந்து செல்ல வேண்டியிருந்தது. இப்பொழுது கௌரி குண்டம் வரையில் பேருந்து செல்கிறது.

❑ நடக்கமுடியாதவர்களை மூங்கில் கூடையில் அமர்த்தித் தூக்கிக் கொண்டு செல்ல கூலியாட்கள் உள்ளனர். இந்த மூங்கில் கூடைகளுக்குக் கண்டி என்பது பெயர். ஏறிச்செல்ல குதிரைகளும் கிடைக் கின்றன. அவற்றின் மீதும் பயணம் செய்யலாம்.

❑ கம்பளிவாலா என்ற மகானால் கேதார்நாத் பக்தர்களுக்காக உண்டாக்கப்பட்ட சத்திரங்கள் வழியில் ஆங்காங்கு உள்ளன.

❑ கேதார் நாத் ஆலயத்தின் பின்புறம் கேதார் நாத் சிகரம் 11750 அடி உயரமாகக் காட்சியளிக் கின்றது.

❑ கேதாரீசுவரர் கோயிலுள் கேதார கௌரி, வீரபத்திரர், கார்த்திகேயர், விநாயகர் நந்திதேவர் விஷ்ணு ஆகிய திருஉருவங்கள் உள்ளன.

❑ கோயிலின் அருகில் மந்தாகினி நதி ஓடுகின்றது. கேதாரத்திற்கு 7மைல் தொலைவில் கௌரிகுண்டம் என்னும் இடம் உள்ளது. இது தேவியார் தங்கி கேதாரீசுவரரைப் பூசித்த இடமாகும். தேவாரத்துள் அனேகதங்காவதம் எனக் குறிக்கப்படும் இடமும் இதுவேயாகும். இங்குச் சுயம்பு மூர்த்தியாகப் பெருமான் எழுந்தருளி யுள்ளார். அம்பிகைக்குத் தனி ஆலயம் உள்ளது. கௌரி குண்டம் என்னும் பெரிய நீர் நிலை உள்ளது. இதன் அருகில் தப்தகுண்டம் என்னும் வெந்நீர் ஊற்று உள்ளது. இங்கும் மந்தாகினி நதி ஓடுகின்றது.

❑ கேதார்நாத் தலத்தில் 12 மாதங்களும் வசிப்பவர்களை பாராமாசி என்று அழைப்பர். அபூர்வமாகவே சில சாதுக்கள் ஆண்டு இங்கு முழுவதும் வசிக்கின்றனர்.

❑ கேதார்நாத் மேமாதம் திறக்கப்பட்டு அக்டோபர் மாத வாக்கில் மூடப்பட்டுவிடும் அதன் பிறகு பனிமழை பெய்து எல்லாவற்றையும் மூடிவிடும்.

❑ மேற்படி ஆறுமாதங்களில் அங்குள்ள மக்கள் கீழேயுள்ள சமவெளிக்கு வந்து தங்கிவிடு கின்றனர். பனிக்காலம் முடிந்ததும் பழைய இடத் திற்குத் திரும்புவர். கோயிலில் பூசை செய்பவர் களும் பணியாட்களும் உகி மடத்திற்கு வந்து விடுகின்றனர்.

❑ 10, 15 அடி உயரம் வரை பனி பெய்து மூடிவிடும் பதினைந்து மைல் வட்டாரத்திற்கு ஒரே பனிமயம் தான்.

❑ கேதார்நாத்தில் ஓரிரு கடைகளும் சுமார் ஐம்பது வீடுகளுமே உள்ளன. ஓரளவே விவசாயம் நடைபெறுகிறது. பெரும்பாலும் பயணிகள் அங்குத் தங்குவதில்லை.

❑ கேதார்நாத்தில் பிரம்மச்சாரிகளே பூஜை செய்கின்றார்கள். உப்பிடாத சாதமே நிவேதனம் செய்யப்படுகிறது.

❑ உருத்திரப்பிரயாகையில் இருந்து கேதார்நாத் வரையில் உள்ள ஊர்கள். உருத்திரப் பிரயாகை (4கி.மீ) - சதோலிசட்டி - தில்பாரா - அகஸ்திய முனிசட்டி - சந்திராபுரிசட்டி. - குண்டுசட்டி - குப்தகாசி-4500 அடி உயரம் (இங்கு காசி விசுவநாதர், விசாலாட்சி ஆலயம் உள்ளது) - நாளாசட்டி (இங்கிருந்து பத்ரிநாத்திற்கு நடந்து செல்லலாம்) - யூங்சட்டி - பாட்டாசட்டி - ராம்பூர் - கௌரி குண்டம் - கருடியாசட்டி - கேதார்நாத்.

❑ இறைவனுக்கு நாமே வழிபாடு செய்யலாம் அன்பர்கள் மந்தாகினி நதியிலிருந்து நீரை முகந்து வந்து கேதாரநாதருக்கு நீராட்டி மலர்சூட்டி வழிபடுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கேதாரீச்சரங்கள்

கேதார்சுவர வழிபாடு நெடுங்காலமாகச் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. வடநாட்டில் பல இடங்களில் கேதார்சுவரருக்குத் தனியாகக் கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றில் புராணச்சிறப்பும் தலச்சிறப்பும் கொண்டது. காசிநகரில் கேதார்காட்டில் அமைந்துள்ள கேதாரீசுவரர் ஆலயமாகும். அதனையும், அதைத் தொடர்ந்து தென்னாட்டில் அமைந்துள்ள சில கேதாரீசுவரர் ஆலயங்களையும் காணலாம்.

காசிநகர் கேதாரீசுவரர்

ஒரு சமயம் பிரமனுக்குப், படைப்புத் தொழிலைச் செய்வதால் தான்தான் அகில உலகிலும் மிகப்பெரியவன் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனால் தேவர்களையும், முனிவர்களையும் பலவாறு இகழ்ந்து பேசினான். ஆணவம் தலைக்கேறியதால் சிவபெருமானையும் நிந்தித்துப் பேசினான். நல்லவார்த்தைகள் சொல்லி அவனைத் திருத்தக்கூடியவர் எவருமில்லை.

அவன் ஒரு சமயம் கயிலைமலைச்சாரலில் உலவிக்கொண்டிருந்தான். அப்பொழுது சில தேவரிஷிகள் அவனிடம், நீ சிவனை நிந்தித்தால் பெரும் பாவத்தை அடைந்துள்ளாய். உன்னைப் பார்ப்பதும்கூடப் பாவம் என்று கூறி முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றனர்.

அதைக்கேட்ட பிரமன் அவர்களிடத்தில் சென்று, "தவமுடையவர்களே எனது பாவம் நீங்க வழிசொல்லுங்கள் என்றான். அவர்கள் அவனிடம் நீ இமயமலைச்சாரலில் உள்ள கேதாரம் சென்று சிவபூசை செய்தால் உன்னுடைய பாவம் தீரும்," என்றனர்.

அதன்படியே பிரமன் கேதாரம் சென்றான். சிவபூசை செய்ய அங்குள்ள நதியில் நீராட முனைந்தான். அப்பொழுது சிவகணங்கள் அவனிடம் நீ சிவநிந்தனை செய்தவன் ஆதலால் இங்கு நீராடக்கூடாது என்று தடுத்தனர். அவனது தலையில் ஓங்கி அடித்தனர். ஐந்து முகம் கொண்ட அந்த ஆதிப்பிரமனின் ஒரு சிரம் தெறித்து* பத்ரியில் சென்று வீழ்ந்தது. அப்பொழுதும் அஞ்சாமல் அவன் அங்குச் சிவனை நினைத்து நீராடினான். அவனுடைய உறுதியைக் கண்ட மகிழ்ந்துச் சிவகணங்கள் அவனைச் சிவபூசைக்கு அனுமதித்தனர்.

இவ்வாறு பலகாலம் பிரமன் தவம் செய்வதைக்கண்ட சிவபெருமான் அவனுக்குக் காட்சியளிக்க விரும்பினார். ஆனாலும் அவன் தன்னை நித்தித்தவன் என்பதால், தன்னுடைய அழகிய வடிவத்தைக் காட்டாமல் ஒரு எருமையின் வடிவில் அவன் முன்பு தோன்றினார்.

பிரமன் தன்முன்பு வந்துள்ளவர் சிவபெருமான் என்பதை உணர்ந்து அவருடைய அருகில் சென்றான். அப்பொது அவர் முகத்தை மண்ணில் புதைத்துக் கொண்டு அவனுக்குத் தன் பின்பக்கத்தையே காட்டினார். அவன் அவரைப் பலவாறு போற்றித் தொழுது அழுதான்.

சிவபெருமான் அவனிடம், "அன்பனே, நீ காசிக்குச் சென்று அங்கு எம்மை கங்கைக் கரையில் கேதார கட்டத்திலுள்ள ஆதிகேதாரத் தில் வழிபடுக அங்கு உமக்குக் காட்சியளிப்போம் என்றார். அதன்படியே அவன் காசிக்கு வந்து கேதார கட்டத்தில் விளங்கும் ஆதிகேதாரநாதரை வழிபட்டான். அவனுக்கு அங்குச் சிவபெருமான் காட்சியளித்து படைப்புத் தொழிலைச் சிறப்பாகச் செய்யும் வரத்தை அருளினார்.

மேலும் ஒரு சமயம் பார்வதி தேவியார் சிவனருள் பெறவேண்டி இங்குப் பன்னிரண்டு ஆண்டுகாலம் தவம்புரிந்தாள். அவளுக்குச் சிவபெருமான் காட்சியளித்து மீண்டும் கயிலைக்கு அழைத்துச் சென்றார். அன்று முதல் அந்த ஆதிகேதாரம் "காசிகேதார கௌரீச்சரம்" என்றும் அங்குள்ள தீர்த்தம் கௌரிதீர்த்தம் என்றும்

*இந்த இடம் பிரம்ம கபாலம் என்ற பெயரில் பத்ரிநாத்தில் உள்ளது. அங்குப் பிண்டம் செலுத்தினால் பித்ரு தேவதைகள் மகிழ்கின்றார்கள் என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழைக்கப்படுகின்றது. காசிநகரில் விசுவநாதர் கோயிலுக்குத் தெற்கில் கேதார்காட் என்னுமிடத்தில் கேதாரநாதர் ஆலயம் உள்ளது. கேதார்காட் கங்கையின் அறுபத்து நான்கு கட்டங் (துறைகள்) களில் ஒன்றாகும். கங்கையின் மேற்குக் கரையில் கேதாரீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டு முறையில் அமைந்த இக்கோயிலில் சுயம்பு வடிவமாக (ஒரு அடி உயரம் கொண்ட வட்டமான பாறைபோன்று) கேதாரீசுவரர் எழுந்தருளியுள்ளார். சுற்றிலும் பித்தளையால் கோமுகம் செய்து பொருத்தப்பட்டுள்ளது. மேற்கில் உட்கார்ந்து அபிஷேகம் செய்ய வசதியாக இருக்கைகள் உள்ளன. மேலே தாராபாத்திரம் அமைக்கப்பெற்றுள்ளது. அதன் மூலம் கங்கை நீர் விழுந்த வண்ணமாக உள்ளது. அன்பர்கள் தாமே கங்கை நீரைக் கொண்டு வந்து அபிஷேகித்து வில்வத்தால் அர்ச்சிக்கின்றனர். பிராகாரத்தில் கேதாரகௌரி அம்பிகை, விநாயகர், தண்டபாணி, நாகர்கள் ஆகியோரும் பல சிவலிங்கங்களும் தனித்தனி சிற்றாலயங்களில் அமைந் துள்ளனர். தேவாரப்பதிகங்களும் வடமொழிச் சுலோகங்களும் சலவைக்கற்களில் பொறிக்கப் பெற்றுச் சுவற்றிலும் தரையிலும் பதிக்கப் பெற்றுள்ளன.

கிழக்கு வாயிலில் பெரிய முற்றமும் கேதார் காட்டின் படித்துறையும் உள்ளன. இதன் வழியே இறங்கிக் கங்கையில் நீராடி மகிழலாம். இக்கோயில் தமிழ்நாட்டின் முப்பெரும் சைவ ஆதீனங்களில் ஒன்றான ஸ்ரீகாசிமடத்தாரால் நிர்வகிக்கப் படுகின்றது. இதற்கு அருகில் காசிமடத்திற்குரிய குமாரசாமி மடமும், சில தெருக்கள் தள்ளி திருவாவடுதுறையாதீனத்திற்குச் சொந்தமான கண்ணப்பசாமி மடமும் உள்ளன.

தென்னகத்துக் கேதாரங்கள்

கேதாரநாதருக்கு வடநாட்டில் உள்ளதைப் போலவே தென்னகத்திலும் பல ஆலயங்கள் அமைந்துள்ளன. இவை தென்னகத்துக் கேதாரங்கள் (தட்சணகேதாரங்கள்) என்று அழைக்கப்படுகின்றன. இவற்றில் உயர்ந்ததாகத் திகழ்வது திருச்செங்கோடாகும். இங்குத் தேவி பூசித்து அவருடைய உடலில் இடப்பாகத்தைப் பெற்றதால் இது தட்சணகேதாரம் என்று தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறது.

மேலும் இலங்கையிலுள்ள திருக்கேதீச்சரமும்! தட்சணகேதாரம் என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. கேதாரத்தில் அம்பிகைக்குக் கௌரி என்று பெயர் வழங்குவது போலவே திருக்கேதீச்சரத்திலும் அம்பிகையின் பெயர் கௌரி என்றே வழங்கப்படுகிறது. இவை தவிர அன்பர்கள் கேதாரநாதர் மீது கொண்ட அன்பினால் அமைத்த கேதாரீசுவர ஆலயங்களும், கேதாரீசுவரர் என்ற சிவலிங்கங்களும் தமிழகத்தில் பல இடங்களில் உள்ளன. அவற்றுள் சிலவற்றைத் தொடர்ந்து காணலாம்.

உத்திரமேருகேதாரீசுவரர்

வடமேருமலை புனிதமான சிவத்தலங்களில் தலையானதாகும். அதனையொத்த புனிதமான இடம் என்ற பொருளில் அமைந்த ஊர் உத்திரமேரூர் எனப்பட்டது. (உத்திரம்=வடக்கு) உத்திரமேரூர் பார்வதிதேவியின் வடிவம் என்பதால் அதற்கு "மேருமங்கை" என்பதும் பெயராயிற்று. அருணகிரிநாதஸ்வாமிகள் உத்திரமேரூரை மேருமங்கை என்று திருப்புகழில் அழைப்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய சிறப்புமிக்க உத்திரமேரூரில் கேதாரீசுவரர் கோயில் அமைந்துள்ளது. உத்திரமேரூர் காஞ்சிபுரத்திற்குத் தெற்கில் உள்ள திருத்தலமாகும். உத்திரமேரூரின் கிழக்குப்பகுதியில் (காஞ்சீபுரம் சாலையில்) கிழக்கு நோக்கியவாறு நல்ல கருங்கல் திருப்பணியாக அமைந்துள்ள இக்கோயில் கலையழகுமிக்கதாகும். மூலவர் கேதாரீஸ்வரர் என்றும் அம்பிகை மரகதவல்லி என்றும் அழைக்கப்படுகின்றனர். அம்பிகைக்குக் கௌரி என்றும் பெயர் வழங்குகின்றது. தீபாவளியை யொட்டிவரும் கேதாரகௌரி நோன்பு நாளில் திரளான மக்கள் இக்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்கின்றனர். தினப்பூசைகள் நன்கு நடைபெறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேரூர் கேதாரீசுவரர்

கேதாரீசுவரர் கௌரி - பேரூர்

கோவை நகரின் ஒரு பகுதியாகத் திகழும் பேரூரில் பட்டீச்சரர் ஆலயம் உள்ளது. இதன் முன்னே பெரிய அரசமரமும் அதனைச் சுற்றி அமைக்கப்பட்ட பட்டிமேடையும் உள்ளன. இந்த மேடையின் மீது தென்மேற்கு முனையில் சிறு ஆலயம் உள்ளது. இதனுள் சிவபெருமான் மண் வெட்டியுடன் வயல்வேலையில் ஈடுபட்டுள்ளவ ராகவும் அம்பிகை நாற்றுக்கட்டை ஏந்தி நடவு நடச்செய்வது போலவும் புடைப்புச் சிற்பங்களாக எழுந்தருளியுள்ளனர்.

கேதாரம் என்பதற்கு வயல்வெளி என்றும் நீர்நிலை என்றும் பொருள். வயல்வேலை செய்பவராகப் பெருமானும். பெருமாட்டியும் கோலங்கொண்டிருப்பதால் இந்தச் சிற்றாலயம் கேதாரீசுவரர் ஆலயம் என்றழைக்கப்படுகின்றது.

இதற்கானப் புராணவரலாறு பேரூர்ப்புராணத் தில் பள்ளுப்படலத்தில் இடம்பெற் றுள்ளது. இது கேதாரத்தலத்தோடு தொடர்புடைய தல்ல. சுந்தர மூர்த்தி சுவாமிகள் வரலாற்றுடன் தொடர்புடையதாக விளங்குகின்றது. அது......

ஒரு சமயம் பல தலங்களையும் தரிசித்துப் போற்றிய பின் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பேரூருக்கு வந்தார். அவர் ஒவ்வொரு தலத்திலும் சிவபெரு மானிடத்தில் பொன் வேண்டிப்பாடுவது வழக்கம். இங்கும் அப்படியே அவரைப் புகழ்ந்து பாடிப் பொன்பெற விரும்பினார். இறைவனுக்கு இங்கு அவருக்குப் பொன்தர விருப்பமில்லை எனவே. தான் வயல்வேலை செய்பவனாகக் கோலம் கொண்டு மண்வெட்டி ஏந்தி அருகில் உள்ள வயல்வெளிக்குச் சென்று விவசாய வேலையைச் செய்து கொண்டிருந்தார். அம்பிகையும் உழத்தியாகக் கோலம் கொண்டு நாற்றுகளை வயலில் நட்டுக் கொண்டிருந்தாள். விநாயகரும். முருகனும் சிறுவர்களாக மாறி அங்கு விளையாடிக் கொண்டிருந்தனர். லட்சுமி. சரஸ்வதி. இந்திராணி முதலான தெய்வப் பெண்களும் அம்பிகையோடு நடவுப்பணியில் ஈடுபட்டு நாற்று நட்டுக் கொண்டிருந்தனர்.

ஆலயத்திற்கு வந்த சுந்தரர் அங்கு இறை வனையும். இறைவியையும் காணாது திகைத்து. நந்திதேவரிடம் அவர்கள் எங்குச் சென்றனர் என்று கேட்டார். சுந்தரருக்குத் தம்மிருப்பிடத்தைச் சொல்ல வேண்டாம் என்று இறைவன் கட்டளையிட்டி ருந்தபடியால் நந்தி வாய் திறந்து பேசாது முகத்தைத் திருப்பி குறிப்பால் இறைவனிருக்கும் வயலைக் காண்பித்தார்.

சுந்தரர் கோயிலிலிருந்து புறப்பட்டு இறைவன் எழுந்தருளியிருக்கும் வயலுக்குச் சென்று இறைவனை நோக்கி, நட்ட நடவு போதும், எச்சத்தை நாளைக்கு நடலாம் என்று கூறிப் புகழ்ந்து பாடினார்.

இறைவனும், இறைவியும் அவருக்கு இயல்பான வடிவில் காட்சியளித்து ஆலயத்திற்கு வந்தனர். அங்குப் பெருமான் தமது ஆடற் கோலத்தை அவருக்குக் காட்டியருளினார். பிறகு அவரிடம் "உமது பாட்டுக்கு நமது ஆட்டமே பரிசு" என்று கூறினார். சுந்தரர் மகிழ்வுடன் பேரூரில் தங்கியிருந்தார். இது பெரிய புராணத்தில் இல்லை யென்றாலும் மக்கள் மத்தியில் நெடுங்காலமாகப் போற்றப்பட்டு வருகின்றது. இதனை நினைவுகூறும் வகையில் நடவுத் திருவிழா ஆண்டு தோறும் ஆனித்திருமஞ்சனத்தைக் கடைநாளாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெறுகின்றது. அந்நாளில் இறைவனும் இறைவியும் அருகிலுள்ள வயலுக்கு எழுந்தருளி நாற்று நடுதலும் சுந்தரர் சென்று பாடல் பாடி அவர்களை ஆலயத்திற்கு அழைத்து வருதலும் ஆகிய ஐதீகக் காட்சிகள் நடை பெறுகின்றன. ஃ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டில் கேதாரநாதர் ஆலயம்

நாகை மாவட்டத்திலுள்ள திருப்புகலூர் அக்னீசுவரர் ஆலயத்தில் கேதாரநாதருக்குகென்று தனிச்சிற்றாலயம் அமைந்திருந்தது. அதற்காக அளிக்கப்பட்ட ஊர் கேதாரமுடையார் தேவதானம் என்றும் திருக்கேதாரமங்கலம் என்றும் அழைக்கப்பட்டது. இவ்வூருக்கு அருகிலுள்ள ஒரு நிலத்தை திருப்புகலூர் காமீசுவரமுடையார்க்கு (இந்நாளில் இது சித்தர்கோயில் என்று அழைக்கப்படுகின்றது) அளித்ததை இப்பகுதியில் 13ஆம் நூற்றாண்டில் அரசு செலுத்திய கோனேரின்மை கொண்டான் என்பவனால் வெட்டப்பட்ட கல்வெட்டு விரிவாகக் கூறுகின்றது. இதைநோக்க ஆயிரமாண்டுகளுக்கு முன்பே கேதாரநாதருக்கெனத் தனிக்கோயில்களை அமைக்கும் வழக்கம் தென்னத்தில் இருந்ததை அறியமுடிகிறது.

சென்னை மாம்பலம் கேதாரீசுவரர்

தமிழகத்தின் தலைநகரான சென்னையின் தென்பகுதியில் பெருவணிகப் பகுதியாக விளங்கும் மாம்பலம் உஸ்மான் சாலையில் சிவா-விஷ்ணு ஆலயம் அமைந்துள்ளது. இங்குச் சிவலிங்க வடிவாகக் காட்சியளிக்கும் பெருமானுக்குக் கேதாரீசுவரர் என்பது பெயராகும். காஞ்சி காமகோடிப்பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீசந்திரசேகரரேந்திர சரஸ்வதி சுவாமிகள் இந்த லிங்கத்தை அன்பர்களிடம் அளித்துக் கேதாரீசுவரர் என்ற பெயர் சூட்டினார். இங்குள்ள அம்பிகையின் பெயர் பார்வதி என்பதாகும். இப்பெருமான் மீது திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் ஐந்து பாடல்களைக் கொண்ட துதியொன்றைப் பாடியுள்ளார்.

கேதாரீஸ்வரர் புராணம்

கேதாரீஸ்வரரின் மகிமையை விளக்கி எழுதப்பட்ட புராணம் "கேதாரீஸ்வர புராணம்" ஆகும். இதன் மூலநூல் வடமொழியில் அமைந்த ஸ்காந்த புராணத்தின் ஒரு பகுதியான நாகர கண்டமாகும். இது பூர்வகாண்டம், உத்திரகாண்டம் என்ற இரண்டு பகுதிகளை உடையது.

பூர்வகாண்டத்தில் நைமிசாரண்யத்திற்குச் சூதமுனிவர்வருதல் - அவரை நைமிசாரண்ய வாசிகள் பணிந்து சிவபெருமானுக்குரிய விரதங்களில் ஒன்றைக் கூறுமாறு வேண்டுதல் - அவர் கேதாரீஸ்வர விரதத்தைக் கூறுதல். அவர்கள் அந்த விரதம் உண்டானதற்கான மூலகாரணத்தைக் கேட்பது. சூதமாமுனிவர் கதையைக் கூறத் தொடங்குதல் அதன்படி கயிலை மலைக்கு வந்த பிருங்கி மகாரிஷி பார்வதியை விடுத்துச் சிவனை மட்டும் வணங்கியது; பார்வதி பரமசிவனிடம் ஏன் அவர் உங்களை மட்டும் வணங்கினார் என்று கேட்டதற்கு, மோட்சம்விரும்பும் அவருக்கு உன்னருள் தேவையில்லை என்று சிவன் கூற அதைக்கேட்டுப் பார்வதி வருந்துதல் : அதனால் பார்வதி சிவபெருமானை விட்டுப் பிரிந்து கௌதமரின் ஆசிரமத்திற்கு செல்லுதல் - கௌதமர் மீண்டும் பார்வதியைக் கயிலைமலைக்குப் போகுமாறு கூறுதல் - அதற்கு அவள் சிவனை நோக்கிக் கடுந்தவம் செய்ய விரும்புதல் - கௌதமர் தவம் செய்வதை விட கேதாரீஸ்வர நோன்பை நோற்பதால் பரமேஸ்வரனை எளிதில் அடையலாம் என்று கூறுதல். கௌரி கேதாரம் சென்று கேதாரீசுவர விரதம் நோற்பது. பெருமான் அவளுக்கு அருள்புரிதல் ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

உத்திரகாண்டத்தில் இந்த நோன்பினை நோற்றவர்கள் பெற்றபேறுகள் விளக்கப்பட்டுள்ளது. இது நோன்புக்கதைகள் எனவும் வழங்கப்படும். இவற்றின் சுருக்கம்:-

- ❑ சூரபத்மனாலும் அவனுடைய் அசுரசேனைகளாலும் துன்புற்ற தேவர்களின் மனைவியர் இந்த விரதத்தை அனுஷ்டிக்க முருகப்பெருமான் தோன்றி அசுரர்களை வென்று தேவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தார்.
- ❑ சித்திராங்கதன் என்பவன் சனகாதி முனிவர்களின் அருளாணைப்படி இந்த விரதத்தைக் கடைப்பிடித்துச் சிவபெருமானைத் தரிசித்தான். அவர் அருளால் எந்த உலகிற்கும் எளிதில் செல்லும் வரமும், இந்திரஞாலத் தேரும் பெற்றான்.
- ❑ வச்சிர தந்தன் என்பவனுடைய நாடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருத்த வளமுடையதாக இருந்தது ஆயினும் காட்டு விலங்குகளால் அவை அழிந்தன. அதனால் அம்மன்னன் காட்டுமிருகங்களை வேட்டையாடக் கானகம் வந்து அவற்றை வேட்டையாடிக் களைப்புற்று ஒரு சோலையில் தங்கியிருந்தான். அப்போது சித்திராங்கதன் என்பவன் அங்குவந்து அம்மன்னனிடம் கேதாரீஸ்வர விரத்தின் பெருமை களைச் சொல்லி அதனைக் கடைப்பிடிப்பதால் பயிர்கள் செழிப்பாக வளர்வதுடன் அவற்றிற்குப் பாதுகாப்பும் கிடைக்கும் என்று கூறினான். பயிர்களைக்காக்க காட்டுவிலங்குகளை வேட்டை யாடுவதால் உண்டாகும் பாவமும் நீங்கும் என்றான்.

இதனால் பயிர்வளம் சிறக்கக் கேதார ஈஸ்வரர் விரதம் கடைபிடிக்க வேண்டியது அவசி யம் என்பதை உணரமுடிகிறது.

❑ வாணிய குலத்தில் பிறந்த புண்ணியவதி, பாக்யவதி என்ற இரண்டு பெண்கள் இந்த விரதத் தைக் கடைபிடித்து அரசகுடும்பத்தில் வாழ்க்கைப் பட்டதை இப்புராணம் விரிவாகக் கூறுகிறது.

இந்தப்பகுதியைத் தொடர்ந்து இது பெண்களுக்கே உரிய விரதம் ஆதலால் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய நெறிகள் மாதர் நீதி உரைத்த அத்தியாத்திலும், அறத்தியல் உரைத்த அத்தியாயத்திலும் கூறப்பட்டுள்ளன. மேலும் சைவநெறியின் பொதுவிதிகளும் நித்தியவிதிகளும் எளிமையாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து ஆலமரத்தடியில் இரண்டு பெண்கள் கேதார்சுவர நோன்பு நோற்றதையும் அவர்கள் கேதாரீசுவரரைப் போற்றிச் செய்த அர்ச்சனை செய்த நூற்றெட்டுப் போற்றிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

❑ இந்த விரதத்தை நோற்பவர்கள் உயர்ந்த நிலையில் உள்ள கணவனை அடைவர்கள் என்பது உறுதியாகக் கூறப்படுகிறது.

❑ இதனை வாணியம்பாடி சங்கரசெட்டியாரின் குமரர் முருகப்ப செட்டியார் இயற்றியுள்ளார். இதற்கு மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மாணாக்கர்களில் ஒருவராகிய கந்தசாமி உபாத் யாயர் என்பவர் உரை எழுதியுள்ளார்.

❑ ஆர். ஷண்முகசெட்டியாரின் கரூர் பசுபதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு வாணியம்பாடி செல்வர் போ.ரெ.வெங் கட்ராம செட்டியார் பொருள் உதவி செய்துள்ளார்.

❑ இந்த நூலின் வரலாற்றுச் சுருக்கத்தை உரைநடையில் திருவாவடுதுறை ஆதீனத்தினர் 1964ஆம் ஆண்டில் கேதாரீசுவர நோன்பு மலராக வெளியிட்டுள்ளனர். இதில் கேதாரீசுவர அர்ச்சனை யும் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் புராணத்தில் அளிக்கப்பட்டுள்ள நாமாவளி களுடன் திருவாவடுதுறை ஆதீனத்தில் கேதாரீசுவர விரதநாளில் செய்யப்படும் பூஜைக்கென்றே அருளப்பெற்ற நாமாவளியும் இணைக்கப்பட்டுள் ளது. இந்த நாமாவளிகள் கேதாரீசுவரரின் வரலாற்றுப் பெருமைகளைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பத்ரிநாத்தும் - கேதார்நாத்தும்

பத்ரிநாத்தும் - கேதாரநாத்தும் இரட்டைத் தலங்களாகும் - இந்த இரண்டு இடத்திலும் கேதாரநாதருக்கான ஆலயங்கள் உள்ளன. பத்ரிநாத்தில் விஷ்ணு நரன் நாராயணன் என்ற இரண்டு வடிவங்களில் இருந்து தவம் செய்தார் என்பர். இங்குள்ள பெருமானுக்குப் பத்ரி நாராயணர் என்று பெயர். பத்ரிநாத்திற்கு ஆண்டு முழுவதிலும் பயணம் செய்து அன்பர்கள் தரிசனம் செய்கின்றனர். இத்தலத்தில் பெரிய கடை வீதிகளும் தங்குமிடங்களும் உள்ளன.

பத்ரி என்பதற்கு இலந்தை என்பது பொருள். இப்பகுதி இலந்தை வனமாக இந்ததால் பத்ரிகாச்சிரமம் என்று அழைக்கப்பெற்றது. வைணவத்திருப்பதிகள் நூற்றெட்டில் ஒன்றாகும். இதற்கருகில் பிரம்ம கபாலம் என்ற இடம் உள்ளது. கயாவில் பிண்டம் செலுத்துவதுபோல் இங்கும் பிதுர்களுக்குப் பிண்டம் இடப்படுகிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் கேதாரநாத்-பத்ரிநாத் யாத்திரையை மேற்கொண்டு புண்ணியம் பெறுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீகௌரீசுவரர்

சிவபெருமானிடமிருந்து அவருடைய அருள் வடிவமாகத் தோன்றி அவருடைய இடப்பாகத்தில் விளங்குபவள் சக்தி. இவளைப் பராசக்தி எனவும் சிவசக்தி எனவும் அழைப்பர். இவர் பக்தர்கள் மீது கொண்ட அன்பால் அவர்களுக்கு மகளாகப் பிறந்து சிவபெருமானைத் திருமணம் செய்து கொண்டாள். அவள் இமய மன்னனுக்குப் புதல்வியானபோது உமா என்றும், பர்வதராஜனுக்கு மகளானபோது பார்வதி என்றும் காத்தியாயன முனிவருக்கு மகளானபோது காத்யாயனி என்றும் அழைக்கப்பட்டாள். இப்படியே பொன்மயமான மந்திரமலையரசனான மந்திரனுக்கு மகளானபோது மந்திரா என்றும், மதங்கருக்கு மகளான போது மாதங்கி என்றும் பெயர் பெற்றாள்.

அவள் இமயமன்னன், மலையத்துவசன், மந்திரன் முதலான மலையரசர்களின் மகளாகப் பிறந்ததால் மலைமகள் என்றும் கிரிகன்னிகா, கிரிஜா என்றும் அழைக்கப்பட்டாள். கிரிராஜ குலத்தில் பிறந்ததால் அவளுக்கு கௌரி என்பது பெயராயிற்று. மேலும் அவள் ஒரு சமயம் கேதாரத்தில் பூசித்துக் கௌரிதேவி என்று பெயர் பெற்றாள். அந்தக் கௌரி என்ற பெயராலேயே அவள் ஆகமங்களிலும், பூஜாபத்ததி நூல்களிலும் குறிக்கப் பெறுகின்றாள்.

பூஜாபத்ததி நூல்கள் சிவாலயங்களில் நடைபெறும் தேவிபூஜையைக் கௌரி பூஜை என்றே குறிக்கின்றன. உத்ரகாமிகாமிகாகமத்தில் கல்யாணமூர்த்தி பிரதிஷ்டாவிதியில் பராசக்தி தேவகௌரி என்றும், உத்திர காமிகாகமத்தில் திருக்கல்யாண விதியில் (கௌரீம் ஈச்வர ஸவ்யேது) கௌரியினைச் சிவனின் வலப்பாகத்தில் எழுந்தருளிவைக்க என்றும், ரௌரவ ஆகமத்தில் கல்யாண சுந்தரமூர்த்தியைப் பற்றி குறிப்பிடுகையில் சியாமள நிறத்துடன் கூடிய கௌரிதேவியை வலப்புறத்தில் வைக்க வேண்டு மென்றும், அம்சுமத் காஸ்யபத்தில் கல்யாணசுந்தரமூர்த்தியை குறிப்பிடுகையில் பெருமானின் வலதுகை கௌரியின் வலதுகரத்தைப் பற்றியுள்ள தென்றும், குறிப்பிடுவது காண்க. சிற்ப நூல்களும் பராசக்தியைக் கௌரிதேவி என்றே குறித்துப் போற்றுகின்றன.

பேரூர்ப் புராணத்தில் சிவபார்வதியரின் திருமணம் கௌரி திருமணம் என்று குறிக்கப்படுகின்றது. அக்கினி புராணத்தில் உமைக்கு ஆலயம் அமைத்து அதில் அவளுடைய வடிவைப் பிரதிஷ்டை செய்வது கௌரீ பிரதிஷ்டாவிதி என்ற பெயரில் விரிவாக உள்ளது.

அறுபத்து நான்கு சிவமூர்த்தங்களுள் இரண்டு மூர்த்தங்கள் கௌரியின் பெயரால் கௌரீ வரப்ரத மூர்த்தி என்றும் கௌரிலீலாசமந்விதமூர்த்தி என்றும் வழங்கப்படுகின்றது. மேலும் கௌரி தேவிக்குச் சிவபெருமான் ஆடிக்காட்டிய தாண்டவம் அவள் பெயரால் கௌரிதாண்டவம் என்று அழைக்கப்படுகின்றது. இவ்வாறு பலவகையிலும் சிறப்புப்பெற்ற கௌரியின் பெயரால் அமைந்த சிவமூர்த்தங்களையும், கௌரிதாண்டவ வரலாற்றையும் காணலாம்.

- திருமுறைத்தலங்களான கேதாரம், கேதீச்சரம், வன்னியூர் ஆகிய மூன்றுத்தலங்களிலும் எழுந்தருளியுள்ள அம்பிகையின் பெயர் கௌரி என்பதாகும்.
- சைவ ஆகமங்களில் கௌரி என்ற பெயர் பார்வதிக்கு வழங்கப்பட்டிருந்தாலும் தமிழ்மறையான மூவர் தேவாரத்திலும் இப்பெயர் குறிக்கப்படவே இல்லை. திருவாசகத்தில் பொற்சுண்ணம் என்ற பகுதியில் மட்டும் கௌரி என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு அது பார்வதிக்கு வழங்கப்படாமல் அவளது தோழியரில் ஒருத்தியான காளிக்குப் பெயராகக் குறிக்கப்பட்டுள்ளது.
- ஆகமங்களின்படி சிவபெருமானுடன் மணப்பெண்ணாக உள்ள பார்வதிக்குக் கௌரி என்ற பெயர் வழங்குவதால் சிவபார்வதியரின் திருமணத்தைக் கௌரிகல்யாணம் என்று அழைக்கின்றோம். இந்தியத் திருமணங்களில் மணமக்களை ஊஞ்சலில் அமர்த்திப்பாடும் வழக்கம் உள்ளது. அப்போது கௌரிகல்யாண வைபோகமே என்று முதலில் பாடிவிட்டு தொடர்ந்து ராமர்-சீதை, கிருஷ்ணன்-ருக்மணி ஆகியோரின் கல்யாணவைபோகங்களையும் பாடுவது வழக்கம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கௌரி வரப்ரத மூர்த்தி

ஒரு சமயம் மந்திர மலையரசனான மந்திரன் சிவனை நோக்கித் தவம் செய்து தன்னிடமுள்ள மந்திரமலைக் கயிலாயத்தில் அவரைச் சிலகாலம் வசிக்கும்படி வேண்டினான். அதன்படியே அவரும் சிலநாள் உமாதேவியோடும் கணங்களோடும் சென்று அங்குத் தங்கியிருந்தார்.

இப்படியிருக்கும் சமயத்தில் சும்பன், நிசும்பன் என்ற இரண்டு அசுரர்கள் பிரமனை நோக்கித் தவம் செய்தார்கள். பிரமன் அவர்கள் முன்னே தோன்றி உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள் என்றார். அதற்கு அவர்கள் எங்களுக்கு யாராலும் எதனாலும் எப்போதும் மரணம் நேராதிருக்கும்படியான வரத்தைத் தாருங்கள் என்று கேட்டார்கள். பிரமன், அன்பர்களே அத்தகைய வரத்தை என்னால் உங்களுக்கு அளிக்க இயலாது வேறு வரத்தைக் கேளுங்கள் தருகிறேன் என்றார். நெடுநேரம் யோசித்த அவர்கள், "ஓ. பிரமனே! பார்வதியின் உடலில் இருந்து தோன்றும் ஒரு கன்னியாலன்றி நாங்கள் வேறு எவராலும் மரணமடையக்கூடாது. அத்தகைய வரத்தை எமக்குத் தாருங்கள் என்றனர். அதற்குப் பிரமனும் அப்படியே ஆகட்டும் என்று கூறி அவர்களுக்கு அந்த வரத்தைத் தந்ததுடன் மேலும் பல ஆற்றல்களையும் வழங்கி மறைந்தார்.

கொஞ்சநாள் சாதுவாக இருந்த அவர்கள் தேவர் உலகினைச் ஜெயித்து அவர்களை அடிமையாக்கி இந்திரலோகத்தின் சுகங்களை அனுபவித்து மகிழ்ந்தனர். பிறகு கயிலையின் மீதும் படையெடுத்து வந்தனர். தேவர்கள் அவர்களுக்கு அஞ்சி, சிவபெருமானைச் சரணடைந்து அவர்கள் பெற்ற வரத்தைக் கூறிப் பார்வதியிடமிருந்து ஒரு பெண்ணைத் தோற்றுவித்தருளி அந்த அசுரர்களை அழிக்க வேண்டும் என்று கூறினார்.

அவர்களுக்கு அபமளித்த சிவபெருமான் பிரமன் கூறியபடியே நடககும் கவலையற்று இருங்கள் என்று கூறினார். சிலநாட்கள் சென்றன. ஒரு உயர்ந்த சிகரத்தில் அமைந்திருந்த மணிமண்டபத்தில் சிவபெருமான் வீற்றிருந்தார். அப்போது சிவபெருமான் தேவியை நோக்கி "காளீ, வருக", என்று கூறினார். அப்போது தேவி இறைவனிடம் என்னைக் கருநிறத்தவள் என்று பொருள்பட விளித்ததேன் என்று கூறி கண்ணீர் சிந்தினாள். பெருமான் அவளை நோக்கி விளையாட்டிற்காகவே அப்படி அழைத்தேன் என்றார்.

ஆனால் அவள் அவரிடம் தங்களுக்குப் பிடிக்காத இந்தக் கரியநிறத்தை நீக்கிக் கொண்டு பொன்போன்ற உடலைப்பெறுவேன். அதற்காகக் கடுந்தவம் செய்யப்போகிறேன் என்றாள். பலவாறு சொல்லியும் கேளாததால் சிவபெருமான் அவளை நோக்கி, இதன் காரணத்தை பின்னாளில் அறிவாய் இப்போது நீ சென்று உன் விருப்பப்படியே தவம் செய்வாய், என்றார்.

அதன்படியே அன்னை இமயமலைச் சாரலையடைந்து சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்துவந்தாள். இப்படிச் சிலகாலம் சென்றதும் அசுரர்களின் கொடுமைகளுக்கு அஞ்சிய தேவர்கள் பார்வதியைச் சரணடைந்து அசுரர்களிடமிருந்து தம்மைக்காக்குமாறு வேண்டினார். அப்போது இமயவல்லியாகிய தேவி பிரமனையும் அவனோடு வந்த தேவர்களையும் நோக்கி உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றாள். அவர்கள் அவளைப் பலமுறைப் பனிந்து வணங்கி தேவி உங்கள் உடலிலுள்ள கரியநிறத்தைக் கழித்துப் பொன்னிறத்தை அடைந்து, அப்படி கழித்து நீக்கிய கரியநிறத்தைக் கொண்டு ஒரு பெண்ணை உருவாக்கி அவளை அசுரர்களின் மீது போர்தொடுக்க அனுப்பவேண்டும் என்றனர்.

அதைக்கேட்ட பார்வதி சிவபெருமானைத் துதிக்க அவள் மேனியில் இருந்த கருநிறம் ஒரு பெண்வடிவாக உருப்பெற்று வெளிவந்தது. இதனால் பார்வதிதேவியார் பொன்னிறத்துடன் பிரகாசித்தாள். கௌர (பொன்) வண்ணத்துடன் விளங்கியதால் அவளுக்குக் கௌரி என்பது பெயராயிற்று.

அவள் தன்னுடலில் இருந்து கழிந்த கருநிறத்திலிருந்து பெண்ணுருக் கொண்டு வந்தவளுக்குக் கௌசிகி என்று பெயரிட்டாள். தன் ஆற்றலால் ஒரு வலிய சிங்கத்தைப் படைத்து அவளுக்கு வாகனமாக அளித்தாள். கணக்கற்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யோகினிகளைப் 'படைத்து அவளுக்குச் சேனையாகத் தந்து அந்த சேனைக்கு அவளைச் சேனாபதியாக பட்டம் சூட்டினாள். அவளை வாழ்த்தி, "சும்ப, நிசும்பர்களை போரில் வென்று தேவர்களுக்கு நன்மையைச் செய்து அதன் பிறகு விந்திய மலையின்மீது சென்று தங்குவாய்" என்று சொல்லி விடைகொடுத்தாள். கௌசிகியும் விடைபெற்று போக்கோலம் பூண்டு படைகளுடன் சென்று அசுரர்களைப் போரில் கொன்று வாகை சூடினாள்.

பின்னர் பொன்னிறமடைந்த கௌரிதேவி சிவபெருமானை அடைந்தாள். அங்கே அவர் கௌரியைத் தம் இடப்பால் அமர்த்திக்கொண்டு கௌரிசங்கரராகக் காட்சியளித்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். கௌரிக்கு அருள் செய்தால் அவர் கௌரிவரப்ரதமூர்த்தி என்றழைக்கப் படுகின்றனர்.

அசுரர்களைவென்ற பின் கௌசிகி எனும் கௌரியின் அம்சமான பெண் காஞ்சீபுரத்தில் காமாட்சி அம்மன் ஆலயத்திற்கு அருகில் ஓர் சிவலிங்கமமைத்து வழிபாடு செய்தாள். அது இந்நாளில் கௌசிகேசம் என்றழைக்கப்படுகின்றது. (பார்க்க சிவமஞ்சரி கயிலை அனைய, காஞ்சி)

கௌரி வரப்பிரதமூர்த்தி

கௌரி லீலா சமன்வித மூர்த்தி

ஒரு சமயம் பார்வதிதேவியார் சிவ பெருமானுடன் அரியாசனத்தில் வீற்றிருக்கும் போது அவரைநோக்கி, நீங்கள் உங்கள் உண்மைநிலையை உணர்த்தவேண்டும் என்றாள். அப்போது பெருமான் அவளைநோக்கி, நாம் உருவம், அருவம், அருவுருவம் யாவற்றிலும் நிறைந்து நிற்போம். காணும் பொருட்கள் யாவும் நமது அருள் வடிவமே என்றார். உடனே தேவி அப்படியானால் அருள் வடிவமெல்லாம் நானே என்றாள். அதைக்கேட்ட சிவபெருமான், உன்னை நீயே சொல்லிப் பெருமைப்படுத்துவதேன்? உன்னிடத்திலும் பிரம்மா, விஷ்ணு முதலான சகல தேவர்களிலும் நின்று தொழில் படுவது நானே என்றார். நான் என் இயக்கத்தை நிறுத்தினால் இவையாவும் தொழிற்படாதென்றார். அதற்குப் பார்வதி அது எவ்வாறு? நானன்றோ சக்தியாய் இருந்து இவை யாவற்றையும் இயக்குகின்றேன் என்றாள்.

அதைக்கேட்ட பரமன் நகைத்து, "ஒருகணம் சகல ஆன்மாக்களிலும் அறிவினையளிக்கும் செயலை நீக்கினார். அக்கணமே யாவரும் அறிவிழந்து நிலை தடுமாறிச் சடமாயினர்.

இதைக்கண்ட கௌரி," அவரைப் பணிந்து நான் கூறியவற்றைப் பெரிதாகக் கருதாமல் முன்போலவே எல்லாவற்றையும் செயல்பட அருளவேண்டும்", என்று வணங்கிக் கூறினாள். இறைவனும் கருணை கூர்ந்து அனைவரையும் முன்போலவே செயற்பட அருளினார். கௌரிக்காக இந்த லீலையப் புரிந்து சமன்விதத்தை அருளியதால் சிவபெருமான் "கௌரி லீலா சமன்வித மூர்த்தி" என்றழைக்கப்படுகின்றார். இதனைச் சிவபராக்கிரமத்தில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கௌரி தாண்டவங்கள்

கௌரி தாண்டவம் என்ற பெயரில் சிவபெருமான் ஆடிய மூன்று தாண்டவங்கள் புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதலாவது மயிலாடுதுறையில் தேவி மயில் வடிவம் கொண்டு பூசிக்க, பெருமான் அவளுடன் சேர்ந்து ஆடியதுடன் பின்னர் அவள் காணும்படியாக ஆடியதுமாகும். இரண்டாவது கௌரிதேவியின் மனம்மகிழும்படியாக புத்தூர் எனும் தலத்தில் ஆடியதாகும். மூன்றாவது தாண்டவம் தாருகாவனத்தில் பிச்சையெடுக்கச் சென்றபோது வினோதமாக ஆடிச்சென்றதை அறிந்த பார்வதி அதைக்காண விரும்பியதால் மீண்டும் ஒருமுறை அவளுக்கு ஆடிக்காட்டியதாகும். இவை மூன்றையும் சுருக்கமாக இங்கே காணலாம்.

1

மயிலாடுதுறை என்று போற்றப்படும் மாயூரத்தலத்தில் கௌரிதேவியாகிய உமாதேவியார் மயிலாகத் தவம் புரிந்தாள் என்றும் சிவபெருமான் அவளுக்கு நடனதரிசனம் வழங்கியதுடன் அவளைத் திருமணம் செய்து கொண்டார் என்று மாயூரபுராணம் கூறுகின்றது.

பிரமதேவனின் மகனான தட்சனின் மகளாகப் பிறந்த உமாதேவியார் தாட்சாயணி என்ற பெயரில் வளர்ந்தாள். உரிய பருவம் அடைந்த அவளைத் தட்சன் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்தான் காலப்போக்கில் தட்சனுக்கும், சிவபெருமானுக்கும் கருத்துவேறுபாடு தோன்றியது. அதனால் தட்சன் சிவபெருமானை மதியாதவனானான்.

ஒருசமயம் அவன் பெரிய வேள்வியைச் செய்தான். அதற்குச் சிவனையும் தாட்சாயணியையும் அழைக்காது அவமதித்தான். இதனால் கோபம் கொண்ட தாட்சாயணியான பார்வதிதேவி, தட்சனிடம் சென்று தனது உரிமையைக் கேட்க விரும்புவதாகச் சிவபெருமானிடம் கூறினாள். அவர் அவளிடம் நீ அங்குச் செல்ல வேண்டாம் என்று கூறித் தடுத்தார். ஆனால் பார்வதிதேவி அவருடைய சொல்லைக் கேட்கவில்லை. தட்சனின் வேள்விச்சாலைக்குச் சென்று அவனிடம் தனக்கும், தனது கணவனானச் சிவபெருமானுக்கும் அந்த வேள்வியில் உரிய சிறப்புக்களைச் செய்யுமாறு கேட்டாள்.

இதைக் கேட்ட தட்சன் அவளையும் சிவபெருமானையும் பலவாறு இகழ்ந்தான். இதனால் வருந்திக் கோபித்த தாட்சாயணி அவனுடைய வேள்வி அழியும் என்றுச் சாபம் கொடுத்துவிட்டு மீண்டும் கயிலை மலையை அடைந்தாள்.

அங்குச் சிவபெருமான் அவளிடம் நீ எனது சொல்லை மீறித் தட்சனிடம் சென்று அவமானமடைந்தாய் இதனால் பதியின் சொல்லை மீறிய பாவம் உன்னைச் சேர்ந்தது. அது தீர நீ பூவுலகில் சென்று சிவவழிபாடு செய்வாய். நீ முன்பு ஒருமுறை கிளையினின்று வீழ்ந்து வருந்திய மயிலுக்கு அபயமளித்து மகிழ்ந்தாய். அப்பொழுது தன்னையும் ஒருமயிலாக எண்ணினாய். ஆதலால், அந்த ஆசையும் நிறைவேறும் பொருட்டு மயிலாக இருந்து எம்மைப்பூசை செய்வாய். காவிரிக்கரையில் முன்பு நாம் பிரமனுக்கு அருள்செய்ய அங்கு சிவலிங்கமாக எழுந்தருளினோம். அந்த இடத்தில் நீ எம்மை பூசிப்பாய் என்றார்.

அதன்படியே பார்வதிதேவி பொன் போன்று பிரகாசிக்கும் மயில் வடிவம் தாங்கிக் காவிரிக் கரையிலுள்ள சோலையில் தங்கினாள். அதைக் கண்ட, சரஸ்வதி, லட்சுமி, இந்திராணி ஆகியோரும் அழகிய மயில்வடிவம் கொண்டு அவளோடு சேர்ந்து கொண்டனர். இப்படிப் பல மயில்கள் சூழப் பெண்ணரசியான உமாதேவியார் ராஜ மயிலாக அங்குள்ள சோலையில் பவனி வந்தாள். அவள் அங்கு இருந்த ஒரு சிவலிங்கத்தைக் கண்டு மகிழ்ச்சி கொண்டாள். நாம் மயில் வடிவம் இருப்பதால் ஆகம முறைப்படி பூசை செய்ய முடியவில்லை என்று வருந்தினாள். என்றாலும் அச்சோலைகளில் இருந்த மலர்களைத் தன் அலகினால் பரித்து வந்து சிவலிங்கத்தின் மீது அன்புடன் அணிவித்து மகிழ்ந்தாள். தமது ஞானத்தால் அவள் யார் என்பதை உணர்ந்த முனிவர்களும், யோகியரும் பெண்மயிலாகி நின்ற அவளைத் தொழுது மகிழ்ந்தனர்.

சிலகாலத்திற்குப் பிறகு சிவபெருமான் அழகிய ஆண்மயிலாக உருவம் கொண்டு அங்கு வந்து அவளோடு சேர்ந்தார். அங்கு இருவரும் மயில் வடிவில் நடனம் நிகழ்த்திப் பலகாலம் மகிழ்ந்திருந் தனர். அதனை அனைவரும் கண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகிழ்ந்தனர். சிலநாள் கழித்து ஆண்மயிலாக வந்த இறைவன் மறைந்தான். இதனால் பெண்மயிலாக நின்ற பார்வதி துன்புற்று வருந்தினான். அவளுடைய வருத்தம் தீரச் சிவபெருமான் வானில் இடபவாக னத்தில் தோன்றி அவளுக்கு காட்சியளித்தார். பின்பு மயிலாக நின்ற அவளை அங்குள்ள தீர்த்தத்தில் மூழ்குமாறு கூறினார். அதன்படியே மூழ்கி எழுந்தாள். அவளுடைய மயில் வடிவம் நீங்கியது. பச்சைப் பசுங்கொடிப் பேரழகுப்பெண்ணாகி எழுந்தாள். அவளிடம் இங்குத் தவம்செய்யும்படிக் கூறினார். அவளும் சிலகாலம் தவம் செய்தாள்.

மீண்டும் சிவபெருமான் அவள் முன்பு தோன்றினார். அவள் அவருடைய தாண்டவ தரிச னத்தை அருளும்படி வேண்டினாள். அவரும் உடன் பட்டுத் தேவர்கள் முதலானயாவரையும் கூட்டி அவர்கள் முன்னிலையில் கௌரிதேவி கண்டுகளிக் கத்திரு நடனம் புரிந்தார். கௌரி மகிழ ஆடியதால் அந்த நடனம் "கௌரி தாண்டவம்" என்றும் கௌரி மயிலாகப் பூசித்ததால் அந்த இடம் கௌரிமாயூரம் என்றும் பெயர் பெற்றன.

2

சிவபெருமான் கௌரி தாண்டவத்தைத் திருப்புத்தூரில் ஆடியதாகத் திருப்புத்தூர் புராணம் கூறுகின்றது. இங்குக் கௌரிதேவி காண சிவபெருமான் நடனமாடியதைக் கேள்வியுற்ற லட்சுமிதேவி தவம் செய்து தனக்கும் அந்த ஆடற்காட்சியை ஆடிக்காட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். அதன்படியே பெருமான் லட்சுமியின் முன்பு திருநடனம் புரிந்தார். அதனால் அதற்கு லட்சுமிதாண்டவம் என்பதும் பெயராயிற்று.

3

தேவிபராக்கிரமம் என்ற நூலில் தாண்டவப் பிரிய கௌரி எனும் தலைப்பில் அம்பிகை இறைவனின் தாண்டவத்தைக் கண்டு களித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த வரலாறு வேறுவகையில் அமைந்துள்ளதாகும்.

தாருகாவனத்து முனிவர்களுக்கு அறிவு புகட்டவும் அந்த முனிவர்களின் மனைவியரின் கர்வத்தை அட.க்கவும் சிவபெருமான் பிட்சாடண னாகவும், விஷ்ணு மோகினியாகவும் சென்று ஆடிப்பாடி அவர்களுடைய ஆசிரமங்களில்



பிச்சையெடுத்தனர். அவர்களுடைய அழகில் மயங்கிய முனிவர்களும் அவருடைய மனைவியர் களும் தன்னிலை இழந்தனர். அவர்களுக்குப் பெருமான் நல்லறிவு புகட்டியபின் மீண்டும் கயிலையை அடைந்தார்.

அதற்கு முன்பாகவே கௌரிதேவிக்குக் கந்தர்வர்கள் சிவபெருமானும், திருமாலும் தாருகாவனத்தில் ஆடிய நடனத்தைப் பற்றிக் கூறிவிட்டனர்.

சிவபெருமான் கயிலைக்கு வந்ததும், கௌரியான உமாதேவியார் அவரிடம் நீங்கள் தாருகாவனத்திலாடிய திருநடனத்தை மீண்டும் இங்கு நடத்துக என்றாள். அவளுடைய விருப் பத்தை நிறைவேற்றும் வகையில் சிவபெருமான் மீண்டும் நடனம் புரிந்தார். அதைப் பார்வதிதேவி கைத்தாளமிட்டு ரசித்து மகிழ்ந்தாள். அதனால் அவளுக்குத் தாண்டவப்பிரிய கௌரி என்றும், அந்தச் சிவநடனம் கௌரி தாண்டவம் என்றும் சிறப்புப் பெற்றது.

திருத்தெளிச்சேரி எனும் தலத்தில் கௌரி தாண்டவம் நடந்ததாகத் தேவிபராக்கிரமம் குறிக்கின்றது. திருத்தெளிச்சேரி காரைக்கால் நகரின் ஒருபகுதியாக விளங்குகின்றது. இப்பகுதிக்குக் கோயில்பத்து என்பது பெயர். இங்கு அவருடைய ஆடலைக்கண்டு மகிழ்ந்த அம்பிகை சிவபூசை செய்தாள். அதனால் சிவபெருமானுக்குப் பார்வதீசர் என்றும் அவள் அமைத்து நீராடிய தீர்த்தத்திற்குச் சத்திதீர்த்தம் என்பதும் பெயராயின.

● இசை உலகில் சிவபெருமான் பெயரால் சங்கராபரணம் என்ற ராகமும்; கௌரியின் பெயரால் கௌரிமனோகரி என்ற ராகமும் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேதாரீசுவரர்-கௌரிதேவியின் அருள்பெற்ற

மூன்று முனிவர்கள்

கேதாரகௌரி உடனாய கேதாரீசுவரரின் அருள் பெற்றவர்களாக மூன்று முனிவர்கள் உள்ளனர். இவர்கள் முறையே பிருங்கி, கேதார முனிவர், கௌதமர் என்றழைக்கப்படுகின்றனர்.

பிருங்கி முனிவர்

இவர் சமீ எனும் முனிவரின் புதல்வராவார். ஒரு சமயம் காட்டில் ஒரு பெண்ணின் காமம் நிறைந்த குரலைக் கேட்ட, சமீ முனிவரின் மனதில் தமக்கு ஒரு துணைவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அது வலுப்பெற்றதால் 'உடலில் இருந்து தவவீரியம் தானே வெளிப்பட்டது. அவர் அதனைத் தருப்பைக்கு நடுவில் வைத்தார். அது இடபமுகத்துடன் கூடிய குழந்தையாக உருவெடுத்தது. அதுவே பிருங்கி மகரிஷியானது. இவர் சிவபெருமானையன்றி வேறு யாரையும் வணங்காதவர். ஒரு சமயம் இவர் காலையில் சிவபெருமானைத் தரிசித்து அவரை மட்டுமே வலம் வந்தார். இதனால் பார்வதி வருந்திக் கேதாரத்தில் தவம் செய்து சிவபெருமானின் உடலில் பாதியைப் பெற்றாள். இவருக்குச் சிவபெருமான் மூன்றாவது காலை அளித்துள்ளார். இவரை இடப (காளை) முகத்துடன் கூடியவர் என்று புராணங்கள் கூறினாலும் மனிதமுகத்துடன் நீண்ட தாடியையும் உயரமான கொண்டையையும் உடையவராகவும் ஊன்றுகோலைக் கொண்டிருப்பவராகவே அமைக்கின்றனர். திருச்செங்கோட்டு மூலவர் அர்த்தநாரீசுவரரின் வலப்புறம் பிருங்கியின் திருஉருவம் அமைந்துள்ளதைக் காணலாம்.

நடராஜரின் பலவடிவங்களில் பிருங்கியும் நடமாடும் வடிவில் அமைந்திருக்கின்றார். இலக்கியங்களில் சிவபெருமானின் நடனத்தின் போது பிருங்கியும் சேர்ந்து ஆடுவதாகவே குறிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் பாணியில் அமைந்த நடராஜர் ஓவியங்களில் பிருங்கி பக்தர்களுக்கிடையே நடனமாடுவதைக் காணலாம்.

பிருங்கம் என்பதற்கு வண்டு என்பதும் பொருள். இவர் வண்டுவடிவம் கொண்டு சிவனை மட்டும் வலம் வந்ததால் இப்பெயர் பெற்றார் என்பர்.

இவர்பெயரால் பிருங்கிகமலம் என்ற செடியொன்று கேதாரத்தில் சிறப்புடன் பூசிக்கின்றது. அதனைக் கொண்டே கேதாரீசுவரரை அர்ச்சிக்கின்றனர். இது காய்ந்துவிட்ட போதிலும் நன்கு மணம் வீசுகின்றது.

கேரள நாட்டிலுள்ள திருவஞ்சைக் களத்து மகாதேவர் கோயிலில் இவருக்குத் தனிச் சந்நிதி அமைந்துள்ளதைக் காணலாம். சிவபெருமானின் அஷ்ட பரிவாரங்களில் ஒருவராகவும் விளங்குகின்றார். சிவபஞ்சாவரண பூஜையில் மூன்றாவது ஆவரணத்தில் தென்மேற்கு முனையில் இவரைப் பூசிக்கின்றனர்.

கேதாரமுனிவர்

கேதாரமுனிவர், இமயமலைச்சாரலில் தவம் செய்து சிவசக்தியரின் அருள்பெற்றவர். அவர் பெயராலேயே அந்த இடம் கேதாரம் என்று பெயர்பெற்றது. கேதாரம் என்பதற்கு மயில் என்பதும் பொருள். இவர் மயில்வடிவில் இருந்து வழிபட்டார் என்றும் கூறுவர். இவரைப் பற்றிய விவரங்கள் அதிகம் கிடைக்கவில்லை.

கௌதம முனிவர்

இவர் சிவாம்சமாகத் தோன்றிய ஐந்து ரிஷிகளில் ஒருவர். அகலிகையின் கணவர். பார்வதி தேவி இவருக்கு ஒருமுறை மகளாகத் தோன்றினாள். ஆதலால் அவளுக்குக் கௌதமி என்பது பெயராயிற்று. இவரே பார்வதிக்குக் கேதாரீஸ்வர விரதத்தை எடுத்துக்கூறி அதை நோற்கும்படிச் செய்தவர். அவளும் அதைக் கடைபிடித்து இறைவனின் திருமேனியில் பாதியைப் பெற்றாள். இந்த விரதத்திற்குக் குரு இவரேயாவார்.

கௌதமரின் ஆசிரமம் திருவண்ணாமலையில் மலைவலம் வரும் பாதையில் அமைந்திருந்தது என்று புராணங்கள் கூறுகின்றன. இப்பொழுதும் அந்த இடம் கௌதம ஆசிரமம் என்றே அழைக்கப்படுகின்றது. பார்வதிதேவி கேதாரத்தில் வழிபட்டு இறைவனின் ஆணையால் காசி, காஞ்சி முதலான தலங்களில் பூசித்துத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவண்ணாமலையை அடைந்தாள். அவளுடன் கௌதமரும் திரு வண்ணாமலைக்கு வந்து தங்கி வழிபாடு செய்தார். இங்குக் கௌதமரின் கோயில் உள்ளது. இக்கோயிலில் வழிபாடுகள் நன்கு நடைபெறுகின்றன.

அம்பிகை பச்சையம்மன் என்ற பெயரில் கிராமிய தெய்வமாகக் கோயில் கொண்டருளும் போது அந்த ஆலயத்திற்கு நேர் எதிரில் (அம்பிகையை நோக்கியவாறு) கௌதமரின் திருஉருவம் அமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம். கௌதமர் வலது கையில் சிவலிங்கத்தையும் இடது கையில் ஜெபமாலையையும் ஏந்தி அம்பிகைக்கு சிவவழிபாட்டை விளக்கும் கோலத்தில் விளங்குகின்றார்.

வடதிருமுல்லைவாயில், காஞ்சீபுரத்து அம்பி முதலிய அனேக தலங்களில் அமைந்துள்ள பச்சையம்மன் ஆலயங்களின் எதிரில் கையில் சிவலிங்கத்தையும் ஜபமாலையையும் ஏந்தியவாறு உள்ள கௌதமரின் திருவடிவங்களைக் காணலாம்.

● கௌதமர்

கௌரி சங்கரம்

இயற்கை பல சமயங்களில் விந்தைகளைச் செய்கின்றது. அத்தகைய விந்தைகளில் ஒன்று ஒட்டிக்கொண்டு பிறக்கும் உயிரினங்களாகும். பொதுவாக இரண்டாக ஒட்டிக்கொண்டு காய்க்கும் வாழைப்பழங்களை நிறையக்காணலாம். இதனை நாட்டுப்புற மக்கள் பிள்ளையார் பழம் என்பர். ஜோடியாக இருப்பவற்றைப் பிரிக்கக்கூடாது என்பதால் சமயச் சான்றோர்கள் இத்தகைய பழங்களைச் சாப்பிடுவதில்லை. கண்ணில் ஒற்றிக் கொண்டு தானம் செய்துவிடுவர்.

இதுபோலவே இரண்டாக ஒட்டிக்கொண்டு காய்க்கும் உருத்திராக்கங்களும் பலசமயங்களில் உண்டாகின்றன. இவற்றைச் சிவனும், சக்தியும் தம்முள் இணைந்து காட்சியளிப்பதாகக் கருது கின்றனர். ஆகையால் இவற்றைக் "கௌரி சங்கரம்" என்று அழைக்கின்றனர்.

இந்த கௌரி சங்கரத்திற்கு மேலும் கீழும் பொன்னால் கவசம் அணிவித்து ருத்திராட்ச வடத்தின் மையத்தில் பதக்கம் போல அணிவர். இக்கவசத்தில் 11 சிவலிங்கங்களையும் 11 வில்ல தளங்களையும் அமைக்கவேண்டுமென்பது நடைமுறையில் உள்ள விதியாகும்.

ஐந்துமுக உருத்திராட்சங்கள் ஒட்டிக் கொண்டு கௌரிசங்கரம் உற்பத்தியானால் அவற்றைக் "கணேசகௌரீ சங்கரம்" என்றும் ஆறுமுக உருத்திராக்கங்கள் ஒட்டித்தோன்றினால் "ஸ்கந்தகௌரீசங்கரம்" என்றும் அழைக்கின்றனர். கௌரிசங்கரத்தின் முகப்பில் பொன்னால் கௌரி சங்கரர் வடிவையும் அமைப்பது வழக்கம்.

"கௌரி சங்கரங்களைச்" சிவலிங்கமாகவே பாவனை செய்து வணங்குகின்றனர். திருத்தணிகை யில் உற்சவமூர்த்திக்குக் கௌரிசங்கரங்களால் அமைந்த நீண்டமாலை உள்ளது. இத்தகைய மாலை கள் ஓரிரு இடங்களில் மட்டுமே உள்ளன.

கௌரி தீர்த்தங்கள்

கௌரிதேவி சிவவழிபாடு செய்ய உண்டாக்கிய தீர்த்தங்கள் அவள் பெயரால் கௌரி தீர்த்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இமயமலைச் சாரலில் "கௌரி தவம்புரிந்த இடங்களில் எல்லாம்" கௌரிதேவி குண்டம் என்ற பெயரால் தீர்த்தங்கள் அமைந்துள்ளதைக் காண்கிறோம். கயிலைமலையை வலம்வரும் போது அதன் வடகிழக்குப்பகுதியில் கௌரி குண்டம் என்ற பெரிய ஏரி உள்ளது. இதுபோன்றே சோட்டா கைலாசமலையின் அருகிலும் கௌரிகுண்டம் இருக்கின்றது. கேதாரம் செல்லும் வழியில் புகழ்பெற்ற கௌரிகுண்டம் உள்ளது. காசிக்கேதாரநாதர் ஆலயத்திலும் கௌரிதீர்த்தம் இருக்கின்றது.

தமிழகத்திலுள்ள திருமுறைத் தலங்களான பழையாறை வடதளி, திருவலம், திருவண்ணாமலை முதலிய தலங்களில் கௌரிதீர்த்தம் உள்ளன. இவையாவும் கௌரியாகிய பராசக்தியின் வடிவமேயாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோமநந்தியின் கதை

பார்வதிதேவி கேதாரத்தில் தவம் செய்யத்தொடங்கியபோது அங்கு ஒரு புலி வந்தது. அது வயதால் மூத்தும், களைத்தும், வாடியும், நின்றது. பார்வதிதேவி அந்தப்புலியின் மீது இரக்கம் கொண்டு தனது கடைக்கண்ணால் நோக்கி அதற்கு அருள்பாலித்தாள். அதனால் நல்லறிவு பெற்ற அப்புலி அவளுக்கு காவலாக இருக்க விரும்பி அந்த இடத்தை விட்டு நீங்காது இருந்தது. தேவர்களின் வேண்டுகோளின்படித் தன் கருநிறத்தை நீக்கிப் பொன்வடிவமாகக் கொண்ட தேவி அப்புலிக்கு மீண்டும் அருள்புரிய நினைத்தாள். அப்போது பிரமன் தேவியிடம் அவன் புலிவடிவில் உள்ள அசுரன் அவனுக்கு அருள் செய்ய வேண்டாம் என்றார். தேவி அந்த அசுரப்புலிக்கு ஞானத்தைப்புகட்டி நல்லறிவு தந்து தன்னுடன் மந்திரமலைக்கு அழைத்துச் சென்றாள். அங்கு சிவபெருமானிடம் அப்புலிக்கு அருள் செய்யுமாறு வேண்டினாள். சிவபெருமானும் அப்புலிக்கு ஞானப்பேரறிவு நல்கி நந்தி கணத்தலைவரில் ஒருவனாக்கி (பார்க்க புலீசுவரர் பக்கம் 155) சோமநந்தி என்ற பெயரைச் சூட்டினார். அவன் பொற்பிரம்பு ஏந்தி கயிலையின் காவலனானான். சிவாலயங்களில் அம்பிகையின் சந்நிதிக்கு எழுந்தருளியுள்ள நந்திக்குச் சோமநந்தி என்பது பெயராகும்.

கௌரி தாண்டவ கோலத்தில் பெருமான் புலியை ஏந்தியிருப்பதாகச் சிற்ப நூல்கள் குறிப்பிடுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும். அர்த்தநாரீசத்தலமான திருச்செங்கோட்டுத் தலபுராணத்தில் ஒரு மன்னன் சாபத் தால் புலியாகி பெருமானின் அருளால் மீண்டும் அரசனான கதை இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

கங்கை-கௌரி மணாளர்

"கே" என்பதற்கு வயல்வெளி என்றும், தரம் என்பதற்குத் பெற்றிருப்பது என்பதும் பொருளாகும் பயிர்களை விளைவிக்கும் வயலாகச் சிவபெருமானும் . அதில் நீர்சக்தியாக கங்கையும், விளைவிக்கும் சக்தியாகக் கௌரியும் விளங்குகின்றனர். இதனால் சிவபெருமானுக்குக் கேதாரீசுவரர் என்பது பெயராயிற்று என்பர்.

கௌரிதேவியுடன் கங்கையையும் இணைத்து "கங்காகௌரி" என்று அழைப்பர். தென்னாட்டில் கங்கையைச் சிவபெருமானின் மனைவி என்று சொல்லும் வழக்கம் அதிகமில்லை. வடநாட்டில் கங்கையையும் கௌரியையும் சிவபெருமானின் மனைவியராகவே கொள்கின்றனர். தமிழ்மறையான தேவாரத்தில் அப்பர் சுவாமிகள், சிவபெருமான் கங்கை கௌரி மணாளராக விளங்குவதை "மலைமட மங்கையோடும் வடகங்கை நங்கை மணவாளராகி மகிழ்வார்" என்று குறித்துள்ளார். மேலும் சில இடங்களிலும் கங்கை மணாளர் என்று அவர் சிவபெருமானைக் குறித்துள்ளதைக் காண்கிறோம்.

இந்த மூவரையும் ஒரேபீடத்தில் எழுந்தருளி வைத்து வழிபடுவதைச் சின்னம்பேட்டு அகத்தீசுவரர் கோயிலில் காணலாம். இதேபோன்ற உற்சவர் திருத்தணி வட்டத்திலுள்ள பல சிவாலயங்களில் உள்ளதென்று கூறுகின்றனர். செங்கை மாவட்டத்தில் உள்ள அம்பி எனும் ஊரிலுள்ள, பச்சையம்மன் கோயிலின் மகாமண்டபத்தில் பெரிய சுதைச் சிற்பமாக பிரபாமண்ட லத்துள் கங்கை, கௌரி ஆகிய இருவரும் இருபுறமும் வீற்றிருக்க அமர்ந்துள்ள சிவசங்கரரைக் காண்கிறோம்.

கங்கை-கௌரி மணாளர் - சின்னம்பேடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமனடி தொழுதபாவை

பக்த கௌரி

இப்பகுதியில் நாம் சொல்லப்போவது "கௌரி" என்ற பக்தையின் கதையாகும். இவள் சைவ அந்தணர் குடியைச் சேர்ந்த வீரூபாட்சன்-சுபவிரதை என்பவர்களுக்கு மகளாகத் தோன்றியவள். இவள் தனது ஐந்தாவது வயதிலேயே தந்தையிடமிருந்து கௌரி மந்திரத்தை உபதேசம் பெற்று அதனை ஓயாது ஜெபித்து வந்தாள். உரிய மணப்பருவம் அடைந்த போது தமது மரபில் அவளுக்கு ஏற்ற மணவாளன் கிடைக்காமல் போகவே அவளுடைய தந்தை அவளை தன்வீட்டிற்குப் பிட்சைக்கு வந்த ஓர் வைணவனுக்குத் திருமணம் செய்த கொடுத்தான்.

அவள், புகுந்த வீட்டிற்குச் சென்ற பிறகே தாம் வைணவ குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டதை அறிந்தாள். அந்த வைணவர்களும், சைவப் பெண் தமக்கு மருமகளாக வாய்த்து விட்டாளே என்பதை எண்ணிக் கோபமடைந்தனர். தம்மால் இயன்றவரை அவளைப் பலவாறு துன்புறுத்தினர். அப்பெண் தான் உபதேசம் பெற்றிருந்த கௌரிமந்திர வலிமையால் அத்துன்பங்கள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டாள்.

ஒரு சமயம் அவள் வீட்டிலிருந்த அனைவரும் ஒரு திருமணத்திற்காக வெளியூர் செல்ல வேண்டியதாயிற்று. அவர்கள் கௌரியை வீட்டுக்கு வெளியேயிருந்த மாட்டுக் கொட்டகையில் இருக்கும்படிச் செய்து விட்டு வெளியூர் சென்று விட்டனர்.

அப்போது கௌரி, சிவபெருமானை நினைந்து, "நான் இந்த வீட்டிற்கு வந்த நாள்முதல் இன்றுவரை ஒரு சிவனடியார்க்கும் அமுதளிக்கும் புண்ணியம் கிடைக்கப்பெற்றிலேன்" என்று எண்ணினாள். சிறிது நேரத்தில் பரமேசுவரன் ஒரு சிவயோகியாக அவளுடைய வீட்டிற்கு எழுந்தருளினார். அவளை நோக்கி "அம்மா, மிகுந்த பசியுடன் இருக்கிறேன். எனக்கு ஏதேனும் உணவிடுக" என்று கேட்டார்.

அவள் தனது நிலையைக் கூறி வருந்தினாள். அதற்கு அவர், "மகளே! கவலைப்படாதே நீ சென்று பூட்டைத் தொடு அது தானே திறக்கும்" என்றார். கௌரி மகிழ்ந்து அதன்படியே கதவைத் தொட அதிலிருந்த பூட்டு திறந்து கொண்டது.

அவள் உள்ளே சென்று உணவுசமைத்து அடியவர்க்குப் பரிமாறினாள். உணவுண்ணும் வேளையில் வயோதிகரான சிவபெருமான் வாலிபராக உருமாறினார். இந்த அதிசயம் நிகழும் போதே கணவன் வீட்டார் அங்கு வந்துசேர்ந்தனர். அவள் செய்வதறியாதுத் திகைத்து தனது வழிபாடு தெய்வமான கௌரிதேவியைத் தியானித்தாள். வாலிபரான சிவபெருமான் இப்போது குழந்தையாக மாறி அழுதார்.

இக்குழந்தை யாருடையது என்று கேட்டு அவர்கள் அவளைக் கோபித்தனர். அந்தக் குழந்தையின் நெற்றியில் விபூதியிருக்கக் கண்டு மேலும் கடுங்கோபம் கொண்டு அவளை வீட்டைவிட்டு வெளியேற்றினார்.



அவள் பரமசிவனைத் துதித்தாள். அப்போது சிவபெருமான் விடைவாகனத்தில் (பார்வதியாகிய) கௌரியுடன் தோன்றி அவளைத் தமது பாதத்தில் சேர்த்துக் கொண்டார். அவளைச் சக்தி கணத்தில் ஒருத்தியாக்கிச் சக்தியின் சாருபம் அளித்தார். அன்று முதல் அவள் பக்த கௌரி என்று போற்றப்படுகிறாள். நெடுங்காலமாக வழங்கிவரும் இந்த வரலாறு மதுரை திருவிடையாடற்புராணத்தில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

சென்ற நூற்றாண்டுவரை பக்த கௌரி எனும் பெயரில் இந்தக் கதை நாடகமாகவும், கூத்தாகவும் நடைபெற்று வந்துள்ளது. பின்னாளில் திரைப் படமாகவும் வெளிவந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தர் கண்ட அர்த்தபாகர்

சிவபெருமான் உமையொருபாகனாகக் காட்சியளித்ததைச் சிறப்பித்துத் திருஞானசம்பந்தப் பெருமான் மூன்று பதிகங்கள் அருளிச் செய்துள்ளார். இப்பதிகங்களின் ஒவ்வொரு பாடலிலும் உமையொருபாகனாகச் சிவபெருமான் நின்றது குறிக்கப்பட்டுள்ளது.

பொடியுடைமார்பினர் என்று தொடங்கும் திருவாளொளிப்புத்தூர் தலதேவாரத்தின் ஒவ்வொரு பாடலிலும் மூன்றாவது வரியிலும் சிவபெருமான் உமையொருபாகம் வைத்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இதன் இறுதிப்பாடலில் "மடந்தையைப் பாகம் வைத்தவன் வாழ்கொளிப்புத்தூர்" என்று கூறப்பட்டள்ளது. இவ்வூர் ஆலய கருவறைக்கோட்டத்தில் அர்த்தநாரீசுவரர் திருவடிவம் அமைந்துள்ளதையும் காண்கிறோம்.

அர்த்தநாரீசுவரத்தலமான (கொடிமாடச் செங்குன்றூரான) திருச்செங்கோட்டுப்பதிகத்தில் முதல் ஐந்து பாடல்களில் உமையொருபாகனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

திருமலர்க் கொன்றை எனத்தொடங்கும் திருச்சாத்தமங்கைப் பதிகப்பாடல்களின் ஒவ்வொரு இரண்டாவது வரியிலும் உமையொருபாகநிலை சிறப்பாகப் பேசப்படுகின்றது. "இரண்டுருவம் ஒன்றாய் கலந்து ஈரெழிற் கோலமாக நின்றது" தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றது.

மின்னெனத் என்று தொடங்கும் தேவாரப் பதிகத்திலுள்ள பாடல்களில் நான்காவது வரியில் சிவசக்தியர் உமையொருபாகனான திறம் சிந்திக்கப்படுகின்றது. குறிப்பாக இறுதிப்பாடலில் குழலுமை பங்கரை பரவிய பந்தன் பாடல்வல்லவர் சிரமலி சிவகதி சேர்தல் திண்ணமே என்று பலனும் சொல்லப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாவற்றுக்கும் மேலாக நகைச்சுவைததும்ப அவர் உமையொருபாகனானதற்கான விசித்திர காரணத்தையும் கூறுகின்றார். பெருமான் பிச்சையேற்கப் போகும்போது பார்வதியைப் பத்திரமான இடத்தில் விட்டுச்செல்ல வேண்டும் என்று விரும்பினார். எங்கு தேடியும் அவருக்கு உரிய இடம் கிடைக்கவில்லையாம் எனவே தன்னுடலில் ஒரு பக்கத்திலேயே வைத்துக் கொண்டாராம். அதனை "ஏறுலாம் பலிக்கேகிட, வைப்பிடம் இன்றியே வாரு முலையாளை ஓர் பாகமாக வைத்தவன்" என்று குறித்து மகிழ்கின்றார்.

அப்பர் கண்ட அர்த்தநாரீசுவரர்

அப்பர் பெருமான் தேவாரத்துள் நூற்றுக்கணக்கான இடங்களில் அர்த்தநாரீசுவர கோலத்தைச் சிறப்பித்துப் பாடுகின்றார். அவற்றுள் தனிச்சிறப்பு மிக்க பாடலாக விளங்குவது கீழ்க்காணும் பாடலாகும்.

புதுவிரி பொன்செய் ஓலை ஒருகாதர், காது சுரிசங்கம் நின்று புரள
விதிவிதி வேதகீதம் ஒருபாடும், ஒருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாகம், மாதர்குழல் பாகம் ஆகவருவார்
இது இவர் வண்ண வண்ணம், இவள் வண்ணம் வண்ணம்,
எழில் வண்ண வண்ணம் இயல்பே.

பொருள்: புதுவதாக விரிந்த அழகுடைய பொன்னால் செய்யப்பட்ட ஓலை ஒரு காதில் விளங்க ஒரு காதில் வலம்புரிச் சங்கினால் செய்த தோடு விளங்குகிறது. வாயின் ஒரு பகுதி வழி வழியாக வரும் வேத கீதங்களைப் பாடிக்கொண்டிருக்க மறுபகுதி மெல்ல புன்சிரிப்பை உதிர்க்கின்றது. தேன்சொரிகின்ற கொன்றை மலர்களை சடையில் ஒரு பாகத்தில் சூடி நிற்க மற்றொரு பாகம் வளைந்து நெளிந்த குழலாய் உள்ளது. இப்படி சிவபெருமானின் அழகும், அம்பிகையின் அழகும் கலந்து நிறைந்த பேரழகாக இக்காட்சி விளங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அர்த்தநாரீஸ்வரர்

● அர்த்தநாரீசுவரர் ●

சிவமூர்த்தங்களில் தனிச்சிறப்புடன் திகழ்வது "மாதொருபாகம்" என்ற அர்த்தநாரீசுவர வடிவமாகும். இதனை உமையொருபாகர், கௌரிபங்கன், உமைபங்கன் என்று பலவாறாக அழைக்கின்றனர். இந்த வடிவத்தின் வலதுபாகம் சிவபெருமானாகவும் இடதுபாகம் உமாதேவியாராகவும் காட்சியளிக்கின்றது. இது சிவனும் சக்தியும் ஒன்றாகக் கலந்து காட்சி தரும் வடிவமாகும்.

இமயமலைச்சாரலில் உள்ள கேதாரத்தில் உமாதேவியார் கடுந் தவம்புரிந்து சிவபெருமானைப் போற்றினாள். அவளுடைய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் தன்னுடலில் அவளுக்குப் பாதியைத் தந்து அர்த்தநாரீசுவரன் ஆனார் என்று புராணங்கள் கூறுகின்றன.

இலக்கியங்களிலும், தோத்திர நூல்களிலும் பல ஆயிரம் இடங்களில் அர்த்தநாரீச வடிவம் குறிக்கப்பட்டாலும் அதற்கென தனி ஆலயம் அமைத்து வைத்து வழிபடுவது மிகமிகக் குறைவேயாகும். தென்னகத்துக் கேதாரம் என்று போற்றப்படும் திருச்செங்கோட்டிலும், நெல்லை மாவட்டத்தில் தென்காசிக்கு அருகிலுள்ள வாசுதேவநல்லூரிலும் மட்டுமே அர்த்தநாரீசுவரர் மூலத்தானத்தில் மூலமூர்த்தியாக வைத்து வழிபடப்படுகின்றார்.

சென்னை நங்கைநல்லூர், ரிஷிவந்தியம், முதலான அனேக இடங்களில் மூலமூர்த்திக்கு அர்த்தநாரீசுவரர் என்ற பெயர் இருந்தாலும் அங்கெல்லாம் சிவலிங்கங்களே வைத்து வழிபடப் படுகின்றன. சோழர்கள் காலச் சிவன் கோயில்களில் கருவறை தேவகோட்டங்களில் அர்த்தநாரியை வைக்கும் வழக்கம் இருந்தது. அவர்கள் ஒரிரு இடங்களில் உலாமூர்த்தியாகவும் இந்தவடிவை அமைத்துள்ளனர். இப்பகுதியில் அர்த்தநாரீசுவரரைப் பற்றிய பல்வேறு செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

சூரிய, சந்திர, அக்னி மண்டலங்களுக்கிடையில் அர்த்தநாரீசுவரர்

உலகின் அடிப்படை ஒளிச்சக்திகளாக விளங்குபவை சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றாகும். இவை சூரியமண்டலம், சந்திரமண்டலம், அக்னி மண்டலம் ஆகிய மூன்று மண்டலங்களாக உள்ளன. இவற்றின் மையத்தில் சிவபெருமான் அர்த்தநாரீசுவரராக நின்றுத திருநடனம் புரிகின்றார்.

சூரியமண்டலத்தில் சிவபெருமான் அர்த்தநாரீசுவரராக விளங்குவதைச் சிவமகாபுராணம் விளக்கமாகக் கூறுகின்றது. இதன் விளக்கத்தையும், நான்கு முகமும் எட்டு தோளும் கொண்ட அந்த அர்த்தநாரீசுவர வடிவத்தையும் சிவமஞ்சரியின் பன்னிரண்டாவது மலரான ஆதித்யேசுவரர் என்ற நூலின் பக்கம். 358-ல் காண்க. பெருமான் அக்னி மண்டலத்தின் நடுவில் அர்த்தநாரீசுவரராக நடனமாடுவதை இந்நூலில் அமைந்துள்ள திருவண்ணாமலை அர்த்தநாரீசுவரர் என்ற கட்டுரையில் காண்க.

வினை நீக்கும் வேடம் அர்த்தநாரீசுவரம்

அர்த்தநாரீசுவர திருக்கோலத்தை மனத்தில் நினைந்து வழிபடுபவர்களுக்கு வினைகள் நீங்கும், வினைகள் நீங்குவதால் இறையின்பமும் மகிழ்ச்சியும் உண்டாகும். இதனைத் திருஞானசம்பந்தர்,

தோடுலாவிய காதுளாய் சுரிசங்க வெண்குழையாய்,

என்றென்று உண்ணும் வேடங்கொண்டவர்கள் வினைநீங்கலுற்றார் என்று பாடிப்பரவுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்செங்கோடு அர்த்த நாரீசுவரர்

அர்த்தபாகர் (எ) அர்த்தநாரீசுவரர்
திருச்செங்கோடு சேலம் மாவட்டம்

கொடிமாடச்செங்குன்றூர் என்று தேவாரத்தில் போற்றப்பட்ட திருத்தலமே இந்நாளில் திருச்செங்கோடு என்று அழைக்கப்படுகின்றது. இது சேலம் மாவட்டத்தில் உள்ளது. நிறைய பேருந்து வசதிகள் உள்ளன.

இங்கு நெடியமலை உள்ளது. இதன் உச்சியில் மாதொரு பாகனான அர்த்தநாரீசுவரர் ஆலயம் சிறப்புடன் அமைந்துள்ளது.

இந்தப் பெரிய ஆலயத்தின் கருவறையினுள் மேடையின் மீது அழகிய அர்த்தநாரீசுவரர் வடிவம் அமைந்துள்ளது. இந்த மேடையில் ஒரு குழியில் நீர் ஊறுகின்றது. இதனைத் தேவதீர்த்தம் என்கின்றனர். இங்கு வழிபட வருபவர்களுக்கு இந்த நீரே பிரசாதமாக அளிக்கப்படுகின்றது.

இறைவன் பால்போன்று வெண்மையான வடிவில் காட்சியளிக்கின்றார். இவ்வடிவம் வெள்ளைப் பாஷாணத்தாலும் மூலிகைக்கட்டாலும் அமைக்கப்பெற்ற திருஉருவம் என்கின்றனர். இவருடைய உருவில் இடப்பாகம் பெண்ணாகவும் வலப்பாகம் ஆணாகவும் காட்சியளிக்கின்றது.

இது ஆகமப்படி அமையாமல் இடதுகையை இடுப்பில் ஊன்றி வலது கரத்தில் நீண்ட தண்டை ஏந்தியவாறு உள்ளது. தலையில் சாய்ந்த கொண்டை அமைக்கப்பட்டுள்ளது.

இவருடைய வலதுபக்கம் பிருங்கி முனிவரின் திருஉருவம் உள்ளது. இனி இதற்கான புராண வரலாற்றைக் காணலாம் :-

பிருங்கி முனிவர் தன்னை விலக்கிச் சிவனை மட்டுமே வலம் வந்து வழிபட்டதால் வருந்திய பார்வதி கயிலையை விட்டு நீங்கி, கேதாரத்தில் வழிபட்டுக் காசிநகரை அடைந்தாள். பின்பு காஞ்சிபுரத்தில் மணல் லிங்கமமைத்து வழிபட்டாள். பிறகு இறைவனின் ஆணையால் திருவண்ணாமலைக்கு வந்து கௌதமமுனிவரின் ஆசிரமத்தை அடைந்தாள். அவர் அவளுக்கு கேதாரீஸ்வர விரத்தின் பயனைக்கூறி அதனை நோக்குமாறு கூறினார். அவள் அந்த விரதத்தைக் கடைபிடித்து சிவனைப் போற்றினாள். பெருமான் கார்த்திகை தீபத்திருநாளில் அவளுக்குக் காட்சியளித்தார். பிறகு திருச்செங்கோட்டுக்கு வந்து பூசிக்குமாறு கூறினார். அதன்படி கௌரிதேவி திருச்செங்கோடு மலைமீது சிவபூசை செய்தாள். அங்குப் பெருமான் தன் உடலில் பாதியை அவளுக்குத் தந்தார். இருவரும் ஒரே வடிவில் அர்த்தநாரீசுவரராக வடிவம் கொண்டு நின்றனர். பதினெட்டுக் கணங்களும் அக்காட்சியைக் கண்டு மனமொழி மெய்களால் துதித்தனர்.

அந்த நினைவு என்றும் நிலைத்திருக்க இங்கு நவகோடி சித்தர்கள் பாஷாணம், மூலிகைகளைக் கொண்டு அர்த்தநாரீசுவர வடிவத்தைச் அமைத்தனர். அதில் சிவசக்தியர் கலந்து நின்றனர். அன்று முதல் இந்த இடம் தட்சிணகேதாரம் என்று சிறப்புடன் போற்றப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாசுதேவநல்லூர் அர்த்தநாரீசுவரர்

தென்காசியிலிருந்து மதுரை செல்லும் சாலையில் 15 கி. மீட்டர் தொலைவில் அமைந்துள்ள திருத்தலம் வாசுதேவ நல்லூராகும்.

இவ்வூரின் மையப்பகுதியில் அர்த்தநாரீசுவர சுவாமியின் பெரிய ஆலயம் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கியுள்ள இந்த ஆலயத்தின் முன்புறம் பெரிய முற்றம் உள்ளது. இதனைக் கடந்து கோபுர வாயிலின் வழியாக உட்சென்றால் நெடிய தூண்களை யுடைய மண்டபங்களைக் காணலாம். வாயிலுக்கு நேராக பெரிய மேடையின் மீது ஊஞ்சல் மண்டபத்தைக் காண்கிறோம். இதன் வடக்கில் தெற்கு நோக்கியவாறு நடராஜர் சிவகாமசுந்தரியுடன் எழுந்தருளியுள்ளார். பின்னர் நந்தி கொடிமரம் பலிபீடம் ஆகியவற்றை வணங்கி பிரகார மண்டபத்தில் வலம் வருகிறோம். இங்குக் கோட்டங்களில் விநாயகர் தென்முகக் கடவுள், திருமால் பிரமன் துர்க்கை ஆகியோரும் வடகிழக்கில் சண்டீசரும் எழுந்தருளியுள்ளனர்.

இவர்களை வணங்கியபின் மகாமண்டபத்தைக் கடந்து உள்மண்டப்த்தை அடையலாம். இங்கு ஒரு பெரிய மஞ்சத்தில் அர்த்தநாரீசுவரர் உலாத்திருமேனியாக எழுந்தருளியுள்ளார். அருகிலுள்ள மேடையில் சோமாஸ்கந்தர் அர்த்தபாகவல்லி பிருங்கிமகரிஷி, விநாயகர் சந்திரசேகரர் முதலிய உலாத்திருமேனி கள் . ழுந்தருளிவைக்கப்பெற்றுள்ளன.

உள்மண்டபத்தையடுத்ததாக ஒருமீட்டர் உயரமுடைய மேடைமீது கருவறை அமைந்துள்ளது. கருவறையில் சுமார் ஐந்தடி உயரம் கொண்டவராக அர்த்தபாகர் எழுந்தருளியுள்ளார். இவரை நடைமுறையில் சிந்தாமணிநாதர் என்று அழைக்கின்றனர். ஆலயமும் சிந்தாமணீசுவரர் ஆலயம் என்றே அழைக்கப்படுகின்றது. இங்குள்ள நெடிய சிவபெருமானின் வடிவில் இடதுபாகம் பெண்வடிவம் கொண்டதாக அமைகிறது. நான்கு கரங்கள் உள்ளன மேற்கரங்களில் வலது கரத்தில் சூலமும் இடது கரத்தில் நீலோற்பல மலரும் உள்ளன. கீழ்வலது கரத்தில் அபய முத்திரையும் கீழ் இடதுகரத்தில் ஊருமுத்திரையும் உள்ளன.

இந்திரன் இங்கு சிவலிங்கம் அமைத்துப் பூசித்தான் என்றும் அந்த லிங்கத்திலிருந்த பெருமான் உமையொருபாகனாக (அர்த்தநாரீசர்) வெளிப்பட்டு அவனுக்கு அருள்பாலித்தார் என்றும் தலபுராணம் கூறுகின்றது. இங்கு இந்திரன் சிந்தாமணி களைக் கொண்டு வழிபட்டதால் பெருமானுக்குச் சிந்தாமணீசுவரர் என்ற பெயரும் ஊருக்கு வாசவனூர் (வாசவன் - இந்திரன்) என்ற பெயரும் உண்டாயிற்று. கல்வெட்டுகளில் வாசவனூர் என்ற பெயரே உள்ளது. தினப்பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. திங்கட் கிழமை வெள்ளிக்கிழமை ஆகிய நாட்க ளில் பெருமானை வலம் வரச்செய்து ஊஞ்சலில் அமர்த்தி சிறப்பு வழிபாடுகள் செய்கின்றனர். ஆனி மாதத்தில் பெருந் திருவிழா கொண்டாடப் படுகின்றது. விழாவில் அர்த்தநாரீசுவரப் பெருமான் தேரில் பவனி வருகின்றார்.

அர்த்தநாரீசுவர வழிபாட்டிற் கென்றே அமைந்த திருத்தலமாதலால் இத்தலம் சைவ உலகில் தனிச்சிறப்பும் பெருமையும் கொண்டுள்ளது.

அர்த்தநாரீசுவர ஸ்படிக லிங்கம்

அன்பர்கள் இயற்கையாகக் கிடைக்கும் ஸ்படிகக் கற்களைக் கொண்டு சிவலிங்கம் அமைத்து வழிபடுகின்றனர். ஸ்படிகம் தூய நீர் போன்று நிறமற்றதாகும். என்றாலும் அபூர்வமாக கிடைக்கும் சில ஸ்படிகக் கற்களில் கருஞ்சிவப்பு அல்லது கரும்பச்சை ஒருபாதியில் படர்ந்து காணப்படுகிறது. இதில் செய்யப்பட்ட லிங்கங்களின் ஒரு பகுதி நிறமற்றமதாகவும் மறுபகுதி மெல்லிய வண்ணம் கொண்டதாகவும் உள்ளது. இவற்றை அர்த்தநாரீசுவரலிங்கம் என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவண்ணாமலை அர்த்தநாரீசுவரர்

திருவண்ணாமலையைப் போற்றும் அருணாசலபுராணத்தில் சிவசக்தியர் இணைந்து அர்த்த நாரீசுவரரான வரலாறு தனிச்சிறப்புடன் கூறப்பட்டுள்ளது. அது:-

ஒரு சமயம் அம்பிகை விளையாட்டாகச் சிவபெருமானின் கண்களை மூடினாள். அதனால் உலகம் இருண்டது. அனைத்து உயிர்களும் அப்பொழுது உண்டான இருளால் துன்புற்றன. பெருமான் தனது மூன்றாவது கண்ணைத் திறந்தார். இதனால் ஒளியுண்டானாலும் அதிக வெப்பமும் உண்டாயிற்று. அதனால் மேலும் மேலும் துன்பங்கள் விளைந்தன.

சிவபெருமான் பார்வதியை நோக்கி; "நீ விளையாட்டாக எமது கண்களை மூடியதால் உலகம் இருண்டு உயிர்கள் எல்லையற்ற துன்பத்தை அனுபவித்தன. இப்பாவம் தீர நீ பூவுலகத்திற்குச் சென்று சிவபூசை செய்வாய்" என்றார்.

அதன்படியே பார்வதிதேவி கேதாரம் காசி முதலான அனேக தலங்களில் சிவவழிபாடு செய்து கொண்டு காஞ்சியை அடைந்து அங்கு மணலால் லிங்கம் அமைத்து வழிபட்டாள். அந்த மணல் லிங்கத்தினின்று சிவபெருமான் தோன்றி அவளைத் திருவண்ணாமலைக்கு வரும்படிக் கூறினார். அதன்படியே அவள் திருவண்ணாமலைக்கு வந்து பவழப்பாறைக் குன்றின் மீது ஆசிரமம் அமைத்து அங்கு அமர்ந்து கடுந்தவம் மேற்கொண்டாள்.

அவளுடைய தவத்தைக் கலைக்க அவள்மீது மகிஷாசூரன் போர் தொடுத்து வந்தான். அப்பொழுது அம்பிகையிடமிருந்து அவளுடைய கூறாகத் தோன்றிய துர்க்கை அவனைக் கொன்றாள்.

பார்வதி தேவியின் தவத்திற்கு மகிழ்ந்த பெருமான் அவளுக்குத் தனது இடதுபாகத்தைத் தந்தார். அப்பொழுது அர்த்தநாரீசுவரராக அவர்கள் காட்சியளித்தனர். தொடர்ந்து பிரமன், திருமால் முதலான தேவர்களும், பதினெட்டு கணங்களும் மகிழ அக்னி மண்டலத்தில் நின்று நடனமாடினார்.

திருவண்ணாமலையில் அண்ணாமலையார் ஆலயத்தில் உள்ள பெரியநாயகரான உற்சவ சோமாஸ்கந்தர் சந்நிதிக்கு வடக்கில் அமைந்துள்ள மேடையில் சிறுமஞ்சத்தில் அர்த்தநாரீசுவரர் உலாத்திருமேனியாக எழுந்தருளியுள்ளார். இவருக்கு நான்கு கரங்கள் உள்ளன. மேற்கரங்களில் மழுவும் நீலோற்பலரும் கீழ்க்கரங்களில் அபயமுத்திரையும் ஊருமுத்திரையும் உள்ளன.

கார்த்திகை தீபத்திருநாள் மாலையில் இவர் புறப்படுகின்றார். பரணியில் மூலத்தானத்தில் பஞ்சப்பிரம்ம மந்திரங்களால் பூசிக்கப்படும் ஐந்து தீபங்கள் வலமாகக் கொண்டுவரப்பட்டு இவர்முன்பு பூசிக்கப்படும். அதன்பிறகு தீபங்களுடன் இவர் புறப்பட்டு கோயில் பலிபீடத்திற்கு முன்னுள்ள முற்றத்திற்கு வருவார். இவருடன் கொண்டுவரப் படும் தீபங்கள் அங்குள்ள அகண்டத்தில் சேர்க்கப்பட்டு, நெய்யும், கற்பூரமும் கலந்து போடப்படும். அது ஓங்கி எரியும்.

அந்த அகண்டத்தீயின் முன்பாக அர்த்தநாரீசுவரரின் நடனம் நிகழும். சுற்றிலும் நின்று செண்டை எனப்படும் வாத்தியங்களும் பிரம்ம தாளமும் இசைக்கப்படும். பெருமான் அக்னி மண்டலத்தின் நடுவில் நின்று நடனமாடியதைக் குறிக்கும் வகையில் வட்டமாக அமைந்த பெரிய தீவட்டிகளை ஏந்தியவாறு சுற்றிலும் நிற்பர்.

அகண்டத்தில் தீபம் சேர்த்தல், மலையின் மீது தீபம் ஏற்றுதல், பதினாறுகால் மண்டபத்தில் உள்ள பஞ்சமூர்த்திகளுக்குத் தீபாராதனை செய்தல், அர்த்தநாரீசுவர நடனமாடுதல் ஆகியவை ஒரே சமயத்தில் (மாலை 6 மணிக்கு) நிகழும்.

இந்த நடனம் இரண்டு நிமிடங்கள் மட்டுமே நடைபெறும். நடனம் முடிந்ததும் அர்த்தநாரீசுவரர் ஆலயத்துள் சென்றுவிடுவார். உடனே கதவுகள் தாளிடப்படும். மறுநாள்தான் மீண்டும் கதவு திறக்கப்படும். இத்தகைய அர்த்தநாரீசுர நடனத்தை வேறெந்த தலத்திலும் காணமுடிவதில்லை.

கௌரி தவம் புரிந்த இடமாதலால் திருவண்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ணாமலைக்குக் "கௌரி நகரம்" என்பது பெயரா யிற்று. திருவண்ணாமலையில் பவழப்பறைக்கு அருகில் கௌரிதேவியின் ஆசிரமும் அவள் உண்டாக்கிய கௌரிதீர்த்தமும் அமைந்திருந்தன. பின்னாளில் ஆசிரமம் அமைந்திருந்த இடத்தில் பச்சையம்மன் கோயில் கட்டப்பட்டது என்பர். இக்கோயிலுக்குள் கௌரிதீர்த்தம் என்று குளம் உள்ளது.

ரிஷிவந்தியம் அர்த்தநாரீசுவரர்

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கள்ளக் குறிச்சியில் இருந்து திருக்கோயிலூர் செல்லும் சாலையில் ரிஷிவந்தியம் என்ற சிவத்தலம் உள்ளது. இங்குள்ள இறைவர் அர்த்தநாரீசுவரர் என்றழைக்கப் படுகின்றார். இங்கு மூலத்தானத்தில் அதிசயம்மிக்க சிவலிங்கம் அமைந்துள்ளது. இது பர்ர்ப்பதற்குச் சாதாரண லிங்கம் போன்றதேயாகும். ஆனால் இதன்மீது தேன் அபிஷேகம் செய்யும்போது லிங்கத்தின் பாணப்பகுதியில் அர்த்தநாரீசுவரரின் நிழலுருவம் தோன்றுகின்றது. (அம்பிகையின் நிழலு ருவம் என்றும் கூறுவர்) தேன் வழிந்து விட்டதும் பழையபடி வழவழப்பான லிங்கம் போன்றே தோற்றமளிக்கின்றது. இந்திரனுக்கும் 48000 ரிஷி களுக்கும் பெருமான் சிவலிங்கத்தில் அர்த்த நாரீசுவரராகக் காட்சியளித்தார் என்று தல புராணம் கூறுகின்றது. ஆலயத்தில் தனிச்சக்தியாக அமைந்த முக்தாம்பிகையின் சந்நிதி, வடக்குப் பிராகாரத்தில் தனியே உள்ளது. இங்குள்ள நந்திமண்டபத்தின் விமானத்தில் இந்திரனுக்கும் ரிஷிகளுக்கும், லிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்பட்டு அர்த்தநாரீசுவரராகக் காட்சியளிப்பது சுதைச் சிற்பமாக அமைக்கப் பெற்றுள்ளது. மேலும் இந்த ஆலயத்தில் தனியே பெரிய அளவில் அர்த்த நாரீசுவரர் உருவம் சுதைச் சிற்பமாக அமைக்கப் பெற்று வண்ணம் தீட்டப் பட்டுள்ளதைக் காண்கிறோம். கலையழகு கொஞ்சும் சிற்பங்களால் நிறையப்பெற்ற இது கலைக்கோயிலாகத் திகழ்கிறது.

சாக்கியன் ஆடிய அர்த்தநாரீஸ்வர நடனம்

சிவபெருமான் உமையொருபாகனாக இருந்து ஆடிய அர்த்தநாரீசுவர நடனத்தை சாக்கையன் என்ற கூத்தன் ஆடியதாக சிலப்பதி காரத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த ஆட்டத்திற்குக் கொட்டிச்சேதம் என்பது பெயர். இந்தக்கூத்தின் சிறப்புகள் சிலப்பதிகாரத்திலுள்ள வஞ்சிக்காண்டம் நடுகற்காதையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

அலங்கரிக்கப்பெற்ற மணியரங்கத்தின் மேடையில் கூத்தன் அர்த்தநாரீசுவரராக ஒப்பனை செய்து கொண்டு ஆடத்தொடங்குகின்றான்.

அவனுடைய வலப்பாகம் சிவன் வடிவாக வும் இடப்பாகம் தேவியின் வடிவாகவும் எழிலுற அமைந்திருந்தது. அவன் ஆடத்துவங்கினான். அவனுடைய வலப்புறம் அமைந்த செங்கண் ஆயிரம் குறிப்புகளை அருள்கின்றது. வலது செங்கை துடிகளை முழக்கு கின்றது. வலது திருவடி யில் அமைந்துள்ள சிலம்பு கள் ஓங்கி ஒலிக்கின்றன. செஞ்சடை திசைகளை அளப்பதுபோல் பரந்துள் ளது. அதேசமயம் அவனுடைய இடப்பாகமான அம்பிகை வடிவம் தரித்த பாகம் சிறிதும் அசைய வில்லை. காலில் உள்ள பாடகம் பதைக்கவில்லை, சூடகம் துளங்கவில்லை, இடைமேகலை ஒலிக்க வில்லை, மார்பு அசையவில்லை, காதில் அணிந்த குழை ஆடவில்லை, குழல் அவிழவில்லை, இப்படி தன் உடலின் ஒருபாகம் அதிர்ந்து ஆட, ஒருபாகம் அசையாது நிற்கும்படியாக அவன் வினோதமான கூத்தினை ஆடினான். சிலப்பதிகாரத்தில் இதனைக் கூறும் பாடல்வரிகள்

திருநிலைச்சேவடி சிலம்புவாய் புலம்பவும்
பரி தரு செங்கையிற் படுபறை ஆர்ப்பவும்
செங்கண் ஆயிரந் திருக்குறிப் பருளவும்
செஞ்சடை சென்று திசை முக மலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேலை ஒலியாது மென்முலை அசையாது
வார்குழை யாடாது மணிக்குழல விழாது
உமையவள் ஒருதிறனாக வோங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்.

என்பனவாகும். இதுபோன்ற சிறப்புமிக்க நுண்கலை கள் தமிழகத்தில் காலப்போக்கில் மறைந்துவிட்டன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோழர்கள் கண்ட அர்த்தநாரீசுவரர்

அர்த்தநாரீ-செப்புத்திருமேனி

சோழமன்னர்கள் அர்த்தநாரீசுவர வழிபாட்டில் தனிக்கவனம் செலுத்தினர். சோழநாட்டுச் சிவாலயங்களில் அதிக அளவில் அர்த்த நாரீசுவரர் திருமேனி அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

இராஜசோழனின் பாட்டியும் கண்டராதித்த சோழனின் மனைவியு மான செம்பியன் மாதேவியார் சிவாலயங்களைக் கற்றளியாக்கும் பணியைத் தொடங்கி வைத்தார். இவர் காலத்தில் பஞ்சகோட்டங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டதுடன் அதில் ஒன்றில் அர்த்த நாரீசுவரரை எழுந்தருளிவைக்கும் வழக்கமும் வந்தது. அதன்பிறகு தனிச்சந்நிதியில் அர்த்தநாரீசுவரர் எழுந்தருளிவைக்கப்பட்டார்.

குடந்தை, கங்கைகொண்டசோழபுரம், தஞ்சாவூர் திருமுதுகுன்றம், சிதம்பரம் முதலிய அனேக தலங்களில் கருவறைக் கோட்ட மாடத்தில் அர்த்தநாரீசுவரரை (கருங்கல் திருமேனியாகக்) காணலாம்.

சோழமன்னர்கள் காலத்தில் அர்த்தநாரீசுவரரை உலாத்திருமேனி களாகச் செய்துவைத்து விழாக்கள் கொண்டாடியுள்ளனர். திருவெண் காட்டில் உள்ள ராஜாதிராஜசோழன் காலக்கல்வெட்டில் துப்பம் உத்தமசோழி என்பவள் அர்த்தநாரீசுவரதேவரை எழுந்தருளிவைத்துப் பூசைக்கு வேண்டும் நிபந்தனைகளையும் அளித்தாள் என்று குறிக்கப்பட்டுள்ளது.

குடந்தைக் கீழ்கோட்டமான கும்பகோணம் நாகேசுவரசுவாமி ஆலயத்தில் உமையொருபாகன் எழுந்தருளியுள்ளதைக் காண்கிறோம். இவருக்கு பூசைக்கு வேண்டும் நிபந்தங்களை ஏற்படுத்தியிருந்ததை இக்கோயில் கல்வெட்டு குறிக்கின்றது. சோழர்காலச் சிற்பிகள் அர்த்தநாரீசுவரரை தனிக்கலைச் சிறப்புடன் அமைக்கத் தொடங்கினர். திருமுதுகுன்றத்தில் நடந்துவரும் கோலத்திலும் கண்டியூரில் அமர்ந்துள்ளது போன்றும் புதுமை பொலிய அமைத்திருப்பது கண்டு மகிழத்தக்கதாகும்.

அர்த்தநாரீச நடராஜர்

திருவாசகத்தலமான உத்தரகோசமங்கை சிறந்த நடராஜத்தலமாகும். இங்கு திருவாதிரை நாளில் நடராஜர் உலாவரும்போது அவருக்கு அர்த்தநாரீசுவர அலங்காரம் செய்யப்படுகிறதென்பதை டாக்டர். உ.வே. சாமிநாதையர் அவர்கள் தமது நூலில் குறித்துள்ளார்.

அர்த்தநாரீச தட்சணாமூர்த்தி

சிவபெருமான் தேவியின்றித் தனியாக யோகநிலையில் வீற்றிருந்து நான்மறையோடு ஆறங்கங்களை முனிவர்களுக்கு உபதேசிக்கும் கோலமே தட்சணாமூர்த்தி கோலமாகும். அபூர்வமாக சிலதலங்களில் அம்பிகையுடன் கூடிய தட்சணாமூர்த்தியைக் காண்கிறோம். இம்மூர்த்தம் "சாம்பவி தட்சணாமூர்த்தி" என்றழைக்கப்படுகின்றது. சிவமகாபுராணத்தில் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் சிவபெருமான் அர்த்தநாரீசுவரராகக் காட்சியளித்து ஞானஉபதேசம் செய்யப்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன என்றாலும் தட்சணாமூர்த்தியை "அர்த்தநாரீசுவரராக" அமைக்கும் வழக்கமில்லை. பழனியில் புகழ்பெற்று விளங்கும் ஸ்ரீசாதுசாமிகள் மடாலயத்தில் பெரிய அளவில் வரையப்பெற்ற அர்த்தநாரீச தட்சணாமூர்த்தியின் படம் வழிபாட்டில் உள்ளது. இதில் கல்லால மரத்தின்கீழ் பெருமான் வீற்றிருக்க முனிவர்களும் தவசிகளும் கூடிநின்று அவரிடம் உபதேசம் கேட்கின்றனர். தஞ்சாவூர் பாணியில் வரையப்பெற்றுள்ள இந்தக் கண்ணாடி ஓவியம் தலைசிறந்த கலைப்படைப்பாகத் திகழ்கின்றது.

கேதாரகௌரீசுவரரின் அருளால் அன்பர்கள் அனைவரும் நலம் பலபெற்று சிறந்து வாழ வேண்டுகின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

குவளைக்கண்ணி கூறன் காண்க அவளும் தானே உடனே காண்க!

அம்பிகாபதி

பராசக்திக்குரிய பெயர்களில் உயர்ந்தது "அம்பிகா" என்பதாகும். அம்பிகையின் கணவனாக விளங்குவதால் சிவபெருமான் அம்பிகாபதி என்றழைக்கப்படுகின்றார். தைத்ரீய ஆரண்யகம் அம்பிகாபதயே... உமாபதயே நம: என்று சிவபெருமானுக்கு அம்பிகையின் பெயரால் வணக்கத்தைக் கூறுகின்றது. அன்பர்கள் சிவபெருமானை அம்பிகையுடன் சேர்த்து வழிபடுவதையே விரும்புகின்றனர். அம்பிகையின் பெயரை முதலில் கூறி அவளோடு உடன் உறைபவன் சிவபெருமான் என்று கூறுவதே சமயமரபாகும். அதனை யொட்டியே ஏலவார்குழலி உடனுறை ஏகாம்பரேசுவரர், உண்ணாமுலையாள் உடனாய அண்ணாமலை அண்ணல் என்பனவாக வழங்குகின்றோம்.

சிவபெருமானும் அம்பிகையோடு வந்தே அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றான். இதனை அடியவர்களுடைய வரலாறுகள் அனைத்தினாலும் அறியலாம். சிவமஞ்சரியின் இந்த இருபத்து இரண்டாவதுமலர் அம்பிகையின் பெருமைகளை விளக்குவதாக மலர்கின்றது. இதில் சிவாலயங்களில் பல வகைப்பெயர்களில் திருவுருவம் தாங்கி அருள் பாலிக்கும் அம்பிகையின் சிறப்புக்களைக் கண்டு மகிழலாம்.

மேலும் அம்பிகையின் பஞ்சாவரணம், அருட்பெயர்கள், சந்நிதிகள், பலவகைத் திருக் கோயில்கள் ஆகியவற்றையும் விரிவாக அறிந்து மகிழலாம்.

சிவபெருமானும், அவனை நீங்காது அவனுடன் உறையும் பராசக்தியும் அன்பர்கள் அனைவருக்கும் சகல செல்வயோகமிக்கப் பெரு வாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்களின் பொன்னார் திருவடிகளைப் பிரார்த்திக் கின்றோம். –சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகை பெயர் விளக்கம்

பராசக்திக்கு வழங்கும் பெயர்களில் முதன்மை யானது அம்பிகா என்பதாகும். அம்பிகா என்ற சொல்லின் மூலச்சொல் "பகம்" என்பதாகும். பகம் என்பதற்கு ஐஸ்வர்யம், வீரியம், புகழ், செல்வம், ஞானம் வைராக்கியம் என்ற பல பொருட்கள் உள்ளன. இவற்றின் இருப்பிடமாகத் திகழ்வதால் அவள் பகி என்று அழைக்கப்பட்டாள். அதனுடன் அம் என்ற அடைமொழி சேர்த்து அம்பகி என்றழைக்கப்பட்டாள் அதுவே காலப்போக்கில் அம்பிகை ஆனதென்பர்.

மேலும் பகம் என்ற சொல்லிற்குக் கண் என்பதும் பொருளாகும். எடுத்துக்காட்டாக மூன்று கண்களைக் கொண்டிருப்பதால் சிவபெருமான் திரியம்பகன் எனப்பட்டான். பராசக்தி தன் கண்களினாலேயே கருணை மழை பொழிந்து உலகினைக் காத்து அருள் பாலிக்கின்றாள். அதனால் அவள் கண்களின் பெயரால் பகி என்றும் சிறந்த அழகான அருட்கண் களைப் பெற்றிருப்பதால் அம்பிகை என்றும் அழைக்கப்படுகிறாள். சக்தி வழிபாட்டில் சிறப்புடன் விளங்கும் மூன்று பெரும் அம்பிகையர்கள் தமது கண்களின் சிறப்பாலேயே போற்றப்படுகின்றனர். இவர்கள் முறையே மதுரை மீனாட்சி (மீன் போன்ற கண்களை உடையவள்) காஞ்சி காமாட்சி (விருப்பங்கள் நிறையுமாறு அருளும் கண்களை உடையவள்) காசி விசாலாட்சி (விசாலமான கண்களால் எதையும் விட்டுப் போகாமல் பார்த்து, அருள் புரிபவள்) என்றழைக்கப்படுகின்றனர்.

காலப்போக்கில் சாக்த தந்திரர்கள் தங்கள் சமயத்திற்கேற்ப இச்சொல்லுக்குப் பொருள் கண்டனர். அதன்படி பகம் என்பதற்கு யோனி என்பது பொருளாகும். இந்த உலக உயிர்கள் யாவற்றையும் வெளிப்படுத்தும் ஒப்பற்ற யோனியைக் கொண்டிருப் பதால் ஆதிசக்தி பகா என்றும் அம்பகா என்றும் அழைக்கப்பட்டாள். அதனுடன் பெண்பால் ஈற்று எழுத்தாகிய "இ"யுடன் கூடி அச்சொல் அம்பகி என் றாகி பின்னாளில் அம்பிகை ஆயிற்று. இவர்களின் கருத்தை வலியுறுத்துவதாக தொன்மையான சிவநெறியில் திளைத்திருந்த மொகஞ்சொதாரா, ஹரப்பா சமவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முத்திரை உள்ளது. அதில் தலைகீழாக இருக்கும் ஒரு பெண்ணின் யோனியிலிருந்து ஒரு மரம் கிளைத்து வெளிவருவதுபோல உள்ளது. இது உலக உற்பத்தி தாய்தெய்வத்திடமிருந்து தோன்றியதைக் குறிக்கும் அடையாளமென்பர். சாக்தர்கள் அம்பிகையைக் குறிக்க உருவத்திற்குப் பதில் யோனி அடையாளத் தைப் பயன்படுத்தினர். அதன் எளிய அடையாளமாக முக்கோணம் விளங்குகிறது. அந்நிலை வளர்த்து நிமிர்ந்த முக்கோணம் செல்வச் செழிப்பையும் கவிழ்ந்த முக்கோணம் பூமியின் செழிப்பையும் குறிக்கும் அடையாளமாயின.

நிமிர்ந்த முக்கோணம் செல்வச் செழிப்பின் அடையாளமாக இருப்பதால் அது மகாலட்சுமியைக் குறிக்கப்பயன்படுகின்றது. திருமாலின் மார்பில் ஸ்ரீதேவியான மகாலட்சுமி விளங்குவதைக் குறிக்க அவர் மார்பில் நிமிர்ந்த முக்கோணம் அமைக்கப்படு கின்றது. இதனைச் ஸ்ரீவத்சம் என்பர்.

கவிழ்ந்த முக்கோணம் உலகிலுள்ள உயிர்களின் வளர்ச்சியையும் பூமியின் செழிப்பையும் குறிப்பதால் ஆதிபராசக்திக்கு அடையாளமாக ஆனது. பல இடங்களில் பராசக்தியைக் குறிக்கக் கவிழ்ந்த முக்கோணமே பயன்படுத்தப்படுகின்றது.

தென்மாவட்டத்தில் அமைந்துள்ள அனேக சிவாலயங்களில் பள்ளியறையில் அமைக்கப்படும் அம்பிகைக்குத் தெய்வ உருவத்தை அமைக்காமல் ஒரு பீடத்தின் மீது முக்கோணத்தை அமைத்தே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழிபடுகின்றனர். முக்கோணத்தின் மையத்தில் அமையும் புள்ளி பிந்து என்று அழைக்கப்படும். சாக்தர்கள் அம்பிகை என்ற சொல்லைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்டதால் அச்சொல்லைத் தேவார ஆசிரியர்கள் எங்கும் பயன்படுத்தவே இல்லை. கல்வெட்டுக்களிலும் இச்சொல் உமாதேவி யையோ, பிற சக்தி தெய்வங்களையோ குறிக்கப்பயன் படுத்தப்படவில்லை.

என்றாலும் அம்பிகை என்ற இச்சொல் காலப் போக்கில் அனைத்து தாய்தெய்வங்களுக்கும் பெயராகி விட்டது. சமண சமயத்தினர் தங்கள் தர்ம யக்ஷியை அம்பிகா என்றே அழைத்து மகிழ்கின்றனர். இதனை யொத்ததாகப் பௌத்த சமயப் பெண் தேவதைகளும் "அம்பிகை" என்றே அழைக்கப் படுகின்றனர்.

பராசக்தியான அம்பிகை சிவபெருமானை வழிபட்ட திருத்தலங்கள் அவள் பெயரால் அம்பிகா புரம், அம்பிகாவனம், அம்பிஎன்ற, பல பெயர்களில் விளங்குகின்றன. பராசக்திக்கு அம்பிகை என்ற பெயரே அதிக அளவில் வழக்கில் உள்ளது.

பஞ்ச சக்திகளும் உமாபரமேஸ்வரியும்

ஆதியில் மூலபரசிவம் உலகினைத்தோற்றுவிக்கத் திருவுளம் பற்றியது. அதன் ஆயிரத்தில் ஒருகூறாகப் பராசக்தி தோன்றினாள். அந்த சக்தியிலிருந்து மின்னலைப் போன்ற பிரகாசத்துடன் சிவசாதாக்கியம் தோன்றியது. அதன் பிறகு பராசக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறாக ஆதிசக்தி தோன்றியது. இந்த ஆதி சக்தியிடமிருந்து அமூர்த்தசாதாக்கியம் தோன்றியது.

பிறகு ஆதிசக்தியிலிருந்து அதன் ஆயிரத்தில் ஒரு பகுதியாக இச்சாசக்தி தோன்றியது. இதனை இடமாகக் கொண்டு மூர்த்த சதாக்கியம் தோன்றியது.

பின்னர் இச்சாசக்தியின் ஆயிரத்திலொரு கூறாக ஞானசக்தி தோன்றியது. இதிலிருந்து கர்த்ரு சாதாக்தியம் தோன்றியது.

இச்சாசக்தியின் ஆயிரத்திலொரு பகுதியாகக் கிரியாசக்தி உண்டாயிற்று இதனிடத்திலிருந்து கர்ம சாதாக்கியமாகச் சதாசிவம் வெளிப்பட்டது.

இவருடைய ஆயிரத்திலொரு கூறாக மகேசன் தோன்றுகின்றார். இந்த மகேசனின் இடப்பாகத் திலிருந்து அவருடைய அருளாக மனோன்மணி தோன்றுகின்றாள். இவளே அன்பர்கள் மனம் மகிழ உமை, பார்வதி முதலான எண்ணற்ற பெயர்களையும் வடிவங்களையும் தாங்கி வந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றாள்.

இதுவே பரசிவநிலையிலிருந்து ஆதிசக்தி இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, பராசக்தி ஆகிய ஐந்து சக்திகள் தோன்றுவதும் அதனுடைய உருவத் தோற்றமாக சிவசக்தி தோன்றி உலகை பரிபாலிக்கும் நிலையாகும்.

சக்தியின் வடிவம் ஆகாயம்

எதுவும் அற்ற அகண்ட வெளியில் முதலில் சிவ னருளால் "பரமாகாசம்" தோன்றியது. அதுவே பராசக்தி வடிவமாகும். இதனைக் கூர்மபுராணம் எவருக்கு யாதொரு பரமசக்தியுண்டோ அந்த சக்தி யார் ஆகாசம் என்னப்படுவார் என்று குறிக்கின்றது. சக்தியின் முதல்வடிவம் ஆகாசமே ஆகும். இதுவே சிவ வடிவமும் ஆகும். அப்பரடிகள் இதனை "உமை யலா துருவமில்லை" என்று குறிக்கின்றார். தைத்ரீய சிட்சா வல்லி ஆகாயத்தை (உமாதேவியை) உடம்பாக உடையது பிரம்மம் (சிவபெருமான்) என்று கூறுகிறது.

ஐமாவதி

இமவான் மகளாகப் பிறந்ததால் பார்வதிக்கு ஐமாவதி என்பது பெயராயிற்று கேனோபநிஷத் இப்பெயரால் அவளைக்குறிக்கின்றது. அப்பரடிகள் தருமபுரப் பதிகத்தில் அவளை மேற்கண்ட பொருள் படி "இமவான்மகள்" என்று குறிக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகை சிவபூசை செய்தல்

உலகில் சிவபூசையொன்றே தலைசிறந்த தாகும். அந்த அந்தப்பூசையின் பெருமையை விளக்கவும் வழிகாட்டவும் சிவபெருமானின் ஒரு கூறாகத் தோன்றிய பார்வதிதேவி ஓயாது சிவபூசை செய்கின்றாள். இதனால் அவளுக்குச் சிவபூசைச் செல்வி என்பது பெயராயிற்று.

அவள் ஆதியூழியின் தொடக்கத்தில் சிவபூசை செய்தாள். அவளுடைய பூசையால் மகிழ்ந்த சிவபெருமான் அவளுக்குக் காட்சியளித்து அவளைத் தனது இடப்பாகத்தில் சேர்த்துக் கொண்டார். இருவரும் சேர்ந்து உலகினைப் படைத்தனர். அவள் ஊழிக்கால இரவில் சிவபூசை செய்ததை நினைவு கூறும் வகையில் சிவராத்ரியைக் கொண்டாடுகிறோம்.

பார்வதி சிவபூசை செய்வதைப் பதினென் புராணங்களும், திருமுறைகளும் தலவரலாறுகளும் சிறப்பாகக் குறிக்கின்றன. மனமகிழ்ச்சியைப் பெறவும். உலகஉயிர்கள் நலம் பெறவும் பார்வதி ஓயாது சிவ பூசை செய்கின்றாள். அவள் குயிலாகவும், மயிலாகவும், பசுவாகவும், யானையாகவும் இருந்து அனேக தலங்களில் பூசனை செய்ததைத் தலபுராணங்கள் குறிக்கின்றன.

பஞ்சபூதத் தலங்களுள் மூன்றில் அம்பிகை கடுந்தவம் புரிந்ததுடன் சிவபூசையும் செய்து மகிழ்கின்றாள். காஞ்சியில் அவள் சிவபூசை செய்தது தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றது. காஞ்சீபுரத்தில் அவள் மண்ணால் சிவலிங்கம் அமைத்துச் சிவபூசை செய்தாள். திருஆனைக் காவலில் பெருகிவரும் நீரைத் திரட்டி லிங்கம் அமைத்து வழிபட்டாள்.

திருவண்ணாமலையில் பவளப்பாறைமீது நின்று கடுந்தவமும் சிவபூசையும் செய்தாள். ஆதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவளை அணைத்து மகிழ்ந்ததுடன் தன் உடலில் ஒருபாதியையும் அளித்தார். அம்பிகையின் சிவபூசையால் இந்த உலகம் செழிப்படைகின்றது. ஆதலின் நமது வாழ்வு செழிப்படைய அம்பிகை சிவபூசை செய்யும் தலங்கள் சிலவற்றைச் சிந்திக்கலாம்.

அம்பிகை காஞ்சீபுரத்தில் சிவபூசை செய்தல்

பலதலங்களில் அம்பிகை சிவபூசை செய்திருந்தாலும் அவள் காஞ்சீபுரத்தில் செய்த சிவ பூசையே சிறப்புப் பெறுகின்றது. காஞ்சியில் அம்பிகை சிவபூசை செய்ததைக் காஞ்சிப்புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன. அதன்படி :-

ஒரு சமயம் உமாதேவியார் கயிலைமலை மீது வீற்றிருந்த சிவபெருமானின் கண்களை விளையாட்டாக மூடினாள். அவருடைய கண்கள் மூடப்பட்டதால் சூரியனும் சந்திரனும் தங்கள் ஒளியை இழந்தனர். உலகங்கள் இருளில் மூழ்கின. ஊழிக் காலம் தோன்றியவிட்டதோ என்று உலக உயிர்கள் பதைபதைத்து அஞ்சி நடுங்கிச் சோர்ந்து வீழ்ந்தன. அதனால் பெருமான் தனது மூன்றாவது கண்ணான நெற்றிக் கண்ணைத் திறந்தார். இதனால் உலகில் ஒளி பரவிய போதும் நெருப்பும், புகையும் எங்கும் பரவியது. உயிர்கள் மேலும் அஞ்சின. பார்வதியும் அஞ்சி தனது கைகளை எடுத்தாள். உலகில் சூரியனும் சந்திரனும் ஒளிபெற்றுப் பிரகாசித்தனர். பெருமான் நெற்றிக்கண்ணை மூடிக் கொண்டார். வெப்பமும் புகையும் குறைந்தன.

பார்வதி அதைக்கண்டு அஞ்சி அவரை வழிபட்டாள். அவர் அவளைநோக்கி உயிர்களுக்கு இதத்தையும் நன்மையையும் செய்யவேண்டிய நீ மாறாகத் துன்பத்தையும் அச்சத்தையும் உண்டாக்கினாய். இது நல்லதல்ல, இக்குற்றம் நீங்கும் பொருட்டுப் பூவுலகில் சென்று வழிபாடு செய்க என்றார். அதைக்கேட்டு பார்வதி நடுங்கினாள். ஒருவாறு மனம்தெளிந்து சிவபெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு பூவுலகம் வந்தாள். முதலில் இமய மலைச்சாரலில் தவம் செய்தாள். பிறகு காசியை அடைந்தாள் அங்கு சிவபூசை செய்ததுடன் அன்ன பூரணியாக வீற்றிருந்து அறம் செய்தாள். பிறகு பல தலங்களையும் தரிசனம் செய்து கொண்டு காஞ்சி மாநகரை அடைந்தாள். சிவபெருமான் அவ்விடத்தில் சிவபூசை செய்யுமாறு கூறினார். அம்பிகை காஞ்சியிலுள்ள அனேக சிவாலயங்களை ஆகம

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறைப்படி அர்ச்சித்துப் போற்றினாள். சிவபூசையின் ஓர் அங்கம் அடியவர்களுக்கு அறம் செய்தலாகும். பார்வதியும் அதைச்செய்ய விரும்பினாள். சிவபெருமான் அவளிடம் இரண்டு நாழிகை நெல்லைக் கொடுத்து அறம் செய்யும்படிக் கூறினார். அவள் அதனைத் தனது ஆற்றலால் பெருக்கி உலகாணித் தீர்த்தக் கரையில் ஓர் அறச்சாலை அமைத்து அங்கு ஓயாது அறம் செய்தாள். (அவள் அங்கு அறம் செய்யும் அழகையும் சிறப்பையும் சிவபெருமானே அடியவர்போல் வந்து பார்த்து மகிழ்ந்தானாம். அப்படி வந்து கோயில் கொண்ட இடத்திற்கு "அறம் வளர்த்தீசுவரம்" என்று பெயர் வழங்குகின்றது).

அவள் அறம்செய்தஇடம் **"உலக அறவிக் கோட்டம்"** எனப்பட்டது. அதுவே இந்நாளில் காமாட்சியம்மன் கோயிலாகத் திகழ்கின்றது.

பின்னும் பார்வதிதேவி சிறப்பான சிவ பூசையொன்றைச் செய்ய திருவுள்ளம் கொண்டாள். சிவபூசைக்காகக் காப்பு அணிந்தாள். அப்போது அவள் வழிபட்ட லிங்கம் காப்பீசர் என்று பெயர் பெற்றது. பிறகு கடகங்களை அணிந்தாள். அப்போது அவள் வழிபட்ட லிங்கம் கடகேசர் என்றும் கங்கணீசர் என்றும் பெயர்பெற்றன. பிறகு காஞ்சியின் மையத்தில் ஓடும் கம்பையாற்றின் கரையில் உள்ள காலம் கடந்து வேதமயமாக நிற்கும் மாமரத்தினை அடைந்து அதன்கீழ் வீற்றிருந்தாள். அங்கு மஞ்சள் காப்பணிந்து நீராடினாள். அவள் உடல்வாசத்தாலும் பக்தியாலும், அந்நீர் தனிநிறமும் மணமும் பெற்று ஓடியது. அதனால் அதற்கு மஞ்சளாறு எனப் பெயராயிற்று. அதனை விரும்பிய சிவபெருமான் அதன் நடுவினில் சிவலிங்கமாகத் தோன்றினார். பின்னர் அச்சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு ஆனந்தக் கூத்தாடினார். அதனால் அவருக்கு **"மஞ்சள்நீர்க் கூத்தர்"** என்பது பெயராயிற்று.

அம்பிகை வைரக்கியமயமான வெள்ளாடைகளைத் அணிந்தாள். உருத்திராக்கங்களையும் விபூதியையும் தரித்தாள். திலக மண்டலம் தீட்டிக் கொண்டாள்.

ஒருமித்த சிந்தைகொண்டு பஞ்சாட்சர ஜெப்ம் செய்தாள். பிறகு பூசைக்குரிய பொருட்களைத் திரட்டிக் கொண்டாள். கம்பையாற்றின் கரையில் மணலைக் கூட்டித் தன் அன்பையும் பக்தி



செம்பொன் மலைவல்லி தழுவக்குழைந்தது காஞ்சீபுரம்

யையும் கலந்துச் சிவத்தை நெஞ்சில் தேக்கியவாறு அழகிய சிவலிங்கத்தைச் செய்தாள். அதற்கு மாலைகளையும் ஆபரணங்களையும் சூட்டினாள். ஆகமங்களில் கூறியபடி அதனை அர்ச்சித்தாள். அன்புடன் போற்றி வழிபட்டாள்.

அவள் தன்னைப் பூசைசெய்யும் அழகையும் நேர்த்தியையும் காணச் சிவபெருமான் அங்கு மறைவாக வீற்றிருந்தார். அதனால் அவருக்குக் கள்ளக்கம்பர் என்பது பெயராயிற்று. (காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் கள்ளக் கம்பர் சந்நிதி தனியே உள்ளது)

பலநாட்கள் நகர்ந்தன. அம்பிகை நாளுக்குநாள் அன்புவளரச் சிவபூசை செய்தாள். அவளுடைய அன்பினைச் சோதிக்க விரும்பிய சிவபெருமான் அருகில் ஓடும் கம்பையாற்றைப் பெருகிவரச் செய்தார். அந்த வெள்ளம் ஊழிக்காலம் போல் பெருகி வந்தது. அதைக் கண்டு அஞ்சிய பார்வதிதேவி தான் பூஜை செய்த சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டாள். கண்களை மூடி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கம்பாநதிக் காட்சி - மயிலை

ஐந்தெழுத்தை உன்னிச் சிவனைத் தியானித்தாள். வெள்ளம் மேலும் பெருகப் பெருக பார்வதி இன்னும் உறுதியுடன் சிவலிங்கத்தை அணைத்துக் கட்டித் தழுவிக் கொண்டாள். அவளுடைய அன்பினால் பெருமான் உருகினார். அவளுடைய மார்பு அழுந்திய சுவடும் கைவளையல் பதித்த சுவடும் அந்த லிங்கத்தில் பதிந்தன. அவற்றைப் பெருமான் அன்பின் அடையாளமாக ஏற்றார். அதனால் அவருக்கு தழுவக் குழைந்தநாதர், வளைத்தழும் போடு முலைத்தழும்பும் கொண்டபிரான், கள்ளக் கம்பர் முதலிய பெயர்கள் உண்டாயின.

அவளுடைய தெய்வீக அணைப்பு சிவ பெருமானுக்கு உவப்பை உண்டாக்கியது. அதனால் வெள்ளத்தைத் தணிவித்தார். அந்த லிங்கத்திலி ருந்து வெளிப்பட்டு அவளுக்குக் காட்சிதந்தார். அவரைக் கண்டு அவள் பணிந்து வணங்கினாள். அப்போது தேவர்கள் முனிவர்கள் உள்ளிட்ட எல்லோரும் அங்குக் கூடினர். அவர்கள் சிவபெருமானிடம் தேவியை மணந்து தங்களுக்குத் திருமணக் காட்சி யினை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்ட னர். சிவபெருமானும் அப்படியே ஆகட்டும் என்றார்.

பிறகு ஒரு நல்ல நாளில் அனைவரும் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய் தனர். காஞ்சிபுரத்தைத் திருமண நகரமாக அலங்கரித் தனர். சிவபெருமான் கயிலையினின்று புறப்பட்டு வரும்போது பூதவெள்ளமும், தேவர்கள் கூட்டமும், கின்னர, கிம்புருஷர் வித்தியாதரக் கூட்டமும் கூடிப் பரிவாரங்களாகத் தொடர்ந்து வர காஞ்சிபுரத்தில் மாமரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த மண மேடையை அடைந்தார். அவரைத் திருமாலும் பிரமனும் எதிர்கொண்டு அழைத்துச் சென்று மணமேடையில் அமர்த்தினர். லட்சுமி, சரஸ்வதி முதலிய தெய்வப் பெண்கள் பார்வதியை அழைத்து வந்து அவருக்கு வலப்பாகத்தில் அமர்த்தினர். பிரமன் திருமணவேள்வியைச் செய்தான். திருமால் நீர்வார்த்துக் கன்னிகாதானம் செய்தார். முனிவர்கள் வாழ்த்துக்களைக் கூற அரம்பையர்கள் மங்கலங் களைக் கூறி ஆடிப்பாடினர். எங்கும் மகிழ்ச்சி பரவியது.

காஞ்சிபுரத்தில் அம்பிகை பூசித்த லிங்கமே ஏகாம்பரநாதர் ஆலயத்தில் மூலவராக எழுந்த ருளியுள்ளது. அது மண்ணால் ஆக்கப்பட்டதாத லின் குவளை அணிவிக்கப்பட்டுள்ளது. புனுகுசட் டம் மட்டுமே சாத்தப்படுகின்றது.

இது காலங்கடந்த கதையாதலின் எல்லோராலும் நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வருகின்றது. அதனால் இது ஒரே மாதிரியாக இல் லாமல் கூடியும் குறைவுமாக, விரித்தும் சுருக்கியும் சொல்லப்பட்டுள்ளது. காஞ்சிப் புராணங்கள் உமாதேவியார் சிவனின் கண்களைப் புதைத்தல், சிவனிடம் விடைபெறுதல், பூவுலகிற்கு வருதல் காஞ்சியில் சிவபூசை செய்தல், வெள்ளம் பெருகி வருதல், உமாதேவியார் சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொள்ளுதல் சிவன் வெளிப்பட்டு அருளுதல் பின்னர், திருமணம் நடைபெறுதல் ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்றன. காஞ்சிபுரத்தி லுள்ள எல்லா ஆலயங்களிலும் உமை சிவலிங் கத்தைத் தாவி அணைத்துக் கொண்டுள்ள சிற்பத்தை அமைந்துள்ளனர்.

காஞ்சிபுரத்தில் மட்டுமின்றி தென்னக மெங்கும் உள்ள ஆலயங்களில் தூண் சிற்பமாகவும் இக்காட்சி அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

உன்னதமான இக்கதையை விளக்கும் வகையில் பலதலங்களில் தழுவக் குழைந்த நாதர் சந்நிதி அமைக்கப்பட்டிருந்தாலும் அறியாமல் பலர் இப்பெயரை போட்டுக் குழுப்பியுள்ளனர். சிலர் இவரைக் குழந்தை ஈசுவரர் என்றும், கொழுந்தீசர் என்றும் எழுதிவைத்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சியில் செய்த சிவ பூசை



காஞ்சிபுரத்தில் மாமரத்தடியில் கம்பையாற்றின் கரையில் பராசக்தி மண்ணால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டாள். அதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "ஆலந்தான் உகந்து" என்ற தொடங்கும் பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் குறிக்கின்றார். எல்லையற்ற, தொன்மையான பரந்த புகழை உடைய மலையரையன் பொற்பாவையாகிய உமையவள் ஒரு சாதாரண பெண்ணைப் போல சிவபெருமானை அர்ச்சித்தும், உபசரித்தும், ஆராதித்தும், பாடியும் பரவியும், பணிந்தும் வழிபடுகிறாள் என்று இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலும் குறிக்கின்றன.

அவளுடைய பூசையால் மகிழ்ந்த இறைவன் வெள்ளத்தைக் பெருகிவரச் செய்ததையும், அவள் அஞ்சிதான் வழிபட்ட, சிவலிங்கத்தைத் தழுவிக் கொள்ள அதிலிருந்து வெளிப்பட்டு அவளுக்கு அருள் புரிந்ததையும் ஒரு பாடல் அழகிய காட்சியாகக் காட்டுகின்றது. அவள் தன்னைப் பூசை செய்யும் அழகை அவள் அறியா வண்ணம் கண்டு மகிழ்ந்ததால் சுந்தரர் சிவபெருமானைக் “கள்ளக் கம்பன்” என்று உரிமையோடு கூறுவதையும் காண்கிறோம்.

சிவபெருமான் வெள்ளத்தைப் பெருகச் செய்ததால் வெள்ளக் கம்பர் என்றும், அம்பிகைக்கு நல்லருள் புரிந்ததால் நல்லக்கம்பர் என்றும் பெயர் பெறுகின்றார். இப்பெயர்களில் சிவலிங்கங்கள் ஏகாம்பரநாதர் ஆலயத்துள் உள்ளன.

ஒவ்வொரு பாடலிலும் அம்பிகை சிவபூசை செய்ததைக் குறிக்கும் தேவாரப் பதிகம் இது ஒன்றேயாகும். (மேலும் அவள் தவம் செய்து சிவபெருமானை மணந்ததை பக்.202ல் பார்க்க)

காஞ்சிபுரத்தில் அம்பிகை விரும்பிச் சிவ பூசை செய்ததை, அப்பர் அடிகள் கருத்தடங்கண்ணினாள் உமை கைதொழ இருந்தவன் என்றும், இச்சையால் உமை நங்கை வழிபட இருந்தவன் என்றும் குறிக்கின்றார்.

என்றும் தொடரும் இமயவல்லியின் பூசை...

காஞ்சியில் அம்பிகை சிவபூசை செய்தபோது, கம்பையாறு பெருகியதால் வெள்ளம் புரண்டது. அதனால் அவளுடைய பூசை தடைப்பட்டது. அம்பிகை அஞ்சி சிவலிங்கத்தை ஆரத்தழுவியதும் சிவபெருமான் லிங்கத்தில் அவளுடைய முலைத்தழும்பையும் வளைத்தழும்பையும் ஏற்றார் பின்னர் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவளுக்கு அருள்புரிந்ததார். அக்காட்சியை பிரமாதி தேவர்கள் அனைவரும் கண்டு களித்தனர். பிறகு அம்பிகை சிவபெருமானிடம், ஐயனே! வெள்ளப் பெருக்கால் எனது பூசை தடைப்பட்டது. அதைத்தொடர்ந்து செய்ய விரும்புகின்றேன் என்றாள். அவளிடம் சிவபெருமான், அன்ப! என்பால் நின் பூசனை என்றும் முடிவதில்லை என்றார். இதனையொட்டி எப்போதும் அம்பிகை சிவபூசை செய்து கொண்டே இருக்கின்றாள். அவளுடைய இதயகமலத்தில் சிவலிங்கம் ஜோதிமயமாக உள்ளது. இதைக் குறிக்கும் வகையில் அம்பிகைக்குச் சிவலிங்கப் பதக்கம் அணிவிக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சக்திமுத்தம்

அம்பிகை தழுவக்குழைந்த நாதர்

அன்பு நிறைந்தவர்களைக் காண்பதாலும், அவர்சொல் கேட்பதாலும், அவர்கள் மெய்தீண்டுதலாலும் அவர்களை ஆரத்தழுவி அணைப்பதாலும் நமது உடலும் உள்ளமும் மென்மையாகின்றன. அதனால் ஓர் குழைவு உண்டாகின்றது. அதன் பயனால் உள்ளும் புறமும் எல்லையற்ற இன்பம் உண்டாகின்றது.

அன்னை பராசக்தி அன்புடன் ஆரத்தழுவி மகிழ்ந்ததால் சிவபெருமானுக்கு உடலும் மனமும் கரைந்து குழைந்து போயிற்றாம். அதனால் அவருக்குத் தழுவக்குழைந்தநாதர் என்பது பெயராயிற்று அந்தக் குழைவினாலும் அவளுடைய அன்பு தோய்ந்த இறுக்கமான அணைப்பாலும் அவளுடைய மார்பின் சுவடுகளும் வளையல் தழும்புகளும் அவர் மேனியில் பதிந்ததாம். இதனால் அவர் முலைத்தழும்பர் என்று குறிக்கப்பட்டார். பெருமான் தழுவக்குழைந்தநாதராகப் பல தலங்களில் வீற்றிருந்தாலும் அவர் காஞ்சிபுரத்தில் ஏகம்பநாதராக வீற்றிருப்பதையே புராணங்கள் சிறப்புடன் போற்றப்படுகின்றது. இதனை விளக்கும் வகையில் காஞ்சி புராணத்தில் தழுவக்குழைந்த படலம் என்ற பகுதி இடம் பெற்றுள்ளது. காஞ்சிப்புராணங்கள் இதனை காதலி தழுவலோடும் ... சோதி திருவுருக்குழைந்து காட்டி அணிவளைத் தழும்பினோடு முலைச்சுவடணிந்தார் ஐயர் என்றும், அம்மை தழுவக்குழைந்து விழைந்திழைந்து.. முலைச்சுவடும், வளைச்சுவடும் இசைந்தாரன்றே என்று குறிக்கின்றன. மேலும் செம்பொன் மலைவல்லி தழுவக் குழைந்த மேனிப் பெருவாழ்வு என்றும் பெருமானை குறிக்கின்றன.

★ திருக்கானப்பேர் என்று அழைக்கப்பட்டு இந்நாளில் காளையார்கோயில் என வழங்கும் தலத்தில் சிவபெருமான் அம்பிகை பசுவாக வடிவம்தாங்கிப் பூசித்தபோது அவளுடைய கொம்புகுத்திய சுவட்டையும் குளம்புபட்ட சுவட்டையும் ஏற்றுக்கொண்டான் இதனைச் சுந்தரர் தமது தேவாரத்தில் மாமலைமங்கை உமைசேர் சுவடும் என்று குறித்துள்ளார்.

★ திருஒற்றியூரில் கொடிமரத்திற்கு அருகில் தழுவக்குழைந்த நாதர் சந்நிதி உள்ளது.

சக்தி முத்தம்

பார்வதிதேவி சிவலிங்கத்தைத் தழுவி மகிழ்ந்ததுடன் அதற்கு ஒரு முத்தமும் கொடுத்தாளாம். அந்தத்தலம் சக்திமுத்தம் என்றே அழைக்கப்பெறுகிறது. இது கும்பகோணத்திற்கு அருகிலுள்ள தலமாகும். இங்கு சக்தி, சிவலிங்கத்தைத் தழுவி மகிழும் சிற்பம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது அரிய கலைப்படைப்பாகத் திகழ்கின்றது. இதனை ஒத்ததான சிறு சிற்பம் ஒன்று திருவலஞ்சுழி கபத்தீசுவரர் ஆலய உள்கோபுரத்தின் தெற்குப் பகுதியில் விநாயகர் திருவுருவத்தின் அருகிலும் அமைந்துள்ளது.

கம்பாநதி காட்சி

காஞ்சிபுரத்தில் காமாட்சிதேவி கம்பையாற்றின் கரையில் மணலால் லிங்கம் அமைத்து வழிபட்டபோது, விளையாட்டாக இறைவன் கம்பையாற்றைப் பெருகி வரச்செய்தார். அதைக் கண்டு அஞ்சிய தேவி தாம் பூசித்த லிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டாள். இக்காட்சியைக் கம்பாநதிக்காட்சி என்று அழைக்கின்றனர். காஞ்சிபுரத்தில் பல ஆலயத் தூண்களில் இக்காட்சி செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

நவராத்திரியின் போது, மாங்கிளை யொன்றை நட்டு அதன்கீழ் அம்பிகை லிங்கத்தை அணைத்துக் கொண்டுள்ள பாவனையில் அலங்கரித்து மகிழ்கின்றனர். மயிலாப்பூரில் செய்யப்படும் இந்த அலங்காரம் தனிச்சிறப்புடையதாகத் திகழ்கின்றது. ஆரம்பத்தில் சிவாலயங்களில் மட்டுமே நடைபெற்ற இந்த அலங்காரம், காலப்போக்கில் அங்காளம்மன், மாரியம்மன் முதலிய ஆலயங்களிலும் செய்யப்பட்டுவருகிறது. நவராத்திரியின்போது அனைத்து ஆலயங்களிலும் கம்பாநதிக் காட்சி அலங்காரம் சிறப்பிடம் வகிப்பதைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகை பல்வேறு வடிவங்கள் கொண்டு சிவனைப் பூசித்தல்

சிவபெருமானை அம்பிகை தெய்வ வடிவுடன் இருந்து எப்பொழுதும் பூசை செய்து கொண்டே இருக்கின்றாள். அத்துடன் மட்டுமின்றி, மண்மேல் பலருக்கும் மகளாகப் பிறந்து சிவனைப் பூசித்துப் பேறுபெற்றாள்.

மேலும் பசுவாகவும், மானாகவும், மயிலாகவும், குயிலாகவும் பல வகையான விலங்கு, பறவை வடிவங்களைத் தாங்கியும் பூசைகள் செய்ததைக் காண்கிறோம். பல தலபுராணங்கள் இவற்றை மேலும் விரிவாகக் கூறுகின்றன.

ஒரு சமயம் சிவபெருமான் அவளுக்கு வேதாகமப் பொருளை உபதேசித்துக் கொண்டிருந்தார். அவளோ அதில் கவனம் செலுத்தாமல் அங்கு ஆடிக் கொண்டிருந்த ஒருமயிலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதனால் கோபமுற்ற சிவபெருமான் அவளை மயிலாகப் பிறக்கும் படிக் கூறினார்.

அவள் மயிலாகப் பிறந்து சென்னை மயிலாப்பூரிலும் தென் மயிலையான மயிலாடுதுறையிலும் இறைவனைப் பூசித்து முந்தைய வடிவைப் பெற்றாள். அவளுடன் சிவபெருமான் பொன் மயிலாக வந்து நடமாடிக் களித்தான். அன்பர்களின் மனமாகிய சோலையில் ஆடிக்களிக்கும் மயில் என்று காளிதாசன் அம்பிகையை வர்ணிக்கின்றார்.

அம்பிகை குயில் வடிவத்துடன் கடம்பவனத்திலும், மயில் வடிவில் இமயமலைச் சாரலான கேதாரத்திலும், அகண்ட வெளியில் ஒளி வெள்ளமாகவும், சிவபெருமானின் இதயத்தாமரை மீது அன்னமாகவும் இருந்து கொண்டு ஓயாது சிவபூசை செய்து கொண்டிருக்கின்றாள் என்று அபிராமி அந்தாதி கூறுகிறது.

மேலும் சக்கரப்பள்ளி என்ற இடத்தில் அம்பிகை சக்கரவாளப் பறவையாக இருந்து பூசித்தாள் என்று அவ்வூர்த் தலபுராணம் கூறுகின்றது. மேலும் கிளி, புறா முதலிய வடிவம் கொண்டு சிவபூசை செய்வதைப் பல தலங்களில் காணமுடிகிறது.

அவள் பசுவாக இருந்து கோழம்பம், ஆவடுதுறை, காளையார் கோயில் முதலிய இடங்களில் பூசித்துப் பேறு பெற்றாள். (இது பற்றிய விவரங்களைச் சிவமஞ்சரி இரண்டாம் பகுதியில் காண்க)

அவள் பெண்யானை வடிவம் கொண்டபோது சிவபெருமான் ஆண்யானையாக வடிவம்கொண்டு அவளுடன் இருந்தார். அப்போது கணபதி தோன்றினார் என்று தேவாரம் குறிக்கின்றது. பிடியதன் உருவுமை கொளமிகு கரியது வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்



கடி கணபதி வர அருளினன் என்று தொடங்கும் அந்தப் பாடல் எல்லோராலும் விநாயகர் துதியாகப் பாடப்பட்டு வருகின்றது.

அம்பிகை கிளியாக விளங்குகின்றாள். அவள் கிளி வடிவில் பூசித்த தலங்கள் சுகவனங்கள் என்று போற்றப்படுகின்றன. இறைவனின் கண்களைப்பொத்தி உலகினை ஒளியிழக்கச் செய்து உயிர்களை வருத்திய பாவம் தீர அம்பிகை கிளிவடிவம் கொண்டு திருமங்கலக்குடியில் பூசித்தாள் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. அவளுடைய சாபம் நிவர்த்தியானது தைப் பொங்கல் திருநாளாகும். அது முன்னாளில் விழாவாகக் கொண்டாடப்பட்டுவந்துள்ளது.

சிவயோக சாதனையாளர்கள் அம்பிகையைப் பரமஹம்ச என்று அன்னமாகப் போற்றுகின்றனர்.

- பார்வதி பசுவடிவம் கொண்டு பூசித்ததால் சிவனுக்குப் பசுபதி என்பதும் பெயராயிற்று.
- தேவி பெண்யானை வடிவம் கொண்டபோது சிவபெருமான் ஆண் யானையாகத் தோன்றி அவளை அணைத்துக் கொண்டதால் கஜாந்திகன் எனப்பட்டான்.
- பராசக்தி மயிலாகத் தோன்றியபோது சோலைகளில் ஆடி மகிழ்ந்தாள். அவளுடன் சிவபெருமானும் ஆண் மயிலாக வந்து ஆடினான். அது கௌரி தாண்டவம் எனப்பட்டது. மேலும் கேதாரம், கௌரி என்பனவற்றிற்கு மயில் என்பது பொருளாகும். சிவபெருமான் மயிலாக வந்ததால் கேதாரீசன், கௌரீசன் எனப்பட்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகையின் அழகு வடிவங்கள்

(தென்னகமெங்குமுள்ள சிவாலயங்களில் உமாதேவியார் தனிச்சந்நிதியில் எழுந்தருளியுள்ளாள். அவளுக்குப் பெயர்கள் பல இருப்பதுபோலவே அவளது வடிவங்களும் பலவாக உள்ளன. தென்பாண்டிநாட்டில் மானுடப் பெண்களைப்போல இரண்டு கரங்களுடன் திகழ்கின்றாள். கேரள நாட்டில் சங்குசக்ரம் ஏந்தி, அபய வரதமுத் திரைகளைத் தாங்கிக் காட்சியளிக்கின்றாள். தொண்டைமண்டலத்தில் பாசம், அங்குசம் ஏந்திய பாசாங்குச சுந்தரியாய் விளங்குகின்றாள். இன்னும் சில தலங்களில் அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றாள். இப்படி பல்வேறு கோலங்களில் விளங்கும் பராசக்தியின் திருவுருவங்களை விளக்குவதாக இக்கட்டுரை விளங்குகின்றது.)

சிவபெருமானைப் போலவே தேவியும் வடிவ மற்றவள் அவள். என்றாலும் உயிர்களின்மீது கொண்ட கருணையால் பலவடிவங்களைத் தாங்கி வந்து அருள்பாலிக்கின்றாள். அவள் கொள்ளும் வடிவத்திற்கேற்ப அவளுக்குச் சிறப்பான பெயர்கள் அமைகின்றன.ஆகமங்கள் அவளைச் சிவ பெருமானிடமிருக்கும் போது மனோன்மணி என்று குறிக்கின்றன. தவம் செய்யும்போதும் சிவ பெருமானின் இடப்பாகம் வீற்றிருந்து இன்பம் அருளும் போதும் கௌரி என்று அழைக்கப் படுகின்றாள். மேலும் தனது ஒவ்வொரு பெயருக்கும் ஏற்ப சிறப்பான ஆயுதங்களையும் தாங்கி அருள்பாலிக்கின்றாள். ஞானிகளும் பேரருளாளர்களும் தங்களுக்கு அம்பிகை அருட்காட்சியளித்த கோலத்தையே ஆலயங்களில் அம்பிகைக்கு வடிவமாக அமைத்துள்ளனர்.

★பராசக்தி அம்மன்
நன்றி : தமிழ்நாடு, தொல்லியல் துறை

தொண்டைமண்டலமெங்கும் அம்பிகை ஞானேசுவரியாக விளங்குகின்றாள். இங்கு பக்தனின் மனம் கட்டுக்கடங்காத யானையாக உருவகிக்கப்பட்டு அதனை அடக்கி அதன்மீது வரும் ஞானவல்லியாக இவள் போற்றப்படுகின்றாள். யானையைப் பிணிக்கும் வலியகயிறும், அடக்கிச் செலுத்தும் அங்குசமும் அவளுடைய மேற்கரங்களில் திகழ்கின்றன. கீழ்க்கரங்களில் அபய வரதமுத்திரைகள் உள்ளன. தலையில்ஜடா மகுடமும் அதில் கொன்றை மாலையும் உள்ளன. பாசம் அங்குசம் ஆகியவற்றை ஏந்தியிருப்பதால் இவள் பாசாங்குச சுந்தரி என்று போற்றப்படுகின்றாள். தொண்டை மண்டலமெங்கும் இவளுக்குப் பெயர்கள் பலவாக இருந்தாலும் இவள் வடிவம் பாசாங்குசம், வரத, அபயமுத்திரை ஏந்தியதாகவே விளங்குகின்றது. இவளுக்கு ஞானமாதங்கி, ஞானகௌரி என்பனவும் பெயர்களாகும்.

சோழமண்டலத்திலுள்ள அனேக ஆலயங்களில் அம்பிகைக்குச் சிவகாயத்ரியின் உருவம் வடிவமாக அமைகின்றது. அதன்படி அவளுக்கு மேற்கரங்களில் அட்சயவடமும், தாமரையும் விளங்க கீழ்க்கரங்களில் அபயவரதமுத்திரைகள் அமைகின்றன. இவள் வெள்ளாடை தரித்தவளாக விளங்குகின்றாள். இதனையொட்டி திருப்புகலூர் முதலிய அனேக தலங்களில் உச்சிவேளை (அல்லது மாலையில்) வெள்ளாடைகள் அணிவிக்கப்படுகின்றன. திருக்கடையூர் அபிராமி, குடந்தை அபயாம்பிகை முதலான அனேக சக்திவடிவங்கள் சிவகாயத்ரீ வடிவங்களேயாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்றாம் நிலையில் அம்பிகை ஆகமங்கள் கூறும் மனோன்மணி வடிவில் திகழ்வதை ஒரு சில தலங்களில் மட்டுமே காணமுடிகிறது. ஆகம நூல்கள் இவ்வடிவத்தைச் சிறப்பாகப் போற்று கின்றன. என்றாலும் பரவலாக இவ்வடிவத்தைக் காண முடியவில்லை. இவ்வடிவத்தில் அவள் மேற்கரங்களில் நீலோற்பல, தாமரை மலர்களை ஏந்திக் கீழ்க் கரங்களில் அபய, வரத முத்திரை களைத் தாங்குகின்றாள். அச்சிறுபாக்கம் இளங்கி ளைநாயகி திருநள்ளாறு, போகமார்த்த பூண் முலையாள் முதலிய சக்தி வடிவங்கள் மனோன் மணி வடிவங்களேயாகும்.

நான்காவது நிலையில் அம்பிகை இரண்டு கரங்களுடன் திகழ்வதைக் காண்கிறோம். இது பராசக்தி மானுடவடிவம் தாங்கி மண்மீது வந்து மாமன்னர்களுக்கும் தவசிகளுக்கும் மகளாகப் பிறந்து வளர்ந்ததை உணர்த்துகின்றது. நெல்லை யில் காந்திமதியாகவும், மதுரையில் மீனாட்சியாக வும் அவள் பாண்டிய மன்னர்களுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்ததை காண்கிறோம். இந்தநிலை பாண்டிய மண்டலத்தில் அதிகமாகும். ஆதலில் பாண்டிய மண்டலமெங்கும் அம்பிகைஇரண்டு கரங்களுடன் மானுட வடிவில் திகழ்கின்றாள். மதுரைமீனாட்சி, நெல்லைகாந்திமதி, சங்கரன்கோயில் சங்கர கோமதி முதலிய அனைத்து சக்தி வடிவங் களும் இவ்வகையின ஆகும்.

ஐந்தாம் நிலையில் அவள் மலர்மகளாக இருப் பதைக் காண்கிறோம். இதில் மேற்கரங்களில் தாமரை மலர்களையும் கீழ்க்கரங்களில் அபய வரத முத்திரைகளும் விளங்குகின்றன. இந்த வடிவமும் அபூர்வமாக ஓரிரு தலங்களில் மட்டும் உள்ளன. திருச்சி மாவட்டம் இரத்தினகிரியில் உள்ள அராளகேசி வடிவம் இத்தகையதாகும்.

பெரும்பான்மையாக சிவாலயங்களில் உள்ள சக்தி வடிவங்கள் இந்த ஐந்தில் ஒன்றாகவே உள் ளன. இதற்கு மாறாக அமைந்தவை மிகக் குறை வேயாகும். அவற்றுள் சிலவற்றைத் தொடர்ந்து இங்கே காணலாம்.

அம்பிகையின் காயத்திரி, மந்திரம்

காத்யாயனாய வித்மஹே
கன்யாகுமாரி தீமஹி
தன்னோ துர்க்கிப் பிரசோதயாத் ॥ என்று

அவளை கன்னிப் பெண்ணாகவே போற்றித்

கன்யாகுமாரி - கன்யாகுமரி

தியானிக்கிறது. இதனையொட்டி முக்கடலும் சங்கமிக்கும். இந்தியாவின் தெற்குமுனையில் அவளைக் கன்னிப்பெண்ணாகத் தவம் செய்து கொண்டி ருக்கும் பராசக்தியாக வணங்குகின் றோம். இதனால் இப்பகுதிக்குக் "கன்யாகுமாரி" என்பது பெயராயிற்று.

அம்பிகை தனது கருவறையுள் எப்போதும் தனியாகவே எழுந்தருளியுள்ளாள். அபூர்வமாகச் சிலசமயங்களில் அவள் தோழியோடும் குமார னோடும் எழுந்தருளியிருக்கக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக திருவாரூரிலுள்ள நீலோற்ப லாம்பிகை நீலோற்பல மலர்ஏந்தி நின்றவாறு காட்சியளிக்கின்றாள். அவளுக்கு இடப்புறம் ஒரு சேடி நிற்கின்றாள் அவள் தோள் மீது முருகன் அமர்ந்துள்ளான். அம்பிகை இடது கரத்தால் முருகப்பெருமானின் தலையைத் தொட்டவாறு உள்ளாள். இத்தகைய காட்சியை வேறிடத்தில் காணமுடியவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுவாகச் சக்தியின் திருவடிவங்கள் நின்ற நிலையிலேயே அமைகின்றன. அபூர்வமாகச் சிலதலங்களில் மட்டுமே அவள் அமர்ந்து அருள்பாலிப்பதைக் காண்கிறோம்.

திருமணஞ்சேரியில் அம்பிகை மணமகளாகக் கோகிலாம்பிகை எனும் பெயரில் அமர்ந்தநிலையில் அருள்புரிகின்றாள். திருவாரூரில் உத்குடிகாசனத்தில் கமலாம்பிகை யோக கௌரியாக வீற்றிருக்கின்றாள். பெருவேளூரிலும் ஏலவார்குழலி அமர்ந்தநிலையிலேயே காட்சியளிக்கிறாள்.

கேரள, கர்நாடக மாநிலங்களில் அம்பிகை சங்கு, சக்கரம் ஏந்திஅபய வரத முத்திரை தரித்தவளாய் விளங்குகின்றாள். பராசக்தி வீரமும் விவேகமும் கொண்ட ஆண்வடிவம் கொள்ளுகையில் விஷ்ணு என்று போற்றப்படுகின்றாள். விஷ்ணுவல்லபையயாக விளங்குதைக் குறிக்க அவள் சங்கு சக்கரம் கொண்டவளாகப்போற்றப்படுகின்றாள். கொல்லம் உமாமகேசுவரி முதலிய சக்திவடிவங்கள் சங்குசக்கரம் ஏந்தியதாக அமைக்கப்பட்டுள்ளன.

இப்படி எண்ணற்ற வடிவங்களில் பராசக்தி சிவாலயத்தில் தனித் தனிச்சந்நிதிகளில் வீற்றிருப்பதைத் தென்னகமெங்கும் காண்கிறோம்.

ஆன்ம நாயகி

சக்தி உருவெளியானவள். அவள் தனக்கென ஓர் உருவம் இல்லாது இருக்கின்றாள். பேரண்ட வெளியே சக்திவடிவமாகும் என்றாலும் பக்தர்களுக்கு அவர்கள் விரும்பியவாறு உருவம் தாங்கிவந்து அருள்பாலிக்கின்றாள். சிவஞானிகள் உருவமற்ற மூலசக்தியாகவே அவளைப்பாவனை செய்துபோற்றுகின்றனர். அவர்கள் வழிபட்டதலங்களில் பராசக்திக்கு வடிவம் அமைப்பதில்லை. ஒரு பீடத்தை மட்டும் அமைத்துள்ளனர். இவளை ஆன்மநாயகி என்றும் ஆவுடையாள் என்றும் அழைக்கின்றனர். ஆவுடையார் கோயில் ஆன்ம நாயகி கடம்பர்கோயில் ஆவுடைநாயகி முதலியன இவ்வடிவங்களாகும்.

ஜகன்மாதா

சிவனும் பார்வதியும் உலகத்தை தமது ஆற்றலால் ஓயாது படைத்துக் காப்பவர்கள். ஆதலால் விசுவேசுவரர் - விசுவேசுவரி என்றழைக்கப்படுகின்றனர். உலகில் உள்ள ஆண் வடிவங்கள் யாவும் சிவ வடிவங்களாகும். பெண் வடிவங்கள் யாவும் சக்தி வடிவங்களாகும். சிவ சக்தியின் அருளினாலேயே உலகில் ஆண் பெண் சேர்க்கையும் உலக உற்பத்தியும் ஓயாது நடைபெறுகின்றன. உலகின் தாயாக இருப்பதால் பராசக்தி ஜகன்மாதா என்றழைக்கப்படுகிறாள். உலகத்தினைத் தன் வசத்தில் காப்பதால் சிவபெருமான் ஜகதீசன் என அழைக்கப்படுகிறான். அம்பிகையும் ஜகதீசுவரி என்று பெயர் பெறுகிறாள்.

சிதம்பரம் சிவகாமசுந்தரி

சிதம்பரம் நடராசர் ஆலயத்திலுள்ள காமகோட்டமான சிவகாமி அம்மன் சந்நிதியில் அமைந்துள்ள உருவம், தனிச்சிறப்புமிகுந்ததாகும். இது பிறதலங்களில் உள்ளவற்றிலிருந்து வேறுபட்டதாகும். அம்பிகை மேற்கரங்களில் அட்சயவடமும், கிளியும் கொண்டுள்ளாள் வலது கீழ்க்கரம் நீலோற்பல மலரை ஏந்த, இடது கரம் தொங்க விட்டவாறு உள்ளது. இவளுடைய கணவன் எல்லையற்ற ஆனந்தத்தைத் தரும் ஆனந்த நடனம் ஆடிக்கொண்டே இருக்கின்றான். அதற்கேற்ப இவளும் எல்லையற்ற இன்பத்தில் மூழ்கியுள்ளாள். சுகத்தில் திளைத்திருப்பதன் அடையாளமாகவே சுகத்தை (கிளியை) ஏந்தியுள்ளாள். என்றாலும் யோக கௌரியாக விளங்குவதைக் குறிக்க, அட்சய வடத்தையும் நீலோற்பமலரையும் தாங்குகின்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்தியின் மூவகை வடிவங்கள்

சிவாலயத்தில் அம்பிகை மூன்று நிலைகளில் விளங்குகின்றாள்.

முதல்நிலையில் அவள் யோகசக்தியாக விளங்குகிறாள். மூலத்தானத்திலுள்ள சிவலிங்கத்தின் பீடமாக விளங்கும் ஆவுடையார் சக்தியின் வடிவமாகும். இது சக்தியின் அருவுருவ நிலையாகும். இவளை யோக சக்தி என்பர். அதனால்தான் ஆவுடையார் இல்லாமல் சிவலிங்கத்தை வழிபடலாகாது என்கின்றனர்.

இரண்டாவது நிலையில் அவள் கருவறையில் சிவலிங்கத்திற்கு அருகில் அமர்ந்தவாறு உலாத் திருமேனியாகக் காட்சியளிக்கின்றாள். இவளுக்கு போகசக்தியம்மன் என்பது பெயர். இவளைக் கவுரி எனவும் அழைப்பர். இவள் எப்போதும் சிவபூசை செய்துகொண்டேயிருக்கிறாள். சிவாசாரியார் இவள் மூலமாகவே சிவபூசை செய்கின்றார். எனப் பூஜா பத்ததி நூல்கள் கூறுகின்றன. கருவறையில் சிவலிங்கத்தின் இடப்பக்கத்தில் அல்லது உள்மண்டபத்தில் இவளுடைய திருமேனி நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அம்பிகை வீதிகளில் எழுந்தருள்வதில்லை. கும்பாபிஷேகத்தன்று சிவலிங்கமூர்த்திக்கும் இவளுக்கும் திருமணம் கொண்டாடப்படும். அதைத்தொடர்ந்து இவள் ஆலயத்தை வலம் வந்து மூலத்தானத்திற்கு எழுந்தருளுவாள். அதன்பிறகு அடுத்த கும்பாபிஷேகத்திற்கே இவள் வெளியில் புறப்பட்டு வலம் வருவாள். இவளுக்கு உமாபட்டாரகி என்பதும் பெயராகும். பெண்குழந்தை இல்லாத பலர் இவளுடைய திருவுருவத்தை உலோகத்தால் செய்வித்துக் கோயிலில் எழுந்தருளவைத்துச் சிவலிங்கமூர்த்திக்கும் இவளுக்கும் திருமணம் செய்து வைத்துள்ளனர். திருமணச்சீராக காணியும் எழுதி வைத்துள்ளதைக் காண்கிறோம். கல்வெட்டுகள் இவளை உமாபட்டாரகி என்றும் ஆகம நூல்கள் கௌரி என்றும் அழைக்கின்றன.

இவளுக்குக் கௌரி என்பது பொதுப் பெயராக இருந்தாலும் அந்தந்த தலத்திற்குகேற்ப தனிப் பெயர்களும் வழங்குகின்றன. எடுத்துக்காட்டாகத் திருவாரூரில் மூலட்டான நாதருக்கு அருகிலுள்ள அம்பிகையின் பெயர் சோமகுலாம்பிகை என்பதாகும். சிலதலங்களில் இவளை மனோன்மணி என்றும் அழைக்கின்றனர். காஞ்சிபுரம் கச்சிநெறிக் காரைக் காட்டிலுள்ள இத்தகைய அம்பிகைக்குப் பிரமராம்பிகை என்பது பெயராகும்.

★போக சக்தியம்மன்
நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

மூன்றாவது நிலையில் சிவாலயத்தில் தனிச் சந்நிதியில் வீற்றிருக்கும் அம்பிகையான வீரசக்தியைக் காண்கிறோம். இவள் எழுந்தருளியுள்ள சந்நிதிக்கு இந்நாளில் அம்மன் சந்நிதி என்ற பெயர் வழங்குகின்றது. முன்னாளில் இது காமகோட்டம் என்று அழைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் அம்பிகை காமகோட்டமுடைய நாச்சியார், காமகோட்டமுடைய உமாபரமேசுவரியார் என்று பலவாறு அழைக்கப்பட்டாள். காலப்போக்கில் இவளுக்குச் சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டன. தேவாரத்துள் சிறப்பு அடை மொழியாக அமைந்த பெயர்களே இவளுக்குச் சூட்டப்பட்டுள்ளன.

இவ்வகையில் திருவண்ணாமலையில் உண்ணாமலை நாயகி, சிதம்பரத்தில் சிவகாமி, திருக்கடவூரில் அபிராமி, குடந்தையில் அபயாம்பிகை, அச்சிறுபாக்கத்தில் இளங்கிளை நாயகி காளஹஸ்தியில் ஞானப்பூங்கோதை எனப் பலவாறு அன்னை அழைக்கப்படுகின்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீபெரியநாயகி - தேவிகாபுரம்

வீரசக்தியான பார்வதி

இப்படித் தனிக்கோயிலில் வீற்றிருக்கும் அம்பிகையைத் தனிப்பெரும் சக்தியாகப் போற்றும் மரபும் உள்ளது. இவளுக்கு எதிரில், கொடிமரம், பலிபீடம், சிங்கம் அல்லது இடபத்தை அமைக்கின்றனர். சிவபெருமானுக்கு அணுக்கத்தொண்டராகச் சண்டீஸ்வரர் வீற்றிருப்பது போலவே இவளுக்கும் சண்டீசர் அல்லது சண்டீசுவரி வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. நவராத்திரி, ஆடிப்பூரம், பங்குனி உத்திரம், ஆடிப்பூரம், இவைகளையொட்டி இவளுக்குத் தனியாக பெருந்திருவிழா கொண்டாடப்படுகின்றது. அதற்கெனத் தனியாக யாகசாலைகளும் அமைக்கப்பட்டிருப்பதைப் பல தலங்களில் காணலாம்.

வீரசக்தியின் மூலவடிவத்தைப் போலவே உலாத்திருமேனியும் அமைந்துள்ளது. இதற்குப் பராசக்தி அம்மன் என்பது பெயராகும். சிலதலங்களில பராசக்திக்கெனச் "சபாமண்டபம்" அமைக்கப்பட்டுள்ளது. இதற்குச் சக்திசபை என்பது பெயராகும். பொதுவாகச் சிவாலயங்களில் சிவபெருமானுடன் மட்டுமே அம்பிகை வலம் வருவது வழக்கம் என்றாலும், சில தலங்களில் சக்திக்குத் தனியாகவிழா கொண்டாடப்படுகின்றது. இதில் அவள் பலவகையான வாகனங்களில் பவனி வருவதுடன் தேரிலும் உலாவருகிறாள். இவளுடன் சண்டீசுவரனும், விநாயகரும் உடன்வருகின்றனர். மதுரையில் மீனாட்சி தனியாகத் தங்கத்தேரில் பவனி வருவதைக் காண்கிறோம்.

பராசக்தி வெள்ளிக்கிழமைதோறும் ஆலயத்திற்குள் வலம்வந்து விழா காண்பதால் வெள்ளிக்கிழமைநாயகி என்றும் அழைக்கப்படுகின்றாள். இதனை வடமொழிப்படுத்திச் சுக்கிரவார அம்மன் என்று கூறுகின்றனர்.

மேலே குறித்த யோகசக்தி, போகசக்தி, வீர சக்தி, ஆகிய மூன்றுமே பராசக்தியின் திரு வடிவங்களேயாகும். இவற்றில் முதலில் சொல்லப்பட்டது சிவனோடு ஒன்றி இருக்கும் நிலையாகும். அப்போது இவளுடைய உருவம் வெளிப்படுவதில்லை. இரண்டாம் நிலையில் சிவனோடு பிரிவின்றியும் அதே சமயம் தனக்கென்று ஓர் உருவம் கொண்டவளாகவும் விளங்குகின்றாள். மூன்றாம் நிலையில் சிவபெருமானிடமிருந்து விலகித் தனித்தன்மையுடன் வீரசக்தியாக அன்பர்களைக்காக்கத் தனிக்கோயில் கொள்ளுகின்றாள். இது சக்தி சிவபெருமானிடம் இருந்து தோன்றி படிப்படியாக உலகினைக் காக்க மேற்கொள்ளும் திருவுருவ நிலையாகும்.

சக்தி சபை

சிவாலயங்களில் அதன் இதயத்தானமாக விளங்குவது சபாமண்டபமாகும். இதயம்ஓயாது இயங்கிக் கொண்டிருப்பதை உணர்த்த இந்த இடத்தில் பொதுவாக ஓயாது நடனமாடும். நடராசப் பெருமானைப் அமைக்கின்றனர். சில தலங்களில் அத்தலத்திற்கே உரிய சிறப்பான மூர்த்தியை அமைத்துள்ளனர். இப்படி அம்பிகைக்குத் தனியே சபாமண்டபம் அமைக்கும் வழக்கமில்லை என்றாலும் சிலதலங்களில் சபை அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். காஞ்சிபுரம் காமாட்சியம்மன் ஆலயத்திலும், திருக்கடையூர் அபிராமி அம்மன் ஆலயத்திலும் இத்தகைய சக்தி சபைகளைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோமாஸ்கந்தர் வழிபாட்டில் மூவகை சக்திகள்

சிவாலயங்களில் அமைந்துள்ள உலாத் திருமேனிகளில் அதி உன்னதமானது சோமாஸ்கந்தர் வடிவமாகும். இது கருவறையில் விளங்கும் மூலமூர்த்திக்கு இணையானது. இதையொட்டியே தியாகராஜத் தலங்களில் சோமாஸ்கந்தமூர்த்தியைக் கருவறைக்கு இணையாக அமையும் கோயிலில் அமைத்துப் பூசிக்கின்றனர்.

சோமாஸ்கந்த மூர்த்தியில் மூன்றுதேவியர் விளங்குகின்றனர். முதல் நிலையில் உள்ளவளுக்கு ஞானசக்தி என்பது பெயர். அவள் கண்களுக்குப் புலனாகாத சக்தியாவாள். இவள் சிவபெருமானோடு ஒன்றிக் கலந்துள்ளாள். இதனைக் காட்டவே சிவ பெருமான் தோடொன்றை அணிந்தவராகக் காட்டப் படுகின்றார்.இவள் சிவனைப் பிரியாது அவருள்ளே உறையும் சக்தியாவாள்

ஞானத்தின் காரணமாக உயிர்களுக்கு இச்சை பிறக்கின்றது. இச்சை எனப்படும் விருப்பம் ஒரு சக்தியின் வடிவத்தைத் தாங்கி அவருடைய அருகில் வீற்றிருக்கின்றது. இவள் சிவபெருமானை எப்போதும் பிரிவதே இல்லை. அதனால் பிரியா விடையாள் என்றும் அழைக்கப்படுகின்றாள். இச்சையும், ஞானமும் சேர்ந்து வெளிப்படுவது கிரியை யாகும். கிரியை எண்ணத்திலிருந்தும். எண்ணுபவனிடமிருந்தும் செயலாக்கம்பெறுகின்றது. இந்தச் செயல் ஒரு சக்தியாக உருப்பெற்று செயலைச் செய்து முடிக்கின்றது. இப்படி உருப்பெற்றவன் தனித்துநின்று செயல்படுகின்றான். இதை உணர்த்துவதற்காகக் கிரியாசக்தியைத் தனி அம்மன் என்ற பெயரில் வைத்துள்ளனர்.

கிரியையின் (செயலின்) மூலம் ஒரு பலன் பெறப்படுகின்றது. இந்தப்பலன் சோமாஸ்கந்தர் வடிவில் குழந்தை முருகனாகக் காட்டப்படுகிறது. இது ஆனந்தத்தின் வடிவம் என்பதால் கூத்தாடும் நிலையில் உள்ளது.

கருவறையில் உள்ள மூலமூர்த்திக்கு இணையாக அம்பிகை யோக, போக, வீரம் ஆகிய மூவகை வடிவம் தாங்குகின்றாள். அதைப்போன்றே உலாமூர்த்தியான சிவனுக்கு ஞானம், இச்சை, கிரியை என்ற பெயர்களுடன் தேவியாக விளங்குகின்றாள். இவளுக்குப் பெயர்கள்தான் வெவ்வேறே தவிர கருத்து ஒன்றேயாகும். இங்கு ஞானசக்தி என்பது இறைவனிடமிருந்து பிரியாத யோகநிலை, இச்சாசக்தி என்பது இறைவனிடமிருந்து வெளிப்பட்டு அவன் அருகிலேயே அமர்ந்து அருள்பாலிக்கும்போகநிலை. கிரியா (செயல்) சக்தியானது இறைவனிடமிருந்து தனித்து வந்து செயலாற்றும் வீரநிலை என்று கொள்ளப்படுகின்றது.

இந்த மூன்று நிலைகளின் மூலமாக வெளிப்படும் பயனான ஆனந்தத்தை முருகன் மூலம் தரிசிக்கச் செய்வதால் "சோமாஸ்கந்தர் வடிவம்" சிவவழிபாட்டில் தனியிடம் பெறுகின்றது.

சோமாஸ்கந்தர்

விருத்தாசலத்தில் (திருமுதுகுன்றம்) சோமாஸ்கந்தருக்கு அருகில் (இரண்டு தனி அம்பிகைகளும் பக்கத்தில் அமர்ந்துள்ள ஒரு அம்பிகையும் ஆக) மூன்று அம்பிகைகள் உள்ளனர். காசியிலும் வீசம் பெரியதான விருத்தாசலத்தில் இறக்கும் உயிர்களைத் தன் மடிமீது சிவபெருமான் தாங்கிகொள்கிறான். அவ்வுயிரின் வலது காதில் பஞ்சாட்சரத்தை உபதேசித்து அவற்றிற்கு ஞான உபதேசம் செய்து மோட்சமளிக்கின்றார். சக்தி அவ்வுயிர்களுக்குத் தன் முந்தானையால் விசிறி ஞானத்தைத் தெளிவிக் கும் ஞானவல்லியாக விளங்குகிறாள். இதை உணர்த்தவே ஞானசக்தி பெருமானின் உடலிலிருந்து வெளிப்பட்டுத் தனிச் சக்தியாக இத்தலத்தில் காட்சியளிக்கின்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காமக்கோட்டம்

காமாட்சியம்பிகை - காஞ்சிபுரம்

சிவாலயங்களில் உமாதேவியார் தனித்து வீற்றிருக்கும் ஆலயத்திற்குக் காமகோட்டம் என்பது பெயராகும். இது இந்நாளில் அம்மன் சந்நிதி என்று அழைக்கப்படுகின்றது.

ஆதிநாளில் காஞ்சிபுரத்தில் சிவபூசை செய்த அம்பிகை அதன் ஒரு அங்கமாக முப்பத் தியிரண்டு அறங்களையும் செய்ய விரும்பினாள். சிவபெருமானிடம் சென்று தனது விருப்பத்தைத் தெரிவித்தாள். அவர், அவளிடம் இரண்டு நாழி நெல்லைக் கொடுத்து நீ விரும்பியவாறு அறம் செய்க என்றார். அவர் கொடுத்த நெல்லை உமா தேவி தன்ஆற்றலால் அளவற்றதாகப் பெருக்கினாள்

காஞ்சிபுரத்தில் உலகாணி தீர்த்தம் என்ற குளத்தின் கரையில் ஓர் அறச்சாலையைத் தோற்று வித்தாள். அங்கு வீற்றிருந்து முப்பத்திரெண்டு அறங் களையும் சிறப்புடன் செய்தாள். அதனால் உலக உயிர்கள் இன்புற்றன. உலக உயிர்களின் தேவைகள் யாவும் அந்த இடத்தில் நிறைவேற்றப்பட்டன.

காமம் என்பதற்கு விருப்பம் என்பது பொருளாகும். விருப்பங்கள் யாவற்றையும் நிறை வேற்றும் ஆலயமாக விளங்கியதால் அது காமக் கோட்டம் என்று பெயர் பெற்றது. அதில் வீற்றி ருக்கும் அம்பிகை காம்யயக்ஷி எனப்பட்டாள். (காம்யம்-விருப்பம் யக்ஷி - தருபவள் காம்யயக்ஷி விரும்பியதை வேண்டியவாறே தருபவள் காம்ய யக்ஷி என்பதே நாளடைவில் காமாட்சி என்றாகி விட்டது என்பர்.

இதனை உலக அறவிக்கோட்டம் எனவும் அழைத்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவ னிடம் உன் மனைவி ஓயாது அறம் செய்து நிற்கும் காமகோட்டம் இருக்க நீர்போய் ஊர்ஊராகப் பிச்சை ஏற்பது ஏன்? என்று வினவுவதும் காண்க.

அப்பர்சுவாமிகளும் அம்பிகையை காமக் கோட்டி என்றே அழைக்கின்றார். இதனை அடி யொட்டித் தென்னகமெங்கும் அமைந்த சிவாலயங் களில் வீற்றிருக்கும் அம்பிகை ஆலயம் காமகோட்டம் எனப்பெற்றது. கல்வெட்டுக்கள் அம்பிகையின் ஆலயத்தைக் காமக்கோட்டம் என்றே அழைக்கின் றன. இதில் வீற்றிருக்கும் அம்பிகை காமக்கோட்டத்தி, காமக்கோட்டத்துப் பரமநாச்சியார், காமக்கோட்டத்து பெரியநாச்சியார் என்று பலவாறு அழைக்கப்பட்டாள்.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் வீற்றி ருக்கும் அம்பிகைக்குச் சிவகாமியம்மன் என்பது பெயராகும். இதனால் இக்கோயில் காமகோட்டம் எனப்பட்டது. காஞ்சிபுரம், திருநெல்வேலி திருவை யாறு முதலிய தலங்களில் உள்ள அம்பிகை ஆலயங் கள் கல்வெட்டுகளில் காமகோட்டம் என்றே குறிக் கப்படுகின்றன.

இலக்கியங்கள் காமகோட்டத்தில் வீற்றி ருக்கும் அம்பிகையைக் காமகோட்டத்தி, காமகோடி காமக்கொடி என்று பலவாறு அழைக்கின்றன. திரு வையாற்றில் உள்ள அம்பிகை ஆலயம் கல்வெட் டுக்களில் காமகோட்டம் என்ற அழைக்கப்படு கின்றது. அங்கு வீற்றிருந்து தேவி ஓயாது அறம் வளர்ப்பதால் அறம்வளர்த்த நாயகி என்றும் அழைக் கப்படுகின்றாள். இதனை வடமொழியில் தர்மசம் வர்த்தனி என்று அழைக்கின்றனர். கல்வெட்டுக் களில் இவளுக்கு உலகுடைய நாச்சியார் ஆலுடைய நாச்சியார் என்ற பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

* நல்லூர் பெருமணத்திலுள்ள (ஆச்சாள் புரம்) சிவலோகத் தியாகராஜர் ஆலயத்திலுள்ள வெண்ணீற்று உமையம்மை கல்வெட்டில் காமகோட்டமுடைய நாச்சியார் என்றும் பெரிய நாச்சியார் என்றும் குறிக்கப்படுகின்றாள்.

* திருக்காட்டுப் பள்ளியில் உள்ள கல்வெட்டில் அம்பிகை காமகோட்டத்துப் பெரிய நாச்சியார் "அழகமர்மங்கை" என்று குறிக்கப்படுகின்றாள். திருபனந்தாள், திருவீழிமிழலை வாட்போக்கி திருப்பத்தூர் முதலான அனேக சிவத் தலங்களிலுள்ள கல்வெட்டுகள் அம்பிகை சந்நிதியைக் காமகோட்டம் என்றே குறிக்கின்றன.

* திருமீயச்சூர் என்ற பாடல்பெற்ற தலத்திலுள்ள மேகநாதஸ்வாமி ஆலயத்தில் அமைந்துள்ள கல்வெட்டுக்களில் அம்பிகை சந்நிதி காமகோட்டம் என்று அழைக்கப்பட்டதுடன் அம்பிகை சிவகாம சுந்தரி நாச்சியார் என்றும் குறிக்கப் பட்டுள்ளார்.

* தஞ்சைமாவட்டம் நன்னிலம் வட்டத்திலுள்ள நரிமணம் அகத்தீசுவரர் ஆலயத்திலுள்ள கல்வெட்டின் மூலம் இக்கோயிலில் மருதந் துறையான் என்பவன் அம்பிகையை எழுந் தருள வைத்து காமகோட்டமுடைய நாச்சியார் என்று பெயரிட்டதையும் அவளுடைய பூசைக்காக ஊரார் கள் மூன்று மாநிலம் கொடுத்துள்ளதையும் அறிகிறோம்.

காமரசவல்லி

காமம் என்பதற்கு விருப்பம் என்பது பொருள். உயிர்களுக்கு ஒரு பொருளின் மீது ஏற்படும் விருப்பமே காமம் எனப்படும். அப்படி விருப்பம் உண்டாகாமல் போய்விட்டால் உலகிலுள்ள அனைவரும் யோகநெறி நின்று வீடுபேறு பெற்றுவிடுவர். உலகம் நடைபெறாது. அதனால் உயிர்களுக்கு ஒரு பொருளின் மீது விருப்பத்தை உண்டாக்கி அதை அடையச் செய்பவளாக உமாதேவிவிளங்குகின்றாள். காமத்தை உண்டு பண்ணுபவளாக இருப்பதால் அம்பிகைக்குக் காமேசுவரி என்பதும் பெயராயிற்று. இதனையொட்டிச் சிவபெருமானுக்குக் காமேசுவரன் என்பதும் பெயராயிற்று. சிவபார்வதியர் காமேசுவர காமேசுவரியாகச் சிந்தாமணிக்கிரகத்தில் வீற்றிருக்கின்றனர் என்று சாக்த தந்திர நூல்கள் குறிக்கின்றன. காமேசுவரிக்கு "லலிதா" என்பதும் பெயராகும்.

சிவபெருமானுக்குக் கற்பகத் தரு என்பது பெயர். அன்பர்கள் வேண்டியதை அவர்களின் விருப்பம் நிறைவேறுமாறு அளிப்பதால் அவருக்கு அப் பெயர் உண்டாயிற்று. சிவபெருமான் எட்டு தோள்களை உடையவராக இருப்பதுபோலவே கற்பகமரம் எட்டு கிளைகளை உடையதாக இருக்கின்றது.

தேவலோகத்திலுள்ள கற்பகமரத்தைச் சுற்றிக் காமவல்லி என்ற கொடி படர்ந்துள்ளது. அதைப்போலவே சிவபெருமான் என்ற கற்பக மரத்தைத் தழுவிக் கொண்டு காமவல்லியாகப் பார்வதி விளங்குகின்றாள். இதனால்அவளுக்குக் காமவல்லி, கற்பகவல்லி என்பன பெயர்களாயின.

சென்னை மயிலாப்பூரிலுள்ள அம்பிகைக்கு கற்பகவல்லி என்றும், வடாற்காடு மாவட்டம் வழுவூரிலுள்ள அம்பிகைக்குக் காமரசவல்லி என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

சிவபெருமான் மீது எல்லையற்ற காதலுடன் விளங்குவதால் பார்வதிக்குச் சிவகாமி என்பது பெயராயிற்று. காமிக்கு ஏற்ற கணவனாக விளங்குவதால் சிவபெருமான் காமேசுவரன் என்று அழைக்கப்பட்டார். அவருடைய ஆலயம் காமீசுவரம் என்று அழைக்கப்பட்டது.

பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள வில்லிய நல்லூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு காமீசுவரர் என்பது பெயராகும். செங்கைமாவட்டம் மதுராந்தகத்தை அடுத்துள்ள மடவிளாகத்திலுள்ள இறைவனும் காமீசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

சென்னை திருவல்லிக்கேணியில் காமகலா தேவி உடனாய காமேசுவரார் ஆலயம் சிறப்புடன் திகழ்கின்றது. மன்மதன் பூசித்த லிங்கங்களுக்கும் காமேசர் என்பது பெயராகும். அவருடையதேவி காமேசுவரி என்று அழைக்கப்படுகின்றாள். (காமன் - மன்மதன்).

காமரசவல்லி என்ற ஊர் கொள்ளிடத்திற்கு அருகில் உள்ளது. இங்கு பெரிய சிவாலயம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருந்தவச்செல்வி

தவம் ஒன்றே உலகில் மேன்மை படைத்த தாகும். உள்ளம் ஒடுங்கியிருந்து தவம் செய்வதா லேயே இறைவனைத் தரிசித்து அவனுடைய அருளைப் பெறமுடிகின்றது. அதனால் சமயச் சான் றோர்கள் தவம் செய்வதைத் தலையானதாகக் கருது கின்றனர். எல்லா உயிர்களுக்கும் தலைவியாகவும் அன்னையாகவும் இருப்பதனால் அம்பிகை தானே உயர்ந்த தவத்தைச் செய்து எல்லோருக்கும் வழி காட்டியாக விளங்குகின்றாள். இதனால் அவளுக்கு அருந்தவச்செல்வி அருந்தவப் பெண்பிள்ளை, தவத்தின் தலைவி என்ற பலபெயர்கள் வழங்கு கின்றன.

பார்வதிதேவி பலசமயம் பலருக்கும் மகளாகப் பிறந்து அருள் புரிந்தாள். அப்படிப்பிறந்த ஒவ்வொரு சமயத்திலும் அவள் சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தாள்.

தென் மாவட்டங்களிலுள்ள பெருஞ்சிவா லயங்களான சங்கரன்கோயில், திருநெல்வேலி முதலிய தலங்களில் அம்பிகை தவம் மேற்கொள்ளச் செல்வதும் பிறகு திருமணம் நடப்பதும் பெருந் திருவிழாவாகவே கொண்டாடப்படுகின்றன. குறிப்பாக சங்கரன் கோயிலில் கோமதியம்மன் தவ மிருக்கும் விழா ஆடிமாதத்தில் சிறப்புடன் கொண்டா டப்படுகின்றது. இதற்கு "ஆடித்தபசு" விழா என்று பெயர். ஏராளமான மக்கள் இதில் கலந்து கொள் கின்றனர்.

திருவாரூர் முதலிய தலங்களில் அம்பிகை தவக்கோலத்திலேயே எழுந்தருளியுள்ளாள்.

ஒரு சமயம் அவள் இமவானின் மகளாகப் பிறந்தபோது கடும் தவம் செய்தாள். அந்தத் தவத்தால் எழுந்த தீயின் கடுமையைத் தாளாத தேவர்கள் சிவ பெருமானிடம் முறையிட்டனர். அவர் அவளிடம் வந்து, "தவத்தை நிறுத்து போதும்" என்ற பொருள் பட "உமா" என்றார். அதுவே அவளுக்குப் பெயராயிற்று. அன்றுமுதல் அவள் "உமாதேவி" என்று அழைக்கப்பட்டாள். அப்பெயராலேயே தமிழ் வேதத்தில் பலநூறு இடங்களில் குறிக்கப்படுகிறாள்.

திருமுறைகளில் அம்பிகை தவம் செய்தது தனிச்சிறப்புடன் குறிக்கப்படுகின்றது. பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் பார்வதிதேவி மலையரையன் பொற்பாவையாகப் பிறந்து உயர்ந்த தவத் தைச் செய்து, சிவபெருமானை அர்ச்சிக்கின்றாள் என்பதை

அடிசேர்வன் என்ன எம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமகனார் மகளாகித்
திடமார் தவம் செய்து தேவர் அறியப்
படியாற அர்ச்சித்துப் பத்தி செய்தாளே

என்றும்,

"அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை"

என்றும் குறிக்கின்றது.

❑ கீழைப்பழுவூர் என்னும் தலத்தில் வீற்றி ருக்கும் அம்பிகைக்கு அருந்தவநாயகி என்பது பெயர். இங்கு ஆலமரத்தடியில் அம்பிகை தவம் செய்து பேறுபெற்றாள். அதனால் இத்தலத்திற்கு யோகவனம் என்பது பெயராயிற்று. இவ்வூர்த் தலபுராணம் "யோகவனமான்மியம்" என்று பெயர் பெற்றுள்ளது.

தேவதானத்து தவம் பெற்ற நாயகி

இராஜபாளயத்திலிருந்து குற்றாலம் செல்லும் சாலையில் தேவதானம் என்ற தலம் உள்ளது. இதற்கு மேற்கில் 2 கீ.மீ தொலைவில் பெரிய சிவாலயம் வயல் வெளிக்கு நடுவே அமைந் துள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமா னுக்கு நச்சாடை தவிர்த்தநாதர் என்பது பெயராகும். அம்பிகை தவம் பெற்ற நாயகி என்று அழைக் கப்படுகின்றாள். இத்தலத்தில் தருமாசலம் என்னும் மலை உள்ளது. அதனையொட்டி கோரையாறு ஓடு கிறது. இத்தலத்தில் இதன் வடக்கில் உமாதேவியும் கிழக்கில் கங்கையும் இருந்து தவம் செய்ததாகக் கூறப்படுகிறது. இதனால் இதற்குச் அம்பிகாபுரம், மந்தாகினிபுரம் என்ற பெயர்களைப் புராணங்கள் குறிக்கின்றன. அம்பிகை தவம் செய்து இறைவனின் இடப்பாகத்தைப் பெற்றதால் அவளுக்குத் தவம் பெற்ற நாயகி என்பது பெயராயிற்று.

மாசிமாதத்தில் நடைபெறும் பெருந்திரு விழாவின் இறுதிநாளில் அம்பிகை தவம் செய்தல் அவளுக்குச் சிவபெருமான் காட்சியளித்து அருள் பாலித்தல் முதலியன ஐதீக விழாவாகக் கொண்டா டப்படுகின்றது. இத்தலத்திற்கு அருகிலுள்ளசேற்றூர் (சேறை) தலத்திற்கும் அம்பிகாபுரம் என்பது பெயராகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவிநாசி அருந்தவச்செல்வி

பாதிரி மரத்தின் அடியில் அம்பிகை வீற்றிருந்து சிவபெருமானை நோக்கித் தவம் செய்ததைப் பல புராணங்கள் குறிக்கின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை திருப்பாதிரிப்புலியூரும், அவிநாசியுமாகும். அவிநாசியில் அவிநாசியப்பர் கோயிலுக்கு எதிரேயுள்ள திருக்குளத்திற்கு வடக்கில் பாதிரி மரத்தின் கீழ் தவம் செய்யும் பார்வதி தேவியைக் காண்கிறோம். இவள் தவநாயகி என்று அழைக்கப் படுகின்றாள். இவளை வணங்கியபிறகே அவிநாசியப்பரை வழிபடவேண்டுமென்று பெரியவர்கள் கூறுகின்றனர். (பாதரிமரம் பின்னாளில் உண்டான தென்றும் ஆதிநாளில் இங்கு மாமரத்தடியிலேயே அம்பிகை தவம் செய்தாளென்றும் சிலர் கூறுகின்றனர்.)

கரிவலம்வந்தநல்லூர் நாயகி

நெல்லை மாவட்டதிலுள்ள கரிவலம் வந்தநல்லூர் பாண்டிநாட்டு பஞ்சபூதத்தலங்களில் ஒன்றாகும். இங்கு அம்பிகை தவம் செய்தாள். அவளுக்குச் சிவபெருமான் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டுக் காட்சியளித்தார். அக்காட்சி இங்குள்ள பால்வண்ணநாதர் ஆலயத்தில் முகலிங்கர் என்ற பெயரில் எழுந்தருளிவைக்கப் பட்டுள்ளது. ஆவணி மாதம் பூராட நட்சத்திரத்தில் அம்பிகை தவம் செய்வதும் அவளுக்குப் பெருமான் முகலிங்கராகக் காட்சியளிப்பதும் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

❑ அம்பிகை தவம் செய்வதைத் திருஞானசம்பந்தர் திருவேகம்பப்பதிகத்தில் முதிர மங்கை தவம் செய்த காலமே, முன்பு மங்கை தவம் செய்த காலமே என்று குறிக்கின்றார்.

பார்வதீச்சரங்கள்

உலகில் மிகப்பெரிய மலையாகத் திகழ்வது இமயமலையாகிய இமயபர்வதமாகும். இந்த மலையின் அரசனுக்கு இமவான் பர்வதராஜன், முதலியன பெயர்களாகும். பர்வதராஜனுக்கு மகளாகத் தோன்றியதால் உமாதேவிக்குப் "பார்வதி" என்பது பெயராயிற்று. இந்தப் பெயராலையே அவள் அதிக அளவில் அழைக்கப்படுகின்றாள்.

ⓘ ஒரு சமயம் பார்வதி கடுமையான தவத்தை மேற்கொண்டு சிவபெருமானைப் பூசித்தாள். அவளுக்கு அருள்புரிய அவளுக்கு முன்னையே சிவபெருமான், சிவலிங்கவடிவில் காட்சியளித்தார் அந்த லிங்கத்திற்கு பார்வதீசர் என்ற பெயர் வழங்குவதாயிற்று. இதனையொட்டிப் பல சிவாலயங்களில் அம்பிகைக்கு நேர் எதிரில் சிவாலயம் அமைக்கும் வழக்கம் உண்டாயிற்று இந்தலிங்கத்திற்குப் பார்வதீசர் என்பது பெயராகும்.

ⓘ திருவாரூரில் கமலாம்பிகை சந்நிதிக்கு எதிரில் பார்வதீச்சரம் என்ற சிவாலயமும் இதனையொட்டி முத்திக்கிணறு என்ற தீர்த்தமும் உள்ளன.

ⓘ திருக்கழுக்குன்றத்தில் திரிபுரசுந்தரி அம்பிகைக்கு நேர்எதிரில் பார்வதீசர் எழுந்தருளியிருக்கின்றார். இவரை ப்ரத்யட்ச வேதகிரீசுவரர் என்று அழைக்கின்றனர்.

ⓘ திருவண்ணாமலையில் உண்ணாமுலை நாயகிக்கு நேர் எதிரில் பார்வதீசர் எழுந்தருளியிருப்பதைக் காண்கிறோம். இவருக்கு காளத்தீசுவரர் என்பது பெயராகும். இது போன்று பல தலங்களில் அம்பிகைக்கு நேர் எதிரில் சிவாலயங்கள் அல்லது சிவ சந்நிதிகள் அமைந்திருக்கக் காண்கிறோம்.

ⓘ மேலும் பார்வதிதேவி அமைத்து வழிபட்ட சிவலிங்கங்கள் "பார்வதீசர்" என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. அந்த சிவலிங்கங்களுக்குக் கட்டப்பட்ட சிவாலயங்கள் பார்வதீச்சரங்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

ⓘ நனிபள்ளி என்னும் திருமுறைத்தலத்தில் வீற்றிருக்கும் அம்பிகைக்குப் "பர்வத புத்ரீ" என்பது பெயர்.

ⓘ திருமுறைத்தலமான திருச்தெளிச்சேரியில் பார்வதிதேவி தவம்புரிந்து சிவபெருமானை மணந்து கொண்டாள். இதனால் சுவாமிக்குப் பார்வதீசுவரர் என்பது பெயராயிற்று. அம்பிகை தவம் இருந்ததால் "சுயம்வரதபஸ்வினி" என்று அழைக்கப்படுகிறாள்.

ⓘ பெண்ணாடகத்தில் பார்வதி தவம் செய்ததால் அதற்குப் பார்வதிபுரம் என்பது பெயராயிற்று. இங்குள்ள ஒரு தீர்த்தத்திற்குப் பார்வதி தீர்த்தம் என்பது பெயராகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்னபூரணி

அன்னபூரணி - காசி

உயிர்களுக்குப் பெரும் பிணியாக இருப்பது பசியேயாகும். பசி என்ற ஒன்று இல்லையேல் உலகிலுள்ள பாதித் துன்பங்களும் தொல்லைகளும் தொலைந்துவிடும். உலக உயிர்கள்யாவற்றிற்கும் பசியைப்போக்கி உணவளிப்பவளாக உமாதேவி விளங்குகின்றாள். பசியெனும் கொடுமையை "அன்னம்" என்னும் மருந்தால் நீக்கி உயிர்களுக்கு நிறைவை அளிப்பதால் அவள் அன்னபூரணி என்று அழைக்கப்படுகின்றாள்.

காசிநகரில் அன்னபூரணியாக உமாதேவி வீற்றிருக்கின்றாள். காசிவிசுவநாதர் ஆலயத்திற்கு அருகில் அன்னபூரணியின் ஆலயம் உள்ளது. இங்குக் கருவறையில் யோகினியும், போகினியும் இருபுறமும் வீற்றிருக்க அன்னபூரணி கொலு வீற்றிருக்கின்றாள்.

மேலும் இங்குத் தங்கத்தால் செய்யப்பட்டு வைர, வைடூர்ய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட அன்ன பூரணியின் சிலையும் வெள்ளியால் செய்யப்பட்டு ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற யோகினி, போகினி சிலைகளும் உள்ளன. அன்னபூரணியிடம் பிச்சை ஏற்கும் நிலையில் வெள்ளியால் செய்யப்பட்ட சிவபெருமானின் திருவுருவம் உள்ளது. இந்தத் திருஉருவங்கள் தீபாவளியை ஒட்டி அன்பர்களின் பார்வைக்கு வைக்கப்பெற்றுச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. காசிநகரில் யாரும் பட்டினியாக இருப்பதில்லை. ஏதோ ஓர் விதத்தில் அன்னபூரணி அவர்களுக்கு உணவளித்து விடுகின்றாள்.

காசிநகருக்குச் சென்று அன்னபூரணியைத் தரிசிப்பவர்கள் அன்னபூரணியின் சிறு சிறு உலோகச் சிலைகளை வாங்கிவந்து அன்பர்களுக்கு அளிப்பர். அரிசிப்பானையில் அன்னபூரணியின் திருவுருவத்தினை இட்டுவைக்கும் வழக்கம் உள்ளது.

அன்னபூரணியின் யந்திரம் பஞ்சாட்சரத்தால் ஆக்கப்பட்டுள்ளது. இதனை வழிபடுபவர்களுக்கு அன்னபூரணியின் அருள் பூரணமாகக் கிடைக்கும்.

தென்னகத்தில் அதிக அளவில் இல்லையென்றாலும் அன்னபூரணியின் திருவுருவம் பல சிவாலயங்களில் அமைந்துள்ளதை காண்கிறோம்.

- திருமுறைத் தலங்களில் ஒன்றான திருச்சோற்றுத்துறையில் எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு அன்ன பூரணி என்பது பெயராகும். இந்த இடத்தில் ஒரு காலத்தில் வயல்களில் நெல்லுக்குப் பதிலாக அரிசியாகவே விளைந்ததாம். ஒரு வயலில் சோறே விளைந்ததாம். அந்த வயலுக்கு அன்னம் படைத்த வயல் என்றபெயர் வழங்கி வந்தது.
- பந்தணைநல்லூர் சிவாலயத்தில் அன்னபூரணிக்கு தனி சந்நிதி உள்ளது.
- திருவீழிமிழலையில் கார்த்தியாயன முனிவருக்கும் அவர் மனைவிக்கும் பார்வதி அன்னபூரணியாகக் காட்சியளித்ததாகத் தலபுராணம் கூறுகின்றது. இங்கு மூலத்தானத்தில் சிவலிங்கத்திற்கு அருகில் அன்னபூரணியின் வடிவம் உள்ளது.
- பார்வதிதேவிக்கு அறம் வளர்த்த நாயகி, அன்ன பூரணி என்ற பெயர்கள் இருப்பது போலவே சிலகிராம தேவதைகளுக்கும் இப்பெயர் வழங்குகின்றது. எடுத்துக்காட்டாக நெல்லை மாவட்டம் இராசவல்லி புரத்திலுள்ள கிராம தேவதைக்கு அன்ன பூரணி என்றும் கோவை மாவட்டத்தில் சில ஊர்களிலுள்ள கிராம தேவதைகளுக்கு அறம்வளர்த்தம்மன் என்ற பெயரும் இருக்கக் காண்கிறோம்.
- தென்னகத்திலிருந்து காசிக்குச் சென்று அங்கிருந்து பாணலிங்கம் கொண்டு வந்து அமைக்கப்பட்ட காசி விசுவநாத கோயில்களில் அன்னபூரணிக்குச் தனிச் சிற்றாலயம் அமைக்கப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

❑ காசிநகரில் வீற்றிருக்கும் அன்னபூரணி இரண்டு கரங்களுடன் திகழ்கின்றாள் என்றாலும் தென்னகத்தில் அமைக்கப்பட்டுள்ள அனேக அன்னபூரணி வடிவங்கள் நான்கு கரங்களுடனேயே திகழ்கின்றன. மேற்கரங்களில் பாசம் அங்குசம் விளங்கக் கீழ்க்கரங்களில் அன்னபாத்திரமும் கரண்டியும் விளங்குகின்றன.

❑ காசியிலுள்ள அன்னபூரணி ஆலயத்திற்குத் "துளசி மானச மந்திர்" என்பதும் பெயராகும்.

❑ அம்பிகைக்கு அறம் வளர்த்தாள் என்ற பெயர் வழங்குவதை ஒட்டிச் சிவபெருமானுக்கும் அறம் வளர்த்தீசர் என்பது பெயராயிற்று. காஞ்சிபுரத்தில் இப்பெயரில் ஓர் சிவாலயம் உள்ளது.

❑ சிவாலயங்களில் நெல்லைச் சேமித்து வைக்கும் இடங்களுக்கு அன்னபூரணி வாசம் என்பது பெயர்.

❑ கன்னட நாட்டிலுள்ள ஹொரநாட்டில் அன்னபூரணி தேவிக்குத் தனி ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அகத்தியர் காசிநகரில் அன்னபூரணியை வழிபட்டதைப் போலவே இங்கும் வழிபட்டுள்ளார்.

புவனாபதி நாச்சியார்

சிவனிடமிருந்து வெளிப்பட்ட ஆதிபராசக்தி அன்னபூரணியாக இருந்து உலக உயிர்களைக் காப்பது போலவே புவனையாக இருந்து உலக உயிர்களுக்கு அறிவும் ஆற்றலும் தந்து அவற்றைச் செயல்பட வைக்கின்றாள். இவள் புவனங்களின் தலைவியாக இருத்தலின் "புவனை" என்றும் "புவனாபதி" என்றும் அழைக்கப்படுகின்றாள். புவனையின் காதலானாக இருப்பதால் சிவபெருமான் புவனேசுவரன் என்றும் அழைக்கப்படுகின்றார். இதனையொட்டி அம்பிகைக்குப் புவனேஸ்வரி என்பதும் பெயராயிற்று.

பத்தாம் திருமுறையான திருமந்திரத்தில் புவனேசுவரி வழிபாட்டைப்பற்றிய செய்திகள் 22 பாடல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இதன்படி அவள் சிவந்த திருமேனியை உடையவளாகவும், இரத்தினங்களை அணிந்தவளாகவும் செம்பட்டாடைகளைத் தரித்தவளாகவும் அங்குச, பாசத்துடன் அபய வரதமுத்திரை கொண்டவளாகவும் தியானிக்கப் படுகின்றாள். தலையில் சடாமகுடமும், கொன்றை மாலையும் சந்திரப்பிறையும் திகழ்கின்றன. சுகாசனத்தில் வீற்றிருக்கின்றாள்.

• புவனேஸ்வரி - திருப்பரங்குன்றம்

❑ சோழர்கள் காலத்தில் சிவாலயங்களில் மேற்குப் பிராகாரத்தில் லட்சுமி, சரஸ்வதியுடன் புவனாபதி நாச்சியாரையும் எழுந்தருளிவைக்கும் வழக்கம் இருந்தது. காலப்போக்கில் இவளுடைய பெருமையும் அருமையும் தெரியாதவர்கள் இவளை யோகசக்தி, அன்னபூரணி இராஜராஜேஸ்வரி என்ற பெயர்களை இட்டு அழைக்கின்றனர்.

❑ திருத்துறைப்பூண்டி வட்டம் வடகாடு கோயிலூரில் மந்திரபுரீசுவரர் ஆலயம் உள்ளது. இத்தலம் திருவுசாத்தானம் என்ற பாடல்பெற்ற பதியாகும். இங்கு மேற்குப் பிரகாரத்தில் எழுந்தருளி வைக்கப்பட்டிருக்கும் புவனாபதி நாச்சியாருக்கு இவ்வூர்த் தேவரடியார்களான பதினான்கு பெண்கள் தீபமாலை ஏற்ற நிபந்தங்கள் அளித்ததை இவ்வூர்க் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இந்நாளில் இத்திருவுருவம் அன்னபூரணி என்று அழைக்கப்படுகின்றது.

❑ இவளுடைய யந்திரம் நினைத்ததை நடத்தி வைக்கும் காரியசித்தி யந்திரமாதலின் இவளுடைய திருவுருவத்திற்கு முன்னுள்ள பீடத்தில் கல்லில் அமைக்கப்பட்டு வழிபடப்படுகிறது. இந்தச் சக்கரம் யந்திரராசம் என்றும் யந்திரசிந்தாமணி என்றும் அழைக்கப்படுகிறது.

❑ திருமாகறல் எனும் தலத்தில் வீற்றிருக்கும் அம்பிகையின் பெயர் புவனநாயகி என்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

❑ திருமந்திரத்திலுள்ள புவனாபதி சக்கரத்தை அடியொற்றி யெழுந்த நூல் புவனாம்பிகை கலைக்ஞான தீபமாகும். 101 பாடல்களில் ஆன இந்நூலில் அட்ட சக்திகள், அட்டபீடங்கள், அன்னையின் அருள் பெரும்வழிகள், புவனை தியானப்பலன்கள், மந்திர, யந்திரங்கள் முதலியன விளக்கப்பட்டுள்ளன.

❑ ஒரிசாவிலுள்ள புவனேஸ்வரம் தலைசிறந்த சிவத்தலமாகும். இங்கு புவனேஸ்வரி பூசித்த புவனேஸ்வரர் ஆலயம் உள்ளது. தென்னாட்டிலுள்ள திருமீயச்சூரிலும் சகல புவனேசுவரராலயம் உள்ளது. இக்கோயில் கருவறைக்கோட்டத்தில் க்ஷேத்ர புவனேசுவரர் திருவுருவம் உள்ளது.

❑ திருப்பரங்குன்றத்தில் உள்ள குடைவரைக் கோயிலில் புவனேசுவரியின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இவளைச் சுற்றிலும் தேவர்களும் முனிவர்களும், அமைக்கப்பட்டுள்ளனர். இவ்வூர் தலபுராணத்தில் புவனேச்வரி வணக்கம், சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

அட்சர வடிவான தேவி

உலகிலுள்ள அனைத்து மொழிகளுக்கும் ஆதாரமாக விளங்குபவை ஐம்பத்தோரு அட்சரங்களாகும். அட்சரம் என்பதற்கு எழுத்துக்கள் என்பதுடன் அழிவில்லாதது என்பதும் பொருளாகும். அட்சரங்களின் ஒலி வடிவமாக பராசக்தி விளங்குகின்றாள். இந்த எழுத்துகளின் வளர்ச்சி முறையிலிருந்தே அனேக மொழிகள் தோன்றியுள்ளன. எழுத்துக்கள் தனித்தோ, சேர்ந்தோ சொற்களை உருவாக்குகின்றன. சொற்கள் பொருட்களை விளக்கி உணரவைக்கின்றது. சொற்களைச் சிவமாகவும் அது உணர்த்தும் பொருளைப் பராசக்தியாகவும் சமய நூல்கள் கூறுகின்றன.

இரகுவம்சத்தில் காளிதாசன், வாக்காகவும், அந்த வாக்கினால் உணர்த்தப்படும் பொருளாகவும் இணைந்து நின்று உயிர்களுக்கு ஞானமளிக்கும் உலகத்தின் தாய் தந்தையரான பார்வதி பரமேசுவரரை வணங்குகிறேன் என்று கூறுகின்றான். இதே கருத்தை அபிராமி அந்தாதியில் பட்டர்பிரான், சொல்லும், பொருளும் என நடமாடும் துணைவருடன் புல்லும் பரிமளப் பூங்கொடியே என்று கூறுகின்றார். வாக்கின் வடிவமாக இருப்பதால் இறைவன் வாகீசுவரர் எனவும் அம்பிகை வாகீசுவரி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

உலகமொழிகளுக்கு ஆதாரமாக விளங்கும் இந்த ஐம்பத்தொரு அட்சரங்களும் தனித்தனியே வண்ணம், வடிவம் கொண்ட தேவியர்களாக விளங்குகின்றன. இந்தப் பெண்தேவதைகளை மாத்ருகா தேவியர் என்பர். இவர்கள் எழுந்தருளியுள்ள பீடம் அட்சர பீடம் (அ) மாத்ருகா பீடம் என்றழைக்கப்படுகின்றது. இந்த பீடம் திருவாரூரில் உள்ளது.

திருவாரூர் ஆலயத்தின் உள்ளே கமலாம்பிகை சந்நிதியின் பிராகாரத்தின் தென்மேற்கு முனையில் அட்சர பீடம் உள்ளது. இதன்மீது மிகுந்த வேலைப்பாடுள்ள கருங்கல் பிரபாமண்டலம் அமைந்துள்ளது. இதில் அருவநிலையில் ஐம்பத்தொரு அட்சர தேவிகளுடன் வாக்தேவியான பராசக்தி எழுந்தருளியுள்ளாள். இந்தப் பிரபாவளியில் ஐம்பத்தொரு அட்சரங்களுக்கும் பொறிக்கப்பட்டுள்ளன.

★ சிவபெருமான் எழுத்துக்களின் வடிவமாக இருக்கும்போது சக்தி எழுத்துக்கள் உணர்த்தும் சப்தவடிவமாக இருக்கின்றாள். இதனை ஒட்டியே சிவபெருமான் திருக்கோலக்காவில் பஞ்சாட்சரம் பொறித்த தாளத்தைத் திருஞான சம்பந்தருக்கு அளித்தபோது சக்தி அதற்கு ஓசை கொடுத்தாள் என்று சொல்லுகின்றோம். திருத்தாளமுடையார் கோயில் என்று அழைக்கப்படும் கோலக்காவில் வீற்றிருக்கும் அம்பிகைக்கு ஓசை கொடுத்த நாயகி என்பது பெயராகும்.

அம்பிகையின் அங்கங்களாக விளங்கும் அட்சரங்கள்

1. அ - நெற்றிக்கு மேல் தலை உச்சி
2. ஆ - நெற்றி
3. இ - வலது கண்
4. ஈ - இடது கண்
5. உ - வலது காது
6. ஊ - இடது காது
7. ரு - வலது கபோலம்
8. ரூ - இடது கபோலம்
9. லு - வலது நாசித்வாரம்
10. லூ - இடது நாசித்வாரம்
11. ஏ - மேல் உதடு
12. ஐ - கீழ் உதடு
13. ஓ - மேல்பல் வரிசை
14. ஔ - கீழ்ப்பல் வரிசை
15. அம் - வலது தாடை
16. அ: - இடது தாடை

17-21 க^1, க^2, க^3, க^4, ங - இவை ஐந்தும் வலது கை

22-26 ச^1, ச^2, (ஜ) ச^3, (ஜ்ஜ) ச^4, ஞ - இவை ஐந்தும் இடது கை

27-31 - ட^1, ட^2, ட^3, ட^4, ண - இவை ஐந்தும் வலது கால்

32-36 - த^1, த^2, த^3, த^4, ந - இவை ஐந்தும் இடது கால்

37. ப1 - வயிறு
38. ப2 - வலது ஸ்தனம்
39. ப3 - இடது ஸ்தனம்
40. ப4 - கழுத்து
41. ம - ஹ்ருதயம்

42-48. ய, ர, ல, வ, ஶ, ஷ, ஸ - ஏழும் தோல், எலும்பு, ரத்தம், மாமிசம், மஜ்ஜை, மேதஸ், சுக்லம் என்னும் சப்த தாதுக்களாகும்.

49. ஹ - நாபி (தொப்புள்)

50, 51. ள, க்ஷ: - உபசாரங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிஷ்யபாவ கௌரி

சிஷ்யபாவ கௌரி (தேவீபராக்கிரமம்

சிவாகமங்களை அருளிச் செய்யும் ஆசிரியனாக இருக்கும் சிவபெருமானிடத்தில் முதல் மாணவியாக இருப்பவள் அம்பிகை. சிவபெருமான் சிவாகமங்களையும் வேதங்களையும் அவளுக்கே முதலில் அருளிச்செய்தார். அவள் அதனை முருக னுக்கருள, அவர் திருமாலுக்கும், திருமால் பிரமனுக் கும் பிரமன் வழிவழியாக முனிவர்களுக்கும் உப தேசித்தனர். அதன் பின்னரே அது உலகெங்கும் பரவியது. இவர்கள் ஏழு பேரையும் சப்தகுருமார்கள் என்று அழைக்கின்றனர். இந்த சப்தகுருமார்களை சிவாகமங்கள் முறையே சதாசிவன், அனந்தன், ஸ்ரீகண்டன், பராசக்தி, குமாரகுரு, விஷ்ணு, பிரம்மா என்று குறிக்கிறது. இவர்களில் அம்பிகையை ஆதி குருவென்றும் சிவபெருமானை ஆதிமூலகுரு என் றும் குறிக்கின்றனர். திருவிசைப்பாவில் திருமாளி கைத்தேவர் சிவபெருமான் குரு வடிவில் மகேந்திர மலையின் மீதிருந்து அம்பிகைக்குச் சிவாகமங்களை அருளிச் செய்ததை,

"மகேந்திர பொன்மலைமீது
மலைமகளுக்கு அருளும் குரு நீ"

என்று குறிக்கின்றார்.

சிவபெருமானிடம் கௌரிதேவியாகிய உமையம்மை கைகட்டி வாய்பொத்தி நின்று சிவாக மங்களைச் கேட்டுக்கொண்ட கோலத்தைத் தேவீ பராக்கிரமம் "சிஷ்யபாவகௌரி" குறிக்கின்றது.

திருஞானசம்பந்தப்பெருமான் அச்சிறுபாக் கத்தில் அருளிய பதிகத்தில் உமா தேவிக்கு ஆகமங் களை அருளிச்செய்ததை, ''இளங்கிளை அரிவை யோடு ஒருங்குடனாகி கூறுமொன்றருளி'' என்று குறிக்கின்றனர். (இதன்பொருள் சிவபெருமான் இளங்கிளிநாயகியாகிய உமாதேவியாருடன் வீற்றி ருந்து அவளுக்குக் கூறத்தக்கதோர் பொருளாகிய வேத, சிவாகமங்களை அருளிச் செய்தனர் என்ப தாகும்)

அம்பிகை உபதேசம் பெற்ற வரலாற்றை உத்தரகோசமங்கைத் தலபுராணம் முதலியநூல்கள் விரிவாகக் கூறுகின்றன. (பார்க்க சிவமஞ்சரி தொகுதி-2) உத்தரகோசமங்கையில் பார்வதியைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு சிவாகமங்களின் பொருளை உபதேசிக்கும் சிவபெருமானை உமா மகேசுவரராகக் காண்கிறோம்.

புராணங்களில் இத்தகைய வரலாறு காணப் பட்டாலும்திருவுருவங்களாக இக்காட்சியைக் காண முடியவில்லை. கௌரிதேவிக்கு உபதேசிக்க வந்த சிவபெருமான் ஆறுதிருக்கரங்களை உடையவர் என்று சிவபராக்கிரமம் கூறுகின்றது.

சிவபெருமானின் கருவறையும் அம்பிகை சந்நிதியும் எதிரெதிராக அமைந்துள்ள தலங்களை உமாஉபதேசத் தலங்கள் என்று அழைக்கின்றனர். திருப்பனந்தாள், திருக்காளத்தி, திருஆமாத்தூர் முதலிய திருத்தலங்களில் இத்தகைய காட்சியைக் காணலாம்.

★ பார்வதி தேவி சிவபெருமானிடம் சிவதீட்சையும் மந்திர உபதேசமும் பெற்று குரு வடிவடிமாக விளங்குவதால் அவள் பூணூலுடன் காட்சியளிக்கின்றாள். பெண் தெய்வத் திருவுருவங்களில் பாா்வதிக்கு மட்டுமே பூணூல் அமைக்கப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குகசக்தியும் - கஜகௌரியும்

முருகனும், விநாயகரும் சிவ-பார்வதியின் குமாரர்களாக விளங்குகின்றனர். ஒரு சமயம் பார்வதிதேவி, பெண்யானைவடிவம் கொண்டு சித்திரவனத்தில் இருந்தபோது, சிவபெருமான் ஆண் யானை வடிவம் கொண்டு அவளருகில் சென்றார். இருவரும் அந்த வடிவிலேயே நெடுங்காலம் அங்கிருந்தனர். அந்நாளில் இருவரிடமிருந்தும் பிரணவ வடிவாக யானை முகத்துடன் விநாயகர் தோன்றினார். தேவர்கள் பூமாரிபொழிந்து அவர்களைப் போற்றினர். சிவபார்வதியர் யானை வடிவை நீக்கித் தேவவடிவம் கொண்டனர் என்றாலும் பிரணவவடிவமாக வெளிப்பட்ட விநாயகர் மட்டும் யானை முகத்தோடேயே இருந்தார். பின்னர் பார்வதி அவரை மடியில் அமர்த்திக் கொண்டார். அவளுக்கு வலப்பால் வீற்றிருந்த சிவபெருமான் விநாயகருக்குத் தமது சக்திகளைத் திரட்டியளித்ததுடன் கணங்களுக்கும் பூதப்படைகளுக்கும் தலைவனாக்கினார். (இத்தகைய காட்சி கஜானுக்கிரகர் என்ற சிவமூர்த்தமாகத் திகழ்கிறது) பின்னர் உமாதேவியால் விநாயகப் பெருமான மடிமீது அமர்த்திக் கொண்டு யானைவாகனத்தில ஏறி உலகினை வலம் வந்தார். இந்தக் காட்சியை நினைவூட்டும் வகையில் அமைந்த திருமேனி "கஜகௌரி" என்று புகழப்படுகின்றது. தென்னாட்டில் இக்காட்சியைக் காணமுடியவில்லை என்றாலும் இலங்கையிலுள்ள சிவாலயத்தூண்களில் சிற்பங்களாகக் காண்கிறோம் அங்கிருந்த ஓர் தேர் சிற்பத்தை அடியொற்றி வரைந்த ஓவியத்தை இங்கே காண்கிறோம்)

உமாதேவி விநாயகரை மடிமீது அமர்த்திக் கொண்டு அன்பர்களுக்குக் காட்சியளித்ததைப் போலவே முருகனை மடியில் அமர்த்திக் கொண்டு காட்சியளித்தாள். இவளைக் குகாம்பிகை என்றும் குகசக்தி என்றும் கூறுவர். சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக இருந்த முருகனை அவள் ஒன்று சேர்த்துக் கந்தன் என்று பெயரிட்டாள். கந்தன் முதலில் ஆறு முகங்களும் பன்னிரண்டு கரங்களும் கொண்டவராகக் காட்சியளித்தார். பிறகு ஒருமுகமும் இரண்டு கரங்களும் கொண்டவரானார். சிவபெருமானும் உமாதேவியும் அவரைத் தமக்கு நடுவில் அமர்த்திக் கொண்டு அனைவருக்கும் காட்சியளித்தனர். அந்த திருக்கோலத்தைச் சோமாஸ்கந்த மூர்த்தம் என்று

★குகாம்பிகை, பல்லவனீச்சரம்
நன்றி : தமிழ்நாடு, தொல்லியல் துறை

புராணங்கள் கூறுகின்றன. பிறகு உமாதேவியார் குமாரனைத் தன்மடி மீது அமர்த்திக் கொண்டு தமது அருளாற்றலை வழங்கினாள். அக்காட்சியே குகாம்பிகை என்று போற்றப்படுகின்றது. இதில் அம்பிகை உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்க அவளுக்கு அருகில் முருகன் இளம் குழந்தையாக வீற்றிருக்கின்றார். இதனைக் கற்சிற்பமாகத் திருக்கடையூரிலும் உலாத் திருமேனியாகப் பல்லவனீச்சரத்திலும் காணலாம்.

மேலும் முருகனைத் தேவி தனது இடுப்பில் வைத்துக் கொண்டிருப்பவளாக கஜசம்ஹாரர் திருவுருவத்துடன் அமைக்கப்படுகின்றாள். இக்காட்சியை வழுவூர் (சபாமூர்த்தம்), திருப்பனந்தாள் (கோட்டமூர்த்தம்) முதலிய அனேக தலங்களில் காணலாம். திருவாரூரில் நீலோற்பலாம்பிகையாக விளங்கும் பார்வதிதேவி தனது அருகினில் நிற்கும் தோழியின் தோள்மீது அமர்ந்துள்ள முருகனைத் தொட்டவாறு காட்சியளிக்கின்றாள்.

திருப்புறம்பியத்தில் குகாம்பிகை என்ற பெயரில் தனிச் சந்நிதியில் அம்பிகை குமாரனோடு வீற்றிருக்கிறாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோழநாட்டுத் தலங்கள் பலவற்றில் இடுப்பில் குழந்தையோடு நிற்கும் உமாதேவியைக்காண்கிறோம். இவள் பிள்ளையை இடுப்பில் இடுக்கிக் கொண்டிருப் பதால் **"பிள்ளையிடுக்கி அம்மன்"** என்று அழைக்கப்படுகின்றாள்.

முருகனைத் தனது இடுப்பில் வைத்துச் சீராட்டியது போலவே சைவக்குரவரான திருஞானசம்பந்தப் பெருமானையும் அம்பிகை இடுப்பில் வைத்துக் கொண்டிருப்பதைத் திருவெண்காட்டில் காண்கிறோம். இங்குள்ள பிரம்மவித்யாம்பிகை சந்நிதியின் உட்சுற்றில் பிள்ளைஇடுக்கிஅம்மன் என்ற பெயரில் இவள் நிற்கின்றாள். இத்தலத்திற்கு திருஞான சம்பந்தர் வந்தபோது மண்ணெல்லாம் சிவலிங்கமாகக் காட்சிதரவே, இங்குக் கால்வைக்க அஞ்சினார் என்றாலும் பெருமானைத் தரிசிக்க ஆவலுற்றார். அப்போது உமாதேவி வெளிப்பட்டு அவரைத் தனது இடுப்பில் தூக்கிவைத்துக் கொண்டு வந்து சிவபெருமானைக் காண்பித்தார். அதை உணர்த்தும் வகையில் இத்திருவுருவம் அமைக்கப் பட்டுள்ளது என்று கூறுகின்றனர்.

இதனை யொத்ததானச்சிறப்பு மிக்க சக்தி வடிவங்களை அபூர்வமாகவே காண்கிறோம்.

கஜகௌரி

சிவாலயங்களில் அம்பிகை சந்நிதிகள்

அம்பிகையின் ஆலயம் சிவாலயங்களில் ஒரே மாதிரியாக ஒரே இடத்தில் அமைவதில்லை. சிலதலங்கள் சுவாமிக்கு வலப்புறம் அமைகிறது. சில இடங்களில் இடப்புறம் அமைகின்றது. சில தலங்களில் வடமேற்கு முனையிலும் சில தலங்களில் வடகிழக்கு முனையிலும் அமைந்துள்ளதைக் காண்கிறோம். சிலதலங்களில் அம்பிகை சந்நிதி சுவாமி சந்நிதிக்கு நேர் எதிராக அமைந்திருக்கக் காணலாம். சில தலங்களில் அம்பிகை சந்நிதி கீழேயும் சுவாமி சந்நிதி மலைமேலும் இருக்கக் காண்கிறோம். இவை எல்லாவற்றிற்கும் உரிய சிறப்பான காரணங்களைச் சான்றோர்கள் கூறியுள்ளனர்.

பொதுவாகச் சிவாலயங்களில் அம்பிகை சிவபெருமானுக்கு இணையாக இடதுபாகத்தில் கிழக்கு நோக்கியவாறு இருப்பதைக் காண்கிறோம். இது அவள் தவம் பு[illegible] சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெற்று அவருடன் வீற்றிருந்து அன்பர்களுக்கு சகல நலன்களையும் அருளும் நிலையாகும். சில தலங்களில் சிவபெருமானுக்கு எதிரில் அவரை நோக்கியவாறு இருக்கிறாள். இப்படி அவர்கள் எதிர்எதிராக வீற்றிருக்கும் தலங்கள் உமாபதேசத்தலங்கள்என்று போற்றப்படுகின்றன. திருஆமாச்[illegible]. காளத்தி, திருப்பனந்தான், முதலிய தலங்கள் இத்தகையவை ஆகும்.

அம்பிகை இறைவனின் வலப்பாகத்தில் வீற்றிருக்கும் தலங்கள் கல்யாணத்தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பாண்டிய மண்டலத்தில் அம்பிகை பல அரசர்களுக்கு மகளாகப் பிறந்து சிவபூசை செய்து சிவபெருமானை மணந்து கொண்டாள். இதைக் குறிக்கவே இம்மண்டலமெங்கும் இவள் கல்யாண சுந்தரியாகச் சிவபெருமானுக்கு வலப்பக்கத்திலேயே கோயில் கொண்டுள்ளாள். நெல்லைகாந்திமதி, மதுரை மீனாட்சி, குற்றாலம் குழல்வாய் மொழியாள் முதலிய அம்பிகைகள் இறைவனுக்கு வலது பாகத்திலேயே எழுந்தருளியுள்ளனர்.

அம்பிகை இறைவனுக்கு வலப்பாகத்தில் வடக்குநோக்கி எழுந்தருளியுள்ள தலங்கள் அவள் சிவபூசை செய்யும் தலங்களாகும். தக்கோலத்தில் இத்தகைய காட்சியைக் காண்கிறோம்.

அகத்தியர் பூசித்தலங்களில் அம்பிகை உள்மண்டபத்தில் தெற்கு நோக்கியிருப்பதைக் காண்கிறோம். பெரும்பாலான அகத்தீச்சுரங்களில் இந்த அமைப்பே உள்ளது. இது அம்பிகை உயிர்களுக்கு ஞானத்தை உபதேசிக்கும் கோலமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பள்ளியறை நாச்சியார்

பளளியறையில் சொக்கரும் சொக்கியும்

இறைவன் ஓய்வும் உறக்கமும் அற்றவன். அவன் ஓயாது தொழிற்படுவதால்தான் இந்த உலகம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. என்றாலும், மனிதமனம் இறைவன் தன்னைப் போல் ஒய்வெடுக்க வேண்டும் என எண்ணுகின்றது. இது அன்பின் மிகுதியினால் ஏற்படும் நிலையாகும். இந்த எண்ணமிகுதியினாலேயே பாண்டியன் மதுரையில் வெள்ளியம்பலத்தில் நடராசப் பெருமானிடம் ஒரே காலை ஊன்றி ஓயாது ஆடினால் அது வலிக்கும் என்று கால் மாறி ஆடும்படி கேட்டுக் கொண்டார். சிவபெருமானும் கால் மாறி ஆடி அவனுக்குக் காட்டினார்.

இந்த அன்பின் அடிப்படையிலேயே தினப்பூசையின் முடிவில் இறைவனையும் இறைவியையும் பள்ளியறையில் எழுந்தருளிவைத்து ஊஞ்சல் பாட்டுப் பாடித்தூப தீபாராதனை செய்யும் வழக்கம் இருந்து வருகின்றது. இதற்காக சிவாலயங்களில் பள்ளியறை என்ற தனிச்சந்நிதியும் அதில் சப்பர மஞ்சமும் அதில் ஊஞ்சலும் அமைக்கப்பட்டுள்ளன. இங்குப் பெரிய நிலைக்கண்ணாடிகள் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் அம்பிகையின் அழகிய சிறிய திருஉருவம் எழுந்தருளிவைக்கப் பட்டுள்ளது. அர்த்தசாமப் பூசைக்குப் பிறகு இறைவன் திருவுருவத்தை ஒரு பல்லக்கில் வைத்து ஆலயத்தை வலம் வந்து பள்ளியறையில் ஊஞ்சலில் அம்மன்அருகில்வைத்து வழிபடுவர். வடை, புட்டு, சுகியன், அப்பம், பால், பழம் ஆகியவற்றை நிவேதனம் செய்வர். பிறகு இறைவனை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி வேண்டி பூசையை நிறைவு செய்வர். பள்ளியறையில் வீற்றிருக்கும் பார்வதி தேவி பள்ளியறை நாச்சியர் என்றழைக்கப்படுகிறாள்.

சோழர் காலக் கல்வெட்டுகள் பள்ளியறை நாச்சியாரை ஆலயங்களில் எழுந்தருளவைத்து பூசை நடத்த அளிக்கப்பட்ட நிபந்தங்களை பற்றிக் கூறுகின்றன.

பொதுவாகப் பள்ளியறை அம்பிகையை அமர்ந்தவாறே அமைக்கின்றனர். சிதம்பரம், திருவண்ணாமலை முதலிய தலங்களில் பள்ளியறை அம்பிகையை நின்றவாறு அமைத்துள்ளனர். இங்கெல்லாம் இறைவனின் திருவுருவத்தை அமைக்காமல் திருவம்பல யந்திரத்தையோ, திருவடிகளையோ அமைத்துள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டங்களில் பள்ளியறையில் எழுந்தருளும் சிவபார்வதியர் இருவரையுமே முழுவுருவமாக அமைக்காமல் பீடவடிவிலேயே அமைக்கின்றனர். சிவபெருமானைக் குறிக்கும் பீடத்தில் இருபாதக்குறடுகளையும், அம்பிகையைக் குறிக்கும் பீடத்தில் ஒரு முக்கோணத்தையும் அதன் மையத்தில் ஒரு வட்டத்தையும் அமைக்கின்றனர்.

சமயநூல்கள் பள்ளியறை விழாவுக்கான விளக்கத்தைத் தத்துவநோக்கில் சிறப்பாகக் கூறுகின்றன. உயிர்களாகிய பசுக்கள் பரமேசுவரனாகிய பதியை அடைந்து பேரின்பம் துய்ப்பதையே இது உணர்த்துகிறதென்பர். பசுக்களாகிய உயிர்களின் குறியீடாகவே பார்வதி பரமேசுவரனை அடைகின்றாள். மேலும் இரவு என்பது நித்திய பிரளய காலமாகும். இதில் உயிர்கள் பரமேசுவரனை சென்றடைந்து ஒடுங்குவதைக் குறிக்கவே உயிர்களின் தாயும் தலைவியுமாகிய பார்வதி பரமேசுவரனை அடைகின்றாள். என்பது இந்த நித்திய விழாவின் மூலம் உணர்த்தப்படுகின்றது என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமனடி தொழுத பாவை பள்ளியறை நாச்சியார்

(முன்பக்கத்தில் குறிப்பிடப்பட்ட பள்ளியறை நாச்சியார் திருக்கோயில்களில் அமைந்துள்ள பராசக்தியின் வடிவம் தெய்வ வடிவமாகும். இப்போது நாம் சொல்லும் பள்ளியறை நாச்சியார் பார்வதியின் ஒரு கூறாகத் தோன்றி மண்ணுலகில் வாழ்ந்து இறைவனோடு ஐக்கியமான பெண்ணாவாள்)

மூம்மூர்த்தித் தலம் என்ற சிறப்பினைப் பெற்றது சுசீந்திரமாகும். இங்குள்ள தாணுமாலய சுவாமி ஆலயத்தில் அறம்வளர்த்தம்மன் என்ற தேவியின் சன்னிதி உள்ளது. இப்பெண் பார்வதியின் கூறாகத் தேரூர் வேளாளர் குலத்தில் தோன்றியவளாவாள். இவள் தினமும் தன் தாயுடன் அர்த்த சாமப் பூசையின் போது இங்கு வந்து வழிபடுவது வழக்கமாகும்.

ஒரு நாள் சிவபெருமான் அவளுடைய தாயிடம் அப்பெண்ணைக் கேட்க அவளுடைய தாயார் பெருமானே "எடுத்துக் கொள்க" என்றாள். சிவபெருமானும் லிங்கத்தினின்று வெளிப்பட்டு அவளைத் தழுவிக் கொண்டு மறைந்தார். அதனைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர். அர்த்தசாமப் பூசையான பள்ளியறைச் சேவையில் இறைவனோடு கலந்து விட்டதால் அப்பெண் பள்ளியறை நாச்சியார் என்று அழைக்கப்பட்டாள்.

இவளுடைய மரபினர் தேரூர், இரவிபுத்தூர் முதலிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். அம்மரபினர் அறம் வளர்த்தம்மனின் திருவுருவத்தைச் செப்புத்திருமேனியாகத் தாணுமாலய சுவாமி ஆலயத்தில் ஷெண்பகராமன் மண்டபத்திற்கு வடக்கில் தனிஆலயம் அமைத்து நிலைப்படுத்தியுள்ளனர். மேற்கண்ட ஊர்களைச் சேர்ந்த வேளாளர்கள் இவளைத் தங்கள் மகளாகப் பாவித்து ஆண்டுதோறும் மாசி மகத்தன்று இவளுக்கும் தாணுமாலய சுவாமிக்கும் நடைபெறும் திருமணத்தில் பட்டு படுக்கை முதலியவற்றுடன் சீர்செய்கின்றனர்.

(அறம்வளர்த்த நாயகி சிவபெருமானுடன் பள்ளியறைக் கட்டில் ஏறியதால் அவள் பள்ளியறை நாச்சியார் என்று அழைக்கப்பட்டாள். என்றாலும் பலநூல்களில் பள்ளியறை நாச்சியார் என்ற பெயரை அவளுடைய தாயின் பெயராகக் குறித்துள்ளனர்)

❑ பள்ளியறை என்பதற்குப் படுத்து உறங்கும் அறை என்பதே பொருளாகும். அதே சமயம் பள்ளிக் கட்டில் என்பதற்கு அரசனின் சிம்மாசனம், இளவரசியின் திருமணம் போன்ற பல பொருள்கள் உள்ளன. பல இளவரசிகள் சிவபெருமானை மணந்து கொண்டதால் அவர்கள் பள்ளிக்கட்டில் ஏறிய நாச்சியார்கள் என்று அழைக்கப்பட்டனர். அதுவே மருவி பள்ளியறை நாச்சியார் என்றாகிவிட்டது என்கின்றனர். பார்வதிதேவி இமயமலை மன்னனான இமவான், மதுரை மன்னனான மலையத்துவஜ பாண்டியன் முதலான அனேக மன்னர்களுக்கு மகளாகத் தோன்றி இளவரசியாக திகழ்ந்தது இங்கு எண்ணத்தக்கதாகும். பள்ளியறையில் இந்நாளில் சப்பரமஞ்சமும், ஊஞ்சலும் உள்ளன. முன்னாளில் பள்ளியறையில் சிங்காசனம் அமைக்கப்பெற்று அதில் அம்பிகையும் சிவபெருமானும் எழுந்தருளி வைக்கப்பட்டிருந்தனர். திருக்கடவூரில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு இக்கோயிலில் பள்ளியறைக்கு ஒரு சிங்காசனத்தைப் பாண்டிய நாட்டான் ஒருவன் கொடுத்ததாகக் குறிக்கின்றது.

❑ எதிர்கொள்பாடி ஐராவதேசுவரர் ஆலயக் கல்வெட்டு ஒரு பெண் இக்கோயிலில் பள்ளியறை நாச்சியரை எழுந்தருளிவைத்ததுடன் பூசைக்காகத் தனக்குத் திருமணசீராக வந்த நிலத்தையும் அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது.

❑ சில கல்வெட்டுக்களில் அம்பிகையைப் பள்ளியறை நம்பிராட்டியார் பள்ளியறை அம்பாள் என்று அழைக்கப்படுகின்றாள்.

❑ காளஹஸ்தியில் ஞானபூங்கோதை அம்பிகை தன் சந்நிதியிலிருந்து பல்லக்கில் புறப்பட்டு சுவாமி சந்நிதிக்கு வந்து அவரையும் அழைத்துக்கொண்டு பள்ளியறைக்குச் செல்கிறாள். இது புதுமையான நடைமுறையாகும்.

❑ காளையார்கோயிலில் ஒரே மதிலுக்குள் மூன்று சிவாலயங்களும் அவை மூன்றுக்கும் தனித்தனி பள்ளியறைகளும் உள்ளன. இரவு அர்த்தசாமப் பூசையில் அடுத்தடுத்து நடைபெறும் மூன்று பள்ளியறை சேவைகளைத் தினமும் இங்கே காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பராசக்தியின் பஞ்சாவரணம்



சிவபெருமானின் அருளாக வெளிப்பட்டு அவருடைய இடப்பாகத்தில் வீற்றிருப்பவள் பராசக்தி அவள் சிவாலயங்களில் தனிக்கோயில் கொண்டு வீரசக்தியாக அருள்பாலிக்கின்றாள். இவளுடைய ஆலயத்தைப் புராணங்களும் கல்வெட்டுக்களும் "காமகோட்டம்" என்று அழைக்கின்றன.

நாம் அம்பிகையைத் தனியே பூசிக்கும்போது அவளைச் சுற்றியுள்ள தேவதைகளையும் மந்திரப் பூர்வமாகப் பூசிக்கின்றோம். அவளைச் சுற்றி அப்சரகணங்கள், தேவிகணங்கள் முதலிய ஏராளமானவர்கள் இருந்தாலும் அவர்களில் சிலரையே சிறப்புடன் பூசிக்கிறோம். இந்த பூசையின் விளக்கத்தைத் தொடர்ந்து காணலாம். இது பஞ்சாவரண பூஜை என்று அழைக்கப்படுகிறது.

பராசக்தியை "மனோன்மணி" என்று பூஜாபத்ததி நூல்கள் குறிக்கின்றன. இவள் வெள்ளை நிறமுடையவளாய், மேற்கரங்களில் தாமரை, நீலோற்பல மலர்களையும் கீழ்க்கரங்களில் அபய வரத முத்திரைகளையும் தாங்கிப் பொன்னாபரணங்களைப் பூண்டு உயர்ந்த கிரீடத்தினை அணிந்து மூன்று கண்கள் கொண்டவளாய் வெள்ளாடைகளை அணிந்து பிரகாசிக்கின்றாள்.

இவளுக்கு வலப்பக்கத்தில் யோகினியும் இடப்பக்கத்தில் போகினியும் உள்ளனர். இவர்கள் வீற்றிருக்கும் இடத்தைச் சுற்றி முதல் ஆவரணம் அமைகின்றது. இதில் கிழக்கில் வாமை : தென்கிழக்கில் ஜேஷ்டை தெற்கில் ரௌத்ரி, தென்மேற்கில் காளி மேற்கில் கலவிகரணி, வடமேற்கில் பலவீகரணி, வடகிழக்கில் பஸ்ரமதி, வடகிழக்கில் சர்வபூதமணி ஆகிய அஷ்டவித்யேஸ்வரிகள் பூசிக்கப்படுகின்றனர்.

இரண்டாவது ஆவரணத்தில் கிழக்கில் பிராம்மி, தென்கிழக்கில் மகேஸ்வரி, தெற்கில் கௌமாரி, தென்மேற்கில் வைஷ்ணவி, மேற்கில் வாராகி, வட மேற்கில் இந்திராணி வடக்கில் சாமுண்டி ஈசானத்தில் துர்க்கையும் பூசிக்கப்படுகின்றனர்.

மூன்றாவது ஆவரணத்தில் கிழக்கில் ரிஷபம், தென்கிழக்கில் கணபதி, தெற்கில் ஸ்கந்தர் (முருகன்) தென்மேற்கில் சாத்தன், மேற்கில் மந்தன், (நாகர்) வடமேற்கில் வீரபத்திரன் வடக்கில் க்ஷேத்ர பாலகன், ஈசானத்தில் சூரியன் ஆகியோர் பூசிக்கப்படுகின்றனர்.

நான்காவது ஆவரணத்தில் தச திக்பாலகர்களின் மனைவியர் பூசிக்கப்படுகின்றனர். இவர்கள் முறையே கிழக்கில் சசி (இந்திராணி), தென்கிழக்கில் ஸ்வாகா, தெற்கில் காலகண்டி தென்மேற்கில் ஜாதா மேற்கில் சுகேசி வடமேற்கில் பத்ரா வடக்கில் ஹரிமிணி, வடகிழக்கில் ஜிவோன்மணி ஆகிய எண்மர் பூசிக்கப்படுகின்றனர். இவர்களுடன் வடகிழக்கிற்கும், கிழக்கிற்கும் நடுவில் திருமாலின் மனைவியான பூமாதேவியும், தென்மேற்கிற்கும் மேற்கிற்கும் நடுவில் பிரம்மாவின் மனைவியான சாவித்திரியும் பூசிக்கப்படுகின்றனர்.

ஐந்தாம் ஆவரணத்தில் தசாயுதங்களும் அவற்றின் அதிதேவதைகளும் பூசிக்கப்படுகின்றனர். இங்கு ஆயுதத்தின் பெயரும் அதனை அடுத்து பிறை குறிக்குள் அதிதேவதையின் பெயரும் குறிக்கப்பட்டுள்ளன. கிழக்கில் வஜ்ஜிரம் (விலாசனி) தென்கிழக்கில் சக்தி (விஸ்புரிண்யை) தெற்கில் தண்டம் (யாம்யை), தென்மேற்கில் கத்தி (விமுக்யா) மேற்கில் பாசம் (விமலா) வடமேற்கில் கொடி (அநின்யா) வடக்கில் கதாயுதம் (ச்ரியை) வடகிழக்கில் திரிசூலம் (சூலினி) கிழக்கிற்கும்-வடகிழக்கிற்கும் நடுவில் பத்மம் (சுமாலி) தென்மேற்கிற்கும் மேற்கிற்கும் இடையில் சக்கரமும் (சுதர்சனா) ஆகியன இடம் பெற்றுள்ளன.

தினமும் இந்த ஐந்து ஆவரணங்களில் உள்ள தேவியரை மந்திரப் பூர்வமாகப் பூசித்த பின்னரே நடுவிலுள்ள பராசக்தியான மனோன்மணியைப் பூசிக்கவேண்டும். கும்பாபிஷேகம் பவித்ரோத்சவம் முதலிய காலங்களில் இவர்களை வேதிகையைச் சுற்றிலும் அமைந்தமேடையில் பூரண கும்பங்களில் எழுந்தருள வைத்து வழிபடுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரட்டை அம்பிகை சந்நிதிகள்

சிவாலயங்களில் மூலவராக ஒரு லிங்கம் இருப்பது போலவே ஆலயங்களில் அம்பிகை சந்நிதியும் ஒன்று மட்டுமே இருக்கும். இதற்கு மாறாகச் சில தலங்களில் இரண்டு அம்பிகை சந்நிதிகளையும் காண்கிறோம். இதற்கான பலகாரணங்களை வட்டார வழக்குகளும் புராணங்களும் கூறுகின்றன. இதன்படி:-

சில சிவத்தலங்களில் நெடுங்காலமாகப் பூசிக்கப்பட்டு வரும் அம்மன் சிலைகள் பின்னப் படலாம். அப்படி பின்னமானவற்றை பூசிக்கக் கூடாதென்று பூஜா விதி நூல்கள் கூறுகின்றன. அதனால் அவற்றை விலக்கிவிட்டுப் புதியதாக அம்மன் சிலையைச் செய்து நிலைப்படுத்துகின்றனர். பழைய அம்மன் சிலையை வீணாகப் போடாமல் அதன் மீதுள்ள அன்பின் காரணமாக உள்மண்டபத்திலோ அம்மன் சந்நிதியின் மாடத்திலேயோ நிலைப்படுத்துகின்றனர். சில தலங்களில் அம்பிகையே அன்பர்களின் கனவில் தோன்றி தனது பழைய சிலையை அப்புறப்படுத்த வேண்டாம் என்று கூறியதாகவும் வரலாறு உண்டு. சிலர் இதற்கான புதியசந்நிதிகளைக் கட்டுவதும். உண்டு. இதனால் இரண்டு அம்பிகைச் சந்நிதிகள் உண்டாகின்றன.

சிலதலங்களில் அரசகுடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் இறைவனிடம் ஆராக்காதல் பூண்டு கோயிற்பணிகளிலேயே தனது வாழ்நாளைச் செலவிட்டு வீடுபேறுபெறுகின்றனர். அப்படிப்பட்ட பெண்களைப் பார்வதிதேவியின் ஒரு கூறாகவே கருதுகின்றனர். அவர்களுக்கும் சிவாலயத்தில் தனிச்சந்நிதிகள் அமைக்கப்படுகின்றன. இதனாலும் இரண்டு அம்பிகை சந்நிதிகள் அமைகின்றன.

எடுத்துக்காட்டாகப் பூவனூர் என்னும் தலத்தில் சதுரங்கவல்லபர் ஆலயம் என்னும் சிவாலயம் உள்ளது. இக்கோயிலில் கற்பகவல்லி, ராஜராஜேஸ்வரி என்ற இரண்டு அம்பிகை சந்நிதிகள் அமைந்துள்ளன. இரண்டாவதான ராஜராஜேசுவரி சந்நிதியில் வீற்றிருக்கும் அம்பிகை குரு மன்னனுக்கு மகளாகப் பிறந்தாள் என்றும் அவளைச் சிவபெருமான் சதுரங்கப் போட்டியில் வென்று மணந்து கொண்டார். என்றும் செவிவழிச்செய்திகள் கூறுகின்றன. இதனால் பெருமானுக்குச் சதுரங்கவல்லபர் என்பதும் பெயராயிற்று.

சிவதலங்களில் அம்பிகையின் சந்நிதி கருவறையிலிருந்து சிறிதுதூரம் தள்ளித் தனித்து அமைக்கப்பட்டது. அந்தச் சந்நிதிகளில் சிவாசாரியர் அல்லது சாக்த தந்திரர்கள் பூசைசெய்தனர். இதனால் சிலசமயம் சிவபூஜா காலங்களுக்குத் தாமதம் ஏற்பட்டது. இதனால் சிவாசாரியர்கள் சிவசந்நிதிக்கு அருகிலேயே புதிய அம்பிகை சந்நிதியை அமைத்துக் கொண்டனர். சில சமயங்களில் அரசர்கள் சிவாலயங்களை விரிவாக்கிக் கட்டும்போது பழைய அம்பிகை சந்நிதிகளை எடுக்காமல் விட்டுவிட்டு புதியதாக அம்மன் சந்நிதிகளைக் கட்டியதையும் காண்கிறோம்.

இத்தகைய பல்வேறு காரணங்களால் சிவாலயங்களில் இரண்டு அம்பிகை சந்நிதிகள் உண்டாகி விட்டன. சில ஆலயங்களில் புராண தத்துவ நிலைகளுக்கேற்பவும் இரண்டு அம்பிகை சந்நிதிகள் அமைத்துள்ளன.

சிதம்பரத்தின் ஆதிக்கோயில் திருமூலட்டானம் ஆகும். அவருக்கு அருகில் எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு இமயபார்வதி என்பது பெயர். இக்கோயிலின் நடராசமூர்த்தியே தனிச் சிறப்புடன் சிற்சபையில் ஆனந்த நடனம் ஆடிக் கொண்டிருக்கின்றார். இந்த நடராசமூர்த்தம் உலா மூர்த்தியாக இருந்தாலும் இவருடைய தேவியாகிய சிவகாமசுந்தரி மூலவராகத் தனிப்பெருஞ்சந்நிதியில் எழுந்தருளியுள்ளாள். இவளுடைய ஆலயம் காமகோட்டம் என்று அழைக்கப்படுகின்றது.

இதைப்போலவே திருவாரூரில் வீதிகளில் பவனிவரும் விடங்கராகத் தியாகராசப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இவருடைய தேவியாகிய கமலாம்பிகை மூலமூர்த்தியாகத் தனிப் பெருங்கோயிலில் எழுந்தருளியுள்ளார். இத்தலத்திலுள்ள மூலமூர்த்திக்கும் மூலட்டானமுடையார் என்பதே பெயராகும். அவருக்கு இணையாக எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு நீலோற்பலாம்பாள் என்பது பெயராகும்.பொதுவாக மூலவராகவிளங்கும் சிவலிங்க மூர்த்திக்கு இணையாகவே அம்பிகைக்கு சந்நிதி அமைக்கப்படும் என்றாலும் திருவாரூரிலும் சிதம்பரத்திலும் உலாமூர்த்தியாக விளங்கும் சிவபெருமானுக்கு அம்பிகை சந்நிதி தனியே கட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனையொத்ததாக அம்பிகையின் சந்நிதிகள் ஒருசில இடங்களில் மட்டுமே உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புகழ்பெற்ற இரட்டை அம்பிகைத்தலங்கள்

❑ சைவர்களில் புனிதத் தலமான காசிமா நகரில் அம்பிகை பலவடிவங்களில் எழுந்தருளியுள்ளாள். என்றாலும் அவற்றுள் இரண்டு வடிவங்களே புகழ்பெற்றவைகளாகும். காசிவிசுவநாதருக்குத் தேவியாக விளங்குபவள் விசாலாட்சி. இவளுக் கெனத்தனிஆலயம் அமைந்துள்ளது. விசுவநாதர் ஆலயத்திற்கு அருகிலேயே பார்வதிதேவி அன்ன பூரணியாக வீற்றிருக்கின்றாள். உலக உயிர்கள் யாவற்றிற்கும் உணவளிக்கும் தாயாக இவள் விளங்குகின்றாள்.

❑ கும்பகோணத்திற்கு அருகிலுள்ள ஆவூரில் இரண்டு அம்பிகையர் உள்ளனர். இதில் ஒருத்தி மங்களாம்பிகை என்றும் மற்றவள் பங்கஜவல்லி என்றும் அழைக்கப்படுகின்றாள்.

❑ திருநாகேசுவரத்தில் கருவறைக்கு அருகில் பிறையணிநுதலாள் எனும் பெயரில் பார்வதி எழுந்தருளியுள்ளாள். அதே ஆலயத்தில் அவள் தனிக்கோயிலில் கிரிகுஜாம்பிகை எனும் பெயரில் பெரியவடிவில் எழுந்தருளியிருப்பதையும் காண்கி றோம். இவ்வடிவம் புற்றுமண்ணால் ஆனது தை மாதம் புனுகுசட்டம் மட்டும் அணிவிக்கின்றனர். இது பிரார்த்தனைத் தலமாக விளங்குகின்றது.

❑ திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருநீலக்குடியில் அம்பிகை பக்த பீஷ்டா தாயினி எனும்பெயரில் தவக்கோலத்திலும் தவம் முடிந்து இறைவனை மணந்த கோலத்தில் அநூபமஸ்தினி என்ற பெயரிலும் விளங்குகின்றாள். இங்கு சிவபெருமானை வழிபட அம்பிகை அமைத்த தீர்த்தம் தேவிதீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது. அம்பிகையே இங்கு சிவலிங்கத்திற்கு எண்ணெய்க் காப்பு செய்வதாக நம்புகின்றனர். இங்குள்ள லிங்கத் தின்மீது எவ்வளவு நல்லெண்ணெய் விட்டாலும் அவ்வளவும் சிவலிங்கத்திற்குள்ளேயே ஊறிவிடு கிறது. அம்பிகை சந்நிதியில் நல்லெண்ணெயை வைத்து வழிபட்ட பிறகே சிவலிங்கத்திற்கு அபி ஷேகம் செய்கின்றனர். இங்கு சுவாமி சந்நிதிக்கு இணையாக வடக்கில் அடுத்தடுத்து அமைந்துள்ள சந்நிதிகளில் மேற்குறித்த அம்பிகையர் எழுந்தரு ளியுள்ளனர்.

❑ பூவனூரில் சதுரங்கவல்லபர் ஆலயத்தில் ராஜ ராஜேஸ்வரி, கற்பகவல்லி என்ற இரண்டுசந்நிதிகள் உள்ளன. பார்வதிதேவி, குருமன்னனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்து வந்தாள். அவளுக்குப் பெயர் ராஜராஜேஸ்வரி என்பதாகும். அவளைச் சிவபெரு மான் சதுரங்கப் போட்டியில் வென்று திருமணம் செய்துகொண்டார் என்று கூறப்படுகின்றது.

❑ கூடலையாற்றூரிலுள்ள சிவாலயம் மாடக் கோயிலாகும். இங்குள்ள கட்டுமலையின்மீது பராசக்தி சந்நிதியும் கட்டுமலைக்குக் கீழே ஞானசக்தி சந்நிதியும் உள்ளன. பராசக்தி சந்நிதியில் விபூதியும், ஞானசக்தி ஆலயத்தில் குங்குமமும் அளிக்கப்படுகின்றன.

❑ திருப்புறம்பியத்தில் இரண்டு அம்பிகை சந்நிதிகள் உள்ளன. முதன்மைச் சந்நிதியில் வீற்றிருக்கும் அம்பிகை இக்ஷுவாணி என்றும் மற் றொருவள் குகாம்பிகை என்றும் அழைக்கப் படுகின்றாள்.

❑ திருப்புறம்பியத்திற்கு அருகிலுள்ள தலம் இன்னம்பர் ஆகும். இங்கும் இரண்டு அம்பிகை சந்நிதிகள் உள்ளன. வெளிப்பிரகாரத்திலுள்ள பிரதான பெரியசந்நிதியில் சுகந்த குந்தாளாம்பிகை எழுந்தருளியுள்ளார். ஆலயத்துள் கருவறைக்கு வலப்பால் அமைந்த சந்நிதியில் நித்திய கல்யாணி அம்பிகையைக் காண்கிறோம்.

❑ திருமீயச்சூர் என்னும் தலத்திலுள்ள மேகநாதர் ஆலயத்துள் செளந்திரநாயகி, லலிதாம்பிகை என்ற இரண்டு திருவுருவங்களுடன் அம்பிகை காட்சி யளிக்கின்றாள். லலிதாம்பிகை அமர்ந்த கோலத் திலும் செளந்தராம்பிகை நின்ற கோலத்திலும் காட்சியளிக்கின்றனர்.

❑ கருவூர் பசுபதீசுவரர் ஆலயத்தில் செளந்தர வல்லி, அலங்காரவல்லி என்ற இரண்டு அம்பிகை சந்நிதிகள் உள்ளன. இதில் அலங்காரவல்லி வடிவுடையார் என்ற பெயரில் இத்தலத்திற்கு அரு கிலுள்ள அப்பியபாளையத்தில் அவதரித்து சிவ பெருமானை மணந்து கொண்டவளாவாள்.

இன்னும் அநேக தலங்களில் இரட்டை அம்பிகையரைக் கண்டு மகிழலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகையின் அழகிய பெயர்கள்

சிவபெருமானைப் போலவே அம்பிகையும் தனக்கெனத் தனிஉருவமும் பெயரும் அற்றவள். என்றாலும் அன்பர்கள்மீது கொண்ட கருணையால் அவள் பலவடிவம் தாங்கி வந்து அவர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். புராணங்கள் அவளை ஆயிரக்கணக்கான பெயர்களால் அழைத்து மகிழ்கின்றன.

கௌரி என்பது அவளுக்குப் பொதுப் பெயராகும். பெருமான் அவளை "உமா" என்று அழைத்தார். அப்பெயராலேயே அம்பிகை தேவாரத்துள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் குறிக்கப்படுகின்றாள். கல்வெட்டுக்களும் அவளை உமா, உமாபட்டாரகி என்றே அழைக்கின்றன.

சிவாலயங்களில் அவள் பல சிறப்புப் பெயர்களில் எழுந்தருளியுள்ளாள். அவளுடைய கண்களின் வனப்பால் அங்கயற்கண்ணி, மலர்க் கண்ணி, வாள்நெடுங்கண்ணி, என்ற பல பெயர்களாலும் கூந்தலின் சிறப்பால் மலர்க்குழலி, பூங்குழலி, சுகந்தகுந்தளாம்பிகை என்ற பெயர்களாலும், இடையழகால் கொடியிடை நாயகி, என்ற பெயர் கொண்டும் அறம்வளர்த்ததால் அன்னபூரணி, அறம் வளர்த்தநாயகி முதலான பெயர்களாலும், மெல்லிய பூங்கொடிபோன்றிருப்பதால் மரகத வல்லி, சினேக வல்லி, சுவர்ணவல்லி இமயவல்லி, பொற்கொடி, பூங்கொடி முதலான பெயர்களாலும் அழைக்கப் படுகின்றாள்.

மேலும் சிவபெருமான் அன்பர்களுக்கு அருள்பாலிக்க நடராஜர் சந்திரசேகரர், கஜசம்ஹாரர் முதலானவடிவம் கொள்ளும்போது அவருடன் விளங்கும் அம்பிகையும் தனிச்சிறப்பான தனிப்பெயர்களைப் பெறுகிறாள்.

மகேஸ்வர வடிவமான சிவமூர்த்தியின் பெயர்களும் அவருக்கிணையாக அமைந்த பார்வதியின் பெயர்களும் ஸ்ரீதாக்ஷிண குடித்வீப க்ஷேத்ர மகாத்மியம் எனும் தென்குடித் திட்டைத் தலப்புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளன. அதனைப் பின்வரும் பட்டியலில் காணலாம்.

1. லிங்கோத்பவர் - மோட்சப்பிரதாயினீ
2. திரிமூர்த்தி - வம்சவிருத்திப்பிரதாயினீ



கஜசம்ஹாரர் - தேவியுடன்

3. கல்யாணசுந்தரர் - சர்வமங்களப் பிரதாயினீ
4. உமாசகாயர் - பார்யா சௌக்யப்பிரதாயினீ
5. சுகாசனர் - தர்மார்த்தகாமமோட்சப் பிரதாயினீ
6. கங்காதரர் - சர்வபாபப் பிராணாஸினீ
7. நடராஜர் - ஸம்பத்யோகப் பிரதாயினீ
8. சண்டேச அனுக்கிராகர் - மகாபாதகநாசினீ
9. வ்ருஷபவாகனர் - தர்மசித்திப்ரதாயினீ
10 நீலகண்டர் - விஷதோஷப் பிராணஸினீ
11. ஹரிஹரர் - தர்மார்த்த தாயினீ
12. ஏகபாதர் - மகாரோகவிநாசினீ
13. அர்த்தநாரீசர் - சர்வசௌக்யப் பிரதாயினீ
14. தட்சணாமூர்த்தி - மேதா பிரக்ஞா பிரதாயினீ
15. சோமாவிநாயகர் - ஸர்வசித்திப் பிரதாயினீ
16. சோமாஸ்கந்தர் - புத்ரசௌக்யப் பிரதாயினீ
17. சந்திமௌலீசுவரர் - தனதான்யப் பிரதாயினீ
18. வீரபத்திரர் - சத்ருவித்வேஷ்டவிநாசினீ
19. காலசம்ஹாரர் - சர்வாரிஷ்டவிநாசினீ
20. காமந்தகர் - யோகவிக்ன விநாசினீ
21. கஜாந்தகர் - பராபிசாரசமனீ
22. திரிபுரசம்காரர் - ஜன்மஜராம்ருத்யுவினாசினீ
23. பிட்சாடனர் - யோகஷித்ப்ருத்த விமோஹினீ
24. ஜலந்தரசம்ஹாரர் - துஷ்டவிநாசினீ
25. சரபர் - அரிப்பிராசினீ
26. பைரவர் - ரட்சாகரீ.

இவை புராணங்களில் சொல்லப்பட்டவைகளாகும். இவை தவிர தற்போது நடைமுறையில் சிவாலயங்களில் சிவபெருமானோடு இணைந்த நிலையில் விளங்கும் அம்பிகையின் பெயர்களைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொடர்ந்து காணலாம். இவை ஆயிரக்கணக்கான திருத்தலங்களில் வழக்கில் உள்ள பெயர்களாகும்.

1. நடராசர் - சிவகாமி
2. தியாகராஜர் - கமலாம்பிகை
3. சந்திரசேகரர் - பாலாம்பிகை
சந்திரசேகரர் - இந்துசேகரி
4. சோமாஸ்கந்தர் - உமாதேவி (கொண்டி)
5. காசிவிசுவநாதர் - விசாலாட்சி
6. ஏகாம்பரநாதர் - காமாட்சி
7. சோமசுந்தரர் - மீனாட்சியம்பிகை
8. வியாக்ரபுரீசுவரர் - சௌந்தராம்பிகை
9. அகத்தீசுவரர் - ஆனந்தவல்லி (அகிலாண்டேஸ்வரி)
10. அண்ணாமலையார் - உண்ணாமுலைநாயகி
11. ஜலகண்டேசுவரர் - அகிலாண்டேசுவரி
12. பிட்சாடனர் - மோகினி
13. கங்காதரர் - மோகினி
14. மார்க்கசகாயர் - மரகதவல்லி
15. பிரதோஷநாயகர் - அமுதீசுவரி
16. வீரபத்திரர் - பத்ரகாளி
17. அகோரர் - அகோரேசி
18. சூர்யேசுவரர் - மங்களாம்பிகை
19. வைத்தியநாதர் - தைலநாயகி
20. அமுதகடேசர் - அபிராமி
21. காளத்தீசுவரர் - ஞானப்பூங்கோதை
22. வேதகிரீசுவரர் - திரிபுரசுந்தரி
23. இராமநாதர் - பர்வதவர்த்தனி
24. அக்னீசுவரர் - சௌந்தரநாயகி
25. காமேசுவரர் - காமகலா
26. நெல்லையப்பர் - காந்திமதி
27. சங்கரலிங்கம் - சங்கரகோமதி
28. வேதபுரீசுவரர் - வேதவல்லி
29. சிவசைலநாதர் - பரமகல்யாணி
30. ஞானேசுவரர் - ஞானேசுவரி
31. கேதாரேசுவரர் - கௌரி
32. ஏகாம்பரேசுவரர் - காமாட்சியம்மன்
33. மகாருத்ரர் - ரோகசி

இவைதவிர அன்பர்கள் பார்வதியைத் தங்களின் மனதிற்கேற்பவும் புராணங்களில் சொல்லப்பட்டதற்கு ஒப்பவும் பலபெயர்களால் அழைக்கின்றனர். (எ.கா) மதுரையின் ஆதிப்பெயர் கடம்பவனம் ஆதலின் மீனாட்சியைக் கடம்பவனப் பூங்குயில் என்றும் திருமயிலை கற்பகாம்பிகை யைப் புன்னைவனப்பூங்குயில் என்றும் அழைக் கின்றனர். கோகிலம் என்பது குயிலாகும். திரு மணஞ்சேரியில் வீற்றிருக்கும் அம்பிகைக்குக் கோகிலாம்பிகை என்பது பெயராயிற்று.

இப்படிப் பலநூறு இயற்கையோடு இயைந்த பெயர்களினாலும் அவள் அழைக்கப்படுகின்றாள்.

❑ மேலும் அம்பிகையைச் சிவனடியார்கள் தங்களது சொந்தமகளாகவே பாவிக்கின்றனர். எனவே தங்கள் குழந்தைகளுக்கு அம்பிகையின் பெயரையே சூட்டுகின்றனர். நெல்லையில் காந்திமதி என்ற பெயரும், சங்கரன் கோயில் வட்டாரத்தில் கோமதி என்ற பெயரும், மதுரை வட்டாரத்தில் மீனாட்சி என்ற பெயரும், தொண்டைமண்டலத்தில் காமாட்சி என்ற பெயரும் அதிக அளவில் பெண்களுக்குச் சூட்டப்பட்டிருப் பதைக் காணலாம்.

❑ சிவபெருமான் "பிரான்" என்றழைக்கப்பட்டதால் அம்பிகை "பிராட்டி" என்றும், பெருமான் என்ற ழைக்கப்பட்டதால் பெருமாட்டி என்றும் அழைக் கப்பட்டாள். சிவாலயக் கல்வெட்டுக்கள் அம்பிகை யை நம்பிராட்டியார், தம்பிராட்டியார், பெரும் பிராட்டியார் என்றும் பலவாறு குறிக்கின்றன.

❑ கல்வெட்டுக்களில் அம்பிகை பொதுவாக உமா, உமாபட்டாரகி, காமகோட்டத்து நாச்சியார் என்றழைக்கப்பட்டாலும் பலதலங்களில் உள்ள கல்வெட்டுக்களில் தனியான சிறப்புப் பெயர் களையும் காண்கிறோம். எடுத்துக்காட்டாக எதிர் கொள்பாடியிலுள்ள கல்வெட்டில் பெருங்கரு ணைப் பிராட்டியார் என்றும், வெஞ்சமாக் கூடல் கல்வெட்டில் பனிமொழிப்பாவை என்றும் கொள் ளம்பூதூர் கல்வெட்டில் அழகிய நாச்சியார் என்றும் இதே ஊரிலுள்ள இன்னொரு கல்வெட்டில் நீரளித்த மென்முலை நாச்சியார் என்றும் குறிக்கப்பட்டுள் ளாள். பாம்பரத்திலுள்ள கல்வெட்டு அவளை மாமலையாட்டி என்று அழைத்து மகிழ்கிறது.

"அம்பிகை அம்பிகாபதி அருளால் அன்பர்கள் நீடூழி இன்பமுடன் இனிது வாழ்க"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஆரூர் அழகனே போற்றி! அரம்பையர் தலைவா போற்றி! போற்றி!!



அரம்பையீசுவரர்

உலகிலுள்ள அனைத்து உயிர்களும் தமக்கு என்றும் மாறாத இளமையுடன், அழகையும், வலிமை யையும் வேண்டியே நிற்கின்றன. இளமையும் அழ கும் மனத்திற்கு மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் மேன்மையையும் தருகின்றன.

தேவ உலகில் மாறாத இளமையுடன் கவர்ச்சி யையும் பெற்றுத் தமது ஆடல் பாடல்களால் இன்பத் தைத் தருபவர்களாக விளங்குபவர்கள் தேவகன்னி யர்களாவர். இவர்கள் உலகிலுள்ள இன்பப் பொருட்க ளில் நிறைந்து நின்று அவற்றிற்கு அழகூட்டுகின்றனர். நடனம், இசை, ஓவியம், காவியம் ஆகியவற்றில் ஊடுருவி நிற்பவர்களும் இவர்களேயாவர்.

தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து இந்த தேவகன்னியர்கள் வெளிப்பட்டனர் என்று புராணங்கள் கூறுகின்றன. இவர்களின் தலைவி அரம்பையாவாள். இவள் மகாசிவ பக்தை. சிவபிரானைப் பூசித்து அழகும் பொலிவும் பெற்றவள். இவளின் பெயரால் சிவபெருமான் அரம்பேசுவரர் என்று பெயர் பெறுகின்றார்.

அரம்பை தன்னை வழிபடுபவர்களுக்கு இளமையையும் வளத்தையும் மாறாத இன்பத்தையும் தந்து அருள்பாலிக்கின்றாள். ஆதலால் இவளையும் இவளுடைய கூட்டத்தை வழிபடுவதுமே ஒரு தனி வழிபாடாகி விட்டது. இவளைக் குறித்து அனேக பெண்கள் விரதமிருக்கின்றனர். இந்த விரதம் "ரம்பா திருதிய விரதம்" என்று போற்றப்படுகிறது.

சிவமஞ்சரியின் இருபத்தி மூன்றாம் மலரான இந்த மலரில் அரம்பையர் வழிபட்ட சிவலிங்கங் களான அரம்பேசுவரரைப் பற்றியும் சிவவழிபாட்டில் அரம்பையர்கள் பெற்றுள்ள நிலைகளையும் தொகுத் துக் காணலாம்.

வாழைமரத்திற்கும் அரம்பை என்பது பெயரா கும். வாழைமரத்தடியில் வீற்றிருப்பதாலும் சிவபெரு மானுக்கு வாழையீசர், அரம்பையீசர் என்பன பெயர் களாயின. அத்தகைய சிவநெறிச் செய்திகளையும் இம்மலரில் தொடர்ந்து காணலாம். -சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரம்பையர் - ஒரு விளக்கம்

ஒரு சமயம், தேவர்களும் அசுரர்களும் கூடி அமுதம் பெற வேண்டிப் பாற்கடலைக் கடைந்தனர். அதிலிருந்து முதலில் விஷம் வெளிப்பட்டு அனை வரையும் ஓடஓடத் துன்புறுத்தியது. அதனை மகா தேவனாகிய சிவபெருமான் உண்டு உயிர்களைக் காத்தார். மீண்டும் பாற்கடலைக் கடைந்தபோது காம தேனு, கற்பகவிருட்சம், ஐராவதம், மூதேவி, சந்திரன், அப்சரஸ், லட்சுமி, தன்வந்திரி ஆகியோரும் அவர் களைத் தொடர்ந்து 60,000 அப்சரப்பெண்களும் தோன் றினர். அவர்கள் அதிக அழகுடன் இளமை ததும்பு பவர்களாயும் அனேக ஆபரணங்களைப் பூண்டு பட்டாடையில் பிரகாசிப்பவர்களாகவும் விளங்கினர். இவர்களில் அனேகர் பலவகையான இசைக்கருவி களை ஏந்தி இன்னிசை பாடினர். அவர்களின் அழகைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர்.

அவர்கள் சிவபெருமானை வலம் வந்து தாங்கள் என்றும் நித்யகன்னியர்களாக அனேக சுகங்க ளையடைந்திருக்க அருள்புரிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். சிவபெருமான் அவர்களுடைய பூசனையால் மகிழ்ந்து அவர்கள் விரும்பிய வரத்தைத் தந்து அவர்களுக்கென தனியே ஒரு உலகத்தையும் படைத்துத் தந்தார்.

அவர்கள் "அப்சரஸ்" என்று அழைக்கப் பட்டனர். அவர்களுடைய உலகம் அப்சரலோகம் எனப்பட்டது. அவர்களுடைய தலைவி அரம்பை யாவாள். இதனால் இவர்கள் அரம்பையர் என்றும் அந்த உலகம் அரம்பையர் உலகமென்றும் அழைக் கப்பட்டது.

இவர்கள் வேண்டியபோது வேண்டிய வடிவம் எடுப்பார்கள். ஆடல் பாடல்களிலும் இசைக்கருவி களை இயக்குவதிலும் வல்லவர்கள். எங்கும் எளிதில் செல்லும் ஆற்றல் பெற்றவர்கள். யாருடைய கட்டுப் பாடுமின்றி, சுதந்திரமாக எங்கும் சென்று மகிழ்பவர்கள். என்றாலும், தேவருலகில் ஆடல், பாடல்கள் நிகழ்த்தித் தேவர்களை மகிழ்விப்பவர்கள்.

இவர்கள் எப்போதும் கூட்டமாகவே செல்ப வர்கள். இவர்களிடத்தில் பதினான்கு வகையான பிரிவு கள் உள்ளன. இவற்றை அப்சர சதுர்த்தச கணமென்பர். பொதுவாக "அப்சரகணம்" என்றும் கூறுவர்.

சிவாலய பூஜையின் ஒரு அங்கமாக நிகழ்த் தப்படும் ஸ்ரீபலி எனும் நிகழ்ச்சியில் மகாபலி பீடத்தில் மற்றைய தேவர்களுடன் இவர்களும் பூசிக்கப்படு கின்றனர். தென்மேற்கிற்கும் மேற்கிற்கும் இடையி லுள்ள இடத்தில் இவர்களுக்காகப் பலி அளிக்கப்படு கின்றது.

இந்தக் கணத்தொகுதிகளில் குறிப்பிடத்தக்க வர்கள் அரம்பை, அலம்புசை, மனோகரை, ஊர்வசி, சுனகை, மேனகை, திலோத்தமை, சந்திரகலை, கலாநிதி, மோகினி, சந்திரலேகை என்பவர்களாவர்.

அரம்பையர்களின் பதினான்கு கணங்களுக் கும் பெருந்தலைவியாக இருப்பவள். அரம்பையாவாள். இவர்கள் யாவரும் சிவபூசையில் திளைப்பவர்கள். சிவசந்நிதியில் மலர் தொடுத்தல், சுத்தநிருத்தம் புரிதல், சிவனுடைய உலாவில் அஷ்டமங்கலங்களை ஏந்திச் செல்லுதல் முதலிய பணிகளை மகிழ்வுடன் செய்து வருபவர்கள்.

உமாதேவியரின் தோழியர்களாக இருப்பவர் கள். அவளுடன் உடனுறைந்து அடியவர்களுக்குக் காட்சியளிப்பவர்கள்.

மேலும் இதே பெயரில் உள்ள வேறு தெய்வ மங்கையர்களும் உள்ளனர். திருமால் நரநாராயணனாக இருந்தபோது அவர் தனது தொடையினின்று உற்ப வித்த ஊர்வசி, பிரம்ம தேவனால் உண்டாக்கப்பட்ட, ஊர்வசி, திலோத்தமை, மேனகை முதலான பெண் களும் உள்ளனர்.

இரண்டாவதாகச் சொல்லப்பட்டவர்களும் அரம்பையர் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே என்றாலும் இந்திரனைத் தலைவனாகக் கொண்டு அவனுடைய ஏவல் படி நடப்பவர்கள். அவனுடைய ஆணையால் பெருந்தவம் புரிபவர்களின் தவங்களைக் கெடுத்து அவர்களுடைய சாபத்திற்கு இலக்கானவர்கள். இவர்கள் அபூர்வமாகவே சிவபூசை செய்பவர்கள்.

மேலும் பூமண்டலத்தில் கணவனோடு இன்பமாக வாழ்ந்து வந்து அனேக நல்லறங்களைப் புரிந்தபோதிலும் இன்பவேட்கையால் வேறு சிலரை மனத்தால் வரித்தவர்களும் இந்த உலகினை அடைவர் என்று புராணங்கள் கூறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைத்து இன்பங்களுடன் சுதந்திரமாக வாழும் இவர்களை வழிபட்டால் இன்பமும் செல்வமும் சுகமும் கிடைக்கும் என்று நம்புகின்றனர். எனவே ஆனிமாத திருதிய நாளில் இவளையும் இவளுடைய கணங்களையும் வழிபடும் வழக்கம் உள்ளது. இதனை 'ரம்பா திருத்யா விரதம்' என்று கொண்டாடுவர். காலப் போக்கில் இந்த விரதம் ஏனோ கைவிடப்பட்டுவிட்டது.

தனிவழிபாடாக இல்லாவிட்டாலும் சிவபூசையின் ஒரு அங்கமாக அரம்பையர்களைப் பூசிக்கும் வழக்கம் இப்பொழுதுமுள்ளது. கும்பாபிஷேகம் முதலான பெருஞ்சாந்தி விழாவில் யாகமேடையைச் சுற்றிலும் எட்டுமங்கலங்களை ஏந்தியுள்ள அரம்பையர்கள் பூசிக்கப்படுகின்றனர். அப்போது அவர்களுக்குரிய நிவேதனம், பூசை, பலி ஆகியனவும் அளிக்கப்படுகின்றன.

அஷ்டமங்கலம் ஏந்தும் அஷ்டஅரம்பையர்

உலகில் மங்கலச்சின்னமாக ஆயிரமாயிரம் பொருட்கள் உள்ளன. ஒரு சுபவேளையில் அவை யாவற்றையும் மங்கலப் பொருளாகக் கொண்டுவந்து மேடையில் வைக்கமுடியாது. ஆதலால் அவற்றில் குறிப்பிடத்தக்க எட்டு பொருட்களைச் சுபசடங்குகளில் வைத்து வழிபடுகின்றோம். இந்த எட்டையும் அஷ்டமங்கலம் என்பர்.

இது இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது. திருமணம், பிறந்தநாள் ஊர்வலம் முதலியவற்றில் இந்த எட்டு மங்கலப் பொருட்களை ஏந்திப் பெண்கள் செல்லும் வழக்கம் இருந்தது. சைவ சமயத்தில் கூறப்படும் எட்டு மங்கலப் பொருள்கள் கண்ணாடி, பூரணகும்பம், இடபம், இரட்டைக்கவரி, ஸ்ரீவத்சம், சுவஸ்திகம், சங்கு, அடுக்குத் தீபம் என்பவாகும். பூசையின் போது இவற்றை உரிய மந்திரங்களால் பூசிக்கின்றனர்.

சிவாலயங்களில் யாகவேதிகையினைச் சுற்றிலும் அரம்பையர்கள் அஷ்ட மங்கலங்களை ஏந்தியவாறு நிற்கின்றனர். இதன்படி ஊர்வசி கண்ணாடியையும், மேனகை பூரணகும்பத்தையும் ஏந்தியவாறு கிழக்கிலும் : ரம்பை இடபக்கொடியையும் திலோத்தமை இரட்டை சாமரங்களையும் ஏந்தி தெற்கிலும் : சுமுகி ஸ்ரீவத்சத்தையும், சுந்தரி சுவஸ்திகத்தையும் ஏந்தி மேற்கிலும் காமுகி சங்கையும் காமவர்த்தினி அடுக்கு தீபத்தையும் ஏந்தியவாறு வடக்கிலும் நிற்கின்றனர் என்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன. இவர்கள் அஷ்டகன்னியர், அஷ்டரம்பையர் என்று பலவாறு அழைக்கப்படுகின்றனர்.



★ அப்ஜம் என்றால் தாமரை. சரஸ் என்றால் நீர்நிலை இரண்டு சொல்லும் சேர்ந்து அப்ஜசரஸ் - அப்சரஸ் ஆனது. தாமரை மலர் நிறைந்த குளம் போல மனதிற்கு மகிழ்ச்சியும் இதமும் தரும் பெண்கள் ஆதலில் இவர்கள் அப்சரஸ் என்று அழைக்கப்பட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் சிவாலயத்தில் அன்பர்களை வரவேற்பவர்களாக விளங்குபவர்கள் அரம்பையர்களாவர். இதனைக் குறிக்கும் வகையில் ராஜகோபுரத் துவாரங்களில் துவாரபாலகர்களுக்குப் பக்கத்தில் அரம்பையர்களின் வடிவங்களை அமைக்கும் வழக்கம் உள்ளது. சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலய ராஜகோபுரத்தில் இந்தக் காட்சியைக் காணலாம். ஒவ்வொரு நிலையிலும் துவார வாயிலில் துவார பாலகர்களுக்கு அருகில் ஸ்ரீவத்சம், இடபம், கொடி முதலிய மங்கலங்களை ஏந்தியவாறு அப்சரப் பெண்கள் கலையெழிலுடன் நிற்பதைக் காண்கிறோம்.

சைவ, வைணவ சமயங்களில்மட்டுமன்றி சமண, பௌத்த சமயங்களிலும் அஷ்டமங்கலங்கள் சிறப்பாகப் போற்றப்படுகின்றன. சமண சமய ஆலயங்களில் மாலையில் நடைபெறும் தீபாராதனையின் ஒரு அங்கமாக அஷ்டமங்கலப் பொருட்களை இறையுருவத்தின் முன்பு ஒவ்வொன்றாகச் சுட்டிக் காட்டுவது மரபு. இதற்கு அஷ்டமங்கல பூஜை என்பது பெயராகும்.

மேலும் பல ஊர்களில் கைகளில் சாமரங்களை ஏந்திக்கொண்டு ஒயிலாக நிற்கும் எட்டு பெண்களின் உருவங்களை ஒரே கல்லில் வரிசையாகச் செதுக்கி வைத்துள்ளதைக் காண்கிறோம். இவை அஷ்டஅரம்பையர்களைக் குறிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். நாட்டுப்புற வழக்கில் இப்பெண்களை அஷ்டகன்னிகள் என்று கூறி வழிபடுகின்றனர்.

திருவண்ணாமலை அரம்பை

அரம்பையர்கள் சிவபூசையில் திளைப்பவர்கள். தேவலோகத்திலிருந்து முசுகுந்தன் தியாகராஜப் பெருமானைப் பூமிக்குக் கொண்டுவந்து திருவாரூரில் வைத்தபோது, தியாகராஜரைப் பிரிய மனமின்றி அரம்பையர்களும் பூமிக்கு வந்து பிறந்தனர் அவர்கள் வழிவந்தவர்களே கோயில் பெண்களாவர். இவர்கள் பதியிலார் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் நல்ல அழகும், அறிவும், மாறாத இளமையும் பெறத் தங்கள் குலமுதல்வியான அரம்பையைப் போற்றி வழிபட்டனர்.

திருவண்ணாமலையில் வாழ்ந்த பதியிலார் பெண்கள் சுவாமி தலைவாயில் வழியாக உள்ளே செல்லும் போதும், வெளியே வரும் போதும், தட்டு, குடதீபம் இவற்றைக் காட்டினர். இந்த வாயிலில் தீபாராதனை செய்யும் உரிமை இவர்களுக்கு இருந்தது. இந்தக் கோபுரக் குடைவரையில் தங்கள் குல முதல்வியான அரம்பையின் உருவினை ஆடற் கோலத்துடன் அமைத்தனர். அரம்பை எப்போதும் சிவசந்நிதியிலும் அவருடைய வீதிஉலாவிலும் நடனமாடி மகிழ்வதைக் குறிப்பதாக இது அமைந்தது (இப்போது இச்சிலையை மோகினி என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய ஆடும் கோலத்திலுள்ள அரம்பையை வேறெங்கும் காண முடியவில்லை.

❀ சிவபெருமான் பவனி வரும்போது ஊர்வசி வாளையும், அரம்பை செங்கோலையும் ஏந்தி ஊர்வலத்திற்கு முன்னே செல்கின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன. திருவாரூர்ப் பதிகத்தில் திருநாவுக்கரசர் ஆதிரைவிழாவின்போது நடைபெற்ற தியாகராஜர் பவனியில் அரம்பையர்கள் ஆடிவந்ததை மனக்கண்ணால் கண்டு குறித்துள்ளார்.

❀ முசுகுந்த சகஸ்ரநாமத்தில் சிவபெருமான் ரம்பையின் புஷ்பாஞ்சலியால் மகிழ்கின்றார் (ரம்பா புஷ்பாஞ்சலி ப்ரீதாயை நம:) என்றும் அப்சரஸ்களால் மிக்கப் பணிவுடன் வீசப்படும் சாமரக்காற்றால் மகிழ்பவர் (அப்சரோ ஹஸ்த விந்யஸ்த சாமர ஸ்தோம வீஜிதாயை நம:) என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரம்பை வழிபட்ட தலங்கள்

அழகும் இளமையும் நிறைந்த அரம்பையும் அவளுடைய கூட்டமும் அனேக இடங்களில் சிவபூஜை செய்துள்ளனர். இவை அரம்பேசுவரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

கோட்டூர் அரம்பேசுவரம்

அரம்பை சிவபூசை செய்த தலங்களில் முதன்மையானது கோட்டூர் ஆகும். இது திருஞானசம்பந்தர் பாடிப்பரவிய தலம். அப்பரடிகளும், சுந்தரரும் தமது ஊர்த்தொகையில் குறித்த தலம். திருஞானசம்பந்தர் அரம்பை தனது சேடிகளோடு இங்கு வழிபட்டதை இரண்டாம் பாடலிலும் ஒன்பதாம் பாடலிலும் குறித்துள்ளார். தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி திருத்துறைப் பூண்டி சாலையில் மன்னார்குடியிலிருந்து 20.கி.மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள தலவரலாற்றின்படி:-

ஒரு சமயம் இந்திரனுடைய சபையில் அரம்பை, திலோத்தமை, மேனகை, ஊர்வசி, கெற்பை, பரிமளை, சுகேசி என்னும் ஏழு அரம்பையர்கள் நடனமாடினர். அந்த அற்புதமான நடனத்தில் அனைவரும் மனம் மகிழ்ந்தனர். அது முடிந்த பிறகு அவர்களின் தலைவியாகிய ரம்பை அருகிலிருந்த ஒரு பூஞ்சோலையில் தங்கினாள். நெடுநேரம் ஆடிய களைப்பால் அவளுக்கு உறக்கம் வந்தது. இனிய தென்றல் வீசியதால் அவள் நன்றாக அயர்ந்து உறங்கிவிட்டாள். காற்றில் அவள் ஆடைகள் விலகிவிட்டன. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததால் அவளுக்கு எதுவும் தெரியவில்லை.

அவ்வழியாக வந்த நாரதர் அவள் அலங்கோலமாகப் பொதுஇடத்தில் உறங்குவதைக் கண்டு கோபித்தார். அவளைப் பூவுலகிற்குச் சென்று பிறக்கும் படிச் சாபமிட்டுவிட்டுத் தன்வழியே சென்றுவிட்டார். உறக்கத்திலிருந்து விழித்த "அரம்பை" அருகிலிருந்தவர்களால் நடந்ததை அறிந்தாள். அவள் ஓடிச்சென்று நாரதரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தன்னை மன்னிக்குமாறு வேண்டினாள்.

முனிவரின் மனம் கசிந்தது. "பெண்ணே, நான் அளித்த சாபம் பலித்தே தீரும் என்றாலும் நீ பூவுலகம் சென்று சிவபூசை செய்து மேன்மை பெறுவாய்," என்றார்.

அரம்பை பூவுலகம் வந்தாள். பாலியாற்றங் கரையிலுள்ள பாதிரி வனத்தில் அனேக காலம் தவம் செய்தாள். நெடுநாளாகியும் அவளுக்குச் சிவனருள் கிடைக்கவில்லை. அவள் அங்கிருந்த ரோமரிஷி முனிவரை வணங்கித் தனக்கு விரைவில் சிவனருள் கிடைக்க வழிகூறுமாறு கேட்டாள். அம்முனிவரும் மகிழ்ந்து பெண்ணே "நீ இங்கிருந்து காவிரிக்குத் தெற்கே சென்று வன்னிவனத்தில் விளங்கும் சிவபெருமானை வழிபடுக உனக்கு விரைவில் சிவதரிசனம் கிடைக்கும்." என்றார்.

அதன்படியே அவள் பிரம்மதேவனும், இந்திரனும், முனிவர்களும் வணங்கிய வன்னி வனத்தை அடைந்தாள். அங்கு மூலமாய் முளைத்தெழுந்து நின்ற சிவபெருமானைக் கண்டு வழிபட்டாள். அத்தலத்தில் தனதுபெயரால் ஒரு தீர்த்தத்தை அமைத்தாள். அதன் கரையில் தன்ஆன்மபூஜைக்காக அரம்பேசுவரர் எனும் சிவலிங்கத்தையும் அமைத்துச் சிறப்புடன் வழிபட்டாள்.



அரம்பை - கோட்டூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தினமும் விதிப்படி நீராடி ஆன்ம பூஜைமுடித்து வன்னீஸ்வர பெருமானை ஆராக்காதலுடன் வழிபட்டாள் நாட்கள் நகர்ந்தன.

இந்திரலோகம் அரம்பை இன்மையால் பொலிவிழந்து காணப்பட்டது. இந்திரன் நெடுநாட்கள் தேடியும் அவள் அகப்படவில்லை. தேவர்களும் ஆடல் பாடல் இன்பத்தை நுகரவழியின்றி வருந்தினர். இந்திரன் ஒருநாள் நாரதரின் சாபத்தால் அவள் பூவுலகில் தங்கிச் சிவபூசை செய்வதை அறிந்தான். சித்திரசேனன் என்ற கந்தர்வனைப் பூவுலகம் சென்று அரம்பையை அழைத்துவர ஏவினான். அதன்படியே கந்தர்வன் பல இடங்களில் தேடியபின் வன்னிவனத்திற்கு வந்து அரம்பையை கண்டான். அவளிடம் இந்திரனின் அழைப்பை ஏற்று உடன் வருமாறு கூறினான்.

அவள், அவனிடம், அன்பனே! தேவருலகில் காணாத சுகத்தை இங்குச் சிவபூசையால் பெறுகிறேன். இதில் என்மனம் நிலைபெற்றுள்ளது. சிவதரிசனத்தைப் பெறாமல் இவ்விடத்தை விட்டு நகரமாட்டேன். இந்திரனிடம் இதனைக் கூறுக என்றாள். பலவாறு கூறியும் அவள் மனம் மாறாததால் கந்தர்வன் சுவர்கத்திற்குத் திரும்பிச்சென்று இந்திரனிடம் நடந்ததைக் கூறினான்.

இந்திரன் அதைக்கேட்டு கோபம் கொண்டான். ஐராவதத்தை அனுப்பி அவளைக்கையோடு அழைத்து வருமாறு ஆணையிட்டான்.ஐராவதம் தனது பெருத்த காதுகளைப் புயல்போல வீசிக் கொண்டு வன்னிவனத்தினை அடைந்தது. அங்கே அரம்பையைக் கண்டு, "பெண்ணே, தேவர் தலைவனின் அழைப்பை ஏன் அலட்சியம் செய்கிறாய்? இப்போது நீ என்னுடன் வரவில்லையென்றால் உன்னைத் தூக்கிச் செல்வேன் என்று இறுமாப்புடன் கூறியது. அவள் வெள்ளை யானையே." எனதுச் சிவபூசைக்கு ஊறு செய்யாதே. இவ்விடத்தை விட்டு உடனே அகன்று செல்" என்று கோபத்தோடு கூறினாள்.

ஐராவதம் கோபம் கொண்டது. அவளைப் பற்ற, தனது துதிக்கையை நீட்டியது. அரம்பை அஞ்சித் தான்வழிபடும் சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

கண்களை மூடிக்கொண்டு, "சிவபெருமானே சரணம்! சரணம்! என்று ஓலமிட்டாள். ஐராவதம், "பெண்ணே என்னிடமிருந்து உன்னைக் காப்பவர்யார்? உன்னைமட்டுமல்ல நீவழிபடும் சிவலிங்கத்தையும் சேர்த்தே இந்திரலோகம் கொண்டுசெல்வேன் என்று முழங்கி அந்த இடத்தைத் தன் கொம்புகளால் அகழத் தொடங்கியது. சிவபெருமான், அரம்பையின் அன்பால் நெகிழ்ந்தார். அகங்காரத்துடன் விளங்கும் ஐராவதத்தைத் தண்டிக்க எண்ணி அந்த லிங்கத்திலிருந்து வெளிப்பட்டார். அதனை ஓங்கி உதைத்தார். அதன் உடல் பலவாறாகச் சிதற, அது ஓலமிட்டுக் கொண்டே வீழ்ந்துத் தனது உயிரைவிட்டது. சிவபெருமான் அரம்பைக்குக் காட்சியளித்ததுடன் பலவரங்களையும் தந்தார். அவள் முன்பைவிட அன்புடையவளாகிச் சிவபூசை செய்து கொண்டிருந்தாள்.

ஐராவதம் அழிந்த கதையை இந்திரன் அறிந்தான், அஞ்சி நடுங்கினான். சிவஅபராதம் செய்ததற்காகப் பயந்தான். திக்பாலகர்களுடன் புறப்பட்டு அந்த இடத்தை அடைந்தான். அரம்பையைத் தொழுது வணங்கினான். அவள்வழிபட்ட லிங்கத்தை வழிபட்டு நெடுநாள் தவம் கிடந்தான். அவனுடைய கடுந்தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்கும் தேவர்களுக்கும் காட்சியளித்தார். இந்திரன் தனதுதேவ உலகம் மகிழ ஐராவதத்தை உயிர்ப்பித்துத் தருமாறு வேண்டினான். சிவபெருமான் அதை உயிர்ப்பித்து அளித்ததுடன் அரம்பையையும் முன்போலவே அவனுக்கு பணி செய்யும்படி பணித்து அளித்தார். அனைவரும் மகிழ்ந்தனர்.

ஐராவதத்தின் கொம்புகளாகிய கோட்டால் அகழப்பட்டதால் அத்தலம் கோட்டூர் என்று பெயர் பெற்றது. அரம்பைக்கு அருள் செய்ததால் இறைவன் அரம்பேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். அம்பிகையின் பெயர் "மதுரபாஷிணி" என்பதாகும், சுவாமியின் பெயர் இந்நாளில் கொழுந்தீசுவரர் என வழங்குகின்றது.

(ஐராவதம் அலறி வீழ்ந்தபோது அதன் தலைப் பகுதி வீழ்ந்த இடம் குளமானது அதுவே மண்டைதீர்த்தம் என்று வழங்குகின்றது. அதன் மணிகள் வீழ்ந்த இடத்தில் அமைந்த கோயில் மணியம்பலம் என்று பெயர்பெற்றது. இந்தக் கோட்டூர் மணியம்பலம் திருவிசைப்பா பெற்ற பதியாகும்.)

இங்குள்ள ஆலயத்தில் தவம் செய்யும் கோலத்தில் அமைந்த அரம்பையின் வடிவம் உள்ளது. அவள் உண்டாக்கிய தீர்த்தம் அரம்பை தீர்த்தம் என வழங்கப் பட்டு வந்தது. இந்நாளில் அது கருப்புட்டியான் குளம் என்று அழைக்கப்படுகின்றது.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

அரம்பைக்கு இறைவன் காட்சியளித்த நாள் கார்த்திகை மாதம் ரோகிணி நட்சத்திரமாகும். இந்நாளில் அரம்பைதீர்த்தத்தில் மூழ்கி, அரம்பையையும் கொழுந் தீசரையும் வழிபடுபவர்கள் சகலசெல்வ நலன்களையும் பெறுவர்.

இலம்பையங் கோட்டூர் - அரம்பேசுவரர்

அரம்பை வழிபட்டுப் பேறுபெற்ற தலமான இலம்பையங்கோட்டூர் இந்நாளில் எலுமியங்கோட்டூர் என்று அழைக்கப்படுகிறது. காஞ்சிபுரம் (அ) சென்னை யிலிருந்து செல்லம்பட்டிடை என்ற ஊருக்குச் சென்று அங்கிருந்து 1 கி.மீட்டர் சென்றால் இவ்வூரை அடைய லாம். இது சிறுகிராமம் ஆகும்.

இறைவன் அரம்பைக்கு அருள்புரிந்ததால் அரம்பேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். மேலும் தெய்வநாயகர், சந்திரசேகரர் என்றும் அழைக்கின்றனர். அம்பிகையின் பெயர் கோடேந்து முலையம்மை என்ப தாகும். இங்கு அரம்பையர்கள் மல்லிகை வனத்தில் பெருமானைப் பூசித்ததால் மல்லிகை தலமரமாக விளங்குகிறது. தீர்த்தம் மல்லிகை தீர்த்தம், இங்குள்ள தட்சணாமூர்த்தி அரம்பையர்களுக்கு ஆன்ம ஞானத்தை விளக்குபவராகக் காட்சியளிக்கின்றார். இதைக் குறிக்கும் வகையில் அவர் தனது இடது கை யினை மார்பின் மத்தியில் வைத்துள்ளார்.

கடந்ததை அரம்பேசுவரர்

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பாடல்பெற்ற திருத்தலம் பெண்ணாகடம் ஆகும். இது சிவபெருமான் அப்பரடிகளுக்குத் தோளில் இடபமும், சூலமும் பொறித்த இடமாகும். பெண் (அரம்பையர்கள்) ; ஆ காமதேனு ; கடம் - யானை ; ஆகியோர் பூசித்த தலமா தலின் பெண்ணாகடம் என்றழைக்கப்பட்டது. இப்போது பெண்ணாடம் என்று அழைக்கின்றனர். இங்கு அரம்பையர்கள் வழிபட்ட வரலாற்றைத் தலபுரா ணத்தின் மூலம் காணலாம்.

ஒரு சமயம் தேவர் உலகில் சிவபூசைக்குப் போதுமான மலர்கள் கிடைக்கவில்லை. அதனால் இந்திரன் அரம்பையர்களை அழைத்துப், பூவுலகம் சென்று வண்ண வண்ண நிறமலர்களைப் பறித்து வாருங்கள் என்றான். அவன் ஆணையைக் கேட்ட அரம்பையர்கள் பூவுலகில் புஷ்பவனம் என்ற பெயரை உடைய கடந்தையை அடைந்தனர். அதன் அழகில் மயங்கி அங்கிருந்த ஜோதிலிங்கத்தை வணங்கி அங்கேயே தங்கி, சிவபூசை செய்யத் தொடங்கினர்.

நீண்ட நேரமாகியும் அவர்கள் வராததால் இந்திரன் காமதேனுவைப் பூவுலகம் அனுப்பினான். அது இங்கு வந்தது. அரம்பையர் செய்யும் வழிபாட்டில் ஈடுபட்டு இங்கேயே தங்கிவிட்டது. பிறகு இந்திரன் கோபித்து ஐராவதத்தை அனுப்பினான். காமதேனு வைப் போலவே அதுவும் வந்து இங்கேயே தங்கி விட்டது. இதையறிந்த இந்திரன் மிக்க கோபம் கொண் டான். அவன் தானே புறப்பட்டு இங்கு வந்தான். சோதிலிங்க வழிபாட்டில் மெய்மறந்து நிற்கும் தமது ஏவலர்களைக் கண்டான். அவன் கோபம் மறைந்தது. தானும் அங்கே சிவபூசை செய்ய விரும்பி நெடுநாள் தங்கிவிட்டான். பெண் (அரம்பையர்கள்) ஆ - (காம தேனு) கடம் (யானை) ஆகியவை பூசித்ததால் இவ்வூர் பெண்ணாகடம் என்று அழைக்கப்பட்டது. இறைவன் பிரளயகாலேசுவரர் என்றும் அம்பிகை அழகியகாதலி (ஆமோதனாம்பாள்) என்றும் அழைக்கப்படுகின்றனர்.

திருப்பைஞ்ஞீலி அரம்பேசுவரர்

இது காவிரியின் கரையிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலமாகும். இத்தலத்தில் பெருமான் வாழைமரங்களுக்கு இடையில் அமர்ந்து அருள் பாலிக்கின்றார். உமாதேவியார் ஒருசமயம் இங்கு வந்து தியானத்தில் அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தாள். அவளுக்கு அருள்பாலிக்கப் பெருமான் சுயம்புலிங் கமாக அங்கே எழுந்தருளினார். உமாதேவி மிகுந்த பக்தி கொண்டு ஆகமப்படி அவரைப் பூசித்தாள். அங்கு குளிர்ச்சியான நிழல் இல்லாததால் சில அரம் பைப் பெண்களைப் பார்த்து. இங்கே நீங்கள் வாழை மரமாக இருந்து நிழல் கொடுங்கள் இந்த சிவத்தொண் டினால் நீங்கள் மேன்மை பெறுவீர்கள் என்றாள்.

அதன்படியே அங்கே விமலையைத் தலைவி யாகக் கொண்ட அரம்பையர் கூட்டம் வாழை மரங்க ளாக வடிவெடுத்து அம்பிகைக்கும், சிவபெருமா னுக்கும் நிழல் அளிக்கத் தொடங்கினர். அதனால் அதற்கு விமலாரண்யம் என்பது பெயராயிற்று.

அதன்கீழ் அம்பிகை பெரியதவம் செய்து மகிழ்ந்தாள். அவளுடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவள்முன்னே தோன்றினார். அவள் அவரைத் தொழுது அவருக்கு மாலை சூட்டினாள்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பெருமான் தேவர்களும், முனிவர்களும் காண அவளைத் திருமணம் செய்து கொண்டார். அந்த அரம்பைப் பெண்களின் வழிவந்த வாழைமரங்கள் இன்றும் அக்கோயிலில் உள்ளன. வாழைக்குக் கதலி என்பதும் ஒரு பெயராதலின் இங்கு வீற்றிருக்கும் பெருமானுக்குக் 'கதலிவசந்தர்' என்பதும் பெயராயிற்று.

இத்தலம் திருச்சிக்கு அருகேயுள்ள மணலூர் பேட்டையிலிருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளதாகும். அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் பொதி சோறு அளித்த பழம்பதி.

காசிநகர்
அரம்பை, மேனகை, ஊர்வசீசுவரர்

காசியின் பெருமைகளை விளக்கும் நூலான காசிக்கண்டம் அப்ரஸ்களான அரம்பையர்கள் காசி மாநகரில் பல சிவ லிங்கங்களை நிறுவி வழிபட்டார்கள் என்று கூறுகிறது. அவர்கள் அமைத்த சிவலிங்கங்கள் அப்சரேசுவரர் என்றும், தீர்த்தங்கள் அப்சரதீர்த்தங் கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

காசியில் விசுவநாதர் கோயிலின் வடக்கு வாயிலுக்கு அருகில் அரம்பை அமைத்த லிங்கம் அரம்பேசுவரர் என்னும் பெயரில் உள்ளது. அரம்பை யர்களில் ஒருத்தியான ஊர்வசி வழிபட்ட லிங்கம் ஊர்வசீசுவரர் என்ற பெயரில் கோலாபாக் ஔசான கஞ்சில் உள்ளது. மேனகை பூசித்த லிங்கமும் காசியில் உள்ளதென்றும் கூறுகின்றார். மேலும் காசிக் கண்டத்தில் அப்சரலோகத்தின் வர்ணனை சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

திலோத்தமை வழிபட்ட கழுக்குன்றம்

திருக்கழுகுன்றத்தில் அப்சரஸ்களில் ஒருத்தி யான திலோத்தமை பூசித்துப் பேறு பெற்றாள் என்று இவ்வூர்த் தலபுராணம் கூறுகிறது.

திருநீலக்குடி அரம்பேசுவரர்

கும்பகோணத்தை அடுத்துள்ள ஆடுதுறைக்கு மேற்கேயுள்ள தலம் திருநீலக்குடியாகும் இது இந் நாளில் "தென்னலக்குடி" என்று அழைக்கப்படுகிறது. இங்கு அம்பிகை பசுவடிவம் கொண்டுச் சிவபெருமா னைப் பூசித்துப் பேறு பெற்றாள். அவளுக்குத் துணை யாகப் பசுவடிவுடன் வந்த அரம்பையர்களும் இங்குச் சிவனை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். இதனால் இறைவனுக்கு அரம்பேசுவரர் என்பதும் பெயராயிற்று.

பந்தணை நல்லூர்

ஒரு சமயம் பார்வதிதேவி அரம்பையர்களு டன் பந்து விளையாடினாள். பூவுலகில் அவள் பந்து வந்து அணைந்த இடமே இந்நாளில் பந்தணை நல்லூர் என்றழைக்கப்படுகின்றது.

அவள் தனது விளையாட்டினில் கவனமாக இருந்ததால் அப்போது அங்குவந்த சிவபெருமானை உரிய முறையில் வரவேற்று உபசரிக்கவில்லை. இத னால் கோபமுற்றச் சிவபெருமான் அவளையும் அவ ளுடைய அரம்பையர் கூட்டத்தையும் பசுக்களாகும் படிச் சபித்தார். அவர்கள் பசுவடிவம் தாங்கிப் பூவுலகம் வந்து பந்தணை நல்லூர், கோழம்பம் முதலிய தலங் களில் வழிபட்டனர். பந்தணை நல்லூரில் அம்பிகை யின் சாபம் விலகியபோது அரம்பையர்களின் சாபமும் விலகி அவர்கள் தமது பழைய வடிவத்தைப் பெற்றனர். அவர்கள் முன்னிலும் அழகுடையவர்களாகத் திகழ்ந் தனர். இதனால் இவ்வூர்ப் பெருமானுக்கு அரம்பேசு வரர் என்பதும் பெயராயிற்று.

சக்தியின் பீடமும் அப்சரகூட்டமும்

பார்வதியின் ஆலயத்தில் அரம்பையர்கள் அவளுடைய பணியாளர்களாகவும் தோழியர்களா கவும் விளங்குகின்றனர். சிற்ப நூல்கள் பார்வதியின் பீடத்தில் அப்சரஸ்களின் வடிவங்களை அமைக்க வேண்டுமென்று கூறுகின்றன. நடைமுறையில் இத னைக் காணமுடியவில்லை என்றாலும் திருமாற் பேறு என்னும் தலத்திலுள்ள அம்பிகையின் பீடத்தில் அப்சரஸ்களைக் காண்கிறோம். இந்தப் பீடத்தில் எட்டுமலைகள், எட்டுநாகங்கள் எட்டு யானைகள் ஆகியவற்றின் இடையிடையே எட்டு அப்சரஸ்கள் அமைக்கப்பட்டுள்ளனர். (இங்கு இவர்கள் நான்கு கரங்களுடன் இருப்பதால் இவர்களை அஷ்ட சக்தி யர் அல்லது லோகபாலகிகள் என்றும் ஆராய்ச்சியா ளர்கள் குறித்துள்ளனர். ஆனால் அவர்கள் பஞ்சாவர ணத்தில் பூசிக்கப்படுவதால் இங்குள்ள வடிவங்கள் அப்சரப் பெண்களே என்பது எமது கருத்தாகும்.)

அபிராமிபட்டர், அம்பிகையை, "அரம்பை யர் சூழவந்து அஞ்சல் என்பாய்" என்று அபிராமி அந்தாதியில் குறிப்பிடுவதும் இங்கு எண்ணத் தக்கதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐவர் அரம்பையர் வழிபட்ட மாண்டகன்னீசர்

பெரும்பாலான புராணங்கள் ரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத்தமை என்ற நான்கு பெண்களையே அப்சரஸ்களாகக் கூறுகின்றன. பூஜாபத்ததி நூல்கள் இவர்களுடன் சுமுகி, சுந்தரி, காமுகி, காமவர்த்தனி என்ற நால்வரையும் சேர்த்து எண்மர் என்று கூறும்.

சிற்பநூல்கள் அரம்பையர்களை ஐவர் என்று கூறுகின்றன. இதன்படி மேலே குறிப்பிட்ட நால்வருடன் புலோசை என்பவளையும் சேர்த்து ஐந்து அரம்பையர் என்று கூறுகின்றனர்.

காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதர் சந்நிதிக்கு நேர் எதிரில் ஏறத்தாழ 1 கி.மீ தொலைவில் ஐந்து அரம்பையருக்கான கோயிலும் அவர்கள் அமைத்த அப்சரதீர்த்தமும் உள்ளன. இந்நாளில் இவற்றின் பெயர்கள்மாறி விட்டன. அரம்பையர் கோயில் கிராம தேவதை அம்மன் கோயில் எனவும், தீர்த்தம் ஒக்கப் பிறந்தான் குளம் என்றும் அழைக்கப்படுகின்றன.

இங்கு இந்தத் தீர்த்தம் உண்டானதற்குக் காஞ்சிப் புராணம் கூறும் வரலாறு வருமாறு:- ஒருசமயம் பெரிய தவத்தை உடையவனான மாண்டகன்னர் என்ற முனிவர் சிவனருளால் காஞ்சீபுரத்திற்கு வந்து சிவபூசை செய்து கொண்டிருந்தார். அவர் தேவேந்திரனுக்கும் மேலாக ஊர்வசி, பூர்வசித்தி, மேனகை, புஞ்சிகஸ்தலா, சென்னிகை என்ற ஐந்து அரம்பையர்களைப் படைத்து அவர்களுடன் இன்ப வாழ்வு நடத்தினார்.

அப்பெண்கள் தாம் வாழுமிடத்தில் தாமரை, அல்லி, நீலோற்பலம் முதலான எண்ணிலாத மலர்கள் நிறைந்த பெரிய குளத்தை அமைத்தனர். அது அவர்கள் பெயரால் பஞ்சாப்சர தீர்த்தம் என்றழைக்கப் பட்டது. இதன் கரையில் மாண்டகன்ன முனிவர் அமைத்த லிங்கம் மாண்டகன்னீசர் என்ற பெயரில் உள்ளது. அவர் சிவலோகம் செல்லும் போது அரம்பையர்கள் தம்மைக் காக்குமாறு அவரிடம் வேண்டினர். அவர் அப்பெண்களை நோக்கி நீங்கள் நாம் பூசித்த லிங்கத்தினை நீங்களும் வழி பட்டுப்பேறு பெறுங்கள் என்றார். அப்பெண்கள் பல காலம் அந்தலிங்கத்தைப் பூசித்துச் சிவனருள் பெற்றனர். பிறகு அந்த லிங்கத்திலேயே ஒன்றிக் கலந்தனர். அதனால் அந்தலிங்கம் அப்சரேசுவரர் என்ற பெயரும் பெற்றது. இந்த பஞ்ச அப்சரதீர்த்தம் அல்லது ஐவர் அரம்பையர் தீர்த்தம் என்ற பெயரில் விளங்கி வந்தது.

மற்றோர் சமயம் முனிவர்கள் செய்த யாகத்தின் அவியைச் சுமக்கமாட்டாத அக்னியின் ஏவலர்களும் அவனுடைய சகோதரர்களும் மயங்கி வீழ்ந்து மாய்ந்தனர். அதைக் கண்ட அக்னியும் எஞ்சிய அக்னியின் ஏவலர்களும் காஞ்சீபுரத்திலிருந்த அரம்பையர்களைச் சரணடைந்து பெண்களே எங்களுக்கு அடைக்கலம் கொடுங்கள் நாங்கள் உங்கள் சகோதரர்கள் ஆவோம் என்றனர். அப்பெண்களும் அவர்களை ஏற்றுக் கொண்டனர். அக்னியும் ஏவலர்களும் அத்தீர்த்தத்தில் மறைந்து கொண்டனர். உடனே வேள்விகளில் தீ அடங்கியது. தேவர்களுக்கும் அவிசு கிடைக்க வில்லை. அவர்கள் அக்னியைத்தேடினர். எங்கு தேடியும் அவனைக் காணாது வருந்தினர். இறுதியில் இக்குளத்திலுள்ள மீன்கள் அக்னியை தேவர்களுக்குக் காட்டிக் கொடுத்தன. அக்னியும் வெளிப்பட்டு

❖ காஞ்சீபுரம் மாவட்டம் கினார் என்னும் தலத்திலுள்ள சிவாலயத்தின் மூலத்தானத்தில் சிவலிங்கத்திற்குப் பின்னணியில் சோமாஸ்கந்தரின் பெரிய திருவுருவம் உள்ளது. இதில் சிவபெருமானுக்குப் பின்புறம் பிரம்மா, திருமால் ஆகியோருடன் ரம்பை கவரி வீசும் கோலத்தில் அமைந்து உள்ளாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தீர்த்தக் கரையில் வன்னீசர் என்ற பெயரில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டுச் சிவனருளால் அவி களைச் சுமக்கும் ஆற்றலையும் இழந்த சகோதரர் களையும் பெற்றான். அக்னிக்குச் சகோதரர்களை அளித்ததால் அக்குளம் சகோதரதீர்த்தமென்றும் ஒக்கப் பிறந்தான் குளம் என்றும் அழைக்கப்படுகின்றது. இதன் கரையில் ஐவர் அரம்பையர், மாண்டுகன்னீசர், வன்னீர் ஆகியோருக்கான ஆலயங்கள் உள்ளன.

அப்சர தீர்த்தங்கள்

அப்சரப்பெண்கள் சிவவழிபாடு செய்தபோது பூசைக்காகவும் தாங்கள் நீராடவும் தீர்த்தங்களை அமைத்தனர். அவை அவர்கள் பெயரால் அரம்பையர் தீர்த்தம், அப்சரதீர்த்தம் என்ற பலபெயர்களைப் பெற்றுள்ளன.

அரம்பை பூசித்து அருள் பெற்றதலமான கோட்டூரில் அரம்பையர் தீர்த்தம் உள்ளது. இதன் பெயர் மாறி இந்நாளில் கருப்புட்டியான் குளம் என்று அழைக்கப்படுகின்றது. காஞ்சீபுரத்தில் ஐந்து அரம்பையர்கள் உண்டாக்கிய பெரிய தீர்த்தம் உள்ளது. இதற்கு ஐவரரம்பையர் தீர்த்தம் என்பது பெயராகும். இதுவும் பெயர்மாறி ஒக்கப் பிறந்தான் குளம் என்று அழைக்கப்படுகின்றது காசி, திருவண்ணாமலை முதலிய பலதலங்களில் அப்சரதீர்த்தங்கள் இருந்ததென்று புராணங்கள் கூறுகின்றன.

புலிபுரக் கோயில் அஷ்டரம்பையர்கள்

ஆலயக் கோபுர மேல்நிலை வாயில்களின் இருபுறமும் அரம்பையர்கள் அஷ்டமங்கலங்களை ஏந்தியவாறு சுதை வடிவங்களாக நிற்பதைக் காண்கிறோம். அம்பிகையின் பீடத்தில் அரம்பையர்களை அமைக்க வேண்டுமென்று சிற்ப நூல்கள் கூறுகின்றன. அபூர்வமாகப் புலிப்புரக் கோயில் எனும் தலத்தில் வாயில் நிலைப்படியின் முகப்பில் சிவலிங்கத்திற்கு எண்வகை உபசாரங்களைச் செய்யும் அஷ்டரம்பையர்களைக் காண்கிறோம். மாலை தொடுத்தல், தீபமேந்துதல், சாமரம் வீசுதல், சுத்தநிருத்தம் புரிதல், அருச்சித்தல், கண்ணாடி காண்பித்தல் முதலானவை அப்ச ரஸ்களால் சிவபெருமானுக்குச் செய்யப்படும் அஷ்டோபசாரங்களாகும்.

இங்குள்ள முகப்பு சிற்பத்தின் மையத்தில் சிறுமண்டபத்துள் சிவலிங்கம் உள்ளது. பக்கத்திற்கு நால்வராக எட்டு அப்ரசப் பெண்கள் உள்ளனர். அவர்கள் உபசாரம் செய்யும் நேரம் காலை என்பதை உணர்த்த சங்கினை ஊதும் பூதம் இவ்வரிசையின் முதலில் இடம் பெற்றுள்ளது. இத்தொகுப்பின் தென்கோடியில் விநாயகரும் வடகோடியில் முருகனும் அமைந்துள்ளனர்.

பொதுவாக வாயில் நிலைகளின் மீது கஜலட்சுமி, கல்யாண சுந்தரர், முதலிய திருவுருவங்களை அமைப்பதே வழக்கம் என்றாலும் இங்கே சிவலிங்கத்துடன் எட்டு அரம்பையர்களை அமைத்திருப்பது புதுமையானதாகத் திகழ்கிறது.



❁ புலிபுரக் கோயில்-அஷ்டரம்பையர்களும் சிவலிங்கமும் வாயில் முகப்பு சிற்பம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்சரஸ் ஆடிய நாடகம்

ஒரு சமயம் சூத முனிவரிடம் சௌனகாதி முனிவர்கள், "முனிவரே! சிவசக்தி வடிவாக விளங்கும் இப்பிரபஞ்சத்திற்கு மூலகாரணம் யார் சிவபெருமானா பார்வதியா? இவர்களில் குணச்சிறப்புக்களால் யார் பெரியவர் என்பதை விளக்கியருளவேண்டும்", என்று கேட்டுக்கொண்டனர்.

அதற்குச் சூதர், "உலகத்தில் பெண்களே சிறப்பு டையவர்கள். அவர்களுக்குக் குணதோஷங்கள் அதிகம், அவர்கள் மாயையின் வடிவங்கள் என்றாலும், அவர்களுடைய படைப்பில் ஒரு ரகசியமும் உள்ளது. உலகத்திலுள்ள உயிர்களுக்கு 72,000 நாடிகள் உண்டு பெண் இனத்திற்கு மட்டும் "ஜகன்யா" என்ற ஒரு நாடி கூடுதலாக உள்ளது. கர்பாதாரணத்திற்கு இதுவே உரியது. இந்த நாடியால் குணதோஷங்க ள் அதிகமாகப் பெற்றிருக்கும் பெண்களைக் கண்டு ஆண் மோகமடை கிறான். இந்தநாடி சுத்தமாக வாய்க்கப் பெற்றவள் ஆட வனைத் தன் மாயையால் வசியம் செய்து கொள்கின் றாள். அதனால் பெண்களே உலகத்தில் உயர்ந்தவர்களா கின்றார்கள். பெண்க[illegible] சிறந்தவர்கள் என்பதற்கு புண்ணியம் மிகுந்ததும், கேட்பதற்கு இதமானதுமான ஒரு கதையைக் கூறுகின்றேன் என்று கூறத் தொடங் கினார்.

ஒருசமயம் பாணசூரனுடைய சோணிதபுரத்தை அடுத்த நதிக்கரையில் அமைந்திருந்த பெரிய நந்த வனத்தில் சிவபெருமான் தேவர்களோடும் அசுரர்க ளோடும் வீற்றிருந்தார். அங்கு அப்சரசுக்கள் நடன மாடினர். கந்தர்வர்கள் பலவகையான இசைக் கருவி களை மீட்டிப் பாடினர். முனிவர்கள் பெருமானைப் பூசித்தனர். மகரிஷிகள், ஹோமங்களைச் செய்ய, சித்தர்கள் சிவன்பால் தமது சித்தத்தை நிலைபெறச் செய்தனர். நாத்திகர்கள் கூட தமது அஞ்ஞானம் நீங்கி சிவபெருமானைத் துதித்தனர். பகைவர்கள், ஓடி ஒளிந்தனர் மெல்லிய காற்று இதமாக வீசியது. மயில்கள் ஆடின, மாமரக்கிளைகளில் இருந்தவாறு குயில்கள் கூவின. அந்த இனிய வேளையில் பார்வதியும் அங்கே தன்னுடனிருந்தால் நன்றாக இருக்கும் என்றுச் சிவபெருமான் எண்ணினார்.

நந்திதேவரை அழைத்து, "அன்ப! நீ கையிலாய மலைக்குச் சென்று பார்வதி தேவியை அழைத்து வா!" என்றார், நந்திதேவரும் கயிலை மலைக்குச் சென்று உமாதேவியாரிடம், பரமேசுவரன் தன்னிடம் உடனே வரும்படிக் கூறியதைக் கூறினார். பார்வதியும் நொடியில் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு பரமேசுவரன் எழுந்தருளியுள்ள நந்தவனத்திற்குச் பயணமானாள்.

அந்த வேளையில் சிவபெருமானின் சபையிலி ருந்த தேவதாசிகளான அப்சரஸ்கள் நம்மில் யார் சிறந்தவள். சப்தமாதர்களில் யார் கௌரி வடிவானவள் என்று பலவாறு கேள்விகளை எழுப்பி பேசிக் கொண் டிருந்தனர். அதற்கு உரிய பதிலைப் பரமேசுவரிடமே கேட்டுவிடலாமென்று அவருக்கு அருகில் வந்து யாரும் கேட்காமல் மௌனமாக இருந்தார்கள்.

அப்போது வாணாசூரனின் மந்திரியான குபாண்டனின் மகளான சித்திரலேகா என்பவள் நானே கௌரியின் வடிவத்தைத் தாங்கி பரமேசுவரனிடம் சென்று விளக்கங்களைக் கேட்கிறேன் என்று கூறினாள். பின்னர் அவள் அப்சரஸ்களை நோக்கி உங்களில் ஒருத்தி நந்தியின் வடிவத்தையும் மற்றவர்கள் பார்வதியின் கணங்களின் வடிவத்தையும் தாங்கி என்னுடன் வரவேண்டும் என்றாள்.

அதைக்கேட்டு, திருமாலின் தொடையிலி ருந்து தோன்றியவளான ஊர்வசி விஷ்ணு சம்பந்தமான மாயையால் நந்திதேவரைப் போல வடிவங்கொண்டாள் க்ருதாசி என்பவள் காளியாகவும், விசுவாசி, சண்டிகா வாகவும், புலோமசை, சாவித்திரியாகவும் மேனகை காயத்ரியாகவும், ஸஹஜன்யா ஜயையாகவும், புஞ்ஜ கஸ்தலீ வி[illegible]ஜயையாகவும், க்ரதுஸ்தலி விநாயகராக வும், வேறுசிலர் சப்தமாதர்களாகவும், அனேகர் பார்வதியின் கணங்களாகவும் உருவம் தரித்தனர். அவற்றைக் [illegible]டு மகிழ்ந்த சித்ரலேகை விஷ்ணு சம்பந்தமான ஆத்மயோகத்தால் தன்னை பார்வதியாக மாற்றிக் கொண்டாள்.

அந்தக் கணத்திலேயே அவளின் அழகு ஒப்பற்றதாக மிளிர்ந்தது. அவள் தனது அப்சர கணங்களுடன் சிவசந்நிதியை அடைந்தாள். நந்தி வடிவத்திலுள்ள ஊர்வசி சிவபெருமானிடம் சென்று பார்வதி வந்திருக்கின்றாள் என்று கூறினாள்.

சிவபெருமான் அவர்களுடைய நாடகத்தை உணர்ந்து கொண்டாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் தனது சிம்மாசனத்திலிருந்து எழுந்து வந்து அவர்களை வரவேற்றார். பார்வதியை போல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேடம்பூண்டிருந்த சித்திரலேகையை அழைத்துச் சென்று மலர்மஞ்சத்தில் தன்னுடன் அமர்த்திக் கொண்டார். அவளும் பாடல்களைப்பாடிச் சிவபெருமானை மகிழ்வித்தாள்.

மற்ற அப்சரஸ்களும் சிருங்காரமான பாடல்களைப் பாடினர் ஆடினர். இனிமையாகப் பொழுது கழிந்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில் உண்மையான பார்வதிதேவி தமது பரிவாரங்களுடன் அங்கு எழுந்தருளினாள். அங்கே தன்னைப் போலவும் தமது கணத்தைப்போலவும் இருக்கக்கண்டு ஆச்சர்யமடைந்தாள். இஃதென்ன மாயமென்று யோசித்தாள். அப்போது கண்டவர்களால் இரண்டு பார்வதிகளுக்கும், நந்தி முதலிய கணங்களுக்கும் கொஞ்சம் கூட வேறுபாடு கண்டுபிடிக்க முடியவில்லை எல்லோரும் அதிசயித்து நின்றனர்.

அப்போது அங்கு வேடதாரிகளாக இருந்த அப்சரஸ்கள் அஞ்சினர். பார்வதி வேடத்திலிருந்த சித்ரலேகை பார்வதியைக் கண்டு அஞ்சினாள்.

உண்மையான பார்வதி, அப்சரஸ்கள் இப்படி வேடம் பூண்டு விளையாடியதை உணர்ந்து சிரித்தாள். அதைக்கண்ட அப்சரஸ்கூட்டமும் மகிழ்ந்து சிரித்தது. அவர்கள் இயல்பான உருவத்துடன் தனது வழக்கமான பணிகளை மேற்கொண்டனர்.

பரமேசுவரனும் பார்வதியும் அப்சரஸ்களின் இந்த விளையாட்டால் கோபம் கொள்ளாமல் நிறைந்த மகிழ்ச்சியை அடைந்து அவர்களைப் பாராட்டினர்.

இப்படி அலகிலா விளையாட்டை உடைய பரமேசுவரனிடமே அரம்பையர்கள் விளையாட்டு நடத்தி அவரை மகிழ்வித்ததைச் சிவமகாபுராணம் விரிவாகக் கூறுகின்றது.

வேதங்களில் அப்சரஸ்கள்

வேதங்களில் கூறப்படும் துணைத் தெய்வங்களில் அப்சரஸ்கள் தனி இடம் பெறுகின்றனர். பெரும்பாலும் அவர்கள் கந்தர்வர்களோடு இயங்குபவர்களாகவே காட்டப்படுகின்றனர்.

பிரமக்ஷத்திரம் என்னும் வேள்வியில் கந்தர்வர்களும் அவர்களுடைய அப்சரஸ்களும் பேசப்பட்டுள்ளனர். ஆனால் இங்குக் கந்தர்வர்கள் என்பது பல விதமான தேவர்களைக் குறிக்கவும், அப்ரசரஸ் என்பது அவர்களுடைய துணைத் தேவர்களைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அக்னி கந்தவர்வனாகவும் அப்சரஸ் ஔஷதங்களாகவும்; கந்தர்வன் சூரியனாகவும் அவனுடைய அப்சரசர்கள் ஒளிவெள்ளமாகவும்; சந்திரன் கந்தர்வனாகவும் நட்சத்திரங்கள் அப்சரர்களாகவும் கூறப்பட்டு அவர்களிடம் தம்மையும் தமது யாகத்தையும் காக்குமாறு வேண்டுகின்றனர் தொடர்ந்து யக்ஞம், மனம் (அ) பிரஜாபதி, காற்று, வேள்விக்கரசனான மிருத்யு பர்ஜன்யன் (மழை), மிருத்யு, காமன் ஆகியோர் கந்தவர்களாகவும் அவர்களது அப்சரர்களாக முறையே துதிகள் (எ) தட்சணைகள் ; ரிக், சாம மந்திரங்கள், இன்பம், சகலபொருட்கள், மின்னல்கள், பயம் கருத்துக்கள் ஆகியன கூறப்பட்டு அவர்களிடம் தம்மைக் காக்குமாறு வேண்டப்படுகிறது.

மேலும் (கிழக்கு மேற்கு, வடக்கு, தெற்கு, உச்சி) ஆகிய ஐந்து திசைகளிலும் திசைக்கு இருவர் வீதம் இருக்கும் அப்சரப் பெண்களும் கூறப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர் முறையே கிருகஸ்தலை, புஞ்சிகஸ்தலை, மேனகை, சகஜன்யை, பிரமலோசந்தீ, அனும்லோசந்தீ, விசுவாசி, கிருதாஜி, ஊர்வசி, பூர்வசித்தி என்பதாகும்.

மேலும் சில இடங்களில் ஊர்வசி, மேனகை, முதலாய பெயர்களையும் காண்கிறோம்.

சூரிய வழிபாட்டில் அப்சரஸ்கள்

சூரியனைத் தலைமைத் தெய்வமாகக் கொண்ட சௌர சமயப் புராணங்கள் பன்னிரண்டு மாதங்களில் பவனி வரும் பன்னிரண்டு சூரியர்களைப் பற்றிய செய்திகளைக் குறிக்கின்றன. ஒவ்வொரு சூரியனுக்கும் உரிய ஒளி கிரணங்களின் எண்ணிக்கை, வரவேற்கும் ரிஷிகள், தேரின் வடமாக விளங்கும் பாம்பு, தேரினை இழுக்கும் கந்தர்வர்கள்; கட்டியம் கூறும் கிராமணி, காவல்கார அரக்கன், என்று பலர் உள்ளனர். இவ்வகையில் தேரின் முன் நடனமாடி வரும் பன்னிரண்டு அப்சரஸ்களும் கூறப்பட்டுள்ளனர். இவர்கள் 1.கிருகஸ்தலா, 2.புஞ்சகஸ்தலா, 3.மேனகா, 4.சகஜன்யா, 5.பிரம்மலோசந்தீ, 6. நிம்லோசந்தி, 7.விஸ்வாசீ, 8.கிருதாசீ, 9. ஊர்வசி, 10. பூர்வசித்தி, 11.திலோத்தமை, 12.ரம்பை என்பவர்களாவர்.

❁ சுப்ரபேத சிவாகமம் ரம்பை, ஊர்வசி, மேனகா, திலோத்தமா, விபுலா என்னும் ஐந்து அப்சரஸ் பெண்களைக் குறிக்கின்றது. ❁ சில்பரத்தினம் என்னும் நூலில் ஏழு அப்சரப் பெண்கள் குறிக்கப்படுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

மூவா முதல்வா போற்றி! முப்பெரும் சக்தி வடிவே போற்றி! போற்றி!!

துர்கா, லட்சுமி, சரஸ்வதீசுவரர்

ஆதிபரம்பொருள் பரநிலையிலிருந்து படிப் படியாக உருவம் தாங்கிவந்து உலகனைத்தையும் படைத்தது. பின்பு அவ்வுலகங்கள் ஓயாது தொழிற் படவும், தோன்றி ஒடுங்கவும் உரிய தேவர்களைப் படைத்தது. அவ்வாறு படைக்கப்பட்டவர்கள் முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலை ஆற்றி வருகின்றனர். இவர்களுக்குத் தேவியர்களாக ஆதி சிவசக்தியால் அளிக்கப்பட்டவர்களே சரஸ்வதி, லட்சுமி, காளி (உமை) ஆகிய முப்பெரும் தேவியராவர். பின்னாளில் இவர்களில் காளியை நீக்கிவிட்டு வெற்றிச் செல்வியாகிய துர்க்கையைச் சேர்த்து, நாம், துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என்ற முப்பெரும் தேவியர்களாக வழிபட்டு வருகின்றோம். இவர்கள் மூவரும் சிவபூசை செய்பவர்கள். பல இடங்களில் இவர்கள் சிவலிங்கங்களை அமைத்து வழிபாடு செய்ததுடன் தமது பெயரால் தீர்த்தங்களையும் அமைத்துள்ளனர்.

தமிழ் மறையான திருமுறைகள் இவர்கள் சிவனடியார்களுக்கு அன்புடன் அருள்புரிபவர்கள் என்று குறிக்கின்றன. தென்னிந்தியாவிலுள்ள அனேக சிவாலயங்களில் உருத்திர சக்தியான துர்கா தேவி கோட்ட தெய்வமாக விளங்குவதைக் காண் கிறோம்.

சோழ, பாண்டிய, நடு நாட்டுத் தலங்களில் லட்சுமி பரிவாரத்தெய்வமாகப் பிராகாரத்தின் வட மேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு எழுந்த ருளியுள்ளாள். அபூர்வமாகச் சிலதலங்களில் மட் டுமே சரஸ்வதி வழிபடப்படுகின்றாள். என்றாலும் அவள் வழிபாடும் தனிச்சிறப்பைப் பெற்றுள்ளது.

சிவமஞ்சரியின் இருபத்து மூன்றாவது மலராக மலரும் இந்த நூலின் இரண்டாம் பகுதியான இதில் சைவசமயத்துள் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரும் பெற்றுள்ள தனிச்சிறப்புக்களைத் தொகுத்துக் காணலாம்.

இந்த முப்பெரும் தேவியரும், உமையும் உமையொருபாகனும் அன்பர்கள் அனைவருக்கும் சகல செல்வயோக மிக்க வாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்களுடைய பொன்னார் திருவடிகளைப் போற்றுகின்றோம். - சிவசுந்தரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முப்பெருந்தேவியர்



❁ சைவ சமய நல்லுலகில் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் முப்பெருஞ்சக்தியர்களாகப் போற்றுகின்றோம். பல சிவாலயங்களில் இந்த மூவருக்கும் தனிச்சந்நிதி அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

❁ திருநாகேசுவரம், கிரிகுஜாம்பிகை சந்நிதியில் அவளுக்கு இருபுறமும் மகாலட்சுமியும் சரஸ்வதியும் அமைந்துள்ளனர். திருவையாற்றில் துர்க்கை சந்நிதிக்கு அருகில் மகாலட்சுமியையும், சரஸ்வதியையும் அமைத்துள்ளனர். இங்கு மூவரையும் ஒருசேரத் தரிசிக்கலாம். கூவம் (திருவிற்கோலம்) திரிபுராந்தகர் ஆலயத்திலும் இம்மூவருக்கும் சந்நிதிகள் உள்ளன.

❁ சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயம், வேளச்சேரி தண்டீசுவரர் ஆலயம் முதலியவற்றில் துர்க்கா; லட்சுமி; சரஸ்வதி மூவரையும் ஒரே மேடையில் காண்கிறோம்.

❁ புரட்டாசிமாத நவராத்திரியில் இந்த மூவரையும் வழிபடுகின்றோம். அம்பிகையை முதல் மூன்று நாட்களில் மகாதுர்க்கையாகவும், இரண்டாவது மூன்று நாட்களில் மகாலட்சுமியாகவும், இறுதியான மூன்று நாட்களில் மகாசரஸ்வதியாகவும் அலங்கரித்துப் பூசைசெய்கிறோம். பத்தாம்நாளான தசமிநாளில் மூவரும் சிவபெருமானை வழிபடுவதால் அன்று சந்திரசேகர மூர்த்திக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றது.

❁ நடைமுறையில் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதியரை முப்பெரும்சக்திகள் என்றழைக்கிறோம் ஆனால் சிவபூசையில் லட்சுமி, சரஸ்வதியருடன் விநாயகரையே பூசிக்கின்றோம். துர்க்கையைப் பூசிக்கும் வழக்கமில்லை. சிவாலயங்களின் முகப்பில் இந்த மூவரையும் காணலாம். கும்பாபிஷேகம் முதலிய சிறப்பு நாட்களில் யாகசாலையின் முகப்பில் வாயிலுக்குமேல் இந்த மூவரையும் படமாக எழுதி வைத்து வழிபடுகின்றனர்.

❁ காஞ்சீபுரத்தில், சரஸ்வதியும், துர்க்கையும் கச்சபேசத்திலும்; மகாலட்சுமி, காயரோகணத்திலும் காளி ஏகம்பத்திலும் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்றனர்.

❁ துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரும் சேர்ந்து வழிபட்ட திருத்தலம் பெருவேளூர் ஆகும். இது இந்நாளில் மணக்கால் ஐயம்பேட்டை என்று அழைக்கப்படுகின்றது. இங்குள்ள அவிமுத்தீசுவரர் ஆலயத்தில் லட்சுமிதேவி பூசித்த லட்சுமிபதீசுவரர், சரஸ்வதி வழிபட்ட சரஸ்வதி வாணீசுவரர், துர்க்காபதீசுவரர் என்ற சிவலிங்கங்கள் உள்ளன. (துர்க்கையின் ஆன்மாவில் சிவலிங்கம் ஒடுங்கியிருப்பதாக ஐதீகம். அவள் சந்நிதியே துர்க்காபதீசுவரர் என்று அழைக்கப்படுகின்றது)

❁ இராமேசுவரத்தில் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரும் அமைத்த தீர்த்தங்கள் வரிசையாக அமைந்துள்ளன.

❁ திருஞானசம்பந்தப் பெருமான் இந்த மூவரையும் பலபதிகங்களில் குறித்துள்ளார். அவர் திருச்சிவபுரத்தில் அருளிய புவம், புனல், வளி என்ற பதிகத்துள் சிவவழிபாட்டில் திளைப்பவர்கள் திருமகளோடும், கலைமகளோடும், ஜெயமகளோடும் (துர்க்கை) திகழ்வார்கள். அவர்களுடைய மூவரின் அருளால் அன்பர்கள் குலம், நிலம், நிறைவான செல்வம், அழகிய வடிவம், எடுத்த காரியத்துள் வெற்றி, புகழ், படை, தலைமைப்பேறு ஆகிய நிலவுலக சித்திகள் எட்டையும் பெறுவர் என்று அருளுகின்றார். அம்பிகையின் அருளைப் பெற நவராத்திரியின் போது ஓதவேண்டிய ஒப்பற்ற பதிகம் இதுவாகும்.

❁ திருவாரூரில் மகாலட்சுமி திருமாலையும், உமையவள் சிவபெருமானையும் சரஸ்வதி பிரம்மதேவனையும் கணவர்களாக அடையத் தவம்புரிந்து அருள்பெற்றனர். அவர்கள் அமைத்து வழிபட்ட சிவலிங்கங்கள் முறையே லட்சுமீசர், பார்வதீசுவரர், சரஸ்வதீசுவரர் என்ற பெயர்களில் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

மூவா முதல்வா போற்றி! முப்பெரும் சக்தி வடிவே போற்றி! போற்றி!!

துர்க்கை மகிஷனுடன் போரிடும் காட்சி - மாமல்லபுரம்

துர்க்காபதீசுவரர்

சிவபெருமானிடமிருந்து அவராகவே வெளிப்பட்டவள் ஆதிபராசக்தி. அவள் இன்பங்களைத் தரும்கோலத்தில் பவானியாகவும், ஆண் வேடம் கொள்ளும்போது விஷ்ணுவாகவும், கொடுங்குணம் கொண்ட வீராவேசநிலையில் காளியாகவும், போரில் வெற்றியை விளைவிக்கும் வீரமங்கையாகத் திகழ்கையில் துர்க்கையாகவும் காட்சியளிக்கின்றாள்.

துர்க்கை போரில் வெற்றியைத் தரும் வீர மங்கையாக இருப்பதால் வீரர்கள் அவளைத் தனிச்சிறப்புடன் வழிபட்டனர். குறிப்பாகத் தமிழ் இலக்கியங்கள் அவளைப் போர்க் கடவுளாகவே போற்றுகின்றன. ஆதியில் இவள் மஹாவீரனான சிவபெருமானின் உக்ரமயமான உருத்திரசக்தியில் இருந்து தோன்றித் திருமாலின் வடிவில் கலந்து வெற்றித்தேவியாக வெளிப்பட்டாள். அதனால், இவள் வழிபாடு சிவவழிபாட்டின் ஒரு அங்கமாக மாறியது. மேலும் பராசக்தி, தான் தவம் செய்யும் போது உண்டான இடையூறுகளைக் களைய தோற்றுவித்த துர்க்காதேவியர்களும் உண்டு. பல புராணங்கள் பார்வதியின் உடலிலிருந்து கழிந்த கருநிறம் ஒருபெண்வடிவம் தொண்டதென்று அவளே துர்க்கை என அழைக்கப்படுகிறாள் கூறுகின்றன. இவள் துர்க்கா, மாயா, கொற்றவை, பாய் கலைப்பாவை, கௌசகி, நீலி, விந்தியா என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றாள்.

சிவாம்சமாகத் தோன்றினாள். சிவதுர்க்கை எனவும், சக்தியால் தோற்றுவிக்கப்பட்ட துர்க்கையர்கள் விஷ்ணு துர்க்கையர் என்றும் குறிக்கப்பட்டனர்.

துர்க்கா தேவி, அசுரர்களை அழித்த பாவம் தீரப் பல தலங்களில் சிவபூசை செய்துள்ளாள். அவள் அமைத்து வழிபட்ட லிங்கங்கள் துர்க்கேசுவரர், துர்க்காபதீசுவரர், என்று பலவாறு அழைக்கப்படுகின்றன. அவள் அமைத்த தீர்த்தங்கள் கட்க தீர்த்தம், துர்க்கா தீர்த்தம், சக்ர தீர்த்தம் என்று பெயர் பெறுகின்றன.

இம்மலரின் இப்பகுதியில் துர்க்கையின் தோற்றம், அவள் செய்த வழிபாடு, சிவாலயத்துள் துர்காதேவி பெற்றுள்ள இடம் ஆகியவற்றைத் தொகுத்துக் காணலாம். - சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

✻ சிவபெருமானின் அருளால் தோன்றிய போர்த் தெய்வமான காளி, உருட்டு விழியும், கோரப் பார்வையும், கடுமையான தோற்றமும் கொண்டவள். அவளைப் போலவே சிவனால் உண்டாக்கப்பட்ட போர்த்தெய்வம் என்றாலும், துர்க்கை அவளுக்கு நேர்மாறாக அமைதியும், அழகும், நளினமும் கொண்டவள்.

✻ துர்க்கை வனங்களில் வீற்றிருக்கையில் வனதுர்க்கா என்றும், ஜலத்தில் விளங்குகையில் ஜலதுர்க்கா என்றும், அக்னியிலிருந்து அன்பர்களுக்கு அருள்புரிகையில் ஜ்வாலா துர்க்கை என்றும் அழைக்கப்படுகின்றாள்.

✻ துர்க்கம் என்பதற்குக் கோட்டை என்பது பொருள் உயிர்களைச் சூழ்ந்து நின்று கோட்டை போல் காப்பதால் அவள் துர்க்கா என்று அழைக்கப்படுகின்றாள்.

✻ உமாதேவியின் பஞ்சாவரணத்தில் சப்தமாதர்களுடன் துர்க்கையையும் வழிபடுகின்றனர்.

✻ பல்லவர்கள் துர்க்கையைச் சிங்கவாகனத்தில் வலம் வருபவளாகப் போற்றினர். ஆதியில் அவள் பாய்ந்து வரும் கலைமானின் மீது வருபவளாகச் சித்தரிக்கப்பட்டாள். அதனால், கலையதுர்த்தி, பாய்கலைப் பாவை, மான் வாகனத்தாள் என்று பலவாறு அழைக்கப்படுகின்றாள். தேவாரம் அவளைச் ஜெயமகள், கலையதுர்த்தி என்றே குறிக்கின்றது.

✻ துர்க்கைக்கு அபிஷேகம் செய்யும் போது, வேதத்திலுள்ள துர்க்கா சூக்தத்தை ஓதுகின்றனர்.

✻ ஆலயங்களில் தீபாராதனையின் போது காட்டப்படும் சிங்கதீபம், யாளிதீபம் ஆகியவற்றிற்குத் துர்க்கை அதிதேவதையாவாள்.

✻ சில சிவத்தலங்களில் அமைந்துள்ள மலைகளில் துர்க்கை தனியே கோயில் கொண்டு, அத்தலத்தைக் காவல்புரிகின்றாள். எடுத்துக்காட்டாகத் திருக்காளத்தியில் (காளாஸ்திரி) நீலிமலை என்ற மலையைக் காண்கிறோம். இதன்மீது துர்க்கை ஆலயம் உள்ளது. இவள் இத்தலத்திற்கும் பொன்முகலி (சொர்ணமுகி) யாற்றுக்கும் காவல் தேவியாவாள்.

✻ அனேக அசுரர்களை அழித்தபின்னர் துர்காதேவி பார்வதி பரமேசுவரர்களை வணங்கினாள். அவர்கள் அவளை விந்திய மலையில் வசிக்கும்படிக் கூறினார்கள். அதனால் விந்தியா, விந்தியாவாசினி என்றும் அழைக்கப்படுகின்றாள்.

✻ சிவபெருமானைப் போலவே துர்க்கையும் ஆடலில் மிகுந்த விருப்பமுடன் இருக்கின்றாள். அவள் போரில் பகைவரை வென்றபின் "துணங்கை" என்ற கூத்தை ஆடினாள். அதனால் அவளுக்கு "துணங்கைச் செல்வி" என்பது பெயராயிற்று.

✻ துர்க்கை சிவபெருமானின் ஞானக்கண்ணாகிய மூன்றாவது கண்ணிலிருந்து வெளிப்பட்டதால் ஞானத்தைத் தரும் தேவியாகவும் போற்றப்படுகின்றாள். இளங்கோவடிகள் இவளை "வானோர் வணங்க மறை மேல் மறையாகி ஞானக் கொழுந்தாகி நடுக்கின்றியே நிற்பாய் என்றும், கண்ணுதலான் பாகத்து மங்கை உருவாய் மறையேத்தவே நிற்பாய்" என்றும் சிலப்பதிகாரத்தில் போற்றுகின்றார்.

✻ சிவபெருமானின் உருத்திர சக்தி, திருமாலின் அம்சத்துடன் கலந்து தோன்றியதால் இவள் இரண்டுபேருடைய குணங்களையும் பெற்றவளாக இருக்கின்றாள். சிவபெருமானைப் போலவே எட்டுதோள்கள் முக்கண், சடாமுடி, அதில் இளம் பிறை, கழுத்தில் விஷக்கறை இடுப்பில் பாம்பைக் கச்சாகக் கட்டிப் புலித்தோலை உடுத்தி யானைத் தோலைப் போர்த்திக் கொண்டு நாகாபரணங்களை அணிந்துள்ளாள். திருமாலைப்போலவே சங்கு சக்கரம், வில், வாள், கேடயம் தரித்துள்ளாள். பொன்னாபரணங்களைப் பூண்டு பிரகாசிக்கின்றாள். இருவருக்கும் உரிய கொன்றை, துளசி ஆகியவை கலந்து தொடுத்த மலர் மாலைகளை தலையிலும் மார்பிலும் சூடி இருக்கின் றாள். உருத்திரர்களின் சோலைக் குறியீடான கிளியைக் கரத்தில் ஏந்தியுள்ளாள்.

✻ சிவனடியார்களைப்போலவே, திருமாலடியார்களும் துர்க்கையைப் போற்றி வழிபடுகின்றனர். திருவதிகையிலுள்ள அதிகை அரங்கர் ஆலயம், திருக்கோயிலூர் திருவிக்ரமசுவாமி ஆலயம், திருவிடந்தை நித்தியகல்யாணப் பெருமாள் ஆலயம் முதலியவற்றில் துர்க்காதேவி தனிச் சிறப்புடன் பஞ்சக் கோட்டத்தில் எழுந்தருளியுள்ளதைக் காண்கிறோம். செஞ்சிக்கு அருகிலுள்ள சிங்கவரத்து மலையில் பல்லவர்களால் அமைக்கப்பட்டுள்ள குடைவரைக் கோயிலில் மகாலட்சுமி சந்நிதியும் துர்க்கை சந்நிதியும் ஒன்றன்பின் ஒன்றாக உள்ளன. இங்கு இருவரையும் ஒருசேரத் தரிசிக்க முடிகிறது.

✻ பொதுவாக அனைத்து சிவாலயங்களிலும் வடக்கு நோக்கியவாறு எழுந்தருளியிருக்கும் துர்க்கை திருமறைக் காட்டில் தெற்கு நோக்கியும், கங்கை கொண்ட சோழபுரத்தில் கிழக்கு நோக்கியும், திருவெண்காட்டில் மேற்கு நோக்கியும் அருள்பாலிக்கின்றாள். மேலும் சிலதலங்களில் அவள் உச்சியிலிருந்து உலகைக் காப்பதை உணர்த்தும் வகையில் நெடிய தூணின் மீதோ அல்லது விதானத்திலோ அவளுடைய உருவம் அமைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துர்க்கையின் தோற்றமும் வழிபாடும்

ஒரு காலத்தில் திதி என்பவளின் புதல்வி எருமைவடிவம் கொண்டு, ஒரு மகனை வேண்டித் தவம் புரிந்தாள். சுபாரிசு என்ற முனிவர் அவளுக்கு இரங்கி வலிய புதல்வன் பிறக்க அருள்புரிந்தார். முன் பிறவியில் அகத்தியரை அவமதித்து எருமை யாகும்படி சபிக்கப்பெற்றிருந்த வரமுனி என்பான். அவளுக்கு மகனாகப் பிறந்தான்.

மிகுந்தபலசாலியாக விளங்கியதால் அவனுக்கு விக்ரமன் என்றபெயர்சூட்டினர். அவன் பிரம்ம தேவனைக் குறித்து ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்து அரிய வரங்களைப் பெற்றான். பிறகு அசுரர்களைப் போலவே தனது மந்தபுத்தியால் தேவர்களைச் சிறையிட்டுத் துன்புறுத்தினான். அவர்களுடைய சுவர்கத்தையும் அரம்பையர் கூட்டத்தையும் கைப்பற்றிக் கொண்டான். அவனுடைய ஆட்சியில் மக்கள் எல்லையற்ற துன்பத்தை அடைந்தனர். அவர்கள் திருமாலைச் சரணடைந்தனர். திருமால் அவர்களை அழைத்துக் கொண்டு கயிலைமலையை அடைந்தார். அங்கு அனைவரும் சிவனிடம் அடைக்கலம் புகுந்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். சிவபெருமான் தன்னுடைய நெற்றிக்கண்ணிலிருந்து ஒரு பொறியை உண்டாக்கித் திருமால்மீது செலுத்தினார். அப்பொறி திருமால் உடலினின்று ஒரு பெண்வடிவில் வெளிப்பட்டது.

அவள் உருத்திரனின் கோபத்தையும் வலிமையையும் திருமாலின் அழகையும் மென்மையையும் ஒருங்கே பெற்றிருந்தாள். அவள் சிவபெருமானைப்போலவே சடாமுடிதரித்து அதில் சந்திரனைத் சூடியிருந்தாள். நெற்றியில் மூன்றாவது கண் விளங்க எட்டு கரங்களைக் கொண்டு அவற்றில் திருமாலைப்போலவே சங்கு, சக்கரம், வில், வாள், கேடயம் என்ற ஐந்து ஆயுதங்களைத் தாங்கியிருந்தாள். உருத்திரர்களின் சோலைக்குறியீடான கிளி அவள் கரத்தில் திகழ்ந்தது.

தேவர்கள் அனைவரும் அவளைப் போற்றித் துதித்தனர். அவள் தானே தனக்குரிய சக்தி கணங்களைத் தோற்றுவித்துக் கொண்டாள். பின்னர் மண்ணும், விண்ணும் அதிர மகிஷ முகம் கொண்ட

எட்டு கரங்களில் ஒயிலாக நிற்கும் துர்க்கை
நன்றி:தமிழ்நாடு தொல்லியல் துறை

விக்ரமன் மீது படையெடுத்துச் சென்றாள். அவளுக்கும் மகிஷனுக்கும் கடும்யுத்தம் நிகழ்ந்தது. ஒன்பது நாட்கள் நடைபெற்ற சண்டையின் இறுதியில் தேவி மகிஷனின் தலையை வெட்டி வீழ்த்தினாள். அதனையே பீடமாக்கிக் கொண்டு அதன்மீது ஏறிநின்றாள். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். அசுரர்களின் அழிவால் உலகத்தில் மீண்டும் இன்பம் பெருகியது.

அசுரன் என்றாலும் மகாபக்தனும் முன்பிறவியில் வரமுனியாக விளங்கியவனுமாகிய மகிஷனைக் கொன்றதால் அவளுக்குப் பெரும் பாவம் மூண்டது. அது தொலைய அவள் பல தலங்களுக்கும் சென்று சிவவழிபாடு செய்தாள். இறுதியில் திருவண்ணாமலையை அடைந்து அங்கு சிவபூசை செய்தாள். அதனால் அவளுடைய பாவமானது தொலைந்தது. அவள் வழிபட்ட லிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்பட்டுச் சிவபக்தர்களுக்குக் காவலாக இருக்கும் வரத்தை நல்கினார். அன்று முதல் அவள் சிவாலயங்களில் வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துர்க்கை வழிபட்ட திருத்தலங்கள்

(தமிழகச் சிவாலயங்கள் அனைத்திலும் துர்க்கை, கருவறைக் கோட்ட தேவதையாக விளங்குகிறாள். என்றாலும், சில சிவாலயங்களில் அவளுக்குத் தனிச்சந்நிதி அமைக்கப்பட்டிருப்பதையும் காண்கிறோம். இவற்றில் அவள் கோலாகலமாக வீற்றிருக்கின்றாள். இத்தகைய ஆலயங்கள் சிலவற்றை இங்கே காணலாம்.)

கச்சியழகி

சிவவாசம் என்றும் பூலோகக் கயிலாயம் என்றும் அழைக்கப்படும் காஞ்சிபுரத்தில் எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட துர்க்கை ஆலயங்கள் அமைந்திருந்தன. இவற்றின் தலைமைத் தானமாக அமைந்தது கச்சபேசத்துள் அமைந்துள்ள துர்க்கா தேவி கோயிலாகும்.

கச்சபேசுவரர் ஆலயத்துள் கொடிமரத்தின் முன்னே அமைந்துள்ள அகன்ற முற்றம் பஞ்சந்தி என்று அழைக்கப்படுகின்றது. இங்கு விநாயகர் துர்க்கை, ஐயினார், சூரியன், பைரவர் ஆகிய ஐவருக்கும் தனித்தனியே சிற்றாலயங்கள் உள்ளன. இவற்றுள் துர்க்கை ஆலயம் தனிச்சிறப்புடன்

துர்க்கை-மாமல்லபுரம், மேலே சிங்கமும் மானும், கீழே நவகண்டம் தரும் வீரனும் இடையில் பூதகணங்கள். நன்றி:தமிழ்நாடு தொல்லியல் துறை

மாடக் கோயிலாகத் திகழ்கின்றது. கருவறைக்கு முன்பாக உள்மண்டபம் மகாமண்டபம், முகமண்டபம் ஆகியவை உள்ளன. கருவறைமீது அழகிய விமானம் உள்ளது.

தெற்கு நோக்கிய கருவறையில் பெரிய அழகிய திருவுருவுடன் துர்க்கை விளங்குகின்றாள். திருமணத்துவக்கத் தடை, கடன்தொல்லை. புத்திரப் பேரின்மைமுதலியன நீங்க, இங்கே சிறப்புப் பூசைகளும் பிரார்த்தனைகளும் செய்யப்படுகின்றன. இங்கே, உள்ள துர்க்கை இஷ்டசித்தி தீர்த்தத்துள் மூழ்கி சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்றாள் என்று கூறப்படுகின்றது.

வேதாரண்யம் துர்க்கை

கடற்கரைத் திருத்தலமான வேதாரண்யம் திருமுறைத்தலமாகும். இங்கு மூடியிருந்த கதவினை அப்பர் பாடித்திறக்க, ஞானசம்பந்தர் பாடி அவற்றை மீண்டும் அதனை மூடினார் என்று வரலாறு கூறுகின்றது. இது, சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றாகும். இங்குள்ள வேதாரண்யேசுவர சுவாமி ஆலயத்தின் உட்பிரகாரத்தில், வடகிழக்கு முனையில் தெற்குநோக்கியவாறு பெரிய சந்நிதியில் துர்க்கை எழுந்தருளியுள்ளாள். அறுபத்திநான்கு சக்தி பீடங்களில் ஒன்றான இதற்குச் சுந்தரி பீடம் என்பது பெயர். இங்குக் காப்புக்கயிறு அளிக்கின்றனர். ஏராளமான மக்கள் இங்கு பிரார்த்தனை செய்து கொள்கின்றனர். இராகுகால வேளைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் திரளான மக்கள் வந்து வழிபாடு செய்கின்றனர். மஞ்கள் குங்குமம் ஆகியவை மந்திரித்து அளிக்கின்றனர். இங்கு வழிபடுவதால் பில்லி, சூனியம், தெய்வக் குற்றங்கள் கிரகக் கோளாறுகள் முதலியன விலகுகின்றன என்பது கண்கண்ட உண்மையாகும்.

பட்டீச்சுவரத்து துர்க்கை

கும்பகோணத்திற்குத் தெற்கில் 10கி.மீ தொலைவில் அமைந்துள்ளது பட்டீச்சுவரம் என்ற திருமுறைத்தலமாகும். இங்கு ஞானாம்பிகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடனாயபட்டீச்சுவரர் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் வடக்குப் பிராகாரத்தில் வடக்கு நோக்கியவாறு பெரியசந்நிதியில் துர்க்கை எழுந்தருளியுள்ளாள். வலது முன்கரம் அபயகரமாகவும் இடது கரம் தொடைமீதும் வைக்கப்பட்டு அதில் கிளி ஒன்று அமர்ந்துள்ளது. வலதுபின் கரங்கள் சக்கரம், அம்பு, கத்தி ஆகியவற்றைத் தாங்க இடது கரங்களில் சங்கு, வில், கேடயம் விளங்குகின்றன.

ஒய்யாரமாக விளங்கும் அவளுக்குப் பின்புறம் வாகனமான சிங்கம் கம்பீரமாக நிற்கிறது. கல்லிலேயே பிரபாமண்டலமும் உள்ளது. பெரிய எருமைத் தலையினை பீடமாக் கொண்டு அதன் மீது நிற்கின்றாள். சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்கும் இச்சந்நிதியில், விரைவில் திருமணம் நடக்கவும், பகைகள்விலகவும், வழக்குகளில் வெற்றிபெறவும் நல்ல குழந்தைகள் பெறவும் நேர்ந்து கொள்கின்றனர்.

அண்மையில், இவளுடைய சந்நிதி பெரியதாக விரிவுபடுத்திக் கட்டப்பட்டதுடன், பெருஞ் செலவில் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது. இங்கு நவகோடியர்ச்சனை சிறப்புடன் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இவள் இங்கிருந்த சோழர்களின் மாளிகையில் எட்டாவது வாயிலில் கோயில் கொண்டிருந்தாள் என்றும் பின்னர் இங்கு எழுந்தருளி வைக்கப்பட்டாள் என்றும் கூறுகின்றனர்.

சிதம்பரச் செல்வி

சிதம்பரத்தில் சபாநாயகர் ஆலயத்துள் சிவகங்கை தீர்த்தம் அமைந்துள்ளது. இதன் கரையில் (சிவகாமி சந்நிதிகோபுரத்தையொட்டி) துர்க்கை ஆலயம் தனியே அமைந்துள்ளது. இவள்மீது பலர் தோத்திரப் பாடல்களைப் பாடியுள்ளனர்.

ஸ்ரீசைலத்துத் தாம்பரகௌரி

ஆந்திரமாநிலத்திலுள்ள தலம் ஸ்ரீசைலமாகும். மலைகளுக்கு இடையே இயற்கைச் சூழலில் அமைந்துள்ள இத்தலத்தில் துர்க்காதேவி பெரிய ஆலயத்துள் எழுந்தருளியுள்ளாள். இவளை, இங்கே தாம்பரகௌரி என்று அழைக்கின்றனர். இதையொட்டி ஆந்திர மாநிலத்தில் அமைந்துள்ள அனேக சிவாலயங்களில் (உமா



மகாதுர்க்கை-நன்றி:தமிழ்நாடு தொல்லியல் துறை

தேவி சந்நிதிக்குப் பதிலாக) துர்க்காதேவியின் சந்நிதிகளே அமைக்கப்பட்டுள்ளன. இங்கு உமா தேவியார் தவம்செய்த போது அவள் உடலிலிருந்து துர்க்கை வெளிப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இங்கே துர்க்கை அமைத்து வழிபட்ட துர்க்கா பதீசர், துர்க்கா தீர்த்தம் ஆகியன உள்ளன.

திருவண்ணாமலைச் செல்வி

உமாதேவியார் சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெறவேண்டி, திருவண்ணாமலையில் பவழப்பாறையின் மீது வீற்றிருந்து கடுந்தவம் செய்தாள். அப்போது அவளுக்கு மகிஷாசூரன் என்பவன் மிகுந்த தொல்லை கொடுத்துவந்தான். பார்வதி தேவி தன்னுடலிலிருந்து வீரசக்தியாகத் துர்க்கையைப்படைத்து, மகிஷனைக் கொன்று வருமாறு ஏவினாள். துர்க்கை மகிஷனோடு கடும்போர் செய்து அவனைக் கொன்றாள். பின்பு அந்த பழி தீரும்பொருட்டுத் திருவண்ணாமலைக்குக்கிழக்கில் ஒருபாறைமீது சிவலிங்கம் அமைத்து வழிபட்டாள். சிவபெருமான் அவளுக்குக் காட்சியளித்து அருள் புரிந்தார். அவள் தவம் செய்த இடத்தில் அவளுக்குத் தேவர்கள் ஆலயம் அமைத்தனர். அதுவே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நாளில் தனித்துர்க்கைக் கோயிலாகத் திகழ்கின்றது. தென்னகத்தில் துர்க்கைக்கு அமைந்துள்ள தனிப்பெருங் கோயில்களில் இதுவும் ஒன்றாகும். தென்னகத்தில் இது நன்கு பராமரிக்கப்பட்டுப் புதிய பொலிவுடன் திகழ்கின்றது. இங்குத் துர்க்கை அமைத்த கட்க தீர்த்தம் என்ற சுனையும் துர்க்கேசுவரன் ஆலயமும் உள்ளன. துர்க்கேசுவரருக்குப் பாபவிநாசர் என்பது பெயராகும்.

இராமேசுவரம்-தேவிபட்டினம்

இராமேசுவரவழிபாட்டின் ஓர் அங்கமாகத் திகழும் தேவிபட்டினம் துர்க்காதேவிக்குரிய சிறப்பு மிக்கதலமாகும். மகிஷனைக் கொன்றபிறகு தேவி இங்கே வீற்றிருந்தாள். அவளுக்குத் தேவர்கள் இங்கே ஆலயம் அமைத்தனர். இது அவள் பெயரால் தேவிபட்டினம் என்று அழைக்கப்படுகின்றது. இங்கு, அவள் நீராடவும் சிவபூசை செய்யவும் அமைத்த தீர்த்தம் சக்ரதீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது.

இராமபிரான் இதில் மூழ்கித் துர்க்கையையும், இராமனாதரையும் வழிபட்டார். இதில் மூழ்குவதால் பில்லி, பிசாசு, சூன்யம், கடன், முதலிய அனைத்துத் தொல்லைகளும் நீங்கும்.

தக்கோலப்பாவை

தக்கோலம் காஞ்சிபுரத்தினை அடுத்துள்ள தலமாகும். தேவாரப் பாடல்பெற்றபதி. இங்கே துர்க்காதேவி சிறப்புடன் எழுந்தருளியுள்ளாள். இக்கோயிலில் உள்ள கல்வெட்டு இங்கே துர்க்கை எழுந்தருளிவைக்கப்பட்டதையும் அவள் வழிபாட்டிற்கும் அவளுக்கு முன்பாக விளக்கெரிக்கவும் நிபந்தமளிக்கப்பட்ட செய்தியையும் குறிக்கின்றன. இங்குள்ள துர்க்கை குழலூதும் கண்ணனைப்போல சுவஸ்திக நிலையில் கால்களை வைத்துக் கொண்டிருக்கிறாள்.

திருவாரூர் விந்தைக் கோட்டம்

திருவாரூர் தியாகராஜ சுவாமி ஆலயத்தில் துர்க்கைக்கான பெரிய சந்நிதி உள்ளது. இது புராணத்தில் விந்தைக் கோட்டம் என்று குறிக்கப்படுகின்றது. பல அசுரர்களைக் கொன்ற பாவம் தீரத் துர்க்கை இங்கே சிவபூசை செய்தாள் என்று கூறப்படுகின்றது.

கங்கைகொண்ட சோழபுரம் மகிஷாசூரமர்த்தனி

சோழப்பேரரசின் உன்னத கலைச் செல்வமாகத் திகழ்ந்துவரும் கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீசுவரர் ஆலயத்தில் துர்க்கைக்கென சிற்றாலயம் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். கருவறை உள்மண்டபம் ஆகியவற்றுடன் திகழும் இக்கோயிலில் எண்கரங்களுடன் வீர நடனம் புரியும் துர்க்கையைக் காண்கிறோம். இச்சந்நிதிக்கு நேர் எதிரில் சிம்மதீர்த்தமும், நேர் பின்புறத்தில் துர்க்கைக்குரிய வன்னி மரமும் உள்ளன. மேற்படி சிம்ம தீர்த்தத்தில் தான் ராஜேந்திர சோழன் கங்கை வரை படையெடுத்துச்சென்று வெற்றியுடன் கொண்டு வந்த கங்கை நீரை நிரப்பினான் என்று கூறப்படுகிறது. நீர்க்கரையில் வீற்றிருப்பதால் இவள் ஜலதுர்க்கை என்று போற்றப்படுகின்றாள்.

குடவாயில் பெருந்துர்க்கை

குடவாயில் என்னும் தலம் கும்பகோணத்திற்கு அருகில் உள்ளதாகும். இங்குள்ள ஆலயத்தில் "பெரியநாயகி" என்னும் பெயரில் அம்பிகை தனி ஆலயத்தில் எழுந்தருளியுள்ளார். இத்தலத்தில் தனியாகக் கோட்டத்தில் துர்க்கையை அமைக்கவில்லை. தனிக்கோயிலிலுள்ள அம்பிகையான பெரியநாயகியையே துர்க்கையாகப் பாவித்துப் பூசனை செய்கின்றனர். இவளைப் ப்ருஹத்துர்க்கை என்றும் அழைக்கின்றனர். இப்படித் தனிச் சந்நிதியில் உள்ள அம்பிகையைத் துர்க்கையாக வழிபடும் வழக்கம் தமிழகத்தில் வேறெங்கும் இல்லை.

(ஆந்திர, கன்னட மாவட்டங்களில் பெரும்பாலும் சிவாலயங்களில் அம்பிகை சந்நிதிகளுக்குப்பதில் துர்க்கை சந்நிதியை அமைத்திருப்பதைக் காண்கிறோம். இத்தலங்களில் அவள் வீரசக்தியாகவே குறிக்கப்படுகிறாள். (எ.டு.) ஸ்ரீ சைலத்தில் துர்க்கையாக எட்டு கரங்களுடன் அம்பிகை விளங்குகிறாள். இவளை இங்கு தாம்பரகௌரி என்று அழைக்கின்றனர். இதனை ஒத்ததான அநேக சக்தி சந்நிதிகளை இப்பகுதியில் காண்கிறோம்.)

மேலும் துக்காச்சி திருவாரூர் முதலிய அனேக தலங்களில் துர்க்கை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளாள் என்பதை தலபுராணங்களால் அறிகிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலைஞர்கள் கண்ட துர்க்கை

சிவனருளால் உலக நன்மைக்காகத் தோற்றுவிக்கப்பட்டவள் துர்க்காதேவி என்றாலும், ஆதியில் அவள் தனித்தெய்வமாகத் தனிக் கோயிலிலேயே வழிபடப்பட்டாள். காலப்போக்கில் பல்லவர்கள் அவளை வழிபாட்டைச் சிவவழிபாட்டுடன் இணைத்து ஒரே ஆலயத்தில் வழிபடவகை செய்தனர்.

ஆதியில் பெரிய பலகைக் கல்லில் அவளுடைய உருவம் செதுக்கி வைத்து வழிபடப்பட்டது. இதில் அவள் எட்டு கரங்களுடன் வில், அம்பு, கேடயம், வாள், கத்தி, சங்கு சக்கரம் ஆயுதங்களை ஏந்தி மான் வாகனத்தில் வருபவளாகச் சித்தரிக்கப்பட்டாள். அவளுக்கு ஒருபுறம் நவகண்டம் தரும் வீரனும், மறுபுறம் தீபாராதனை செய்யும் பூசாரியும் காட்டப்படுகின்றனர். அவளுக்கு அளிக்கப்படும் காணிக்கைப் பொருள்களான பந்து, கழங்கு, கிளி ஆகியனவும் காட்டப்பட்டன. இவள் எருமைத் தலையின் மீது நிற்கிறாள்.

இத்தகைய துர்க்கை உருவம் செதுக்கப்பட்ட கற்கள் துர்க்கைக் கற்கள் என்றழைக்கப்பட்டு, ஊரின் வடக்கு எல்லையில் வடக்கு நோக்கியவாறு நடப்பட்டு வழிபடப்பட்டன. பல்லவர்கள் இக்கற்களை சிவாலயத்திற்குள்ளேயே வடக்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கியவாறு அமைத்து வழிபட வகை செய்தனர். காலப்போக்கில் அந்நிலையும் மாறி இவள் திருவுருவத்தைக் கருவறையின் வடக்கு கோட்டத்தில் வைக்கும் வழக்கம் வந்துவிட்டது.

ஆதியில் எட்டு கரங்களுடன் அமைக்கப்பட்ட அவள் பின்னாளில் நான்கு கரங்களுடன் மட்டுமே அமைக்கப்பட்டாள். இப்போது சிலதலங்களில் மட்டுமே அவள் எட்டு கரங்களுடன் திகழ்வதைக் காண்கிறோம். பெரும்பாலான தலங்களில் நான்கு கரங்களே அமைக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலும் அவள் நின்ற நிலையிலேயே அமைக்கப்படடுகிறாள் என்றாலும் கலைஞர்களின் கற்பனைத் திறனுக்கேற்ப மான் (அ) சிங்கத்தின் மீது ஒய்யாரமாகச் சாய்த்து கொண்டிருப்பவளாகவும், ஒரு காலை முன்வைத்து நடக்கத் தொடங்குவது போலவும், (கண்ணனைப் போன்று) ஒரு காலை ஊன்றி ஒரு காலை குறுக்காக வைத்து சுவஸ்திக நிலையிலிருப்பவளாகவும் அமைக்கப்பட்டுள்ளாள்.

இவள் எல்லையற்ற ராஜசுகத்தில் நிலைத்திருப்பதைக் குறிக்கும் வகையில், மேலே இரண்டு சாமரங்களும் வெண்கொற்றக் கொடையும் அமைக்கப்பட்டன. மேலும், இவளை ஞானிகள், ஞானேசுவரியாகப் போற்றுவதைக் குறிக்கும் வகையில் இவளுக்கு இரண்டு புறமும் முனிவர்களின் உருவங்கள் அமைக்கப்பட்டன.

மேலும் இவள் சுகத்தினை உயிர்களுக்கு அளிப்பவள் என்பதை உணர்த்த (சுகமாகிய) கிளியை ஏந்தியுள்ளாள். இடையின்மீது ஊன்றியுள்ள இவளுடைய இடக்கரத்தில் கிளி அமர்ந்துள்ளதைப் பல தலங்களிலும் காண்கிறோம்.

கலைவளரவளர துர்க்கையின் வடிவிலும் வனப்பிலும் அனேகக் கலையழகு தொடர்ந்து வளர்ந்து மிளிர்ந்து வருவதைக் காண்கிறோம்.

துர்க்கையின் உலாத்திருமேனி

சிவாலயங்களில் துர்க்கைக்கென தனிவிழாக்களோ, நோன்புகளோ கொண்டாடப்படுவதில்லை. எனவே அவளுக்கென தனியே உலாத் திருமேனிகள் அமைக்கப்படுவதில்லை. என்றாலும் அபூர்வமாக சில தலங்களில் மட்டுமே துர்க்கைக்கென உலாத்திரு மேனிகள் அமைக்கப்பட்டுள்ளன. பௌர்ணமி நாட்களில் இவளுக்கு விழாக்களும் நடத்தப்படுகின்றன. பட்டீச்சுவரத்திலுள்ள துர்க்கையின் உலாத்திருமேனி கலையழகுமிக்கதாகும்.

சென்னை - நங்கநல்லூர் துர்க்காதேவி

சென்னை நங்கநல்லூரில் அண்மைக் காலத்தில் கட்டப்பட்ட ஆலயம் அர்த்தநாரீசுவரர் ஆலயம் ஆகும். இங்குத் துர்க்கைக்கென பெரிய சந்நிதி கட்டப்பட்டுள்ளது. மாமல்லபுரத்திலுள்ள (பாண்டவ விரதம் என்று அழைக்கப்படும் கோயில்களில் ஒன்றான) துர்க்கைக் கோயிலை மாதிரியாகக் கொண்டு இச்சந்நிதி தேர்வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. பக்கங்களில் சக்கரங்களும் அதை இழுத்துச் செல்லும் குதிரைகளும் செய்யப்பட்டுள் ளன. துர்க்கைக்குத் தேர்வடிவில், அமைந்த கோயிலாதலால் தனிச்சிறப்பைப் பெறுகின்றது. இதனுள் எட்டு கரங்கள் கொண்ட நெடிய வடிவில் துர்க்கை எழுந்தருளியுள்ளாள். மிகச்சிறந்த கலைக் கோயிலாகத் திகழும் இது சிறந்த பிரார்த்தனைத் தலமாகவும் விளங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பல்லவர்கள் கண்ட துர்க்கை

ஆதியில் தனித்த நிலையில் இருந்த துர்க்கை வழிபாட்டைச் சிவவழிபாட்டுடன் இணைத்தவர்கள் பல்லவர்கள் என்பது ஆராய்ச்சி யாளர்களின் கருத்தாகும். பல்லவர்கள் துர்க்கையி டம் நிறைந்த பக்தி கொண்டிருந்தனர். அவர்கள் அமைத்த அனைத்துச் சிவாலயங்களிலும் துர்க் கையைத் தனிச்சிறப்புடன் அமைத்துள்ளதைக் காண்கிறோம்.

மாமல்லபுரத்தில் பழைய கலங்கரை விளக் கத்திற்கு நேர் கீழே ஒரு குகைக் கோயில் அமைக் கப்பட்டுள்ளது. இதில் சிவபெருமான் உமா தேவியு டன் சோமாஸ்கந்தராக வீற்றிருக்கின்றார். இங்குள்ள முன்மண்டபத்தில் யோக நித்திரை புரியும் திருமா லையும், போர்க் கோலத்தில் விளங்கும் துர்க்கை யையும் காண்கிறோம். துர்க்கை பாய்ந்து வரும் சிம்மவாகனத்தில் வீற்றிருக்கின்றாள். அவளுடைய எட்டுகைகளிலும் எட்டுஆயுதங்கள் உள்ளன. ஒரு கை வில்லைப் பிடிக்க ஒருகை அம்பராத் தூணியி லிருந்து அம்பை எடுக்கின்றது. வலது முன்கை நீண்ட போர்வாளை ஏந்தியுள்ளது. அவள்மீது கொற்றக் குடை கவிக்கப்பட்டுள்ளது. சுற்றிலும் சக்திகணங்கள் போரிடும் கோலத்தில் உள்ளனர்.

அவளுக்கு எதிரில் பெரிய கதையை ஏந்திச் சற்று சாய்ந்த கோலத்தில் எருமை முகத்துடன் மகி ஷாசுரன் நிற்க, சுற்றிலும் அசுரகணங்கள் போர்க் கோலத்துடன் நிற்கின்றனர். இச்சிற்பத்தில் அம்பி கையின் திருமுகத்தில் அலட்சியமும் வீரமும் கொப்பளிக்க, மகிஷனின் முகத்தில் கபடும் சூதும் நிறைந்திருக்கின்றன. அளவாலும் கலைத் திண்மை யாலும் பெரிய இந்தச் சிற்பம் உலகப் புகழ் பெற்ற தாகும்.

இந்த ஊரின் வடக்கில் சிவன், பிரம்மா, திருமால் ஆகியோருக்கென அமைந்த மும்மூர்த்தி குகைக் கோயிலின் ஒரு மாடத்தில் பெரிய அளவில் துர்க்கையின் சிற்பத்தையும் அமைத்துள்ளனர். இதுவும் அழகிய வேலைப்பாடு கொண்டதாகும்.

மேலும், பாண்டவ ரதங்கள் என்றழைக்கப் படும் ஐந்து கற்கோயில்களில் ஒன்று துர்க்கைக்காக அமைக்கப்பட்டதேயாகும். இதில் பெரிய துர்க்கை யின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. மேலே மானும், சிங்கமும் காட்டப்பட்டுள்ளன.

பல்லவ மன்னனான ராஜசிம்மன் கட்டிய காஞ்சீபுரம் கயிலாய நாதர் கோயிலில் துர்க்கை யின் பல்வேறு திருக்கோலங்களைத் தரிசிக்கின் றோம். இதில் எட்டு திருக் கரங்களுடன் காட்டப் பட்டுள்ள அவள் மிகவும் மென்மையானவளாக வும் நளினம் கொண்டவளாகவும் கலையரசியாக வும் திகழ்கின்றாள். சிங்கத்தின் மீது காலை ஊன்றி விரைபவளாகவும், சிங்கத்தின் மீது அமர்ந்திருப்ப வளாகவும் பல நிலைகளில் காட்சியளிக்கின்றாள். இங்கு பதினாறு கைகளுடன் வீர தீரத்துடன் விளங் கும் துர்க்கையையும் காண்கிறோம்.

பல்லவர்களின் மற்றோர் கலைக் கோயி லான தென்னாற்காடு மாவட்டம் பனையபுரம் தால புரீசுவரர் ஆலயத்தினை ஒட்டியுள்ள குகையில் துர்க்கையைக் காண்கிறோம். இவர் மிகச் சிறந்த வரப்பிரசாதியாக விளங்குகின்றாள்.

திருச்சிமலையில் அமைக்கப்பட்டுள்ள குடைவரைக் கோயிலில் சிவபெருமான் பிரம்மா, விஷ்ணு, முருகன், விநாயகர் ஆகியோருடன் துர்க் கையுடன் தனிச்சிறப்புடன் அமைக்கப்பட்டிருப் பதைக் காண்கிறோம்.

இன்னும் அனேக பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்டுள்ள சிவத்தலங்களில் சிவவழி பாட்டுடன் இணைந்த நிலையிலேயே துர்க்காதேவி வழிபடப்படுவதைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமகளீசர் (மகாலெட்சுமீசர்)

மகாலட்சுமி தாயார்
நன்றி:தமிழ்நாடு தொல்லியல் துறை

உலகிலுள்ள அனைவரும் விரும்புவது செல்வமாகும். செல்வம் பூமியாகவும், மாடாகவும், மனையாகவும் பலபொருளில் விளங்கி மனிதர்களுக்குப் பெருமை சேர்க்கின்றது. அத்தகைய பொருள் செல்வத்திற்கு அதிபதியாக இருப்பவள் திருமகளாகிய மகாலட்சுமி இந்தியசமயங்கள் அனைத்திலும் மகாலட்சுமி தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றாள்..

மகாலட்சுமி சிவபெருமானின் தங்கையாவாள். அவள் சிவனடியார்க்குத் தானாகவே வந்து உதவுகின்றாள். என்று தமிழ்த் திருமுறை கூறுகிறது. சிவபெருமானுக்கு உரிய வில்வ மரத்தடியிலேயே லட்சுமி நீங்காது வாசம் செய்கிறாள். மேலும் அவள் அனேக ஸ்தலங்களில் சிவபூஜை செய்து மகிழ்கிறாள்.

சைவர்களின் தலைமைத் தலமான திருவாரூர் மகாலட்சுமி சிவனைப் பூசித்தப் பெருந்தலமாகும். இது லட்சுமியின் வேறுபெயரான கமலா என்ற பெயரால் கமலை, கமலாலயம் எனப் பலவாறு அழைக்கப்படுகிறது. சிவாலயங்களிலுள்ள பரிவார தேவதைகளில் ஒருத்தியாக மகாலட்சுமி விளங்குவதைத் தென்னக மெங்கும் காண்கிறோம். சிவமஞ்சரியின் இப்பகுதி திருமகளின் தோற்றம், அவள் சிவாலயத்தில் பெற்றுள்ள இடம், திருமகள் பூசித்த திருத்தலங்கள் ஆகியவற்றை விளக்குவதாக மலர்கின்றது. மகாலட்சுமியின் அருளாலும் கமலாம்பிகை உடனாய ஆரூர்ப் பெருமானின் அருளினாலும் அன்பர்கள் சகல செல்வயோக மிக்கப் பெருவாழ்வைப் பெற்றுச் சிறப்புடன் வாழ பிரார்த்திக்கின்றோம். — சிவசுந்தரி

சிவாலயங்களில் மகாலட்சுமி

❊ சிவாலயத்திலுள்ள பரிவாரங்களில் ஒருத்தியாக மகாலட்சுமி விளங்குகின்றாள். இவளுக்குரிய திசை வடமேற்கு முனையாகும். இங்கு இவள் கிழக்கு நோக்கியவாறு வீற்றிருக்கின்றாள். இவளுக்கு இரண்டு புறமும் யானைகள் இருக்கின்றன. சிலசிற்பங்களில் யானைகள் நீராட்டுவது போலவும், சில சிற்பங்களில் கவரிகளைக் கொண்டு வீசுவதுபோலவும் அமைக்கப்பட்டுள்ளன.

❊ மகாலட்சுமி சில தலங்களில் தாமரை மலர்மீது பத்மாசனத்திலும், சில தலங்களில் இரண்டு கால்களையும் தொங்கவிட்டவாறும் அமர்ந்திருக்கின்றாள். சில தலங்களில் அவளுக்கு நேர்எதிரில் வாசல் அமைக்காமல் ஜன்னலை அமைத்துள்ளனர். பெரும்பான்மையான தலங்களில் அவள் சுதைவடிவமாகவே அமைக்கப்பட்டிருக்கின்றாள். பின்னாளில் அவள் திருவுருவை அமைத்தவர்கள் கற்சிலையாக மாற்றியமைத்துள்ளனர்.

❊ தீபாவளியன்று இவளுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. பெருந்திருவிழாக்கள், கும்பாபிஷேகம் முதலியவற்றிற்கு முன்பாகத் தனபூசை என்ற பெயரில் மகாலட்சுமிக்குச் சிறப்புவழிபாடுகள் செய்யும் வழக்கம் உள்ளது. இதனால் அந்த விழாக்களுக்கான பொருள் வரவு மிகுதியாக இருக்கும் என்று உறுதியாக நம்புகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமுறைகளில் திருமகள்

தமிழ்மறையான தேவாரத்துள் திருஞான சம்பந்தப்பெருமான் ஏறத்தாழ ஐம்பது இடங்களில் மகாலட்சுமியைப் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றார். இவற்றில் திருமகள் பூமகள், அலராள். பங்கய மங்கை, பொன், மலராள், செய்யாள், தூமலராள், வானோர்சீர் என்பன குறிப்பிடத்தக்க பெயர்களாகும். சிவாலயங்களையும், தேவாரத்தை ஓதுபவர்களையும் லட்சுமிதேவி உடனிருந்து காக்கின்றாள் என்பது அவர்கருத்தாகும். சிலதலங்களை லட்சுமிதேவியின் இருப்பிடமாகவே சொல்லியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (எ.து.) வேதாரண்யத்தை மலர்மகள் நிலவிய மறைவனம் என்று குறிக்கின்றார். திருமாலின் மார்பில் நீங்காது உறைவதைப் போலவே தேவாரத்தைப் பாடுபவர்களின் மார்பிலும், சிவனைத்தியானிப்பவர் மார்பிலும் உறைகின்றாள் என்கிறார்.

அப்பரடிகள் திருமகளைச் சிவபெருமான் தோற்றுவித்துத் திருமாலுக்கு அளித்தார் என்பதை "செய்யவளை மாலுக்கீந்த சிவனவன் காண்" என்று குறிக்கின்றார். திருமகள் சிவபூசைசெய்து கொண்டேயிருக்கின்றாள் என்பதைத் திருவாலங்காட்டுப் பதிகத்தில் "செய்யாள் வழிபட நின்றார் தாமே" என்கிறார்.

மேலும், சிவபெருமானின் திருவடிகளாகிய தாமரைமலரில் இலக்குமி நீங்காது உறைகிறாள். இதனைத் "திருமகளுக்குச் செந்தாமரையாம் அடி" என்றும் குறிக்கின்றார்.

சுந்தரர் திருமகளை, திருமாமகள், செம்பொன், அலராள் என்று பலபெயர்களால் குறிப்பதுடன் (திருச்சுழியற்) பெருமானை வழிபடுபவரைப் அவள் நீங்காது பிரியாதிருக்கின்றாள் என்றும் குறித்து மகிழ்கின்றார்.

மகாலட்சுமி தீர்த்தங்கள்

திருமகள் சிவபூசைசெய்யவும் நீராடி மகிழவும் அமைத்த தீர்த்தங்கள் லட்சுமி தீர்த்தங்கள் என்று பெயர் பெறுகின்றன. திருப்பரங்குன்றம், பனையூர், வலம்புரம், திருப்புத்தூர், காஞ்சீபுரம், இராமேசுவரம் முதலிய பலதலங்களில் லட்சுமிதீர்த்தங்களைக் காண்கிறோம். இவற்றில் முதன்மை பெற்றது திருவாரூர் திருக்குளமாகும். இது அவள் பெயரால் கமலாலயம் என்றழைக்கப்படுகிறது.

திருநின்றியூரில் ஆலயத்திற்கு தெற்கில் அமைந்துள்ள தீர்த்தம் மகாலட்சுமி தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. திருமழபாடியில் அம்பிகை சந்நிதிக்கெதிரில் மகாலட்சுமி தீர்த்தம் அமைந்துள்ளது. இங்கு அம்பிகை சிவபெருமானை சோமாஸ் கந்தராக வழிபட்டாள் என்று கூறப்படுகிறது.

இவற்றையொத்ததாக திருமாகறல் மாகறலீசுவரர் ஆலயத்திற்கு எதிரிலும், கடிகுளம் கற்பகனார் கோயிலிலும் இன்னும் அநேக தலங்களிலும் லட்சுமி தீர்த்தங்கள் உள்ளன. இவற்றில் மூழ்கிச் சிவபெருமானை வழிபட்டால் செல்வம் பெருகும் என்று நம்புகின்றனர்.

ராமேசுவரத்து மகாலட்சுமி தீர்த்தம்

இராமேசுவரம் இராமநாத சுவாமி ஆலயத்தின் (அனுப்பு மண்டபத்தினை ஒட்டி அழகியகுளமாக மகாலட்சுமி தீர்த்தம் அமைந்துள்ளது. இதன் கரையில் மகாலட்சுமிக்கென தனிச் சிற்றாலயம் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதில் மூழ்கி தன்னையும் இராமநாதப் பெருமானையும் வணங்குபவர்களுக்கு மகாலட்சுமி ஐஸ்வர்யத்தை வழங்குகிறாள் என்பது நம்பிக்கையாகும். தருமராஜன் இதில் மூழ்கிச் சகல ஐஸ்வர்யங்களையும் பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது. மேலும் இக்கோயிலுள்ள சுக்கிரவார மண்டபத்தில் தூண்களில் அஷ்டலட்சுமிகளையும் காண்கிறோம். லட்சுமிதேவி சீதையாக அவதரித்திருந்த போது அமைத்து வழிபட்ட சீதா தீர்த்தமும் இத்தலத்தில் உள்ளது.

நந்தவன லட்சுமி

பொதுவாகச் சிவாலயங்களின் (வாயுதிக்காகிய) வடமேற்குமூலையில் கிழக்கு நோக்கியவாறு லட்சுமியை அமைப்பதே முறையாகும். என்றாலும், திருக்கொள்ளம் பூதூரில், நந்தவனத்தின் மையத்தில் மகாலட்சுமிக்கென தனி ஆலயம் உள்ளது. இந்த அமைப்பு வேறெங்கும் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஷ்டலட்சுமி வழிபட்ட தலங்கள்

மகாலட்சுமி தேவி தனலட்சுமி தான்யலட்சுமி தைரியலட்சுமி, வீரலட்சுமி, வித்யாலட்சுமி, கீர்த்திலட்சுமி, விஜயலட்சுமி, ராஜ்யலட்சுமி என்ற எட்டுப் பெயர்களில் திகழ்கின்றாள். இந்த எட்டு வடிவங்களுடன் முறையே திருவாரூர், ஸ்ரீவாஞ்சியம், வைகல், திருக்கோழம்பம், திருநின்றியூர், மாயூரம், திருமருகல், திருப்புகலூர் என்ற எட்டு ஊர்களில் சென்று சிவ பூஜை செய்தாள். இத்தலங்களுக்குச் சென்றுச் சிவனை வழிபடுபவர்களுக்கு அஷ்டலட்சுமிகளின் அருள் நிறைவாகக் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும்.

மேலும் சிவாலயங்களிலுள்ள அம்பிகை சந்நிதியின் தூண்களில் அஷ்டலட்சுமிகளை அமைக்கின்றனர். இதனால் இவை அஷ்டலட்சுமி மண்டபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இராமேசுவரம், திருவண்ணாமலை முதலிய இடங்களில் இதனைக் காணலாம்.

திருமகள் சிவபூசை செய்த திருத்தலங்கள்

திருமகளாகிய மகாலட்சுமி, திருமாலுடன் நீங்காது இருக்கவும் அழகிய புதல்வரைப் பெறவும் இன்னும் பலகாரணங்களுக்காவும் அநேக இடங்களில் சிவபூசை செய்தாள். அவள் சிவபூசைசெய்த தலங்கள் திருமகள்விலாசம் என்றே போற்றப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

திருவாரூர் கமலாலயம்

கமலமாகிய தாமரைமலரில் வாழும் திருவாகிய மகாலட்சுமி சிவனைப் பூசித்த தலங்களில் முதன்மை பெற்றது திருவாரூர் ஆகும். இதனால் இவ்வூருக்குக் கமலாலயம் என்பது பெயராயிற்று. இங்கு அவள் அமைத்த தீர்த்தம் கமலாலயம் என்ற பெயரில் 30 ஏக்கர் பரப்புள்ள பெரிய குளமாக விளங்குகின்றது. இதனையொட்டி இத் தலத்திற்கு கமலாலயம், கமலபுரம், கமலை, ஸ்ரீபுரம் எனப் பல பெயர்கள் வழங்குகின்றன.

இங்குள்ள தியாகராஜர் ஆலயக் கருவறை ஸ்ரீ லட்சுமிவாசம் என்றே அழைக்கப்படுகின்றது. இங்குத் திருமகள் வழிபட்டுப் பேறுபெற்றதைத் தல புராணம் பின்வருமாறு கூறுகின்றது. பாற்கடலில் பிறந்த பாவையாகிய லட்சுமி வருணராசனின் மகளாக வளர்ந்தாள். அவள் திருமாலைக் கணவனாக அடைய எண்ணி இங்கே வந்து தவம்செய்தாள். சிவபெருமான் அந்தவரத்தை அருளினார். அதன் படியே அவள் திருமாலை மணந்து கொண்டாள். கமலையால் பூசிக்கப்பட்டதால் இத்தலம் கமலாலயம் என்று அழைக்கப்படுகின்றது.

திருநின்றவூர்

திருமகள் பூசித்த தலங்களில் சிறப்பு மிக்கது திருநின்றவூராகும். திருவாகிய மகாலட்சுமி நிரந்தரமாகத் தங்கிப் பூசித்தகாரணத்தால் இவ்வூர் திருநின்றவூர் என்றழைக்கப்பட்டது. இங்கு மகாலட்சுமி பூசித்ததால் சிவபெருமான் மகாலட்சுமி புரீசுவரர் என்றும் அம்பிகை உலகநாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர். திருமகள் திருநின்றியூரில் நீங்காது நின்று பூசைசெய்வதைத் தேவாரத்துள் 'செந்தண் மாமலர் திருமகள் மருவும் திருநின்றியூர்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவாஞ்சியம்

ஒருசமயம் திருமகளுக்கும் திருமாலுக்கும் இடையே ஒரு விவாதம் ஏற்பட்டு அது வாய்ச்சண்டையாக முடிந்தது. அதனால் திருமகளுக்கு மிக்க மனவருத்தம் உண்டாயிற்று. அவள் திருப்பாற்கடலை விட்டு நீங்கி ஒருவரும் அறியாமல் பிருகு முனிவரின் ஆசிரமத்தினை அடைந்து அவருடைய பெண்ணாக வளர்ந்து வந்தாள். திருமகளைப் பிரிந்துவாடிய திருமால் அவளைப் பல இடங்களில் தேடிச்சோர்ந்தார்.

இறுதியில் நாரதர் சொற்படி சந்தனவனமான வாஞ்சியம் என்னும் தலத்தை அடைந்து சிவபெருமானைநோக்கிக் கடுந்தவம் புரிந்தார். அவருடைய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவர்முன்னே தோன்றினார். திருமால் அவரை பணிந்து மீண்டும் தமக்குத் திருமகளை அளித்தருள வேண்டும் வேண்டி நின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமாலின் விருப்பப்படி சிவபெருமான் தேவர்களைக் கொண்டு பிருகுமுனிவரின் ஆசிரமத்தில் வளரும் திருமகளை அழைத்துவந்து அவருக்குத் திருமணம் செய்துவைத்தார். ஸ்ரீயாகியத் திருமகளை வாஞ்சித்துத் திருமால் தவம்செய்த இடம் ஸ்ரீவாஞ்சியம் ஆனது. ஸ்ரீவாஞ்சியம் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள தலமாகும்.

காஞ்சீபுரம் காயரோகணம்

காஞ்சீபுரத்தில் பார்வதி, இலக்குமி, சரஸ்வதி, துர்க்கை, காளி ஆகிய அனைவரும் தனித் தனியே சிவவழிபாடு செய்துள்ளனர். உமாதேவி பூசித்த தலம் ஏகாம்பரநாதர் ஆலயமாகும். துர்க்கையும் சரஸ்வதியும் சிவவழிபாடு செய்த தலம் கச்சபேசுவரர் ஆலயமாகும். மகாலட்சுமி பூசித்ததலம் காஞ்சீபுரத்தின் தென்பகுதியில் வேகவதியாற்றின் கரையில் அமைந்துள்ள காயரோகணசுவாமி ஆலயமாகும்.

இங்கு ஆலயத்தின் வடக்குப் பிரகாரத்தில் தெற்கு நோக்கியவாறு மகாலட்சுமி சந்நிதி அமைந்துள்ளது. இங்குள்ள தீர்த்தம் தாயார் குளம் என்று அழைக்கப்படுகின்றது. தாயார் என்பது லட்சுமிக்கு உரிய பெயர்களில் ஒன்றாகும்.

கொருக்கை

கொருக்கை என்பது அட்டவீரட்டத் தலங்களில் ஒன்றாகும். இங்கு யோகத்தில் வீற்றிருந்த சிவபெருமான்மீது மன்மதன் மோகமயமான பூங்கணைகளை எய்தான். அதனால் சினமுற்ற சிவபெருமான் அவனைத்தனது நெற்றிக் கண்ணால் எரித்து அழித்தார். மகாலட்சுமி தனது மானச மைந்தனான மன்மதன் எரியுண்டதைக் கேட்டு வருந்தினாள். சிவனின் கோபம் தணியவேண்டி இத்தலத்தில் சிவலிங்கத்தை வைத்து வழிபாடு செய்தாள். அவளுக்காவும், ரதிக்காகவும் இரங்கிச் சிவபெருமான் மன்மதனை உயிர்ப்பித்தார். இத்தலத்தில் இலட்சுமி அமைத்து வழிபட்டலிங்கம் இலட்சுமீஸ்வரர் என்ற பெயரில் உள்ளது.

மேலும் ஒருசமயம் திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்தபோது திருமகள் அதனைக் கண்டு அஞ்சினாள். அவளுக்கு அளவற்ற நடுக்கமும் பயமும் உண்டாகியது. அவள் இத்தலத்து இறைவனைத் தஞ்சமடைந்தாள். சிவபெருமான் சரபப்பட்சியாக வெளிப்பட்டு நரசிம்மத்தை அடக்கித் திருமகளுக்கும் தேவர்களுக்கும் உண்டான நடுக்கத்தை நீக்கினார். அதனால் இங்கு வழிபடுபவர் மனவலிமையைப் பெறுவர் என்று நம்புகின்றனர்.

வைகல் மாடக்கோயில்

திருஞானசம்பந்தரின் பாடல்பெற்ற தலமான "வைகல்" திருமகள் வழிபட்டுப் பேறுபெற்ற திருத்தலமாகும். இறைவர் வைகல் நாதர். இறைவி கொம்பியல் கோதை. திருமகள் இங்கு ஷெண்பக மலர்கொண்டு ஷெண்பக வனத்தில் வீற்றிருக்கும் பெருமானைப் பூசித்துள்ளாள்.

திருப்பனையூர்

திருமகள் பூசித்த தலங்களில் ஒன்று திருப்பனையூர் ஆகும். இங்கு பிரகாரத்தில் லட்சுமி தேவிக்கான சிறிய ஆலயம் உள்ளது. இறைவர் பனங்காடர், அழகியநாதர். இறைவி பெரியநாயகி. தீர்த்தம் லட்சுமி தீர்த்தம். இவ்வூர் நன்னிலத்திற்கு அருகில் உள்ளதாகும்.

திருவிராமேசுவரத்து மகாலட்சுமி லிங்கம்

திருமால் இராவண சங்காரத்தின் பொருட்டு இராமபிரானாக அவதரித்தபோது, அவருடன் மகாலட்சுமி சீதையாக அவதரித்தாள். இராவணனைக் கொன்ற பாவம்தீர இராமர் சிவலிங்க வழிபாடு செய்ய நினைத்த போது அவள் மணலால் சிவலிங்கம் அமைத்துத் தந்தாள். இராமபிரான் வழிபட்டச் சிவலிங்கம் ராமநாதர் என்று வழங்கப்படுவது போலவே சீதைவழிபட்டச் சிவலிங்கம் சீதேசுவரர் என்றழைக்கப்படுகின்றது. பல இடங்களில் சீதை சிவபூசை செய்திருந்தாலும் மன்னார்குடிக்குக் கிழக்கில் அமைந்துள்ள இராமேசுவரத்தில் செய்த வழிபாடு, தனிச்சிறப்பிடம் பெறுகின்றது. இங்குள்ள இராமநாதர் ஆலயப் பிரகாரத்தின் வடமேற்கு முனையில் பெரிய வடிவில் கஜலட்சுமி எழுந்தருளியுள்ளாள். அவளுக்கு முன்புறம் அழகிய சிவலிங்கமாகக் சீதேசுவரர் அமைந்துள்ளார். சீதை தனது அவதாரம் முடிந்தபிறகும் மகாலட்சுமியாக இத்தலத்தில் ஓயாது சிவபூசை செய்கின்றாள் என்று நம்புகின்றனர். இப்படி மகாலட்சுமியுடன் சிவலிங்கத்தையும் சேர்த்துக் காண்பது அபூர்வ நிலையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவநெறிக்கிரியைகளில் திருமகள்

சிவபூஜா துரந்தரர்கள் நாள்வழிபாட்டில் சிவபெருமானுடன் திருமகளையும் சேர்த்தே வழிபடுகின்றனர். பூஜாமண்டலத்தில் கங்கை, யமுனை, விநாயகருடன் லட்சுமி, சரஸ்வதி ஆகியோரும் வழிபடப் படுவதைக் காணலாம். சிவாலயங்களில் ஒவ்வொரு வாயிலின் மீதும் கஜலட்சுமி அமைக்கப்பட்டிருப் பதைக் காணலாம். காலையில் கதவைத் திறக்கும் போது கொடுங்கையிலுள்ள இந்த மகாலட்சுமியுடன் சரஸ்வதியும், விநாயகரும் பூசிக்கப்படுகின்றனர். கும்பாபிஷேகம், பவித்ரோத்சவம் முதலிய வேளைகளில் அமைக்கப்படும். யாக சாலைகளின் வாயிலின் மீது விநாயகர் லட்சுமி சரஸ்வதி ஆகியோரும் உரிய மந்திரங்களால் வழிபடப்படுகின்றனர்.

லட்சுமியின் மகுடலிங்கம்

குபேரனின் தலையில் விளங்கும் கிரீடத்தின் முகப்பில் மகாலட்சுமி விளங்குகின்றாள். இது குபேரன் செல்வத்தின் அதிபதியாகத் திகழ்வதன் அடையாளமாகும். இதுபோன்றே மகாலட்சுமி ஓயாது சிவபூசை. செய்வதை உணர்த்த அவளுடைய திருமுடியின் முன்புறம் சிவலிங்கம் அமைக்கப் பட்டுள்ளது. இதனை மகாலட்சுமித்தலமான கோல் காப்பூரில் காணலாம். இங்கு மூலத்தானத்தில் உள்ள மகாலட்சுமி வில், கேடயம், வில்வப்பழம் ஆகிய வற்றை ஏந்தியுள்ளாள். திருமுடியில் அழகிய லிங்கம் அமைந்துள்ளது. இதுவே மகுடலிங்கமாகும்.

வில்வ நிலையம்

வில்வ மரங்களை சிவவாசம் என்று கூறுவர். சிவபெருமான் வில்வ மரத்தை நீங்காது இருக்கின்றார். அதனடியில் மகாலட்சுமியும் வாசம் புரிகிறாள். லட்சுமியை "வில்வ நிலையாயை நம:" என்று தோத்திர நூல்கள் கூறுகின்றன.

தீபலட்சுமி

சிவாலயங்களில் தீபாராதனையின் போது காட்டப்படும் வெண்சாமரம், பத்மதீபம் முதலியவற் றிற்கு அதி தேவதை மகாலட்சுமி தேவியாவாள். சிவாலயங்களில் விளக்கேந்தி நிற்கும் பெண்களைத் தீப லட்சுமிகள் என்று அழைக்கின்றனர்.

திருஜயாற்று மகாலட்சுமி

வழக்கமாகச் சிவாலயங்களில் உட்பிரகார வடமேற்கு முனையில் திருமாளிகைப் பத்தியிலேயே லட்சுமிதேவிக்கு சந்நிதி அமைப்பது வழக்கம். ஆனால் காவிரிக்கோட்டமான திருவையாறு ஐயாறப்பார் ஆலயத்தில் மகாலட்சுமிக்குத் தனி சிற்றாலயம் மூன்று கலசங்கள் கொண்ட சாலஹார விமானத்துடன் அமைந் திருப்பதைக் காண்கிறோம். இதில் அவள் பெரிய திருவுருவில் விளங்குகின்றாள். இவளுக்குப் பக்கத்தில் சரஸ்வதி தேவியும் எழுந்தருளியுள்ளாள். இந்த சிற்றாலயத்தின் முன்மண்டபம் நீட்டப்பட்டு துர்க்கை மண்டபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆதலின் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் ஒருசேர தரிசிக்க முடிகிறது.

சிவாலயங்களில் வெள்ளிக்கிழமை தோறும் பராசக்தி அம்மனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து பிராகாரத்தில் வலம்வரச் செய்வது வழக்கம். என்றாலும் இந்தக் கோயிலில் வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமி பவனிவந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். இத்தகைய காட்சியை வேறெங்கும் காணமுடியவில்லை.

லட்சுமி சந்நிதிக்கு நேர்எதிரில் மகாலட்சுமி தீர்த்தம் என்னும் கிணறு அமைந்துள்ளது. இதன் நீரே ஐயாறப்பரின் அபிஷேகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

லட்சுமி தாண்டவம்

சிவபெருமான் பல அடியவர்களுக்காகத் தனது ஆடற்கோலத்தை நிகழ்த்தி அருளியதைப் போலவே திருப்புத்தூரில் லட்சுமிக் காணவும் நிகழ்த்தினார். இதனால் இதற்கு லட்சுமிதாண்டவம் என்பது பெயராயிற்று. இது ஆதியில் கௌரிதேவி காண ஆடியதாதலின் கௌரிதாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்தத் தலத்திலுள்ள அனைத்தும் லட்சுமியோடு தொடர்புடையதாக விளங்குகின்றன. ஆலயம் ஸ்ரீதளி என்றும் இங்கு சிவனாடிய தாண்டவம் லட்சுமிதாண்டவம் என்றும் தீர்த்தம் ஸ்ரீ தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகின்றன. இத்தலத்தில் சிவபெருமான் கௌரிதேவிக்காகவும், லட்சுமி தேவிக்காகவும் ஆடிய தாண்டவத்தின் பெருமைகளைத் தலபுராணம் தனிச்சிறப்புடன் குறிக்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாணி சரஸ்வதி

உலகிலுள்ள எல்லா உயிர்களும் தன்னைச் சுற்றியுள்ளதையும், தன்னையும் அறிந்து, உணர்ந்து கொள்வது, அதனை வெளிப்படுத்துவது, செயல் படுத்துவது ஆகியவற்றை ஓயாது செய்கின்றன. இந்த அமைப்பால்தான் எவ்வித குழப்பமும் இன்றி உலகம் நியதிப்படி முறையாக நடை பெறுகின்றது. இந்த அடிப்படை அறிவே 'அறிவு' 'ஞானம்' என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்த மூல அறிவை ஆதியில் இறைவனிடமிருந்து உமா தேவி பெற்றாள். இது அவள்மூலம் உலக உயிர்கள் அனைத்திற்கும் வழங்கப்பட்டது. இந்த அறிவால் தான் கன்று பாலுக்காகப் பசுவைத் தொடர்கிறது. குழந்தை தாயினைக் கண்டுத் தாவி அணைத்துக் கொள்ளுகின்றது. இந்த அறிவை உயிர்களுக்கு வழங்கும் தாயாக இருப்பதால் அவள் ஞானசக்தி, ஞானேசுவரி, ஞானாம்பிகை என்று பலவாறு அழைக்கப்படுகின்றாள். அவள் ஆதியில் சிவனிட மிருந்து படைப்புக்கடவுளாகிய பிரமன் தோன்றிய போது அப்பிரமனுக்குத் துணைவியாகத் தன்ஒரு கூறைச் சரஸ்வதி என்ற பெண்சக்தியாக அளித்தாள். அச்சரஸ்வதி உலக உயிர்களுக்கு வாழ்விற்குத் தேவையான அடிப்படை ஞானத்தை அளித்து உதவுகின்றாள்.

அந்த சரஸ்வதி கல்விக்கடவுளாகப் போற்றப் படுகின்றாள். அவள் ஞானிகளின் பரிபக்குவத்திற்கு வாகீசுவரி, வித்யா, சாரதா, நீலசரஸ்வதி என்ற அனேக வடிவங்களைத் தாங்கி அருள்புரிகின்றாள்.

இவளைத்தவிர சிவபெருமானின் பேரறி வாக வெளிப்பட்ட ஆகமங்களின் வடிவாகத்திகழும் சரஸ்வதி ஒருத்தியும் உள்ளாள். அவள் ஆகம சுந்தரி, ஆகமச்செல்வி, ஞானசரஸ்வதி என்று பலபெயர்களால் அழைக்கப்படுகின்றாள்.

யானைகள் நீராட்டத் தாமரையில் அமர்ந்திருக்கும் சரஸ்வதி-உத்திரமேரூர் காஞ்சிமாவட்டம்.
நன்றி:தமிழ்நாடு தொல்லியல் துறை

இப்பகுதியில் சரஸ்வதி சிவவழிபாட்டில் பெற்றுள்ள இடம் சிவஞானசரஸ்வதி பிரமனின் தேவியான சரஸ்வதி வழிபட்ட திருத்தலங்கள் ஆகியவற்றைக் காணலாம். சிவஞான சரஸ்வதியும், சிவபெருமானும் அன்பர்களுக்குச் சகல செல்வ யோக மிக்கப் பெருவாழ்வை அளித்தருள வேண்டு மென்று அவர்களின் பொன்னார்த் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்

– சிவசுந்தரி

- சிவாலயங்களில் அமையும் ராஜகோபுரங்கள், ஸ்ரீவிமானங்கள் முதலியவற்றில் வடக்கு நோக்கியவாறு அமையும் நிலைகளில் பிரம்மதேவனின் திருவுருவம் அமைக்கப்படுகின்றது. இவருக்கு இருபுறமும் வாணி, சரஸ்வதியர் வீற்றிருக்கக் காண்கிறோம். இவர்களைச் சாவித்திரி, சரஸ்வதி என்றும் குறிப்பர்.
- பார்வதி தேவியின் திருமணக் காட்சியிலும், சிவபெருமான் நடனமாடும் காட்சியிலும் சரஸ்வதியை வீணை வாசிப்பது போன்று அமைக்கின்றனர். கீழ்வேளூரில் நடராசர் சந்நிதியில் உள்ள சரஸ்வதி வீணை வாசித்துக் கொண்டிப்பவளாக (உலாதிருமேனியாக) எழுந்தருளியுள்ளாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரஸ்வதி வழிபட்ட திருத்தலங்கள்

ஆதியில் பராசக்தியின் அருளால் தோன்றிய சரஸ்வதி சிவனருள்பெறவும், தடையில்லா ஞானம் பெறவும் பலதலங்களில் சிவபூசை செய்தாள். அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

சீர்காழி

சிவபெருமானை இகழ்ந்து தட்சன் ஒரு பெரிய யாகத்தைச் செய்தான். அதனால், வீரபத்திரர் அந்த யாகத்தை அழித்ததுடன் அதில் கலந்து கொண்டவர்களையும் தண்டித்தார். அங்கு யாகத்தை முன்னின்று நடத்திய பிரம்ம தேவனைத் தண்டித்தது டன், அவன் மனைவியான சரஸ்வதியின் மூக்கையும் அரிந்தார். இதனால், அஞ்சிய சரஸ்வதி சீர்காழிக்குச் சென்று பிரமதேவனுடன் சிவலிங்க வழிபாடு செய்து பேறு பெற்றாள். இந்நிகழ்ச்சியை ஞானசம்பந்தர், "நாவினாள் மூக்கரிவித்த நம்பர் என்றும், நாமகள் மூக்கை அறுத்தவர்க்கு அருளும் நம்பர் என்றும் குறிக்கின்றார். மேலும் சீர்காழியில் பிரமனுடன் சேர்ந்து வழிபட்டதை நாவியலும் மங்கையொடு நான் முகன் தான் வழிபட்ட நலங்கோயில் என்று குறித் துள்ளார்.

காளத்தி

சரஸ்வதி வழிப்பட்ட தலங்களில் முதன்மை யானது காளத்தியாகும். ஒரு முனிவரின் சாபத்தால் ஊமையாகிப்போன சரஸ்வதி இங்கு வந்து வழிபட் டாள். அவள் இங்கு சரஸ்வதி தீர்த்தம் என்ற பெயரில் காளத்தீசுவரர் ஆலயத்திற்குள்ளேயே ஒரு தீர்த் தத்தை உண்டாக்கி அதில் நீராடி சிவவழிபாடு செய்து வந்தாள். அதனால் அவளுடைய ஊமைத்துவம் நீங்கி விட்டது. மேலும் பலர் இங்குவந்து இதில் மூழ்கி இதனை அருந்தியதால் தனது ஊமைத்தன்மை நீங்கி அறிவு பெற்றுள்ளனர். இப்படிப்பட்ட ஒருவர் அறிவு பெற்ற பின்பு பாடியதே "மூகஸ்துதி" ஆகும். இங்குள்ள தீர்த்தத்தை விதிப்படி அருந்தினால் நல்ல கல்வியறிவு உண்டாகும் என்று நம்புகின்றனர்.

திருமறைக்காடு

திருமறைக்காட்டில் சரஸ்வதி கலைகளின் வடிவமாக நின்று சிவனை வழிபட்டாள். அதனை நாவரசர் "கலைகள் வந்திறைஞ்சும் கழல்" (ஏத்தரோ என்றுபாடுகின்றார்). இங்கு வேத சரஸ்வதியாக அவள் வீற்றிருக்கின்றாள்.

குருகாவூர்

குருகாவூரில் பிரமதேவன் வழிபட்டபோது அவனுடன் சரஸ்வதியும் சிவலிங்க பூசைசெய்தாள். அங்கு அவள் உண்டாக்கிய தீர்த்தம் சரஸ்வதி தீர்த்தம் இந்நாளில் (வடக்குக்குளம்) என்று அழைக் கப்படுகின்றது.

திருநெய்த்தானம்

திருநெய்த்தானம் சரஸ்வதி பூசித்துப் பேறு பெற்றதலமாகும். இது திருஜயாறு சப்தத்தானத் தலங் களில் ஒன்றாகும். இங்கு சரஸ்வதி அமைத்த தீர்த்தம் உள்ளது.

திருவீழி மிழலை

வாக்தேவி, மூன்று காலங்களில் (சந்தியா தேவதையாக விளங்குகையில்) காயத்திரி, சாவித்திரி சரஸ்வதி என்ற மூன்று வடிவங்களைக் கொள்கின் றாள். இந்த மூன்று வடிவுடன் அவள் வழிபட்ட தலம் திருவீழிமிழலையாகும். இங்குள்ள மூன்று லிங்கங் கள் காயத்ரீஸ்வரர், சாவித்திரீஸ்வரர், சரஸ்வதீசுவரர் என்று அழைக்கப்படுகின்றன.

இராமேசுவரம்

இராமேசுவரத்தில் சரஸ்வதி மூன்று வடிவங் களில் இருந்து வழிபட்டு அமைத்த தீர்த்தங்கள் முறையே காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி தீர்த்தங்கள் என்ற பெயரில் வரிசையாக உள்ளன.

பெருவேளூர்

வாக்தேவி ஓசையாக வெளிப்படும்போது வாணி என்றும், அறிவாக வெளிப்படும்போது சரஸ் வதி என்றும் அழைக்கப்படுகின்றாள். பிரம்மதேவ னின் வலப்புறம் அவள் வாணியாகவும் இடது புறத் தில் சரஸ்வதியாகவும் வீற்றிருக்கின்றாள். இந்த இரண்டு உருவத்துடனும் அவள் சிவபெருமானை பெருவேளூரில் வழிபட்டாள். அதனால் அந்த சிவ லிங்கம் வாணிசரஸ்வதீசுவரர் என்றழைக்கப்படுகிறது.

மேலும் அவள் உடுப்பி, மூகாம்பிகை, ரிஷ்யசிருங்கம், கோகர்ணம், முதலிய அநேக தலங் களில் சிவவழிபாடு செய்துப் பேறுபெற்றுள்ளதை தல புராணங்கள் தனிச் சிறப்புடன் கூறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சீபுரத்தில் சரஸ்வதி

கல்வி கரையிலா கச்சி என்று புகழப் பெறும் காஞ்சியில் அமைந்திருப்பது கச்சபேசுவரர் ஆலயமாகும். இது சரஸ்வதி சிவபூசைச் செய்து பேறுபெற்றத் தலங்களில் ஒன்றாகும். இங்குச் சரஸ்வதி தேவிக்கான தனிச் சந்நிதி உள்ளது.

இங்குச் செய்யப்படும் பிள்ளைகளுக்கான கல்வித் தொடக்கம், தொழிற்சாலைகளுக்கு உரிய தொடக்கப் பூசைகள் முதலியன பல மடங்காகப் பயன் தரும் என்று நம்புகின்றனர்.

இந்நாளில் இங்கே இருப்பது ஸ்ரீ லலிதாதிரி புரசுந்தரியின் படைத்தலைவிகளில் ஒருத்தியான சியாமளா தேவியின் திருவுருவமாகும். சாக்த தந்திரங்கள் இவளை மகா சரஸ்வதி என்று போற்றுகின்றன. இவள் வீணை, கிளி, பாசம், அங்குசம், குயில், தாமரை, நீலோற்பலம், மலரம்பு, கரும்புவில் ஆகியவற்றை ஏந்தியுள்ளாள். லலிதோ பாக்யானம் இவளைச் சியாமா, சியாமளா, மந்திரிநாயகா, மந்திரிணி, சசிவேசாணீ, ப்ரதாநேசீ, சுகப்ரியா, வீணாவதீ, வைணிகீ, முத்திரணி, ப்ரியகப்பிரியா, நீபப்பிரியா, கதம்பேசி, கதம்பவனவாசினி, சதா மதா, சங்கீதயோகீனீ என்ற பதினாறு பெயர்களால் அழைத்து மகிழ்கிறது. இதேபோன்ற திருவுருவம் காஞ்சீபுரம் காமாட்சியம்மன் ஆலயத்தில் தனிச்சந்நிதியில் உள்ளது.

••• ••• •••

காளிதாசன் இவள்பேரில் சியாமளா தண்டகம் என்ற நூலைப் பாடியுள்ளார். சியாமளா தந்திரம் எனும் நூல் இவளைச் சிறப்புடன் போற்றுகின்றது.

சந்திரகலாதரவாணி

ஞானசரஸ்வதி சிவபெருமானிடமிருந்து வெளிப்படும் ஞானப் பெண்ணாதலின் அவரைப் போலவே ஜடாமகுடம் தரித்து அதில் பிறைச் சந்திரனைச் சூடியுள்ளாள். ஸ்ரீ தத்துவநிதி முதலிய நூல்கள் சரஸ்வதி சந்திரனைச் சூடி அமுத கலசத்தை ஏந்தியுள்ளாள். என்று குறிக்கின்றன. கடலங்குடியில் கிடைத்து இந்நாளில் தஞ்சாவூர் அருங்காட்சியகத்திலுள்ள சரஸ்வதியின் முடியில் சந்திரனைக் காண்கிறோம்.

கோட்ட தேவதையாக சரஸ்வதி

தஞ்சைமாவட்டம் திருப்பூந்துருத்தி புஷ்வனேசுவ்ரர் ஆலயத்தில் கருவறைக் கோட்ட தேவதையாக சரஸ்வதி அமைந்துள்ளதைக் காண்கிறோம். இவள் மேலிரண்டு கரங்களில் அட்சமாலையுடன் சுவடியையும் முன்னிரு கரங்களில் அபய ஊரு முத்திரைகளையும் கொண்டுள்ளாள்.

வேலூரின் ஒரு பகுதியாக விளங்கும் தோட்டப் பாளையம் தாரகேசுவரர் ஆலயத்திலுள்ள கோட்ட தெய்வமான பிரம்மாவிற்கு நேர் எதிரில் சரஸ்வதியைக் காண்கிறோம்.

சிவாலயக் கல்வெட்டுக்களில் சரஸ்வதி

சிவாலயங்களில் சரஸ்வதிதேவி பூசைக்கெனக் கொடையளிக்கப்பட்டதைப் பல கல்வெட்டுக்களால் அறிகிறோம். எடுத்துக்காட்டாகத் திருக்கோடிக்காவல் கோடீசுவரர் ஆலயத்திலுள்ள கல்வெட்டு இங்குள்ள சரஸ்வதி சந்நிதியில் விளக்கெரிக்க 180 கழஞ்சு பொன் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.

தஞ்சைமாவட்டம் திருத்துறைப் பூண்டி வட்டம் ரிஷியூர் கயிலாயநாதர் கோயிலுள்ள கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சரஸ்வதி வழி பாட்டிற்கு நிலமளித்தைக் குறிக்கின்றது.

சரஸ்வதி பண்டாரம்

அந்நாளில் சிவாலயங்களில் இருந்த நூலகங்கள் "சரஸ்வதி பண்டாரம்" என்று அழைக்கப்பட்டன. சிதம்பரம் சபாநாயகர் ஆலயத்தில் இத்தகைய சரஸ்வதி பண்டாரம் ஒன்று இருந்ததைக் கல்வெட்டால் அறிகிறோம். இக்கல்வெட்டின் மூலம் இப்பண்டாரத்திற்கு வருபவர்களுக்குச் சுவடிகளை அவிழ்த்துக் காட்டவும், படித்துக்காட்டவும் பழைய நூல்களைப் படியெடுத்துப் புதுக்கவும், பலர் இருந்ததையும் அறிகிறோம்.

சரஸ்வதி கணத்தார்

சரஸ்வதி தேவியை வழிபடுபவர்கள் சரஸ்வதி கணத்தார் என்றழைக்கப்பட்டனர்.

❁ காசியிலுள்ள அரசு நூலகம் சரஸ்வதி பவனம் என்று அழைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானசரஸ்வதி - ஆகமச்செல்வி

சிவஞானம் அன்பர்களுக்கு அருள்புரிய ஒரு பெண்தேவதையாக உருக்கொண்டு வரும்போது ஞானசரஸ்வதி என்று பெயர் பெறுகின்றது. இப்பெண் தெய்வம் ஆகமச் செல்வி, ஆகமசுந்தரி, ஞானச் செல்வி, என்ற பலபெயர்களைப் பெறுகின்றாள்.

இவள் பிரம்மதேவனின் சக்தியாக விளங்கும் வாணிசரஸ்வதியினின்று வேறானவள். இவள் வீணையேந்துவதில்லை. இவளுடைய திருவுருவத்தைத் திருமந்திரம்

ஏடங்கை நங்கை இறைவி எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விளங்கும் வெண்தாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் வாய்தோத்திரம் சொல்லுமே

என்று விவரிக்கின்றது. இதன்பொருள் சிவ ஆகமங்கள் எழுதப்பட்ட ஏடுகளை ஏந்தி, முக்கண்களைக்கொண்டவளாகிய பார்ப்பதி ஞானசரஸ்வதியாக வீற்றிருக்கின்றாள். அவளுடைய திருமேனி தூய படிகம் போன்ற வெண்மையுடன் உள்ளது. அவள் வெண்தாமரையில் வீற்றிருந்தவாறு ஓயாது திருமுறையாகிய ஆகமங்களை ஓதிக் கொண்டேயிருக்கின்றாள் என்பதாகும்.

கங்கைகொண்ட சோழபுரம், வேதாரண்யம் கூத்தனூர் காஞ்சி (கயிலாய நாதர் ஆலயம்) தஞ்சை, முதலிய தலங்களில் அமைந்துள்ள சரஸ்வதியின் திருவுருவங்கள் ஞான சரஸ்வதியின் உருவங்களே யாகும்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள ஞானசரஸ்வதியின் உருவம் தனிச்சிறப்பு மிக்கதாகும். இதில் அவள் மேற்கரங்களில் ஜெப மாலையும், நீர்க்கரகத்தையும் ஏந்தி கீழ்க் கரங்களில் சூசிமுத்திரையும் புத்தகத்தையும் ஏந்தியுள்ளாள். ஞானத்தின் முடிவு இறைவனோடு ஒன்றிக் கலத்தலே யாகும். அத்தகைய இறைவனை ஒருவன் என்று உணர்வதே பதிஞானம் எனப்படும். அது ஒன்றே மேலானது இதைக் குறிப்பதே சூசி முத்திரையாகும். ஞான நூல்களைப் பதினான்கு என்ற எண்ணிக்கையில் சொல்வது மரபு, இதை உணர்த்த இவள் பதினான்கு இதழ்கள் கொண்ட தாமரையில் அமர்ந்துள்ளாள். இவளைச் சுற்றிலும் முனிவர் கூட்டம் உள்ளது. இத்தகைய திருவுருவம் தஞ்சைப் பெரிய கோயிலிலும் உள்ளது.

ஞான சரஸ்வதி - கங்கை கொண்ட சோழபுரம்
நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

அம்சவல்லி - மயில்வாகினி

சரஸ்வதியை வேத நூல்கள் அன்னத்தின்மீது பவனி வருபவளாக கூறுகின்றன. தென்னகத்தில் அவள் மயிலுடன் தொடர்புடையவளாகக் காட்டப்படுகின்றாள். அவள் மயில் மீது வருவது ஆயிரம் கண்களாலும் நாம் அறிவைப் பெற்று வரவேண்டுமென்பதைக் குறிக்கின்றது என்பர். சைவத்திற்கு இணையான ஜைன நூல்களும் சரஸ்வதிக்கு மயிலையே வாகனமாகக் கூறி, அவளை வர்ஹிவாகினி என்றழைக்கின்றன. ராஜாரவி வர்மாவின் பழைய ஓவியங்களில் சரஸ்வதியுடன் மயில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதமாதா சரஸ்வதி-நன்றி:தமிழ்நாடு தொல்லியல் துறை

வேத சரஸ்வதி

(முன்பக்கத்தில் ஆகம வடிவாக விளங்கும் சரஸ்வதியைக் கண்டோம். இப்பகுதியில் வேத மாதா சரஸ்வதியைக் காணலாம்.)

வேதங்களில் சரஸ்வதி உருத்திரர்களோடு வருபவளாகக் காட்டப்படுவதால், அவர்களைப் போலவே அவளும் சடாமகுடம் தரித்துள்ளாள். அவள் தேஜஸ், பாதுகாப்பு, செல்வம் ஆகியவற்றை அருள்பவள் என்பதால் அபயமுத்திரையுடன் விளங்குகின்றாள்.

அவள் நதிகளின் வடிவமாகவும் அமுதத்தை அளிப்பவளாகவும் போற்றப்படுவதால் (பிற நதி தெய்வங்களைப் போலவே) பூரண கும்பத்துடன் காட்சியளிக்கின்றாள். இதனையொட்டி எல்லோரா கயிலாய நாதர் ஆலயத்தில் இவளுக்கு இருபுறத்திலும் கங்கையும், யமுனையும் அமைக்கப்பட்டுள்ளனர்.

சிதாகாசத்தில் அவள் யோகேசுவரியாக பத்மாசனத்தில் வீற்றிருக்கிறாள். அவ்வேளையில், இவளது மேற்கரங்களில் ஜெபமாலையும் ஓலைச் சுவடியும் அமைந்துள்ளன. (இவ்வாறு அமைந்த சரஸ்வதி கோலத்தைத் தஞ்சை அருங்காட்சியகத்தில் காண்கிறோம்).

அவள் யக்ஞங்களை ஸ்தாபிப்பவளாகவும் அவற்றைக் காப்பவளாகவும் இருப்பதால் பூணூல் தரித்து. ஜெபமாலை புத்தகம் ஆகியவற்றைத் தாங்குகிறாள். இவள் நீர்ப்பறவையை வாகனமாகக் கொண்டவள் என்று வேதங்கள் குறிக்கின்றது.

வேதநாயகி சரஸ்வதி

வேதங்களில் புகழப்படும் பல தெய்வங்களில் முக்கியமான தெய்வம் சரஸ்வதி தேவியாவாள். அவள் யாகத்தைக் காக்கும் தேவதையாகவும் யாகத்தை நடத்துபவர்களுக்கு அறிவு, ஞானம், தேஜஸ், வீரம், வெற்றி ஆகியவற்றைத் தரும் தேவதையாகவும் புகழப்படுகின்றாள்.

யஜுர் வேதத்திலுள்ள ஒரு மந்திரம் வீரமும், அறிவும் நிறைந்தவளான சரஸ்வதி, திடத்துடன் எங்களை விருத்தியடையச் செய்யட்டும் என்று கூறி யக்ஞத்தில் நெய்யை அளிக்கின்றது. மற்றோர் மந்திரம் தேவியான வாக்கே, நான் வாக்கிற்குப் பிரியமுள்ளவனாக வேண்டும். வாக்பதிக்குப் பிரியமாக வேண்டும். மதுரமான வாக்கை என்னுள் ஸ்தாபிக்கவும் சரஸ்வதிக்குச் சுவாகா என்கிறது.

மேலும், சத்தியத்தாலும், சத்தியங்களின் முனைப்பாலும், சரஸ்வதி வேள்விகளை ஸ்தாபித்துள்ளாள். அவள் வீரபத்தினியாய் அதிசய ஆயுசுடன் எமது அறிவினை விளக்கம் பெறச் செய்வதுடன் எமக்கு மகிழ்ச்சியையும், பாதுகாப்பையும் அளிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறது.

வாக்தேவி துதிகளின் வடிவமாக "இடா" என்றும் பெயரிலும்; அறிவு விளக்கமாக "பாரதி" என்னும் பெயரிலும்; ஞானவடிவில் "சரஸ்வதி" எனும் பெயரிலும் விளங்குகின்றாள் என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளது.

இதில் இடா வீடுகளில் வீற்றிருந்து மகிழ்ச்சியையும், இன்பத்தையும் அளிக்கின்றாள். பாரதி மக்களுக்குச் சோதியாவும், அறிவின் விளக்கமாகவும் திகழ்கின்றாள். சரஸ்வதி வேள்விகளைக் காப்பதுடன் செல்வத்தையும் அருள்கின்றாள். இந்த மூன்று தேவியர்களையும் மகத்தானவர்களாகப் போற்றி, சிதாகாசத்தில் உட்கார்ந்து அருள் புரிய வேண்டுமென்று ஒரு மந்திரம் கூறுகிறது.

மேலும், அறிவுப் பிரவாகம் ஐந்து நதிகளாக சரஸ்வதியை அடைந்தன என்றும், அதனால் அவள் பூமியில் நதிகளாக ஓடுகின்றாள் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

யாவற்றிற்கும் மேலாக, அவள் சிவனோடு இணைந்து வந்து அருள்பவளாகக் குறிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் அவள் ருத்திரர்களோடுவந்து வேள்விகளை காத்து செல்வத்தை அளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கப்படுவதைக் காண்கிறோம். ரிக் வேதத்தில் சரஸ்வதி ஸூக்தம் தனியிடத்தைப் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீகாளீச்சுவரர்

உலக நன்மையின் பொருட்டுச் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்ட "காளிதேவி" தனிப் பெரும் ஆற்றலுடையவள். தென்னக மக்கள் காளி தேவியைக் காவல்தெய்வமாகப் போற்றி வழிபட்டு வருகின்றனர். காளிவழிபாடே சக்திவழிபாடுகளில் மிகத்தொன்மையானதாகும். ஆதலின் அவள் ஜ்யேஷ்டை, மூத்தாள், மூ(த்த)தேவி, பழையோள் எனப்பலவாறு அழைக்கப்படுகின்றாள். இவள் தன்னைப் படைத்த சிவபெருமானையே ஆடற்போட்டிக்கு அழைக்கும் அளவிற்கு நிகரற்ற ஆற்றல் பெற்றிருந்தாள். சிவபெருமான் காளியோடு ஆடி அவளை அடக்கியதை நாட்டுப்புறக்கதைகளும், தல புராணங்களும், தமிழிலக்கியங்களும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் குறிக்கின்றன.

தேவாரம் முதலான திருமுறை நூல்கள், இறைவன் காளியை நடனத்தில் வென்றதையும், காளி சிவபூசை செய்து மகிழ்ந்ததையும் பல இடங்களில் குறிக்கின்றன.

காளிவழிபாடு சிவவழிபாட்டுடன் தொடர்பு கொண்டதாகவே உள்ளது. பல சிவாலயங்களில் காளி தேவிக்கென அமைந்துள்ள சந்நிதிகள் தனிச்சிறப்புடன் திகழ்வதைக் காண்கின்றோம்.

சிவமஞ்சரியின் இந்த இருபத்து நான்காவது மலர் சைவ சமயத்துள் காளிதேவி பெற்றுள்ள சிறப்புக்களை விளக்குவதாக மலர்கின்றது. இதில் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்ட காளிதேவி தாரகனை வெல்லுதல், காளி சிவபூசை செய்து மகிழ்தல், சிவனோடு நடனமாடித்தோற்றல், முதலான செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

காளியோடு ஆடி, கனகாசலத்தாடும் பிரானான (சிவகாமி உடனாய) ஆனந்தக் கூத்தன் அன்பர்கள் யாவர்க்கும் சகல செல்வயோகமிக்கப் பெருவாழ்வை அளிக்கவேண்டுமென்றும், கடுந்திறற் காளி அன்பர்களை அன்புடன் காத்து அருள்புரிய வேண்டுமென்றும் அவர்களுடைய பொன்னார் திருவடிகளைப் போற்றிப்பணிந்து வணங்குகின்றோம்.

– சிவசுந்தரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்தியின் நான்கு வடிவங்கள்

மூலப்பரம்பொருள் உலக உயிர்களுக்கு அருள் புரியும்போது நான்கு வடிவங்களைக் கொண்டு அருள்புரிகின்றது. இதற்குச் சதுர்த்த வடிவங்கள் என்று பெயர். சைவர்கள், ஆதிசிவமானது, உயிர்கள் உய்யும் பொருட்டுச் சிவபெருமான், உமை, விநாயகர், முருகன் என்ற நாற்பொருளாக வெளிப்பட்டு அருள்பாலிக்கின்றது என்பர். வைணவர்கள் மகா விஷ்ணுவின் நான்கு வடிவங்களாக பரவாசுதேவன் அச்சுதன், மாதவன், கேசவன், என்ற வடிவங்களைக் கூறுவர். சூரியனைத் தலைவனாகக் கொண்டவர்கள் பாஸ்கரன், பானுமூர்த்தி, ஆதித்யன், ரவி என்கின்ற நான்கு திருவடிவங்கள் தாங்கி வந்து மகாசூரியன் அருள்பாலிக்கின்றான் என்பர். இது போன்றே சிவசக்தியும் நான்கு வகை வடிவமாகத் திருவுருவம் தாங்கி வந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றது.

சிவபெருமானின் அருளே பெண்வடிவங் கொண்டு வெளிப்பட்டுப் பராசக்தியாக விளங்கு கின்றது. அதுவே பக்தர்களுக்கு அறக்கருணை யையும் பகைவர்மாட்டு மறக்கருணையையும் செலுத்தி அருள்புரிகின்றது. பராசக்தி சிவபெருமா னின் இடப்பாகத்தில் வீற்றிருக்கும்போது "பவானி" என்று பெயர் பெறுகின்றாள். அச்சக்தியே ஆண் வேடம் தாங்குகையில் "விஷ்ணு" என்று அழைக்கப் படுகின்றாள். அவளே அசுரர்கள் மீது கோபங் கொண்டு விளங்குகையில் காளி என்றழைக்கப்படு கின்றாள். சமர்க்களத்தில் போரிட்டு வெற்றிச் செல்வி யாக விளங்குகையில் துர்க்கை எனப்படுகின்றாள். இந்த நான்கு வடிவங்களையும் தேவியின் சதுர்த்த வடிவம் என்று கூறுவர். இதனை விளக்கும் வட மொழிப் பாடலொன்று உள்ளது. அது

போகேச பவானி புருஷேஷு விஷ்ணு
குரோதேச காளி சமரேச துர்க்கா !!

என்பதாகும்.

காலீயும் - காளியும்

வடஇந்தியாவில் வழிப் படப்படும் தெய்வங்களில் ஒரு த்தி "காலீ". இவள் காலம் என்ற தத்துவத்தின் வடிவமாகச் சித்த ரிக்கப்படுகின்றாள். காலம் ஓயாது மாறிக்கொண்டே இருக்கின்றது. இந்த "மாறுதல் ஒன்று தான் உலகில் மாறாததாக உள்ளது." எத்தனையோ காலம் கழிந்து போனது. அதுபோலவே இனியும் எத்தனையோ காலம் வரப்போகின்றது. காலம் ஒன்றை அழிப்பதனாலேயே மீண்டும் ஒன்றை உருவாக்கு கின்றது. அதனால் காலதத்துவமான காலீ அழிந்துபட்ட தேவர்களின் மண்டையோடுகளை மாலையாக அணிந்து, ஆயிரமாயிரம் கைகளை இடுப்பில் கோர்த்து அணிந்து கொண்டு, ஓங்கிய வாளுடன் காட்சியளிக்கின்றாள்.

அவளுடைய ஓங்கிய வாள் ஓயாது நிகழும் அழிவையும், மாறுதலையும் குறிக்கின்றது. அவளைத் தாங்கும் பீடமாக உருத்திரமூர்த்தி விளங்குகின்றார். உருத்திரனின் தொழிற்படும் சக்தி இவளே. கல்கத்தாவில் காலீதேவியின் ஆலயம் சிறப்புடன் திகழ்கின்றது.

தென்னாட்டில் வணங்கப்படும் காளிதேவி சிவபெருமானின் ஸ்ரீகண்டத்திலிருந்து தோற்று விக்கப்பட்டவள். இவள் காற்றுத் தத்துவமாக விளங்குகின்றாள். காற்று ஓயாது ஓரிடத்தில் நில்லாததைப் போலவே இவளும் சதா இயங்கிக் கொண்டே இருக்கின்றாள்.

சிவபெருமானின் பஞ்சதோங்களிலொன்றான அகோரமூர்த்தியிடமிருந்து "அகோரேசி" என்பவள் தோன்றியது போலவே சிவபெருமானின் இன்னொரு, தேகமான ஈசான தேகத்திலிருந்து காளிதேவி தோன்றிய தாகவும் கூறுவர். காளியைக்காற்று வடிவில் வழிபடும் வழக்கம் ஓரிரு இடங்களில் உள்ளது.

எடுத்துக்காட்டாக வேதாரண்யத்தை அடுத்துள்ள அகத்தியான் பள்ளியில் அகத்தீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. இங்குள்ள மகா மண்டபத்தின் தெற்குச் சுவரில் ஒரு ஜன்னல் அமைந்துள்ளது. இந்த ஜன்னலில் தவழ்ந்து வரும் காற்றே காளிதேவியாக வழிபடப்படுகின்றது. இந்த ஜன்னலுக்கு ஆடைஅணிவித்து . விளக்கேற்றி உச்சிவேளையில் சிறப்பு வழிபாடுகள் செய்யப் படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளியின் தோற்றமும் தாருகன் வதையும்

(புராணங்களில் சொல்லப்பட்ட அசுரர்களில் மிகவும் வலிமை படைத்தவன் "தாரகன்". இதே பெயரில் அரக்கர்கள் பலர் தோன்றி அழிந்திருக்கின்றார்கள். விநாயகரால் அழிக்கப்பட்ட தாருகன் ஒருவன். சூரபத்மனின் தம்பியர்களில் ஒருவனுக்கும் தாருகாசூரன் என்பது பெயர். இவனை முருகப் பெருமான் அழித்தார். தாருகன் எனும் தனி அசுரன் ஒருவனை முருகன் அழித்ததாகக் காளிதாசனின் "குமாரசம்பவம்" கூறுகின்றது. இதனால் முருகனுக்குத் "தாரகாரி" என்பது பெயராயிற்று. திரிபுரங்களில் வசித்து வந்த மூன்று அசுரர்களில் ஒருவனுக்கும் தாருகன் என்பது பெயர். இவர்களைச் சிவபெருமான் தனது புன்னகையால் கொளுத்தினார். இதனால் சிவபெருமானுக்குத் தாரகாரி என்றும் திரிபுராரி என்றும் பெயர்கள் வழங்குவதாயிற்று).

நாம் இப்போது சொல்லப்போகும் தாரகன் சிறந்த சிவபக்தன். அவன் பிரம்மனை நோக்கி அனேக காலம் தவம் செய்து அரியவரங்களைப் பெற்றான். பின்னர் தன்முன்னோர்களான அசுரர்கள் வேண்டியதைப் போலவே சாகாவரத்தையும் வேண்டினான். பிரம்மதேவன், "எனக்குச் சாகாவரம் தரும் சக்தி இல்லை; அதனைச் சிவபெருமான் மட்டுமே தர முடியும். நீ அவரை நோக்கித் தவம் செய்வாய்" என்றார். தன் முயற்சியில் சிறிதும் தளராத தாரகன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அவனுடைய அதிஉக்ரமயமான தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்குக் காட்சியளித்தார். அவன் அவரைப் பலமுறை வணங்கி, "பெருமானே பிரம்மனுடைய அருளினால் அநேக வரங்களைப் பெற்றேன். ஆனாலும் அவரால் எனக்குச் சாகா வரத்தை அளிக்க முடியவில்லை. எனக்குத் தாங்கள் சாகாவரத்தை அளித்தருளவேண்டும்," என்று பணிந்து கேட்டுக் கொண்டான்.

சிவபெருமான் , "அன்பனே உலகில் பிறப் பெடுத்த உயிர்கள்யாவும் மரணத்தைத் தழுவியே தீரும், பிரமாதி தேவர்களும் அதற்கு விலக்கல்ல என்றாலும் நீ எப்படி மரணமடைய விரும்புகின் றாயோ அதைக்கேள். அதனை வரமாகத் தருகின் றேன். அதன்மூலம் நீ எல்லையற்ற காலம் சுகமாக வாழலாம்," என்றார்.

தாருகன், "பெருமானே! நான் இளம் பெண்ணா லன்றி வேறு எதனாலும் எப்படியும் அழியக் கூடாது அதனையே எனக்கு வரமாக அளியுங்கள் என்றான். பெருமான்," அப்படியே ஆகட்டுமென்றார்.

நெடுங்காலம் நன்முறையில் அரசுபுரிந்த தாரகன் விதிவசத்தால் நிலைமாறினான். அசுரர் களுக்கே உரிய துர்க்குணங்கள் அவனிடம் தலை தூக்கின. அதனால் மானுடர்க்கும், தேவர்களுக்கும் ஓயாது இன்னல் விளைவித்தான்.

அவனுக்கு அஞ்சிய தேவர்கள் பெண்வடிவம் கொண்டு மறைந்து வாழ்ந்தனர். அப்படியும் அவனுடைய இன்னல்கள் அதிகரித்தன. அவனால் தேவர்கள் அடைந்த துயருக்கு அளவே இல்லை. அந்தத் துன்பத்தினை ஆற்றமாட்டாத தேவர்கள் சிவபெருமானைச் சரணடைந்து தம்மைக் காக்க வேண்டுமென்று கூறி அழுதனர். சிவபெருமான் தனது வலதுகரத்தால் தமது கண்டத்திலுள்ள விடத் தைத் தொட்டார். கண்டமே அவருடைய அதோமுக மாகும். அதிலிருந்து ஒப்பற்ற அழகும் அளவற்ற ஆற்றலும் கொண்டவளான காளிதேவி வெளிப் பட்டாள். அவள் அதிக சாமர்த்திய சாலியாகவும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உக்ரமயமானவளாகவும், மன உறுதியும் தைர்யமும் கொண்டவளாகவும் விளங்கினாள். அவளைக் "காளி" என்று தேவர்கள் பூமாரி பெய்து போற்றித் துதித்தனர். அவள் சிவபெருமானை வணங்கி", என்ன செய்ய வேண்டும் என்று கேட்டாள்.

சிவபெருமான், அவளிடம், "மகளே! தாரகனைக் கொன்றுவருக," என்று கூறினார். காளிதேவி தனது ஆற்றலால் பூதங்களும், கூளிகளும், பேய்களும் நிறைந்த ஒப்பற்ற சேனையை உருவாக்கினாள். அதற்குத் தானே தலைமை ஏற்றுக் கொண்டு, தாரகன் மீது போர் தொடுத்துச் சென்றாள்.

அவளுக்கும் தாரகனுக்கும் கடும்போர் மூண்டது. எட்டு நாட்கள் தொடர்ந்து போர் நடைபெற்றது. ஒன்பதாம் நாள் போரில் தாரகன் பல மாயங்களைச் செய்தான். அவையாவற்றையும் காளி தனது மோடி வித்தைகளால் வென்றாள். இறுதியில் அவனை மார்பில் உதைத்துத்தள்ளி அவனுடைய நெஞ்சைப் பிளந்தாள். அவனுடைய அங்கங்களை வெட்டினாள். அவனைக் கொன்று தேவர்களின் துயரைத்தீர்த்தாள்.

பிறகு சிவபெருமானை அடைந்து தனது வெற்றியைக் கூறி அவரைப் பணிந்து நின்றாள். பெருமான் அவளை வனங்களில் வீற்றிருந்து, வீரர்களின் தெய்வமாக விளங்க அருள்புரிந்தார். அதன்படியே அவள் வீரர்களின் தெய்வமானாள். தாரகனை வென்ற பின் அவனைக் கொன்ற பாவம் தீரும்பொருட்டு அவள் சிவபூசை செய்தாள்.

கேரள நாடகமான "தாருகன்வதம்"

காளிக்குரிய நாள் பரணியும் பூரமும் ஆகும். கேரளத்தில் பூரநாளன்று காளிக்குத் திருவிழா நடத்துகின்றனர். இதில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி களம் பாடுதல், களமெழுதுதல் என்பதாகும். களமெழுதுதல் என்பது பெரிய இடத்தில் பசுஞ் சாணத்தால் மெழுகி அதில் பெரியதாகக் காளிதேவியின் வடிவத்தை எழுதுவதாகும். இதற்கு அரிசிப் பொடியுடன் பல வண்ணங்களைச் சேர்த்துப் பயன்படுத்துகின்றனர். பெரும்பாலும் குருப்பு என்ற இனத்தினரே களம் எழுதுகின்றனர். களம் எழுதுவதற்கு முன்பாகக் குருப்பு அந்த இடத்தில் நந்துணி (வீணைபோன்றது) என்ற கருவியைக் கொண்டுபாடுகின்றர். இதற்கு உச்சப் பாட்டு என்பது பெயர்.

காளிதேவியின் வடிவம் நான்கு (அ) எட்டு (அ) பதினாறு கைகளைக் கொண்டதாகப் பல வண்ணங்களில் அமைகின்றது. களம் எழுதியபின் நம்பூதிரி வந்து விரிவான பூசைகளைச் செய்கின்றார்.

பிறகு களம் எழுதிய குருப்பு, "தாருகன் வதம் "பாட்டு" என்ற பாடலைப் பாடுகின்றார். இதன் முதல் பகுதி "சிவ நாரத சம்வாதம்" என்பதாகும். இது நாரதர் தாரகாசூரனின் கொடுமைகளைச் சிவபெருமானிடம் முறையிட்டுக் காளியைப் படைத்துத் தாரகனை அழித்து எல்லோரையும் காக்க வேண்டும் என்று வேண்டுவதாக அமைகின்றது. இது முடிந்ததும் தயாராகவுள்ள தாருகன் வேடமணிந்தவன் வெளியே வந்து குதித்தாடிப்போருக்கான அறைகூவல் விடுவான். இதைக் கேட்டு காளிவேடம் தரித்துள்ள வனும் வெளியே வந்து குதிப்பான். இருவரும் சுற்றிச் சுற்றி ஓடிவந்து போர் புரிவர். இறுதியில் காளி வென்று தாருகன் தோற்பதாக நாடகம் முடியும். காளிவேடம் அணிந்தவன் குதிக்கத் தாருகன் வேடமணிந்தவன் தரையில் வீழ்ந்து விடுவான் அவன் இடையில் மறைத்து வைக்கப்பட்டுள்ள (துணிகளை) குடலைப் போல இழுத்து அணிந்து கொள்வதும் உண்டு. இதனை முடியேற்று எனவும் அழைக்கின்றனர். பானதோற்றம் அல்லது காளி நாடகம் என்ற இந்த நாடகம் கணபதி பகவானை வாழ்த்துவதுடன் தொடங்குகின்றது. தொடர்ந்து பராசக்தி, சரஸ்வதி, பிரம்மா, திருமால் ஆகியோருக்கும் ஸ்ரீபத்ர காளிக்கும் வணக்கத்தைத் தெரிவிக்கின்றது. தொடர்ந்து களமெழுதும் பந்தலின் அலங்காரம் தாருகனின் தோற்றம், காளிதேவி திருவுருவின் ஒவ்வொரு அங்கத்தையும் கூறி அதற்கு வணக்கம் செய்தல், தாருகனை வதம் செய்ய வேண்டுதல் ஆகியன இடம் பெற்றுள்ளன.

இதில், "அளவில்லா தெழும் அரன் நன் திருமகள்" என்றும், "சலமதி சூடும் அரன் மாமலர்ப் பெண்ணுமாயி" என்றும், பலவாறாகக் காளிதேவியைச் சிவபெருமானின் மகளாகச் சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமுறை கூறும் காளியின் தோற்றமும் தாருகன் வதையும்

காளிதேவியைச் சிவபெருமான் தோற்றுத் வித்துத் "தாரகனைக் கொன்று வருக" என்று விடுத்த செய்தியைத் திருஞானசம்பந்தப்பெருமான் பல தேவாரப்பாடல்களில் அருளிச் செய்துள்ளார். திருக்காளத்தி தேவாரத்தில்,

"வல்லைவரு காளியை வகுத்து
வலியாகிமிகு தாரகனை நீ
கொல்லென விடுத்தருள் புரிந்த சிவன்"

என்று குறித்துள்ளதைக் காண்கிறோம். மேலும் தாரகன் தேவர்களுக்குத் துயர் செய்ததனாலேயே அவனைச் சிவபெருமான் கொல்வித்தார் என்பதனை,

சுரபுரத்தினைத் துயர்செய் தாரகன்
துஞ்ச வெஞ்சினக் காளியைத்
தருஞ் சிரபுரத்துள்ளான்

என்று சிரபுர (சீர்காழி) தேவாரத்துள் கூறுகின்றார்.

பின்னும் அவனைக் கொல்வதற்குச் சிவபெருமானால் அனுப்பப்பட்ட காளி கடுங்கோபத்துடன் சென்றாள் என்பதை,

வென்றி மிகு தாரகனது ஆருயிர் மடங்க
கன்றி வருகோபமிகு காளி

என்றும், காளி கோபம் கொண்டு தாரகனின் உடலை வெட்டினாள் என்பதனை

திக்கிற்றே வற்றற்றே திகழ்ந் திலங்கு மண்டலச்
சீரார் வீறார் போரார்
தாரகன் உடல் அவன் எதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்தெழுந்த
சண்டத்தீப் போலே பூ, நீர், தீ, கான்மீப்,
புணர் தரும் உயிர் கடிறஞ்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்த மங்கை
செங்கதத்தோ டாயாமே மாலோகத்
துயர் களைபவன்.

என்றும் குறிக்கின்றார். (இதன் பொருள் திக்குத் தேவர்கள் ஏதும் செய்யமுடியாமல் திகைத்து நிற்க, சிறப்பும், வீரமும், போர்க்குணமும், மிக்க காளிதேவி தாருகனை அவன் காணுமாறே வெட்டிச் சிதைத்து அதனால் எழுந்த கோபம் அடங்காமையால் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயமும் அதில் வாழும் உயிர்களும் கலங்கும்படியாக ஆடல்புரிய அவளைச் சொக்க நாட்டியத்தால் அடக்கி உயிர்களுக்கு உண்டான துயரைக் களைபவன் சிவபெருமான் என்பதாகும்)

அப்பர் சுவாமிகள் சிவபெருமான் காளியோடு ஆடி அவளை அடக்கியதைத் தமது பாசுரங்களில் பல இடங்களில் குறித்துள்ளதைக் காண்கிறோம். திருவாலங்காட்டுப் பதிகத்தில்,

"ஆடினார் காளிகாண
ஆலங்காட்டு" அடிகளாரே"

என்று கூறுகின்றார்.

தாருகாசுரனை வென்றபின் அதனால் உண்டான கோபம் அடங்காத காளியைச் சிவபெருமான் நடனமாடி அடக்கினார் என்பதை

"தாருகன் தன்னுயிர் உண்ட
"பெண் போத்தன்தான்
அவள் பொங்கு சினந்தணி கூத்தன்"

என்று கூறுகின்றார்.

அவர் தாருகன் வதத்தைச் சற்று விரிவாகக் கூறிச் சிவபெருமான் திருவடிகளைச் சரண்புகுவதும் சிந்திக்கத்தக்கது.

....எங்கும் நலியச்
கூடிய கையராகி இமையோர் கணங்கள்
துதியோதி நின்று தொழலும்
ஓடிய தாரகன் தன் உடலம் பிளந்தும்
ஒழியாத கோபம் ஒழிய
ஆடிய மாநடத்தெம் அனலாடிபாதம்
அவையாம் நமக்கோர் அரணே.

பொருள் : தாரகனின் கொடுமையின் மிகுதியால் எங்கும் துன்பப்பட்டு நலிந்து, கூப்பிய கையராகிய இமையோர் கணங்கள் துதித்து நின்று தம்மைத் தொழுதபோது (காளிதேவிஸ்ய உற்பவித்து அவனைக் கொன்று வருக என்று கூறி அனுப்ப அவள்) ஓடிய தாரகாசுரனுடன் போர் புரிந்து அவன் மார்பைப் பிளந்து அவனை அழித்து (அதனால் எழுந்த கோபமும் அகங்காரமும் அழியாத நிலையில் (அவளுடைய கோபம் அழியும்படித் திருநடனம் புரிந்த சிவபெருமானின் திருவடிகள் நமக்குத் துணையாகும் என்பதாகும்.

மேலும் ஏழாம் திருமுறையை அருளிச் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பல இடங்களில் காளி தேவியைப் பற்றிக் குறித்துள்ளதைக் காணலாம்.

குரும்பைமுலை எனத் தொடங்கும் கலய நல்லூர் தலப்பதிகத்தில் பெரிய வலிபடைத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற பொருள்பட

பொரும் பலமதுடைய அசுரன் தாரகனைப்
பொருதுபொன்று வித்த பொருளினை
முன்படைத்துகந்த புனிதன்.

என்று பாடியருள்கின்றார்.

காளிதேவிக்குக் காடுகிழாள், காடுகாள் என்பனவும் பெயர்களாகும். சிவபெருமான் காடுகாளோடு * கோடிக்கரையில் கோயில் கொண்டருள்வதைக்

கையார் வளைக் காடுகாளோடு உடனாய்
கோடியே கோயில் கொண்டாயே

என்று குறித்துள்ளார். மோடி என்பதும் காளிதேவிக்குப் பெயராகும். மோடிவித்தை என்பது மந்திர வித்தையாகும். இந்த வித்தை மிகுந்த அபாயமானதாகும். இதன் தலைவி காளிதேவியாவாள். அவளருளால் மட்டுமே இதனைச் சாதிக்க முடியும். இந்த வித்தைக்குத் தலைவியாக இருத்தலின் காளிதேவியை "மோடி" என அழைக்கப் கின்றன. இப்பெயருடைய காளியுடன் கோடிக்கரை கடற்கரையில் சிவபெருமான் வீற்றிருப்பதைச் சுந்தரர்

"மோகங் கொண்டார்.
கடற்கோடியின் மோடியை"

என்று குறித்துள்ளதைக் காண்கிறோம். பின்னர் கோபத்தை உடைய காளியின் கோபம் அடங்கும்படி சிவபெருமான் அவளோடு நடமாடியதைக்

"கொதியினால் வரு காளிதன் கோபம் குறைய
ஆடிய கூத்துடையானே"

என்றும் குறிக்கின்றார். இப்படி அனேக இடங்களில் காளிதேவியைப் பற்றிய செய்திகள் திருமுறைகளில் இடம் பெற்றுள்ளன. சிவவழிபாட்டுடன் இணைந்ததாகவே காளி வழிபாடு விளங்குவதை அறிய முடிகின்றது.

* வேதாரண்யத்தை அடுத்துள்ள தலம் கோடிக்கரையாகும். இங்கு கோடிக்கரை குழகர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் மகாமண்டபத்தில் தெற்கு நோக்கியவாறு காளிதேவி ஆலயம் அமைந்துள்ளது. இவளே தேவாரத்துள் காடுகாள் என்று போற்றப்படுகின்றாள்.

காளியும் தீர்த்தங்களும்

❑ கட்டம் என்பதற்கு நீர்க்கரை என்பது பொருள் கங்கைக் கரையில் காளிதேவியின் பெயரால் அமைந்த நீர்க்கரை காளிக்கட்டம் என்று அழைக்கப்பட்டது. அதுவே காலப்போக்கில் கல்கத்தா என்றாகிவிட்டது. இந்தியாவின் பெரிய நகரங்களில் ஒன்றாகக் கல்கத்தா விளங்குகிறது. இங்கு பெரிய காளி ஆலயம் உள்ளது.

❑ குமரி மாவட்டத்தில் திருப்பரப்பு என்னும் திருத்தலம் உள்ளது. இங்கு பெரிய சிவாலயம் உள்ளது. இது தட்சயாகத்தினை அழித்த வீரபத்திரரும் காளியும் தங்கள்கோபம் தணிய அமையுடன் வீற்றிருந்து தவம் செய்த இடமாகும். இங்கு கோயிலின் முன்னே கோதையாறு ஓடுகின்றது. இந்த ஆறு பாறைகளில் மோதி அருவியாக விழுகின்றது. இதனை பத்ரகாளி அருவி என்று அழைக்கின்றனர். இதன் தென்பகுதியில் ஒரு பெரிய சுரங்கம் உள்ளது. இதன் உள்ளே ஸ்ரீ பத்திரகாளியின் ஆலயம் இருந்ததென்று கூறுகின்றனர்.

❑ இந்தியாவின் புனித தீர்த்தங்களில் முக்கியமானது இராமேசுவரமாகும். இங்கு இருபத்தெட்டு தீர்த்தங்கள் உள்ளன. இவற்றின் காவலாக நான்கு திக்கிலும் நான்கு காளி தேவியர் இருக்கின்றனர். இவர்களின் தலைவியாக சேதுமாகாளி விளங்குகின்றாள்.

பல்வகைக் காளியர்

காளி என்றதும் நமக்கு கோப விழிப்பார்வையுடன் அச்சம் தரும் தேவியின் வடிவே நினைவுக்கு வருகின்றது. ஆனால் இப்பெயர் பலவேறு பெண் தெய்வங்களுக்கும் வழங்குவதைச் சமய நூல்களில் காண்கிறோம். ஆதி பராசக்தியான பார்வதி தேவிக்கும் காளிதேவி என்ற பெயர் ஆதிநாளில் வழங்கியது பின்னாளில் அவள் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பொன்னுடல் பெற்று கௌரி என்ற பெயர் பெற்றாள். அவள் உடலிலிருந்து கழிந்த கருநிறம் கௌசகி என்ற காளி தேவியாயிற்று.

சிவமகாபுராணத்தில் ஆதியில் புருஷன் பிரகிருதி என்ற இருவர் படைக்கப்பட்டதாகவும் அவர்கள் செய்த தவத்தால் ஆதிசிவத்தின் வலத்தோளிலிருந்து பிரம்மனும், இடத்தோளில் இருந்து திருமாலும் இருதயத்திலிருந்து உருத்திரனும் படைக்கப்பட்டனர் என்று கூறப்பட்டுள்ளது. பிரம்மனுக்கு சரஸ்வதியும், திருமாலுக்கு மகாலட்சுமியும் உருத்திரனுக்கு மகாகாளியும் தேவியராகக் படைத்து அளிக்கப்பட்டனர். இந்தக் காளிதேவியைச் சிவமகாபுராணம் தனிச் சிறப்புடன் போற்றுகின்றது. இவளுக்குக் ஆதிகாளி என்பது பெயராகும்.

மேலும் சாக்த தந்திரங்களில் பலவகைக் காளியர் போற்றப்படுகின்றனர். சக்திவழிபாட்டில் முக்கிய இடம்பெறும் தசமாகாவித்யா தேவியரில் ஒருத்தி காளி எனப்படுகின்றாள். ஜைன, பௌத்த சமயங்களிலும் காளி எனும் பெண் தெய்வம் போற்றப்படுகின்றாள். ஜைனர்கள் கொண்டாடும் பதினாறு சரஸ்வதிகளில் ஒருத்திக்கும், இருபத்தினான்கு யட்சிகளில் ஒருத்திக்கும் மகாகாளி என்று பெயர் வழங்குகின்றது. இதை யொத்ததாகச் சமய வழிபாட்டில் இன்னும் அனேக காளி தேவியரைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளி செய்த அம்பன், அம்பரன் வதம்

தாரகனை வென்றழித்தது போலவே காளிதேவி அம்பரன், அம்பன் என்ற அசுரர்களை அழித்ததை "அம்பர் புராணம்" கூறுகின்றது. அதைத் தொடர்ந்து காளிதேவி அம்பர் மாகாளத்தில் சிவனை வழிபட்டுப் பேறுபெற்றதையும் அப்புராணம் குறிக்கின்றது.

ஒருகாலத்தில் பிரம்மதேவன் வழிபாடு செய்து அருள் பெற்ற பிரம்மபுரி என்னும் தலத்திற்குத் துருவாச முனிவர் எழுந்தருளி அங்குக் கோயில் கொண்டிருக்கும் பிரம்மபுரீசுவரைப் போற்றி வழிபாடுகள் செய்து கொண்டிருந்தார்.

மதலோலை என்ற அசுரப்பெண் அவரைக் கண்டு காமுற்று, "ஐயனே தங்கள் மூலமாக இரண்டு வலிய புதல்வர்களைப் பெறவிரும்பி இங்கு வந்துள்ளேன். என்னைச் சேர்ந்து மணம்விரும்பும் ஒப்பற்ற புதல்வரை அருளுக," என்றாள். சிறிதும் நாணமின்றி தன்முன்னே நின்று இத்தகைய வார்த்தைகளைக் கூறிய அப்பெண்ணைக் கண்டு கோபமுற்ற துருவாசர், "அறிவற்ற பெண்ணே," நீ நல்லவளில்லை, தீமைகளை யுடைய நீ, தீயகுணங்களைக் கொண்ட புதல்வரை இப்போதே பெறுவாய்" என்று கூறிவிட்டு மீண்டும் நீராடிச் சிவபூசைக்குச் சென்றார். அவள் அந்தரத்தில் பறந்து தன் வழியே சென்றாள்.

முனிவனின் வாக்கு உடனே பலிக்குமாதலால் அந்த அசுரப் பெண் அந்தரத்தில் செல்லும்போது அந்த இடத்திலேயே வலிய குழந்தையொன்றைப் பெற்றாள். அம்பரத்தில் பிறந்ததால் அக்குழந்தைக்கு "அம்பரன்" என்ற பெயர் சூட்டினாள். சற்று நேரத்திற்குள் மீண்டும் ஒரு குழந்தை பிறந்தது. உலகம் அஞ்சி மயக்கம் கொள்ளும்படியாக அது அழுது கொண்டே பிறந்தது. அதனால் அதற்கு "அம்பன்" என்று பெயர் சூட்டினாள்.

பிறகு அவள் தன் இருபுதல்வர்களோடும், தமது குலகுருவான சுக்ராச்சாரியரிடம் சென்று அவரைப் பணிந்தாள். அவர் பார்வைபட்டதும் அந்தக் குமாரர்கள் எட்டுவயது கொண்ட குமாரர்களானார்கள். அவர்கள் தம் குலகுருவைப் பணிந்து போற்றினர். அவள் அவரை நோக்கி, "அசுரகுல குருவே, நான் துருவாசனின் அருளால் அசுரர் குலம் விளங்க இவர்களைப் பெற்றேன். இவர்களுக்கேற்ற வழியை அறிந்து கொள்ள இவர்களைத் தங்களிடம் விடுத்தேன். இவர்களுக்கு உரியவற்றைக் கூறி மேன்மையடையச் செய்யுங்கள்," என்று கேட்டுக் கொண்டாள்.

சுக்கிராச்சாரியர், "குழந்தைகளே, நமது பகைவர்களான தேவர்கள் உங்களுக்குத் தீங் கிழைத்தல் கூடும். அதனால் நீங்கள் அதிக சக்திகளைப் பெற வேண்டும். அதற்குச் சிவபூசையும் தவமும் மட்டுமே வழிகளாகும். நீங்கள் துருவாசன் வழிபட்ட அந்தப் புன்னைவனமான பிரம்மபுரிக்குச் சென்று தவம்புரிந்து சிவனருள் பெறுங்கள் என்றார். அதன்படியே அவர்கள் பிரம்மபுரியான புன்னை வனத்திற்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள பிரம்மபுரீசுவரை வழிபட்டனர். பிறகு, சிவபெருமானை நோக்கிக் கடும்தவம் மேற்கொண்டனர். அவர்களுக்குச் சிவபெருமான் காட்சியளித்து வேண்டியவரங்களைக் கேளுங்கள்" என்றார்.

அம்பரன் பெருமானை வணங்கி, ஐயனே, என்பெயரால் இத்தலம் அம்பர் என்றும் தாங்கள்

காளி அம்பன் அம்பரனை வெல்லுதல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கு எழுந்தருளியதால் தங்களின் பெயர் அம்பரீசன் என்றும் அழைக்கப்படவேண்டும். நாங்கள் அரிய தவசித்திகளைப் பெற்று இன்பமுடன் அழிவற்று வாழவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். சிவபெருமான் உன் விருப்பப்படியே எல்லாம் கிடைக்கும். ஆனால் எவருக்கும் அழியாவரம் தர இயலாது. ஆதலின் நீங்கள் வேறு வரங்களைக் கேளுங்கள் என்றார். நெடுநேரம் யோசித்த அவர்கள் நாங்கள் எங்கள் இருவருக்குள் ஒருவரால் தான் மரணமடைய வேண்டும். அதனையே வரமாகத் தாருங்கள் என்றனர். சிவபெருமானும் அப்படியே ஆகட்டும், நீங்கள் ஒற்றுமையாக இருக்கும் வரை உங்களுக்கு அழிவில்லை. உங்களுக்குள் ஒற்றுமை நீங்கினால் உடனே அழிவு உண்டாகும்," என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

அம்பரனும், அம்பனும், அங்கு, தேவ தச்சனைக் கொண்டு பெரிய மாடமாளிகை கூட கோபுரங்களை அமைத்தனர். சிவாலயத்தை அழகுடன் அமைத்துச் சிவபூசை செய்து கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

– – –

ஒருநாள் அவர்கள் தம் குலகுருவான சுக்ராசாரியரை அடைந்து, "ஐயனே நாங்கள் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்த விரும்பு கின்றோம். எங்களுக்குத் தகுதியான பெண்ணைத் தரத்தக்கவர் யார்?" என்று பலவாறு கேட்டனர்.

அசுரகுரு. "அசுரேந்திரர்களே, நீங்கள் தேவர்களைப் போன்று பெண்கேட்டு உரிய சடங்கு களுடன் திருமணம் செய்து கொள்ள வேண்டியது அவசியமில்லை. நீங்கள் மனம் விரும்பும் பெண் களை மோகமடையச் செய்து அவர்களைக் காந்தர்வ மணம் புரிந்து கொள்ளலாம். அல்லது பெண்களைக் களவாடிவந்து அசுரமணம் புரிந்து கொள்ளலாம். இவற்றில் தவறேதுமில்லை என்றாலும், வரம்பு மீறி விடாமல் இன்பம் துய்த்து மகிழுங்கள்," என்று கூறி ஆசியளித்து அனுப்பினார்.

அன்றுமுதல். அந்த அசுரர்கள், கந்தர்வர், இயக்கர், தேவர் என்று அனைத்து இனங்களி லிருந்தும் தங்களுக்கு வேண்டிய பெண்களைத் தேர்ந்தெடுத்து அந்தப்புரத்துக்குக் கொண்டு வந்து பத்து இன்பம் துய்த்தனர். அவர்களால் பெண்கள் அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. ஆதலால் அனைவரும் வருந்தினர். தேவர்களும் தேவமாதர் களும் அவர்களுக்கு அஞ்சி ஒளிந்து வாழ்ந்தனர். விதிவசத்தால் அசுரர்கள் சிவபூசையையும் மறந்து பெண்களைக் கைப்பற்றிவந்து இன்பம் சுகிப்பதி லேயே நாட்டம் செலுத்தினர். அவர்களுடைய தீய எண்ணம் நாளுக்குநாள் வளர்ந்தது.

அவர்களுடைய ஆற்றலைக்கண்டு அனை வரும் அஞ்சி ஓடி ஒளிந்தனர். இறுதியில் எல்லோரும் சிவபெருமானைச் சரணடைந்து தங்களைக் காக்கு மாறு வேண்டி அழுதனர்.

அவர்கள் மீது இரக்கம் கொண்ட சிவபெரு மான் பார்வதியை நோக்கினார். அவள் தம்மிடத்தி லிருந்து வலிமைமிக்க பெண்ணான காளிதேவியைத் தோற்றுவித்தாள். காளிதேவி பார்வதியை வணங்கி, "பெருமாட்டி எனக்கிடும் கட்டளையாது,'?' என்றாள். அவள்," "காளி! நீ திருமாலுடன் சென்று அம்பரனை யும் அம்பனையும் அழித்து வருக," என்று ஆணை யிட்டாள்.

விடைபெற்றுக் கொண்ட காளிதேவி அழகிய பெண்ணாக உருமாறினாள். திருமால் வயோதிக வேதியனாக வடிவம் தாங்கினார். இருவரும் அந்தரத்தில் பயணம் செய்து அம்பரனின் கோட் டைக்கு வெளியே வந்து தங்கினர். அவர்களைக் கண்ட அசுரனின் ஏவலர்கள் தம் தலைவனுக்கு ஏற்ற பெண் இவளே. இவளை இப்போதே கொண்டுசென்று அரசனிடம் சேர்ப்போம் என்று எண்ணினர்.

அவர்கள் அந்தப் பெண்ணையும், வேதிய னையும் வணங்கித் தமது தலைவனிடம் வருமாறு வேண்டினர். வேதியனும், அழகு மங்கையும் அவர்களுடனே சென்று அரசவையை அடைந்தனர். அப்பெண்ணின் பேரழகைக் கண்டு வியந்து அம்பனும், அம்பரனும் காமம் தலைக்கேறத் திகைத்து நின்றனர்.

இக்கன்னியை தனக்கு மட்டுமே சொந்த மாக்கிக் கொள்ளவேண்டும் என்று தத்தம் மனத்திற் குள் இருவரும் எண்ணினர். அம்பரன், வேதியனை நோக்கி இவளை எனக்கு மணம் செய்து கொடுங்கள் என்றான். அம்பனும் அவ்வாறே கேட்டான். வேதியன் அவர்களை நோக்கி, "அசுரேந்திரர்களே! என் மகள் திருமணப் பருவத்திலிருக்கின்றா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவளுக்கு மணம் செய்யவே உரிய மணமகனைத் தேடிக் கொண்டிருக்கின்றேன். நீங்கள் இருவருமே அவளை விரும்புகின்றீர்கள். உங்களில் ஒருவருக்கு மட்டுமே இவளைத் திருமணம் செய்துதர இயலும். உங்களில் யார்? வலிமை மிகுந்தவரோ அவரையே இவள் மணப்பாள். ஆதலின் உங்களுக்குள் யார்? வலியவர் என்று நீங்களே உரிய சோதனைமூலம் அறிந்து வந்து எனக்குக் கூறுங்கள். உங்களுக்காக இப்பெண்ணும் நானும் ஊரின் புறத்தேயுள்ள சோலையில் தங்கியிருக்கிறோம். என்று கூறிவிட்டு அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டனர்.

அவர்கள் சென்ற பிறகு அம்பனும், அம்பரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இருவருமே அப்பெண்ணை மணந்து கொள்ளப் போட்டியிட்டனர். அவர்களுக்குள் ஆசைத்தீ கொழுந்து விட்டு எரியத்தொடங்கியது.

அம்பரன் சகோதரனை நோக்கி, "நான் மூத்தவனல்லவா? நான் இவளை மணப்பதே முறைமை. எனவே நீ இவளை மறந்து விடுக" என்றான்.

இளையவனோ, "அண்ணா, நீங்கள் எத்தனையோ பெண்களைக் கூடிக்களித்தீர்கள். அப்போதெல்லாம் இந்த நாட்டை நான் நன்கு காத்துவந்தேன். என்மனம் இவள்பால் லயித்துள்ளது. ஆதலின் நீங்கள் தான் இவளை எனக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்றான். இப்படி சாதரணமாகப் பேசிக்கொண்டேயிருந்ததுபோய் இறுதியில் மோகத்தீயின் வேகத்தால் தம்முள் சண்டையிட்டுக் கொள்ளத் தொடங்கினர்.

சிவபெருமான், "உங்களுக்குள் ஒற்றுமையின்றி சண்டையிட்டுக் கொண்டால் அழிந்துவிடுவீர்கள்" என்று கூறியதை அவர்கள் மறந்தே விட்டனர். இறுதியில் அவர்களுக்குள் பெரும்போர் உருவெடுத்தது. அந்தக் கடும்போரின் இறுதியில் அம்பரன் அம்பனைக் கொன்றே விட்டான்.

அந்த வெற்றிக்களிப்புடன் ஊருக்குப் புறத்தேயுள்ள சோலையில் வேதியனும் அவனுடைய பெண்ணும் தங்கியிருக்கும் இடத்தை அடைந்தான். அங்கிருந்த பெண்ணைக் நோக்கி உன்னை உன் சொற்படி இப்போதே அடைவேன்," என்ற சொல்லி ஆர்ப்பரிப்புடன் சிரித்தான்.

காளிதேவி தனது அழகிய உருவத்தை விடுத்துக் கடும்வடிவத்தைக் கொண்டாள். கண்களில் அனல் பறக்க, "ஏ! மூடனே உன் அழிவை நீயே தேடிக்கொண்டாய், உலகிற்கும், பெண்களுக்கும் ஓயாது தொல்லையளித்து வந்த உன்னை இப்போதே ஒரு நொடியில் கொல்வேன்", என்று அவன் மார்பில் தண்டத்தால் அடித்து ஓங்கி உதைத்தாள்..

அம்பரனுக்குக் கோபம் தலைக்கேறியது கேவலம் ஒரு பெண்ணா எம்மைத் தாக்குவது உன்னை இப்போதே கொல்வேன் என்று வாளை உருவிக் கொண்டு சண்டைக்கு வந்தான். இருவரும் கடுமையாக மோதி, சண்டைசெய்தனர். காளிதேவியின் கடுந்தாக்குதலால் நிலைகுலைந்த அசுரன் அவளுடன் போராடமுடியாமல் ஓடினான். காளியும் அவனைத் துரத்திச் சென்றாள். இறுதியில் அவன் எருமை மாடாக உருமாறி ஓடினான். அம்பர் அகரம் என்ற இடத்தில் காளிதேவி அவனைப் பற்றினாள். அவனுடைய தலையை வாளால் வெட்டினாள். அசுரன் துடிதுடித்து மாண்டான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். காளிதேவிக்கு அந்த இடத்திலேயே ஒரு ஆலயம் அமைத்தனர். அதுவே இந்நாளில் அம்பகரத்தூர் என்னும் சிறந்த சக்தித்தலமாக விளங்குகின்றது.

காளிதேவி அம்பருக்கு வந்து அசுரர்கள் வழிபட்டு வந்த சிவபெருமானை வழிபட்டாள். அவளுக்கு மகாசிவபக்தர்களான அம்பரனையும் அம்பனை[illegible] கொன்ற பாவம் பற்றியது. அதனால் அவள் எல்லையற்ற வருத்தமுற்றாள். அக்குற்றம் நீங்கும் பொருட்டு அம்பரை அடுத்திருந்த சோலையில் மண்[illegible] சிவலிங்கம் அமைத்து பக்தியுடன் வழிபாடு செய்தாள். அந்த லிங்கத்தி லிருந்து சிவபெருமான் வெளிப்பட்டு அவளுக்குண்டான பாவங்களை நீக்கி அவளைச் சிவகணத் தலைவியாக்கினார். அவள் வழிபட்ட இடத்தில் "மாகாளம்" என்ற கோயில் தேவர்களால் அமைக்கப் பெற்றது. அது அம்பரை அடுத்திருந்ததால் "அம்பர் மாகாளம்" என்று அழைக்கப்பட்டது. (பார்... பக்.. 759).

காளிதேவி அம்பரனைக் கொன்ற இடம் அம்பகரத்தூர் என்று இந்நாளில் அழைக்கப்படுகிறது. அங்குப் பெரிய காளிதேவியின் ஆலயம் சிறப்புடன் விளங்குகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தட்சன்யாகத்தினை அழிக்கத் தோன்றிய காளி

● வீரபத்திரர் - பத்திரகாளி

ஒரு சமயம் பிரமன் தன் படைப்புத் தொழிலுக்கு உதவியாகப் பத்து துணைப் பிரம்மர்களைப் படைத்தான். அவர்களில் சிறந்தவனாகத் "தட்சன்" விளங்கினான்.

அவன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்துஅனேகவரங்களைப் பெற்றான். அவன் செய்த தவத்தின் பயனாகப் பார்வதிதேவியே அவனுக்கு மகளாகப் பிறந்து சிவபெருமானை மணந்து கொண்டாள். காலத்தின் கோலத்தால் சிவபெருமானுக்கும் அவனுக்கும் பகை மூண்டது.

அவன் ஒரு சமயம் பெரிய வேள்வியொன்றைச் செய்தான். அதற்கு, சிவபெருமானையும் பார்வதிதேவியையும் அழைக்காமல், திருமாலை முதன்மையாக வைத்துச் செய்தான். அவனுக்கு அஞ்சிய தேவர்கள் அவன் செய்த யாகத்தில் கலந்து கொண்டனர்.

பார்வதிதேவி, அவனிடம் சென்று தந்தையே! "உமது மருகளான பரமசிவனையும், மகளாகிய என்னையும் விடுத்து இந்த யாகத்தைச் செய்தல் முறையோ?" என்றாள். தட்சன் "அவளையும் சிவபெருமானையும் பலவாறு இகழ்ந்து பேசினான். அதனால் கோபமுற்ற பார்வதி "உனது இந்த யாகம் அழியட்டும்", என்று சாபம் கொடுத்துவிட்டுச் கயிலைக்குச் சென்று விட்டாள்.

இதையறிந்த சிவபெருமான் கடுங்கோபம் கொண்டார். தனது கோபத்திலிருந்து ஆயிரமுகங்களைக் கொண்ட வீரபத்திரனைத் தோற்றுவித்தார்.

அவனுக்குத் துணையாக உமாதேவியார் தம் கோபாவேசத்தால் பத்ரகாளியைத் தோற்றுவித்தாள். அவள் இரண்டாயிரம் கரங்களையும், ஆயிரம் முகங்களையும் உடையவளாய் எண்ணில்லாத ஆயுதங்களுடன் விளங்கினாள். அத்திரதேவரைத் தழுவி நிற்கும் அத்திர சக்தியைப் போன்று அவர்கள் இருவரும் தோன்றினர். அவர்கள் இருவரும் சிவபெருமானையும் உமாதேவியாரையும் பணிந்து வணங்கி நாங்கள் செய்ய வேண்டியது என்ன? என்று கேட்டனர். அவர்கள், "அன்பர்களே! நம்மை விலக்கிவிட்டு தட்சன் ஒரு பெரிய வேள்வியினைச் செய்கின்றான். அவனுக்கு நல்லஅறிவுரை புகட்டுங்கள். அன்றேல் அவனுடைய யாகத்தை அழித்து அவனையும் அவனைச் சார்ந்தோரையும் தண்டித்து வருக" என்றனர். அவர்கள் தமக்குரிய பெரியசேனைகளைத் தாமேபடைத்துக் கொண்டு தட்சன் யாகம் செய்யும் இடத்தினை அடைந்தனர். அங்கு அவனுக்கு நல்லறிவு புகட்டியும் அவன் கேளாததால் அந்த யாகத்தை அழித்து அவனுடைய தலையையும் வெட்டி வீழ்த்தினர். பிறகு கயிலைக்கு வந்து சிவபெருமானைப் பணிந்து பேறுபெற்றனர்.

இப்படி தட்சயாகத்தினை அழிப்பதற்காகப் பார்வதியால் உண்டாக்கிய காளிதேவி ஒருத்தியும் உண்டு. அவளையும் வீரபத்திரரையும் சேர்த்தே வழிபடுகின்றனர். தொண்டை மண்டலத்திலுள்ள அனேக சிவாலயங்களில் வீரபத்திரரையும் பத்ரகாளியையும் ஒரேபீடத்தில் அமைத்து வழிபடுவதைக் காணலாம். வீர சைவர்கள் வழிபடும் இத்தகைய பத்திரகாளி வடிவங்களின் முன்னுச்சியில் சிவலிங்கமொன்றும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ●

❑ சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும், தனிச் சிவாலயங்கள் அமைப்பது போலவே வீரபத்திரருக்கும், பத்ரகாளிக்கும் பெரிய ஆலயங்கள் பரிவார தெய்வங்களுடன் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

❑ மதுரையில் பெரிய தூண் சிற்பமாக வீரபத்திரரும் பத்ரகாளியும் அடுத்தடுத்த தூண்களில் அமைக்கப்பட்டுள்ளனர்.

❑ காளிதேவிக்கும் வீரபத்திரருக்கும் திருக்கல்யாண விழா நடத்தும் வழக்கம் ஒரிரு ஊர்களில் உள்ளது. ●

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபிரான் காளியோடாடியது

சிவபெருமான் காளிதேவியை உண்டாக்கித் தாரகன் முதலான அனேக அசுரர்களைக் கொன்ற ழித்தார். பின்னர் அக்காளிதேவிக்குப் பலவரங்களை அளித்தார். அந்தக் காளிதேவி தனது வெற்றியினா லும் சிவன் தந்த வரத்தினதாலும் தருக்குற்றாள். அந்த இறுமாப்பால் அவள் மற்றவர்களைத் துன்புறுத் தினாள். அவளுடைய ஆற்றலுக்கு அனைவரும் அஞ்சினர். அவள் அனைவரையும் வென்றாள். இறுதி யில் சிவபெருமானையும் வெல்ல நினைத்தாள். அவரை ஆயுதங்களினாலும் போரினாலும் வெல்ல முடியாது. என்பதை உணர்ந்து தன்னுடைய சிறப்பு மிக்க திறமையான நாட்டியப் புலமையால் அவரைப் போட்டியில் வெற்றிகொள்ள எண்ணினாள்.

ஆதலின் அவரை நடனப்போட்டிக்கு அழைத்தாள். பெருமானும் உடன்பட்டு அவளுடன் போட்டியாக நடனமாட ஒப்புக்கொண்டார். அவள் ஆடிய அத்தனை நடன வகைகளையும் அவளை விடச் சிறப்பாக ஆடிக்காட்டினார். இறுதியில் தனது காலை உயரத் தூக்கித் தனக்கே உரிய ஊர்த்துவ தாண்டவத்தை நிகழ்த்தினார். அவ்வாறு ஆடுவதற்கு வெட்கமுற்ற காளிதேவி தனது தோல்வியை ஒப்புக் கொண்டாள். அவளுடைய கர்வமும், கோபமும் இருந்த இடமும் தெரியாமல் மறைத்துவிட்டது. அன்று முதல் அவள் சிவாலயங்களையும் சிவத்தலங் களையும் காவல்புரியும் தொழிலை மேற்கொண்டாள்.

சிவபெருமான் காளியோடு ஆடி அவளை அடக்கிய கதை மிகப்பழைய இலக்கியங்களில் தொடங்கி இன்றைய இலக்கியம் வரைத் தொடர்ந்து தனிச்சிறப்புடன் கூறப்பட்டு வருகின்றது. சிலப்பதிகா ரத்தில், அறுவருக்கிளைய நங்கை; இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு; சூருடை கானக முகந்தகாளி; தாருகன் பேருரங்கிழித்த பெண் என்றும், திருமந்திரத்தில், காளியோடு ஆடி கனகா சலத்தாடி என்றும், தேவாரத்துள், காளி கத ஓவம் நின்று நடமாடி காளி காணிய ஆடல் கொண்டான். (பிரமபுரம்) காளி முன்காண கானிடை நடம் செய்த கருத்தர் (பாம்புரம்) காளியை குணஞ்செய் கூத்துடையோன் (வீழிமிழலை) ஆடினார் காளிகாண ஆலங்காட்டடிகளாரே (திரு ஆலங்காடு) வேர்த்தாடுங் காளிதன் விசை தீர்கென்று கூத்தாடி (குடந்தை) காளி வெங்கோபம் பங்கப் படுவான் செய்தற்கரிய திருநடம் செய்தன (குடந்தை). என்பது போன்று பலநூறு இடங்களிலும் இக்கதை குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

பல திருத்தலங்களின் வரலாற்றிலும் இக்கதை யைக் காண்கிறோம். இந்த நடனப்போட்டி குடந் தையில் நடந்ததென்று அவ்வட்டாரக் கதைகள் கூறுகின்றன. குடந்தை நாகநாத சுவாமி ஆலயத்தில் ஊர்த்துவ தாண்டவர் ஆடும் சபையும் அதற்கு எதிரில் நடனமாடும் காளியின் திருவுருவத்தையும் அமைத்துள்ளனர்.

இக்கதை தில்லையில் நடைபெற்றதென்று தில்லைத்தல புராணம் கூறுகின்றது. இங்குள்ள சிற்சபையின் எதிரிலுள்ள சித்திர சபையில் இந்தப் போட்டி நடைபெற்றதாகக் கூறுவர். அங்குபெருமான் ஊர்த்துவதாண்டவராக எழுந்தருளியிருக்கக் காணலாம். இங்கு, தோற்றதால் வெட்கமுற்ற காளிதேவி தில்லையின் எல்லைக்குச் சென்று தில்லைக் காளியென வீற்றிருக்கின்றாள் என்பர்.

மேலும் திருநெல்வேலி புராணத்திலும் இக் கதையைக் காண்கிறோம். இப்படி இக்கதை பல்வேறு தலங்களில் நடைபெற்றதாகக் கூறப்பட்டாலும் திருவா லங்காட்டில் நடைபெற்றதாகக் கூறப்படுவதே பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. திருவாலங் காட்டுப் புராணத்தில் இந்நிகழ்ச்சி விரிவாகவே பாடப்பட்டுள்ளது. அதனைத் தனியே காணலாம்.

திருவாலங்காட்டில் காளிதேவி நடன கோலத் திலேயே காட்சியளிப்பதும் இங்குக் குறிப்பிடத்தக்க தாகும். இத்தலத்தின் அருகிலுள்ள தக்கோலம், திருப்பாசூர் முதலிய தலங்களிலும் காளிதேவி நடன கோலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளாள்.

☐ ஊர்த்துவ தாண்டவர் திருவுருவத்துடன் நடனமாடும் காளியின் திருவுருவத்தையும் சேர்த்தே அமைக்கின்றனர். பேரூர், மதுரை, திருநெல்வேலி முதலிய தலங்களில் பெரிய தூண் சிற்பங்களாக ஊர்த்துவ தாண்டவமாடும் சிவபெருமானையும் காளிதேவியையும் அடுத்தடுத்து அமைத்திருக்கக் காணலாம்.

☐ சிவபெருமானை, கஜசம்ஹார கோலத்துடன் அமைக்கும்போது அவருடன் காளிதேவி நடனமாடுவதையும் சேர்த்து அமைத்துள்ளதைத் திருத்துறைப்பூண்டி முதலான திருத்தலங்களில் கண்டு மகிழலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடல் உவந்த காளி

திருவாலங்காட்டில் சிவபெருமான் நடனமாடி காளிதேவியை அடக்கிய நிகழ்ச்சித் திருவாலங் காட்டுப் புராணத்திலுள்ள காளிச்சருக்கம், நாரதர் சருக்கம், நிருத்தயுத்தச் சருக்கம் திருநடனச்சருக்கம் ஆகிய நான்கு பகுதிகளில் சொல்லப்பட்டுள்ளது. அதன் சுருக்கத்தை இப்பகுதியில் காணலாம். இப் புராணம் வடமொழியிலுள்ள ஸ்காந்த புராணத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

முன்னொரு காலத்தில் சும்பன், நிசும்பன் என்ற இரண்டு அசுரர்கள் சிவபெருமானைக் குறித்து அகோர தவங்களைச் செய்து அரிய வரங்களைப் பெற்று, மூவுலகங்களுக்கும் தலைவனானார்கள். அவர்கள் தேவர்களை வருத்தியதுடன் அவர்களு டைய தேவேந்திர பட்டினத்தையும் பறித்துக் கொண்டு அவர்களை அநாதையாக்கித், துரத்தி விட்டனர். அவர்கள் யாவரும் பராசக்தியான பார்வதி தேவியைச் சரணடைந்து தம்மைக் காக்குமாறு வேண் டினர். பார்வதிதேவி அவர்களுக்கு அபயமளித்து "அஞ்சாதீர்கள்" என்று கூறினாள்.

பின்னர் தான் ஓர் இளமங்கையாக வடிவம் கொண்டு சும்ப, நிசும்பர்களின் பட்டினத்திற்கு அருகி லிருந்த மலையின்மீது அமர்ந்துத் தவம் செய்து கொண்டிருந்தாள். இதைக்கண்ட சும்ப, நிசும்பர்களின் ஒற்றர்கள் தம் தலைவனிடம், சென்று "அரசே அபூர் வமான அழகு வாய்ந்த பெண் தனிமையில் வீற்றிருக் கின்றாள்" என்று கூறினர்.

அவர்களுடைய வார்த்தைகளால் வசீகரிக்கப் பெற்ற அசுர சகோதரர்கள் தனது சேனாதிபதிகளான சண்டன், முண்டன் என்பர்களை அனுப்பி உடனே அப்பெண்ணை நம் இடத்திற்குக் கொண்டு வாருங் கள், வரமறுத்தால் அவளைப்பற்றி இழுத்து வாருங் கள்," என்று கூறி அனுப்பினார்கள்.

அந்த அசுரசேனாதிபதிகள் பார்வதியிடம் சென்று, பெண்ணே, எமது அரசர்கள் உனது பேர ழகைக் கேள்வியுற்று உன்னைக் காண விரும்புகின் றார்கள். உன் அழகால் கவரப்பட்டு உன்னைத் தனது பட்டத்தரசியாக்கிக் கொள்ள ஆவலுடன் காத்திருக்கின்றார்கள். மூவுலகமும் தொழுதுடனியும் அவர்களுடைய சபைக்கு நீ இப்போதே வருவாய்! என்று நயந்து கூறினர். அதைக்கேட்ட தேவிகடுங் கோபமுற்று "நீங்கள் இப்போதே இவ்விடத்தை விட்டு அகன்று ஓடுங்கள்" என்றாள்.

அதைக் கேட்ட சேனாதிபதிகள், "பெண்ணே எங்கள் அரசர்கள் விரும்பிய பெண்ணை விட்டு விடுவோமா? இப்பொழுதே உன்னைப் பற்றிக் கட்டி இழுத்துச் செல்வோம் என்றுகூறி அவளை நெருங்கினர். தேவி தனது வலத்தோளை நோக்கி னாள், அதிலிருந்து அழகிய வடிவம் கொண்ட ஒரு பெண் கத்தி கேடயத்துடன் தோன்றினாள். அவள் பார்வதியின் கருத்தை அறிந்து ஒரு நொடியில் பாய்ந்து சண்டன், முண்டன் என்ற அந்த அசுரப் படைத்தலைவர்களின் சிரங்களை வெட்டி எடுத்து வந்து பார்வதியின் காலடியில் இட்டாள்.

பார்வதி அவளை நோக்கி, "சண்ட முண்டர் களைக் கொன்றதால் நீ இன்றுமுதல் "சாமுண்டி" எனப் பெயர் பெறுவாய். நீ விரும்பிய இடம் சென்று கோயில் கொள்வாய் என்று கூறி அவளுக்கு விடைகொடுத்தாள். இந்தச் செய்திகளைத் தப்பித்துச் சென்ற சில அசுரர்கள் சும்ப நிசும்பர்களிடம் கூறினர்.

சும்ப நிசும்பர்கள் இதனைக் கேள்வியுற்று இதென்னஅவமானம், ஒரு பெண்பிள்ளையா? நமது வலிய சேனாதிபதிகளான சண்டமுண்டர்களைக் கொல்வது என்று கோபம் கொண்டனர். தூமக் கண்ணன் முதலிய மாவீரர்களை அவளிடம் போருக்கு அனுப்பினார். அவர்கள் யாவரையும் தேவி, சப்தமாதர்கள், பிடாரி, முதலியவர்களை அனுப்பிப் போரில் கொன்றழித்தாள். இந்தச் சக்திக் கணத்தால் பல்லாயிரம் அசுரர்கள் ஒரு நொடியில் அழிந்தொழிந்தனர்.

இதனைச் செவிமடுத்த சும்பன் நால்வகைப் படையோடு எதிர்த்து வந்தான். அவனுடைய சேனை வெள்ளத்தை சக்திகணமும், சாமுண்டியும் கொன்ற ழித்தனர். இறுதியில் தேவி நிசும்பனின் தலையை வெட்டி வீழ்த்தினாள். போரில் அஞ்சி ஓடி ஒளிந்த வர்கள், ஓடிச்சென்று சும்பனிடம் நடந்த அனைத் தையும் தெரிவித்தனர். சும்பன் கடுங்கோபம் கொண்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

● அண்டமுற நிமிர்நாடும் அழகன் - (திருவாலங்காடு) - ஆடலில் மகிழ் காளி

டான். தேவர்களே எனது ஆணைக்கஞ்சி மறைந்து வாழ்கின்றனர். அட்ட திக்குப் பாலகர்கள் நடுநடுங்கி நாம் இட்ட ஏவலைச் செய்து கொண்டு உயிர் பிழைத்துள்ளனர். இப்படியிருக்க வளையலணிந்த ஒரு பெண்ணும் அவள் கூட்டமும் அசுரர்களை அழிப்பது நன்றாக இருக்கின்றது. இந்தக் கேவலத்திற்கு இப்பொழுதே முடிவு கட்டவேண்டும் என்று கர்ச்சித்து நால்வகைப் படையையும் திரட்டிக் கொண்டு போரிடவந்தான்.

அம்பிகையும் அவளுடைய கணங்களும் அசுரர்களை எதிர்த்துக் கடும்போர் புரிந்தனர். தேவி சும்பனை அனேக பாணங்களால் அடித்தாள். அவளுடைய அம்புகளுக்கு ஆற்றாத சும்பன் இறுதியில் மாயப்போர் புரியக்கருதி பெரிய யானையாக உருவெடுத்தான். இனியும் இவனை விட்டு வைத்தல் ஆகாது என்று கருதியதேவி தனது ஞானவாளை ஓங்கி அவன் தலையை வெட்டி வீழ்த்தினாள்.

தேவர்கள் மிக்கப் பெருமகிழ்வுகொண்டு தேவ துந்துபிகளை முழக்கி மலர்மாரி பொழிந்தனர். சக்தி கணங்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர்.

இவ்வொலி எங்கும் பரந்தது. சும்ப நிசும்பர்களின் தங்கையான குரோதி என்பளும் இதைக் கேட்டாள் அவள் தனது மைந்தனான இரத்த பீஜனிடம், "உன் மாமன்மார்கள் தேவியால் கொல்லப்பட்டார்கள். அதற்குப் பழிக்குப்பழியாக நீ படை நடத்தி வெற்றிபெறுக" என்று கூறி அவனை அனுப் பினாள். இரத்தபீஜன் எல்லையற்ற வலிமையுடையவன், இந்த உலகத்தைத் தன் சுண்டுவிரலால் தாங்கும் வலிமை பெற்றவன். பிரம்மனை நோக்கிக் கடுந்தவம் செய்து தன் உடலிலிருந்து விழும் ஒவ்வொரு சொட்டும் ஒவ்வொரு ரத்தபீஜனாக உருவெடுக்க வேண்டும் என்ற வரத்தைப் பெற்றவன். அவன் தேவர்களை வென்று அவர்களுடைய கற்பகமரத்தைக் கவர்ந்து வந்தவன். தன் மாமன்மார் மூவுலகையும் ஆள்வது கண்டு மகிழ்ச்சியடைந்து தாயுடன் தனியே இன்பமாகத் தனது காலத்தைக் கழித்து வந்தவன். அப்படிப் பட்ட இரத்தபீஜன் தன் தாயின் ஆணையைத் தலைமேற்கொண்டு தேவியியுடன் போரிட வந்தான்.

அவனைச் சக்தி கணங்கள் சூழ்ந்து கொண்டு தாக்கினர். அவன் உடலிலிருந்து விழுந்த ஒவ்வொரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துளி ரத்தத்திலிருந்தும் ஒவ்வொரு அசுரர்கள் தோன்றினர். இதனால் கணக்கில்லாத இரத்தபீஜர்கள் அங்கு காட்சியளித்தனர். அதனைக் கண்டு சக்தி கணங்கள் ஆச்சர்யமடைந்து தேவியைச் சரண டைந்து நடந்ததைக் கூறினர். என்ன? இது வெட்ட வெட்ட அழியவேண்டிய படையானது கூட்டம் கூட்டமாகப் புதிது புதிதாகத் தோன்றுகிறது. இது என்ன மாயம் என்றனர்.

தேவி கடுங்கோபம் கொண்டாள். அவள் கண்கள் கனன்று தீயை உமிழ்ந்தன. அவள் உடலில் வெப்பம் தோன்றியது. அந்த வெப்பமும் தீயும் ஒன்றாகிக் "காளி" என்ற வடிவம் கொண்ட தேவி யாயின. பார்வதி அந்தக் கடுத்தவடிவம் கொண்ட காளியை நோக்கிப், "பெண்ணே, இவர்களுடைய இரத்தத்தை உன் கபாலத்தில் ஏந்திக் குடிப்பாய்," என்றாள். காளிதேவி தனது சூலத்தால் அந்த இரத்த பீஜஅசுரர்களைத் குத்தி அந்தரத்தில் தூக்கி, அந்த உடலிலிருந்து வடியும் ரத்தத்தைக் கபாலத்தில் பிடித்துக் குடித்ததுடன், அவர்களுடைய மாமிச உடல்களையும் உண்டு தீர்த்து விட்டாள். இதனால் ரத்தபீஜனும் அவன் இரத்தத்தில் உண்டான அநேக அசுரக் கூட்டமும் ஒரு நொடியில் அழிந்தன. தேவி மகிழ்ந்து, "காளி உன்னுடைய அதிவீரதீர பராக்கிர மங்களால் மகிழ்ந்தேன். இனி நீ பூத,வேதா ளங்களின் தலைவியாக இருப்பாய். நீ சிவபெருமான் திரு வாலங்காட்டில் ஆடும் நடனத்தைக் கண்டு மகிழ்ந்து அவர் பக்கலில் வீற்றிருப்பாய் என்று வரங்கொடுத்து அனுப்பினாள்.

காளிதேவி," அன்னையிடம் விடைபெற்றுக் கொண்டு, வனங்களில் பூத, பிசாசு, பேய் கணங் களுடன் திரிந்து பறவைகளையும் விலங்குகளையும் தின்று, களித்து மகிழ்வுடன் இருந்தாள். இப்படி பல வனங்களில் சுற்றித் திரிந்தபின் முன்னைய அருள் கூடத் திருவாலங்காட்டினை அடைந்தாள்.

அப்போது கார்க்கோடக முனிவர் அங்கு சிவபெருமானின் நடனத்தைக் காணவேண்டி தவம் செய்து கொண்டிருந்தார். அவரிடம் நாரதமுனி, "முனிவரே பலவனங்களில் பலவற்றையும் உண்டு களித்து இறுமாந்து திரியும் காளி இவ்வனத்திற்குத் தனது கூட்டத்துடன் வந்துள்ளாள் அவளால் நமக்குத் துன்பம் நேருமோ என்று அஞ்சுகின்றேன்" என்றார்.

அதற்கு நாரதர் இது இறைவன் உறையும் பதி அவளால் இதற்குள் வரமுடியாது. நாம் முஞ்சிகேச முனிவரைப் பார்த்து வரலாம். என்று கூறி அவரை அழைத்துக் கொண்டு சென்றார்.

அப்படி வருகையில் நாரதரைக் காளிதேவி பார்த்துவிட்டாள். அவரைப் பிடித்து விழுங்க முயன் றாள். நாரதர் தப்பி வான்வழியே வைகுந்தம் சென்று, "திருமாலே என்னைக் காத்தருள்க. இரத்தபீஜன் முதலான அசுரர்களைக் கொன்றதால் அகம்பாவத் துடன் காளி வனங்களை அழித்து மகிழ்கின்றாள். அவளை நீங்கள் தான் அடக்கி அருள வேண்டும் என்றார், திருமால்", அன்பனே சிவபெருமானைத் தவிரவேறு யாராலும் அவளை அடக்க முடியாது. நாம் அவரைச் சரணடைந்து முறையிடுவோம் வாருங்கள் என்று கூறி அனைவரையும் கயிலை மலைக்கு அழைத்துச் சென்றார்.

அவர்களுடைய முறையீட்டைச் செவிம டுத்த சிவபெருமான் காளியை அடக்கத் திருவுளம் கொண்டார். காலாக்கினி உருத்திர உருவம் கொண் டார். எட்டுக்கரங்களில் கபாலம், சூலம், அங்குசம், பாசம், வாள், கேடயம், வேல், மணி ஆகியவற்றைத் தாங்கி தமது பூத பைசாச கணங் களுடன் காளியுடன் போர் தொடுத்தார்.

சிவகணங்களின் தாக்குதலால் காளியும் அவளுடைய கணங்களும் நிலைதடுமாறின, இறுதியில் சிவபெருமான் சூலத்தைச் சுழற்றிக் கொண்டு அவள்முன்னே தோன்றினார். உடனே காளிக்கு முன்னைய நினைவுகள் தோன்றின. இதுவரை நாம் எளியவர்களைப் போரிட்டு எளிதில் வென்றோம். இவரை வெல்வது எளிதல்ல, என்பதை உணர்ந்தாள்.

அப்போது பெருமான், "ஏ, காளி, நீ மெத்த வல்லவளைப்போல் பேசுகின்றாய். என்னைப் போரில் வென்று உனது வெற்றியை நிலைநாட்டு. மற்போர், விற்போர், வாட்போர், சூலப்போர் இதில் உனக்கு எது தெரியுமோ? அதைச் சொல் அதன் படியே போரிடலாம் என்றார்.

அதற்குக் காளி நாம் பண்டைய முறையான நடன யுத்தம் செய்வோம் அதற்கான இடத்தை நீரே முடிவுசெய்யும் என்றாள். சிவபெருமான் திருவாலங் காட்டில் கார்க்கோடகன், முஞ்சிகேசன் என்பவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தவம் செய்யும் இடத்தில் நமது போட்டியை வைத்துக் கொள்ளலாம். அதற்கு அஷ்டதிக்குப் பாலகர்களும் தேவர்களும் அவர்கள் விரும்பிய இசைக் கருவிகளை இசைக்கட்டும் என்றார்.

இதன்படி அனைவரும் கூடிநிற்கக் காளியும் சிவபெருமானும் நடனப் போட்டிக்குத் தயாராயினர். முதலில் கொடுகொட்டி என்னும் நடனம் நடந்தது. இதில் காளிதேவி வெற்றி பெற்றதாகச் சபையினர் கூறினர். பிறகு பெருமான் சண்ட தாண்டவத்தை ஆடினான். எட்டுக் கரங்களையும் வீசி இடதுகாலை வானளாவ நீட்டி உக்ரமயமான தாண்டவத்தை ஆடினார். இதனால் ஏழுலகமும், சந்திர சூரிய நட்சத்திர மண்டலங்களும், அதிர்ந்தன. தேவர்களும், முனிவர்களும் மூர்ச்சித்து வீழ்ந்தனர். இந்த வேகத்தைத் தாங்கமாட்டாத காளிதேவியும் ஆவி சோர்ந்து பூமியில் வீழ்ந்தாள்.

அப்படி ஆடும்போது சிவபெருமானின் குண்டலம் காதிலிருந்து நழுவிக் கீழே வீழ்ந்தது. அதனை மற்றவர் காணுமுன்னே பெருமான் தனது காலால் எடுத்துத் தனது திருச்செவியில் அணிந்து கொண்டார். பிறகு அம்பிகையின் வேண்டுகோளின் படி தாண்டவத்தை நிறுத்தினார். மீண்டும் நினைவு பெற்று எழுந்த காளி தன்னுடைய தோல்வியால் வெட்கமடைந்தாள். அவளுடைய கர்வம் இருந்த இடம் தெரியாமல் போய்விட நாணித் தலை கவிழ்ந்தாள்.

சிவபெருமான் அவளுக்கு அருள்பாலித்து "நமது சபையின் பக்கலில் வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள்புரிந்து வருக," என்றார். அன்றுமுதல் ஆலங்காட்டுக் காளி அன்பர்களுக்கு அருள் பாலித்து வருகின்றாள். அவளைத் தரிசித்து அருள் பெற்ற பிறகே திருவாலங்காட்டில் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியைத் தரிசிப்பது வழக்கமாகும்.

- திருவாலங்காட்டில் நடனமாடும் காளியின் திருவடிவம் மூலவராகவும், உற்சவராகவும் எழுந்தருளிவைக்கப்பட்டுள்ளது. இத்திருமேனிகள் கலைச் சிறப்பு மிக்கனவாகும். இதில் காளிதேவி இரண்டு கால்களையும் வளைத்து குதித்தாடும் கோலத்தில் உள்ளாள், எட்டு கரங்கள் உள்ளன. வலது கரங்களில் சூலம், வேதாளம், கத்தி, டமருகம் ஆகியவற்றையும் இடது கரங்களில் கபாலம், கேடயம், மணி, பாம்பு ஆகியவற்றையும் ஏந்தியுள்ளாள். இதனைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ள காளிதேவியின் தியான சுலோகம் ஒன்று உள்ளது.

- தக்கோலத்திலும் நடனகாளியின் வடிவம் தனிஆலயத்தில் அமைக் கப்பட்டுள்ளது. இவள் இலக்கிய வழக்கில் தக்கைக் காளி என அழைக்கப் படுகின்றாள். மக்கள் கொச்சையாகத் தக்காளி அம்மன் என்று அழைக்கின்றனர். இக்கோயில் வடக்கு நோக்கியதாக அமைந்துள்ளது. ஆடி தை மாதங்களில் சிறப்பு வழிபாடுகள் நன்கு நடைபெறு கின்றன.

☐ கும்பகோணம் நாகேசுவரசுவாமி ஆலயத்திலுள்ள காளியும் சிவனும் போட்டி நடனம் ஆடினர் என்றும், அதில் காளிதேவி தோற்றாள் என்றும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இங்கு ஊர்த்துவ தாண்டவர் நடனமாடும் பெரிய சபாமண்டபம் உள்ளது. இதற்கு நேர் எதிரில் பெரிய சுதைச் சிற்பமாக நடன காளிதேவியின் வடிவம் உள்ளது. இதனை ஏராளமான மக்கள் சிறப்புடன் வழிபடுகின்றனர்.

☐ காளிதேவி நடனத்தில் அதிக விருப்பமுடையவள். அதனால் அவளுக்குச் சோழ மண்டலத்தில் நடன உற்சவம் நடத்தப்படுகின்றது. இதில் காளிவேடம் தரித்தவர் நடனமாடியபடியே ஊரை வலம் வருகின்றார். அவருக்குச் சிறப்புவழிபாடுகள் செய்யப்படுகின்றன.

☐ காளிதேவி இறைவனிடம் தோற்றபின், அவரை வாதுக்கு அழைத்ததற்காக மிகவும் வருந்தினாள். சிவலிங்க பூசை செய்து சிவபெருமானைச் சரணடைந்தாள். அப்படி அவள் சரணடைந்த ஊர் "காளி சரணாங்கூர்" என்று அழைக்கப்படுகின்றது. இது மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளதாகும். இத்தலத்தில் காளி வழிபட்ட சிவபெருமான் காளீசுவரர் என்ற பெயரில் எழுந்தருளியுள்ளார்.

உச்சி மாகாளி

சிவபெருமான் உலக உற்பத்திக்காவும், வேத ஆகம உற்பத்திகாகவும் ஐந்து முகங்கள் கொண்ட சதாசிவ மூர்த்தியாகத் திருவுருவம் தாங்குகின்றார். அப்போது அவருக்கு நான்கு திசைகளை நோக்கி நான்கு முகங்களும் உச்சியை நோக்கியதாக ஒரு முகமும் அமைகின்றது. அந்த உச்சிமுகத்திற்கு ஈசானம் என்பது பெயர் அதன் அம்சமான சிவமூர்த்திக்கு ஈசானதேவர் என்பது பெயராகும். இவருடைய தேவிகாளி என்று அழைக்கப்படுகின்றாள். இவள் உச்சி முகத்திலிருந்து தோன்றியதாலும் உச்சியாகிய வானமண்டலத்தைக் காப்பவளாக இருப்பதாலும் இவளுக்கு உச்சிமாகாளி என்பது பெயராயிற்று. தஞ்சை நாகை மாவட்டங்களிலுள்ள அனேக ஊர்களில் உச்சி மாகாளி ஊர் பிடாரியாகக் கோயில் கொண்டிருப்பதைக் காணலாம். பலர் இதனை உஜ்ஜைனி மாகாளியோடுத் தொடர்புபடுத்தியும் கூறுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சராவணர் வதமும் சிவனோடு ஆடியதும்

திருவாலங்காட்டுப் புராணம், நிசும்பன், சும்பன், இரத்தபீஜன் முதலான அசுரர்களைக் கொன்ற அகங்காரத்தால் காளிதேவி பலவனங்களில் திரிந்து விலங்குகளையும் பறவைகளையும் தின்று உயிர்களைத் துன்புறுத்தினாள் என்றும் அவளைச் சிவபெருமான் ஆடற்போட்டியால் வென்றார் என்றும் குறிக்கின்றது. சிவபராக்கிரமம் என்ற நூல் பெருமான் காளியோடு ஆடியதற்கு வேறு காரணத்தைக் கூறுகின்றது. அதனைத் தொடர்ந்து காணலாம்.

ஒருசமயம் இந்திரன் இந்திராணியோடு இந்திரலோகத்தின் ராஜசபையில் சுகமாக வீற்றிருந்தான். கின்னரர்கள்பாடவும்அரம்பையர்கள் ஆடவும் அட்டதிக்பாலகர்கள் சூழ்ந்து நிற்கவும் அந்த இடமே இன்பமகிழ்ச்சி வெள்ளத்தில் நிறைந்திருந்தது.

அந்த இன்பமான வேளையில் இந்திரனைக் காண அகத்தியன், ஆங்கீரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டேயன், வசிட்டன் என்னும் ஏழு முனிவர்கள் வந்தார்கள். அதனை அறிந்த இந்திரன் தன் இருக்கையை விட்டு எழுந்து வந்து அவர்களை வரவேற்று உரிய இருக்கைகளில் அமர்த்தினான். அவர்களை வணங்கி அருந்தவமுடைய பெரியோர்களே! உங்கள் வருகையினால் எல்லா இன்பங்களையும் அடைந்தேன் என்றாலும் அசுரர்களின் தொல்லை நீங்கும் பொருட்டும் எங்களுக்கு இன்னும் மகிழ்ச்சி உண்டாகவும் நீங்கள் இந்த தேவேந்திர பட்டினத்தில் ஏழு இடங்களில் அமர்ந்து அகோரேசுவரரை உபாசித்து அசுரர்களை வெல்லத்தக்க மந்திரங்களைக் கூறிப் பூசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

அவர்கள் அவனை நோக்கி, "இந்திரனே நீ சொல்லியது எங்களுக்கும் நன்மை பயப்பதே என்றாலும் நாங்கள் மேற்கொன்டுள்ள ஆசாரத்திற்கும், கர்ம அனுட்டானங்களுக்கும் அது ஒத்துப் வராது. ஆதலால் எம்மை வற்புறுத்தாதே, என்றனர். இந்திரன் மீண்டும் மீண்டும் பணிந்து தான் சொன்னதையே சொல்லிக் திரும்பத்திரும்பச் கேட்டான். முனிவர்களுக்கு அதில் உடன்பாடு இல்லையென்றாலும் அவனுடைய வேண்டுகோளைத் தட்டமுடியாமலும், அவன்மீது கொண்ட இரக்கத்தாலும் அதற்கு உடன்பட்டனர்.

அவன் தனித்தனியே ஏழு இடங்களைத் தூய்மையாக்கி அதில் யாகசாலைகளை அமைத்துத் தந்தான். அவர்களும் பூசைகளைத் தொடங்கினர் அவர்கள் மனம் அதில் ஈடுபடவில்லை. அதனால் மந்திரங்களிலும், செயல்முறைகளிலும், குறையுண்டாயிற்று. அக்குறையால் அந்த யாககுண்டத்திலிருந்து ஐந்து ராவணர்களும், ரத்தாசூரன், ரக்த பீஜன் என்று இரண்டு அசுரர்களும் தோன்றினர்.

அதைக்கண்ட முனிவர்கள் அஞ்சிஓடி ஒளிந்து கொண்டனர்.அந்த அசுரர்கள் தாங்கள் தோன்றிய யாகசாலைகளை அழித்தனர். பின் இந்திரனுடைய சபையை அடைந்தனர். அவர்களைக் கண்ட தேவர்கள் யாவரும் அஞ்சி ஒடுங்கி ஓட்டம் பிடித்தனர்.

அது கண்ட அந்த ஏழு அசுரர்களும் ஆர்ப்பரித்துக் கொண்டு பிரம்ம லோகம், விஷ்ணுலோகம், ஆகியவற்றின் மீது படைநடத்தி அவற்றையும் அழித்தனர். அவர்களுடைய வெற்றிக்களிப்பின் எதிரொலி எட்டுத் திக்கிலும் ஒலித்தது.

தேவர்களும், முனிவர்களும் பிரமனும், திருமாலும் ஒன்று கூடினர். அளவிடமுடியாத ஆற்றல் கொண்ட அந்த அசுரர்களை அழிக்கத் தக்கவர் சிவபெருமானே என்று தெளிந்து அவரைச் சரணடைந்து அழுது தொழுதனர்.

சிவபெருமான் தனது அருகில் நின்ற துர்க்கையை நோக்கி அவர்களைக் கொன்று வருக என்று ஆணையிட்டார். அவள் வலிய புலியின் மீது ஏறிக்கொண்டு இரத்தபீஜனை எதிர்த்தாள். அவளுக்கும் அவனுக்கும் கடும்யுத்தம் மூண்டது. துர்க்கைவிட்டஅம்புகள் இரத்தபீஜனது உடலைக் குத்தி ரத்தத்தைச் சிதறின. அப்படிச் சிந்திய ஒவ்வொரு துளியிலிருந்தும் ஒரு ரத்தபீஜன் தோன்றினான். அப்படித் தோன்றியவர்கள் மீது அவர் தன் அம்புகளைச் செலுத்தினாள். அந்த உருவங்களிலிருந்து சிதறிய ரத்தத்துளிகளிலிருந்தும் எண்ணற்ற இரத்தபீஜர்கள் தோன்றினார்கள். ஒரு கணத்தில் புற்றீசல்கள் போல எங்கு நோக்கினாலும் ரத்தபீஜர்களாகவே இருந்தார்கள். அதைக் கண்டு திகைத்த துர்க்கை காளிதேவியை அழைத்தாள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



● அம்பிகை காண இடிறவன் காளியோடு ஆடி அவளை அடக்குதல்

"தேவி நீ இவர்களுடைய ரத்தத்தைக் கீழே விழாமல் உன்கபாலத்தில் ஏந்திக் குடித்துவிடு என்றாள். காளி தனது வாயைத் திறந்து நாவைச் சுழற்றி ஒரு நொடியில் ரத்தபீஜனின் ரத்தத்தை உறிஞ்சிக் குடித்துவிட்டாள். துர்க்கை, காளியின் உதவியுடன் பஞ்சராவணர்களுடன் இரத்த பீஜ னையும் இரத்தா சூரனையும் கொன்றாள் தேவர்கள் பூமாரி பொழிந்து அவளை வாழ்த்தினர்.

அளவற்ற அசுரர்களின் இரத்தத்தைக் குடித்ததால் காளிதேவிக்கு மதவெறியும் இறுமாப்பும் உண்டாயின. அவள் அட்டகாசம் செய்து அனைவ ரையும் துன்புறுத்தினாள். தேவர்கள் கயிலைமலை யை அடைந்து சிவனைப் பணிந்து காளியிடமிருந்து தம்மைக் காக்க வேண்டுமென்று கூறி அழுதனர்.

சிவபெருமான் காளி கடுஞ்சினத்தவளாக இருக்கின்றாள் அவளை நாமே சந்திப்போம் என்று கூறி அவள் முன்னே சென்று, பெண்ணே "உன்னால் உலகம் அழிகிறதே உனது கோபத்தை விடு" என்றார். அவள் என்னோடு போரிட்டு வெல்லத்தக்கவர் எவருமில்லை. என்னுடன் நடமாடி என்னை வென்றால் உமக்கு அடங்குவேன் என்றாள். சிவபெருமான் அதற்கிசைந்தார். பார்வதிதேவியை நடுவராக வைத்துக் கொண்டு நந்தி மத்தளம் கொட்ட, சரஸ்வதி வீணைமீட்டிப்பாட, கூளிகள் சுதி சேர்க்க, பிரமன் தாளம்போட, தேவர்கள் யாவரும் தமக்கி சைந்த கருவிகளை இயக்கக் காளியும், சிவபெரு மானும் நடனமாடினர். இறைவன் காளி ஆடிக் காட்டிய அத்தனை நடன வகைகளையும் ஆடிக் காட்டினான். இறுதியில் தனது இடதுகாலை உயர்த்திச் சண்ட தாண்டவத்தை ஆடினார். காலைத் தூக்கி ஆடுதல் பெண்களுக்கு உரித்தல்ல என்பதால் காளி நாணி தலை கவிழ்ந்தாள்.

அவளுடைய கர்வமும் அகங்காரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தவற்றுக்கு வருந்தி அவள் சிவபெருமானைப் பூசித்து மகிழ்ந் தாள்.

இந்த வரலாற்றைக் கந்தபுராணம், பேரூர்ப் புராணம் முதலியவற்றில் கண்டு மகிழலாம். ●

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் காளியை அழுது அடக்கியது

சிவபெருமான் காளிதேவியுடன் ஆடி அவளை நடனப்போட்டியில் தோல்வியுறச் செய்து அடக்கியதைப் போலவே வைரவனாகி நின்று அழுதும் அடக்கினார் என்று சிவபராக்கிரமம் என்ற நூல் கூறுகின்றது.

அங்காளபரமேசுவரி - சூளை

தாரகாசுரனைக் கொன்று அவன் மார்பைக் கீண்டு, அதில் பொங்கிய ரத்தத்தில் குடித்ததாலும், அவனுடைய மாயத்தால் எழுந்த அசுரர்களைத் தின்றதாலும் காளிதேவிக்குக் கடுங்கோபமும், அகந்தையும் இறுமாப்பும் உண்டாயின. அவள் தன் எதிரில் தோன்றிய எல்லோரையும் அலற அடித்தும் துன்புறுத்தியும் கொன்றும் வெறி அடங்காதவளாகத் திரிந்தாள்.

அசுரர்களின் தொல்லையை அடக்கத் தோன்றிய இவளால் மேலும் தொல்லை அதிகமாகி விட்டதே என்று தேவர்கள் கலங்கினர். காளியின் கோபப்பார்வையில் எழுந்த நெருப்பு எதிரில் பட்ட எல்லாவற்றையும் சுட்டெரித்தது. இதனால் எல்லோரும் ஓடிச் சிவபெருமானைச் சரணடைந்து மீண்டும் தம்மைக் காக்குமாறு வேண்டினர்.

இறைவன் இவளை ஆடியும், அச்சப்படுத்தியும் அடக்க இயலாது என்று கூறி கொதிக்கும் நெருப்பாகிச் ஜொலிக்கும் அவள் முன்னே சிறு குழந்தையாகி அழுதுகொண்டிருந்தார்.

காளிதேவி தன்நெருப்பால் சுட்டுப் பொசுங்காமல் அந்த நெருப்பின்மீதே அழுதுகொண்டு கிடக்கும் அக்குழந்தையை வியப்புடன் நோக்கினாள். அதை எடுத்துத் தாலாட்டி அதன் அழுகையைப் போகக முயன்றாள். என்ன செய்தும் அக் குழந்தைத் தன் அழுகையை நிறுத்தாதநால் பசியால் பாலுக்கு அழுகின்றது போலும் எண்ணி கருதி அதனைத் தன் மார்பில் அணைத்துப் பாலுட்டினாள். அவளுக்கு மார்பில் பால் சுரந்தது. பெருமான் பாலுடன் அவள் உடலில் தங்கியிருந்த அகங்காரத்தையும், கோபத்தையும் சேர்த்தே அருந்தி விட்டார். இதனால் அவளுடைய கோபமும் அகங்காரமும் ஒழிந்து மிகவும் எளியவளாகிவிட்டாள். அவளுடைய இயல்பு மாற்றத்தைக்கண்டு தேவர்கள் பூமாரிப் பொழிந்து அவளை வழிபட்டனர்..

பெருமான் பால் பருகுவதை விட்டு விட்டு எட்டுப் பாலகர்களாகமாறி அவளைச் சூழ்ந்து விளையாடினார். அதனால் அவளும் மகிழ்சி அடைந்தாள். பின்னர் சிவபெருமானின் அந்த எட்டு குழந்தை வடிவங்களும் அஷ்ட பைரவர் என்று பெயர் பெற்றன.

இந்தக் கதை லிங்கபுராணத்துள் இடம் பெற்றுள்ளதாகும். இதனை விரிவுபடுத்திக் "காளி கோப கிரகண பராக்கிரமம்" என்ற சிவலீலையாக சிவபராக்கிரமம் என்ற நூல் குறிக்கிறது.

❑ சிவாலயங்களில் காளிதேவியைக் குழந்தையுடன் அமைக்கும் வழக்கமில்லை என்றாலும் சென்னை சூளையில் உள்ள அங்காள பரமேசுவரி ஆலயத்தில் அங்காள பரமேசுவரியின் மடியில் வைரவ மூர்த்தியாகிய குழந்தையை அமைத்திருப்பதைக் காணலாம்.

❑ முற்காலத்தில் பெரும் போர்க்களமாகத் திகழ்ந்த திருப்புறம்பியத்தில் உள்ள சிவாலயத்தில் சிவபாலகனை மடியில் ஏந்தியவாறு காளிதேவியின் திருவுருவம் அமைக்கப்பட்டிருந்ததென்றும் அதுவே இந்நாளில் பெயரும் வடிவமும் மாறிக் குகாம்பிகை என்று வழங்குகிறது என்றும் கூறுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவ வழிபாட்டுடன் இணைந்த பலவகைக் காளி தேவியர்

பச்சைக்காளியும் - பவளக்காளியும்

சிவபெருமான் தன்னுடைய கண்டத்திலிருந்தும், கைநெருப்பிலிருந்தும் நெற்றிக் கண்ணிலிருந்தும் பலசமயம் காளிதேவியைத் தோற்றுவித்து அன்பர்களைக் காத்துள்ளார். அவரால் உண்டாக்கப்பட்ட காளியர் சிவந்த பவழம்போல் உடல் பெற்றவர்கள் இதனால் இவர்கள் "பவளக் காளி" எனப்பட்டார்கள். இவர்களைச் சிவகாளி எனவும் செங்காளி எனவும் அழைப்பர்.

சிவபெருமானைப் போலவே சிவசக்தியான பார்வதியும் தனது உடல் வண்ணத்திலிருந்தும், நிழலில் இருந்தும் பலசமயம் காளிதேவியரைத் தோற்றுவித்து அன்பர்களுக்கு உதவியாக அனுப்பியுள்ளாள். சக்தியருளால் தோன்றிய இந்தக் காளிகள் யாவரும் கரும் பச்சை வண்ணம் கொண்ட வர்கள் எனவே அவர்கள் பச்சைக் காளிகள் என்றும் கரிய காளிகள் என்றும் அழைக்கப்பட்டனர்.

பச்சைக்காளி-பவளக்காளி என்ற இந்த இருவகைக் காளியரையும் இணைத்து இரட்டைக் காளிகளாக வழிபடும் வழக்கம் தென்தமிழ் மாவட்டங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன. தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமான திருப்பாசூரில் இரட்டைக்காளி வழிபாடு இருந்துள்ளது. இங்குப் பூமியிலிருந்து மிகவும் சிதைந்த நிலையில் பச்சைக் கல்லால் செய்யப்பட்ட காளிதேவியின் சிலையொன்றும், சிவப்பு மணற்கல்லால் செய்யப்பட்ட காளிதேவியின் சிலையொன்றும் கிடைத்துள்ளன.

மதுரை மாவட்டத்தில் பச்சைக்காளி பவளக் காளி திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

அஷ்டமாகாளிகள்

சிவபெருமானின் செயல்களை எட்டின் மடங்காகக் கூறுவது போலவே அவரால் படைக்கப்பட்ட காளியும் எட்டு வடிவங்கொண்டு விளங்குகின்றாள். இந்த எட்டு பேரையும் "அஷ்ட காளிகள்" என்று அழைப்பர். இவர்கள் பெயர் முறையே உச்சிட்டகாளி, ரணவீரகாளி, சம்காரகாளி, ருத்ரகாளி, சிம்மகாளி, அக்னிகாளி, அதர்வணகாளி, விஜயகாளி என்று சாக்த தந்திர நூற்கள் கூறுகின்றன. மேலும் சில நூல்களில் காளிதேவியின் எட்டு வடிவங்கள் 1. ஸ்ரீகாளி 2. காலராத்ரி 3. சாமுண்டி 4. சர்வயமுண்டி 5. பத்ரகாளி 6. மகாகாளி 7. சரசண்டிகை 8. பைரவி என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த எட்டு காளிகளும் பூசித்த இடங்கள் முறையே உஜ்ஜைனி மாகாளம், திருவதிகை, திருவெண்காடு, ஸ்ரீஹரதீர்த்தம், கீழ்வேளூர், புதுச்சேரி, (கீவளூர் அருகில்) அம்பர்மாகாளம், காளியாகுடி என்ற எட்டாகும்.

மேலும் காளிதேவி எட்டு வடிவங்கள் கொண்டு காஞ்சீபுரத்தைக் காத்து வருகின்றாள் என்று பழம் புராணங்கள் கூறுகின்றன. (தனிக்கட்டுரை காண்க).

நவகாளிகள் (ஒன்பது காளிகள்)

நவகாளிகள் எனப்படும் ஒன்பது காளியர் வழிபாடு வடஇந்தியாவில் சிறப்புடன் நடைபெறுகின்றது. இவர்கள் ஸித்திகாளி, மகாகாளி, மயானகாளி, குஹ்யகாளி, தட்சிணகாளி, சாமுண்டி காளி, தனகாளி, காமகூலாகாளி என்று அழைக்கப்படுகின்றனர். மகாநீலக்கிரமம், தோடலதந்திரம் முதலான சாக்த நூல்கள் காளிதேவி பூசையைப் பற்றிய விரிவான விளக்கங்களைத் தருகின்றன.

பதினாறு காளிகள் (சோடச காளிகள்)

உலகில் அடையத்தக்கதான பதினாறு செல்வங்களையும் ஒருவன் அடைந்தாலும் அவற்றை வைத்துக் காப்பாற்றி அனுபவிக்க உதவும் காவல் தெய்வமாக இருப்பவள் மகாகாளி. இவள் பதினாறு வடிவங்கள் தாங்கிப் பதினாறு செல்வங்களையும் காப்பாள் என்பது நம்பிக்கை. இவ்வகையில் பதினாறு காளிதேவியரை வழிபடும் வழக்கமும் உள்ளது.

பச்சைக்காளி பவளக்காளி - திருப்பாசூர் திருவள்ளூர் மாவட்டம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கன்னிக்காப்பான காஞ்சீபுரத்துக் காளிகள்

மாபெரும் சிவத்தலமான காஞ்சீபுரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட காளிதேவியின் ஆலயங்கள் இருந்ததென்று புராணங்கள் கூறுகின்றன.

கச்சியப்ப முனிவரின் காஞ்சிப்புராணம் காஞ்சிநகரை எட்டு காளிகள் காத்து வருவதாகக் கூறுகின்றது. இவர்கள் முறையே கருக்காத்தாள், அம்பிகாபுரத்தி, கோடி மாரணை, காயோற்காரணி, லயசித்தி, பீடாபுரத்தி, மணிசிந்துகரையாள், கூவத்தாள் என்ற எண்மராவர்.

மேலும் காஞ்சியின் பெருமையை விளக்கும் கச்சிக் கச்சாலையாரின் காஞ்சிப்புராணம் பதினாறு காளிதேவியர் காஞ்சிநகரைக் காவல் புரிகின்றனர் என்று கூறுகின்றது. இவர்கள் முறையே "தெக்கணாசல வாசினி, காஞ்சி மன்னி வாசினி, கீர்த்திமதி, கருகாத்தாள், கூவலாள், பிரளய அந்தாளி, பிட்டாபுரத்தி, மாரணை, அம்பிகாபுரத்தி, கம்பகம்பாடி, கங்காளி, சிந்துமணி தடத்தாள், அசுகளையோற்காரி, காயாப்புளி, பத்ரகாளி, அங்குசங்தனிற் பிறந்த அரசுகாத்தம்மன், என்று குறிக்கப்படுகின்றனர்.

இத்தகைய கன்னியரான காளிதேவியர்களால் காக்கப்படுதலின் காஞ்சிக்குக் "கன்னிக் காப்பு" என்பதும் ஒரு பெயராயிற்று. இவற்றுள் ஐவரை இப்பகுதியில் காணலாம்.

சுந்தரி அம்மன மணிகண்டீசர் கோயில் – காஞ்சீபுரம்

காஞ்சீபுரத்துக் காளிலிங்கம் (ஆதிபீடகாளிகாம்பாள்)

காஞ்சீபுரத்தினைக் காவல் காக்கும் காளிகளில் முதன்மையானவள். காளிகாம்பாள் என்றழைக்கப்படும் ஆதிபீடகாளிகாம்பாள் ஆவாள். இவளைக் காஞ்சிப்புராணம் பீடாபுரத்தி என்றும் பிட்டாபுரத்தி என்றும் குறிக்கின்றது. ஆதியில் இக்கோயிலில் காளிதேவி யந்திர வடிவமான பீடத்தின் வடிவாக வழிபடப்பட்டாள். இதனால் அப்பகுதி ஸ்ரீபீடபுரம் எனப்பட்டது. (பின்னாளில் தான் கருவறையில் அம்பிகையின் வடிவம் அமைக்கப்பட்டது என்பர்) இங்கு காளிதேவி யோகம் புரிந்தாள் என்றும் அவளுக்குக் காட்சியளித்து சிவபெருமான் அருள்பாலித்தார் என்றும் கூறப்படுகின்றது. சிவன் வடிவை அவள் பெற்றதன் நினைவூட்டும் வகையில் பாணப் பகுதியில் காளிதேவியின் திருவுருவம் உள்ள சிவலிங்கம் ஒன்று இக்கோயிலின் முகமண்டபத்தில் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது. இது சக்திலிங்கம் என்று அழைக்கப்படுகின்றது. இத்தகைய சிவலிங்க சக்தி வடிவத்தை வேறெங்கும் காணமுடியவில்லை.

இத்தலத்துக் காளிதேவியை "யோகப்பிடாரியார்" எனவும் அழைப்பார். இக்கோயில் காஞ்சீபுரத்தில் குமரகோட்டத்தின் வடக்கு மதில் சுவரினையொட்டி அமைந்துள்ளது. காளிதேவிக்குரிய பெருங்கோயிலாக இக்கோயில் விளங்குகின்றது.

இதனுள் காளிகாம்பாள் பத்மபீடத்தில் முன்னிருகையில் அபயமுத்திரை, கபாலபாத்திரம் ஆகியவற்றை ஏந்தியும் பின்னிருகரத்தில் அங்குசம் பாசம் ஆகியவற்றை ஏந்தியும் காட்சியளிக்கின்றாள்.

* முக்கியக் குறிப்பு – இக்கோயிலில் மூலவராக இப்போதிருக்கும் அம்பிகையின் வடிவம் பின்னாளில் எழுந்தருளி வைக்கப்பெற்றதாகும். அதற்கு முன்னால் இருந்த அம்பிகையின் வடிவம் ஆலயத்தின் தென்கிழக்கு முனையில் ஒரு மாடத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இது பெரும்பான்மையும் திருஇடைமருதூரிலுள்ள மூகாம்பிகையின் வடிவத்தை ஒத்துள்ளது. தலைவில் விரிந்த ஜடாமண்டலம் உள்ளது. முன்னிரு கரங்களில் அபயமுத்திரையும் கபாலமும், பின்னிரு கரங்களில் அங்குசம் பாசமும் ஆகியன உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சீபுரத்து சுந்தரி

தேவாசுரர் பாற்கடலைக் கடைந்தபோது கயிறாக விளங்கிய வாசுகி என்ற பாம்பு தனக்கு ஏற்பட்ட உடல் வருத்தத்தால் கக்கிய கொடிய விஷத்தைச் சிவபெருமான் அருந்தினார். அவருக்கு விஷத்தைக் கொடுத்ததால் வருந்திய அப்பாம்பு காஞ்சீபுரத்தில் தன்பெயரால் தீர்த்தம் உண்டாக்கி அதன் கரையில் சிவலிங்கம் ஒன்றை அமைத்து அதனை உயர்ந்த நாகரத்தினங்களைக் கொண்டு பூசித்தது.

அதனையொட்டி அனேக பாம்புகள் அங்கு கூடி வாசுகிதீர்த்தமான திருக்குளத்தில் நீராடி வாசுகி அமைத்துப் போற்றிய சிவபெருமானை வழிபட்டன. அவைகள் அக்குளத்தின் கரையில் தமது நாகரத்தினமணிகளைச் சிந்தின. அந்த இடம் மணிசிந்து துறை என்று ஆயிற்று. அதன் கரையில் காளிதேவி வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். அவளுக்கு சிந்துமணித்தடத்தாள் என்றும் மணிச்சிந்து கரையாள் என்றும் பெயர்கள் உண்டாயிற்று. சிந்துகரை அம்மன் என்ற பெயரே மருவி இந்நாளில் சுந்தரி அம்மன் என்று ஆகிவிட்டது.

சுந்தரி அம்மன் கோயில் காஞ்சீபுரத்தில் திருக்கச்சி நம்பி தெருவிலுள்ள மணிகண்டீசுவரர் ஆலயத்துள் வடகிழக்கு முனையில் வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. எதிரில் வாசுகி தீர்த்தம் உள்ளது. இவள் மேற்கரங்களில் பாசம், டமருகம் ஏந்தி கீழ்க்கரங்களில் கத்தி, கபாலம் தாங்கியுள்ளாள்.

தினமும் இரண்டு கால பூசை நடைபெறுகின்றது. இவள் பல குடும்பத்தினருக்குக் குலதெய்வமாக விளங்குகின்றாள். அண்மையில் திருப்பணி செய்யப்பற்று மிகப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

இக்கோயிலில் இப்போது அமைந்துள்ள் திருவுருவம் அண்மையில் அமைக்கப்பெற்றதாகும். பழைய திருவுருவம் இப்போது இந்த சந்நிதியின் அருகிலுள்ள வேப்பமரத்தின் கீழ் ஒரு ஓலைக் கொட்டகையில் உள்ளது. இந்நாளில் படைவெட்டி அம்மன் என்று அழைக்கின்றனர். இதுவும் ஆதிபீட அம்மன் என்று அழைக்கின்றனர். இதுவும் ஆதிபீட காளிகாம்பாள் போல யோகப்பிடாரியாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"பிரளய பட்சிணி"

காஞ்சிப் புராணங்களில், பிரளய அந்தாளி, லயசித்தி என்று பலவாறாக அழைக்கப்படும் மகா காளிதேவி காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்துள் உள்நுழைவாயிலின் தென்புறம் திருமாளிகைப் பத்திமேடையின் மீது கிழக்கு நோக்கியவாறு அமர்ந்துள்ளாள். இவள் எட்டு கரங்களுடன் வீரா வேசமாக வீற்றிருக்கின்றாள். ஒரு சமயம் யுகப் பிரளயம் நேரிட்டு உலகினை அழிக்கத் தொடங்கியது. அப்போது இவள் சிவனுடைய ஆணையால் அந்த ஏழுகடல் வெள்ளத்தையும் தன்னுடைய கபால பாத்திரத்தில் ஏந்தி ஒருவாயாகக் குடித்து விட்டாள். அதனால் இவளுக்குப் பிரளய பட்சிணி என்பது பெயராயிற்று. செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் இங்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவளுடைய திருவுருவம் கலையழகுமிக்கதாகத் தோற்றப்பொலிவுடன் விளங்குகின்றது.

காயோற்காரணி

காரோணம் என்று வரலாற்றிலும் காயரோகணம் என்று புராணங்களிலும் போற்றப்படும் காயாரோகணசாமி கோயில் காஞ்சீபுரத்தில் மூங்கில் மண்டபத்திற்கு மேற்கில் அமைந்துள்ளது. இங்குள்ள முற்றத்தின் தெற்கில் வடக்கு நோக்கியவாறு பெரிய அலங்காரமண்டபம் உள்ளது. இதில் வடக்கு நோக்கியவாறு சிறுமேடையின்மீது காயோற்காரணி எனும் காளிதேவி எழுந்தருளியுள்ளாள். இவள் சாந்த வடிவமான காளியாகத் திகழ்கின்றாள். இவள் வடிவமும் யோகப் பிடாரியின் (பார்க்க பக்கம் 758) வடிவமாகவே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

கருகாத்தம்மன்

இந்நாளில் கருகாத்தம்மன் கோயில் என்று அழைக்கப்படும் காளியின் ஆலயம் காஞ்சிபுரத்தின் தென்பகுதியில் அமைந்துள்ளது. இந்த இடம் காஞ்சிபுரத்தின் கருவறைப் பகுதியாகத் திகழ்வதால் கர்பஸ்தானம் என்று அழைக்கப்பட்டது. அதன் காவல் தெய்வமாக இருப்பதால் இவள் கருப்பத்தானத்தி என்றும் கருகாத்தம்மன் என்றழைக்கப்படுகின்றாள். இதுவும் காளியின் வீராவேசமான கோலமாகும்

● மதுரைக்கும் கன்னிக்காப்பு என்பது பெயராகும். சப்தகன்னி கையர்களாலும், காளியாலும் காக்கப்படுதலின்அதற்கு அப்பெயர் வந்தது. திருவாலவாயுடையா புராணம் கன்னி, திருமால், காளி, ஈசன் காக்குங் கடிமதில் சூழ்மாமதுரை என்று குறிக்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யோகப் பிடாரியார்

இந்தியச் சமய மரபில் "யோக சாதனை" என்பது சிறப்பாகப் போற்றப்படுகின்றது. அனைத்துத் தெய்வங்களும் யோகத்தில் வீற்றிருப்பதைக் காண்கிறோம். யோக ராஜனாக விளங்கும் சிவபெருமானின் அருளால் உண்டான காளி தேவியும் யோகத்தில் வீற்றிருப்பதைக் காண்கிறோம்.

● யோகப்பிடாரியார் - திருவிடைமருதூர்

திருவிடைமருதூர் யோகப்பிடாரியார்

பிடாரி என்ற சொல், காளிக்குரிய பெயராகும். இதற்குப் பீடைகளை அழிப்பவள் (பீடை+அரி) என்பதும், (பீடு + அரி) பெருமைகளுக்கு இருப்பிட மானவள் என்பதும் பொருள்களாகும்.

சில தலங்களில் காளிதேவி யோக நிலையில் வீற்றிருப்பதைக் காண்கிறோம். இதில் குறிப்பிடத் தக்கது திருஇடை மருதூராகும். திருஇடைமருதூரில் மகாலிங்க சுவாமி ஆலயத்தில் கொடி மரத்திற்குத் தெற்கில் வடக்கு நோக்கியவாறு யோகக் காளியின் சந்நிதியுள்ளது. இந்த யோகேசுவரி இந்நாளில் மூகாம்பிகை என்று அழைக்கப்படுகின்றாள். கல் வெட்டுகள் இவளை "பிடாரி யோகிருந்த பரமேசுவரி" (ARE 307 TO 1907) என்றுக் குறிக்கின்றன.

இச்சந்நிதியுள் காளிதேவி பத்மாசனத்தில் வீற்றிருக்கின்றாள். முன்னிரு கரங்களில் அபய முத்திரையும் கபாலம் விளங்கப் பின்னிரு கரங்களில் சூலத்தையும் பாசத்தையும் ஏந்தியுள்ளாள். தலையில் விரிந்த ஜடாமண்டலம் அமைந்துள்ளது. இவளு டைய சந்நிதியில் மகாமேருயந்திரம் அமைக்கப் பட்டுள்ளது. சந்நிதியில் திருவாவடுதுறை ஆதீனச் சந்நிதானத்தின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு நான்கு காலபூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. சிறந்த பிரார்த்தனைத் தலமாகும்.

இக்கோயிலின் விமானம் வடநாட்டு ஆலயங்களின் அமைப்பில் கட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

காஞ்சீபுரத்து யோகப்பிடாரியார்

காஞ்சீபுரத்தின் கிழக்கில் ஐயன்பேட்டை என்ற ஊர் உள்ளது. இங்குச் சாலையோரத்தில் மோகாம்புரி அம்மன் கோயிலைக் காண்கிறோம். யோகம்புரி அம்மன் என்ற சொல்லே மோகாம்புரி அம்மன் என்று மருவி வழங்குகின்றதென்பர். இங்குக் கருவறையில் அம்பிகைப் பத்மாசனத்தில் வீற்றிருக் கின்றாள். முன்னிருகரங்களில் கரும்புவில்லும் மலர்ப்பாணமும் உள்ளன. பின்னிரு கரங்களில் அங்குசப் பாசம் தரித்துள்ளாள். அவளுக்கு வலதுபுறம் சிவபெருமான் இடப வாகனத்தில் வீற்றிருக்கும் இடபாருடர் திருமேனி உள்ளது. அண்மையில் திருப்பணி செய்யப்பட்டு இக்கோயில் பொலிவுடன் விளங்குகின்றது.

காஞ்சிப்புராணத்தில் "கோடிமாரணை" என்று போற்றப்பட்ட காளிதேவி இவளேயாவாள் "மாரணை தேவி" என்றும் அழைக்கப்படுகின்றாள்.

• யோகாம்பிகை என்பதே மூகாம்பிகை என ஆனதென்றும், யோகம்புரி நாயகி என்பதே மோகாம்புரி நாயகி ஆகிவிட்டதென்று அறிகிறோம். மேலும் காஞ்சீபுரத்திலுள்ள ஆதிபீடகாளிகாம்பாள், காயோற்கா ரணி, சுந்தரிஅம்மன் முதலிய காளியரின் திருஉருவங்கள் யோகப்பிடாரியின் திருவுருவங்களாகவே உள்ளன..

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளிதேவி - சிவபூசை செய்தல்

அனைத்துத் தேவர்களும் மனிதர்களும், மற்ற உயிரினங்களும் சிவபூசை ஒன்றினால் மட்டுமே மேன்மை அடையமுடியும் என்பதை உணர்ந்து சிவபூசை செய்கின்றார்கள். சிவபூசையொன்றே சகல குற்றங்களையும் போக்குவதாகும். இவ்வகையில் காளிதேவியும் சிவனைப் பூசிக்கின்றாள். அவள் சிவபூசை செய்து பேறுபெற்ற தலங்கள் பலவாகும். தாரகாசூரனைக் கொன்றபாவம் நீங்கவும், சிவனை ஆடற்போட்டிக்குக் கர்வம் கொண்டு அழைத்த பாவம் நீங்கவும், சும்பன், நிசும்பன், ரத்தபீஜன், பஞ்சராவணர் முதலிய அனேக அசுரர்களை அழித்த பாவம் நீங்கவும் இன்னும் அனேக காரணங்களுக்காகவும் சிவபூசை செய்து சிவனருள் பெற்றாள். காளி சிவழிபாடு செய்வது தேவாரத்தில் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

1. அம்பர் மாகாளத்து அழகியகாளி

திருமுறைத்தலங்களில் ஒன்றான "அம்பர் மாகாளம்" காளிவழிபட்ட தலங்களில் குறிப்பிடத் தக்கதாகும். மகாகாளி பூசித்ததால் இவ்வூருக்கு மாகாளம் என்ற பெயர் உண்டாயிற்று. ஏற்கனவே உஜ்ஜைனி மாகாளம் (இரும்பை) மாகாளம் என்ற பெயரில் பல தலங்கள் இருப்பதால் அவற்றினின்று இதைப் பிரித்துக் காட்ட அருகிலுள்ள புகழ்பெற்ற ஊரான அம்பரையும் சேர்த்து அம்பர் மாகாளம் என அழைத்தனர். இந்நாளில் இது கோயில் மாகாளம் என்று அழைக்கப்படுகின்றது.

இவ்வூர் இறைவர் மாகாளநாதர் என்று அழைக்கப்படுகின்றார். இது அம்பரன், அம்பன் என்ற அசுரர்களைக் கொன்ற பாவம் நீங்கும் பொருட்டுக் காளிதேவி அழகிய பெண்வடிவம் கொண்டு இரண்டு கையால் மண்ணைப் பிடித்துச் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்த தலமாகும். கைப்பிடி அளவாக அமைந்த லிங்கமாதலால் மிகவும் சிறியதாக உள்ளது. மண்டபத்தில் சிவனைப் பூசிக்கும் கோலத்தில் மாகாளியின் உலாத்திருமேனி அமைந்துள்ளது. இவள் மேற்கரங்களில் சூலமும் கபாலமும் ஏந்தி முன் இடது கரத்தில் பூத்தட்டையும் வலது கரத்தில் வில்வதளத்தையும் கொண்டு பூசிக்கும் பாவனையில் உள்ளாள்.

மேலும் தியாகராஜர் மண்டபத்தில் புடைப்புச் சிற்பமாகக் காளி சிவபூசை செய்யும் காட்சி செதுக்கப்பட்டுள்ளதையும் காண்கிறோம்.

வெளிப்பிரகாரத்தை வலம் வருகையில் தென்பிராகாரத்தில் வடக்கு நோக்கியவாறு காளிதேவியின் சந்நிதி அமைந்துள்ளது. இதில் காளிதேவி மூலவராக வீற்றிருக்கின்றாள். மேற்கரங்களில் சூலமும் கபாலமும் விளங்க, முன் வலது கரம் அபயமுத்திரை தாங்க இடதுகையை மடிமீதும் வைத்ததாக உள்ளது. எடுத்துக்கட்டிய சடா மகுடத்தில் பெரியபாம்பு உள்ளது. இச்சடாமகுடத்தின் முன்னுச்சியில் ஒரு மண்டையோடும் வலது செவிக்கு நேராக ஒரு



அம்பர் மாகாளத்து அழகிய காளி சிவனை பூசிக்கும் திருக்கோலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டையோடும் உள்ளன. அம்பன், அம்பரனை வதைத்ததன் அடையாளமாக இவற்றை அணிந்துள்ளாள் என்பர். இவளுடைய சந்நிதிக்கு முன்புறம் பெரிய சூலம் நடப்பட்டுள்ளது. இவளுடைய பூசையையேற்றுக்கொள்ளும் வகையில் சகலபுவனேசுவரர் ஆலயம் அமைந்துள்ளது.

இத்தலத்தில் நடக்கும் வைகாசி ஆயில்ய விழாவின் போது காளி சிவனைப்பூசிக்கும் ஐதீகக் காட்சி நடத்தப்படுகின்றது. அன்று "காளிதேவியைச் சிவபூசை செய்யும் கோலத்தில் அழகாக அலங்கரித்து திருவீதியுலாவும் நடத்தப்படுகின்றது.

இத்தலத்தை அடுத்துள்ள அம்பர் தலத்திலும் காளிதேவியின் உலாத்திருமேனி அமைந்திருந்தது. இது தீண்டாத்திருமேனியாகப் போற்றப்பட்டு வந்தது. இந்நாளில் இது இக்கோயிலில் இல்லை. மேலும் இக்கோயிலில் காளிதேவி சிவனைப் பூசித்துப் பேறு பெற்றதை உணர்த்தும் வகையில் திருஞானசம்பந்தர், "கங்காளர், நங்காளியேத்தும் அழகனார்," என்று பாடிப்பரவுகின்றார். இதில் அவர் காளியை நம் காளி என்று உறவுபடுத்திக் கூறுவது எண்ணத்தக்கது.

இத்தலம் மயிலாடுதுறை - திருவாரூர் சாலையிள்ள பூந்தோட்டத்திற்குக் கிழக்கே5கி.மீ. தொலைவில் உள்ளது. இறைவர் மாகாளநாதர். அம்பிகை தனி ஆலயத்தில் அச்சம் தவிர்த்த நாயகி (பயக்ஷயநாயகி) என்ற பெயரில் கோயில் கொண்டுள்ளாள்.

2. மங்கலக்குடி - மாகாளீசர்

கும்பகோணத்திற்கு அருகில் அமைந்துள்ள சூரியனார் கோயிலுக்கு அருகில் மங்கலக்குடி அமைந்துள்ளது. மங்கலக்குடியில் சூரியன் பூசித்துப் பேறு பெற்றான். இங்குள்ள இறைவர் பிராணவரதேசுவரர் என்றும், அம்பிகை மங்களநாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இங்குக் காளி பூசித்ததாகத் தலவரலாறு எதுவும் இல்லை என்றாலும் "தங்"கலம் எனத் தொடங்கும் தேவாரத்தில் திருநாவுக்கரசுசுவாமிகள்

மங்கலக்குடி ஈசனை மாகாளி
வெங்கதிர்ச் செல்வன் விண்ணோடு மண்ணுநேர்
சங்கு சக்ரதாரி சதுர்முகன்
அங்கத்தியனும் அர்ச்சித்தாரன்றே.

என்று குறித்துள்ளதைக் காண்கிறோம். இவ்வூரின் தெற்கு மாடவீதியில் கிழக்கு நோக்கியவாறு காளியம்மன் ஆலயம் உள்ளது. வழக்கமாக வடக்கு நோக்கி எழுந்தருளும் காளிதேவி இங்குச் சிவனைப் பூசிக்கும் வகையில் கிழக்கு நோக்கி அமர்ந்துள்ளாள் என்பர். சிவாசாரியாரே இக்கோயிலிலும் பூசை செய்கின்றார்.

சீர்காழி காளீசுவரர்

திருஞானசம்பந்தப் பெருமான் அவதாரம் செய்தருளிய சீர்காழியின் பன்னிரண்டு பெயர்களில் ஒன்று ஸ்ரீகாளிபுரம் என்பதாகும். இங்குக் காளி வழிபட்டுப் பேறுபெற்றதால் இதற்கு இப்பெயர் வந்தது என்று தலபுராணம் கூறுகின்றது.

திருஞானசம்பந்தப்பெருமான் பூமகனூர் என்று தொடங்கும் இவ்வூர்ப் பதிகத்தில்

.... வெம்போர் மகிடற் செற்று
நிகழ்நீலி நின்மலன் தன் இன்அடி இணைகள்
பணிந்து....

என்று இங்குக் காளி வழிபாடு செய்ததைக் குறித்துள்ளார்.

காளியால் வழிபாடு செய்யப்பட்ட சிவலிங்கம் காளீசர் என்ற பெயரில் இத்தலத்தில் வெளிப் பிராகாரத்தின் வடமேற்கு முனையில் தனிச்சந்நிதியில் அமைந்துள்ளது.

காஞ்சீபுரத்து கௌசிகேசம்

உமாதேவியார் தனது கரிய நிறம் நீங்கும் பொருட்டுத் திருக்கேதாரத்தில் சிவபூசை செய்தாள். அவளுடைய பூசையை ஏற்றுக் கொண்ட சிவபெருமான் அவளுக்குப் பொன்போன்ற உடலை அளித்தார். அவள் உடலிலிருந்து கழிந்த கருநிறம் காளிதேவியாக வடிவெடுத்து அனேக அசுரர்களைக் கொன்றது. அந்தக் காளிதேவிக்குப் கௌசிகி என்பது பெயராகும். அசுரர்களைக் கொன்ற பாவம் தீரும் பொருட்டு அவள் காஞ்சீபுரத்தில் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தாள். அவள் பெயரால் அந்தலிங்கம் கௌசிகேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றது. கௌசிகியால். அமைக்கப்பட்டதால் அந்த ஆலயம் கௌசிகேசம் என்று பெயர் பெற்றது. இது நல்ல கற்கோயிலாகக் காஞ்சி காமாட்சியம்மன் கோயிலுக்கு வடகிழக்கில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குத்தாலம் ஓங்காளீசுவரர்

● காளி சிவபூசை செய்து பிரணவப் பொருளைக் கேட்டல்

மயிலாடுதுறை-கும்பகோணம் பாதையில் உள்ள குத்தாலம் தேவாரத்துள் திருத்துருத்தி என்று போற்றப்பட்ட திருத்தலமாகும். இங்கு ஊரின் மையத்தில் காளி வழிபட்டு அருள் பெற்ற ஓங்காளீ சுவரர் ஆலயம் அமைந்துள்ளது. இது காளிதேவி தினமும் காவிரியில் நீராடி மலர் கொண்டு அன்புடன் அர்ச்சித்த போது இறைவன் அவளுக்கு "ஓம்" என்ற பிரணவத்தின் பொருளை அருளிச் செய்த இடமாகும். அதனால் ஓங்காரீசுவரர் கோயில் என அழைக்கப் படுகின்றது. நெடிய நுழைவாயிலைக் கடந்து பெரிய முற்றத்தை அடைகிறோம். அகன்ற திறந்த வெளிப் பிராகாரம் உள்ளது. இச்சுற்றில் விநாயகர், வள்ளி தெய்வயானை உடனாய சுப்பிரமணியர் சண்டீசர், மகாலட்சுமி, நவக்கிரகம் ஆகியோர் எழுந்தரு ளியுள்ள துணைச் சந்நிதிகள் உள்ளன. கருவறைக் கோட்டங்களில் விநாயகர் தென்முகக் கடவுள், அண்ணாமலையார், பிரமன் துர்க்கை ஆகிய திருவுருங்கள் அமைந்துள்ளன.

மகாமண்டபத்தின் உள்வாயிலில் காளி சிவனை பூசித்துத் தலையை சாய்த்து ஓங்காரத்தைக் கேட்டுக் கொள்வதைக் குறிக்கும் கல்திருமேனி யொன்று சிறியதாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் சிவ லிங்கத்தின் வலப்புறத்தில் காளிதேவி நின்றுள்ளாள். மேற்கரங்களில் டமருகமும் பாசமும் உள்ளன. முன் வலது கரத்தால் மலர் ஏந்தி அர்ச்சிக்கின்றாள். இடது கரத்தில் பூக்குடலையைத் தாங்கியுள்ளாள். இத்தகைய ஐத்க சிற்பம் வேறெங்குமில்லை என்று கூறுகின்றனர்.

கருவறையில் வீற்றிருக்கும் சிவலிங்கமூர்த் திக்கு "ஓங்காளீசுவரர்" என்ற டெயர் வழங்குகின்றது. தெற்கு நோக்கி தனிச் சந்நிதியிலுள்ள அம்பிகைக்கு ஆனந்தவல்லி என்பது பெயராகும். தினமும் இரண்டு கால பூஜை நன்கு நடைபெறுகிறது.

உஜ்ஜைனி மாகாளாத்து மகா ..ளேசுவரர்

● மகாகாளேசுவரர் உஜ்ஜைனி

வட இந்தியாவில் மத்தியப்பிரதேச மாநிலத் திலுள்ள உஜ்ஜைனி பன்னிரண்டு ஜோதிர் லிங்கத் தலங்களில் ஒன்றாகும். இது திருமுறைப் பாடல்களில் உஞ்சேனை மாகாளம் என்று குறிக்கப்பட்டுள்ள வைப்புத் தலமாகும். இராம்தக்-நாக்பூர் இரயில் பாதையில் உள்ளது. இங்கு ஓடும் சிப்ரா நதிக்கரையில் பெரிய ஆலயமாக மகாகாளர் கோயில் அமைந்துள்ளது. இங்குக் காளிதேவிக் கும் ஆலயம் அமைந்துள்ளது. இது காளி சிவபூசை செய்த தலங்களில் ஒன்றாகும். சிப்ரா நதிக்கரையிலுள்ள ராம்காட் என்னுமிடத்தில் சித்தவடம் என்னும் பெரிய ஆலமரமும் அதன்கீழ் காளிதேவியின் ஆலயமும் உள்ளன. மாமன்னன் விக்ரமாதித்தியன் மகாகவி காளி தாசன் முதலியோர் இக்காளிதேவியின் அருள் பெற்ற வர்களாவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாலயங்களில் உள்ளே அமைந்துள்ள காளிதேவியின் சந்நதிகள்

காளிதேவி சிவனுடைய உருத்திர அம்சமாகத் தோன்றியவள் அதனால் கோபாவேசம் கொண்டவளாகவே விளங்குகின்றாள். இவளைச் சிவமூலசக்தி என்றும், உருத்திரசக்தி என்றும், பலவாறு அழைக்கின்றனர். இவளைச் சிவனுடைய மகள் என்று கூறுவர். இதனால் காளியையும் சிவனையும் சேர்த்து வழிபடும் வழக்கம் வந்தது என்பர்.

தமிழகக் குடும்பப் பழக்கங்களில் வீடுகளில் நடைபெறும் சடங்குகளுக்கும் விழாக்களுக்கும் வீட்டுப்பெண்களுக்குச் சீர்செய்த பின்பே அந்த நிகழ்ச்சிகளைச் செய்யும் வழக்கம் உள்ளது. இதனையொட்டி சிவாலயங்களில் நடைபெறும் விழாவிற்கு முன்னதாக கிராமதேவதையாக விளங்கும் பிடாரியான காளிக்கு விழா நடத்திச் சிறப்புக்களைச் செய்கின்றனர்.

பிடாரியின் உலாத்திருமேனியைச் சிவாலயத்துள்ளேயே எழுந்தருளி வைப்பதும், மாதப் பிரவேச நாளில் அதற்கு சிவாசாரியாரே அபிஷேக ஆராதனை செய்வதும் இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகின்றது.

மேலும் அனேக சிவாலயங்களில் காளிதேவிக்கென தனிச் சந்நிதியும் அமைந்துள்ளதைக் காண்கிறோம். இவளுடைய கோயில் எப்போதும் வடக்கு நோக்கியே இருக்க வேண்டும் என்பது மரபு. எனவே இவள் வடவாயிற் செல்வி எனவும் அழைக்கப்படுகின்றாள். சிவாலயங்களுக்குள் காளி சந்நிதியை அமைக்கும் போதும் வடக்கு நோக்கியே அமைக்கின்றனர். வடவாயில் செல்வி என்பது நாளடைவில் செல்வி அம்மன் என்று சுருங்கி அதுவும் திரிந்து செல்லியம்மன் என்ற பெயர் ஆகிவிட்டது. தொண்டை மண்டலம் எங்கும் பிடாரி ஆன காளியை செல்லியம்மன் என்றே அழைக்கின்றனர்.

திருவக்கரை காளி

சென்னை - விழுப்புரம் சாலையிலுள்ள திண்டிவனத்திலிருந்து மைலம் - வானூர் வழியாகப் பாண்டிச்சேரி செல்லும் சாலையில் பெரும் பாக்கம் கூட்டுப் பாதையை அடைந்து அங்கிருந்து தெற்கே 10.கிமீ தொலைவு சென்றால் "திருவக்கரையை" அடையலாம். சங்கராபரணி ஆற்றின் தென்கரையிலுள்ள இவ்வூரின் மையத்தில் கிழக்கு நோக்கியவாறு சிவாலயம் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளிய சிவ பெருமான் சந்திரசேகரர் என்றும் அம்பிகை அமுதாம்பிகை (வடிவுடையம்மன்) என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இங்கு ராஜகோபுரத்தினைக் கடந்ததும் விசாலமாக அமைந்தள்ள முற்றத்தில் வடக்கு நோக்கியவாறு அமைந்த சப்தமாதர் கோயிலைக் காண்கிறோம். இதில் வலப்புறம் மூன்று மாதரும் இடப்புறம் மூன்று மாதரும் வீற்றிருக்க நடுவில் சாமுண்டியாகிய காளிதேவி பெரிய வடிவில் எழுந்தருளியுள்ளாள். காதில் பிணத்தோடு அணிந்தும் தலையில் ஜடா மண்டலமும் விளங்க மண்டை யோட்டு மாலைகளை அணிந்து வீராசனத்தில் எட்டுகரங்களுடன் வீற்றிருக்கின்றாள். காலடியில் வக்கரனும் அவன் மந்திரியும் வீழ்ந்துகிடக்கின்றனர்.

திருவக்கரை வக்ர காளியம்மன்.

திருவக்கரையில் இருந்து அரசாண்டு வந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வக்ராசூரன் என்பவனை அழிப்பதற்காகச் சிவ பெருமான் அனுப்பிய காளிதேவி அவனை அழித்தபின் இங்கேயே வீற்றிருக்கிறாள் என்று புராணங்கள் கூறுகின்றன.

திருவக்கரை தேவாரத்தில் வக்ராசூரனைப் பற்றிய குறிப்புகள் இல்லையென்றாலும் திருவிடை மருதூர் தேவாரமான "நாளுமே நம்பினேன்" என்று தொடங்கும் பதிகத்தில் "வக்கரன் உயிரை வவ்வ சிவபெருமான் திருமாலுக்கு சக்கரம் அளித்த கதை" சொல்லப்பட்டுள்ளது.

வக்கிரா சூரனை வெல்லத் திருமால் சிவ பெருமானை நோக்கிப் பூசை செய்ததும் சிவபெரு மான் அவருக்குச் சக்கரம் நல்கியதும் திருவாவடு துறை தேவாரத்தில், வக்கரன் உயிரை வவ்வக் கண்மலர் கொண்டு போற்றச் சக்கரங் கொடுப்பார் போலும் என்று குறிக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் அளித்த சக்கரத்தைத் திருமால் வக்ரன் மீது விட்டபோது அவன் அதை வணங்கியதால் அது அவனைக் கொல்லாமல் மீண்டும் சிவபெருமானி டம் சென்று விட்டது. பின்னர் சிவபெருமான் காளிதேவியை அனுப்பி அவனை அழித்தார் என்பது வரலாறு. வக்கராசுரன் பூசித்த பெரிய லிங்கம் அமைந்த சந்நிதி காளிதேவியின் சந்நிதிக்கு அருகில் மேற்கு நோக்கியவாறு உள்ளது. பௌர் ணமிதோறும் லட்சக்கணக்கான மக்கள் இங்கு வந்து காளி தேவியை வழிபடுகின்றனர்.

கீழ்வேளூர் அஞ்சு வட்டத்தம்மன்

நாகப்பட்டினம்-திருவாரூர் சாலையிலுள்ள கீழ்வேளூர் அட்சயநாதசுவாமி ஆலயத்தின் வடக்குப் பிராகாரத்தில் வடக்கு நோக்கியவாறு "அஞ்சுவட்டத்தாள்" என்ற காளிதேவியின் ஆலயம் அமைந்துள்ளது.

கருவறையில் எட்டுக் கரங்களுடன் வீராவே சமான கோலத்தில் சுதைச் சிற்பமாக பெரிய வடிவில் காளிதேவி எழுந்தருளியுள்ளாள். இவளுக்குப் புனுகு சட்டம் சாத்தி அலங்காரம் செய்கின்றனர். அபி ஷேகம் செய்வதில்லை. வாயிலின் இருபுறமும் நெடிய துவாரபாலிகையர் சுதைச் சிற்பமாக வண்ணப் பொலிவுடன் விளங்குகின்றனர்.

இச்சந்நிதிக்கு நேராக வாயில் அமைக்கப் பட்டு அதன்மீது கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது. சிவாசாரியாரே இவளுக்குப் பூசை செய்கின்றார்.

இவ்வூர்ப் புராணம் திருச்செந்தூரில் சூரபத்மன் முதலியோரைக் கொன்ற பாவம் நீங்க முருகப்பெருமான் இங்கு வந்து சிவபூசை செய்தார் என்றும் அவருக்கு கிழக்கு, மேற்கு வடக்கு, தெற்கு, உச்சி ஆகிய ஐந்து திசைகளில் இருந்தும் ஆபத்து வராமல் காக்கும்படி பார்வதிதேவி காளிக்கு ஆணை யிட்டதாகவும் கூறப்படுகிறது. அஞ்சுவட்டத்தில் நின்றும் குமரன் செய்த சிவபூசையைக் காத்ததால் இவளுக்கு அஞ்சுவட்டத்தம்மன் என்ற பெயர் வந்தது என்று கூறுகின்றனர்.

ஆராய்ச்சியாளர்கள் இப்பகுதியில் செல் வாக்கு பெற்றிருந்த அஞ்சுவட்டத்தார் என்ற குடி யினரின் குலதெய்வமாகப் போற்றப்பட்டதால் இவள் இப்பெயர் பெற்றாள் என்று கூறுகின்றனர். இது சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகின்றது.

நல்லூர் நாயகி

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள நல்லூர் சிறந்த திருத்தலமாகும். இங்குள்ள கல்யாணசுந்தரர் கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கிய வாறு காளிதேவியின் ஆலயம் அமைந்துள்ளது. இது சிறந்த பிரார்த்தனைத் தலமாகும். செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் கூட்டமாக வந்து சிறப்பு வழிபாடுகள் செய்கின்றனர்.

அகத்தியான்பள்ளியில் அகத்தியர் இறை வனின் திருமணக் கோலத்தைக் காணத்தவம் செய்த போது காற்று வடிவில் அவள் காவலாக இருந்தாள். அகத்தியர் அங்கும்அதன் பிறகு பல தலங்களிலும் சிபார்வதியரின் திருமணக் காட்சியை கண்டு களித்து இங்கு வந்து நெடுங்காலம் தவம் செய்தார். தவத்தின் முடிவில் இறைவன் திருமணக் கோலக் காட்சியை கண்டு மகிழ்ந்தபோது காளியும் அதைக் கண்டாள். அதனைத் தொடர்ந்து காணவிரும்பி இங்கே வீற்றிருக்கின்றாள் என்பர். இவளை தரிசிப்பதால் திருமணத்தில் உண்டாகும் தடைகள் நீங்கும். நாட்பட்ட திருமணம் விரைவில் கூடும் என்பதும் கண்கண்ட உண்மையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளிதேவி கடும் கோபமும், வேகமும் கொண்டவளாக இருந்த போதிலும் தன்னை அண்டியவர்கள் மீது கருணை கொண்டு அவர்களுக்காக எதையும் செய்யத்தயாராகக் காத்திருக்கின்றாள். இப்படித் தன்னை அண்டிய பக்தர்களைக் காக்க அவள் பலசமயம் தன்னைப் படைத்த சிவபெருமானையும் அவரது கணங்களையுமே கூட எதிர்த்துப் போரிட்ட நிலையையும் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, இப்போதைய சென்னையின் வடகிழக்குப்பகுதியை அந்நாளில் குரும்பர் என்னும் இனத்தவர் ஆண்டு வந்தனர். அவர்கள் காளியை உபாசித்து அவளுடைய அருளைப்பெற்றிருந்தனர். அவர்கள் தொண்டை நாட்டில் அரசு செலுத்தி வந்த தொண்டைமான் சக்ரவர்த்திகளுக்கு ஓயாது தொல்லையளித்தனர். தொண்டைமான் அளவற்ற சிவபக்தியுடையவன் அவன் சிவபெருமானைச் சரணடைந்து, "பெருமானே! குரும்பர்கள் மந்திரதந் திரங்களினாலும் பெரும்படைத் தொகுதியினாலும் ஓயாது தொல்லையளிக்கின்றனர்" அவர்களிடமிருந்து என்னைக் காத்தருள்க,' என்று வேண்டினான்.

சிவபெருமான் தொண்டைமானுக்கு அபயமளித்து நந்தியின் தலைமையில் சிவகணங்களைத் திரட்டி அவனுடன் போருக்கு அனுப்பினார். இதையறிந்த குரும்பர்கள் காளிதேவியை அழைத்து தமக்கு உதவுமாறு வேண்டினர்.

இருசாரருக்கும் கடும் யுத்தம் நடந்தது. அதில் காளிதேவி மாயப்போர் செய்து எல்லோரையும் கலங்கச் செய்தாள். நந்தியம் பெருமான் அவற்றை விலக்கி, குறும்பர்களை வெற்றி கொண்டார். தீயவர்களுக்கு உதவியாக மாயப்போர் செய்த காளியின் இறுமாப்பை அடக்க அவளுக்கு விலங்கிட்டுச் சங்கிலியால் பிணைத்துக் கொண்டு வந்து திருப்பாசூர் இறைவன் முன்பு விடுத்தார். சிவனின் அருள் நோக்கால் அவளுக்கு நற்புத்தி உண்டா யிற்று. அவள் தனது தவற்றுக்கும் சிவகணங்களுக்கு எதிராகப் போரிட்டதற்காகவும் வருந்தினாள். அக்கணமே அவளைக் கட்டியிருந்த சங்கிலிகள் தெரித்து விழுந்தன. அவள் சிவபெருமானைப் பணிந்து வணங்கினாள்.

அவர் அவளைக் கோயிலின் ஈசானபாகத்தில் அமர்ந்து அன்பர்களுக்கு அருள்புரியுமாறு கூறினார். அதன்படி திருப்பாசூர் ஆலயத்தில் "விலங்கு பூட்டிய காளியாக" காளிதேவி எழுந்தருளியுள்ளாள். நான்கு கரங்களுடன் நடனமாடும் நிலையில் உள்ள இக்காளி மிகுந்த வரப்பிரசாதியாகத் திகழ்கின்றாள்.

பாசூர் காளி

விலங்கிட்டகாளி - திருப்பாசூர்-திருவள்ளூர் மாவட்டம்

மேலும் இங்குப் பச்சைக்கல்லாலான ஒரு காளியும் சிவப்புநிறக்கல்லால் ஆன காளியும் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளன. இவற்றை நோக்கப் பாசூரில் பச்சைக்காளி பவளக்காளி வழிபாடு இருந்ததையும் உணரமுடிகின்றது.

திருப்பாசூர் பாடல்பெற்ற திருத்தலமாகும். இது சென்னையிலிருந்து திருவள்ளூர் வழியாக திருத்தணிக்குச் செல்லும் சாலையில், சாலையோரத்திலேயே அமைந்துள்ளது. இங்குள்ள "தங்காதலி" அம்மன் உடனுறை வாசீசுவரசுவாமி ஆலயத்தின் வடகிழக்குப் பகுதியில் காளிதேவியின் தனிச் சந்நிதி அமைந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவெண்காட்டு அகோரேஸ்வரி

(இந்திய மரபில் பல தெய்வங்கள் ஒரே தோற்றத்தைக் கொண்டுள்ளன. நுணுகி ஆராய்ந்து அறிபவர்களுக்கு மட்டுமே அவற்றின் வேறுபாடு தெரியும். எடுத்துக்காட்டாகத் தட்சயாகத்தை அழிக்கத் தோன்றிய வீரபத்திரர் வேறு. திருவெண்காட்டில் "மருத்துவாசூரனை" அழிக்கத் தோன்றிய அகோரமூர்த்தி வேறு ஆவர். முன்னையது சிவனருளால் தோன்றியது. பின்னையது சிவபெருமானே உருத்திர வடிவத்துடன் வெளிப்பட்டதாகும். இது போன்றே சக்தியின் அருளால் தோன்றிய காளிவேறு அகோரர் தனக்குத் துணையாகத் தோற்றுவித்த அகோரேசி என்னும் காளி வேறு ஆவர்).



● அகோரேசி திருவெண்காடு

சிவபெருமானின் ஐந்து தேகங்களில் ஒன்றான "அகோரம்" உருத்திர வடிவம் தாங்கி மருத்துவாசூரனை வெல்வதற்காக வெளிப்பட்டது. இந்த உருத்திர மூர்த்தியை "அகோரமூர்த்தி" என்பர். இந்த மூர்த்தியின் சக்தியாக வெளிப்பட்டவள் "அகோரேஸ்வரி" என்பவளாவாள். திருவெண்காட்டில் அகோரமூர்த்திக்கு நேர்எதிரில் அகோரேஸ்வரியின் சந்நிதி அமைந்துள்ளது. இதில் எண் கரங்களுடன் அவள் வீராசனத்தில் அமர்ந்துள்ளாள். இத்திரு உருவத்தைப் பத்ரகாளி என அழைக்கின்றனர். மிருத்துஞ்ஜய மந்திர வேள்வியிலும் பூஜையிலும் இந்த அகோரமூர்த்தி – அகோரசியைப் பூசிக்க வேண்டுமென்று சிவமகாபுராணம் குறிக்கின்றது.

அந்த மந்திரத்திற்கு இவர்களே உரியவர்களாவர். திருவெண்காட்டில் உள்ளது போலவே உருத்திரகோடித்தலமாக திருக்கழுக்குன்றத்திலும் அகோர சிவனின் பெரிய திருஉருவம் அமைந்துள்ளது. அதற்கிணையாக நடராஜர் மண்டபத் தூணில் செதுக்கப்பட்ட அகோரேசியின் திருஉருவமும் உள்ளது. இவளை இந்நாளில் காளி என அழைக்கின்றனர்.

லலிதோபாக்யானம் என்ற சாக்த தந்திர நூல் அகோரமூர்த்தி காளியால் தழுவப்பெற்று மகிழ்கின்றார் என்றும், காளியின் பேரழகை கடைக் கண்ணால் பருகுகின்றார் என்றும் குறிக்கின்றது. அதனையொட்டி திருவெண்காட்டில் அகோர மூர்த்திக்கு நேர் எதிரில் காளிதேவியின் திருவுருவம் தனிச்சந்நிதியில் நிலைப்படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

கல்வெட்டு காட்டும் காளப்பிடாரி

காளம் என்ற சொல்லிலிருந்தே காளி என்ற பெயர் உண்டானது என்பதைக் கண்டோமல்லவா. இதன் அடிப்படையில் காளிதேவி, காளப்பிடாரி என்றும் அழைக்கப்பட்டாள். எடுத்துக்காட்டாக தஞ்சாவூரை அடுத்துள்ள கண்டியூரில் காளப்பிடாரியார்க்கு ஒரு கோயில் இருந்ததைப் பல்லவர்காலக் கல்வெட்டு குறிக்கின்றது.

நிருபதுங்கவர்மன் என்ற பல்லவமன்னனின் 21வது ஆட்சிக் கல்வெட்டொன்று இக்கோயில் தீபமேற்றவும், சாம்பிராணி தூபம் போடவும் அளிக்கப்பட்ட செய்தியைக் குறிக்கின்றது. இந்நாளில் இக்கோயில் அழிந்து விட்டது. காளப்பிடாரியின் சிலைமட்டும் இரட்டைக்கோயில் வெள்ளாளத் தெருவிலுள்ள திரு முத்துசாமி நாடார் வீட்டின் அருகில் வைத்து வழிபடப்படுகின்றது.

● காளப்பிடாரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாலயங்களிலுள்ள காளிதேவியின் வடிவங்கள்

● அழகியகாளி

சிவாலயங்களில் ஐந்து வடிவங்களில் காளிதேவி விளங்குகின்றாள். இவை நின்ற நிலையிலான 1. வரதான வடிவம், 2. சும்ப நிசும்பர் களை அழித்தகோலமான நிசும்ப மர்த்தனி கோலம், 3. அமர்ந்த கோலத்தில் அருள்பாலிக்கும் சுகாசன காளிகோலம் 4. யோகநிலையில் வீற்றிருக்கும் தவக் கோலம், 5. ஆடி மகிழும் நடனகோலம் என்பன வாகும்.

சோழமண்டலத்தில் சோழர்காலத்தில் அமைக்கப்பெற்ற பெரும்பாலான பிடாரிகளின் உலாத்திருமேனிகள் நின்றவாறு அருள்பாலிப்பதைக் காண்கின்றோம். இவற்றுள் பெரும்பாலானவை வலக்கரத்தில் அபயமுத்திரை ஏந்கியவாறு உள்ளன. இத்திருமேனி காளிதேவியின் வரதான கோலமாகும். இவற்றுள் சில அமர்ந்தவாறும் காணப்படுகின்றன.

அம்பர் மாகாளத்தில் பிரகாரத்தில் வீற்றிருக் கும் காளி அமைதியாக அமர்ந்து அபய மளித்து அருள்பாலிப்பதனைக் காண்கிறோம். இது. போன்றே திருஒற்றியூரின் காவல்தெய்வமான ஒற்றியூராளும் அமர்ந்தவாறே காட்சியளிக்கின்றாள்.

இரண்டாவதான வகையான காளிவடிவம் அவளுடைய வீராவேசமான வடிவமாகும். இது நிசும்பசூதனி என்றும் சும்பநிசுபம்பமர்த்தனி என்றும், உக்ரமாகாளி என்றும் அழைக்கப்படு கின்றது. இவள் எட்டுக் கரங்களுடன் விளங்குகின்றாள். தலையில் விரிந்த ஜடாமண்டலம் அல்லது ஜ்வாலாமுடி விளங் குகின்றது. வலது காதில் பிணமும் இடது காதில் தோடும் விளங்க மார்பில் மண்டையோடுகளாலான பூணூலும், கரங்களில் கத்தி, வில், குறுவாள், கபாலம், வேதாளம், சூலம், அம்பு, மணி, முதலியனவும் உள்ளன. காலடியில் சும்பனும் நிசும்பனும் வீழ்ந்துகிடக்கின்றனர். இடது காலைத் தொங்க விட்டுக் கொண்டு வலது காலைப் பீடத்தில் குத்திட்டு ஊன்றி உடலை வளைத்து இடது கீழ்கரத்தைக் கீழ்நோக்கி அசுரர்களைச் சுட்டிக் காட்டிக் கொண்டு வலது கரத்திலுள்ள சூலத்தால் அவர்களைக் குத்திக் கொல்லும் பாவனையில் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

(திருவண்ணாமலை) அருணைநாயகி (காஞ்சீபுரம் மாவட்டம் பெரும்பேர் கண்டிகை) தான் தோன்றீசமுடையார் கோயில்) வீரமாகாளி, (திரு வக்கரை சந்திர மௌலீசுவரர் கோயில்) வக்ரகாளி முதலிய நூற்றுக்கணக்கான சிவன் கோயில்களில் இத்தகைய வீராவேசக் காளியைக் காணலாம். இவ ளைச் சும்ப மர்த்தனி எனவும் சும்ப நிசும்ப மர்த்தினி. எனவும், நிசும்பசூதனி எனவும், அழைக்கின்றனர். ராஜராஜசோழனின் பேரனான வீரராஜேந்திர சோழ னின் காலத்தில் இவளுக்குப் பல புதிய கோயில்கள் சிவாலயத்துள்ளேயே அமைக்கப்பட்டன.

மூன்றாவதாக அமைந்தவை அமர்ந்த கோலத்திலுள்ள சுகாசன காளிகோலமாகும். இந் நிலையில் காளிதேவி நான்கு கரங்களுடன் அமர்ந்த வாறு எல்லையற்ற சுகத்தில் வீற்றிருப்பதாக விளங்கு கின்றாள். கடுங்கோபத்தை விளக்கும் ஜ்வாலமுடி கோரைப் பற்கள் முதலியன இவ்வடிவத்தில் இல்லை. மேற்கரங்களில் உள்ள சூலம், பாசம், கபாலம், முன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உச்சி மீது அமைந்த மண்டைஓடு, ஆகியனவே இவளைக் காளி என்று உணர்த்துகின்றன.

நான்காவதான காளியின் யோகவடிவம் அபூர்வமாகச் சிலதலங்களில் மட்டுமே உள்ளன. இவளை யோகப்பிடாரியார் என அழைப்பர். திருஇடைமருதூரில் உள்ள மூகாம்பிகை, காஞ்சீபுரத் திலுள்ள ஆதிபீட காளிகாம்பாள், காஞ்சீபுரத்திற்குக் கிழக்கே ஐயன் பேட்டையில் மோகாம்புரி அம்மன் ஆகிய வடிவங்கள் காளிதேவியின் யோக வடிவங்களாகும்.

ஐந்தாம் நிலையில் ஆடற்கோலத்துடனான காளியைக் காண்கிறோம். காளி ஆடலால் மகிழ்வதால் அவளுக்கு "ஆடல் உவந்தகாளி" என்பது பெயராயிற்று. தஞ்சைத் தரணியில் உள்ள பல கிராமங்களில் கிராம தெய்வமாக எழுந்தருளியுள்ள காளிக்கு "நடன உற்சவம்" நடத்துவதைக் காண்கிறோம். தொண்டை மண்டலத்தில் தக்கோலம், பாசூர் முதலிய இடங்களில் நடனமாடும் காளியின் வடிவங்களைக் காணலாம்.

● நிசுபம்சூதனி -

காளி ஆடிய மரக்கால் நடனம்

காளிதேவி ஆடிய நடனங்களில் ஒன்று "மரக்கால்" நடனமாகும். இது உறுதியான மரத்தால் செய்யப்பட்ட கட்டைகளைக் கால்களில் கட்டிக் கொண்டு அதன் மீது ஊன்றி ஆடுதலாகும். ஒரு சமயம் தாருகாவனத்து முனிவர்கள் சிவபெருமானை அழிக்க ஒரு பெரிய யாகத்தினைச் செய்தனர். அதில் தோன்றிய யானை, பூதம், அக்னி, புலி, மான் ஆகியவற்றை மந்திரித்துச் சிவனைக் கொன்று வருமாறு அனுப்பினர். சிவபெருமான் யானையை உரித்துப் போர்வையாகவும், புலியை உரித்து ஆடையாகவும் அணிந்து கொண்டார். மானையும், அக்னியையும் கரத்தில் ஆயுதமாக ஏந்தினார். பூதங்களை ஏவலராகவும் கொண்டார். அதனைக் கண்டு மலைத்த அவர்கள் மீண்டும் வேள்வி செய்து அத் தீயினின்று நண்டு, தேள், பூரான், நட்டுவாக்கிளி, முதலான விஷப்பூச்சிகளைப் படைத்துச் சிவனை அழித்து வருமாறு அனுப்பினர். அவை சாரைசாரை யாகப் புறப்பட்டுக் கயிலைமலையை அடைந்தன. கொடிய அசுரர்களுக்குப் பயப்படாதவர்கள் கூட அவற்றைக் கண்டு அஞ்சி அருவருத்து ஓடினர். அவற்றின் மீது எந்தப் படைக்கலத்தையும் செலுத்தவும் ஏவவும் தோன்றாது திகைத்தனர். அதனைக் கண்ட சிவபெருமான் காளிதேவியை நோக்கி அவற்றை அழிக்குமாறு ஆணையிட்டார். அவள் மரக் கால்களை அணிந்து கொண்டு அந்த விஷப்பூச்சிக் கூட்டத்தின் மீது நடனமாடினாள். அவளுடைய வேகமான ஆட்டத்தால் அவையாவும் நசுங்கி மாண்டன. அவற்றின் உடல்கள் கூழ்கூழாகி உருத் தெரியாமல் அழிந்தன.

இதனால் உலக உயிர்கள் பெருத்த மகிழ்ச்சி அடைந்தன. அன்று முதல் காளி ஆடிய மரக்கால் நடனம் அவளுக்கே உரியதாயிற்று. சிலப்பதிகாரத்தில் காளிதேவி ஆடிய மரக்கால் நடனம் பற்றிய குறிப்பு வருகின்றது. கொடியஅசுரர்கள் காளிதேவியைப் போரிட்டு வெல்ல மாட்டாதவர்களாய், வஞ்சனையால் எண்ணி அவளைக்கொல்லப் பாம்பு, தேள் முதலியவற்றை அனுப்பினர். அவைகளை நசுக்கிக் கொல்லுவதற்காக, காளி மரக்கால் தரித்து ஆடினாள் என்பது "காய்சினஅவுணர் கடுந் தொழில் பொருள் மாயவள் ஆடிய மரக்கால் ஆடலும்" என்று குறிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நூலில் தினமும் காளிதேவியின் ஆலயத்தில் அவள் பூசையின்போது சாந்திக்கூத்து கூத்தர்களால் ஆடப்பட்ட செய்தியைக் கூறியிருப் பதைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளிகா தாண்டவம்

சிவபெருமான் அன்பர்கள் மனம் களிக்க நடனமாடுகின்றான். இவ்வகையில் அவர் உமையவள் காண ஆடியது உமா தாண்டவம் என்றும் கௌரி தாண்டவம் என்றும், முனிவர்கள் காண ஆடியது முனி தாண்டவம் என்றும், பெயர் பெற்றது போலவே காளிகாண ஆடியது காளிகா தாண்டவம் என்று பெயர் பெற்றது. இது சண்ட தாண்டவம் என்றும் அழைக்கப்படுகின்றது.

மகா பலசாலிகளான அசுரர்களைக் கொன்றதால் உண்டான கர்வம் காளிதேவிக்கு அதிகமாகி விட்டதென்றும் அது குறையவே சிவபெருமான் அவளுடன் ஆடற்போட்டி நடத்தி அவளை வென்றார் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

இதற்குப் பிறகு அனேக காலங்கள் கழித்து, காளிதேவி சிவபெருமானின் ஆடற்கோலத்தைக் காணவேண்டித் தவம் செய்தாள். பெருமானும் அவளுக்காகத் தாண்டவம் ஆடினார். அது அவள் பெயரால் காளிகாதாண்டவம். என்று அழைக்கப் படுகின்றது. இதனைச் சண்டதாண்டவம் என்றும் கூறுவர்.

இதில் பெருமான் எட்டுக் கரங்கள் கொண்டு அவற்றில் அபயம், உடுக்கை, சூலம், பாசம், கபாலம், தீயகல், மணி, வீசுகர முத்திரை ஆகியவற்றைத் தாங்குகின்றார். மூன்று கண்கள், படர்ந்த சடைகள், வலக்காலை முயலகன் மீது ஊன்றி இடக்காலை விண்ணோக்கி உயர்த்தியுள்ளார். திருவாலங்காட்டில் உள்ள நடராஜர் திருமேனி இத்தகைய அமைப்பைக் கொண்டதாகும்.

திருப்புத்தூர் புராணம் இத்தாண்டவம் படைத்தல் தொழிலைக் குறிக்கிறதென்றும் திருநெல்வேலி தாமிர சபையின்கண் இதனை ஈசன் ஆடினார் என்றும் குறிக்கின்றது.

காளிக்காக ஆடிய காப்பு நடனம்

சென்னையிலிருந்து 50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கூவம் என்ற தலம் திருமுறைகளில் திருவிற்கோலம் என்று குறிக்கப்பட்டுள்ளதாகும். இவ்வூர்த் தலபுராணத்தின் இறுதிப் பகுதியில் தாரகன் வதையும் காளியின் தோற்றமும் விரிவாகப் பாடப் பட்டுள்ளன.

இதில் தாரகன் உற்பத்தி அவனுடைய தவம், அவன் பெற்ற வரம், உயிர்களுக்குத் துன்பம் விளைத்துக் கொடுங்கோல் செலுத்தியது தேவர்கள் சிவபெருமானிடம் முறையிடுதல், சிவபெருமான் காளியைத் தோற்றுவித்தல், காளி பெரும்படையைத் தோற்றுவித்து படை நடத்திச் செல்லுதல். தாருகனுக்கும் காளிக்கும் நடந்த பெரும் போர் காளியின் வீரம்- பின்னர் காளி கர்வம் கொள்ளுதல் – சிவபெருமான் திருவாலங்காட்டில் அவளை ஆடற்போட்டிக்கு அழைத்து வெல்லுதல், தோற்ற அவளுக்குத் தனது காப்புத் திருத்தாண்ட வத்தைத், திருவிற்கோலத்தில் நிகழ்த்திக் காட்டுதல், காளி கூவநகரின் காவல் தெய்வமாக வீற்றிருத்தல் ஆகியன 282 பாடல்களில் விரிவாகக் குறிக்கப் பட்டுள்ளன. இதிலுள்ள காளி தேவியின் உருவ வர்ணனை மிகச் சிறப்புடையதாகும்.

சிவபெருமானுடன் காளி தர்க்கமாடியதால் அவளுக்குத் "தர்க்க மாதா" என்பது பெயராயிற்று. இவர்கள் போட்டி நடனமாடியபோது உயிர்கள் சோர்ந்து வீழ்ந்து வருந்தின. காளி தோற்றபின் சிவ பெருமான் உயிர்களைக் காக்கவும் அவை மகிழ்ச்சி யடையவும் "காப்புத் திருநடனத்தை" நிகழ்த்தினார். இதனை வடமொழியில் "ரட்சாதாண்டவம்" என்று அழைக்கின்றனர்.

கூவம் திரிபுராந்தகேசுவரர் ஆலயத்தில் நடைபெறும் பெருந்திருவிழாவின் பத்தாம் நாளில் காளி சிவபூசை செய்வதும், அவளுக்காகப் பெருமான் காப்பு நடனத்தை நிகழ்த்துவதும் ஐதீகக் காட்சிகளாக நடத்தப்படுகின்றன.

காளிதேவியின் அருளால் அன்பர்கள் சகல செல்வ யோகமிக்க நன்மைகளைப் பெற்று வாழ்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

நித்த மணவாளன் என நின்றாய் போற்றி! நிறைமலர்க் குழலி காதலா போற்றி! போற்றி!!

கலியாண சுந்தரர்

சிவபெருமானின் திருக்கோலங்களில் தனிச்சிறப்புடையது அவருடைய திருமணக் கோல மாகும். இத்திருக்கோலத்தில் விளங்கும் சிவபெரு மானுக்குக் கலியாணசுந்தரர், மணக்கோலநாதர், மண வழகர் என்பன பெயர்களாகும். ஆதியில் சிவபெரு மான் இமயமன்னனின் மகளாகத் தோன்றிய பார்வதிதேவியை உலகமரபுப்படித் திருமணம் செய்து கொண்டார். அதுவே தவசிகளாலும் மாமுனிவர் களாலும் சிறப்புடன் போற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பார்வதிதேவி சிவ பூசை செய்யவும், தவம் செய்யவும் விரும்பி அன் பர்கள் பலருக்குத் திருமகளாக அவதாரம் செய்தாள். அப்படி அவள், மண்மீது தோன்றி வளர்ந்து மங்கைப் பருவம் எய்தியபோது உலகநன்மையின் பொருட்டு மண்மீது வந்து அவளைச் சிவபெருமான் திருமணம் புரிந்து கொண்டார். அந்தத் திருமணங்கள் யாவும் மண்ணக மக்களாலும் விண்ணகத் தேவர்களாலும் தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றன.

சிவபெருமான் உமாதேவியாரைத் திரு மணம் செய்து கொள்வது மண்ணகத்திலுள்ள மக்கள் இல்வாழ்க்கை அனுபவங்களைப் பெறுவதற்கே யாகும். சிவபெருமான் சக்தியோடு இணையாதிருந் தால் உலகில் எல்லோரும் யோகநெறியில் நின்று விடுவர். அதனால் உலகில் வளர்ச்சியும் உண்டாகாது. சிவசக்தி இணைப்பே உலக உற்பத்திக்கு ஆதார மாகும். சிவசக்தி ஐக்கியத்தை உணர்த்துவதாகத் திருமணவிழா அமைகிறது. அதனால் அது தனிச் சிறப்புப் பெறுகின்றது.

சிவமஞ்சரியின் இந்த இருபத்தைந்தாவது மலர் சிவசக்தி இணைப்பாகிய திருமணக்கோலத்தை விளக்குவதாக அமைகின்றது. இதில் உமாதேவிக்கும் சிவபெருமானுக்கும் பலவேறு திருத்தலங்களில் நடைபெற்ற திருமணங்கள், இந்தத் திருமணங்களை விளக்கும் ஐதீகசிற்பங்கள், ஓவியங்கள், தலபுரா ணங்கள், நாட்டுப் புறச் செவிவழிச் செய்திகள்யாவும் இடம் பெற்றுள்ளன.

சிவபார்வதியரின் திருமணத்தைச் சிந்திக் கும் அன்பர்களுக்கும் உலக மக்களுக்கும் இமய வல்லி உடனாய கல்யாணசுந்தரர் அருளால் சகல நலங்களும் நிறைந்த இனிய நல்வாழ்வு அமைய வேண்டுகிறோம்.

– *சிவசுந்தரி.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபார்வதி திருமணக் காட்சிகள்

• மணக்கோலநாதர் – கோனேரிராஜபுரம்

சிவ-பார்வதி திருமணம் என்றதும் அன்பர்களுக்கு உமாதேவியார் இமயமன்னனுக்குத் திருமகளாக அவதரித்து, கடுந்தவம் மேற்கொண்டு சிவபெருமானை மணந்து கொண்ட நிகழ்ச்சியே நினைவுக்கு வரும்.! அக்கதையே சிவமகாபுராணத்தில் விரிவாக இடம் பெற்றுள்ளது. காளிதாசனின் "குமாரசம்பவம்" இதனை விரிவாகக் குறிக்கின்றது. மகாகவிகாளிதாசன் சிவ-பார்வதியரை அமரகாதலர்கள் என்று குறிக்கின்றான்.

இந்த நிகழ்ச்சிக்கு முன்பே அம்பிகை தட்சனுக்கு மகளாகப்பிறந்து "தாட்சாயணி" என்ற பெயரில் வளர்ந்ததையும் அவளைத் தட்சன் முறைப்படி கன்னிகாதானம் செய்து கொடுத்ததையும் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.

தேவி, பாண்டியமன்னனுக்கு மகளாகப் பிறந்து மீனாட்சி என்ற பெயரில் மதுரையில் வளர்ந்ததையும். அங்கு அரசியாக முடிசூடி அந்த நாட்டை ஆண்டதையும், பிறகு கயிலை மலைக்குப் படைநடத்தி, பெருமானைக்கண்டு மணந்து கொண்டதையும் திருவிளையாடற்புராணம் விரிவாகக் கூறுகின்றது.

அவள் மாமன்னர்களுக்கு மட்டுமின்றி, கௌதமர், மதங்கர், அத்திரி, முதலான அனேக முனிவர்களுக்கு மகளாகத் தோன்றி வளர்ந்து சிவபெருமானை மணந்து கொண்டதையும் புராணங்கள் குறிக்கின்றன. இவர்களுக்கு மகளாகப் பிறந்ததால் கௌதமி, மாதங்கி, அத்திரிசுதா என்பன அவளின் பெயர்களாயின.

புராணகாலத்திற்குப் பின்னர் தோன்றிய காத்யாயனர், பரதர் முதலிய முனிவர்களுக்கு அம்பிகை மகளாகத்தோன்றி வளர்ந்து சிவபெருமானை மணந்து கொண்டதையும் காண்கிறோம்.

இப்படி எண்ணற்றமுறை பார்வதி, அன்பர்கள் மீது கொண்ட அன்பினாலும் சிவபூசை தவம் ஆகியவற்றைச் செய்யும் விருப்பத்தினாலும் இம்மண்மீது தோன்றினாள். ஒவ்வொருமுறையும் பெருமான் அவளைத்தேடிவந்து திருமணம் செய்து கொண்டான். இந்த நிகழ்ச்சி எல்லோர் மனதிலும் நிறைவாகப் பதிந்து விட்டது. ஆதலின் சில பெருமான் அம்பிகையின் திருமண நிகழ்ச்சியை விரிவாகக் கேட்பதிலும் நாடகமாகப் பார்ப்பதிலும் விழாவாக நடத்தி மகிழ்வதிலும் இன்பம் கண்டனர். இதனையொட்டி அனேக தலங்களில் சிவ-பார்வதி திருமணம் ஆண்டுக்கு ஒரு முறையேனும் நடத்தப் பெற்றது. தமிழகமக்கள் பார்வதியைத் தங்கள் மகளாகவும் குலக்கொடியாகவும் எண்ணினர். அதனால் அவளுக்கு ஆண்டுக்கு ஒருமுறை திருமணச்சீர்செய்து மகிழ்கின்றனர்.

சிவமஞ்சரியின் ஏழாவது மலரில் பார்வதி திருமணம் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. இனி வரும் மலரில் மீனாட்சிகல்யாணம் விரிவாக இடம் பெற உள்ளது. ஆகவே, அவற்றைவிடுத்துச் சிவபெருமான் மாப்பிள்ளை சாமியாகக் கொண்டாடப்படும் சோழமண்டலத்துத் தலங்களில் குறிப்பிடத்தக்கதான திருத்துருத்தி, திருவீழிமிழலை ஆகியவற்றில் பார்வதி பிறந்து வளர்ந்து பரமனை மணந்த கதை இங்கே கூறப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்துருத்தி திருமணஞ்சேரி அழகிய மணவாளன்

சிவ-பார்வதி திருமணம் என்றதும் சைவ அன்பர்களுக்குத் "திருமணஞ்சேரி" என்ற திருத்தலமே நினைவுக்கு வருகின்றது. இது மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியிலுள்ள ஆடுதுறைக்கு அருகில் உள்ளதாகும்.

இதனையொட்டி அமைந்துள்ள திருவழுந்தூர், மாந்துறை, திருவாவடுதுறை, வேள்விக்குடி, குத்தாலம் (என்னும் துருத்தி) மேலைத் திருமணஞ்சேரி முதலிய தலங்கள் யாவும் சிவ-பார்வதி திருமணத்தோடு தொடர்பு கொண்டவைகளாக உள்ளன. இவற்றிலும் இவற்றைச் சுற்றியுள்ள திருத்தலங்கள் சிலவற்றிலும் கல்யாணசுந்தரராகச் சிவபெருமான் சிறப்புடன் வழிபடப்படுகின்றார். இத்தலங்களின் சிறப்புகள் நாட்டுபுற வழக்கில் வரிசைப்படுத்தி கூறப்பட்டுள்ளன. அவற்றுள் முதன்மை பெற்றது குத்தாலம் ஆகும். இந்த குத்தாலத்தில் நடைபெற்ற உமாதேவியின் திருமணம் தலபுராணமான திருத்துருத்தி புராணத்தில் சிறப்புடன் கூறப்பட்டுள்ளது. அதனையும் அதனோடு தொடர்புடைய தலங்களின் சிறப்புகளையும் அறிந்து மகிழலாம். (குத்தாலம் என்பது இந்நாளைய பெயராகும். இதன் பழைய பெயர் துருத்தி என்பதாகும். மேலும் இக்குத்தாலம் என்பது தென்பாண்டி நாட்டிலுள்ள குற்றாலம் என்ற சிவத்தலத்திலிருந்து வேறாகும்.

ஒரு காலத்தில் கயிலையங்கிரியில் சிவனும் பார்வதியும் உயர்ந்த ஆசனத்தின் மீது அமர்ந்திருந்தனர். தேவர்களும் முனிவர்களும் அவர்களைப் போற்றி மகிழ்ந்திருந்தனர். அப்போது அம்பிகை சிவபெருமானிடம், "அன்பரே, உலகஉயிர்கள் உய்யும் பொருட்டு நான் பூவுலகில் பிறந்து தவம் செய்ய விரும்புகிறேன்" என்றாள். சிவபெருமான் அதற்குப் பதிலேதும் கூறாது மௌனமாக இருந்தார்.

இதனால் கோபம் கொண்ட அம்பிகை அவ்விடத்தை விட்டு நீங்கினாள். சிவபெருமான் அவளைப் பசுவாக இருக்கும்படிக் கூறினார். அதன்படியே அம்பிகை, பசுவாக மாறினாள். லட்சுமி, சரஸ்வதி முதலிய தெய்வப்பெண்களும் அரம்பையர்களும் பசுவடிவம் கொண்டு அவளுக்குத் துணையாக வந்தனர். அவர்கள் திருஅழுந்தூர் என்றழைக்கப்படும் தேரழுந்தூருக்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் மீது அன்பு கொண்ட திருமால், மாடுமேய்ப்பவனாக வடிவம் கொண்டு அவர்களைப் பாதுகாத்து வந்தார். (அப்படிவந்த திருமால் தங்கியிருந்த இடமே இந்நாளில் கோமல் என்று வழங்குகின்றது).

நாட்கள் நகர்ந்தன. ஒரு சமயம் கோழம்பத்தைச் சேர்ந்த அரசவனத்தில் பசுவடிவம் கொண்ட தேவி ஒருபுற்றைக் கிளறினாள். அப்போது அதனுள் இருந்த சிவலிங்கத்தின் மீது அவளுடைய கொம்பும் குளம்பும் பட்டன. அவை வடுவாகச் சிவலிங்கத்தின் மேனியில் பதிந்தன. அவற்றைப் பெருமான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். பிறகு அவளைத் திருவாவடுதுறைக்குச் சென்று வழிபடும்படிக் கூறினார். அதன்படியே பசுவடிவத்துடன் தேவி



• கல்யாண சுந்தரர் - திருமணஞ்சேரி

திருவாவடுதுறைக்கு வந்து படர் அரசின் கீழே விளங்கும் சிவலிங்கத்தை வழிபட்டு வந்தாள்.

அவளுடைய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவளுக்கு அருள்புரிந்து பழைய இறைவடிவை அளித்தார். அம்பிகையின் "கோ" வடிவம் கழிந்த இடமாதலின் திருவாவடுதுறைக்குக் "கோகழி" என்பது பெயராயிற்று. அம்பிகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவவடிவு பெற்றதும் சிவபெருமானிடம், "ஐயனே, நான் மேலும் சிலகாலம் இங்கேயே தங்கிச் சிவாகம முறைப்படி பூசை செய்ய விரும்பு கின்றேன்", என்று கூறினாள். அவர் அப்படியே ஆகட்டும் என்றார். அதன்படி சிலகாலம் அம்பிகை சிவபூசைசெய்து மகிழ்ந்தாள். அவளுக்குச் சிவபெருமானை உலகறிய மணந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் உண்டா யிற்று.

அதையறிந்த சிவபெருமான் அவள் முன்னே தோன்றி, "குத்தாலம் என்னுமிடத்தில் நமது அன்பன் பரதமகரிஷியும் அவர் மனைவியும் பிள்ளைவரம் வேண்டித் தவம் புரிகின்றனர். நீ அவர்களுக்கு மகளாகத் தோன்றுக. உரிய நாளில் உலகறிய உன்னை மணப்போம்" என்று கூறினார்.

அதன்படியே பரதமகரிஷி செய்யும் யாகத் தீயில் பார்வதிதேவி ஒரு குழந்தையாகத் தோன்றி னாள். முனிவரும் அவருடைய மனைவி சுபத்தி ரையும் மிக்கமகிழ்ச்சியுடன் அக்குழந்தையைச் சீராட்டி வளர்த்தனர். அவள் மங்கைப் பருவம் எய்தினாள். முனிவரும் அவர் மனைவியும் அவளுக்கு உரிய மணமகனைத் தேடினர்.

பார்வதிதேவி சிவபெருமானைத் துதித் தாள். சிவபெருமான் அவள் முன்னே தோன்றி "நாமே விதித்த விதியின்படி நடந்து உன்னை மணங் கொள்ளுவோம்" என்ற உறுதியளித்தார்.

பிறகு கயிலைமலையை அடைந்து "நந்திதேவரிடம், உலகியல் வழக்கப்படி மணமகன் வீட்டார் மணமகள் வீட்டிற்குச் சென்று பெண் கேட்க வேண்டும். ஆதலின் நீ சென்று பரதமுனிவரின் கருத்தை அறிந்து பெண் கேட்டுவா," என்று அனுப் பினார்.

நந்தி, சிவபெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு பரதமுனிவரின் இல்லத்தை அடைந்தார். அங்கு அவரை முனிவரும் மனைவியும் சிறப்புடன் வரவேற்றனர். நந்தியம்பெருமான் அவர்களிடம், சிவபெருமானின் கருத்தைக்கூறிப் பெண்கேட்டார். முனிவரும் அவர் மனைவியும் மகிழ்ச்சியுடன் வணங்கித் தங்கள் பெண்ணைத் தருவதாகக் கூறினர். பின்னர் சுபத்திரை, நந்திதேவரிடம், "ஐயனே சிவபெருமான் இங்கு வரும்போது தலைமாலை, பஞ்சவடம், அஞ்சத்தக்க சூலம், மண்டையோடு இவற்றை விலக்கிப் பொன்னாபரணங்களை பூண்டு வைரக்கிரீடம் தரித்து அழகெல்லாம் திரண்டதோர் வடிவமாக வரவேண்டும்", என்று விண்ணப்பம் செய்தாள். நந்தியும் "அப்படியே ஆகும்" என்று கூறி அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டார்.

கயிலைக்கு மீண்ட நந்தியெம்பெருமான், சிவபெருமானிடம் முனிவரின் ஒப்புதலைத் தெரி வித்தார். சிவபெருமான் திருமணத்திற்கான ஏற்பாடு களைச் செய்யுமாறு ஆணையிட்டார்.

நந்தியும் அவருடைய ஆணையைச் சிரமேற்கொண்டு சிவகணங்களை அனுப்பிச் சிவபார்வதி திருமணச்செய்தியைப் புவனமெங்கும் அறிவித்தார். அதைக் கேட்டு அனைவரும் மகிழ்ந் தனர்.

காலாக்கினிருத்திரர், கூர்மாண்டர், ஆடகர், அண்டத்து உச்சியில் வசிப்பவர்கள், பதினோரு உருத்திரர்களுடன் அவர்களால் உண்டாக்கப்பட்ட கோடிக்கணக்கான உருத்திரர்கள், அறங்காக்கும் வைரவர்கள், சக்கரப்படையேந்திய-நாரணர்கள், நூறு கோடி பிரமர்கள், அக்கினி முதலிய அறுவர், கிம் புருடர், சித்தர்கள், வித்யாதரர்கள் உரகர், கருடர், பன்னிரண்டு ஆதித்தியர்கள், சந்திரர்கள், அட்ட திக்குப் பாலர்கள் முதலிய அனைவரும் கயிலை மலையில் கூடினர்.

எட்டு மலைக்கு அதிபர்கள், அட்டமா நாகங்கள், அட்டதிக்குயானைகள் யாவரும் கூடினர், யுகம், வருடம், மாதம், பட்சம், திதி, நாழிகை நிமிடம் ஆகியவற்றின் அதிதேவதைகளும், நதிகள், கடல் கள் தீவுகள், புவனங்கள் ஆகியவற்றின் அதி தேவர் களும் அங்குக் கூடினர்.

அவர்கள் எல்லோருக்கும் சிவபெருமான் திருவருள்புரிந்தார்.பிறகு அனைவரையும் திருமணத் திற்கு வருமாறு ஆணையிட்டார்.

சுபத்திரையின் மனம் மகிழச் சிவபெரு மான் .இமயமலைச் சாரலில் உள்ள பொய்கையில் மூழ்கி எழுந்தார். எழும்போது அவருடைய சடை முடிரத்தினக்கிரீடமாக மாறிப் பிரகாசித்தது. பாம்புகள் வைரவைடூர்ய ஆபரணங்களாயின. அவர் கோடி சூர்யப் பிரகாசத்துடன் எழுந்தார். அவருக்கு சிலர் ஒற்றாடை சாத்தி நீரை உலர்த்தினர். அவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஏந்திநின்ற பொன்வட்டிகையிலிருந்து திருநீற்றை எடுத்து அணிந்து கொண்டார். பொன்மண்டபத்துள் புகுந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமர்ந்தார். திருமால் மணக்கோலம் செய்யும் பொருட்டுப் பொன்னாலாகிய பூணூலையும் பொன்னாடைகளையும் அணிவித்துக் கலவைச் சந்தனத்தைப் பூசினார். நெற்றிப்பட்டம், வைரக் காதணி, உதரபந்தனம், மாணிக்கத்தாலான வாகுவ லையம் முத்துமாலை, மதாணி, உத்திரீயம், மணி பதித்த கணையாழிகள் ஆகியவற்றை அணிவித்து அழகுக்கு அழகுபடுத்தினார். பிறகு சிவபெருமானை மண்டபத்திலிருந்து அழைத்து வந்து நிறை ந்த அழகுடன் நின்ற இடபவாகனத்தில் ஏற்றினார்.

நான்கு திசைகளில் இருந்து முனிவர்களும், தேவர்களும் சித்தர்களும் வாழ்த்தொலி எழுப்பினர். வேதங்கள் முழங்கின. சிவபெருமான் விநாயகரை அழைத்து ஊர்வலத்திற்கு முன்னே செல்லும்படிக் கூறினார். அவரை வணங்கி விநாயகர் தனது பெருச்சாளி வாகனத்தில் ஏறிப் பூதவெள்ளம் புடை சூழ முன்னே சென்றார்.

சிவபெருமான் கயிலைமலைச் சாரலில் தவம்செய்து களித்திருந்த ஒரு உத்தால மரத்தை நோக்கி, "அன்பனே, நாம் உமாதேவியை மணம் செய்து கொள்ளப் பூவுலகம் செல்லுகின்றோம். நீ நமக்கு நிழல் தந்தவாறு பின்னே வருக", என்றார்.

ஊர்வலம் தொடங்கியது. முரசு, பம்பை, கல்லவடம் முதலான ஏழுகோடி வாத்தியங்கள் முழங்கின. திருச்சின்னம் ஒலித்தது. முனிவர்கள் வாழ்த்துக் கூற, மாகதர்கள், வீரப்புகழ் பாட, சூதர்கள் புகழ்பாட, வேதம் வல்லோர் வேதம் ஓத, புலவர்கள் செந்தமிழால் வாழ்த்தொலிப்ப, ஊர்வலம் சென்றது. ஊர்வலத்திற்கு முன்னே பொற்பிரம்பும் சிவனாரின் செங்கோலும் எடுத்துச் செல்லப்பட்டன. மத்தளமும், புல்லாங்குழலும் ஒலிக்க அரம்பையர்கள் ஆடிய வாறே முன்னே வந்தனர். கவரிகளும் ஆலவட்டங் களும் வீசப்பட்டன. மகரதோரணங்கள், கொடிகள், விதானங்கள் ஆகியவற்றைத் தாங்கியவாறு நடந் தனர். எல்லோருக்கும் முன்னே ஐராவணம் எனும் வெள்ளையானை நடந்துவந்தது.

ஊர்வலம் சிறப்புடன் காவிரிக் கரையில் இருக்கும் "துருத்தி" ஆலயத்தை அடைந்தது. சிவபெருமான் அந்த ஆலயத்தின் இடப்பாகத்தில் உத்தாலமரத்தை நிற்கும்படிப் பணிந்தார். அதன்கீழ் வேதங்கள் "அழகிய பாதுகைவடிவம்" தாங்கி நின்றன. பெருமான் அதன் மீது நின்றார். அங்கு



• திருமணக்கோலநாதர் – வேள்விக்குடி

உத்தாலமரத்தை நோக்கி என்றும் இங்கேயே நிலையாகத் தங்கியிருப்பாய் என்று ஆணையிட் டார்.

பிறகு நந்தியைநோக்கி, "நமது வரவை பரதமுனிவனிடமும் சுபத்திரையிடம் கூறி நாளை திருமணம்புரிய வருகிறோம் என்பதை அறிவியும்" என்றார். அதன்படியே நந்தி தேவர் அவர்களிடம் சிவபெருமான் வந்துள்ள செய்தியைக் கூறினார். அதைக்கேட்டு அவர்கள் அனைவரும் மனம் மகிழ்ந்தனர்.

திருமணம் உறுதியானதும் இந்திரன் தேவர் களைச் அழைத்து மணிமண்டபம் திருமண மண்டபம், காவணம் முதலியவற்றை அமைத்தான்.

முனிவரும், அவர் மனைவியும் முளைப் பாலிகை முதலியவற்றை அமைத்து திருமண ஏற் பாடுகளைச் செய்தனர்.

பொழுது புலர்ந்தது. இந்திரன், திருமால் முதலியோர் சிவபெருமானிடம் "திருமணத்திற்கு உரியவேளை வந்துவிட்டது. முனிவரின் மனைக்கு எழுந்தருளலாம்" என்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் எழுந்தருள அவர்கள் ஊர்வலமாக முனிவனின் மனையை அடைந்தனர். முனிவர் மனைவியுடனும் சுற்றத்தாருடனும் மறை யொலிக்கப் பூரண பொற்கும்பங்களை ஏந்தி மங்கல மடந்தையர் சூழ அவர்களை வரவேற்றார். பிறகு அவர்களை வணங்கி ஊர்வலமாக மணப் பந்தலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு மண வறையில் இருந்த மேடையில் சிவபெருமானை அமர்த்தி அனைவரும் அவரைப் பூசித்தனர்.

அம்பிகையைத் திருமகள், கலைமகள் முதலான பெண்கள் கூடி மங்கல நீராட்டிப் பட்டா டைகளை அணிவித்து அணிமணிகளைச் அணி வித்தனர். அவளுக்கு "நறுஞ்சாந்து இளமுலையாள்" என்று பெயர் சூட்டினர். அவளை மாணிக்கத்தவி சில் அமர்த்திக் காப்புநாண் சாத்தினர். பிறகு, மங்க லம் முழங்க அவளை அழைத்து வந்து மணவறை யில் வீற்றிருக்கும் சிவபெருமானின் வலப் பக்கத்தில் அமர்த்தினர்.

பரதன் தன் மனைவியுடன் அங்கு வந்து பார்வதியின் கரத்தைச் சிவபெருமானின் கரத்தின் மீது வைத்து "இவளை உமக்குத் தந்தேன் ஏற்றருள்க" என்று கூறித் தாரைவார்த்துத் கன்னிகாதானம் செய்தார். பிறகு வேதஒலி முழங்கச் சிவபெருமான் பார்வதியின் திருக்கழுத்தில் மங்கலநாணாகிய தாலியை அணிவித்தார்,

பிறகு பிரமதேவன் அழல்வளர்த்துத் திருமண வேள்வியைச் செய்தான். அதில் நெற்பொறிகளைத் தூவி அம்பிகையும் சிவபெருமானும் பொரியட்டல் எனப்படும் லாஜஹோமத்தைச் செய்தனர். பிறகு தேவர்கள் அனைவரும் கூடி அவர்களுக்கு மதுபர் க்கம் அளித்தனர். சிவபெருமான் அதைத் தொட்டு உவந்தேன் என்றார். பிறகு அம்பிகையின் கையைப் பற்றிக் கொண்டு மணவறையை வலம் வந்தார்.

சிவபெருமான் அம்பிகையின் காலைப் பற்றி அம்மியின் மீது வைத்து அருந்தியைக் காட்டி னார். பிறகு மணமக்கள் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து அனைவருக்கும் அருள்புரிந்தனர்.

பிறகு பிரமன், திருமால் முதலியோர் அவர் களிடம் திருமணக் கோலத்துடன் ஊர்வலம் வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். சிவபெரு மானும் பெருமாட்டியும் அப்படியே ஆகட்டும் என்று ஒப்புதல் அளித்தனர். அனைவரும் ஐராவணத்தை அலங்கரித்து அதன்மீது அவர்களை அமர்த்தி உலாவரச்செய்து மகிழ்ந்தனர்.

உலாமுடிந்ததும் அவர்கள் முனிவரின் இல்லத்திற்குத் திரும்பினர். பெரும்பேறு பெற்றவர் களான முனிவரும் அவர் துணைவியும் வணங்கி வரவேற்றனர். அப்போது முனிவரின் துணைவி யாகிய சுபத்திரை, "பெருமானே இந்த இல்லம் கோயிலாக வேண்டும். நீங்கள் இங்கே திருமணக் கோலத்துடன் எப்போதும் எழுந்தருளியிருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். பெரு மானும், "அப்படியே ஆகட்டும்" என்றார்.

அங்கு சிவனருளாள் திருக்கோயிலும் குளமும் உண்டாயிற்று. பார்வதியும் சிவபெருமானும் அந்தக்குளத்தில் மூழ்கி எழுந்தனர். அந்தமுழுக்கு விரதமுழுக்கு என்று அழைக்கப்பட்டது. பிறகு அவர்கள் யாவரும்காண, பெருமான் தேவியுடன் திருத்துருத்தி ஆலயத்துள் புகுந்து மறைந்தருளி னார். அன்றுமுதல் திருத்துருத்தி திருமணஞ்சேரி முதலியதலங்கள் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகின்றன.

அம்பிகை யாகத்தில் தோன்றியதும், முடிவில் அவளைச் சிவபெருமான் மணந்து சிவ லிங்கத்துள் மறைந்ததும் ஆகிய நிகழ்ச்சிகள் நடந்த இடம் இந்நாளில் குத்தாலம் என்ற தலமாக விளங் குகிறது. அம்பிகைக்கு மணநீராட்டு செய்து கங் கணம் அணிவித்தது மணவேள்வி செய்த இடம் வேள்விக் குடி என்று அழைக்கப்படுகின்றது. தேவர் கள் சிவபெருமானை எதிர்கொண்டு அழைத்த இடம் எதிர் கொள்பாடி எனவும், திருமணம் நடந்து தேவர் களுக்கு அருள்புரிந்த இடம் திருமணஞ்சேரி என வும் அழைக்கப்படுகிறது என்பர். திருமணஞ்சேரி யில் நல்ல திருமணம் அமைய கல்யாணப் பிரார்த்த னைகள் அன்பர்கர்களால் செய்யப்பட்டுவருகின்றது.

பாதுகைகள்

திருமணத்தின் போது மணமகனுக்குப் பாதுகை குடை, விசிறி ஆகியவற்றைக் கொடுப்பது வழக்கமாகும். சிவபெருமானுக்கு வேதங்களே பாதுகைகளாக விளங்கு கின்றன. குத்தாலத்தில் சிவபெருமான், திருமணத்தின்போது அணிந்த பாதுகைகளை நினைவுகூறும் வகையில் குத்தாலமரத்தின் கீழ் பாதுகைகள் அமைக்கப்பட்டுள்ளன. திருஒற்றியூரிலும் மகிழமரத்தடியில் இறைவனின் பாது கைகளைக் காண்கிறோம். திருவாரூரில் அமைந்துள்ள கல்யாண சுந்தரர் பாதுகைகளை அணிந்திருப்பதைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்யாணசுந்தரர் திருத்தலங்கள்

குத்தாலம், வேள்விக்குடி, எதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி ஆகிய நான்கு தலங்களும் காவிரிக்கரையில் அருகருகே அமைந்துள்ளன. இவையாவற்றையும் ஒரு சேர தரிசிப்பது புண்ணியம் என நம்புகின்றனர். இந்த நான்கு தலங்களும் சிவபார்வதி திருமணத்தோடு தொடர்புடையன ஆதலின் கல்யாணத்தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றில் சிவபெருமான் கல்யாண சுந்தரராக எழுந்தருளியுள்ளார். இவற்றைப் பற்றிய சிறு குறிப்புக்களை இக்கட்டுரை தெரிவிக்கின்றது.

குத்தாலம் (திருத்துருத்தி)

பார்வதிதேவி பரதமுனிவருக்கு மகளாகத் தோன்றி வளர்ந்த இடம் திருத்துருத்தி என்பதாகும். தேவாரத்துள் துருத்தி என்றழைக்கப்படும் இத்தலம் இந்நாளில் "குத்தாலம்" என்று வழங்குகின்றது. இது மயிலாடுதுறையிலிருந்து-கும்பகோணம் செல்லும் சாலையில் அமைந்துள்ள ஊராகும். ஊரின் வடக்கில் காவிரியாற்றின் தென்கரையில் மேற்கு நோக்கிய வாறு திருக்கோயில் அமைந்துள்ளது.

மேற்கு நோக்கிய ராஜகோபுரத்தைக் கடந்து பெரிய முற்றத்தை அடைகின்றோம். இதில் பெரிய மேடைமீது தழைத்து வளர்ந்துள்ள உத்தாலமரம் உள்ளது. இத்தகைய மரம் வேறு எங்கும் இல்லை என்று கூறுகின்றனர். இது பூக்கும்; ஆனால் காய்க் காது. கயிலாயத்தில் இருந்த இந்த மரம் சிவபெரு மான் உமையைத் திருமணம் செய்து கொள்ள இங்கு வந்தபோது அவருடன் அவருக்கு நிழல் தந்தவாறே உடன் வந்தது. இறைவன் ஆணையால் இங்கேயே நிலைபெற்றுள்ளது. திருமணம் நிறைவுபெற்றதும் சிவபெருமான் இதன்கீழ்நின்று அன்பர்களுக்கு அருள்பாலித்ததுடன் தனது திருவடிகளை இங் கேயே விட்டுவிட்டுச் சென்றார். அதனை நினைவு கூறும் வகையில் ஒருமலர்ப் பீடத்தில் பாதுகைகள் அமைக்கப்பட்டுள்ளன. செப்பினால் அமைக்கப் பட்டுள்ள இந்தப் பாதுகைகள், கலையெழில்மிக்க தாக விளங்குகின்றன.

இந்த மேடைக்கு வடக்கில் தெற்கு நோக் கியவாறு அம்பிகை சந்நிதி உள்ளது. அம்பிகையின் பெயர் "அரும்பன்ன வனமுலையாள்" என்பதாகும். இவள் நான்கு கரங்களுடன் தெற்கு நோக்கியவாறு காட்சியளிக்கின்றாள்.

இந்த முற்றத்தையும், உள்வாயிலையும் கடந்து உட்பிரகாரத்தை வலம் வருகின்றோம். கரு வறை வடக்குச் சுவரின் மேலும் கிழக்குச் சுவரின்

மேலும் தலபுராணத்தை விளக்கும் வகையில் புராணக்காட்சிகள் பெரிய சுதைச்சிற்பங்களாகச் செய்யப்பட்டுள்ளன. முதல்காட்சியில் பரதமுனிவர் வேள்விகுண்டத்தில் வேள்வி செய்கின்றார். இரண்டாவதில் குழந்தைவடிவில் தோன்றிய அம்பிகையைச் சுபத்திரை தன்மடி மீது அமர்த்திக் கொண்டுச் சீராட்டுகின்றாள். மூன்றாவதில் மங்கைப் பருவம் எய்திய அம்பிகை, சிவபூசை செய்கின் றாள். இதனையடுத்துக் கிழக்குப்பகுதியில் திருமணக் கோலம் முழுவதுமாக அமைக்கப்பட்டுள்ளது. சிவ பெருமான் அம்பிகையின் திருக்கரத்தைப் பற்றி யுள்ளார். முனிவர் நீர்க்கரகத்தைத் தாங்கிக் கன்னி காதானம் செய்யும் கோலத்தில் உள்ளார். அவருக் குப் பின்னே திருமால் இந்திரன், முதலிய தேவர்கள் நிற்கின்றனர். அம்பிகைக்கு அருகில் லட்சுமி, முனிவரின் மனைவி, சரஸ்வதி, இந்திராணி, ஊர்வசி ஆகியோர் உள்ளனர். கண்கவர் வனப்புடையதாக இக்கோலம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருவறையில் சிவபெருமான் "சொன்ன வாறு அறிவார்" என்ற பெயரில் எழுந்தருளியுள்ளார். இப்பெயரை வடமொழிப்படுத்தி உக்தவேதீசுரர் என்று வழங்குகின்றனர். தைமாதம் திருக்கல்யாண விழா சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது.

திருவேள்விக்குடி

குத்தாலத்தின் நேர் வடக்கில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ள தலம் திருவேள்விக் குடியாகும். ஊரின் வடக்கில் தனித்து, கிழக்கு நோக்கி யவாறு வேள்விக்குடி ஆலயம் உள்ளது. ஆலயத் தின் முன்புறம் அழகிய குளம் உள்ளது.

திருவாயிலைக் கடந்ததும் பெரிய முற்றத்தை அடைகின்றோம். இதன் வடக்கில் தெற்கு நோக்கிவாறு அம்பிகை எழுந்தருளியுள்ளாள். அம்பி கையின் பெயர் நறுஞ்சாந்து இளமுலை நாயகி (பரிமளசுகந்தநாயகி) என்பதாகும். அவளை வணங்கி யதும் கருவறையில் வீற்றிருக்கும் மணவாளேசுவரப் பெருமானைக் கண்டுதொழுகின்றோம். இவரை வலம் வரும்போது தெற்கே விநாயகர் கோட்டத்தின் மீது அமைந்துள்ள மகரதோரணத்தைக் காண்கி றோம். இதில் மிக நுண்மையாகச் சிவபார்வதியரின் திருக்கல்யாணகோலம் செதுக்கப்பட்டுள்ளது.

இதைத் தரிசித்தபின் கருவறைக்கு இணை யாகத் தெற்கில் அமைந்துள்ள சபையைக் காண் கிறோம். திருவாரூரில் தியாகேசரும், திருப்புகலூரில் சந்திரசேகரரும் கருவறைக்கு இணையாக எழுந்தரு ளியிருப்பது போலவே இங்கே கல்யாணசுந்தரர் எழுந்தருளியுள்ளார். (பாதுகாப்பு கருதி இத்திரு வுருவம் வேறிடத்தில் வைக்கப்பட்டுள்ளது) இந்த அமைப்பு வேறெங்கும் இல்லை. இப்போது அன்பர்கள்கூடி, கல்யாணசுந்தரரின் சிறிய திருவுரு வம் ஒன்றைச் செய்து வைத்துள்ளனர்.

பரதமுனிவரின் இல்லம் இருந்த இடம் குத்தாலம் என்றும் வேள்விச் சாலை இருந்த இடம் வேள்விக்குடி எனவும் வழங்கப்படுகின்றது. இந்த வேள்விச் சாலையில் இருந்தே அம்பிகை அவதாரம் செய்தாள்என்று நம்புகின்றனர். அவளுடைய திரு மணவேள்வி நடைபெற்ற இடமும் இதுவேயாகும். அம்பிகைக்குத் திருமண நீராட்டு நடைபெற்றதுடன் திருமணம் நன்கு நடைபெற கங்கணம் அணிவிக்கப் பெற்ற இடமும் இதுவேயாகும். இதனால் அம்பிகை கௌதுகேசி என்றும் தலத்திற்குக் கௌதுகா பந்தனத் தலம் என்றும் பெயர் வழங்குவதாயிற்று.

எதிர்கொள்பாடி

இந்நாளில் புகழ்பெற்று விளங்கும் திருமணஞ்சேரிக்கு மேற்குப் பகுதியாக விளங்குவது எதிர்கொள்பாடியாகும் இதனை மேலைத் திருமணஞ் சேரி எனவும் அழைப்பர். இது திருமணத்திற்கு வந்த இறைவன் சிறு ஓய்வுக்கு வீற்றிருந்த இடம் என்பர். இங்கு தேவர்கள் அவரை எதிர்கொண்டு அழைத்ததால் இதற்கு எதிர்கொள்பாடி என்பது பெயராயிற்று. இதனையொட்டி திருமணஞ்சேரியில் நடைபெறும் திருமணவிழாவின்போது, சிவபெரு மானை இத்தலத்திற்கு எழுந்தருளி வைத்து அபிஷேக ஆராதனை செய்தபின் ஊர்வலமாக திருமணஞ்சேரிக்கு அழைத்துச் செல்கின்றனர். இறை வனை ஐராவதம் பூசித்ததால் ஐராவதேசுவரர் என்றும் மதயானைஈசுவரர் என்றும் அழைக்கின் றனர் அம்பிகையின் பெயர் நறுமலர்க்குழல் மாது (சுகந்தகுந்தளாம்பிகை) என்பதாகும். மேற்கு நோக்கிய இந்த ஆலயம் நன்னிலையில் உள்ளது

திருமணஞ்சேரி

(எதிர்கொள்பாடியை) அடுத்துள்ள தலம் திருமணஞ்சேரியாகும். இதற்கு மயிலாடுதுறை, கும்ப கோணம் முதலிய தலங்களிலிருந்து பேருந்து வசதி யுள்ளது.

கிழக்கு நோக்கிவாறு அமைத்துள்ள ஆலயத்தில் சிவலிங்கமூர்த்தியாக (மணவாள) நாத சுவாமி (உத்வாகநாதர்) என்ற பெயரில் எழுந்த ருளியுள்ளார். மகாமண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு அமைந்த சந்நிதியில் அம்பிகை கோகிலாம்பிகை எனும் பெயரில் எழுந்தருளி யுள்ளாள். அம்பிகை மணப்பெண்ணாக அமர்ந்த நிலையில் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்களை வணங்கி வலம்வரும்போது பிராகாரத்தின் தென்மேற்கு முனையில் அமைந் துள்ள மண்டபத்தில் புகழ்பெற்ற கல்யாணசுந்தர மூர்த்தியைக் கண்டு வணங்குகின்றோம்.

இங்கு ஏராளமான மக்கள் நல்ல திருமணம் நடைபெறவும் சுகமான வாழ்வு அமையவும் திரு மணப்பிரார்த்தனையை மேற்கொள்ளுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவீழிமிழலை மாப்பிள்ளை சுவாமி

•மாப்பிள்ளைசாமி – திருவீழிமிழலை

உமையும் சிவபெருமானும் திருமணக் கோலத்தில் பலதலங்களில் வீற்றிருந்தாலும், அங்கு அவர்கள் மூலமூர்த்தியாகவோ (அ) உற்சவமூர்த்தி யாகவோ மட்டுமே விளங்குகின்றனர். அப்படியில் லாமல் மூலமூர்த்தியாகவும் உற்சவ மூர்த்தியாகவும் திருமணக்கோலத்தில் விளங்கும் ஒரே திருத்தலம் திருவீழிமிழலையாகும். அப்பர் சுவாமிகள் இப்பெரு மானை "நித்தம் மணவாளன் என நிற்கின்றான்காண்" என்று பாடிப்பரவுகின்றார்.

திருமணத்தின்போது, மணமேடையிலுள்ள வழிபடு பொருட்களில் ஒன்றாக இருப்பது "அரசா ணைக்கால்"ஆகும். இங்குக் கர்பக்கிரகத்தின் வாயி லில் அரசாணைக்கால் அமைந்திருப்பதைக் காண்கிறோம். இது வேறு எந்தத் தலத்திலும் இல்லாத தாகும். இங்கு மகாமண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கி அமைந்துள்ள கல்யாண சபையில் சிவ பெருமான் மாப்பிள்ளைசாமி என்ற பெயரில் எழுந்த ருளியுள்ளார். இப்படிச் சபாமூர்த்தியாகக் கல்யாண சுந்தரர் இருப்பதும் இங்குமட்டுமேயாகும். இத்தகைய பல்வேறு சிறப்புக்களை கொண்ட திருவீழிமிழலை யில் சிவபெருமான் மணக்கோலநாதராக விளங்கும் வரலாற்றைத் தொடர்ந்து கண்டு மகிழலாம் :-

ஒருகாலத்தில் திருவீழிமிழலையில் காத்தி யாயனர் என்ற முனிவரும் அவருடைய மனைவி யான சுமங்கலையும் தவச்சாலை அமைத்து வசித்து வந்தனர். அவர்கள் தினமும் அதிகாலையில் நீராடி வீழிநாதரையும், அழகியமாமுலை அம்பிகையை யும் வழிபட்டு வந்தனர்.

அவர்களுக்கு நெடுநாட்களாகப் புத்திரப் பேறு வாய்க்காததால் அதற்கான பூசைகளையும் வேள்விகளையும் செய்யத் தொடங்கினர்.ஒருநாள் அவர்கள் வேள்வி செய்யும் போது, யாகத்தீயின் மத்தியில் அம்பிகை அன்னபூரணியாகத் தோன்றி, அவர்களுக்குக் காட்சியளித்தாள். அப்போது அவளுடைய வலது கரத்தில் அகப்பையும் இடது கரத்தில் அன்ன பாத்திரமும் பிரகாசித்தன.

முனிவரும் அவர் மனைவியும் அவளைப் பலவாறு போற்றித் தொழுது வணங்கினர்! அவர்களுடைய பூசனையால் மகிழ்ந்த பார்வதி, "அன்பர்களே நீங்கள் வேண்டும் வரம் யாது? அதை விரைந்து கேளுங்கள்", தட்டாமல் தருகிறேன் என்றாள்.

அவர்கள் அவளை மீண்டும் பணிந்து வணங்கி, "தேவி, நீயே எங்களுக்கு மகளாகப் பிறந்து வரவேண்டும். உன்னைப் பரமேசுவரனுக்குத் திருமணம் செய்து தந்து பார்க்கவேண்டும்.. அதுவே நாங்கள் விரும்பும் வரம்," என்றனர். "தேவி அப்ப டியே ஆகட்டும்" என்று கூறி அவர்களுக்கு ஆசி தந்து மறைந்தாள்.

நாட்கள் நகர்ந்தன. ஒருநாள் முனிவரின் மனைவி நீர்எடுக்கச் சென்றாள் அப்போது பெரிய நீலோற்பல மலரில் அழகுமிக்கப் பெண்குழந்தை யொன்று இருக்கக்கண்டாள். அதைக் கண்டதும் அவளுடைய மனத்தில் இனம்புரியாத மகிழ்ச்சியும் உமையவள் வடிவம் இதுவே என்ற எண்ணமும் உண்டாயிற்று. தாய்மையின் நெகிழ்ச்சியால் அவளுக்குப்பால் சுரந்தது. அவள் அக்குழந்தையை அள்ளி எடுத்து அணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தாள். பிறகு அக்குழந்தையை எடுத்துச் சென்று தமது கணவனிடம் காட்டினாள். அவருக்கும் மகிழ்ச்சி உண்டாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



▲மணமக்களுக்கு மங்கல நீராட்டு நடைபெறுகின்றது

மணமக்களுக்கு அலங்காரம் செய்யப்படுகின்றது

இந்தச் செய்தியை முனிவரும் மனைவியும் எல்லோருக்கும் தெரிவித்து மகளுக்குப்பெயர் சூட்டும் வைபவத்தை நடத்தினர். காத்தியாயன முனிவரின் குமாரியாதலின் அவளுக்குக் 'காத்யாயனி" என்று பெயர் சூட்டினர்.

அக்குழந்தை அவர்களுடைய அன்பின் சீராட்டாலும் பாராட்டாலும் வளர்ந்து மங்கைப் பருவம் எய்தியது. அவள் அறிவு நிரம்பியவளாகவும் ஆற்றல்மிக்கவளாகவும் சிறந்தபக்தி உடையவளாகவும் விளங்கினாள். முனிவரும் அவர் மனைவியும் தம் மகள் சிவபூசைசெய்யும் அழகையும், அறிவையும், ஆற்றலையும் கண்டு வியந்தனர். முனிவரும் அவர் மனைவியும் மகளுக்குத் திருமணம் செய்து பார்க்க விரும்பினர். முனிவர் தனது விருப்பம் நிறைவேறும் பொருட்டுக் கடுந்தவம் பூண்டார். அவருடைய தவத்தால் கவரப்பட்ட சிவபெருமான் அவர் முன்னே தோன்றினார். முனிவர் அவரைப் பணிந்து தொழுதார்.

சிவபெருமான் "முனிவனே உமது விருப்பப்படியே சித்திரை மகநாளில் நமது கணங்கள் சூழ வந்து உம்மகளை மணப்போம். தகுந்த ஏற்பாடுகளைச் செய்க" என்று கூறி மறைந்தார்.

முனிவர் மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடினார்.தம்மனைவியிடமும் மற்றுளோரிடமும் அதைக் கூறினார். அனைவரும் கூடித்திருமண ஏற்பாடுகளை விரிவாகச் செய்தனர்.

சித்திரை மகநாளும் வந்தது. சிவபெருமான். நந்திதேவரும் சிவகணங்களும், பிரமன் திருமால் முதலிய தேவர்களும், பின்தொடரத் திருவீழிமிழலையை வந்து அடைந்தார்.

அவரைக் காத்தியாயன முனிவரும் அவர்மனைவி சுமங்கலையும் எதிர்கொண்டு அழைத்தனர். அவ ுடைய திருவடிகளைப் பூசித்து மணவறைக்கு அழைத்துச் சென்று அமர்த்தினர். தேவமகளிர் முனிவரின் புதல்வியாகிய காத்யாயினியை மணப்பெண்ணாக அலங்கரித்து, அழைத்து வந்து சிவபெருமான் பக்கத்தில் அமர்த்தினர்.

முனிவர்கள் வேதமந்திரங்களை ஓதி வேள்வி செய்தனர். காத்யாயன முனிவரும் அவர் மனைவியும் சிவபெருமானின் கரத்தின்மீது அம்பிகையின் கரத்தை வைத்துத் தாரைவார்த்து அவளைச் சிவபெருமானுக்குக் கன்னிகாதானம் செய்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

• மணமகளாக காத்யாயனி

• மணமகன் காசியாத்திரை

பின்னர் அனைத்துச் சடங்குகளுடன் திருமணம் நன்கு நடந்து நிறைவு பெற்றது.

பின்னர், பெண்ணையும் மாப்பிள்ளையையும் அலங்காரமாக நகர்வலம் செய்தனர். அப்படி வலம் வந்தகாட்சி அனைவரையும் இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தியது. அப்போது காத்யாயன முனிவருக்கு மாப்பிள்ளையாக வந்தவர் உண்மையில் பரமசிவன் தானா? என்ற சந்தேகம் தோன்றியது. அதை அறிந்த சிவபெருமான், முன்பு திருமால் தன்னைப்பூசித்தபோது ஒரு தாமரைப் பூக்குறைய அதற்குப் பதிலாகத் தன் கண்ணை இடந்து தமது பாதத்தில் வைத்த கண் மலரையும் மிழலைக்குறும்பர் என்ற அன்பர் நிவேதித்த விளாங்கனிகளையும்தனக்கு முன்னே காட்டினார். அவருடைய திருவடிகளில் அவற்றைக் கண்ட முனிவரின் சந்தேகம் தீர்ந்தது. அந்தக் காட்சியைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர்.

அவர்கள் அனைவரும் சிவபெருமானிடம், இந்த மணக்கோலத்திலேயே எப்போதும் இங்கே வீற்றிருக்க வேண்டினர். அதன்படியே கல்யாண ஊர் வலம் வரும் மாப்பிள்ளைசாமியாகச் சிவபெரு மான் உமாதேவியுடன் எழுந்தருளி அருள்பாலிக் கின்றார்.

திருமணத்தின் நிறைவாகச் சிவபெருமான் அனைவருக்கும் வேண்டியவரங்களையும், வீட்டின் பத்தையும் அளித்துத் தனது தேவியுடன், கணங்களும் முனிவர்களும் சூழச் சிவலிங்கத்துள் கலந்தருளினார்.

திருவீழிமிழலையில் சித்திரை மாதம் பெருந் திருவிழா நடைபெறுகிறது. அதன் ஆறாம் நாள் (மகத நட்சத்திரத்தில்) திருமணவிழா கொண்டாடப்படுகின்றது. அப்போது சுவாமியைக் கல்யாண சபையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இறக்கிக் கொண்டு வருவது கண்கொள்ளாக் காட்சியாக அமைகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

• மணமாலை சூட்டுதல்

பிறகு சுவாமிக்கும் அம்மனுக்கும் விரிவான அபிஷேகம் நடைபெறுகின்றது. தொடர்ந்து மாப்பிள்ளை காசியாத்திரை செல்லுதல், முனிவரும் அவர் மனைவியும் அழைத்துவருதல் முதலிய சடங்குகள் நடைபெறுகின்றன. பின்னர் சுவாமி. அம்பிகைக்குச் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டுத் திருமணவிழா கொண்டாடப் படுகின்றது. பின்னர் வீதிஉலா நடைபெறுகின்றது.

இங்குத் திருமணவிழா நடத்தப்பெறும் இடம் கல்யாண மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. ஆவுடையார் கோயில் கொடுங்கை, திருவலஞ்சுழி கல்பலகனி என்பன போன்று இதன் கூரை அமைப்பு. சிற்பக் கட்டிடக்கலை உலகில் தனித்த இடத்தைப் பெற்றுள்ளதாகும்.

மூலத்தானத்தில் சிவலிங்கத்திற்குப் பின்னணியில் சுவாமியும் அம்பிகையும் நின்ற நிலையில் பெரியசுதைச் சிற்பங்களாகக் காட்சி தருகின்றனர். இந்தப் பெருமான் அழகிய மண வாளன் என்றும், அம்பிகை காத்யாயனி என்றும் அழைக்கப்படு கின்றனர்.

❑ முன்பு அம்பிகை (கௌரி) காத்யாயனி என்ற பெயரில் தவம் செய்து சிவபெருமானைக் கணவனாகப் பெற்றாள். அப்போது தான்மேற் கொண்டது போன்றே நல்ல கணவனை அடையப் பெண்கள் நோற்கும் நோன்பிற்குத் தன்பெயர் விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அன்றுமுதல் அந்த விரதம் காத்யாயினி விரதம் என்று அழைக்கப்படுகின்றது. அதற்குத் தலைவியும் அவளேயாவாள். சீதை, காத்யாயனி விரதம் இருந்தே இராமபிரானைக் கணவனாகப் பெற்றாள் என்று துளசி ராமாயணம் கூறுகின்றது. உருக்மனிதேவி இந்த விரதத்தை நோற்று, கண்ணபிரானைக் கணவனாக அடைந்தாள் என்று பாகவதம் கூறுகின்றது. உருக்குமணி வேண்டிக் கொண் டதைக் குறிக்கும் பாகவதப் பாடல் இத்தலத் தில் ஓதப்பட்டு வருகின்றது. இங்குவந்து இதனைப் பாடிப்பரவி வழிபடும் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறுவது கண்கண்ட உண்மையாகும்.

பாகவதத்தில் இடம்பெற்றுள்ள அப்பாடல் :-

தேவேந் திராணி நமஸ்துய்யம்
தேவேந்திரப் பிரியபாமினி
விவாக பாக்யம் ஆரோக்கியம்
புத்ரலாபம் சதேஹிமே
பதிம் தேஹி சுதம் தேஹி
சௌபாக்யம் தேஹிமே சுபௌ
சௌமாங்கல்யம் சுபம் ஞானம்
தேஹிமே சிவசுந்தரி
காத்யாயினி மகாமாயே
மகாயோக நிதீஸ்வரி
நந்த கோப சுபம் தேவம்
'தேவரம் குருதே நம:

'தேவரன் - முறை மைத்துனன் மைத்துனன் நம்பி
மதுசூதனன் என் கைத்தலம் பற்றக் கனாக்கன்
டேன் தோழீ" -ஆண்டாள் பாசுரம்

காததியாயன முனிவரும் அவர் மனைவியும்

படங்கள் நன்றி : கல்கி தீபாவளி மலர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவ-பார்வதி திருமணக் கோலங்கள்

மனித வாழ்வின் முக்கியமான நிகழ்ச்சி திருமணமாகும். திருமணம் என்ற தொடக்கமே உலகக் கடமைகளைச் செய்வதற்கு வழிகோலு கின்றது. திருமணத்தின் மூலமே புதிய உறவுகள் வளர்கின்றன. திருமணத்தின்மூலம் தனிமனிதனாக உள்ள ஆணுக்குப், பெண் என்ற துணை கிடைப்ப துடன் குடும்பம் என்ற புதிய உலகமும் உண்டாகின் றது. எனவே மனித வாழ்வில் திருமணம் தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றது.

திருமணம் என்பது பல்வேறு சடங்குகளை உள்ளடக்கியதாகும். பெண்கேட்டல், பெண்பார்த்தல், திருமணம் நிச்சயித்தல், மணஓலைஎழுதுதல், உறவுகளை அழைத்தல், பந்தற்கால்நடுதல், மணமண்டம் அமைத்தல் முதலியன சடங்குகள் திருமணத்தின் தொடக்க நிலைச் சடங்குகளாகும்.

மாப்பிள்ளை (அ) பெண் அழைத்தல், பெண்ணுக்கு மங்கலநீராட்டல், மணமகளை அலங் காரஞ்செய்தல், மணமக்களுக்குப் புத்தாடைவழங்கு தல், மணமகளை மணமேடையில் அமர்த்துதல், காப்பணிவித்தல், அரசாணைக்கால் நடுதல், கன்னிகா தானம் செய்தல், கைப்பிடித்தல், திருப்பூட்டல் (தாலி கட்டுதல்) மணவேள்விசெய்தல், மணவறையை வலம் வருதல் விளக்குக் காட்டல், அம்மி மிதித்தல் அருந்ததி பார்த்தல், பொரியட்டல், நிறைகுடம் வைத்தல் மதுபர்க்கம் அளித்தல் என்பன திரு மணத்தின்போது நடக்கும் சடங்குகளாகும்.

மணமக்களை உயர்ந்த தேரில் அமர்த்தித் திருவீதிகளில் வலம் வருதல், மணமகனும் மகளும் சேர்ந்து பாலிகை விடுதல், உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து திருமணத்திற்கு வந்தவர்களுக்குப் பரிசு அளித்தல் மறுவீடுசெல்லல். மணமகள் மணமகனின் வீட்டிற்குச் சென்று, புதியவாழ்க்கையைத் தொடங்குதல் ஆகியன, திருமணத்திற்குப்பின்னர்நடைபெறும் சடங்குகளாகும்.

காலச்சூழலால் இடத்திற்கும் இனத்திற்கும், காலத்திற்கும் ஏற்ப இவை மாறுபடுகின்றன. புதிய சடங்குகள் இணைவதுடன் பழைய சடங்குகள் கழிந்து விடுகின்றன. மேலும் இப்போது காலத்தின் கட்டாயத்தால் பல சடங்குகள் குறைந்து வருவதை யும் காண்கிறோம்.

திருமணச் சடங்குகள் பலவாக இருந்தாலும் அவற்றில் ஐந்து சடங்குகள் முக்கிமான இடத்தைப் பெற்றுள்ளன. இவை கன்னிகாதானம், கைப்பிடித் தல், (பாணிக்கிரகணம்) மணவறையை வலம் வருதல் பாலிகைவிடுதல், வரதானம் ஆகிய ஐந்தாகும். இந் ஐந்தையும் உணர்த்தும் வகையில் சிவாலயங்களில் சிவபார்வதியர் திருவுருவங்கள் கற்சிலைகளாகவும், செப்புத்திருமேனிகளாகவும், வண்ணஓவியங்க ளாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் இதனைக் காண்பது புண்ணியம் என்று நம்புகின்றனர். இதனால், சிவபார்வதி திருமணக் கோலம் இந்தியா வெங்கும் சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் புற்றிடங்கொண்டநாதர் சந்நிதி, ஒற்றியூர் ஒற்றீசர் சந்நிதி முதலிய அனேக தலங் களின் வாயில் முகப்பில் இந்த கல்யாணக்கோலம் அமைக்கப்பட்டிருப்பதைக்காணலாம்.மேலும்ஆலய முகப்பில் சுதைச் சிற்பமாகவும் இது அமைக்கப்படு கின்றது.

சோழநாட்டில் பலஆலயங்களில் கோட்டத் தெய்வங்களாகக் கல்யாணசுந்தரர் திருமேனி அமைந்திருப்பதையும் காண்கிறோம். இந்நிலை வளர்ந்து ராஜகோபுரங்களின் கோட்டங்களிலும் முகப்பிலும் இத்திருமேனிகள் இடம்பெறலாயின.

இனி, ஆலயங்களில் அமைந்துள்ளசிவ பெருமானின் ஐந்துவகைத் திருமணக்கோலங்களைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. கன்னிகாதான திருமணக் கோலம்

• கன்னிகாதான திருக்கோலம் - கல்யாணசுந்தரர் - திருவான்மியூர்

திருமணவகைகளில் ஒன்று கன்னிகாதானத் திருமணமாகும். பெண்ணைப் பெற்றவர் உரிய மணமகளைத் தேர்ந்தெடுத்து அவரைத் தமது இல்லத்திற்கு அழைத்து வருவார். பிறகு நல்ல நாளில் உறவினர் முன்னிலையில் தனது பெண்ணை அவருக்குத் தானமாகஅளித்துத் திருமணம் செய்து வைப்பார். கன்னிகையைத் தானமாக அளிக்கும் சடங்கை மையமாகக் கொண்டிருப்பதால் இவ்வகைத் திருமணம் ''கன்னிகாதானத்திருமணம்'' என்று அழைக்கப்படுகின்றது.

மதுரையில் அமைந்துள்ள உலகப் புகழ் பெற்ற சிறப்பான "மீனாட்சி கல்யாணம்" கன்னிகாதானத் திருமணக்கோலமேயாகும்.

ஆகமநூல்களில் கன்னிகாதானத் திருமணமே அதிக அளவில் பேசப்பட்டுள்ளது. இதனையொட்டி சிவ-பார்வதியர் உலாத்திருமேனிகள் பல அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். திருவெண்காடு, திருவான்மியூர் முதலிய தலங்களில் உள்ள திருமணக்கோலம் இதுவேயாகும்.

இதில் சிவபெருமான் நான்கு திருக்கரங்களுடன் நிற்கின்றார். மேற்கரங்களில் மான், மழு உள்ளன. கீழ் வலது உள்ளங்கை மேல் நோக்கி இருக்க. அதன்மீது அம்பிகையின் வலது உள்ளங்கை மேல் நோக்கியுள்ளது. அம்பிகை இடது கரத்தில் ஆச்சர்ய முத்திரை அல்லது மலர் ஏந்தியுள்ளாள். இறைவனின் இடது கரத்தில் அபய முத்திரை அல்லது வரதமுத்திரை அமைந்துள்ளது. அம்பிகையின் வலப்புறம் பொற்கலசத்தை ஏந்தி நீர்வார்த்துக் கன்னிகாதானம் செய்பவராகத் திருமால் விளங்குகின்றார். மணப்பெண்ணுக்குத் தோழியாகத் திருமகள் இருக்கின்றாள். முன்புறம் வேள்விக் குண்டமும் அதன் முன்னே அமர்ந்து திருமண வேள்வியை நடத்துபவராகப் பிரம்மதேவனும் உள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இது ஓவியமாக வரையப்படும்போதும் சுதைச்சிற்பங்களாக அமைக்கப்படும்போதும் சிற்ப நூல்களில் சொல்லப்பட்டுள்ளபடி விநாயகர், தும்புரு நாரதர், ரிஷிகள், முனிவர்கள், கந்தர்வர்கள், சரஸ்வதி, கணங்கள். அரம்பையர்கள், ஆகியோரும் சேர்த்து அமைக்கப்படுகின்றனர். இது நிறைவான திருமணக் காட்சியாக அமைகின்றது.

❒ இந்தத் திருமணக் கோலமே அதிக அளவில் வழக்கத்தில் உள்ளது. பெரும்பாலான திருமண அழைப்பிதழ்களில் இதுவே அச்சிடப்படு கின்றது.

❒ மதுரைமீனாட்சி அம்மன் கோயிலில், சுதைச்சிற்பங்களாகவும், கற்சிற்பங்களாகவும் எழு பதுக்கும் மேற்பட்ட இடங்களில் இக்காட்சி அமைக் கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதில் கம்பத்தடி மண்டபத்தில் உள்ள (திருமணக்கோலத்) தூண் சிற்பமே உலகப்புகழ் பெற்றதாகும்.

❒ தஞ்சைப் பெரியகோயிலில் ராஜராஜ னின் மனைவி செய்து அளித்த கல்யாணசுந்தரர் வடிவம் கன்னிகாதான கோலமேயாகும்.



• மதுரை மீனாட்சி சோமசுந்தரர் திருக்கல்யாணம்

கன்னிகாதானத்தில் கோத்திரம் கூறுதல்

குலமும் கோத்திரமும் இந்தியச் சடங்குகளில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. ஆதிநாளில் மக்கள் செய்யும் தொழிலின் அடிப்படையில் குலங்கள் தோன்றின. கோத்திரங்கள் மாமுனிவர்களின் குடும்பங்களின் அடிப்படையில் தோன்றின.

ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் சகோதர சகோதரிகளாகக் கருதப்படுகின்றனர். அதனால் அவர்கள் தங்களுக்குள் பெண்ணெடுத்துப் பெண்கொடுத்துத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் இல்லை. திருமணத்தில் குறிப்பாகக் கன்னிகாதானத்தின்போது மணமகனின் கோத்திரத்தையும் மணமகளின் கோத்திரத்தையும் கூறியே நீர்வார்த்துத் தாரதத்தம் எனப்படும் "கன்னிகாதானச் சடங்கைச்" செய்யவேண்டும் என்று சமய நூல்கள் கூறப்பட்டுள்ளது.

சிவபெருமான் அநாதியானவர் அவருக்குக் குலமும் கோத்திரமும் இல்லை. என்றாலும், திருமணச் சடங்கில் கோத்திரம் கூறவேண்டும் என்பது அவசியமாதலின் அவருடைய கோத்திரம் "அநாதிகோத்திரம்" என்று கொள்ளப்பட்டது.

பரசிவத்திலிருந்து ஆதியில் தோன்றியவள் ஆதிசக்தி அவளுடைய பிரதிபிம்பமே அனைத்து சக்தி வடிவங்களாகும். இதனால் அவளுடைய கோத்திரம் "ஆதிகோத்திரம்" என்று கூறப்பட்டது.

அம்சுமத் காஸ்யபம் என்ற நூல் ஆலயங்களில் நடைபெறும் திருமணச் சடங்கில் கன்னிகாதானம் செய்யும்போது (திருமால் தாரைவார்த்துத் தருவதாகப் பாவனை செய்து கொண்டு) "அநாதி கோத்ர ஸம்பூத ஸ சிவ பரமேஸ்வர: ஆதிகோத்ராம் இமாம் கௌரீம் ததைவ அஸ்மாத் ததாம்யகம். இத்யுக்த்வா வரதஹஸ்தேது உதகம் ததேத் ஹரி: என்று கூறித் தாரைவார்க்க வேண்டும் என்று கூறுகிறது. இதன் பொருள் "பரமேசுவரனான இந்தச் சிவன் அநாதிகோத்திரத்தில் உதித்தவர். ஆதிகோத்திரத்தவளான இந்தக் கௌரியை முறைப்படி இவருக்கு அளிக்கின்றேன்" என்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. கைத்தலம் பற்றும் திருமணக்கோலம்

(பாணிக்கிரகண கோலம்)

கைத்தலம் பற்றிய திருமணக்கோலம் திருமணஞ்சேரி

சிவபெருமான் பார்வதியின் திருக்கரத்தைப் பற்றியதைப் புராணம்

குனின் முரசியம்ப ஒற்றை வலம்புரி குளிரவாணி
துணைவனே சடங்கு செய்ய சுருதி மங்கல நாண்சாத்தி
இணையிலி முக்கண் எம்மான் இமயமான் மலர்க்கைப்பற்றி
மணநிறை கோலங்காட்டி வானவர் வாழ்த்த நின்றார்.

என்று குறிக்கின்றது. மங்கல முரசுகள் ஒலிக்க வலம்புரிச் சங்கு ஒலிக்க, சரசுவதியின் கணவனான பிரம்மதேவன் திருமணச் சடங்குகளை வேதவிதிப்படியே செய்ய சிவபெருமான் அம்பிகையின் திருக்கழுத்தில் தாலியைக் கட்டினான். அதன் பிறகு இமயமன்னனின் மகளாகிய பார்வதியின் மலர்போன்ற கைகளைப் பற்றினான். அந்த பாணிக்கிரகண கோலத்தைத் தேவர்கள் கூடி வாழ்த்தினர்.

திருமணச் சடங்குகளில் முக்கியமான ஒன்று கைப்பிடித்தலாகும். மணமகளின் கையை மந்திரங்கள் முழங்க மணமகன் பற்றிக் கொள்வதே "பாணிக்கிரகணம்" எனப்படும் கைப்பிடித்தல் ஆகும். (பாணி-உள்ளங்கை, கிரகணம்-பிடித்துக் கொள்ளுதல்) திருமணத்தில் இந்தக் "கைப் பிடிக்கும்" சடங்கை முக்கியமானதாகக் கொள்ளும் பிரிவினர். திருமண அழைப்பிதழை "பாணிக்கிரகண சுபமுகூர்த்தப் பத்திரிகை" என்றே அழைக்கின்றனர்.

நல்ல சுபமுகூர்த்த வேளையில் கைப்பிடிக்க வேண்டியது அவசியமென்று சமயநூல்களும் புராணங்களும் கூறுகின்றன.

திருமணஞ்சேரி, திருவாரூர், திருவாவடுதுறை, வேள்விக்குடி, கோனேரி ராஜபுரம் முதலிய தலங்களில் உள்ள சிவ பார்வதி திருமணக்கோலங்கள் இத்தகைய பாணிக்கிரகணகோலங்களேயாகும்.

இதில் சிவபெருமானின் மேற் கரங்கள் மான்மழு தாங்கியிருக்க, கீழ் வலது கரம் அம்பிகையின் கரத்தைப் பற்றிக் கொண்டிருக்கின்றது. இடதுகரம் அபய முத்திரை (அ) செண்டு (அ) இடபத்தின் மீது வைத்தவாறு உள்ளது.

அவருக்கு வலதுபுறம் அம்பிகை நிற்கின்றாள். அவள் தனது வலது கையை இறைவன் பற்றும்வகையில் நீட்டியுள்ளாள். இடதுகை மலரினை ஏந்தியுள்ளது. (சில இடங்களில் அம்பிகையின் இடது கரம் ஆச்சர்ய முத்திரை அல்லது கண்ணாடியை ஏந்தியவாறும் அமைக்கப்பட்டுள்ளது.)

இருவரும் ஒரேபீடத்தில் நிற்கின்றனர். இருவரையும் வளைத்தவாறு அழகிய பிரபா மண்டலம் உள்ளது. ஒரு சில இடங்களில் சிவபார்வதி இருவருடன் இடபவாகனமும் சேர்த்தே அமைக்கப்பட்டுள்ளது.

❑ இத்திருக்கோலங்களில் அம்பிகையின் உள்ளங்கை மேல்நோக்கியிருக்க, இறைவனின் உள்ளங்கை கவிழ்ந்து அதனைப் பற்றுவதாக உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. மணவறையுடன் வேள்வித்தீயை வலம்வரும் கோலம்

திருமணத்தின் மற்றுமொரு முக்கியமான சடங்கு மணவறையை வலம் வருதலாகும். மண மகளின் கையை மணமகன் பற்றிக்கொண்டு மண வேள்விச்சாலையையும், மணமண்டபத்தையும் மும்முறை வலம் வருவது வழக்கம். இது அவர்கள் மூன்று உலகத்தையும் வலம் வந்ததற்கு ஒப்பாகும். அவர்களுக்கு முன்னே விளக்கைக் கையில் ஏந்தியவாறு மணமகனின் சகோதரி செல்லுவாள். மணமக்களின் முன்னே இளம் பெண்கள் முளைப் பாலிகைகளை ஏந்தியவாறு செல்லுவர்.

ஒவ்வொரு முறை வலம் வந்து முடிந்ததும் சகோதரன் எடுத்துத் தரும் நெற்பொறிகளை அள்ளித் தர மணமகன் இரண்டு கைகளாலும் வாங்கி மண மகனிடம் கொடுப்பாள். அதை அவன் ஓமத்தீயில் இட்டு ஓமம் செய்வான். இதற்கு லாஜஹோமம் என்பது பெயராகும் அப்போது தீ வலஞ்சுழித்து எழுந்தால் நல்ல சகுனம் என்று நம்புகின்றனர்.

சிவ-பார்வதியர்திருமணமண்டபத்தைச் சுற்றி வந்ததையும் வேள்வித்தீ வலஞ்சுழித்து எழுந்த தையும் திருக்குற்றாலப் புராணம் சிறப்புடன் குறிப்பி டுகின்றது.

பிலந்துறை வேந்தனோர் ஆயிரப்
பெருந் தீபம் ஏந்த மலர்த்
திருமகள் கொண்டாட
வாணி மங்கலங்கள் பாட
குலக்கிரி மகள் பின்னேக
"கொழுந் தழல் வலங்கொண்டேகி"
நலந்தரு பொரிகள் தூவி
நயம் பெரு வேள்வி ஆற்றி(னர்).

இதன் பொருள்: பாதாளத்தில் உறைபவனாகிய நாகராஜன் ஆயிரம் தீபங்களைக் கொண்ட பெரிய விளக்கை ஏந்தி முன்செல்ல, திருமகள் வழிகாட்ட, சரஸ்வதி மங்கலங்கள் பாடிவர, சிவபெருமான் பர்வத ராஜ குமாரியான பார்வதி கையைப் பற்றிக் கொண்டு பின்னே வர மணவறையை வலம் வந்தான். அப்போது செழுமையான வேள்வித் தீ வலம் சுழித்து ஓங்கியது. அதில் நெற்பொரிகளைத் தூவி சிவபார்வதி இருவரும் திருமண வேள்வி செய்தார்கள்) என்பதாகும்.

வடக்களத்தூர் உலாத்திருமேனியான கல்

•கல்யாண சுந்தரர் - அச்சுத மங்கலம்

யாணசுந்தரர், அச்சுதமங்கலத்தில் கோட்டத்தில் எழுந்தருளியுள்ள கல்யாணசுந்தரர் முதலான வடிவங்கள் இத்தகையதேயாகும்.

அச்சுதமங்கலத்துத் திருவுருவத்தில் ஹோம குண்டமும் அதனை வலம்வரும் கோலத் தில் பெருமான் நிற்பதும் தனது வலதுகாலை எடுத்து வைத்து அம்பிகை அவரைத் தொடர்வதும் கலை நுணுக்கத்துடன் காட்டப்பட்டுள்ளன.

காஞ்சீபுரம்கயிலாயநாதர் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள கல்யாணசுந்தரர் திரு உருவ மும் இதை ஒத்ததாக உள்ளது. இதிலும் இறைவன் நடந்துவரும் கோலத்திலும் அம்பிகை வலதுகாலை எடுத்து வைத்து அவரைத் தொடர்ந்து வரும் கோலத்திலும் அமைந்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. முளைப் பாலிகை விடச்செல்லும் திருமணக்கோலம்

•கலயாணசுநதரர் - திருமழிசை

முளைப்பாலிகைகளை வளர்த்து வழிபடுதல் என்பது நீண்ட நெடுநாட்களாகப் போற்றப்பட்டு வரும் சடங்காகும். திருமணம், பெருவிழாக்கள், கும்பாபிஷேகம் முதலிய பெருஞ்சடங்குகள் அனைத்திலும் முளைப்பாலிகை விடுதல் ஒரு அங்கமாக இருந்து வருகின்றது.

நெல், உளுந்து, எள், பச்சைப்பயிறு, கடுகு என்ற ஐந்தே பாலிகைக்கு உரிய தானியங்களாகும். இந்தத் தானியங்களில் விடும் பாலிகைக் கிண்ணங்களில், பிரம்மா, சூரியன், யமன் முதலிய தேவர்கள் பலர்நிலைப்படுத்தி வணங்கப்படுகின்றனர். பன்னிரு முளைப்பாலிகைகளில் ஆண்டின் பன்னிரு மாதங்கட்குரிய பன்னிரு சூரியர்களை ஆவாகித்துப் பூசித்து இடையே உள்ள கலசத்தில் சந்திரனை ஆவாகித்துப் பூசித்தல் ஆகமமுறையாகும்.

இந்நாளில் நவதானியங்களை ஊறவைத்து மண்ணால் நிறைக்கப் பெற்ற உடுக்கை போன்ற பாலிகைக் கிண்ணங்களில் பாலிகை விடுகின்றனர். இதை மணமகன் வீட்டில் மணமகனும், மணமகள் வீட்டில் மணமகளும் உரியமந்திரங்களைக் கூறி இடுவர். திருமணத்திற்கு ஐந்து, ஏழு அல்லது ஒன்பது நாட்களுக்கு முன்னதாகவே ஒரு மாலை வேளையில் பாலிகை விடுகின்றனர். பின்னர் அக்கிண்ணங்கள் தர்ப்பை (அ) வைக்கோலால் மூடப்பட்டு அதற்குக் காலையும் மாலையும் நீர்தெளிக்கப்படும். அந்த தானியங்கள் முளைவிட்டு நன்கு வளர்ந்துவிடும். திருமணத்தின்போது மணமேடையின் மேற்கில் அல்லது வடக்கில் கோலமிட்ட மணையின்மீது இந்த முளைப் பாலிகைகள் வைக்கப்படும். திருமணம் முடிந்ததும் மணமக்கள் இதனை வழிபடுவர். சில இனங்களில் மணமக்கள் மணவறையை வலம் வரும்போது இளம்பெண்கள் இந்தக் கிண்ணங்களை ஏந்தியவாறு அவர்கள் பின்னால் வருவது வழக்கம்.

பார்வதிதேவியின் திருமணத்தின்போது சிவபெருமானுடன் பார்வதி மணவறையை வலம் வந்த போது சப்தமாதர்கள் பாலிகைகளை ஏந்தி அவர்களுடன் வலம் வந்ததைப் புராணங்கள் குறிக்கின்றன.

திருமணத்திற்குப் பிறகு மணமகளும், மணமகனும் கூடிப் பாலிகைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று ஊருக்கு வெளியில் உள்ள வயலில் விடுவர். சிலர் குளக்கரையில் தனியிடத்தில் விடுவர் மணமக்கள் அங்கு நீர்தெளித்து தங்கள் மணவாழ்வு சிறக்க வேண்டுவர். இந்தச் சடங்கு பாலிகாவிசர்ச்சனம் என்று அழைக்கப்படும்.

முன்னாளில் மணமகனும், மகளும் திருமணக்கோலத்துடன் தனியாக ஊர்வலம் சென்று வந்த பிறகு, ஒரு நல்ல நாளில் பாலிகையை விட மீண்டும் ஊர்வலமாகச் சென்றனர். ஆனால் விவசாய சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட தென்னகத்து மக்கள் மணமகனும், மணமகளும் முதல் முதலாகச் சேர்ந்து செல்வது விவசாயத்திற்காக இருக்கட்டும் என்று எண்ணினர். ஆதலின் மணக்கோலத்துடன் மணமக்கள் ஊர்வலமாகச் செல்வதைப் பாலிகை விடுவதுடன் சேர்த்து ஒன்றாக்கி விட்டனர்.

இந்த ஊர்வலம் வேளாண்மைக்கு உரியது என்பதை உணர்த்த மணமகள் வளர்த்த காளையையும் உடன் அழைத்துச் செல்லும் வழக்கமும் வந்தது என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு சிவ-பார்வதி திருவுருவங்கள் சிவாலயங்களில் அமைத்து வழிபடப்படுகின்றன. இவை "பாலிகா விசர்ச்சனத் திருமணக்கோலம்" என்று அழைக்கப் படுகின்றன.

திருவீழிமிழலையில் உள்ள மாப்பிள்ளை சாமியின் திருக்கோலம் இத்தகையதாகும் இதில் பெருமான் வலக்கரத்தில் ராஜகம்பீரத்திற்கும் விவசாயத்திற்கும் உரிய செண்டை ஏந்தியுள்ளார். அவருடைய இடதுகரம் இடபத்தின் மீது ஊன்றியுள்ளது. வலப்பக்கத்தில் அம்பிகை எழுந்தருளியுள்ளாள்.

தொண்டை மண்டலத்திலுள்ள திருமழிசை, (ஒத்தாண்டடேசுவரர் ஆலயம்), திருமுல்லைவாயில் (மாசிலாமணீசுவரர் ஆலயம்) முதலியவற்றில் மேற்சொன்ன வகையிலான திருமணக்கோல நாதரைக் காண்கிறோம். இவற்றில் பெருமான் நான்கு கரங்கள் கொண்டுமேற்கரங்களில் மான்மழு ஏந்தியும். கீழ்க்கரத்தில் செண்டும் ஆலிங்கன முத்திரையும் தாங்கிக் காட்சியளிக்கின்றார்.

இந்த கல்யாண சுந்தரரை வழிபடுவதால் ராஜவசியமும் சர்வஜன வசியமும் உண்டாகும் என்று மந்திர நூல்கள் கூறுகின்றன. காஞ்சிப் புராணம் சிவனும் பார்வதியும் திருமணம் முடிந்து நகர்வலம் வந்ததை

புதிய சாமரை வெண்குடை பூங்கொடி மிடைய
எதிரில் கொள்கையின் நகர்வலம் கொண்டெழுந்தருளி
மதுரமென்மொழி மங்கல வாழ்த்துமலிய
கதியிலார்க்கெல்லாம் இன்னருட் காட்சி தந்தளித்து

என்று கூறுகின்றது.

5. வரதான கோலம் - உமா மகேசுவரர் திருக்கோலம்

திருமணம் நடந்த பிறகு மணமக்களை உயர்ந்த ஆசனத்தின் மீது அமர்த்துவர். திருமணத்திற்கு வந்தவர்கள் வரிசையாக வந்து அவர்களை வாழ்த்துவர். அப்போது மணமக்கள் அவர்களுக்குத் தாம்பூலமும், பரிசும் அளிப்பர். இதன்படி சிவனும் பார்வதியும் திருமணம் முடிந்த பிறகு, உயர்ந்த சிம்மாசனத்தின் மீது அமர்ந்திருந்து அன்பர்களுக்கு வேண்டிய வரங்களை வேண்டியவாறு அளித்தனர். இந்த நிலையே வரதான கோலமாகும்.
இதனைக் காஞ்சிப்புராணம்,

மீண்டும் கோயிலின் உள்ளெழுந்தருளி மெல்லனைமேல்
மாண்ட மெல்லியற் பனிவரை அணங்கொடும் வைகி
ஆண்டு நின்றமால் அயன்முதல் யாரையும் நோக்கி
ஈனடு நீர்வரம் வேண்டுவ கொண்மின் என்றிசைத்தான்

என்று குறிக்கின்றது. இதன்பொருள்: (திருமணமும் நகர்வலமும் முடிந்தபிறகு) மீண்டும் சிவபெருமான் திருக்கோயிலுக்கு எழுந்தருளி பனிமலைப் பாவையாகிய பார்வதியுடன் உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்தார். அங்கு நின்ற திருமால், பிரமன் முதலான எல்லோரையும் நோக்கி உங்களுக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி வரம் தந்தார் என்பதாம்.

இக்கோலத்தில் ஆசனத்தின் மீது சிவனும் பார்வதியும் அமர்ந்துள்ளனர். திருமேனியில் சிறந்த ஆடைகளை அணிந்து, அணிமணிகளைப் பூண்டுள்ளனர். இடபம் பீடத்தின் கீழ் படுத்தவாறு உள்ளது. பெரும்பான்மையாக இந்த வடிவங்கள் மூலத்தானத்திலேயே அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

பொதுவாக, இது அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டிய வரலாற்றுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. வேதாரண்யம் (திருமறைக்காடு) திருமழிசை, நல்லூர், இடும்பாவனம், திருவேற்காடு முதலிய அனேக தலங்களின் கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்னணியில் இந்தக் காட்சியைக் கண்டு மகிழலாம். கேரள மாநிலத்திலுள்ள கொல்லம் உமாமகேசுவரர் ஆலயத்திலுள்ள வடிவம் இத்தகையதேயாகும். இந்த வடிவத்தை உமாமகேசுவர வடிவம் என்றும் அழைக்கின்றனர்.

உமாமகேசுவரர் கொல்லம், (கேரளா)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காதற்குளியல்

திருமணத்திற்கு முன்பாக மணப்பெண்ணுக்குப் பலவகை வாசனைப்பொடிகள் மஞ்சள், சந்தனம் இவற்றைப்பூசி நீராட்டுவது தொன்றுதொட்டு இருந்துவரும் வழக்கமாகும்.

சங்க இலக்கியம் திருமணத்தின் போது மனல் பரப்பிய முற்றத்தில் மணப்பெண்ணை அமர்த்தி நிறைய பிள்ளைகளைப் பெற்ற பெண்கள், நீராட்டியது பற்றிக் குறிப்பிடுகின்றது. நெல்லும் மலரும் இட்ட குளிர்ந்த நீரைப் பெண்கள் சுமந்து வந்து தர, மங்கலப்பெண்கள் மணமகளை நீராட்டினார்கள் என்பதனை இந்நூற்களால் அறிகிறோம்.

திருப்பாவையில் ஆண்டாள் நாற்றிசையிலிருந்தும் தீர்த்தங் கொணர்ந்து தனக்கு மங்கல நீராட்டியதாகக் குறிக்கின்றாள்.

காலப்போக்கில் இது மங்கல நீராடல் என்று அழைக்கப்பட்டது. திருநெல்வேலி காந்திமதி அம்பிகை, காஞ்சீபுரம் ஏலவார்பூங்குழலி (காமாட்சி) பெருநகர் பட்டுவதனாம்பிகை முதலிய அம்பிகையர் திருமணவிழாவிற்கு முன்பாக நீராடலுக்கு குளம் (அ) நதிக்கரைக்கு எழுந்த ருள்வதைக் காண்கிறோம்.

திருநெல்வேலி காந்திமதி அம்பிகை தாமிர வருணி ஆற்றிற்கு எழுந்தருளி நீராடுகின்றாள். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் நடைபெறும் பங்குனி உத்திரத் திருக்கல்யாண விழாவில் 'ஏலவார் பூங்குழலி" காலையில் ஒக்கப் பிறந்தான் குளம் என்ற இடத்திற்கு மங்கல நீராட்டுக்கு எழுந்தருள்கின்றாள். அந்தக் குளக்கரையில் இதற்கென பெரிய மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இந்த அம்பிகையுடன் காஞ்சீபுரம் காமாட்சியம்மனும். அரசாத்தம்மனும் எழுந்தருள்கின்றனர். இங்கு நண்பகலில் பெரிய அளவில் அபிஷேகமும் மாலையில் அலங்காரமும் நடைபெறுகின்றன. பிறகு மூன்று அம்பிகையரும் புறப்பட்டு உலாவருகின்றனர். கச்சபேசர் ஆலயத்திற்கு முன்பாக மூவரையும் ஒன்றாக நிறுத்தி சிறப்பு வழிபாடுகள் செய்கின்றனர். தொடர்ந்து ராஜவீதியில் சென்று ஏலவார்பூங்குழலி ஏகாம்பரநாதர் ஆலயத்தை அடைகின்றாள். ஏலவார் பூங்குழலிக்கும் ஏகாம்பரநாதருக்கும் திருமணம் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் – வந்தவாசி சாலையில் உள்ள பெருநகரில் பட்டுவதனாம்பிகை உடனுறை பிரம்மபுரீசுவரர் ஆலயம் உள்ளது. இங்குத் தைமாதம் பெருந்திருவிழா கொண்டாடப்படுகின்றது. அவ்விழாவின் ஐந்தாம்நாள் இரவு திருக்கல்யாணவிழா நடைபெறுகின்றது. இதனையொட்டி, காலையில் பட்டுவதனாம்பிகை மங்கல நீராட்டிற்காக ஊருக்கு மேற்கில் உள்ள பூமால் செட்டி குளத்திற்குச் செல்லுகின்றாள். அங்கு மங்கல நீராட்டாகப் பெரிய அளவில் அபிஷேகம் செய்யப்படுகின்றது. பிறகு அலங்காரம் முடிந்து மாலையில் கோயிலுக்குத் திரும்புகின்றாள். அங்கு அவளை மணப்பெண்ணாக வரவேற்று திருமணம் செய்யப்படுகின்றது. இதனை ஒத்ததாக அனேக தலங்களில் அம்பிகை திருமண நீராடச் செல்வதைக் காண்கிறோம்.

புராணங்கள் இந்த மங்கல நீராட்டலைத் தனிச்சிறப்புடன் போற்றுகின்றன. சிவமகா புராணம். பார்வதியின் திருமணத்தின் போது அவளைத் தேவமாதர்கள் நீராட்டியதைக் குறிக்கின்றது

இதனைத் தென் மாவட்டங்களில் 'காதற் குளியல்" என்று அழைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரசாணைக்கால்

தென்னிந்தியாவிலுள்ள பெரும்பான்மையான இனமக்களின் திருமணச்சடங்கில் முக்கியமான இடத்தைப் பெறுவது "அரசாணைக்கால்" நடுவதாகும். இதன் கருத்தைச் சரியாக இது வரை யாரும் விளக்கவில்லை. என்றாலும் இதற்கு இரண்டு கருத்துகள் பொதுவாக உள்ளன.

முதலாவது முன்னாளில் திருமணம் உறுதியானதும் அரசனிடம் அத்திருமணத்திற்கு அனுமதி வேண்டுவர் என்றும் அரசன் அதற்கு அனுமதி அளித்து, ஆணையளித்து மூங்கில் கழியொன்றை அனுப்புவான். என்று கூறுகின்றனர் அதை அரசனாகவே பாவித்து வழிபட்டு அரசப்பிரதி நிதியாக மணமண்டபத்தில் அதனை நிறுத்திவைப்பர். அரசனின் ஆணையைக் கூறிநிற்பதால் அது அரசாணைக்கால் எனப்பட்டதென்பர்.

திருமணமண்டபத்தில் திருமணவேளைக்கு முன்பாக அரசாணிக்காலினை மூன்று அல்லது ஐந்து சுமங்கலிப் பெண்கள் கூடிப் பால், பன்னீர் முதலியவற்றால் நீராட்டி மணமேடையின் கிழக்கில் நடுவர். மணமக்களுக்குக் காப்புகட்டும்போது அந்தக்காலுக்கும் காப்புகட்டப்படும். மணமக்கள் திருமணச்சடங்கில் ஒன்றாக அந்த அரசாணைக்காலையும் வழிபடுகின்றனர்.

திருவீழிமிழலைஆலயத்தில் (கருவறைக்கு முன்னுள்ள உள்மண்டபத்தில்) வெள்ளிக்கவசம் போர்த்திய தூண் உள்ளது. இதனை அரசாணைக்கால் என்கின்றனர்.

சிவ-பார்வதி கல்யாணக் கோலத்தை விளக்கும் பழைய ஓவியங்களில் அரசாணைக் காலையும் சேர்த்தே வரைந்துள்ளனர்.

இதில் தர்ப்பை ஆடை; மாலை; முதலியவற்றைக் கட்டியுள்ளனர். திருவதிகைக்கோயிலில் பெரியசுதைச் சிற்பமாக அமைக்கப்பெற்றுள்ளது. திருமணக்கோலத்தில் அரசாணிக்கால் மரமும் அதன்மீது அசுவினித்தேவர்களும் சுட்டப்பட்டுள்ளனர்.

இரண்டாவது வகையில் தொன்மைத் தமிழர்கள் வயது முதிர்ந்த பெரிய மரங்களுக்கு அடியிலேயே திருமணங்களை நடத்தினர். பெரும்பாலும் அரசமரம் மூங்கில் மரம் இவற்றின் அடியில் திருமணங்கள் நடைபெற்றன. அரசமரம் நெடுங்காலம் வாழ்வது ஆதலின் அதனடியில் திருமணம் செய்தால் மணமக்களும் நீண்ட காலம் வாழ்வர் என்று நம்பினர். இதைப் போலவே, மூங்கில் மரத்தடியில் திருமணம் செய்தால் அம்மரம் வேரோடிக் கிளைத்து வளர்வது போல மணமக்களும் நிறைய புதல்வர்களைப் பெற்று நீண்டகாலம் வாழ்வர் என்று நம்பினர். காலப்போக்கில் அரசு; மூங்கில் மரங்களுக்குப் பதிலாக வேறுபாலுள்ள மரங்களும் கொள்ளப்பட்டன.

குத்தலம் ஊரில் உத்தாலமரம் இருப்பதைக் காண்கிறோம். காஞ்சீபுரத்தில் மாமரத்தடியில் திருமணம் நடைபெற்றது என்று புராணங்கள் கூறுகின்றன.

மரத்தடிகளைவிட்டுவிட்டு மாளிகைகளிலும் வீடுகளிலும் திருமணம் நடத்தத் தொடங்கிய போதும், பழைய நம்பிக்கையின் தொடர்ச்சியாக அரசாணிக்கால் நடும் வழக்கம் உண்டாயிற்று என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். பச்சைமூங்கில் கழியின் முனையில் அரசமரக்கிளையை இணைத்துக்கட்டி அரசாணிக் காலாக நடுவதை இப்போதும் காண்கிறோம்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் வரையப்பெற்றுள்ள அனேக ஓவியங்களில் அரசாணிக்கால் பெரிய மரமாகக் காட்டப்பட்டுள்ளது. தமிழகத்தில் மட்டுமின்றி கன்னடநாட்டு ஹம்பியில் அமைக்கப்பட்டுள்ள திருமணக்கோலத்திலும் அரசாணிக்கால் இடம்பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

(அரசு - அரசமரம் ஆணி - மூங்கில்மரம் - அரசாணி அரசும், மூங்கிலும் சேர்ந்தது)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகவல்லி முகூர்த்தம்

தெலுங்கு, கன்னட தேச மக்களில் சில வகுப் பாரின் திருமணச் சடங்கில் நாகவல்லி முகூர்த்தம் எனப்படும் திருமணச் சடங்கு கொண்டாடப்படுகிறது. இதில் கருகமணியில் தாலிப் பொட்டைக் கோர்த்து மணமகளுக்கு மணமகன் அணிவிக்கிறார். வழக்க மான திருமணம் முடிந்ததும் மணமக்களை ஆற்றங் கரை அல்லது கிணற்றங்கரையில் அமைந்துள்ள நாக வல்லிக் கொடியின் கீழ் அமர்த்தி இந்த முகூர்த்தம் நடத்தப்பட்டது. காலப்போக்கில் நாகவல்லி கொடிக் குப் பதிலாக வெற்றிலைக் கொடிகளின் கீழ் இந்தத் திருமணத்தை நடத்துகின்றனர். வெற்றிலைக் கொடிக் கும் நாகவல்லி என்பது பெயராகும். ஆதியில் ஒரு தெய்வப்பாம்பு வானுலகத்திலிருந்து வெற்றிலைக் கொடியைப் பூமிக்கு எடுத்துவந்ததாக நாட்டுப்புறக் கதைகள் கூறுகின்றன. இதனால் வெற்றிலைக் கொடிக் கும் நாகவல்லி எனும் பெயர் வந்தது.

தமிழர்களிடையே இந்தச் சடங்கு இல்லாததால் ஆதிநாட்களில் ஆலயங்களில் நடைபெறும் தெய்வத் திருமண விழாக்களில் இது இடம்பெறவில்லை. பின் னாளில் தெலுங்கு மன்னர்களின் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றபோது மக்களிடையேயும், கோவில் சடங்குகளிலும் நாகவல்லி முகூர்த்தமும் இடம்பெறத் தொடங்கியது.

நாகவல்லி முகூர்த்தச் சடங்கில் மணமகனும் மணமகளும் குழந்தையைத் தொட்டிலிட்டுத்தாலாட்டு பாடுவது ஓர் அங்கமாகும். இதனை விளக்கும் வகை யில் மதுரை மீனாட்சியம்மன் ஆலய மேற்குக் கோபு ரத்தில் ஒரு சுதைச் சிற்பம் இடம் பெற்றுள்ளது. இதில் அம்பிகையும் சிவனும் தலைகீழாகத் தொங்கும் நீண்டபாம்பின் வாலைப்பற்றியுள்ளனர். அதன் தலைப்பகுதியில் விநாயகர் அமர்ந்துள்ளார். நாக வல்லி முகூர்த்தத்தில் மீனாட்சியும் சோமசுந்தரரும் குழந்தையாகிய விநாயகரைத் தொட்டிலாட்டும் சடங்கை இது குறிக்கிறது.

மதுபர்க்கம்

திருமணம் முடிந்ததும் மணமகன் வீட்டில் மண மக்களை அமர்த்தி, மங்கல உணவாக "மதுபர்க்கம்" அளிப்பர். மதுபர்க்கம் என்பது தேனுடன் பால்பழங் கள் ஆகியவற்றைக் கலந்து மந்திரங்களால் சுத்தரித்து அளிப்பதாகும். இதனை மணமகன் மணமகளுக்கும் மணமகள் மன்மகனுக்கும் அளிக்கின்றனர். சில இடங்களில் மணமகனின் தாய் மாமனும் மாமியும் மணமக்களுக்கு மதுபர்க்கம் அளிப்பர்.

திருக்குற்றாலப் புராணத்தில் இறைவனின் திரு மணத்தில் அளிக்கப்பெற்ற மதுபர்க்கம் பற்றிய விளக் கம் உள்ளது. அது.

வருக்கையின் சுளையும் பாலும்
வாழைமென் கனியின் பாகும்
அருத்தி மாம்பழமும் தேனும்
அமிழ்தெனத் திருத்தி அன்பால்
பருப்பதத் திறைவன் செம்பொற்
பாசனத்து அமைப்பநாதர்
திருக்கைத் தொட்டு உவந்தோம் என்றார்
செகமெலாம் நிறைந்ததம்மா

இதன்பொருள் : பலாப்பழத்தின் சுளைகள் பால், வாழைக்கனிகள், தேன்பாகு, மாம்பழங்கள் தேன் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து அமுதம் போலாக்கி அன்போடு பொற்கிண்ணத்தில் வைத்து இறைவ னுக்கு அளித்தனர். இறைவன் அதனைத் தொட்டு உவந்தேன் என்றார். அந்த வேளையில் இந்த உலக உயிர்கள் எல்லாவற்றின் மனமும் வயிறும் நிறைந்து விட்டது.

மதுபர்க்கத்தை அளிப்பதற்குப் பதிலாக இந்நா ளில் பாலில் வாழைப்பழத்தை இட்டு அளிக்கின்றனர். இதனைப் பால்பழம் கொடுத்தல் என்பர். இதனை மதுவர்க்கம் எனவும் அழைப்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காப்பும் கங்கணமும்

தென்னிந்திய கோயிற்சடங்குகளிலும், திருமணம், நோன்புகள் முதலிய இல்லச் சடங்குகளிலும் இடம்பெறும் நிகழ்ச்சி காப்பு அணிவித்தலாகும். மஞ்சள்பூசியபருத்தி அல்லது பட்டு நூலில் கொம்பு மஞ்சளைக்கட்டிக் காப்புகட்டப் பயன்படுத்துகின்றனர். நாம்செய்யும் சடங்குகளுக்குப் பூதம், பிசாசு, பிரேதம் முதலியவற்றாலும் தீத்தேவர்களாலும் கண்ணேறு, பொறாமை முதலான தீய சக்திகளாலும் இடையூறுகள் உண்டாகாதிருக்கக் காப்பு அணிவிக்கப்படுகின்றது.

கோயில்களில் நடைபெறும் திருவிழா, திருமணவிழா முதலியவற்றில் காப்பணிவித்தல் மந்திரப் பூர்வமாகப் போற்றப்படுகின்றது. இறைவனின் வலது கரத்திலும் தேவியின் இடது கரத்திலும் காப்பு அணிவிக்கப்படுகிறது. மதுரையில் நடை பெற்ற திருமணத்தில் சிவனும் பார்வதியும் காப்பு அணிந்ததை ,

சங்கரன் உமை அங்கையில் காப்பு நாண் தரித்துப்
பொங்கு சீர்வடிவு (உ)த்தரீகம்புது வளமாய்
மங்கை நாயகிக்கு அன்புறச் சாத்தியே மணிநீர்
தூங்கமார்தரும் அருக்கியம் உதவியே தொழுதார்"

என்று(பழைய) காஞ்சிப் புராணமும் குறிக்கின்றன. இதையொத்ததாக இன்னும் அனேக புராணப் பாடல்கள் சிவனும் பார்வதியும் காப்பு அணிந்ததைக் குறிக்கின்றன.

காஞ்சிபுரத்தில் பார்வதிதேவி காப்புநாண் அணிந்தபிறகு வழிபட்ட லிங்கம் காப்பீசர் என்ற பெயரில் விளங்குகின்றது. திருமணவேளையில் மணமகன் மணமகளுக்குக் காப்புக்கட்டுவதுடன் அரசாணிக்காலுக்கும் மேளதாள முழக்கத்துடன் காப்பு அணிவிக்கின்றனர்.

காப்பு என்பது, தான் மேற்கொள்ளும் செயலுக்குத் தீயசக்திகளால் உண்டாகும் தொல்லைகளை விலக்குவதற்காக அணிவதாகும். கங்க ணம் என்பது நாம் எடுத்துக்கொள்ளும் செயலில் நிலைத்துநின்று அதனைச் சிறப்புறச் செய்து முடிக்க மேற்கொள்ளும் உறுதியைக் குறிப்பதாகும்.

காப்பு அணிவித்த பின்னர், கங்கணம் அணிவிக்கப்படும். இது பெரும்பாலும் பொன்னால் செய்யப்படுதலின் பொற்கங்கணம் என்றழைக்கப்படுகின்றது.

பார்வதிதேவி காஞ்சீபுரத்தில் கங்கணத்தை அணிந்தபிறகு வழிபட்ட சிவலிங்கம் கங்கணீசர் என்ற பெயரில் விளங்குகின்றது.

இந்நாளில் வேள்விக்குடி என்றழைக்கப்படும் தலத்தில் சிவபார்வதியரின் திருமணத்தின் பொருட்டுப் பார்வதிக்குக் கங்கணம் அணிக்கப் பெற்றது. இதனால் இத்தலம் களதுகாபந்தனக்ஷேத்திரம் என்றும் தீர்த்தம் களதுகாபந்தன தீர்த்தம் என்றும்அழைக்கப்படுகின்றன.அம்பிகைக்கும் கௌதுகேசி என்ற பெயர் வழங்குகின்றது.

திருமணம் நிறைவுற்றதும் காப்புகளைதல் என்ற சடங்கு நடைபெறுகிறது. இது மணமக்களையும் திருமணச்சடங்குகளையும் காப்பதற்காக அழைக்கப்பெற்ற தேவர்களுக்கு விடைகொடுத்து அனுப்புவதாகும். பிறகு, காப்பாக அணிவிக்கப் பெற்ற மஞ்சள் நூல்கள் அவிழ்க்கப்படும். சில குடும்பங்களில் இதனைக் காப்புகளைதல் என்ற தனி நிகழ்ச்சியாகக் கொண்டாடுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்யாணச் சபை

சிவாலயத்தின் முதன்மையான பகுதி கருவறையாகும். இதில் சிவபெருமான் சிவலிங்க மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இதனை அடுத்த முக்கியமான பகுதி இதயத்தானமாகும்.

இது மகாமண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு அமைவதாகும். பெரும்பாலும் இதில் நடராஜ மூர்த்தியே எழுந்தருளி வைக்கப்படுகின்றார். (பல தலங்களில் இங்கு அம்பிகை அமைந்திருப்பதையும் காணலாம்) இதயம் ஓயாது இயங்கிக் கொண்டிருப்பதால் அந்த இடத்தில் ஓயாது நடமாடும் பெருமானை அமைத்துள்ளனர் என்பர். இந்த இடம் சபா மண்டபம் என்றும் அழைக்கப்படும்.

அபூர்வமாகச் சில இடங்களில் இந்தச் சபையில் வேறு சிறப்புமிக்க சிவ வடிவங்களையும் அமைத்துள்ளனர். எடுத்துக்காட்டாகத் திருக்கடையூரில் காலசம்கார மூர்த்தியும்: பரசலூரில் வீரபத்திர மூர்த்தியும் சபாமூர்த்திகளாக அமைத்திருக்கக் காணலாம்.

இதனையொத்ததாகத், திருவீழிமிழலையில் சபாமண்டபத்தில் கல்யாண சுந்தரர் எழுந்தருளியுள்ளார். இதனால் இந்த சபை "கல்யாணச் சபை" என்று அழைக்கப்படுகின்றது. திருமணஞ்சேரி, வேள்விக்குடி முதலிய தலங்களில் கல்யாணசுந்தரர் துணை சந்நிதிகளிலேயே எழுந்தருளியுள்ளார். அவர் சபாமூர்த்தியாக எழுந்தருளியிருப்பது திருவீழிமிழலையில் மட்டுமேயாகும்.

மங்கல அணி

லிங்கம் அமைந்த மீனாட்சிஅம்மன் திருத்தாலி-மதுரை

திருமணத்தின் முக்கியமான சடங்கு மணமகன் மணமகளின் கழுத்தில் "தாலி" அணிவித்தலாகும். தாலியை மங்கல அணி, திருப்பூட்டு, நூல், என்று பலபெயர்களால் அழைக்கின்றோம்.

அம்பிகைக்குத் திருமணவிழாவின்போது தாலிஅணிவிப்பர். இந்தத்தாலி அந்தந்த வட்டார வழக்கத்திற்கேற்பச் செய்யப்படுகின்றது. சிவதலங்களில் வைரத்தால் இழைக்கப் பெற்ற தாலியைக் காண்கிறோம்

உமாதேவியார் அணிந்துள்ள தாலி ஒன்றே நிரந்தரமானதாகும். எக்காலத்தும் அழிவில்லாதவராகச் சிவபெருமான் விளங்குவதால் அவரால் கட்டப்பட்ட தாலிக்கும் அழிவில்லை. அதனால்தான் அவள் "சர்வ மங்கள மாங்கல்யை" என்று அழைக்கப்படுகின்றாள். திருமணங்களில் தாலி அணிவிக்கும் போதும் இந்த மங்கலச் சொல்லை முதன்மையாக உடைய,

"சர்வமங்கள மாங்கல்யே "சிவே" சர்வார்த்த சாதகே சரண்யே த்ரயம்பகி கௌரி (நாராயணி) நமோஸ்துதே" என்ற மந்திரத்தைக் கூறுகின்றனர். இதனை யொட்டிப் பார்வதிக்கு 'மங்கலை' என்ற பெயரும் வழங்குகின்றது. மாங்கல்யம் என்றழைக்கப்படும் தாலிக்கு அதிதேவதை மாங்கல்ய மூர்த்தி ஆவார். திருமணத்தின்போது ஒரு தட்டில் மலருடன் மஞ்சள் அரிசியைப் பரப்பி அதன்மீது மாங்கல்யத்தை மட்டையுடன் கூடிய தேங்காய் மீது சுற்றி வைப்பர். பிறகு, திருமாங்கல்யத்தில் மாங்கல்ய தேவதேவியரை பூசிப்பர். மாங்கல்யத்தில் உமாமகேசுவரர், கல்யாணசுந்தரர், அர்த்தநாரீசர், ஆகிய மூவரையும் ஆவாகித்துப் பூசித்தல், ஆகமமரபாகும்.

❒ மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் நவமணிக் கற்கள் இழைத்த கண்கவர் வனப்புடைய திருத்தாலிகள் உள்ளன. அவற்றில் ஒன்றில் சிவலிங்கம் அமைந்திருப்பதைக் காண்கிறோம். இவை தவிர வட்டமான கிண்ணத் தாலிகளும் உள்ளன.

கல்யாணசுந்தர விரதம்

பங்குனி மாத உத்திரநட்சத்திரத்தில் கொண்டாடப்படும் சிவவிரதம் இதுவாகும். இந்நாளில் கல்யாணசுந்தர மூர்த்தியைப் பொன் அல்லது வெள்ளியால் செய்து உரிய ஆசனத்தில் அமைத்து திருக்கல்யாண உற்சவம் செய்து திருமணப் பாடல்களைப் பாடி ஆராதனை செய்கின்றனர். புராணங்களில் உள்ள திருமணப் படலங்களை பாராயணம் செய்கின்றனர். இதனைக் கடைப்பிடிப்பதால் நல்ல திருமணவாழ்வும், நல்ல இல்லற வாழ்வும், நல்ல குழந்தைகளும் அமைவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமனை மணந்த பாவையர்

அன்பிற்பிரியாள்

உமாதேவியார் மாமன்னர்களும், பெருந்தவமுடைய முனிவர்களுக்கும் மகளாகப் பிறந்து, சிவபெருமானை மணந்து கொண்டதைப் போலவே எளிய பக்தர்களில் மீது அன்புகொண்டு அவர்களுக்கும் மகளாகப் பிறந்து வளர்ந்து பரமேசுவரனை மணந்து கொண்டார்கள். இதனை விளக்கும் பல நாட்டுப்புறக் கதைகளைப் பாரதமெங்கும் காண்கிறோம். இவற்றில் முக்கியமான தொன்று திருவிடைமருதூர் அன்பிற்பிரியாள் வரலாறாகும். உமாதேவியார் வாணியர்குல சிவநேயத் தம்பதியருக்கு மகளாகத் தோன்றி வளர்ந்து சிவபெருமானை அடைந்ததையும் அதைக்குறிக்க வாணியர்மரபினர் திருவிடைமருதூர்ப் பெருமானுக்கும் அன்பிற்பிரியாளுக்கும் திருமணச்சீர் கூட்டி வருவதையும் இக்கட்டுரைவிளக்குகின்றது.

சோழநாட்டுத் தலமான திருவிடைமருதூர், பல புராணச்சிறப்புகளைக் கொண்ட திருத்தலமாகும். இங்குச் சிவபெருமான் "மகாலிங்கம்" என்ற பெயரில் பெரிய கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

இத்தலத்தில் நீண்டநாட்களுக்கு முன்பு வாணியர் மரபில் தோன்றிய ஒரு சிறந்த சிவநேயத் தம்பதியர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் மகாலிங் கப்பெருமானை வழிபட்டுப் பல பணிகளைச் செய்து வந்தனர்.

அவர்களுக்கு நெடுநாட்களாகப் பிள்ளைப் பேறு இல்லை. அவர்கள் மகாலிங்கப் பெருமானை வழிபட்டுப் பிள்ளை வரம் வேண்டினர். ஒரு சமயம் பார்வதிதேவி அவர்கள் இல்லத்தில் சிறுகுழந்தை யாகத் தோன்றினாள். அவர்கள் அந்தப் பெண்ணை மகாலிங்கசுவாமி கொடுத்த வரமாகவே, போற்றி அன்புடன் வளர்த்து வந்தனர். அவளுக்கு "அன்பிற் பிரியாள்" என்று பெயர் சூட்டினர். அவள் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து மங்கைப் பருவம் எய்தினாள். அவளுடைய அழகு காண்போர் உள்ளத்தைக் கவர்ந்தது.

ஒரு சமயம் சோழமன்னன் அவர்கள் இல்லத்தின் வழியாக உலா சென்றபோது "அன்பிற் பிரியாளைக் கண்டு மோகமடைந்தான். அவளைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆசை அவனுள்ளத்தில் எழுந்தது. ஒருசிலரை மணம்பேச அவளுடைய இல்லத்திற்கு அனுப்பினான்.

வாணியர்கள் அதற்கு ஒப்புக்கொள்ள வில்லை மன்னனே! எங்களுக்கு இனமானம் முக்கிய மானது. நாங்கள் எங்களுக்குள் ஒருவனுக்குப் பெண் கொடுப்போமே தவிர அரசனானாலும் அந்நியனுக் குப் பெண்தரமாட்டோம் என்ற கூறிவிட்டனர்.

அரசன் பணிந்து கேட்டான். பின்னர் அச்சுறுத்திக் கேட்டு மிரட்டினான். செட்டியார்களோ

எதற்கும் மசிவதாக இல்லை. இறுதியில், மூர்க்கனான அவன் மோகம் தலைக்கேறத் தமது பணியாட்களை விட்டு ப்செட்டியார்கள் இருந்த தெருவில் மணப் பந்தல் போட்டு அலங்காரம் செய்யும்படிக் கூறி னான்.

ஏவலர்களும் கழி, கம்பு கீத்துகள் கொண்டு அத்தெருவை அலங்கரிக்கத்தொடங்கினர். செட்டி யார்கள் ஏவலர்களை அழைத்து எங்கள் அனுமதி யின்றி இந்தத் தெருவில் பந்தல் போடுவதேன்? என்ற கேட்டனர்.

ஏவலர்கள் அவர்களை நோக்கி அலட்சிய மாகச் சிரித்து, "செட்டிமார்களே நாளை உங்கள் பெண் அன்பிற்பிரியாளுக்கும் எமது அரசனுக்கும் கல்யாணம் நடைபெறப்போகிறது. அதற்குத்தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்படி செய்கிறோம்," என்று கூறி, கேலிபேசினர். மாலைவந்தது. பணியாட்கள் தமது வேலையை முடித்துக் கொண்டு சென்றுவிட்டனர்.

செட்டிமார்கள் ஒன்றுகூடினர். அரசனின் அடாவடிச் செயலுக்கு அஞ்சினர். இனி, இந்த ஊரில் இருக்கவேண்டாம். வேற்றூருக்குச் சென்று விடு வோம் என்று முடிவுசெய்தனர். தங்கள் ஆத்திரத் தைத் தீர்த்துக் கொள்ள ஒரு கருப்பு பெட்டை நாயை அங்கு அரசன் அமைத்த மணவறையில் கட்டினர்.

அன்பர்கள்அன்பிற்பிரியாளை அழைத்துக் கொண்டு சந்தடிசெய்யாமல் காவிரி ஆற்றைக் கடந்து அக் கரைக்குச் சென்று விட்டனர். அவர்களில் சிலர் சொத்து சுகங்களை விட்டுப்பிரிய மனமின்றி அதே ஊரில் தங்கிவிட்டனர். அதிகாலையில் மன்னன் பரிவாரங்களுடன் மணக்கோலத்துடன் மணப்பந் தலை அடைந்தான். அங்கு மணவறையில் கருப்புப் பெட்டைநாய் கட்டப்பட்டிருப்பது கண்டு கோபம் கொண்டான். பிறகு செட்டியார்கள் தப்பித்த செய்தி யைக் கேட்டு அவமானமடைந்தான். உள்ளூரிலிருந்த செட்டியார்களை அழைத்து விசாரித்தான். அவர்கள் நாங்கள் வேறுவகையான செட்டியார்கள் என்று கூறிவிட்டனர்.

விடிந்தது அக்கரைக்குச் சென்ற செட்டி யார்கள் மகிழ்ச்சிஅடைந்தனர். அன்பிற்பிரியாளைத் தேடினர். எங்குதேடியும் அவள் கிடைக்கவில்லை. ஆற்றோடு போய்விட்டாளோ? அக்கரையிலேயே நின்றுவிட்டாளோ? என்று வாடிவருந்தினர். அவளுக் காகத்தானே சொத்துசுகங்களை எல்லாம் விட்டு ஓடிவந்தோம். அவளின்றி நாம் வாழ்ந்து என்ன பயன்? அவளைக் காக்கத் தவறிய நாம் அனைவரும் அழிவதே தருமம் என்று கூறித் தமது உயிரைப் போக்கிக் கொள்ள முயன்றனர்.

அப்போது தூரத்தில் திருவிடைமருதூர்க் கோயிலுக்கு மேலே ஒரு பொன்மலை தோன்றியது அதன்மீது சிவபெருமான் வீற்றிருந்தார். அவருக்கு இடப்பாகத்தில் அன்பிற்பிரியாள் அமர்ந்திருந்தாள். அக்காட்சியைக் கண்ட அனைவரும் திகைத்தனர். அடியற்ற மரம்போல வீழ்ந்து வணங்கினர்.

அப்போது அன்பிற்பிரியாள் அவர்களை நோக்கி, "அன்பர்களே உங்களின் அரிய சிவ பக்தி யால் கவரப்பட்டு நானே உங்களுக்கு மகளாகத் தோன்றி வளர்ந்தேன். உரிய இந்தவேளையில் சிவபெருமானை அடைந்து விட்டேன்.

இந்த நாட்டிற்குப் பன்னிரண்டு ஆண்டு காலம் வேளைசரியில்லை, மன்னன் கொடுங்கோல னாக இருப்பான். நீங்கள் பன்னிரண்டு ஆண்டுகாலம் கழித்து இங்குத் திரும்பி வந்து உங்கள் உடமைகளை அடைவீர். அப்போது எமது திருமணத்தை நடத்தி மகிழுங்கள் என்றாள். அனைவரும் ஆனந்த வெள்ளத்து அமிழ்ந்தனர்.

அக்காட்சி மறைந்தது. செட்டியார்கள் பல இடங்களுக்குச் சென்று வியாபாரம் செய்து பெரும் பொருளீட்டினர். காலங்கள் கழித்து பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து வெளியேறிய வாணியர்கள் திருவிடைமருதூருக்குத் திரும்பி வந்துசேர்ந்தனர். அதற்கிடையில் பழைய அரசன்போய் புதிய அரசன் பட்டமேற்றுக் கொண்டான்.

திருவிடைமருதூர் ஆலயத்தில் தங்க ளுக்கு முன்பு (காட்சி கிடைத்தது போலவே) கட்டு மலையைக்கட்டி அதன்மீது மருதவாணரையும் அன்பிற்பிரியாளையும் கருங்கல் திருமேனிகளாக அமைத்தனர். சில ஆண்டுகள் கடந்தன.

ஒருசமயம் அவர்கள் அனைவரும் கூடித் திருவிடை மருதூர் பெருமானுக்கும் அன்பிற்பிரியா ளுக்கும் திருமணத்தை நடத்திப்பார்க்க விரும்பினர்.

அப்போது உள்ளூரிலேயே தங்கிவிட்ட செட்டியார்கள் நாங்கள் தான் திருமணவிழாவை நடத்துவோம் என்று கூறினர். ஊர்திரும்பிய செட்டி யார்களோ அன்பிற் பிரியாளுக்காகத்தான் நாங்கள் ஊர் உறவுகளை விட்டுச் சென்று திரும்பினோம். அதனால் திருமண விழாவை. நடத்தும் உரிமை எங்களுக்கே உரியது என்று கூறினர்.

இரண்டு தரப்பினருக்கும் இடையே பெரும் போராட்டம் நிகழ்ந்தது. இறுதியில் அரசனிடம் சென்று நீதி வேண்டி நின்றனர்.

புதிய அரசன் இந்தவழக்கைக் கேட்டுத் திகைத்தான். இது இறையருள் தொடர்புடையது. இதில் நாம் தீர்ப்புக் கூற எதுவுமில்லை மருத வாணரிடமே இந்தப் பொறுப்பைவிட்டு விடுவோம் என்று அவர்களிடம் கூறினான்.

அனைவரும் மருதவாணர் அன்பிற் பிரியாள் சந்நிதியில் கூடினர். அரசன் இரண்டு சாராரையும் நோக்கி," ஒவ்வொருவரும் தனித் தனியாக அன்பிற்பிரியாளை நோக்கி அழையுங்கள். யாருக்கு அவள் பதில் தருகிறாளோ. அவர்களே திருக்கல்யாண விழாவைச் செய்யட்டும்," என்றான். முதலில் உள்ளூரில் நின்றவர்கள் அழைத்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதில் ஏதும் இல்லை. வெளியூர் சென்று மீண்ட அன்பர்கள் அழைத்தனர். கற்சிலையாக இருந்த அன்பிற்பிரியாள் ஒளி பெற்றாள் அவர்களை நோக்கித் திரும்பினாள். எமது திருமணத்தை நீங்களே நடத்துக" என்றாள் அனைவரும் அது கண்டு அதிசயித்தனர். அவள் மீண்டும் சிலையாகி விட்டாள்.

அரசன் அன்பிற்பிரியாளின் உறவினர்களுக்குத்தக்க மரியாதைகள் செய்து அவர்களே "மருதவாணர் அன்பிற்பிரியாள்" திருமணத்தைத் தொடர்ந்து ஆண்டு தோறும் நடத்திவரும்படிக் கூறினான். அன்று முதல் வாணிய மரபினர் திருவிடைமருதூரில் அந்த திருமணவிழாவை நடத்தி வருகின்றனர்.

❑ அன்பிற்பிரியாளின் திருவுருவம் திருவிடைமருதூர் அம்பிகை சந்நிதியின் மேற்கு பிராகாரத்தில் அழகிய கல் திருமேனியாக உள்ளது.

❑ திருஇடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தின் உட்பிராகாரத்தின் வடமேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு பெரிய கட்டுமலை உள்ளது.. இதனைத் தென்கயிலாயம் என அழைக்கின்றனர். இதன்மீது சிவபெருமானும் உமாதேவியரும் வீற்றிருக்கின்றனர். இப்பெருமானுக்கு மருதவாணர் என்பதும் அம்பிகைக்கு அன்பிற்பிரியாள் என்பதும் பெயராகும். பொதுவாக அம்பிகையின் திருஉருவம் சிவபெருமானை நோக்கியே அமைந்திருக்கும். இங்கு அன்பிற்பிரியாள் உறவினர்கள் அழைத்தபோது திரும்பிப் பதில் அளித்ததை உணர்த்தச் சற்றுத் திரும்பியவாறு உள்ளாள்.

❑ அன்பிற்பிரியாள் திருமணத்தை ஒட்டி இந்நாளில் சிலருக்கு இலவச திருமணங்கள் செய்து வைக்கப்படுகின்றன.

❑ வைகாசி மாதம் விசாகத்தை ஒட்டி மருதவாணர் அன்பிற்பிரியாள் திருக்கல்யாணவிழா சிறப்பாக நடைபெறுகிறது. திருமணத்திற்கு வேண்டிய சீர்களை வாணிய அன்பர்கள் செய்கின்றனர். திருவிழா முடிந்தபிறகு, ஒரு நல்லநாளில் மறுவீட்டுக்கு அழைப்பதும் நடைபெறுகின்றது. அன்று சுவாமியும் அம்மனும் சந்நிதித் தெருவிலுள்ள வாணியர் இல்லத்திற்கு எழுந்தருள்கின்றனர். அப்போது சீர்செய்வதுடன் சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகின்றன. அப்போது இசைக் கச்சேரிகள் நடைபெறுகின்றன.

சிவாலயங்களில் திருமணவிழாக்கள்

சிவாகமங்கள் ஆகமமுறைப்படித் திருமண விழாவைச் சிவாலயங்களில் நடத்த வேண்டு மென்று வற்புறுத்துகின்றன. கும்பாபிஷேக விழாவின் போது திருமணவிழாவைக் கண்டிப்பாக நடத்த வேண்டு மென்று கூறப்பட்டுள்ளது.

அன்றிரவு மூலவராக விளங்கும் சிவலிங்கத்திற்கும் போகசக்தி அம்மனுக்கும் திருமண விழாவை நடத்த வேண்டும். அம்மன் திருவுருவம் இல்லாத ஆலயங்களில் தர்ப்பை சந்தனம் முதலியவற்றில் அம்பிகையின் வடிவை அமைத்து அதற்கும் சிவலிங்கத்திற்கும் திருமண விழாவை நடத்த வேண்டும்.

சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திரு விழாவின் ஒரு அங்கமாக ஐந்து அல்லது ஒன்பதாம் நாள் மாலையில் சோமாஸ்கந்தமூர்த்திக்கும் பிரியாவிடை அம்பிகைக்கும் திருமணவிழா நடத்த வேண்டும்.

சோமாஸ்கந்த மூர்த்தி இல்லாத தலங்களில் சந்திரசேகரை வைத்துப் பங்குனி உத்திரத்தில் திருக்கல்யாணவிழாவை நடத்தவேண்டும். பங்குனி உத்திரத்தில் முடியாதபோது மாசிமகம், சித்திரா பௌர்ணமி வைகாசி விசாகம் ஆகியநாட்களில் திருமண விழாவை நடத்தலாம்.

எப்படியானும் ஆண்டுக்கு ஒருமுறை யேனும் சிவபார்வதியின் திருமண விழாவைக் கொண்டாட வேண்டும் என்று சமயநூல்கள் கூறுகின்றன.

உத்தர காமிகாகமத்தில் கல்யாண சுந்தரமூர்த்தியின் திருவுருவத்தை அமைத்து நிலைப்படுத்துபவர்களுக்கும் ஆலயங்களில் திருக்கல்யாண விழாவை நடத்துபவர்களுக்கும் கிடைக்கும் பலன் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

இதன்படி, அவர்கள் தங்கள் உற்றார்உறவினருடன் நீண்டகாலம் இம்மண்ணில் வாழ்வர். பொருளும் புகழும், அவர்களை வந்தடையும். பிள்ளைகளுடனும் பேரர்களுடனும் இந்த உலகில் நிறைந்த இன்பத்துடன் வாழ்வர். இவர்களுக்கு வாய்க்கும் சுகம் இந்த மண்டலத்தை ஆளும் மன்னர்களுக்கும் கிட்டாததாகும். ஆயுள் முடிந்ததும் சிவலோகத்தில் எல்லையற்ற சுகத்தை அனுபவித்துக் கொண்டு மகிழ்வுடன் இருப்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமணப் படலங்கள்

மனிதகுலத்தின் முக்கியமான சடங்கு திருமணமாகும். திருமணத்தின் மூலம் புதிய உறவுகள் உண்டாவதுடன் குலமும் வளர்கின்றது. ஒருவனுடைய வாழ்வு, திருமணத்தின் மூலம் தனிச்சிறப்பை அடைவதுடன் புதிய திருப்பத்தையும் அடைகின்றது.

ஒருவருக்கு உரிய வழியில் நல்ல திருமணம் நடக்கவும், மனத்திற் கேற்ற மணாளனைப் பெறவும், நல்ல மனைவி அமையவும், நடந்து முடிந்த திருமணத்தின் மூலம் வாழ்வு செழிப்பாக இருக்கவும் பலவிதமான சமயச் சடங்கு கள் நடத்தப்படுகின்றன. இவற்றுள் முக்கியமானவை தெய்வத் திருமணங்களை நடத்துதல்; புராணங்களிலுள்ள தெய்வத் திருமணப் பகுதிகளைப் படித்தல், படிக்கச் செய்து கேட்டல் முதலியனவாகும்.

இவ்வகையில் சிவாலயங்களில் ஆண்டுக்கு ஒருமுறை திருக்கல்யாணவிழா கொண்டாடப்படுகின்றது. திருப்பதியில் அன்பர்கள் தினமும் வெங்கடாஜல பதிக்கும் அலர்மேல்மங்கை தாயாருக்கும் கல்யாண விழாவை நடத்தி மகிழ்கின்றனர்.

ராதாகல்யாணம், சீதாகல்யாணம் முதலியன சம்பிரதாயப் பாடல்களைப்பாடி உரிய சடங்குகளுடன் நடத்தப்படுவதையும் காண்கிறோம்.

சைவர்கள் பார்வதிகல்யாணம், மீனாட்சி கல்யாணம், வள்ளிதிருமணம், ஆகியவற்றைக் கதாகாலட்சேபங்களாகவும் இசைப் பேருரைகளாகவும் நடத்துகின்றனர்.

சில இடங்களில் புராணங்களிலுள்ள திருமணப்படலங்கள் பேருரையாகவும் தொடர்சொற்பொழிவுகளாகவும் செய்யப்படுகின்றன. திரு விளையாடற்புராணத்திலுள்ள மீனாட்சிகல்யாணம், கந்த புராணத்திலுள்ள பார்வதி கல்யாணம், காஞ்சிப்புராணத்திலுள்ள காமாட்சிகல்யாணம் முதலியன தனிச் சிறப்புடன் நிகழ்த்தப்படுவதைக் காண்கிறோம்.

இதனையொட்டித் தலபுராணங்களில் உள்ள சிவபார்வதியர் திருமணப்படலங்கள் தனிச் சிறப்புப் பெற்றன. திருக்குற்றாலப்புராணம்., பேரூர்ப்புராணம், நெல்லைப்புராணம், வேதாரண்யத்தலபுராணம் திருத்துருத்திப்புராணம், மாயூரப்புரனம் அருணாசல புராணம் திருவீழிமிழலைப்புராணம் முதலியவற்றில் சிவபார்வதி திருமணக்காட்சி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

பேருரைகள் நடத்துவதைக் தொடர்ந்து இந்த திருமணக்கதைகளை மக்கள் எளிதாய் புரிந்து கொள்ள வில்லுப்பாட்டுகளாகவும், நாடகங்களாகவும் தெருக்கூத்துக்களாகவும் நடத்தப்பட்டன. இதற்கேற்பக் கதைப் பாடல்கள் புதியதாகக் புனையப் பெற்றன.

விஞ்ஞான வளர்ச்சியின் பயனாகத் திரைப் படங்கள், தொலைக்காட்சித் தொடர்களிலும் பார்வதி கல்யாணம் இடம்பெறலாயிற்று.

சிவமகாபுராணத்தில் உமையின் திருமணம் தனிச்சிறப்புடன் இடம் பெற்றுள்ளது. இதுவே நெடிய கதையாக அமைந்துள்ளது. இதுவே அனைத்து கதைகளுக்கும் மூலக்கதையாகும்.

வடமொழியில் மகாகவி காளிதாசனால் பாடப்பட்ட குமாரசம்பவத்தில் சிவபார்வதி திருக் கல்யாணம் தனிச்சிறப்புடன் விளங்குகின்றது. இதில் நவரசம் ததும்ப திருமணக்காட்சிகள் விளக்கப்பட்டுள் ளதைக் காண்கிறோம். காளிதாசன் சிவபார்வதியரை 'அமரகாதலர்கள்' என்று குறிக்கின்றான்.

பதினெண் புராணங்களில் ஒன்றான வராக புராணத்தில் உமை-பரமேசுவரன் திருக்கல்யாணம் குறிக்கப்படுகின்றது.

சிவபார்வதியரின் திருமணத்தை விளக்கும் வடமொழிநூல்களில் ஒன்று 'வைவாகலீலா' என்பதாகும். இது சிவபார்வதியரின் திருமணத்தைச் சிறப்பாக விளங்குகின்றது.

இவைகளைப் படித்தால் வாழ்வில் வளமும் நலமும் சிறந்தோங்கும் என்பது அன்பர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

திருமுறைகளில் சிவ-பார்வதி கல்யாணம்

திருமுறை நூல்களில் பார்வதி தவம் செய்ததையும் அதனால் மகிழ்ந்த சிவபெருமான் பூவுலகிற்கு வந்து உலக நெறிப்படி திருமணம் செய்து கொண்டதையும் பல பாடல்களில் குறிப்பிடுகின்றது. அவற்றைப் பற்றிய செய்திகள் உமாமகேசுவரர் (சிவமஞ்சரி -7) நூலில் இடம் பெற்றுவிட்டதால் இங்கே அளிக்கப்படவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுயம்வர பார்வதி

வடநாட்டில் அரசகுலப் பெண்கள் தனக்கேற்ற மண மகனைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமைபெற் றிருந்தனர். மணமகளின் தந்தை திருமணத்திற்கு நாள்குறித்துப் பக்கத்து நாட்டு அரசர்களுக்கு ஓலை அனுப்புவான். குறித்த நாளில் அரசர்கள் மணமகளின் அரண்மனைக்கு வந்து அரச வையில் கூடுவர். மணமகளின் கரத்தில் பெற்றோர்கள் மண மாலையைக் கொடுத்து தோழியர் சூழ அவளை அறிமுகப் படுத்தி அரசவையில் விடுவர். அவள் ஒவ்வொரு அரசன் முன்பும் சென்று நிற்பாள். அருகிலுள் ளவர்களும் தோழியரும் அந்த அரசனின் குலப் பெருமை, வீரதீரச் செயல்கள் ஆகிய வற்றை விளக்கிக் கூறுவர். மணமகள் தனக்குப் பிடித்திருந்தால் அவனுக்கு மாலை சூட்டுவாள். இல்லையென்றால் அவனைக் கடந்து சென்று அடுத்த அரசனின் குணநலன் களைக் கேட்பாள். இப்படியே தனக்கேற்ற மணமகன் கிடைக்கும்வரை செல்லு வாள். சுயமாகத் தானே தனக்கேற்ற வரனைத் (மணமகனைத்) தேர்ந்தெடுத்துக் கொள்வதால் இது சுயம்வரம் எனப்பட்டது.

இத்தகைய அரசகுலத்து அன்பர்களுக்கு பார்வதி தேவி மகளாகத் தோன்றியபோது அவளுக்குப் பெற்றோர்கள் சுயம்வரம் நடத்தியதை, வட்டாரப் புராணங்கள் குறிக்கின்றன. மணமாலையுடன் விளங்கும் பார்வதியைச் சுயம்வரபார்வதி என்று அழைக்கின்றனர்.

திருமணமாகாத கன்னிப்பெண்கள் 'சுயம்வரபார்வ தியை" வழிபடுவதால் நல்ல கணவனை அடைந்து சிறந்த இல் லற வாழ்க்கையை அடைவார்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்த பூஜை "சுயம்வரகல்யாணிபூஜை" என்றும் அழைக்கப்படு கின்றது.

இதில், தேவி 'மங்கலமுடையவளும், உலகினைக் கவரும் பேரழகியும் நாணத்தை உடைவளும் தேன்சிந்தும் மலர்களால் தொகுக்கப்பட்ட மாலையைக் கரத்தில் ஏந்திய வளும் அத்திரி மகாமுனிக்கு மகளாகவும் விளங்குகின்ற

பார்வதி" என்று தியானிக்கப்படு கின்றாள்.

வடநாட்டு ஓவியங்கள் பலவற்றில் மணமாலையைக் கையில் ஏந்தியவாறு விளங் கும் பார்வதியையும் அவள் எதிரில் மணமக னாக நிற்கும் சிவபெருமானையும் காணலாம்.

சில்பரத்தினம் மலைமகளைச் "ஸ்வயம்வரா" என்ற குறிக்கின்றது. அவளு டைய திருவுருவம் மண மாலையைக் கையில் ஏந்திக்கொண்டு நடப்பது போல் அமைக்க வேண்டும் என்றும் அது குறிக்கின்றது.

அத்ரி என்னும் சொல் வடமொழியில் "மலை"யையும், "அத்ரி" என்னும் பெயர் கொண்ட முனிவரையும் குறிக்கும். பெரும்பாலான புராணங் களில் "அத்ரி" என்பது இமயமலையைக் குறிப் பதாக அமைகிறது

சுயம்வர பார்வதி மகாமண்டல ஆராதனை

சுயம்வர பார்வதியை வழிபடுவதால் கன்னிப் பெண்களுக்கு நல்ல கணவன் கிடைப்பதுடன் திருமணமான பெண்கள் எல்லையற்ற இனிய சுகங்களைப் பெறுவர் என்பது நம்பிக்கையாகும். இவளைச் சுயம்வரகல்யாணி எனவும் அழைக்கின்றனர். சுயம்வர கல்யாணி வழிபாட்டில் அமைந்துள்ள யந்திரத்தில் நடுவில் சுயம்வரகல்யாணி எழுந்தருளியிருக்க அவளைச் சூழ்ந்த ஒன்பது வீதிகளில் மேதா-லட்சுமி=மகாலட்சமி, மாத்ருகா அட்சர தேவியர்கள் தசதிக்பாலகர்கள், தசாயுதங்கள், விநாயகர், பைரவர், க்ஷேத்ரபாலகர், யோகினி, மகாலட்சுமி, பாவஸ்ரீ, புஷ்பசாயிகா முதலான தேவதேவதைகள் வீற்றிருக்கின்றனர். அன்பர்கள் இந்த யந்தி ரத்திலுள்ள ஒன்பது ஆவணங்களையும் சிறப்பாகப் பூசிக்கின்றனர். இதற்கு சுயம்வர பார்வதி மகாமண்டல ஆராதனை என்பது பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவசைலத்துப் பரமகல்யாணி

தென்னகத் திருக்கோயில்களில் நடைபெறும் சிவன்-பார்வதி கல்யாண விழாக்களில் தனிச்சிறப்புப் பெற்றது சிவசைலத்தில் நடைபெறும் திருவிழாவாகும். இதில் மானுடர்களின் திருமணத்தில் நடைபெறுவது போலவே மணமக்களை நகர்வலம் செய்வித்தல், மரு வீடு அழைத்து விருந்து வைத்தல், பெண்ணுக்குச் சீர் செய்து பிறந்தகத்திலிருந்து புகுந்த வீட்டுக்கு அனுப் புதல் முதலியன தனிச் சிறப்புடன் நடைபெறுகின்றன இது எங்கும் இல்லாத புதுமையாகும் இவற்றை விளக்கு கின்றது இக்கட்டுரை:-

திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத் திரம் வட்டத்தில் ஆழ்வார் குறிச்சி என்ற ஊர் உள் ளது. இதற்கு மேற்கே 3 மைல் தொலைவில் சிவ சைலம் என்ற இடம் உள்ளது. இது மேற்கு மலைத் தொடர்ச்சியின் ஒரு பகுதியாகும். வெள்ளி மலை, மேற்குத்தொடர்ச்சிமலை, முள்ளிமலை என்ற மூன்று மலைகள் இதனைச் சூழ்ந்துள்ளன. சிவசைலத்தில் பரமகல்யாணி அம்மன் உடனாய சிவசைலநாதர்- ஆலயம் உள்ளது.

இங்குச் சிவபெருமான் சுயம்பு மூர்த்தியாக. மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இவருக்குச் சிவசைலநாதர் என்பது பெயராகும். மனதைக் கவரும் அமைதியான இயற்கைச் சூழலில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயம் தோன்றியதற்கான புராணவரலாறு வருமாறு :

ஒருசமயம் அத்திரி என்ற முனிவரும் அவர் மனைவியான அனுசூயா தேவியும் இங்குப் பர்ணக சாலை அமைத்துத் தவம் செய்து வந்தனர். ஒருநாள் அவர்கள் சிவபெருமானை வழிபட்டு தங்களுக்குத் ஒரு மகளைத் தந்து அருள்புரிய வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர்.

சிவபெருமான் அப்படியே ஆகட்டும் என்றார். பின்னர் ஒருநாள் அத்திரியும் அவர் மனை வியும் மலைச்சாரலில் சிவபூசைக்குப் பூப்பறிக்கச் சென்றனர். அங்கு ஒரு கிணற்றில் பூத்த, பெரிய தாமரை மலரில் ஒரு பெண் குழந்தை இருக்கக் கண் டனர். பார்வதியே முனி தம்பதியருக்கு அருள்புரிய அவர்களிடையே குழந்தையாகத் தோன்றினார்.

அதனைக் கண்டதும் இருவருக்கும் அது தங்களுக்குச் சிவபெருமான் அளித்தவரம் என்றே உணர்ச்சி உண்டாயிற்று. எனவே அக்குழந்தையை எடுத்துக்கொண்டு தமது குடிலுக்கு மீண்டனர். அப்பெண்ணை நன்கு சீராட்டி வளர்த்தனர்.

அவள் வளர்ந்து மணப்பருவம் எய்தினாள். முனிவர் அவளுக்குக் கேதாரீசுவர விரதத்தின் பெரு மைகளைக்கூறி அதைக் கடைப்பிடிக்கும்படிக் கூறினார். அவளும் மிக்க மகிழ்ச்சியும் அந்த விரதத் தினை ஏற்றுக் கடுமையாகக் கடைப்பிடித்தாள்.

அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவளுக் குக் காட்சியளித்து அவளைத் திருமணம் செய்து கொள்வதாக வரமளித்தார். முனிவரும் மனைவியும் அதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தனர். உரியநாளில் சொன்னபடியே சிவபெருமான் அவர்கள் குடிலுக்கு வந்தார். முனிவரும் அவர் மனைவியும் அங்கிருந் தவர்கள் முன்னிலையில் தம்மகளை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். பின்னர் சிவபெரு மான் அவளுக்குத் தனது இடப்பாகத்தை அளித்து அவளுடன் சிவசைலத்தில் கோயில் கொண்டரு ளினார்.

❒ உமாதேவியார்,மலர்மீதுகுழந்தையாகத் தோன்றி யதாகக் கூறப்படும் கேணி சிவசயிலத்திற்குக் கிழக்கில் 5 மைல் தொலைவில் உள்ளது. அந்தக் கேணியைச் சுற்றி அமைந்த ஊர் இந்நாளில் கீழாம்பூர் என்று அழைக்கப்படுகின்றது.

கீழாம்பூரின் வடபகுதியிலும் தென்பகுதி யிலுமாக இரண்டு பெருமாள்கோயில்கள் உள்ளன. இவ்வூர் மக்கள் பரமகல்யாணி அம்பிகையைத் தம் சொந்த மகளாகவே இன்றும் போற்றி வருகின்றனர். இவ்வூரின் வடபகுதியிலுள்ள அம்பிகை தோன்றிய தாகக் கூறப்படும் கிணறும் நன்கு தூய்மையாகப் பராமரிக்கப்படுகின்றது.

சிவசைல மலையின் அடிவாரத்தில் ஆழ் வார் குறிச்சி அமைந்துள்ளது. அதன் மேற்கில் செவ்வந்தியப்பர் கோயில் உள்ளது. அக்கோயிலில் வைத்துதான் பரமகல்யாணி சிவசைலநாதர் திரு விழாக்கள் நடைபெறுகின்றன. பங்குனி மாதம் பெருந் திருவிழா தேரோட்டத்துடன் நடைபெறுகிறது. திருவிழா முடிந்ததும் நல்ல நாளைக் குறித்துக் கீழாம்பூர் மக்கள் தமது மருமகனான சிவசைல நாதரையும். தங்கள் மகளான பரமகல்யாணி அம்மனையும் முறைப் படிசுருள் வைத்து அழைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சிவசைலநாதர் பரமகல்யாணி – சிவசைலம் – திருநெல்வேலி மாவட்டம்

அப்படிக் குறித்து அழைக்கும் நாளில் பரம கல்யாணியும் சிவசைலநாதரும் வேதம், நாதஸ் வர முழக்கங்களோடு ஊர்வலமாகக் கீழாம்பூரை அடைகின்றனர். ஊர் எல்லையில் ஜாதிப்பாகுபா டின்றி அனைவரும் கூடி நின்று அவர்களை வரவேற் கின்றனர்.பிறகு சுவாமியும் அம்மனும் ஊரின் தென் பகுதியிலுள்ள பெருமாள்கோயிலை அடை கின்றனர். அங்கு அபிஷேக ஆராதனைகள் நடை பெறுகின்றன. பிறகு அவர்கள் அங்கிருந்து புறப் பட்டு. ஊரின் வடபகுதியிலுள்ள பெருமாள் கோயிலை அடைகின்றனர். அங்கே மீண்டும் அபி ஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அன் றிரவு சுவாமியும் அம்மனும் சிறப்பு அலங்காரத் துடன் ஊரினை வலம் வருகின்றனர். சிறப்பு நாதஸ்வர மேளங்களும் வாணவேடிக்கைகளும் நடைபெற ஊர்வலம் வடபகுதி பெருமாள் கோயிலை அடையும்போது விடிந்து விடுகிறது.

இரண்டாம் நாள் அனைத்துவகையான அபிஷேகங்களும் சிறப்பான முறையில் செய்யப் படுகின்றன. அன்று இரவில் புஷ்பப் பல்லக்கில் சிவசைலநாதரும் பரமகல்யாணியும், பவனி வரு கின்றனர். இந்த விழாவும் விடியவிடிய நடக்கின்றது.

இப்படி இரண்டு நாட்கள் சொந்தஊரில் தன்கணவருடன் தங்கியிருந்த பரமகல்யாணிக்கு மூன்றாம் நாள் பிறந்தகத்தில் சீர்கூட்டி வழியனுப்பும் விழா நடைபெறுகின்றது. மூன்றாம் நாள்காலையில் எல்லாவிதமான பழங்கள் புத்தாடைகள் பிரசாதங்கள் சுவாமிக்கும் அம்பிகைக்கும் அளிக்கப்படுகின்றது. அப்போது மக்கள் தம் சொந்தமகளாகப் பாவித்துப் பரமகல்யாணிக்குச் செய்யும் சீர்கூட்டி அனுப்புதல் கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்தவிழாவின் முக்கியமான சிறப்புக்கள்:

❒ இந்த விழாவில் பங்குபெறும் பணியா ளர்கள் அனைவருமே பரமகல்யாணி அம்பி கையைத் தமது சொந்த மகளாகப் பாவிப்பதால் விழாவின் பணிக்கு எந்தவிதமான கூலியையும் பெற்றுக் கொள்வதில்லை.

❒ சுவாமி அம்பிகைக்கு நடைபெறும் அபிஷேக ஆராதனைகள்யாவும் சைவ வைணவ பேதமின்றி பெருமாள் கோயில்களிலேயே நடை பெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆதி கோத்தி ரத்தில் உதித்த கௌரிக்கு ஆதிகோத்திரத்தின் அடுத்தவரான திருமால் சகோதரன் ஆகிறார். இதன் காரணமாகவே மறுவீடுவிழா வைணவ ஆலயங் களில் நடைபெறுகிறது என்பது இதன் தத்துவமாகும்.

❒ சிவபார்வதி திருமண விழா விற்குப் பிறகு, விரிவான வகையில் மருவீடு செய்யும் விழா தென்னகத்தில் வேறெங்கும் நடப்பதாகத் தெரிய வில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மணமாலைசூட்டல்"

திருமணத்தில் இடம்பெறும் முக்கியமான சடங்கு மாலை மாற்றுதலாகும். தாலிகட்டுதல், கைப்பிடித்தல், கன்னிகாதானம் செய்தல் முதலிய சடங்குகள் திருமணத்தில் இடம் பெறுவதற்கு முன்பாக, மக்கள் கொண்டிருந்த வழக்கம் மாலை மாற்றிக்கொள்வதாகும்.

ஆதிநாளில் காதல் கொண்ட பெண்ணும், ஆணும் தமது கைவினைத்திறத்தால் புனைந்த மாலைகளை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொண்டனர். அது திருமணச் சடங்காகமாறிக் காலங்காலமாகத் தொடர்ந்து வருவதைக் காண்கிறோம்.

புராணங்கள் மணமக்கள் மணமாலை மாற்றிக் கொள்வதைச் சிறப்புடன் பேசுகின்றன. திருமணத்திற்கு முன்பாக மணமகனின் சகோதரி மணமகளுக்கு மாலை சூட்டுவாள். மணமகனுகுத் தாய்மாமன் மாலையை அணிவிப்பான். பிறகு, திருமணத்தின் ஒரு அங்கமாக மணமகளும் மணமகனும் தமக்குள் மூன்றுமுறை மாலை மாற்றிக் கொள்கின்றனர். மாலை மாற்றிக் கொண்டாலே திருமணம் முடிவுற்றதாகச் சிலர் கருதுகின்றனர்.

சிவாலயங்களில் இடத்திற்கேற்ப, திருமணத்திற்கு முன்போ பின்போ மாலைமாற்றும் சடங்கு நடத்தப் படுகின்றது. சிவபெருமானையும் அம்பிகையும் எதிர்எதிராக நிற்கவைத்து மேளதாளத்துடன் மாலை மாற்றுதல் கண்கொள்ளாக் காட்சியாகும்.

பஞ்ச கல்யாணித் திருத்தலங்கள்

தென்பாண்டி நாட்டில் உள்ள ஆழ்வார்குறிச்சி (சிவசைலம்) கடையம், ராதாபுரம், சேரகுளம், அம்பாச முத்திரம், ஆகிய ஐந்து ஊர்களில் எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு "கல்யாணி" என்பது பெயராகும்.இதனால் இவை ஐந்தும் பஞ்சகல்யாணித் திருத்தலங்கள் என்றுப் போற்றப்படுகின்றன.

"கல்யாணி"

கல்யாணம் என்ற சொல் திருமணத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. "கல்" என்பது மகிழ்ச்சியைக் குறிக்கும் ஒலியாகும். மகிழ்ச்சியுடன் சிரிப்பதைக் கலகல வென்று சிரித்தான் என்று கூறுகின்றோம். மங்கல அணியான தண்டை, சிலம்பு ஆகியவற்றின் ஒலியை "கலீர் கலீர்" என்று குறிப்பிடுகின்றோம். மகிழ்ச்சியான வாழ்தொலியால் நிறையப்பெறுவதால் திருமணம் கல்யாணம் என்று குறிக்கப்படுகின்றது.

இந்த சொல்லுக்கு நல்ல குணங்களாற் நிறையப்பெற்றது என்பதும் பொருளாகும். மேலும் தயைபொருந்திய மனமுடையவர் " என்றும் பொருள் கூறுவர்.

உலகனைத்தையும் ஈன்று, பரிபாலிக்கின்றவளாகிய உமாதேவி, உயிர்களிடத்துத் தயைபூண்டவளாக விளங்குவதாலும், அவற்றைக் காத்து அருள்பாலிப்பதாலும், அவளுக்குப் பரமகல்யாணி என்பது பெயராயிற்று. சிவசைலத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் பெயர் பரமகல்யாணி என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனை யொத்ததாகக் கடையத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு நித்திய கல்யாணி என்றும் நல்லூர் அம்பிகைக்குக் கல்யாணசுந்தரி என்றும் ஆச்சாள் புரத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு விபூதி கல்யாணி என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

கல்யாணி என்ற சொல் மங்கலச் சொல்லாகும். சிவசைலம் வட்டாரத்தில் "கல்யாணி" என்பது அம்பிகையின் பெயராக இருப்பதாலும், மங்கலச் சொல்லாக இருப்பதாலும் தானியங்களை அளக்கும் போது முதல் அளவை ஒன்று என்று கூறாமல் "கல்யாணி" என்று சொல்லித் தொடர்ந்து இரண்டு, மூன்று, நான்கு என்று எண்ணி அளப்பது வழக்கமாகும். வைணவர்கள் திருமாலை நித்திய கல்யாணப் பெருமாள் என்று அழைக்கின்றனர். திருவிடந்தை எனும் தலத்தில் எழுந்தருளியுள்ள திருமாலுக்கு நித்திய கல்யாணப்பெருமாள் என்பது பெயராகும்.

சமண சமயத்தினர் அச்சமயத்தின் பெண் தேவதையான தர்மதேவியைக் கல்யாணி என்று அழைக்கின்றனர். சிரவண பௌகுளத்தில் அவள் உண்டாக்கிய குளம் "கல்யாணி தீர்த்தம்" என்ற பெயரில் உள்ளது.

★ கல்யாயசுந்தரர் பரமகல்யாணி அருளால் அனைவரும் அனைத்து சுகங்களையும் பெற்று வாழ்க. ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திருநந்தி தேவர்-சுயம்பிரபா திருமண கோலம்

சிவமஞ்சரி

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்
சிவபெருமானின் எல்லையற்ற பெருமைகளை இயன்றவரைப் பேசும் நூல்